ANNAMALAI UNIVERSITY ECONOMIC SERIES : No. 8

GENERAL EDITOR:

Dr. B. V. Narayanaswami Naidu, M.A., B. Com., Ph.D., Bar-at-Law.

பொருளாதார நூல்

Annamalai University Economics Series: No. 8.

GENERAL EDITOR:

Dr. B. V. Narayanaswami Naidu, M.A., B. Com., Ph.D., Bar-at-Law.

*

பொருளாதார நூல்

வி. ஜி. ராமகிருஷ்ண அய்யர், எம். ஏ.

அண்ணாமலை சர்வகலாசாலை.

1942

மதுரை
தே நோபிலி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

முகவுரை

இப்பொருளாதார நூலானது ஆரம்பத்தில் மாணவர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய முக்கிய விஷயங்களை மட்டும் எடுத்துரைக்கின்றது. இந்நூல் பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்கட்கேயன்றி, பொருளாதார சாராம்சத்தை தெரிந்துகொள்ளும் நோக்கமுள்ளவர்களுக்கும் பிரயோஜனமாயிருக்கும். இப்புத்தகத்தை எழுதும்படி அனுமதி கொடுத்த அண்ணாமலை சர்வகலாசாலை அதிகாரிகளுக்கு என் நன்றியறிவை வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வி. ஜி. ராமகிருஷ்ண அய்யர்.

அண்ணாமலை நகர்,
18—12—41.

பொருளடக்கம்

அதிகாரம் பக்கம்

அநுபந்தம்

B 1. இந்தியாவில் இம்பீரியல் பாங்கு, நாணயமாற்றும் பாங்குகள், கூட்டுப் பாங்குகள் இவைகளின் மூலதனம், ஒதுக்கி நிதி, டிபாசிட் முதலியன.
2. முக்கிய பயிர்களின் பரப்பு (ஏக்கர்).
3. முக்கிய பயிர்களின் பலன்.
4. கூட்டுப் பங்குக் கழகங்கள்.

படங்களின் அட்டவணை

1. பொருளாக்க முயற்சியின் பருவங்கள்
2. 1872-ம் வருஷம் முதல் ஜனத்தொகை வளர்ச்சியின் விளக்கப் படம்
3. 1921—31 வருஷத்திய ஜனத்தொகை மாறுபாட்டை விளக்கும் படம்
4. இந்தியாவின் இறக்குமதி (மற்ற தேசங்களுடன்)
5. இந்தியாவின் ஏற்றுமதி (மற்ற தேசங்களுடன்)
6. மதராஸின் ஏற்றுமதி
7. கராச்சியின் ஏற்றுமதி
8. பம்பாயின் ஏற்றுமதி
9. கல்கத்தாவின் ஏற்றுமதி
10. இந்தியத் துறைமுகங்களின் வர்த்தக விளக்கம்
11. தக்ஷிணத்தின் பயிர்கள்
12. இந்தியாவின் கீழ்க்கரைப் பிரதேசத்தின் மழையும் விளைச்சலும்
13. இந்தியாவின் மேற்கரைப் பிரதேசத்தின் விளைச்சல்.
14. தக்ஷிணத்தின் கரிசல் மண் பிரதேசத்தின் விளைச்சல்.
15. பஞ்சாப் மாகாணத்தில் நீர்ப்பாய்ச்சல் விளைச்சலின் சம்பந்த சாம்யம்
16. ஐக்கிய மாகாணத்தில் நீர்ப்பாய்ச்சல் விளைச்சலின் சம்பந்த சாம்யம்
17. இந்திய கவர்ன்மெண்டாரும் மாகாண கவர்ன்மெண்டாரும் பெறும் வருமானம்

I

பொருளாக்க வாழ்க்கையின் ஆதாரம்

(BASIS OF ECONOMIC LIFE)

மானிட வாழ்க்கையில் பொருளை அதிகரிக்கும் இயக்கம் எவ்வாறு ஏற்படுகின்றது? மனிதன் தன்னைத் திருப்திபண்ணிக் கொள்ள அநேக பொருள்களை விரும்புகிறான். உதாரணமாக உணவு குறைந்துபோனால் உணவுப் பொருள்களாகிய அரிசி, கோதுமை முதலியன நிலத்தைப் பண்படுத்தி உண்டாக்கப்படுகின்றன. இவ்விதமான விருப்புப் பொருள்களினால்தான் மக்களின் பொருளாக்க வாழ்க்கை ஏற்படுகின்றது. ஆகையால் மனிதனுக்கு விருப்புப் பொருள்கள் இல்லாவிட்டால் பொருள் ஆக்க முயற்சியும் அதனால் ஏற்படும் பொருளாக்க வாழ்க்கையும் இருக்க முடியாது. பொருளாக்க அமைப்புப் பூராவும் அடிப்படையாக மனிதனுடைய விருப்புப் பொருள்களைப் பொருத்திருக்கிறது. ஆனால் மனிதனுக்குத் தேவையான பொருள்களை வேலைசெய்துதான் அடையவேண்டியிருக்கிறது. ஆகையால் பொருள்களை விரும்புவதற்கும், அப்பொருள்களினால் திருப்தியடைவதற்கும் பொருளை அதிகரிக்கும் பிரயத்தனம் வேண்டியிருக்கிறது.

தேவைகள் — எத்தனங்கள் — திருப்தி

(Wants) (Efforts) (Satisfaction)

விருப்புப் பொருள்களுக்கும், பொருளை அதிகரிக்கும் பிரயத்தனத்திற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. மனிதனுடைய தேவைகளில் சில இன்றியமையாததாயுள்ளன. பசி, தாகம், உடை முதலியவற்றை உதாரணமாக எடுத்துக் கூறலாம். இத்தகையன மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. அவைகளைச் சேகரித்துத் திருப்தி அடைய மானிட முயற்சி அவசியம். மானிட வாழ்க்கையில் அடிப்படையான விருப்புப் பொருள்களை அடைந்த

வுடன் புதிய தேவைகள் எற்படுகின்றன. தவிரவும் தேவைகள் பல விதம். உணவில் திருப்தியடைந்தவுடன் பலவித உணவுகளும், மேல்தரமான உணவுகளும் அடைய விருப்பம் எற்படுகின்றது. இதே மாதிரி விருப்பம் மற்றெல்லாப் பொருள்களிலும் எற்படுகிறது.

மக்களின் விருப்புப்பொருள்களை மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம் :—

(1) சரீர சம்பந்தமான தேவைகள்—தேக சம்பந்தமான விருப்புப் பொருள்களில் ஒவ்வொன்றும் அளவில் அடங்கியதும், இலகுவில் திருப்தியடையக் கூடியதுமாகும்.

(2) வெளிப்பார்வைக்காகவும், கீர்த்திக்காகவும், மேன்மைக்காகவும், மக்கள் சில தேவைகளை எற்படுத்திக் கொள்கின்றனர். உயர்தரமான ஆடைகள், உணவுகள் முதலியவற்றை உதாரணமாகக் கூறலாம்.

(3) மக்களின் மனதுக்குரிய விருப்பங்கள்.—சாஸ்திரத் தேர்ச்சியினால் உண்டாக்கப்படும் பொருள்கள்.

பண்டைக்காலத்தில் மக்களின் விருப்புப் பொருள்களைத் தம் முயற்சியினாலே அடைவது சாத்தியமாயிருந்தது. இக்காலத்தில் விருப்புப் பொருள்கள் எண்ணத்திலும், இனத்திலும் அதிகமாயிருப்பதால் அவைகளைத் தானாகவே எளிதில் அடைவது சாத்தியமன்று. ஆரம்பத்தில் மக்களின் நெருக்கடியான தேவைகளைத் திருப்திபண்ணும்பொருட்டு மானிட முயற்சிகள் அத்தேவைகளை நோக்கிச் செல்லுகின்றன. பிறகு நாகரீகம் அதிகப்பட மக்கள் முயற்சியால் புதிய விருப்பங்கள் எற்படுகின்றன. இப்புதிய விருப்பங்களைத் திருப்திபண்ண மறுபடியும் புதிய முயற்சிகள் எற்படுகின்றன. இக்காலத்தில் மக்களின் தேவைகளுக்கும் முயற்சிக்கும் உள்ள சம்பந்தம் இலேசானதென்று சொல்லமுடியாது. ஆகையால் ஒவ்வொருவரும் தம் சக்தியால் உற்பத்தி செய்யும் பொருள்களைப் பிறருடைய பொருள்களுடன் பண்டமாற்றுதல் செய்கின்றனர்.

II

பொருளாதாரப் பெருக்கத்தின் முக்கிய பருவங்கள்

(MAIN STAGES OF ECONOMIC DEVELOPMENT)

ஆதிகாலத்தில் நாகரீகம் ஏற்படுவதற்குமுன் மக்கள் வாழ்க்கை மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருந்தது. மக்கள் வேட்டையாடி ஜீவனம் செய்துவந்தனர். வீடுவாசலன்றியும் துணிமணியன்றியும் காலம் கழித்துவந்தனர். அப்பேர்ப்பட்ட நிலைமையில் பொருளாதாரப் பெருக்கம் ஒன்றுமேயில்லை. கொஞ்சகாலம் கழித்து மனிதர் ஆடுமாடுகளை மேய்த்து ஜீவனம் பண்ணிவந்தனர். இந்நிலையில் ஆடுமாடுகளே மக்களின் முக்கிய செல்வமாகக் கருதப்பட்டது. இந்தியாவில் வேதங்கள் உண்டான காலங்களில் ஒருவருடைய செல்வத்தைப் பணத்தாற் குறிக்காமல் ஆடுமாடுகளாலே குறிப்பிட்டிருந்தது வேதங்கள் மூலமாய்த் தெரியவருகிறது. இத்தகைய நிலைமையுள்ள மக்களை முல்லைநிலமக்களென்று கூறலாம். இவர்களால் ஆடுமாடுகள் மனுஷப் பழக்கத்தில் கொண்டுவரப்பட்டன. பணப்பெருக்கம் கிடையாது. முல்லைநில மக்களும் நாடோடிகளாய் இருந்தார்கள். எவ்விடங்களில் புல்நிலங்களிருந்தனவோ அவ்விடங்களுக்கு ஆடுமாடுகளுடன் சென்றனர். ஆகையால் முல்லை நிலமக்களுக்குக் குடியேறிய நாடென்று ஒன்றும் கிடையாது. பிரதானமான வியாபாரங்களும் ஒன்றும் கிடையாது. முல்லைநிலப் பருவத்தில் மக்கள் சிறு கூட்டங்களாக வசித்துவந்தனர். ஒவ்வொரு கூட்டத்தாரும் பந்துத்துவத்தால் இணைக்கப்பட்டு அவர்கள் கூட்டத் தலைவனுக்குக் கீழ்ப்பட்டிருந்தனர். ஒவ்வொரு கூட்டத்தாரும் பெருகப்பெருகச் சிறிய கிளைகளாகப் பிரிந்து புல்வெளிகளுள்ள பிரதேசங்களை நாடிச்சென்றனர். உதாரணமாக ஆதிகால மக்க

வின் இருப்பிடமாயிருந்த மத்திய ஆசியாவின் பெரிய புல் வெளிகளை எடுத்துக் கூறலாம். முல்லைநில மக்கள் பசு, ஆடு, குதிரை முதலியவற்றை முக்கியமாக வளர்த்துவந்தனர். அப்பிராணிகளே அவர்களுடைய ஆஸ்தியாகக் கருதப்பட்டது. ஆனால் வட துருவ மண்டலங்களில் வசித்த மக்கள் உணவுப்பொருளுக்காக வேட்டையாடுதலையும், மீன் பிடித்தலையும் முக்கிய தொழிலாகக் கைக்கொண்டுவந்தனர்.

முல்லைநில்மக்களுக்கும் அவர்களுக்குப்பின் ஏற்பட்ட பயிர் செய்வோர் வாழ்வுக்குமுள்ள முக்கிய வித்தியாசமென்னவென்றால், உழவர் சில இடங்களைத் தம் இருப்பிடமாகத் தெரிந்தெடுத்து நிலத்தைக் கிருஷிசெய்து வந்தனர். நிலத்தைப் பண்படுத்திப் பயிர்செய்த காலமுதல் நாகரீகம் ஆரம்பித்ததாகச் சொல்லலாம். விவசாயம் ஆரம்பமான காலமுதல் மக்கள் நிலத்தைத் தம் சொத்தாகப் பாவித்துப் பொருள் விருத்தி பண்ணுவதைக் கைக்கொண்டனர். பத்தாயிரம் வருஷங்களுக்கு முன்னமே இவ்விதமாக நிலத்தைப் பயிரிடும் வழியை மக்கள் கைப்பற்றியிருப்பதாகத் தெரியவருகிறது.

பண்டைக்கால நாகரீகங்களெல்லாம் நதிப் பள்ளத்தாக்குகளில் ஆரம்பித்ததாகச் சொல்லலாம். ஈகிப்தின் செழிப்பு நைல் நதியினாலேயாம். நைல் நதியில்லாமற்போனால் ஈகிப்த் ஒரு பாலைவனமாயிருக்குமென்பதற்குத் தடையில்லை. நைல் நதிப்பிரதேசத்தில் முதன்முதல் வசித்த மக்கள் பயிர்த்தொழிலிலும், கட்டிட வேலைகளிலும் கீர்த்தியடைந்திருந்தனர். ராஜ்ய பரிபாலனத்திற்குரிய உறுப்புக்களையும் அமைத்துக்கொண்டனர். இதே மாதிரியாக ஆதிகாலத்தில் ஈபுரட்டீஸ், டைகிரிஸ் நதிகளின் பள்ளத்தாக்குகளிலும் பயிர்த்தொழிலை விருத்திபண்ணிய மக்கள் இருந்தனர். வியாபார அபிவிருத்திக்காக ஒட்டகங்கள் முதலிய விலங்குகளைப் போக்குவரவு சாதனங்களாக உபயோகித்தனர். கொஞ்சகாலத்திற்குள் மத்தியதரைக் கடற் பிரதேச முழுவதும் மேற்கூறிய நதிப்பள்ளத்தாக்கு நாகரீகம் பரவிற்று. இந்தியாவிலும் நாகரீக ஆரம்பம் நதிப்பிரதேசங்களிலேயாம்.

மேற்கூறிய விஷயங்களிலிருந்து சற்றுப் புறத்தால் எவ்வாறு மக்கள் தங்குமிடம் ஆதியில் செழிப்படைந்ததென்பது நன்கு விளங்கும்.

மத்தியதரைக்கடற் பிரதேசத்தின் நாகரீகத்திலிருந்து ஐரோப்பாவின் பிற்கால நாகரீகம் அநேக அம்சங்களைப் பெற்றிருக்கிறது. ஐரோப்பாவின் ஆதிகால நாகரீகம் பினிஷியர், கிரேக்கர், ரோமாபுரியர் முதலானவர்களால் விருத்தி பண்ணப்பட்டது. பினிஷியர் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். சிரியா தேசத்தின் கடற்கரையில் டையர், ஸைடோன் முதலிய உலகப்பிரசித்திபெற்ற துறைமுகங்களை ஸ்தாபித்தனர். நூல் நூற்பதிலும், நெசவிலும், சாயம்போடுவதிலும் தேர்ச்சியடைந்திருந்தனர். கிரேக்கர்களும் அநேகக் கைத்தொழில்களை விருத்திபண்ணினர். தவிர ராஜியமுறையில் அதிகத் தேர்ச்சியடைந்தனர். ரோமாபுரியர் படைவலிமையால் தம் ஆதீனத்தை மத்தியதரைப் பிரதேசம் முழுவதும் பரவச்செய்தனர்.

கிறிஸ்தியன் ஆண்டின் முதல் 1000 வருஷங்களில் உரோமர் ராஜ்யத்தின் ஸ்தாபனமும் அழிவும் ஏற்பட்டன. ஐந்தாவது நூற்றாண்டிலிருந்து பத்தாவது நூற்றாண்டுவரை உரோம ராஜ்யம் நாகரீகமற்ற ஜாதியாரால் தாக்கப்பட்டு நிலைகுலைந்தது. அக்காலம் சரித்திரத்தில் ஒரு இருளான அல்லது நிலைகுலைந்த காலமாகக் கருதப்படுகிறது. அந்நிலைகுலைந்த காலத்திலிருந்து இடைக்காலம் (Medieval Period) ஆரம்பித்ததாகச் சொல்லலாம்.

நிலமானிய முறை (Feudal System):—இடைக்காலத்தில் நிலமானியமுறை கையாளப்பட்டது. அதாவது ஒவ்வொரு அரசரும் தன்னைப்பின்பற்றி வந்தவர்களுக்கு நிலமானியங்களை அளிக்கும்போது, அவர்கள் தனக்கு உண்மையான தொண்டர்களாகவும், போர்வீரர்களாகவும் இருக்கும்படிப் பிரமாணம் வாங்கிக்கொண்டார்கள். இவ்விதமே சிற்றரசர்களாகிய பாரன்களும் தங்களுடைய நிலங்களைத் தங்கள் பரிவாரங்களுக்குப் பாகித்துக் கொடுத்தார்கள். கொடுப்பவனுக்கு இறைவன் (Lord) என்றும் பெற்றுக் கொள்பவனுக்குத் தொண்டன் (Vassal) என்றும் பெயர். இறைவனுக்குத் தான் செய்யவேண்டிய கடமையைச்

செய்யத் தவறினால் தொண்டன் தனக்குக் கிடைத்த நிலமானியத்தை இழக்கவேண்டும். இவ்வித ஏற்பாட்டினால் சகல நிலத்திற்கும் அரசனே சொந்தக்காரனும், தனக்குக் கீழ்ப்பட்டவர்கள் மீது தன் இஷ்டப்படியே அதிகாரஞ் செலுத்தக் கூடியவனுமானான். இவ்வித ஏற்பாட்டிற்குச் சிலசமயம் 'நிலமானிய ஒழுங்கு' என்ற பெயர் வழங்கிவந்தது. இறைவன் கொடுக்கும் நிலத்திற்கு பீப் (fief) என்று பெயர். இறைவனுக்குத் தன்னுடைய அதிகாரத்திற்குட்பட்ட தொண்டர்களை அடக்கி ஆளுவதில் வெகு கஷ்டமிருந்தது. நெடுங்காலம் வரைக்கும் அரசனுக்கும் பாரன்களுக்கும் ஆட்சிவிஷயத்தில் அடிக்கடி சண்டை நடந்துகொண்டே இருந்தது.

இடைக்காலப் பொருளாக்க வாழ்க்கை (**Medieval Economic Life**)

பண்ணைமுறை (Manorial System)

இடைக்காலப் பொருளாக்க வாழ்க்கையில் பண்ணை முறை ஒரு முக்கிய அம்சமாயிருந்தது. நாட்டுப் புறத்திலுள்ள நிலங்களெல்லாம் சில பிரபுக்களின் சொத்தாகவே இருந்தன. அந் நிலங்களெல்லாம் அப்பிரபுக்களைச் சார்ந்திருந்த பயிரிடும் கூட்டத்தாரால் பயிரிடப்பட்டு வந்தன. இப்பண்ணைமுறை எவ்விதமாக ஏற்பட்டதென்பதைப் பற்றி பல கோட்பாடுகளிருக்கின்றன. நாம் ஒரு பண்ணையின் பண்பை விளக்கக்கூடிய விஷயங்களை மட்டும் கவனிக்கவேண்டியது அவசியம். ஒவ்வொரு பண்ணையிலும் பலவித பயிரிடுமுறையும், உரிமைத்திட்டமும் இருந்தன. அதாவது விளைநிலம் (arable land), சமநிலம் (meadow) மேய்ச்சற்றறை (Pasture land), காட்டுநிலம் (wood land), கொல்லை (close) முதலிய பலவகை நிலங்களிருந்தன. விளைநிலமானது பிரபுவின் பண்ணை (demesne land) சிற்றுரிமைப் பண்ணையாள் நிலம் (land held in villeinage) என இருவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பண்ணையிலும் பண்ணை வீடுகள், திருச்சபை, பொறிச்சாலை முதலியன காணப்படும்.

(i) பிரபுவின் நிலம் (Lord's demesne) : பிரபுக்களே பண்ணைக்குச் சுவாதீனமுடையவர். ஆனால் நிலத்தின் ஒரு பகுதி தான் பிரபுவின் சுவாதீனத்திலிருந்தது. இதற்குப் பிரபுவின் பண்ணை என்று பெயர். இந்நிலமானது பெய்லிப்பு (bailiff) என்னும் பெயருடைய கட்டளைக்காரன் மேற்பார்வையில் குடிவாரக்காரரால் பயிரிடப்பட்டு வந்தது. குடிவாரக்காரர் பிரபுவுக்கு வாரத்தில் சிலநாள்கள் வேலைசெய்வதும் தவிர இலவச வேலைகளும் (boon work) செய்துவந்தனர்.

(ii) பயிரிடுமுறை :—விளைநிலமானது வயல்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பயிரிடுநிலமும் இரண்டு அல்லது மூன்று வயல்களாகப் பிரிப்பது வழக்கம். முதலாவது வயலில் ஒரு வகை தானியமும், இரண்டாவது வயலில் மற்றொரு தானியமும், மூன்றாவது வயலைத் தரிசாகவும் பயிரிடுவது வழக்கம். இவ்விதப் பயிரிடல் பயிர்மாற்றலுக்கு சௌகரியமாயிருந்தது. விளைநிலம் முழுவதும் சிறுவயல்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வயலுக்கும் வரப்புக்கள் கட்டப்பட்டிருந்தன. ஒரு குடிவாரக்காரர் பயிரிடும் வயல்கள் தொடர்ச்சியாயில்லாமல் பற்பல இடங்களிலிருந்தன.

நிலங்களெல்லாம் வேலியில்லா வேளாண்மை முறையில் பயிரிடப்பட்டு வந்தன. பயிரிடும் காலத்தில் வேலிகள் கட்டப்பட்டு அறுவடையான பிறகு அவ்வேலிகள் எடுக்கப்பட்டன. அறுவடையான பிறகு ஆடுமாடுகளை நிலங்களில் மேய்ப்பது வழக்கமாயிருந்தது.

பண்ணைமுறையில் பண்ணை மன்றமும், பல பண்ணை அதிகாரிகளும் உண்டு. பண்ணை அதிகாரிகளில் முக்கியமானவர்களாவன :— பண்ணை வீட்டு மேற்பார்வையாளர் (Seneschal) ; பெய்லிப்பு என்னும் கட்டளைக்காரன் (bailiff) ; இரீவ் (Reeve) என்னும் ஊர்த்தலைவன் முதலியவர்கள் இருந்தனர்.

இடைக்காலப் பண்ணை கிராமங்களின் சில முக்கிய அம்சங்களாவன :—இக்கிராமங்கள் தமக்குவேண்டியவற்றை தாமே உற்பத்தி பண்ணி வந்தன. போக்குவரவு வசதிகள் மிகவும்

குறைவாயிருந்தன. கிராமத்துக்குக் கிராமம் அதிக சம்பந்தமில்லாமல் தனித்திருந்தன. கிராமவாழ்க்கையே ஜனங்களுக்கு சகஜமாயிருந்தது. பயிரிடுமுறையும் ஒரே மாதிரியாக மாறுபாடில்லாமலிருந்தது.

இடைக்காலச் சங்கங்கள் (**Medieval Guilds**)

இடைக்காலத்திலுள்ள நகரங்களில் வியாபாரத்தை ஒழுங்கு படுத்த சங்கங்கள் ஏற்பட்டன. இச்சங்கங்கள் இருவகையாவன :—வர்த்தகர் சங்கம் (merchant guild), தொழிலாளர் சங்கம் (craft guild). இச்சங்கங்கள் வியாபார விஷயமாகச் சில தனி உரிமை பெற்றன. தேச முழுவதும் சுங்க வரியின்றி வியாபாரம் செய்யவும், வியாபார முறையில் சில விதிகள் ஏற்படுத்தவும் அதிகாரம் பெற்றன. தவிர சங்க சமுகத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சகோதரத்துவம் இருந்தது. ஒவ்வொரு நகரத்திலுள்ள வர்த்தகச் சங்கம் அந்நகரத்தின் வர்த்தகத்தையும் பொருளாக்க வாழ்க்கையையும் ஒழுங்கு படுத்தி வந்தன. சரக்குகளை மொத்தமாகக் கொள்ளுதல் (regrating), முன்கையாடுதல் (forestalling) முதலிய வழக்கங்களைத் தடுத்து வந்தன. தவிரவும் சங்கத்தின் அங்கத்தினருக்குப் பலவித கைங்கரியங்களைச் செய்வதும் சகஜமாயிருந்தது.

தொழிலாளர் சங்கங்கள் (craft guilds) ஒவ்வொரு தொழிலிலும் ஏற்பட்டது. ஒவ்வொரு தொழிலாளர் சங்கத்திலும் மூன்று வகை அங்கத்தினரைக் கவனிக்கத் தக்கது.—தேர்ந்த தொழிலாளி (master craftsman) தேர்ந்தநாட் கூலியாள் (journeyman), தொழில் பழகுவோன் (apprentice). முதலாக ஒவ்வொருவரும் ஒரு கைதேர்ந்த தொழிலாளியிடம் ஏழு வருஷம் தொழில் பயிலவேண்டியிருந்தது. அக்காலத்தில் தொழில் பயில்வோருக்குச் சம்பளம் ஒன்றும் கிடையாது. ஒப்பந்தகாலம் கழிந்தவுடன் தொழில்பயிலுவோன் ஒரு நாட்கூலியாளாக எடுக்கப்பட்டுக் கூலிவேலை செய்வது வழக்கம். கடைசியாகத் தேர்ந்த தொழிலாளியாகி விடுவான். ஒவ்வொரு தொழிலாளர் சங்கமும் தமக்குரிய கைத்தொழிலைச் சரியான முறையில் நடத்துவதற்காக

வேண்டிய விஷயங்களைக் கவனித்து வந்தன. தொழில் கற்கும் நிலை, தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்கள், பொருள்களின் விலை, வேலை செய்வோரின் கூலி முதலியனவற்றைக் கவனித்து வந்தன. ஒவ்வொரு தொழிலிலுமுள்ள கம்மியன்கள் கபடாய் வேலைசெய்வதைத் தடுப்பதும் ஒரு முக்கியமான வேலையாயிருந்தது. அங்கத்தினருள் ஏற்படும் விவகாரங்களைத் தீர்த்தலும் ஒரு முக்கிய கடமையாயிருந்தது.

பதினைந்தாவது நூற்றாண்டில் தொழிலாளர் சங்கங்கள் க்ஷீணமடைந்தன. தம் அங்கத்தினரைத் தவிர மற்றவர்களை அங்கத்தினராகச் சேரமுடியாமல் பல தடங்கல்களை உண்டாக்கினர். இதனால் அதிக மனக்குறை ஏற்பட்டது. இடைக்காலச் சங்கங்கள் குடியாட்சிக்குரிய தன்மை நீங்கி சிலர் ஆட்சிச் சங்கங்களாயின. சங்கத்தினர் எல்லாம் ஒரு வில்லை அணியும்படி ஏற்படுத்தினர். இதனால் எளிய அங்கத்தினர் விலையுள்ள வில்லைகளை வாங்கமுடியாததால் சங்கக்காரியங்களைப் பார்க்கமுடியவில்லை. மேலும் கவர்ன்மெண்டார் ஒரு புதிய வாணிப நோக்கமுறையை அநுசரிக்க ஆரம்பித்தனர். இதனால் இவ்விடைக்காலச் சங்கங்களின் பிரயோஜனம் குறையத் தொடங்கிற்று.

தொழில் திருத்த வளர்ச்சி சம்பந்தமாக நான்கு பருவங்களைக் குறிப்பிடலாம்—

(i) குடும்பமுறை (Family System):—11-வது நூற்றாண்டுவரை கைத்தொழில்கள் குடிசைத் தொழில்களாக ஒவ்வொரு குடும்பத்தினரும் நடத்திவந்தனர். கைத்தொழில்கள் குறைவாயும், விவசாயமே முக்கிய தொழிலாகவும், நடைபெற்று வந்தது.

(ii) சங்கமுறை (Guild System):—11-வது நூற்றாண்டிலிருந்து 16 வது நூற்றாண்டுவரை வர்த்தக சங்கங்களும் தொழிலாளர் சங்கங்களும் வியாபாரத்தையும், பொருளுற்பத்தியையும் ஒழுங்குபடுத்திவந்தன. பொருளுற்பத்தி சிறுமுறையில் நடைபெற்றது. பொருள் உண்டாக்குவோருக்கும், பொருள் நுகர்வோருக்கும் நடவடிக்கைகள் நேராகவே இருந்தன.

(iii) உள்நாட்டு முறை (Domestic System) :—16-வது நூற்றாண்டு முதல் 18 வது நூற்றாண்டுவரை தொழில் வளர்ச்சி உள்நாட்டு முறையில் நடைபெற்று வந்தது. சிறு முதலாளிகள் தம் மூலதனத்தைக் கொண்டு சில வினைஞர்களைக் கூலி வேலைக்கு ஏற்படுத்தி அவர்களால் உண்டாக்கப்படும் பொருள்களை விற்று இலாபமடைந்தனர். உள்நாட்டு முறையானது இக்காலத்தியத் தொழிற்சாலை முறையை முன்னறிவுக்கும் முறையாகக் கருதலாம்.

(iv) தொழிற்சாலை முறை (Factory System) :—18-வது நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட தொழிற்புரட்சியால் தொழிற்சாலை முறை ஆரம்பித்தது. இதுநிற்க, இடைக்கால வர்த்தகத்திற்கும், இக்கால வர்த்தகத்திற்குமுள்ள சில வித்தியாசங்கள் கவனிக்கத்தக்கவை :

(i) இடைக்காலத்தில் வர்த்தகமும், கைத்தொழிலும் சிறு வீத முறையில் நடைபெற்றன. அவை இடைக்காலச் சங்கங்களினால் ஒழுங்குபடுத்தப்பட்டன. ஆனால் இக்காலத்தில் வர்த்தகமும் கைத்தொழில்களும் பெரு வீத முறையில் நடைபெற்று வருகின்றன. தவிரவும் இக்கால விற்பனைப் பிரதேசங்கள் உலக சந்தைகளாயிருக்கின்றன.

(ii) இடைக்காலத்தில் வர்த்தகம் நகரங்களைச் சார்ந்திருந்தது. இக்காலத்தில் வர்த்தகம் பன்னாட்டு முறையில் நடைபெற்று வருகிறது.

(iii) இடைக்காலத்தில் முதலாளி, தொழிலாளி, தொழில் போட்டி முதலிய அம்சங்கள் இக்காலத்தைப் போல் வளர்ச்சியடையவில்லை. வியாபாரத்தில் முதலாளிகள் என்னும் வர்க்கத்தினர் ஒருவரும் ஏற்படவில்லை. பொருளியல் தேவையானது மாறுபாடில்லாமலிருந்தது.

(iv) வர்த்தகமும், கைத்தொழில்களும் அநேகமாக சன்மார்க்கமுறையில் நடைபெற்றன. ஆனால் இக்காலத்தில் வர்த்தகர்கள் இலாபத்தையே கருத்தாகக்கொண்டு, முறையான விலை, வாணிகம், கூலி முதலியவற்றை அவ்வளவு கவனிப்பதில்லை.

18-வது நூற்றுண்டின் இறுதியில் ஐரோப்பாவில் ஒரு பெரிய தொழிற்புரட்சி ஏற்பட்டது. அதின் முக்கிய அம்சங்களாவன :—

(1) கைவேலைக்குப் பதிலாகப் பொறி வேலை எங்கும் ஏற்பட்டது. முதலில் நீராவியினுல் இயக்கப்படும் இயந்திரங்களும் பின்னுல் மின்சார சக்தியினுல் இயக்கப்படும் இயந்திரங்களும் ஏற்பட்டன. தவிர பொறித் தொழில்களின் அமைப்பும் சீர் திருத்தம் அடைந்தது. அதாவது தொழிற்சாலைகளில் இயந்திரங்களைக் கொண்டும், கூலிக்காரர்களைக் கொண்டும் பெருவீத பொருளுற்பத்தி ஆரம்பிக்கப் பட்டது. அவ்விதத் தொழில்கள் முதலாளியர் கைத் தொழிலாக (capitalist industry) அமைக்கப்பட்டு வந்தது. இவ்விதப் பொருளுற்பத்தியில் ஐரோப்பிய நாடுகள் அதிக முன்னேற்ற மடைந்திருக்கின்றன. இந்தியாவில் இவ்விதப் பொருளுற்பத்தி ஆரம்ப நிலையிலிருக்கிறது.

(2) போக்கு வரவு சாதனங்களிற் பெரிய சீர் திருத்தங்கள் ஏற்பட்டன. தரை மார்க்கத்திலும், கடல் மார்க்கத்திலும் துரிதமாயும் இலாபகரமாயும் போக்கு வரத்து ஏற்பட்டது. தரை மார்க்கத்தில் ரெயில், மோட்டார் மூலமாயும், கடல் மார்க்கத்தில் நீராவியாலும், எண்ணெயாலும் இயக்கப்படும் கப்பல்களினுலும் போக்கு வரவு அதிக விருத்தியடைந்திருக்கிறது.

(3) விற்பனைப் பிரதேசங்கள் (markets) விரிவு அடைந்தன. உழைப்புப் பகுப்பு (division of labour) விருத்தியடைந்தது. அநேக சரக்குகளுக்கு விற்பனைச் சந்தையானது உலகச் சந்தையாகப் பரவிற்று. தங்கம், வெள்ளி, பருத்தி, கோதுமை, சர்க்கரை முதலிய வற்றிற்குத் தற்கால விற்பனைப் பிரதேசமானது உலகம் முழுவதும் பரவியிருக்கிறது.

(4) பொருளாக்க வாழ்க்கையில் தடையில்லாப் போட்டி (free competition) அல்லது பொருளாக்க சுயேச்சை (economic freedom) ஏற்பட்டது. வணிகம் முறைப்படுத்தல் தடையில்லாப் போட்டி முறையில் நடை பெறத் தொடங்கியது. ஆனுல் அதனுல் அநேக தீங்குகள் ஏற்பட்டன. தொழிற்சாலைக

ளில் கூலி வேலைக்காரர் அதிக நேரம் வேலை செய்யும்படி ஏற்பட்டது. தொழிற்புரட்சி முறையில் நேரிட்ட விபத்துக்களை நீக்குவதற்குக் கவர்ன்மெண்டார் குறுக்கிடல் அவசியமாகி விட்டது. தற்காலத்தில் பொருளாக்க வாழ்க்கையைக் கவர்ன்மெண்டார் பலவிதமாக முறைப்படுத்துகின்றனர்.—உதாரணமாக,

(i) தொழிலாளர் சட்டம், தொழிற்சாலைச் சட்டம், தொழிலாளர் இயக்க அமைப்பு

(ii) அரசாங்கத்தாரே சில தொழிற்களை நடத்துதல்.

(iii) விற்பனைச் சாமான்களைப் பரிசோதித்தல்.

III

பொருள் நுகர்வு

(CONSUMPTION)

எல்லாவிதப் பொருளுற்பத்தியும் பொருள் நுகர்வுக்கேயாம். ஒரு தார்பரியமுமில்லாமல் நாம் பொருளுற்பத்தி செய்வதில்லை. பொருள் நுகர்வில்லாவிடில் பொருளுற்பத்தி செய்வது சாத்தியமன்று. ஆகையால் பொருளுற்பத்திக்கும், பொருள் நுகர்வுக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கிறது.

பொருள் நுகர்வு மக்களின் வாழ்க்கை நிலையைப் பொருத்திருக்கிறது. வாழ்க்கைநிலை ஒரேமாதிரியாக இல்லாமல் மக்களுக்கு மக்கள் வித்தியாசப்படுகிறது. மேனாடுகளில் ஜீவனத்திற்கு வேண்டிய மூலாதாரங்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் வகுப்புக்கு வகுப்பு அதிக வித்தியாசமில்லை. ஆனால் இதர பொருள் நுகர்வில் வகுப்புக்கு வகுப்பு அதிக வித்தியாசமிருக்கிறது. இந்தியாவில் ஜீவனத்திற்குரிய மூலாதாரங்களில்கூட வகுப்புக்கு வகுப்பு வித்தியாசமிருக்கிறது.

வாழ்க்கை நிலையானது அளவில்மட்டுமல்ல, தரத்திலும் வித்தியாசப்படுகின்றது. சில பொருள்களை நுகர்தல் சரீர சுகத்தைக்கொடுக்கலாம். ஆனால் ஒழுக்க வாழ்விற்கு அவை கெடுதியானதாயிருக்கலாம். பொருளாதார நூலில் வாழ்க்கை நிலை சம்பந்தமாக சரீர சுகத்திற்கு வேண்டிய பொருள்களைமட்டும் கவனித்தல் சரியன்று. உண்மையான வாழ்க்கை நிலையானது சுக ஜீவியம்தவிர மக்களின் வாழ்க்கையில் உன்னதநிலை அடையக்கூடியதன்மையிருக்கவேண்டும். மார்ஷல் (Marshall) என்னும் பொருள் நூலாளர் கூறியிருக்கிறபடி வாழ்க்கை நிலையென்றால் முயற்சியும், விருப்புப்பொருள்களும் சரியான வழியில் ஏற்படும் நிலையென்று கூறலாம். அதாவது மக்களின் வாழ்க்கைநிலை

உயர்வு அடையவேண்டுமானால் அவர்களின் அறிவு, முயற்சி, ஆத்ம சம்மானம் முதலியன அதிகப்படுத்துவதேயாம். இவ்வித குணங்களால் மக்கள் தம் செலவுகளில் அதிகப் பொறுப்பும் நிதானமும் ஏற்படுத்துதல் வேண்டும். தேக சுகத்திற்கும், ஒழுக்க முன்னேற்றத்திற்கும் பிரயோஜனமற்றதாய், மக்களின் அவாவை மட்டும் பிரியப்படுத்தும் உணவும், பானமும் நீக்குதல் வேண்டும்.

இவ்விதக் கொள்கைப்படி மிகச் செலவுள்ள வாழ்க்கைநிலை உன்னதமான வாழ்க்கைநிலையென்று சொல்லமுடியாது. ஒரு கூட்டத்தாரின் வாழ்க்கைநிலை தாழ்ந்த நிலையா அல்லது உன்னத நிலையா என்பதைத் தீர்மானிக்க அவ்வாழ்க்கைநிலையானது பொருள் வளர்ச்சியையும், ஒழுக்க முன்னேற்றத்தையும் அதிகப் படுத்துகிறதாவென்று கவனிக்கவேண்டும்.

இந்தியாவில் ஜனங்களின் வாழ்க்கை நிலை மற்ற தேசங்களுடன் ஒப்பிடுங்கால் மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறது. மதக்கொள்கைகளினாலும், சமூக வாழ்வினாலும், பழைய பழக்கங்களினாலும் இந்தியரின் வாழ்க்கை நிலை குறுகியதாயிருக்கிறது. ஆனால் சமீப காலங்களில் அனாவசியமான விருப்புப் பொருள்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. விருப்புப் பொருள்கள் அதிகரிக்க, ஒரு தேசத்தாரின் முயற்சியும் அதிகப்படுமென்று சிலர் சொல்லுகின்றனர். நாகரீகத்தின் ஆரம்ப காலத்தில் தான் இவ்விதக் கொள்கை சற்று பொருத்தமென்று சொல்லலாம். நாகரீகம் விருத்தியடைய அனாவசியமான விருப்புப் பொருள்களை நாம் அடைய முயற்சித்தால் அவ்வித முயற்சி நல்லொழுக்க வாழ்வுக்கு ஏதுவானதன்று. நாகரீகத்தின் உண்மையான பரீக்ஷாசாதனம் என்னவென்றால் விருப்புப் பொருள்களை அதிகரிப்பதன்றி சுவஸ்த முயற்சிகளை அதிகரிக்கப் பண்ணுவதேயாம்.

பொருள்நூலாளர் நுகரும்பொருள்களை வாழ்க்கைக்கு இன்றியமையாதவையென்றும், பெரும்போக நுகர்ச்சிப்பொருள்களென்றும் பிரித்திருக்கின்றனர். மறுபடியும் இன்றியமையாத பொருள்களை உயிர் வாழ்வுக்கு இன்றியமையாத பொருள்களென்றும், வல்லமையுள்ள வாழ்வுக்கு வேண்டியவையென்றும்

பிரிக்கலாம். இன்னமும் சில பொருள்கள் வழக்கமான இன்றியமையாப் பொருள்களென்றும் வழங்குகின்றன.

இந்தியாவில் பொருள் நுகர்வு சம்பந்தமாக நம்பத்தக்க புள்ளி விவரங்கள் இல்லை. வரிக்குட்பட்ட பொருள்களை எடுத்துக்கொண்டோமானால் அவற்றின் சராசரி நுகர்வை நாம் எளிதில் தெரிந்து கொள்ளலாம். ஆனால் நாம் இவ்வித விசாரணையினால் சாதாரண ஜனங்களின் பொருளாக்க நிலைமையைத் தெரிந்து கொள்ளமுடியாது. தெரிந்தெடுத்த கிராமங்களிலும், நகரங்களிலும் ஜனங்களின் பொருளாக்க நிலைமையைப் பற்றிப் பரிசோதனை செய்யவேண்டியது அவசியம்.

வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகளைச் சற்றுக் கவனிப்போம். முதலாவது உணவு இன்றியமையாதது. இந்தியாவில் ஜனங்களின் சராசரி வருமானம் மிகவும் குறைவாகவேயிருக்கிறது. பெரும்பான்மையோர் சரிவர உணவில்லாமலிருக்கின்றனர்.

இந்தியாவிலுள்ளோருக்கு ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களிலுள்ளோரைப்போல் அவ்வளவு ஆடைகள் அவசியமன்று. கோடைகாலங்களில் குறைந்த ஆடைகள் இருந்தால் போதும். ஆனால் குளிர்காலங்களில், முக்கியமாக வட இந்தியாவில், கம்பளித் துணிகள் அவசியம் வேண்டியிருக்கிறது. பொதுவாக நடுத்தர நிலைமையிலுள்ளவர் ஆடைகளில் தம் தகுதிக்குமேல் செலவிடுகின்றனர். ஆடை ஆபரணத்திற்காக மற்ற முக்கிய செலவைக் கூடக் குறைக்கின்றனர். இந்தியாவில் பெரும்பான்மையோர் ரம்மியமான வீடுகளில் வசிக்கவில்லை. அநேகர் குடிசைகளிலே வசிக்கின்றனர்.

உயர் வாழ்வுக்கு வேண்டிய பொருள்கள் இல்லாமலிருத்தல் தேசத்தின் பொருளாக்க முயற்சிக்கு ஒரு பெரிய தடங்கலாயிருக்கிறது. பொருளுற்பத்தி அதிகப்படவேண்டுமானால் ஜனங்கள் திறமையுள்ளவர்களாயிருக்கவேண்டும். சரியான போஷணையில்லாமையால் ஜனங்கள் திடனற்றவர்களாயும், இலகுவில் வியாதிக்கும் உட்படுகின்றனர். சரீர சீரழிவு அதிகப்படுதலானது

ஒழுங்குலை குறைவதற்கும் ஏதுவாயிருக்கிறது. வேலையாட்களின் திறனும் படிப்படியாகக் குறைந்துகொண்டே வருகிறது.

ஜீவனத்திற்கு இன்றியமையாத பொருள்களை ஒடுக்குதல் பொருளாக்க முறையில் மிகவும் கெடுதலென்றே சொல்லவேண்டும். இந்தியாவில் ஜனங்களின் பொருளுற்பத்தி சக்தி அதிகப்படவேண்டுமானால் அவர்கள் நுகரும் பொருள்கள் அதிகப்படவேண்டும். திறனளிக்கும் பொருள்களையே அதிகமாக உண்ண வேண்டும். ரம்மியமான உணவைவிட பலத்தை அதிகரிக்கும் உணவே சிலாக்கியமானது. மதுபானமும், மயக்கத்தக்க பொருள்களை உண்ணுதலும் பணத்தைப் பறிப்பதுடன் மக்களின் மனத்தையும், தேகத்தையும் கேவலப்படுத்துகிறது. பெரும்போக நுகர்ச்சியானது பணத்தையும், சுகத்தையும், அறிவையும் குறைக்கும் தன்மையுள்ளது. முடிவாக ஜீவனத்திற்கு உணவும், ஆடையும், இருப்பிடமும் இன்றியமையாதவை. ஆனால் உயர்தர ஜீவனத்திற்கு கல்வியும், விடுதிநேரமும், இளைப்பாறுதலுக்குரிய சாதனங்களும் வேண்டும். இவைகள் எல்லாவற்றிற்கும் வருமானம் அதிகமாயிருத்தல் அவசியம்.

மக்களின் விருப்புப் பொருள்கள்
(Human Wants)

மக்களின் விருப்புப் பொருள்களின் சில அம்சங்கள் கவனிக்கத்தக்கவை.

(1) மக்களின் விருப்புப் பொருள்கள் அளவிறந்தனவாயிருக்கின்றன. விலங்கினத்தைப்போலன்றி, மக்களுக்கு நானாவித தேவைகளிருக்கின்றன. மக்களின் பலவிதத் தேவைகளினால்தான் நாகரீகமும், முன்னேற்றமும் வளர்ந்துகொண்டே வருகிறது. காட்டுத்தனத்திலிருந்து இக்கால நாகரீகம் அடைந்திருப்பதற்கு முக்கிய காரணம் மக்களின் விருப்புப் பொருள்கள் அதிகரித்து வருவதேயாம். மானிட வாழ்க்கையில் விருப்புப் பொருள்களைக் கூடியவரையில் குறைத்து வாழ்வதே ஒழுங்கான நிலைமையென்று சிலர் கூறுகின்றனர். மகாத்மா காந்தியும் இக் கொள்கையை கடைப்பிடித்து வருகின்றார். இந்தியாவிலுள்ள

எளிய ஜனங்களுக்கு இக்கொள்கை சில விஷயங்களில் பிரயோஜன முள்ளதாகச் சொல்லலாம். ஆனால் தற்கால நாகரீகம் அதிகரித்துக்கொண்டு வருவதால் உணவிலும், உடையிலும் நானாவித தேவைகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. மேனாடுகளில் இவ்விதமாய் பலவித தேவைகள் ஏற்படுவதே நாகரீகத்திற்கு ஒரு பரீக்ஷாசாதனமாகக் கருதப்படுகிறது.

(2) மக்களின் விருப்புப் பொருள்களில் ஒவ்வொரு விருப்புப் பொருளும் ஒரு திட்டத்திற்கு மேல் திருப்தியாகி விடுகிறது. ஏதாவது ஒரு பொருளை எடுத்துக் கொள்வோமாகில் அப்பொருள் அதிகப்பட அதனால் உண்டாகும் திருப்தி குறைவாக வேயிருக்கிறது. உதாரணமாக தாகத்தினால் வருந்துவோனுக்கு தண்ணீரைக் கொஞ்சம் சாப்பிட்டபிறகு தண்ணீரின் பேரிலுள்ள அவாக் குறைகிறது. இவ்விதத் தன்மையிலிருந்து குறைபயன் (Diminishing utility) என்னும் விதியை நாம் ஏற்படுத்தலாம்.

(3) மக்களின் விருப்புப் பொருள்கள் போட்டித் தன்மை யுடையன. மக்களின் நானாவிதத் தேவைகள் ஒன்றுக்கொன்று போட்டி போடுகின்றன. ஒரு பையனுக்கு ஒரு அணாக் காசு கிடைக்குமாகில் அதற்குப் பண்டம் வாங்கவா அல்லது படங்கள் போய்ப் பார்க்கவா என்று பலவித தேவைகளினால் பாதிக்கப் படுகிறான்.

(4) மக்களின் விருப்புப் பொருள்கள் ஒன்றுக்கொன்று நிரப்பும் தன்மையுள்ளன. உதாரணமாக பெட்ரோல் எண்ணை இல்லாமல் மோட்டார் வண்டி பிரயோஜனமில்லை. வண்டியும் குதிரையும், தாளும் பென்சிலும், இவைகளெல்லாம் ஒன்றுக் கொன்று நிரப்புந் தன்மையுள்ளன.

பொருளியல் தேவை (**Demand**)

எல்லா மக்களும் இச்சிக்கும் பொருள்களெல்லாம் பொருளியல் தேவையாகச் சொல்ல முடியாது. பொருளியல் தேவையென்பது மக்கள் இச்சிக்கும் பொருளை பொருளாக்குத் திறமையால் அடைவதேயாம். எல்லாப் பொருள்களையும் மக்கள் இச்சிப்பதில்லை. பயனுள்ள பொருள்களையே மக்கள் விரும்புகின்றனர்.

பொதுவாக மக்களின் தேவைகள் ஒரு தொகுதியாகவேயிருக்கின்றன.—உதாரணமாக உணவு, உடை, இருப்பிடம் முதலியவற்றை எடுத்துக் கூறலாம். ஒரு மாணாக்கனின் தேவையாவன—புஸ்தகங்கள், விளையாட்டுச் சாமான்கள், சமாசாரப் பத்திரிகை முதலியனவாம்.

குறை பயன் விதி (Law of Diminishing Utility)

மக்களின் ஒவ்வொரு தனித்த விருப்புப்பொருளும் திருப்தியடையும் தன்மையுடையது. ஒவ்வொரு தனித்த விருப்புப் பொருளும் வரையறுக்கத்தக்கது. பொதுவாக மற்ற விஷயங்கள் சரியானபடி இருக்கும் பட்சத்தில் மனிதனுக்கு ஒவ்வொரு விருப்புப் பொருளும் அதிகப்பட அப்பொருளின்பேரிலுள்ள இச்சை குறைகிறது. இவ்விதியைப் பின்வருமாறு விளக்கிக் காட்டலாம்.

மொத்தப் பொருள் (Total quantity)	முதல் பவுண்டின் பயன் (Utility of the 1st pound)	கடைசிப் பாகத்தின் பயன் (Marginal utility)	மொத்தப் பயன் (Total utility)
1 பவுண்டுப் புகையிலை	100	100	100
2 ,,	100 + 80 (இரண்டாவது பவுண்டின் பயன்)	80	180
3 ,,	100 + 80 + 60 (மூன்றாவது பவுண்டின் பயன்)	60	240
4 ,,	100 + 80 + 60 + 40 (4-வது பவுண்டின் பயன்)	40	280

மேற்கண்ட திருஷ்டாந்தத்திலிருந்து நாம் கவனிக்கக்கூடிய விஷயங்களாவன :—

(1) ஒரு மனிதனின் மொத்தக்கொள்விலை 1 பவுண்டு புகையிலையாயிருக்கும்பொழுது 1 பவுண்டு அவனுடைய கடைசிப் பாகத்தின் கொள்விலை (Marginal purchase). ஒரு மனிதனின் கொள்விலை 2 பவுண்டாயிருக்கும்பொழுது இரண்டாவது பவுண்டு அவனுடைய கடைசிப் பாகக் கொள்விலை. ஒரு மனிதனின் கொள்விலை 3 பவுண்டாயிருக்கும்பொழுது மூன்றாவது பவுண்டு அவனுடைய கடைசிப் பாகக் கொள்விலை. கடைசிப் பாகத்தின் கொள்விலையின் பயனை கடைசிப் பாகப் பயன் (Marginal utility) என்கிறோம்.

ஒவ்வொரு பொருளையும் நாம் அதிகமாய்ப் பெறுங்கால் மேலதிகமான பொருளின் கூடிய பயன் குறைவாகவே யிருக்கும். ஒருவனிடம் இருக்கும் பொருள்கள் அதிகப்பட அப்பொருளின் கடைசிப் பாகப்பயன் (marginal utility) குறைவு அடைகிறது. ஆனால் மொத்தப் பயனானது அதிகரித்துக் கொண்டே வருகிறது. இக்காலத்தில் பொருளியல் தேவையை நாம் பணத்தின் சார்பாகவே எடுத்துக் காட்டுகிறோம். அதாவது பொருள்களின் தேவை அவற்றின் விலையைப் பொருத்திருக்கிறது.

தனியாளின் தேவை இடாப்பு
(Demand Schedule of an Individual)

ஒரு மனிதன் பின் வருமாறு புகையிலை வாங்குவதாக நினைப்போம்.

2 பவுண்டு புகையிலை	1 பவுண்டுக்கு ரூ	3	வீதம்
4 ,,	,,	2	,,
6 ,,	,,	1	,,
9 ,,	,,	8	அணா

விலை குறைய வாங்கும் சரக்கு அதிகப்படுகிறது; விலை அதிகப்பட வாங்கும் சரக்குக் குறைகிறது.

ஒரு சந்தையின் இடாப்பு
(Demand Schedule of a Market)

ஒரு சந்தையில் 100 நபர் இருப்பதாக வைத்துக்கொள்வோம். சிலர் அதிகப் பணமுள்ளவர்களாயும், சிலர் அதிகப் பணமில்லாதவர்களாயுமிருக்கலாம். சிலருக்குப் புகையிலையில் அதிகப் பிரியமும், சிலருக்குக் குறைவாகவும் இருக்கலாம். ஆனால் சராசரித் தேவையானது மேற்கண்ட தனியாளின் தேவையைப் போலிருப்பதாக வைத்துக்கொள்வோம். பிறகு அச்சந்தையின் இடாப்பைக் கீழ்க் கண்டபடி எடுத்துக் காட்டலாம்.

200 பவுண்டு புகையிலை	1 பவுண்டுக்கு	ரூ 3	வீதம்
400 ,,	,,	2	,,
600 ,,	,,	1	,,
900 ,,	,,	8	அணு.

நாம் மேற் கூறிய விஷயங்களிலிருந்து தேவையின் ஒரு விதியை ஏற்படுத்தலாம். அதாவது பொருள்களின் விலை குறைய பொருளியல் தேவை அதிகப்படும்; பொருளின் விலை ஏற்றமடைய பொருளியல் தேவை குறையும்.

தேவை நெகிழ்ச்சி (Elasticity of Demand).

விருப்புப் பொருளின் நெகிழ்ச்சியானது விலைக்குத் தக்கபடி வேறுபடுகிறது. விருப்புப் பொருள்களின் நெகிழ்ச்சி எல்லாப் பொருள்களுக்கும் ஒரே மாதிரியா யில்லாமல் பலவிதப் பொருள்களுக்குப் பலவிதமாயிருக்கிறது.

(1) பெரும் போக நுகர்ச்சி (Luxuries):—உயர்தரப் பழங்கள், ஆடைகள், ஆபரணங்கள் முதலியன விலை இறங்குங்கால் இப்பொருள்களுக்குப் பணமுடையவர்களின் தேவை அதிகப்படும்; எளியவர்களுக்கு ஒருவித வேறுபாடும் ஏற்படுவதில்லை.

(2) இன்றியமையாதவை (necessaries):—உப்பு, சர்க்கரை முதலியன இன்றியமையாதவையாயிருப்பதால் இவைக

ளின் விலை வேறுபடுவதால் இப்பொருள்களின் தேவை அதிக நெகிழ்ச்சியடைவதில்லை.

(3) பழக்கம்:—ஒரு பொருளைப் பல நாளாக உபயோகித்து வந்தால் அப்பொருளின் தேவை விலை வேறுபடுவதால் அதிக நெகிழ்ச்சி அடைவதில்லை.

(4) நானாவித உபயோகங்கள் (variety of uses):—ஒரு பொருளைப் பலவிதமாக உபயோகப்படுத்தினால் அவைகளின் தேவை அதிக நெகிழ்ச்சியடைகின்றன. உதாரணமாக இரும்பை வீடுகட்டவும் இருப்புப்பாதை போடவும், பலவித இரும்புச் சாமான்கள் செய்யவும் உபயோகப்படுத்துகிறோம்.

(5) பிரதிப் பொருள்கள் (substitutes):—இப்பேர்ப்பட்ட பொருள்களின் தேவை அதிக நெகிழ்ச்சி அடைகின்றன. ஆவி விளக்கு அதிகச் செலவுள்ளதாயிருந்தால், அதற்குப் பதிலாக மின்சார விளக்கை உபயோகிக்கலாம்.

தேவை நெகிழ்ச்சி என்னும் கருத்து அப்பியாசத்திற்குரிய வழிகளில் உபயோகமாயிருக்கிறது. உதாரணமாக வருமான மந்திரி வரிகள் விதிக்கும் முறையில் பண்டங்களின் நெகிழ்ச்சித் தன்மையைக் கவனித்து வரி விதிக்கவேண்டும். இல்லாவிடில் மதிப்புக்குத்தக்கபடி வருமானம் கிடைப்பதில்லை.

எஞ்சலின் விதி (Engel's Law)

பொருள்நுகர்வு சம்பந்தமாக மேனுடுகளில் பல ஆராய்ச்சிகள் பண்ணப்பட்டு வருகின்றன. எஞ்சல் என்பவர் சாக்ஸ்னி என்னும் மாகாணத்தில் சில குடும்பங்களின் வரவு செலவு திட்டத்தை ஆராய்ச்சி செய்து சில பொது விஷயங்களைக் கூறியிருக்கின்றனர். அவர் வெளியிட்டிருக்கும் விஷயங்கள் சாக்ஸ்னி (Saxony) என்னும் மாகாணத்தின் ஜனங்கள் சம்பந்தமாக ஆராய்ச்சிபண்ணப்பட்டபோதிலும் அவ்விஷயங்கள் எல்லாத் தேசத்தாராலும் கவனிக்கத்தக்கவை. எஞ்சலின் ஆராய்ச்சியைக் கீழ்க்கண்டபடி விளக்கலாம்.

	கூலிவேலைக்காரர் குடும்பம் (Labourer's family)		நடுத்தரக் குடும்பம் (Middle class family)		செழிப்பான குடும்பம் (well-to-do family)	
உணவு	62	95%	55	90%	50	85%
வஸ்திரம்	16		18		18	
வாடகை	12		12		12	
விளக்குச் செலவு	5		5		5	
படிப்பு	2		3.5		5·5	
வரி	1		2		3	
தேகசுகம்	1		2		3	
இதரச் செலவு	1		2·5		3·5	
	100		100		100	

மேற்கண்ட சூசிகையிலிருந்து எஞ்சல்ஸ் சில சித்தாந்தங்களை நிதானித்திருக்கின்றனர்.

(1) குறைந்த வருமானங்களில், உணவுச் செலவின் நூற்றுவீதம் அதிகமாயிருக்கிறது.

(2) உடைச் செலவின் நூற்றுவீதம் எல்லாத் தரத்தினிலுள்ளவர்களுக்கும் அநேகமாக ஒன்றுபோலிருக்கிறது.

(3) வீட்டு வாடகை, விளக்குச் செலவு முதலியன எல்லாத் தரத்தினிலுள்ளவர்களுக்கும் அநேகமாக ஒன்றுபோலிருக்கிறது.

(4) வருமானம் அதிகப்பட, படிப்பு, தேக சௌக்கியம் முதலிய செலவின் நூற்று வீதம் அதிகமாயிருக்கிறது. சந்தேகமின்றி ஒவ்வொரு வகுப்பினரின் செலவு எல்லாத் தேசத்திலும் ஒன்றுபோலிருக்க முடியாது. பெல்ஜியத்தில் ஒரு கூலிவேலைக்காரனின் குடும்பச் செலவில் 60% உணவுக்கும், 15% உடைக்கும், 10% வாடகைக்கும் செலவு ஏற்படுவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் உணவுச் செலவு 43·4% ஆகவும், உடைச் செலவு 10·6% ஆகவும், வாடகைச் செலவு 9·4% ஆகவும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தியாவில் கூலிவேலைக்காரர் குடும்பத்தில் மேற்கூறிய தேசங்களைவிட உணவுச் செலவு

அதிகமாயும், உடை, படிப்பு முதலிய செலவுகள் குறைவாயு மிருக்கின்றன. இவ்வித வேறுபாடுகளிருந்தபோதிலும், எஞ்ச லின் சித்தாந்தங்கள் எல்லாத் தேசங்களுக்கும் பொருத்தமாயிருக் கின்றன. அதாவது :

(1) குறைவான வருமானமுள்ளவர்கள் பெரும்பாலும் உணவு, உடை முதலியவற்றிற்கு அதிகமாகச் செலவுசெய்யும்படி யிருக்கிறது.

(2) அதிக வருமானமுள்ளவர்களுக்கு உணவு, உடை முத லியவற்றின் செலவு குறைவாகவும், இதரச் செலவு அதிகமாயு மிருக்கிறது.

இந்தியாவில் கூலிவேலைக்காரரின் வாழ்க்கைநிலை சம்பந்த மாக சில ஆராய்ச்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்பேர்ப் பட்ட ஆராய்ச்சிகளின் சில புள்ளி விவரங்களைக் கீழ்க்கண்டபடி குறிப்பிடலாம்.

செலவின் விபாகம் (நூற்று வீதம்)

இனம்	பம்பாய்	ஆமதபாத்	சோலாப்பூர்	நாகப்பூர்	மதராஸ்
	1932-33	1933-35	1925	192	1938
உணவு	46·60	49·31	49·25	64·10	52·63
விளக்கு, விறகுச் செலவு	7·11	6·65	9·60	9·62	6·67
உடை	7·75	9·12	11·86	10·70	4·50
வீட்டு வாடகை	12·81	10·97	6·27	1·92	11·14
இதரச்செலவு	25·73	23·95	23·02	13·66	25·06


வாழ்க்கை நிலையானது ஒவ்வொரு குடும்பத்திலுள்ள நபர் களையும், வருமானத்தையும் பொருத்திருக்கிறது. இது விஷய மாய்க் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் கவனிக்கத்தக்கவை.

	பம்பாய்	ஆமதபாத்	சோலாப்பூர்	நாகப்பூர்
சராசரி ஒரு குடும்பத்திலுள்ள நபர் களும் சராசரி மாத வருமானமும்	3·70	4·05	4·57	6·03
	ரூ.அ.பை.	ரூ.அ.பை.	ரூ.அ.பை.	ரூ.அ.பை.
	50 1 7	46 5 0	39 14 10	37 5 11

முதலாவது குசிகைப்படி இதரச் செலவானது மற்றச் செலவுடன் ஒத்துப்பார்க்குமிடத்து சிறிது கூடுதலாயிருக்கிறது. இதரச்செலவு என்னும் தொகுதியில் கடனுக்குக் கொடுபடும் வட்டியும் முதலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

கூட்டுத் தேவை (Joint Demand)

சில பொருள்கள் ஒன்றுசேர்ந்து உபயோகப்படுகின்றன. ஆகையால் அவற்றுள் ஒன்றில்லாமல் மற்றொன்று அதிக பிரயோஜனமில்லாமலிருக்கிறது. ஒன்றோடொன்று கூடி உபயோகப்படும் பொருள்களின் தேவையானது கூட்டுத்தேவையென்று சொல்லலாம். உதாரணமாக கோதுமைக்குத் தேவை ஏற்பட்டால் அதை விளைவிப்பதற்குரிய நிலமும், விதையும், உழைப்பும், போக்குவரவுச் சாதனங்களும் வேண்டியிருக்கின்றன.




இவ்விதமாக அநேக பொருளுற்பத்தி சாதனங்களுக்கு ஏற்படும் தேவையானது கூட்டுத்தேவையாகவே யிருக்கிறது.

சினைத் தேவை (Composite Demand)

ஒரு பொருளானது பலவிதமாக உபயோகப்பட்டு வருகிறது. அவ்வித உபயோகங்களில் சேர்வையான தேவையை சினைத் தேவை என்று கூறலாம். உதாரணமாக உருக்கு இரும்பானது

இருப்புப்பாதைக்கும், வெட்டுக்கருவிக்கும், பாலங்கட்டவும், வீடு கட்டவும் உபயோகப்படுகிறது.



IV

சீதோஷ்ண நிலையும் பொருளாதார அபிவிருத்தியும்

(CLIMATE AND ECONOMIC DEVELOPMENT)

மக்களின் பொருளாக்க வாழ்க்கைக்குச் சீதோஷ்ண நிலை மிகவும் முக்கியமானது. சீதோஷ்ண நிலையின் இரண்டு அம்சங்கள்—அதாவது உஷ்ணமும், ஈரமும்—மக்கள் ஜீவனத்திற்கு இன்றியமையாதன. உலகத்தில் பனிக்கட்டி, உறைபனிகளால், மூடப்பட்ட பிரதேசங்கள் மனித சஞ்சாரம் பண்ணமுடியாத இடங்களாயிருக்கின்றன.

மக்கள் வாழ்க்கை சீதோஷ்ண நிலையைச் சார்ந்திருக்கிறது. மக்களால் சீதோஷ்ண நிலையை மாற்ற முடியாது. மலைகளைப் பிளந்து கணவாய் கட்டவோ அல்லது பெரிய நதிகளில் பாலங்கள் கட்டவோ மக்களால் தற்காலத்தில் செய்ய முடியும். ஆனால் மனிதனால் மழையை உண்டாக்கவாவது காற்றை மாற்றவாவது இயலாத காரியம். மனிதனுடைய ஆகாரம், உடை இருப்பிடம் முதலியன சீதோஷ்ண நிலையைப் பொருத்திருக்கின்றன.

சீதோஷ்ண நிலையானது வியாபாரப்போக்கையும் நிர்ணயிக்கிறது. ஏனென்றால் எந்தெந்தப் பிரதேசங்களில் தாவரப் பொருள்களும் விலங்குகளும் உற்பத்தியாகுமென்பது சீதோஷ்ண நிலையைப் பொருத்திருக்கிறது. உலக நாகரீகமானது மிதஉஷ்ணப் பிரதேசங்களில் ஆரம்பித்து நாளடைவில் மிகக் குளிருள்ள பிரதேசங்களுக்குப் பரவியதற்குள்ள காரணங்களில் சீதோஷ்ண நிலை முக்கியமென்பது கவனிக்கத்தக்கது. அதே காரணத்தினாலேதான் துருவ மண்டலப் பிரதேசங்களிலும் நாகரீகம் அதிகரிக்கவில்லை.

மறுபடியும் உலகின் கண்டங்களில் மேற்குப் பக்கமுள்ள உயர் அக்ஷரேகைகளின் பேரிலிருக்கும் இடங்கள் அதேமாதிரி

உலக கண்டங்களின் கிழக்குப் பக்கங்களிலுள்ள இடங்களைவிட மானிட வாழ்க்கைக்கு அதிக சௌகரியமாயிருக்கின்றன. அதற்குக் காரணம் சீதோஷ்ண நிலையின் வித்தியாசமேயாம். உதாரணமாக பிரிட்டன், நார்வே தேசங்களை, லாபிரடாருடன் ஒற்றுப் பார்க்கலாம்; அல்லது பிரிட்டிஷ் கொலம்பியாவை, காமட்சட்காவுடன் ஒத்துப்பார்க்கலாம். நதிகளும், கடல்களும் உறைபனியால் மூடப்படுதல் சீதோஷ்ண நிலையினால்தான். ருஷ்யா தேசத்தில் சைபீரியா சமவெளியிலுள்ள பெரிய நதிகள் வருஷத்தில் எழு மாதங்களுக்கு உறைபனியால் மூடப்பட்டிருக்கின்றன. பால்டிக் கடல் சில மாதங்களில் உறைபனியால் மூடப்படுவதால் அக்காலங்களில் பால்டிக் துறைமுகங்களுக்கு எளிதில் போகமுடிவதில்லை. இக்காரணத்தினாலேதான் ருஷ்யா நெடுங்காலமாகக் கருங்கடலிலுள்ள கான்ஸ்டாண்டிநோபில் என்னும் துறைமுகத்தைத் தன் வசம் வைத்துக்கொள்ளப் பிரயத்தனம் செய்துவந்தது.

சீதோஷ்ண நிலையும் வெளியேற்றமும் (Climate and Migration)

அதிக வித்தியாசமுள்ள ஜாதியர்கள்கூட ஒரேமாதிரி சீதோஷ்ண நிலையுள்ள பிரதேசங்களில் வசிப்பதால் அவர்கள் ஜீவனோபாயம் ஒன்றுபோலிருக்கிறது. தேசங்களின் சீதோஷ்ண நிலை வெவ்வேறாயிருப்பதால் ஒரு தேசம் விட்டு மற்றொரு தேசம் போய் வசிப்பதற்கு இடையூறாயிருக்கிறது. சீதோஷ்ண நிலையினால் உஷ்ணப் பிரதேசங்களில் வசிக்கும் ஐரோப்பியர் கோடை காலங்களில் மலைகளிலுள்ள குளிர்ச்சியான இடங்களிற் போய் வசிக்கிறார்கள். இதற்கு உதாரணமாக இந்தியாவில் சிம்லா, உதகமண்டலம் முதலிய இடங்களையும், பர்மாவில் மெய்மியோவையும், சிலோனில் நுவார இலியாவையும் குறிப்பிடலாம்.

சீதோஷ்ண நிலையும் கட்டிடக்கலையும் (Climate and Architecture)

சீதோஷ்ண நிலையினால் கட்டிடக்கலைகூட மாறுபாடு அடைகிறது. கட்டிடங்களும் கட்டிடங்கள் கட்டுவதற்குள்ள சாமான்களும் சீதோஷ்ண நிலையைப் பொருத்திருக்கின்றன. தாழ்ந்த

வெப்ப நிலையும், அதிக மழையுமுள்ள இடங்களில் கல்கப்பி, சுட்ட செங்கல்களினால் கட்டிடம் கட்டுதலும், கற்பலகையால் மூடப்பட்ட சரிவான கூறைகளைப் போடுதலும் அநுசரித்து வருகிறார்கள். மழையில்லாத உஷ்ண தேசங்களில் சரிவில்லாமல் ஒரே சமதளமுள்ள கூறைகளுள்ள கட்டிடங்கள் அதிக வசதியைக் கொடுக்கின்றன. உஷ்ணப்பிரதேசங்களில் அதிக சூரிய வெப்பம் மேல் படாமல் நல்ல காற்றுமட்டும் வீசுவதற்காக வீடுகளின் முன் பக்கங்களில் வெளியிடம் வைத்துக் கட்டிடங்கள் கட்டுகின்றனர். பங்காக்களும் (Punkas), சூரிய வெளிச்சத்தைக் குறைக்கக்கூடிய தட்டிகளும் உபயோகப்படுத்துகின்றனர். கடற்கரையோரங்களில் கட்டப்பட்டிருக்கும் தீபஸ்தம்பங்கள் வட்டவடிவமாய்க் கட்டப்படுவதற்குக் காரணம் காற்றின் அமுக்குதலை எதிர்ப்பதற்காகவென்று கருதப்படுகிறது. இந்தியாவில் வெப்பநிலை அதிகமாயிருப்பதால் வீடுகளின் வெளியிடங்களே ஜனங்களுக்கு வசதியான இருப்பிடங்களாயிருக்கின்றன.

சீதோஷ்ண நிலையும் வியாபார வழிகளும்
(Climate and Trade Routes)

பாய்மரக்கப்பல்கள் உபயோகப்பட்டு வந்த காலங்களில் கடலின்மேல் போக்குவரவுகள் காற்றின் திசையை அநுசரித்து வந்தன. ஸூயஸ், பனாமா நீர்வழிகள் ஒடுக்கமாயிருப்பதால் அவைகள் பாய்மரக்கப்பல்களின் போக்குவரவுக்குப் பிரயோஜனமில்லை. சுத்த ஜலமுள்ள இடங்கள், கோடைகாலம், மாரிகாலம் இவைகளெல்லாம் எவ்வளவு ஆழம்வரை கப்பல்களில் பாரம் ஏற்றலாமென்பதற்கு அறிகுறியாயிருக்கின்றன. வெண்பனியால் மூடப்பட்ட இடங்களில் போக்குவரவு சாதனங்கள் அவ்விடங்களுக்கு ஏற்றபடி அமைக்கவேண்டியதாயிருக்கிறது. சைபிரியாவில் சக்கரமில்லா வண்டிகள் (sledges) வெண் பனியின் மேற் போவதற்கு உபயோகப்பட்டு வருகின்றன.

சீதோஷ்ண நிலையும் கைத்தொழில்களும்
(Climate and Manufactures)

ஓரிடத்துத் தொழிற்சாலைகள் அமைதலுக்குள்ள காரணங்களில் சீதோஷ்ண நிலை முக்கியமானது. உதாரணமாக இங்கி

லாந்தில் லங்கிஷார் பருத்தி நெசவுச்சாலைகள் அவ்விடம் அமைவதற்குக் காரணம் சரியான ஈரப்பதன் இயற்கையாகவே அத்தொழிற்சாலைகளில் அமைந்திருப்பதேயாம். ஆனால் தற்காலத்தில் சரியான ஈரப்பதன் செயற்கைக் கருவிகளால் உண்டாக்க முடியும். சீதோஷ்ண நிலையினால் தொழில்கள் எவ்வாறு அடக்கப்பட்டு வருகிறதென்பதற்கு உதாரணமாகச் சினிமாத்தொழிலை எடுத்துக் கூறலாம். போட்டகிராப் படங்கள் நன்றாக எடுப்பதற்கு நல்ல சூரிய வெளிச்சமும் மேகமூட்டமும் தேவை. அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலுள்ள காலிபோர்னியாவில் இவ் வசதிகள் பொருந்தியிருப்பதாற் சலனப்படங்கள் எடுக்கும் தொழிலுக்கு அது ஒரு இருப்பிடமாக இருக்கிறது. ஆனால், சலனப்படங்களுக்கு வேண்டிய வெளிச்சமும், மப்பு முதலியன செயற்கைக் கருவிகளால் தற்காலம் படம் எடுக்கும் இடங்களில் உண்டாக்க முடியும். ஆகையால் இப்படங்கள் பிடிக்கும் தொழில் எல்லாத் தேசங்களிலும் பரவிக்கொண்டு வருகிறது.

சீதோஷ்ண நிலையும் மனோபாவமும்
(Climate and Mental Life)

உஷ்ணப்பிரதேசங்களில் வெப்பத்தினால் அதிக நேரம் வேலைசெய்ய மனிதன் சக்தியற்றவனாயிருக்கிறான். குளிர்ந்த தேசங்களில் களைப்பில்லாமல் அதிக நேரம் வேலைசெய்ய முடியும். அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் வடநாடுகளிலுள்ளவர்கள் அவ்விடத்திலுள்ள குளிர்ந்த சீதோஷ்ண நிலையினால் வெப்பமுள்ள ஐக்கிய தென் நாடுகளிலுள்ளவர்களைக் காட்டிலும் அதிகச் சக்தியும் திறனுமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அயர்லண்ட் தேசத்து கெல்ட் ஜாதியார் வசீகரமான சீதோஷ்ண நிலையினால் உற்சாகமுள்ளவர்களாயிருக்கிறார்கள். பிரிட்டிஷ் தீவுகளில் அநேகர் ஆடைகளுக்கு மப்பு நிறத்தைத் தேர்ந்தெடுப்பதற்குக் காரணம் அவ்விடமுள்ள சீதோஷ்ண நிலையின் ஈரப்பதனும் இயற்கை அமைப்பும் ஒரு காரணமாயிருக்கலாமென்பது சிலர் கொள்கை. மத்தியதரைக் கடற்பிரதேசத்தில் வாயுமண்டலத்தோற்றம் பளபளப்பான நிறமும் தெளிவான உறுப்புக்களுமுடையதா யிருப்பதால் அதற்கேற்றபடி இத்தாலியர் பளபளப்பான நிறங்களில்

அதிக ஆசையுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஹண்டிங்டன் என்னும் அமெரிக்கா தேசத்துப் பூகோளசாஸ்திரி மனிதனுடைய பொருளாக்க முயற்சி எவ்வாறு சீதோஷ்ண நிலையைப் பொருத்திருக்கிறதென்பதைப் பின்வருமாறு கூறியிருக்கிறார். நடுவெப்ப நிலை (mean temperature) 60°-யிலிருந்து 65° F வரையிருக்கும்பொழுது மனிதனுடைய சரீர முயற்சி அதிகமாயிருக்கிறது. வெளி வெப்பநிலை 38° F-ல் இருக்கும்பொழுது மனோ நிலையின் முயற்சி அதிகமாயிருக்கிறது. சமமாயும் மாறுபாடில்லாமலுமுள்ள வெப்ப நிலையிலும், திடீரென்று மாறுபாடு உண்டாகும். வெப்ப நிலையிலும் சரீரமுயற்சி கொஞ்சம் குறைகிறது. ஈரக்காற்றுள்ள நிலையானது நன்றாய் வேலை செய்வதற்கு ஏதுவாயிருக்கிறது. தொழிற்சாலைகளில் வேலைசெய்வோர் ஊக்கமாக வேலைசெய்யவேண்டுமானால் இயந்திரங்களைக் குளிர்காலத்தில் அதிக வேகமில்லாமலும், வசந்த காலத்தில் கொஞ்சம் வேகத்தை அதிகப்படுத்தியும், கோடைக்காலத்தில் மறுபடியும் கொஞ்சம் வேகத்தைக் குறைத்தும், இலையுதிர்காலத்தில் அதிக வேகமாகவும் இயக்கவேண்டும்.

V

பயிர்பச்சையும் பொருளாதார அபிவிருத்தியும்
(VEGETATION AND ECONOMIC DEVELOPMENT)

பூமியின் தரைப் பிரதேசங்களிலெல்லாம் ஏதாவது ஒரு பயிர் பச்சையை நாம் காண்கிறோம். ஆனால் பல இடங்களில் பயிர் பச்சைகள் வித்தியாசப்படுவதால் அதற்குத் தக்கபடி மக்களின் தொழில்களும் ஜீவனோபாய முறையும் வேறுபாடு அடைகின்றன. பயிர் பச்சைகள் உலகத்தில் சில இடங்களில் அதிகமாயும், சில இடங்களில் குறைவாயுமிருப்பதற்குக் காரணங்கள் உஷ்ணம், மழை, வெண்பனி வீழ்ச்சி, வெளிச்சம், காற்று முதலியனவாம்.

தாவரங்கள் குளிர்ந்த சீதோஷ்ண நிலையுள்ள பிரதேசங்களைவிட உஷ்ணமான சீதோஷ்ண நிலையுள்ள பிரதேசங்களில் செழிப்பாக வளருகின்றன. வளருங்காலத்தில் அநேக தாவரங்களுக்கு மற்றக் காலத்தைவிட அதிக வெப்பநிலை வேண்டியதாயிருக்கிறது; முக்கியமாக விதைகளும், பழங்களும் பழுக்கக் கூடியகாலத்தில் இப்பருவம் வேண்டும். அநேக தானிய வகைகளுக்கு அவைகளை லாபகரமாக வளர்ப்பதற்கு ஷை பருவநிலை முக்கியம். வறண்ட காற்று பொதுவாகத் தாவர வகைகள் வளர்வதற்கு அநுகூலமற்றவை. வெளிச்சம் ஒரு முக்கியமான அம்சம். உயர அக்ஷரேகைப் பிரதேசங்களிலுள்ள சேந்தரனையான கோடையின் வெப்பம் தாழ்ந்த அக்ஷரேகைப் பிரதேசங்களைவிட தாவரங்களை வேகமாக வளரச்செய்கின்றது. பூமியிலுள்ள மண்ணின் குணம் தாவரங்கள் வளர்வதற்கு முக்கியமானது. மணற்பாங்கான பூமி ஜலத்தைச் சீக்கிரம் வடியச்செய்கின்றது. ஆனால் களிமண்பூமியில் ஜலம் வடியாமல் தங்குவதால் அந்நிலங்களில் தாவரங்கள் செழிப்பாய் வளருகின்றன. வண்டல் மண் பிரதேசங்களில் தாவரங்கள் செழிப்பாய் வளருகின்றன.

பொதுவாகப் பயிர் பச்சைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்—புல் நிலங்கள் (grass lands), காட்டு நிலங்கள் (wood lands) ; ஓங்கிவளரும் மிகு வெப்பமண்டலக் காடுகள் முதல் சிறு மரம் செடியுள்ள இடங்கள் வரையிலும் காட்டு நிலங்களில் அடங்கியவை. செழிப்பான புல்தரைமுதல் தரம் தரமாக வறண்ட ஸ்டெப்பிஸ் (steppes) நிலங்கள் வரையிலும் புல் நிலங்களில் அடங்கியவை. காட்டு நிலங்கள் செழிப்பாயிருப்பதற்கு ஏராளமான மழைவேண்டும். தவிரவும் வறண்ட காற்றுகள் அவைகளுக்குப் பிரதிகூலமாயிருக்கின்றன. புல் நிலங்களுக்கு வளருங் காலத்து ஈரப்பதன் அதிகமாகவேண்டும். ஆனால் வறண்ட காற்றினால் அவ்வளவு கெடுதல் ஏற்படுவதில்லை.

உலகத்திலுள்ள காடுகள் ஆரம்பத்தில் வேட்டையாடி ஜீவிக்கும் ஜாதியாரின் இருப்பிடமாயிருந்தன. ஸ்டெப்பிஸ் (steppes) நிலங்கள் ஆட்டிடையர் இருப்பிடமாயிருந்தன. ஆனால் ஜனாகாரமும் பயிர்த்தொழிலில் தேர்ச்சியும் அதிகரித்ததினால் ஜனாகாரமில்லாத நிலங்களையும் பண்படுத்துவதற்கு ஏதுவாயிருந்தது. காடுகளாயிருந்த நிலங்கள் நாளடைவில் உழுது பண்படுத்துவதற்கும் மரத்தொழில்களுக்கும் உபயோகப்பட்டன. தற்காலத்தில் உலகத்திலுள்ள காடுகள் அவைகளில் உண்டாகும் மரத்திற்காகவே காப்பாற்றப்பட்டு வருகின்றன. குளிர்ப் பிரதேசங்களிலுள்ள காடுகள் தற்காலத்துக் குறைந்து வருவதற்குக் காரணம் அப்பிரதேசங்களினின்று மரங்களை வெட்டிப் பல இடங்களுக்கு ஏற்றுமதியாக்குவதே.

மிக வெப்ப மண்டலக் காடுகளில் அநேகவிதமான காடுகளிருக்கின்றன. மேற்கு இந்தியத் தீவுகளிலிருந்தும், மத்திய அமெரிக்காவிலிருந்தும் மலைவேப்பமரமும், இந்தியாவிலிருந்து கருங்காலியும், பர்மா, ஜாவாவிலிருந்து தேக்குமரமும், தென் அமெரிக்காவிலிருந்து செம்மரமும் கிடைக்கின்றன.

மிதமண்டலக் காடுகளிலிருந்து ஓக் (oak), எல்ம் (elm), பீச் (beech), மேப்பில் (maple) முதலிய பலவகை மரங்கள் கிடைக்கின்றன. ஆஸ்திரேலியாவில் தெற்கு, கிழக்குப் பாகங்

களிற் ஈகாலிப்டஸ் மரமுள்ள காடுகள் அதிகம். மிதமண்டலப் பிரதேசங்களிலுள்ள ஊசியிலைக் காடுகள் மிகவும் முக்கியமானவை. வியாபார விஷயத்திற்கு உபயோகப்படுகிற பைன் (Pine), பெர் (Fir) முதலிய மரங்கள் இப்பிரதேசங்களிலிருந்து கிடைக்கின்றன. ஐரோப்பாவில் மரம் ஏற்றுமதியாகும் தேசங்களில் முக்கியமானவை—நார்வே, ஸ்வீடன், பின்லண்ட், ருஷியா முதலியனவாம். காடுகளிலிருந்து வெட்டிய மரங்களை அதிக செலவு இல்லாமல் ஏற்றிச்செல்லச் சரியான நீர்மார்க்கங்கள் அமைந்திருத்தல் விசேஷம். பர்மா தேசத்தில் அப்பேர்ப்பட்ட வசதிகளிருக்கின்றன.

காடுபெருக்கல் (Afforestation)

காடு பெருக்கல் பொருளுற்பத்திக்கு முக்கியம். அதிகமாக மரங்களை வெட்டுவதால் காடுகள் சீக்கிரம் அழிந்துபோகின்றன சென்ற நூற்றாண்டில் உலகத்திலுள்ள காடுகளில் மரங்கள் ஏராளமாக வெட்டப்பட்டமையால் மரத்தின் விலை அதிகரித்தது. மரம் செழிப்பாயுள்ள தேசங்களில் அழிக்கப்பட்ட காடுகளில் தற்காலம் இளமரங்களை உற்பத்திபண்ணிக் காப்பாற்றி வருகிறார்கள். கண்டபடி காடுகளை அழிப்பதால் பருவகாலங்களில் பெய்யவேண்டிய மழை குறைந்துபோகின்றது. வெகுகாலமாக மலேயாத் தீவுகளிலிருந்து வாசனைத் திரவியங்களும், ஆஸாமிலிருந்து தேயிலையும், ஆசியாவிலிருந்து பருத்தி முதலிய நார் பொருள்களும் ஏற்றுமதியாகின்றன. கொய்னாமரம் முதலில் பீரு தேசத்திற் கண்டுபிடிக்கப்பட்டு, ஜாவா, இந்தியா, ஸிலோன், ஜமைக்கா முதலிய தேசங்களில் இப்பொழுது உற்பத்தியாகின்றது. அநேக வியாபாரப் பொருள்கள் அயனாந்தப் பிரதேசங்களில் விளையும் பொருள்களாக இருக்கின்றன. அப்பிரதேசங்களில் அவைகளை உற்பத்தியாக்குவதில் ஐரோப்பியர் அதிகப் பிரயத்னம் பண்ணிவருகிறார்கள்.

VI

விலங்குகளும் பொருளாதார அபிவிருத்தியும்
(ANIMALS AND ECONOMIC DEVELOPMENT)

மக்களின் பொருளாக்க வாழ்க்கையில் தாவரவர்க்கத்தைப் போல் பிராணிவர்க்கம் அவ்வளவு நெருங்கிய சம்பந்தமுடைய தாகச் சொல்ல முடியாது. சில விலங்குகள் மனிதனுக்கும் அவனுடைய தொழில்களுக்கும் மிகத்தீமையை விளைவிக்கின்றன. உதாரணமாக ஆபிரிக்காவில் நைரோபிக்குச் சமீபத்தில் உகாண்டா இருப்புப்பாதை (Uganda Railway) போடுங்காலத்தில் இந்தியக் கூலிகள் சிங்கம் முதலிய காட்டு மிருகங்களின் தாக்குதலினுல் விரைவாக வேலைசெய்ய முடியவில்லை. ஒவ்வொரு வருஷமும் ஆயிரக்கணக்கான ஜனங்களும், ஆடுமாடுகளும் புலி முதலிய காட்டு மிருகங்களால் இறந்துபோகின்றன. ஒவ்வொரு வருஷமும் இந்தியாவில் 20,000 ஜனங்கள் விஷப்பாம்புக் கடியால் இறக்கிருர்கள். தானியங்களுக்குப் பறவைகளினுலும் பூச்சிகளினுலும் ஒவ்வொரு வருஷமும் மிகக் கெடுதல் ஏற்படுகின்றது.

அநேக விலங்குகள் சாதுவான வர்க்கத்தைச் சேர்ந்தபோதிலும் மனிதனுக்குச் சிலவேளை சத்துருவாயிருக்கின்றன. உதாரணமாக மனிதன் வளர்க்கும் வெள்ளாடுகள் அவனுடைய வாழ்க்கைக்கு இன்றியமையாததாயினும் காடுகளை வளரவிடாமல் கெடுக்கின்றன. இதேமாதிரி ஆஸ்திரேலியாவில் முயல்களினுல் அதிக உபத்திரவம் ஏற்படுகின்றது. மனிதனுடைய பொருளாக்க வாழ்க்கைக்கு எலி, வெட்டுக்கிளி முதலிய ஜெந்துக்களால் அதிக நஷ்டம் ஏற்படுகிறது. இந்தியாவில் எலிகளால் நஷ்டப்படும் தானியம் எவ்வளவென்று கணக்கிட முடியாது

விலங்குகள் சம்பந்தமாக அநேக தொழில்கள் ஏற்பட்டுள்ளன. சைபீரியாவில் மயிர்த்தோல் வியாபாரம் முக்கிய

மானது. மிதவெப்ப நிலையுள்ள கடல்களில் அதிக வெப்ப நிலையுள்ள கடல்களைக்காட்டிலும் அதிகமான மீன்கள் விருத்தியடைகின்றன. முக்கியமான மீன்பிடிக்கும் இடங்கள் பூமியின் வடபாதியிலேயே உள்ளன.—நியூபவுண்டலண்ட்; வடகடல், ஜப்பான் கடல் முதலியன. காட் (cod) மீன்கள் நியூபவுண்ட்லண்ட் கரையில் விசேஷமாக அகப்படுகின்றன. பாய்மரத்தோணிகளுக்குப் பதிலாக நீராவியால் ஓடும் டிராலர்கள் (Trawlers) மீன் பிடிக்க உபயோகப்பட்டு வருகின்றன. பிடிக்கப்பட்ட மீன்கள் உணவுப் பொருள்களாகப் பாதுகாக்கப்பட்டு ஏற்றுமதியாகின்றன. மீன் பிடிப்போர் மீன் பிடிப்பதற்குச் சௌகரியமான குடாக்களுள்ள இடங்களில் அமருகின்றனர். நல்ல மாலுமிகள் ஒவ்வொரு தேசத்திலும் மீன் பிடிக்கும் இனத்தாரிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

விலங்குகள் மக்களுக்குப் பொதிசுமக்கும் பிராணிகளாக உபயோகப்படுகின்றன. உழுவதற்கும், தரைமார்க்கமாய்ச் சாமான்கள் எடுத்துச்செல்லவும் உபயோகப்படுகின்றன. பர்மா, மலேயாவில் யானைகளைக் கனமான சாமான்களை இழுத்து வருவதற்கு உபயோகிக்கிறார்கள். இக்காலத்தில் ரஸ்தாக்களில் சாமான்களை எடுத்துச் செல்லக் குதிரைகள், ஆடு மாடுகளுக்குப் பதிலாக இயந்திரசக்தி அதிகரித்து வருகின்றது. ஜனகாரம் அதிகமாயில்லாத புல் பிரதேசங்களில் ஆடுமாடுகளை இறைச்சிக்காக வளர்த்து வருகின்றனர். இறைச்சி தயாரிப்பதற்காக ஆடுமாடுகளைக் கூட்டம் கூட்டமாகச் சில குறிப்பிட்ட இடங்களில் வளர்ப்பதற்கு அவைகளுக்கு புல் தானியங்கள் வேண்டியிருக்கிறது. இதுவிஷயமாக ஐக்கிய நாடுகளில் ஐஓவா (Iowa), நிபிராஸ்கா (Nebraska) முதலிய இடங்களில் அதிக விஸ்தீரணமுள்ள நிலங்களில் மக்காச்சோளத்தை உற்பத்தியாக்குகிறார்கள். இச்சோளத்தைப் பன்றிகளுக்குக் கொடுத்துக் கொழுக்கப்பண்ணி அவைகளைச் சிக்காக்கோ (Chigaco) தொழிற்சாலைகளில் இறைச்சியாகச் செய்யப்பட்டு வருகிறது.

தவிரவும் ஏராளமான ஆடுமாடுகள் புல்பிரதேசங்களில் பால், பாலாடைக்கட்டி முதலிய பொருள்கள் தயார்செய்ய வளர்த்து

வரப்படுகின்றன. பாலை வெண்ணெயாகவும், பால்கட்டியாகவும் மாற்றி ஏற்றுமதி செய்யப்படுகிறது. உறைந்தபால் ஸ்விட்ஸர்லண்ட், நார்வே தேசங்களிலிருந்து ஏற்றுமதியாகிறது.

சில கால்நடைகளும் கால்நடைப் பொருள்களும் எவ்வாறு மக்களுக்கு உபயோகப்படுகின்றன? வீடுகளில் பழக்கப்பட்ட கால்நடைகள் எண்ணிக்கைக்குக் கொஞ்சமாக யிருக்கின்றன.

ஆடுமாடுகள்: இப்பிராணிகள் காட்டு இனங்களிலிருந்து பழக்கப்பட்டு இக்காலத்தில் தாழ்ந்த பிரதேசங்களில் காணப் படுகின்றன. ஆடுமாடுகள் பால் அல்லது இறைச்சிக்காக வளர்க் கப்படுகின்றன. புதிய தேசங்களாகிய ஆஸ்திரேலியாவிலும், அமெரிக்காவிலும் புல்பிரதேசங்களில் ஆடுமாடுகள் இறைச்சிக் காக வளர்க்கப்படுகின்றன. ஜனகாரம் அதிகமாயுள்ள பழைய தேசங்களில் ஆடுமாடுகள் பால் பதார்த்தங்களுக்காக வளர்க்கப் படுகின்றன. இத்தேசங்களில் புல் தரைகள் குறைவாயிருப்ப தால் ஆடுமாடுகள் வேர்ப்பயிர்கள், புண்ணாக்கு முதலிய தீவனங் களால் வளர்க்கப்பட்டு வருகின்றன. டென்மார்க் தேசத்தில் ஆடுமாடுகள் பால் பதார்த்தங்களுக்காக வளர்ப்பதால் உண்டாக்கும் பயிர்களில் பாதி அவைகளின் உணவுக்கேயாம். பால் மாடுகள் செழிப்பான புல் பிரதேசங்கள் தவிர மற்ற இடங்களிலும் வளர்ப் பதும் சாத்தியமென்பதற்கு டென்மார்க் தேசத்தை ஒரு உதா ரணமாகக் கூறலாம். கால் நடைகள் சொற்பப்புல்லுள்ள இடங் களில் வசிக்கமுடியும். ஆனால் இறைச்சிக்காக வளர்ப்போர் அவைகளைச் செழிப்பான புல்களுள்ள இடங்களில் வளர்த்துக் கொழுக்கப்பண்ணுகிறார்கள். அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் மேற்பிரதேசத்தில் பெரும் பண்ணைகளில் வளர்த்துப் பிறகு கிழக்குப் பிரதேசங்களிற் கொண்டுவந்து மக்காச்சோளத்தைத் தீனியாகக்கொடுத்துக் கொழுக்கப்பண்ணுகின்றனர். கால்நடை கள் மிதவெப்பமுள்ள பிரதேசப் பிராணிகள். ஆனால் மிக வெப்ப முள்ள தேசங்களான இந்தியா, ஸூடான், கிழக்கு ஆபிரிக்கா விலும் செம்மையாக வளருகின்றன. மாட்டுப் பெரும் பண்ணை யுள்ள தேசங்களாவன—இந்தியா, ஐக்கிய நாடுகள் (United States), ருஷியா, பிரேஸில், அர்ஜென்டின, ஜெர்மனி, பிரான்ஸ்.

ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டிஷ் தீவுகள், உருகுவே. இந்தியாவிலுள்ள கால்நடைகள், உள்நாட்டிலேயே உபயோகப்பட்டு வருகின்றன. தென் அமெரிக்காவில் கால்நடைகள் முக்கியமாக இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்றன. மாட்டிறைச்சி ஏற்றுமதியாகின்ற தேசங்களில் முக்கியமானவை—ஆர்ஜென்டினு, பிரேஸில், கனடா. வெண்ணை ஏற்றுமதியாகிற தேசங்கள்—டென்மார்க், ஆஸ்திரேலியா, நியூஸிலண்ட், பின்லண்ட், ஹாலண்ட், கனடா. பாலாடைக்கட்டி ஏற்றுமதியாகும் தேசங்களாவன—கனடா, நியூஸிலண்ட், ஸுவிட்ஸர்லண்ட்.

ஆடுகள் (Sheep)

உலகத்திலுள்ள கால் நடைகளில் எண்ணிக்கையில் அதிகமானவை ஆடுகள். ஆடுகளில் சில இனங்கள் இறைச்சிக்காகவும், சில இனங்கள் ரோமத்திற்காகவும் வளர்க்கப்படுகின்றன. ஆடுகளில் கொஞ்ச இனங்கள்தாம் பாலுக்காக உபயோகப்பட்டு வருகின்றன. இங்கிலாந்து தேசத்து ஆடுகள் உலோகப் பிரசித்தி பெற்றவை. ஆடுகள் மிதவெப்ப நிலைப்பிரதேசங்களிற் செழிப்பாக வளரும். ஆடானது மலைப்பிரதேசப் பிராணி. ஆகையால் தானிய வகைகள் பயிர்செய்ய முடியாத மலைப்பிரதேசங்களில் ஆடுகளை மேய்த்தல் சிக்கனமான வேலையாக இருக்கிறது. சில தேசங்களில் ஆடுகளே மனிதர்களின் மூலதனமாயிருக்கிறது. ஆடுகள் ஏராளமாயுள்ள தேசங்களாவன—ஆஸ்திரேலியா, ஆர்ஜென்டினு, ஐக்கிய நாடுகள், ருஷ்யா, ஆசியா மைனர், தென் ஆப்பிரிக்கா, உருகுவே, பிரிட்டன், நியூஸிலண்ட்.

கம்பளம் (Wool) :—ஆட்டுமயிர் முக்கியமாக ஆடுகளிலிருந்து எடுக்கப்படுகிறது. சீதோஷ்ண நிலையினாலும், வளர்ப்புக்குத் தக்கபடி ஆடுகளில் ஏற்படும் வித்தியாசங்களினாலும், ஆடுகளில் ரோமம் பலவிதமாயிருக்கின்றது. நீண்ட இனத்தைச் சேர்ந்த ரோமம் அதிக மதிப்புள்ளது; குறுகிய இனத்தைச் சேர்ந்த ரோமம் போர்வைகளுக்கும், ஜமக்காளங்களுக்கும் உபயோகப்படுகின்றது. உலகத்தில் உற்பத்தியாகும் ஆட்டுரோமம் 1,600 மிலியன் டன்களென்று கணக்கிடப்பட்டிருக்கிறது

பிரிட்டனில் உற்பத்தியாகும் ஆட்டுரோமம் மிக உயர்தரமானது. அதற்கு அதிகத் தேவையிருக்கிறது. வருஷாந்திர உற்பத்தியில் 100-க்கு 25 பங்கு ஏற்றுமதியாகிறது. ஒட்டகம், வெள்ளாடு, அல்பாக்க என்னும் விலங்குகளின் ரோமத்திலிருந்து கம்பளிகள் செய்யப்படுகின்றன. சீனு டர்கிஸ்டானிலிருந்து ஒட்டக ரோமமும், ஆசியா மைனர், கேப்கலனி, காஷ்மீர் தேசங்களிலிருந்து வெள்ளாட்டு ரோமமும், ஆண்டிஸ் மலைப்பிரதேசத்திலிருந்து அல்பாக்காவும் கிடைக்கின்றன.

பன்றிகள் :—அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் மக்காச்சோளம் விளையும் பிரதேசத்தில் பன்றிகள் ஏராளமாக வளர்க்கப்படுகின்றன. விளையும் மக்காச்சோளத்திற் பாதி பன்றிகளின் ஆகாரத்திற்கேயாம். இப்பேர்ப்பட்ட பன்றிகளிலிருந்து பன்றிப்பக்க இறைச்சி (bacon), உப்பிட்ட பன்றித்தொடை (ham), போர்க் (pork) முதலியன செய்யப்படுகின்றன.

குதிரைகள் :—குதிரைகள் மக்களுக்கு மிகவும் பிரயோஜனமான பிராணிகள். தூரதேசப் பிரயாணத்திற்கு ரெயில், மோட்டார் வண்டிகள் ஏற்படுவதற்குமுன் குதிரைகள் உபயோகப்பட்டு வந்தன. அரேபியா தேசத்துக் குதிரை இனங்கள் மிகவும் பிரசித்தியுள்ளவை. இங்கிலாந்து தேசத்துப் பந்தயக் குதிரைகள் அவ்வினத்தைச் சேர்ந்தவை. ருஷியா, ஆர்ஜென்டினு முதலிய தேசங்களின் சமவெளிகளில் குதிரைகள் போக்குவரவுக்காக உபயோகப்படுகின்றன. தாழ்மையான இனமாகிய கோவேறு கழுதை குதிரையைவிட வேகமாகவும் பொதி சுமப்பதில் பொறுமையும் உடையதாயிருக்கிறது.

இந்தியாவில் நீர் நிலைகளும் புல்வெளிகளும் விசேஷமாயிருப்பதால் மாடுகளும், எருமைகளும் ஆடுகளும் விசேஷமாய் விருத்தியாகின்றன. மாடுகளை நிலத்தை உழவும், வண்டி இழுக்கவும் உபயோகப்படுத்துகின்றனர். பசு, எருமை முதலியவைகளைப் பாலுக்காக வளர்க்கின்றனர். ஆடுகளை அவைகளின் இறைச்சிக்காக வளர்க்கின்றனர். தினந்தோறும் அநேக ஆடுகள் அவைகளின் இறைச்சிக்காகக் கொல்லப்படுகின்றன. இவ்வாடு

களின் தோலை உரித்துப் பதம்செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். மாடுகளும், எருமைகளும் இறந்தவுடன் அவைகளின் தோலையும் பதம்செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். சென்னை இராஜதானியில் ஆடுமாடுகள் விசேஷமாயிருப்பதால், சென்னைத் துறைமுகத்திலிருந்து தோல் மற்றப் பொருள்களைவிட அதிகமாக ஏற்றுமதியாகிறது.

நம் நாட்டிலுள்ள பல சிறு பட்டணங்களில் பச்சைத்தோலை வாங்கும் வியாபாரிகள் இருக்கின்றனர். இவர்கள் பச்சைத்தோலை வாங்கி உப்புப்போட்டுத் தோல் பதனிடும் சாலைகளில் இத்தோலை உலர்த்திப் பிறகு சுண்ணாம்புத் தொட்டிகளிற் போட்டு, தோலிலுள்ள மயிரை எடுத்து விடுகிறார்கள். மயிரை நீக்கியவுடன் சில மரப்பட்டைகளின் உதவியால் தோலைப் பதம்செய்து மிருதுவாக்கி உலரவைக்கிறார்கள். பிறகு பதம்செய்த தோலைப் பேல்களாகக் கட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். தோல் பதனிடும் சாலைகள் சென்னை இராஜதானியில் விசேஷமாகக் காணப்படுகின்றன. நமது நாட்டில் பதனிட்ட தோல் பாதரட்சை செய்யவும், விவசாயக் கருவிகள் செய்யவும் உபயோகப்படுகிறது.

தோலைப் பதம் செய்யாமல் உலர்த்தியும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இத்தோலை வெளித்தேசத்தினர் வாங்கிப் பதம்செய்து, தோற்பைகளும், பெட்டிகளும், பூட்ஸுகளும் செய்து நமது நாட்டிற்குத் திருப்பி அனுப்பி இலாபமடைகின்றனர்.

ஆடுமாடுகளின் தோலைத்தவிர மற்ற ஜெந்துக்களின் தோலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. நல்லபாம்பின் தோல், கீரிப்பிள்ளை இனத்தைச்சேர்ந்த பல பிராணிகளின் தோல் முதலானவை, பெல்ட் முதலியன செய்ய உபயோகப்படுகிறது. அழகிய ரோமங்களையுடைய பிராணிகளின்தோலைச் சில வியாபாரிகள் சேகரித்து வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள்.

VII

பூமியின் தாதுப்பொருள்களும், பொருளாதார அபிவிருத்தியும்

(World's Mineral Wealth and Economic Development)

ஆதிகால மக்கள் தாதுப்பொருள்கள் இலகுவாகக் கிடைத்தாலும் அவைகளை அவ்வளவு அதிகமாக உபயோகிக்கவில்லை. நாகரீகம் அதிகரிக்குமுன் எளிதில் சிதைபடக்கூடிய தாதுக்களைக் கண்டுபிடித்து உபயோகப்படுத்திவந்தனர். இரும்பின் உபயோகம் பிற்காலத்தில் ஏற்பட்டது. விவசாயம் இரும்புக் கலப்பை உபயோகத்தில் வந்தது முதல் விருத்தியடைந்தது.

தாதுப்பொருள்களின் பரப்பு
(Distribution of Minerals)

தாதுப்பொருள்கள் உலகத்திற் பல பிரதேசங்களிற் காணப்படுகின்றன. ஆனால் சில பிரதேசங்களில் அதிகமாயும், சில இடங்களிற் குறைவாகவுமிருக்கின்றன. சாதாரணமாகப் பள்ளத் தரைப் பிரதேசங்களைவிட மலைப்பிரதேசங்களில் தாதுப் பொருள்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. வட அமெரிக்காவில் ராக்கி மலையிலும் (Rocky Mountains) தென் அமெரிக்காவில் ஆண்டிஸ் (The Andes) மலையிலும், கிழக்கு ஆஸ்திரேலியாவில் மலைப் பிரதேசங்களிலும், வட ஐரோப்பாவிலும் மத்திய ஐரோப்பாவிலும் விசேஷமான தாதுப்பொருள்கள் காணப்படுகின்றன. ஆனால் ஸுவிஸ் ஆல்ப்ஸி (Swiss Alps) லும், இந்தியாவில் ஹிமய மலைப் பிரதேசத்திலும் விசேஷமாகத் தாதுப்பொருள்கள் காணப்படவில்லை.

தாதுப்பொருள்கள் தாவர வஸ்துக்களைப்போல் எல்லாவிடங்களிலும் இல்லாமல் சிற்சில இடங்களில்தான் காணப்படுகின்றன.

உதாரணமாக உலகத்தில் அகப்படும் தகரம் (Tin) 100-க்கு 88 மலேயாவிலிருந்து வருகிறது. ஆஸ்பெஸ்டாஸ் (Asbestos) கோபால்ட் நிக்கல் (Cobalt Nickel) இவை இரண்டும் கனடாவில் உற்பத்தியாகின்றன. மண்ணெண்ணை 100-க்கு 79 பங்கு அமெரிக்கா ஐக்கிய தேச நாடுகளிலிருந்து வருகிறது.

தாவர வஸ்துக்களுக்கும், தாதுப்பொருள்களுக்கும் முக்கியமான வித்தியாசமென்னவென்றால் தாதுப்பொருள்களை மக்கள் முயற்சியால் அதிகப்படுத்தமுடியாது. அவைகள் எடுக்க எடுக்கக் குறைந்துகொண்டே வருகின்றன. சுரங்கங்களிலிருந்து தாதுப் பொருள்களை வெட்டியெடுத்தல் ஒரு விதமான பொருள் சுறண்டலாகும். விவசாயத்தினால் விவசாயப்பொருள்கள் அதிகரித்துக் கொண்டுவரலாம். ஆனால், தாதுப்பொருள்கள் வேட்டையாடுவதினால் விலங்கினங்கள் எவ்வாறு குறைகின்றனவோ அதேமாதிரி வெட்ட வெட்டக் குறைந்துகொண்டே வருகின்றன. நமக்குக் கிடைக்கக்கூடிய உலகத் தாதுப் பொருள்களிற் சில வெகு சீக்கிரமாகக் குறைந்து வருகின்றன. இக்காலத்தில் நாம் உலோகங்களை உபயோகிக்கும் திட்டத்தைக் கவனித்தால், பிற்காலத்தில் எந்தத் தாதுப்பொருள்கள் குறைவில்லாமலும், எவை குறைந்தும் கிடைக்குமென்று சொல்லலாம்.

பிற்காலம் குறைந்து போகக்கூடிய பொருள்கள்	கொஞ்சகாலம் வரை குறையாமலிருக்கக் கூடிய தாதுப் பொருள்கள்	சமீபத்தில் குறையக்கூடிய தாதுப்பொருள்கள்
களிமண் (Clay)	நிலக்கரி (Coal)	மண்ணெண்ணெய் (Petroleum)
கற்பலகை (Slate)	சாம்பருப்பு (Potash)	காலகை (Nitrates)
(Sand lime)	செம்பு (Copper)	எரிகை (Phosphates)
உப்புச் சுரங்கங்கள் (Salt)	நாகம் (Zinc)	தகரம் (Tin)
இரும்பு (Iron)	ஈயம் (Lead)	
அலுமினியம் (Aluminium)		
பொன்னும் வெள்ளியும் (Gold & Silver)		

ஆனால் சில தாதுப் பொருள்களுக்குப் புதிய உபயோகங்கள் ஏற்படுவதால் அவை அதிக உபயோகத்தினால் சீக்கிரம் குறைந்து போகின்றன. இன்னும் சில தாதுப்பொருள்களுக்குப் பதிலாகச் செயற்கைப் பொருள்களை உபயோகப்படுத்தி வருவதால் அவ் வியற்கைப் பொருள்கள் அதிகமாகக் குறையவில்லை. 1785-ம் வருஷத்தில் பிரிட்டன் தேசத்தில் பஞ்சு நூற்கும் இயந்திரங்கள் நிலக்கரியினால் இயக்கும்பொழுது நிலக்கரி அதிகமாக உபயோகப் பட்டு வந்தது. அநேக தொழிற்சாலைகளுக்கு நிலக்கரி வேண்டியதாயிருக்கிறது.

மின்சார சக்தி கண்டு பிடித்தது முதல் செம்புக்கு அதிக தேவை ஏற்பட்டிருக்கிறது. தவிரவும் மின்சார சக்தியின் உப யோகம் அதிகப்பட்டு வருவதால் அலுமினியம் அதிகமாக உப யோகப்பட்டு வருகிறது. செம்பு, இரும்பு, மண் பாத்திரங் களுக்குப் பதிலாக அலுமினியப் பாத்திரங்கள் உபயோகப்பட்டு வருகின்றன. தற்காலம் அகப்படும் நிலக்கரியைச் சிக்கனமாக உபயோகப்படுத்த மிதமான உஷ்ணத்தில் தீச்செல் முதலிய முறைகள் அநுசரித்து வருகின்றார்கள். மண்ணெண்ணெய்க்குப் பதிலாக வெறியை (Alcohol) உபயோகத்திற் கொண்டு வருகின்றனர். சுக்கான்கல் (Limestone) களிமண், வெளிச் சுண்ணாம்பு (Chalk) சரல் (Gravel) மணற்கல் (Sandstone) முதலிய கீழான தாதுப்பொருள்கள் கட்டிடங்கள் கட்டுவதற்கும் தொழிற் சம்பந்தமாயும் உபயோகப்பட்டு வருகின்றன. தாதுப் பொருள்களின் விலையானது அவைகளின் தேவையையும், வெட்டி யெடுப்பதற்குரிய செலவையும் பொருத்திருக்கின்றது.

பண்டைக்கால முதல் ஜனங்களுக்குத் தாதுப்பொருள்களின் மேல் பிரமை ஏற்பட்டிருப்பது சரித்திர மூலமாய் விளங்குகிறது. உப்பு, சக்கி முக்கிக் கல் முதலிய வஸ்துக்கள் பண்டைக்காலத் தில் ஜனங்களுக்குப் பரி வர்த்தனத்திற்கு உபயோகமான சாமான் களாக விளங்கி வந்தன. கனடா, ஆஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, முதலிய தேசங்களில் குடியேற்றத்திற்குக் காரணம் அவ்விடங்களிலுள்ள தங்கச் சுரங்கங்களே யாம். இங்கிலாந்து தேசத்திற் தொழிற் புரட்சி ஆரம்பகாலத்தில் நிலக்கரியும் இரும்

பும் அகப்படக்கூடிய இடங்களில் ஜனகாரம் அதிகரித்து வந்தது. நிலக்கரி, இரும்பு இவற்றின் வசதியினுல் எவ்விடமெல்லாம் தொழிற் சாலைகள் ஏற்பட்டனவோ அவ்விடமெல்லாம் ஜனங்கள் காலக்ஷேபத்திற்காக வரத்தொடங்கினர். அதனுல் அவ்விடங் களிலெல்லாம் புதிய தொழில் நகரங்கள் ஓங்கி வளர்ந்தன. ஆனுல் இப்பேற்பட்ட புதிய நகரங்கள் அவ்விடங்களில் தாதுப் பொருள் நாளடைவில் குறையவே க்ஷீணித்துப்போய் விடுகின் றன. அவ்விடமுள்ள ஜனங்கள் வேறு இடங்களைத் தேடிப் போகும்படியாக ஏற்படுகிறது. உதாரணமாக, கனடாவில் யூக்கன் (Yukon) நதியின் பக்கத்திலுள்ள டாஸன் நகரம் (Dawson city) 40 வருஷத்திற்கு முன், 20,000 ஜனத்தொகை யுள்ளதாயிருந்தது. தற்காலத்தில் அதில் 3,000 ஜனங்கள்தான் இருக்கிருர்கள். ஆஸ்திரேலியாவில் 36 வருஷத்திற்குள் கூல் கார்டி (Coolgardie) என்னும் பட்டணம் க்ஷீணமடைந்து விட்டது.

புதிய கண்டங்களாகிய வட அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியா விலும் தாதுப்பொருள்கள் நாளடைவிற் குறைவதால் ஜீவனேபாய மும் குறைந்து வேறு ஜீவனேபாயம் இலகுவாய்க் கிடைப்பதால் ஜனப் பரப்புப் பொருளாதார நிலைமைக்குத் தக்கபடி சரிப்பட்டு வருகிறது. ஆனுல் பழைய கண்டமாகிய ஐரோப்பாவில் அப் படிப்பட்ட சரிக்கட்டுதல் இலகுவாய் ஏற்படுவதில்லை. ஆகை யால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து ஜனங்கள் வெகு கஷ்டமடைகிருர்கள்.

முக்கிய தாதுப் பொருள்கள்

நிலக்கரி:—நிலக்கரி பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படும் ஒரு தாதுப் பொருள். நிலக்கரியைச் சூக்ஷ்ம தரிசனியிற் பார்த் தால் அதில் அநேக தாவரங்களிருப்பதாகக் காணப்படும். நிலக் கரியை எரித்து அச் சக்தியைக்கொண்டு அநேக இயந்தி ரங்களை இயக்கலாம். ஆகவே நிலக்கரி விசேஷமாய்க் கிடைக்கு மிடங்களிற் தொழிற்சாலைகள் ஏற்படுவது இயற்கையேயாகும். இங்கிலாந்து தேசம் வியாபார முன்னேற்றம் அடைந்திருப்ப

தற்குக் காரணம் அங்குக் கிடைக்கும் நிலக்கரியேயாம். இந்தியாவில் நிலக்கரி சிலவிடங்களில்தான் கிடைக்கின்றது. நிலக்கரி கிடைக்கும் இடங்களில் ஆழமான சுரங்கங்கள் வெட்டி அதற்குள் மனிதர் இறங்குகிறார்கள். இவர்கள் பூமியைக் குடைந்து நிலக்கரியை வெட்டி இயந்திரங்களுதவியால் வெளியேற்றுகிறார்கள். இச்சுரங்க வேலை செய்கிறவர்களுக்கு அடிக்கடி ஆபத்து நேரிடுவதுண்டு. சுரங்கங்கள் இடிந்து விழுவதாலும் அல்லது சுரங்கங்களிலுள்ள நிலக்கரி வாயு தீப்பிடித்துக்கொள்ளுவதாலும் அநேகர் இறக்க நேரிடும்.

வங்காளத்தில் அகப்படும் நிலக்கரி கல்கத்தாத் துறைமுகத்தின் மூலமாக வெளியிடங்களுக்கு ஏற்றுமதியாகிறது. இது விசேஷமாய் சென்னை, சிலோன், பினாங்கு, சிங்கப்பூர், ரெங்கூன், ஏடன் முதலிய இடங்களுக்கு ஏற்றுமதியாகிறது. நிலக்கரியைப் புகைக் கப்பல்களுக்கும், ரெயில்வே என்ஜின்களுக்கும் உபயோகிக்கும். காரணமென்னவென்றால் மரக் கட்டைகளைவிட அது அதிக உஷ்ணத்தை உண்டாக்குகிறது.

இரும்பு :—மனிதர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உலோகங்களில் முக்கியமானது இரும்பேயாகும். நாம் உபயோகிக்கும் மேஜை, நாற்காலி முதலிய பொருள்களும், வசிக்கும் வீடுகளும், நிலத்தைப் பயிர் செய்ய உபயோகிக்கும் கருவிகளும் இரும்பின் உதவியினாலேயாம். நம்மைச் சுற்றியுள்ள எல்லாப் பொருள்களிலும் அநேகமாக இரும்பு உபயோகப்பட்டிருப்பதைக் காணலாம்.

இரும்பை மனிதர்கள் எப்படி எடுக்கிறார்கள் என்பதைக் கவனிப்போம். பொன், வெள்ளி, நிலக்கரி முதலியவற்றைப் போலவே இரும்பும் பூமியிலிருந்து கிடைக்கின்றது. ஆனால் பூமியிலிருந்து வெட்டி எடுக்கும் இரும்பு மற்றப் பொருள்களுடன் கலந்து ஐக்கியப் பொருளாக இருக்கிறது. பிறகு இக்கட்டிகளைக் காய்ச்சி உடன்கலந்த பல பொருளை நீக்குகிறார்கள். இதற்காகப் பெரிய உலைகளை உபயோகிக்கின்றனர். ஊது உலையில் தாதுப் பொருள்களைக் கல்கரியுடன் (Coke) கலந்து கொட்டித் தீ வைத்துக் காற்றை ஊதுகின்றனர். இரும்பு உருகித் திராவகமாக அடியில் தங்குகிறது. இதைப் பல அச்சுக்களில் வார்த்துக்

குளிர்ச்சியடையச் செய்கிறார்கள். இந்த இரும்புக்கு வார்ப்பு இரும்பு (Cast-iron) என்று பெயர். இந்த வார்ப்பு இரும்பை மறுபடியும் உருக்கி அதிலுள்ள அசுத்தங்களைப் போக்கித் தேன் இரும்பும் (Wrought-iron) எஃகுவும் (Steel) செய்கிறார்கள்.

இரும்பு உற்பத்தியாகும் தேசங்களில் ஐக்கிய நாடுகளை முதன்மையாகச் சொல்லவேண்டும். உலகத்தில் உற்பத்தியாகும் வார்ப்பு இரும்பில் (Pig-iron) மூன்றில் ஒரு பங்கு ஐக்கிய நாடுகளில் உண்டாக்கப்படுகிறது. மற்ற இரும்பு உண்டாக்கப்படுகிற தேசங்களாவன :—பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி. ஸ்வீடனில் உயர்தரமான இரும்புத் தாதுக்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளை உருக்கி எடுக்கப் போதுமான நிலக்கரியில்லை. ருஷ்யாவில் யூரல் மலைப்பிரதேசத்தில் உயர்தரத் தாதுக்களிருக்கின்றன. ஆனால் அப்பிரதேசத்திலிருந்து ஏற்றுமதிக்கு வேண்டிய வசதிகளில்லை. உருக்கு இரும்பு (Steel) உண்டாக்குவது சில தேசங்களுக்கே தனியுரிமையாயிருக்கிறது. 30% ஐக்கிய நாடுகளிலிருந்தும், 10% ஜெர்மனியிலிருந்தும், 10% பிரான்ஸிலிருந்தும், 7% பிரிட்டனிலிருந்தும் வருகின்றன.

இந்தியாவில் இரும்புச் சுரங்கங்கள் மேற்கு வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா முதலிய மாகாணங்களிலிருந்து காணப்படுகின்றன. ஆனால் இவ்விடங்களில் கிடைக்கும் இரும்பு வெளி தேசங்களுக்கு ஏற்றுமதியாகுமளவு கிடைக்கவில்லை. இந்தியாவில் தாதா இரும்புத் தொழிற்சாலை (Tata Iron Works) ஒன்றே நமக்கு வேண்டிய பலவித இரும்புச் சாமான்களைச் செய்து அபிவிருத்தியடைந்து வருகிறது.

இரும்பு விசேஷமாகக் கிடைக்கும் தேசங்களில் தொழிற்சாலைகள் அபிவிருத்தியடைவது இயற்கையேயாகும். இயந்திரங்கள் செய்ய உபயோகப்படும் இரும்புகளும், அந்த இயந்திரங்களை ஓட்டுவதற்கு வேண்டிய சக்தியைத் தரும் நிலக்கரியும் ஒரு தேசத்தில் ஒருங்கே கிடைக்குமானால் அத்தேசத்தொழில் நன்கு முன்னேற்றமடையும். இங்கிலாந்து சிறந்து விளங்குவதற்கு அங்குக் கிடைக்கும் இரும்பும் நிலக்கரியுமே காரணமாகும்.

கல்நார் (Asbestos) :—இது கனடா, ரோடிஷியா, தென் ஆப்பிரிக்கா முதலிய தேசங்களில் கிடைக்கிறது.

எரிகைகள் (Phosphates) :—இது செயற்கை உரத்திற்கு அதிகத் தேவை. சமீப காலத்தில் சில தீவுகளில் விளைவு அதிகப் பட்டுவருகிறது.

காலகைகள் (Nitrates) :—இது சில்லியில் இயற்கையாகத் தாவரங்களிலிருந்து உற்பத்தியாகிறது.

கரிமம் (Graphite) :—ஒரு வகையான கரி ; பென்சில்கள், வழுக்குப் பொருள்கள் முதலியன செய்வதற்கு உபயோகப்பட்டு வருகிறது. சிலோன் கரிமம் உயர்தரமானது. ஆஸ்திரியா, பெவேரியா முதலிய தேசங்களில் அகப்படுகிறது.

உறைகளிக்கல் (Gypsum) :—இது கட்டிடம் கட்டுவதற்கும், செயற்கை உரமாகவும், சில விதமான கடிதாசுகள் செய்வதற்கும் உபயோகப்பட்டுவருகிறது.

மாங்கனீஸ் :—இந்த உலோகத்தை இரும்போடு சேர்த்து மிகவும் உறுதியான எஃகு செய்கிறார்கள். ஆகையால் இதற்குக் கிராக்கி அதிகம். இச்சுரங்கங்கள் விசாகப்பட்டணம், மத்திய மாகாணம், மைசூர் முதலிய பிரதேசங்களில் இருக்கின்றன.

அபிரகம் (Mica) :—இது ஒரு பளபளப்பான தாதுப் பொருள். இந்த உலோகம் மின்சாரத்தையும் உஷ்ணத்தையும் கிரகிக்காது. ஆகவே இதை மின்சார இயந்திரங்களிலும் விளக்குகளிலும் உபயோகிக்கிறார்கள். இந்த உலோகத்தை ஒரிஸா மாகாணத்திலும், பீஹாரிலும், தக்ஷணத்தில் நெல்லூரிலும் வெட்டி எடுக்கிறார்கள். இந்தியாவில் கிடைக்கும் அபிரகம் மிகவும் நேர்த்தியானது.

செம்பு :—இது இரும்பைப்போல் அவ்வளவு எல்லா இடங்களிலும் காணப்படவில்லை. இக்காலத்தில் மின்சாரத்திற்குத் துணைக்கருவியாக உபயோகப்படுவதால் அதற்கு அதிகக் கிராக்கியிருக்கிறது. தகரத்துடன் சேர்த்தால் அது வெங்கலமாகிறது. துத்தநாகத்துடன் சேர்த்தால் பித்தளை யாகிறது. செம்பு

அதிகமாகக் கிடைக்கக்கூடிய தேசங்களாவன—அமெரிக்கா ஐக்கிய நாடுகள், சில்லி, கனடா, மெக்ஸிகோ, பீரு, ஜெர்மனி.

நகரம் :—தகரத் தாதுக்களில் தகரத் தீயதை (Tin oxide) வியாபார முறையில் அதிக மதிப்புள்ளது. அதிக மிருதுவாயும் வளையக்கூடியதுமாயிருப்பதால் இரும்புப் பட்டைகளுக்கு மேல் மூடியாகவும், பெட்டிகள் செய்யவும் உபயோகப்படுகிறது. தகரமும், செம்பும் சேர்ந்து சில கலப்புப் பொருள்களாக உபயோகப்பட்டு வருகின்றன. டச்சுக் கிழக்குத் தீவுகளிலும் (Dutch East Indies) மலேயாவிலும், டின் படிதல் (tin deposits) ஏராளமாக அகப்படுகிறது. மற்றும் தகரத் தாதுக்கள் கிடைக்கக்கூடிய தேசங்களாவன—பர்மா, சீயாம், பொலிவியா, சீனு, நைஜீரியா.

துத்தநாகம் :—இது இரும்பு துருப்பிடியாமலிருப்பதற்கு அதன்மேற் பூச உபயோகப்பட்டு வருகிறது. துத்தநாகத் தீயதை (Zinc Oxide) வர்ணங்களுக்கும் உபயோகப்படுகிறது. இது அகப்படும் முக்கிய தேசங்களாவன—இட்டாலி, ஸ்பெயின், ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா, கனடா, மெக்ஸிகோ, போலண்டு, ஜெர்மனி.

ஈயம் :—இது மிருதுவாயும் தட்டி நீட்டுவதற்கு இலகுவாயுமுள்ளது. வெகு சீக்கிரம் தீயில் இளகிவிடும். இக்குணங்களால் குழாய்களுக்கும், வீடுகளில் மேற்கூரைகளுக்கும் உபயோகப்பட்டு வருகிறது. அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலிருந்து பெரும்பாலும் வருகிறது. ஈயம் அகப்படக்கூடிய மற்ற தேசங்களாவன—ஸ்பெயின், ஜெர்மனி, இட்டலி, கனடா, ஆஸ்திரேலியா.

அலுமினியம் :—இது கனமற்றதாயும், நீடித்து இருக்கக் கூடியதாயுமிருக்கிறது. மின்சாரத்திற்கு உதவிக் கருவியாக உபயோகப்படுகிறது. அலுமினியம் உற்பத்தியாக்குதல் அதிகச் செலவாகிறது. அதனால்தான் இவ்வளவு காலமாக உபயோகத்தில் வரவில்லை. இக்காலத்தில் ஆகாயக்கப்பல் செய்வதற்கு உபயோகப்படுகிறது. எல்லாத் தேசங்களிலிருந்தும் உண்டாகும்

அலுமினியம் 220,000 டன்களாக மதிக்கப்படுகிறது. அலுமினியம் அதிக வெப்பநிலையில் உண்டாவதாகையால் அதை உண்டாக்குவதற்கு அதிகச்செலவில்லாத மின்சக்தி வேண்டும். நீர் சக்தி ஏராளமாகக் கிடைக்கக்கூடிய இடங்களில் அலுமினியத் தொழிற் சாலைகள் ஏற்பட்டுவருகின்றன.

பாதரஸம் :—இது சாதாரண வெப்ப நிலையில் இளகின பருவத்திலேயே நிற்கக்கூடியது. மற்ற உலோகங்களுடன் இரசக் கட்டாகும். இந்தக் குணத்தால் உடைந்த பாறைகளிலிருந்து தங்கம், வெள்ளி எடுப்பதற்கு உதவுகிறது. விஞ்ஞானக் கருவிகள் செய்வதற்கும், பல் வைத்தியத்திற்கும், கண்ணாடிகளுக்கு ரசம் பூசுதற்கும் உபயோகப்படுகிறது. ஸ்பெயின், காலிபோர்னியா, குரேஷியா, (Croatia) மெக்ஸிகோ முதலிய தேசங்களில் விசேஷமாகக் கிடைக்கிறது.

பளிதனம் (Platinum) :—இது ஒரு அபூர்வமான உலோகம் ; வெகு கடினமானது ; ஆகையால் விஞ்ஞான வேலைகளுக்கு இன்றியமையாதது. அதிகமாக அகப்படாததாலும், அதிகத் தேவையிருப்பதாலும், தங்கத்தைவிடக் கிராக்கியாயிருக்கிறது. அதிக விலையுள்ளது.

வெள்ளி :—இது சுயமாயும், ஐக்யப் பொருளாயும் அகப்படுகிறது. ஈயம், செம்பு முதலிய தாதுப்பொருள்களிலிருந்தும் கொஞ்சம் வெள்ளி எடுக்கலாம். வெள்ளியின் உபயோகம் பல. நாணயத்திற்கு உபயோகப்படுகிறது. உற்பத்தியாகும் தேசங்களில் 100-க்கு 65 பங்கு ஐக்கிய நாடுகளிலிருந்தும், மெக்ஸிகோவிலிருந்தும் கிடைக்கிறது.

தங்கம் :—இது படிகத்தாரையிலும் (Quartz Veins) படிவுப் பாறையிலும் (Sedimentary Rocks), கருங்கல்லிலும் (Granite) நதி நீர் படிதல்களிலும் அகப்படுகிறது. இக்காலத்தில் தங்கம் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுப்பதற்கு ஏராளமான முதல் வேண்டியிருக்கிறது. தங்கம் மிருதுவாயும், பளபளப்பாயும் துருப்பிடியாமலும், கண்பார்வைக்கு வசீகரமாயும், விலை உயர்ந்ததாயுமிருப்பதால் இக்காரணங்களைக் கொண்டு தங்கத்தை

ஆபரணங்களுக்கும் தேச நாணயத்திற்கும் உபயோகப்படுத்தி வருகிருர்கள். பண்டமாற்றும் துணைக்கருவியாகவும் உபயோகப் படுகிறது. நாணயங்கள் செய்வதற்குத் தங்கத்துடன் சிறிது செம்பு சேர்ப்பது வழக்கம். தங்கம் உண்டாகும் தேசங்களாவன :—அமெரிக்கா ஐக்கிய நாடுகள், டிரான்ஸ்வால், கனடா, ரோடிஷ்யா, ஆஸ்திரேலியா, ருஷியா, மெக்ஸிகோ, இந்தியா.

தங்கம் உறுதியான பாறைகளில் கலந்து காணப்படுகிறது. ஆகையால் முதலில் இப்பாறைகளை இயந்திரத்தின் உதவியால் பொடியாக்குகிருர்கள். பிறகு இப்பொடியைப் பெரிய தொட்டிகளில் கொட்டித் தண்ணீர்விட்டுக் கழுவக் கழுவ மணலெல்லாம் வெளியே போய்விடும். பொன் அடியில் தங்கிவிடும். இவ்வாறு பொன்னைப் பிரிக்க அநேக ரஸாயன முறைகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. இந்தியாவில் பொன் விசேஷமாகக் கிடைக்காத போதிலும், பொன் சுரங்கங்கள் மைசூர் பீடபூமியில் கோலார் என்னு மிடத்தில் இருக்கின்றன. கோலார் பொன் சுரங்கம் இந்தியாவிற் பிரசித்திபெற்றது. இச்சுரங்கங்களில் வேலை செய்வதற்கு வேண்டிய மின்சாரசக்தி சிவ சமுத்திரம் நீர் வீழ்ச்சியிலிருந்து கொண்டுவரப்படுகிறது.

VIII

ஜனப்பரப்பு

(DISTRIBUTION OF POPULATION)

உலக ஜனத்தொகையின் மதிப்பைக் கீழ்க்கண்டபடி குறிப்பிடலாம்.

உலக ஜனத்தோகை

(சர்வதேச சங்கத்தின் மதிப்பு)

		1933 (பத்து இலட்சம்)
ஐரோப்பா	...	519
வட அமெரிக்கா	...	137
மத்திய அமெரிக்காவும் தென் அமெரிக்காவும்	...	125
ஒஷியானியா	...	10
ஆபிரிக்கா	...	145
ஆசியா	...	1121
மொத்தம்	...	2057

ஜனங்கள் உலகம் முழுவதும் பரவியிருக்கின்றனர். ஆனால் சில இடங்களிற் குறைவாயும், சில இடங்களில் நெருக்கமாயுமிருக்கிறார்கள். பொதுவாக பூமியில் வசிக்கும் ஜனங்களில் அநேகர் பூகண்டங்களின் கீழ்ப்பிரதேசங்களில் வசிக்கிறார்கள். ஜனநெருக்கமுள்ள மண்டலங்கள் பூமியின் வடபாதியிலுள்ள மித வெப்பநிலையுள்ள பிரதேசங்களிற் காண்கிறோம்.

ஜன நெருக்கத்தின் காரணங்கள்

ஜன நெருக்கம் முக்கியமாக உணவின் தொகுதியைப் பொறுத்திருக்கிறது. உணவுப் பொருள்கள் நிலத்திலிருந்து

பொருளுற்பத்தி பண்ணும் திறனைப் பொருத்திருக்கிறது. ஆகையால் நிலங்கள் செழிப்பாயுள்ள இடங்களில் ஜன நெருக்கம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. விவசாயத்திற்கேற்ற நிலங்களில் செழிப்புள்ள நிலங்கள் செழிப்பில்லாத நிலங்களைவிட ஒவ்வொரு ஏக்கருக்கும் அதிக தானியத்தைக் கொடுக்கின்றன. ஆகையால் ஒரே பரப்பளவுள்ள நிலங்களில் செழிப்புள்ள நிலங்களில் ஜன நெருக்கம் அதிகப்படுகின்றது. இம்மாதிரியாகவே ஆடுமாடுகள் மேய்ப்பதற்கு வசதியுள்ள முல்லை நிலங்களில் வெள்ளாடுகள் மேயும் புல் நிலங்களைவிட அதிக ஜனங்கள் வசிக்க முடியும். ஏனென்றால் ஆடுமாடுகள் வெள்ளாடுகளைவிட அதிகப் பாலும், இறைச்சியும் தருகின்றன. ஆனால் மிகுவெப்ப மண்டலக் காடுகளில் பயிர்பச்சைகள் செழிப்பாக இருந்தபோதிலும் ஜனாகாரம் குறைவாகவே யிருக்கிறது. ஏனென்றால் அப்பிரதேசங்களில் உணவுப்பொருள்கள் பயிரிட முடிவதில்லை. ஆகையால் ஜனநெருக்கம் உணவின் தொகுதியைச் சார்ந்திருக்கிறது. உதாரணமாக மீன்பிடித்து ஜீவிக்கும் ஜனங்கள் ஒடுங்கிய மித வெப்பமுள்ள கடற்கரைகளில் நெருக்கமாக வசிக்கிறார்கள். ஏனென்றால் அவ்விடங்களில் மீன்கள் செழிப்பாய்க் கிடைக்கின்றன. வேட்டையாடி ஜீவனம்பண்ணுதல் அல்லது மேய்ச்சல் பிழைப்பு இவைகளைவிட விவசாயம் ஜன நெருக்கத்தை அதிகப் படுத்துகிறது. மண்ணின் செழிப்பு, பயிரின் தன்மை, சீதோஷ்ண நிலை முதலியவை ஓரிடத்தின் ஜன நெருக்கத்தை நிர்ணயிக்கின்றன. பெருவிளைவுப் பயிரிடுமுறையானது (Intensive Cultivation) ஆதிகால முதல் நதிகளின் பள்ளத்தாக்குகளில் வழங்கி வந்தது. ஈயுரடீஸ் (Euphrates), டைகிரிஸ் (Tigris), நயில் (Nile), கங்கை (Ganges) நதிகளின் பள்ளத்தாக்குகளை இதற்கு உதாரணமாக எடுத்துக் கூறலாம். இப்பிரதேசங்களில் வண்டல் சேர்ந்த மண் மழைப்பொழிவினாலாவது அல்லது நீர்ப்பாய்ச்சலினாலாவது நல்ல ஈரப்பதனும், சரியான சூரிய வெப்பமும் பெற்றுக் கிருஷி செய்வதற்கு முதல்தரமான நிலங்களாயிருக்கின்றன.

ஜன நெருக்கமானது பயிரிடும் தானியத்தையும் பொறுத்திருக்கிறது. உதாரணமாக ஒரு போகப் பயிரான கோதுமை

பயிராகும் பிரதேசங்களைவிட இரண்டு அல்லது மூன்று போகப் பயிரான அரிசி பயிராகும் பிரதேசங்களில் ஜனநெருக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. ஒரு பயிரின் மாசூலைச் சரியான உரம் போட்டு நிலத்தைப் பயிரிட்டு அதிகப்படுத்த முடியும். நிலங்கள் அதிகமாயும், உரம் சொற்பமாயுமுள்ள புதிய தேசங்களில் முன் பண்படுத்திப் பயிரிட்ட நிலங்களை மறுபடியும் பயிரிடுவதைக் காட்டிலும், புது நிலங்களைப் பயிரிடுவது இலாபமாயிருக்கும். இப்பேர்ப்பட்ட நடவடிக்கைகள் நாளடைவில் ஒரே நிலத்தையே ஆழப்பயிர் செய்யும் முறையையும் ஜன நெருக்கத்தையும் விளைவிக்கின்றன. சைன தேசத்திலுள்ள ஏராளமான ஜனங்களைக் காப்பாற்றுவதற்கு அத்தேசத்திலுள்ள நிலங்களில் கிடைக்கக் கூடிய உரத்தைச் சிறிதுகூட வீணாக்காமல் உபயோகித்துப் பயிரிட வேண்டியிருக்கிறது. வயல்களில் ஒரு பருவத்திற் கோதுமை அல்லது வாற்கோதுமையும், மற்றொரு பருவத்திற் புன்செய் தானியங்கள் அல்லது சோயா அவரை (Soya bean) யும் பயிர்செய்து வருகிறார்கள். இந்தியாவில் பயிரிடும் நிலங்களை விட அந்நிலங்களினால் ஜீவனோபாயம் செய்யும் ஜனங்கள் அதிகமாயிருக்கிறார்கள். ஆனால் சாஸ்திர ஆராய்ச்சிகளினால் விவசாய நிலங்களின் விளைவை அதிகரிக்க முடியும்.

நீர்ப்பாய்ச்சலும், ஜன நெருக்கமும் :—இயற்கையாக ஏற்படும் மழைப் பொழிவைவிட நீர்ப்பாய்ச்சலினால் உண்டாகும் வசதிகளை நிலம் பயிரிடுவோர் இலகுவில் எதிர்பார்க்கமுடியும். நீர்ப்பாய்ச்சல் வசதியினால் அநேக வெப்ப நிலையுள்ள பிரதேசங்களில் ஜன நெருக்க முண்டாயிருக்கிறது. ஈஜிப்த் தேசத்தில் நயில் பள்ளத்தாக்கிலும், மிஸப்போடோமியாவிலும் லட்சக் கணக்கான நிலங்கள் நீர்ப்பாய்ச்சலினால் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இந்தியாவில் முக்கியமாகப் பருவக்காலத்து மழையில்லாத இடங்களில் நீர்ப்பாய்ச்சலினால் நிலங்கள் சாகுபடி செய்கிறார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில் பயிரிடும் நிலங்களில் 100-க்கு 15 ஏக்கர்கள் நீர்ப்பாய்ச்சலினால் சாகுபடியாகின்றன. அப்பேர்ப்பட்ட நிலங்களின் விஸ்தீரணம் 50,000,000 ஏக்கர்களாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. மேட்டூர் அணையும், சக்கர்

அணையும் முக்கியமாய்க் கவனிக்கத்தக்கவையாகும். ஏனென்றால் இப்பேற்பட்ட அணைகளினால் நீர்ப்பாய்ச்சல் வசதி அதிகப்பட்டு ஜனங்கள் இதுவரைக் குறைவாயுள்ள இடங்களில் ஜன நெருக்கம் அதிகரித்து வருகிறது.

ஓரிடத்தில் பயிற் பொருளுற்பத்தி அதிகப்படுவதால் அவ்விடத்தில் ஜன நெருக்கமும் அதிகப்பட வேணுமென்பது கட்டாயமில்லை. அநேக சிறிய வயல்களைச் சில பெரிய வயல்களாகத் திரட்டுவதால், அவைகளைப் பயிரிடுவதற்கு வேண்டிய ஜனங்கள் குறையலாம். தவிரவும் பயிரிடுவதற்கு வேண்டிய யந்திரங்களை உபயோகிப்பதால் வேலையாட்களும் சிறிது குறையலாம்.

ஆனால் அதிக விளைச்சலினாலுண்டாகும் விளைவுப்பொருள்கள் மற்ற தேசங்களுக்கு ஏற்றுமதியாவதால் அவ்விடங்களில் ஜனநெருக்கம் அதிகரிக்கின்றது.

பொறித் தொழின்மை பரவுவதால் அநேக நாட்டார் புதிய நாடுகளில் விளையும் உணவுப் பொருள்களுக்குப் போட்டிபோடுகிறார்கள். ஆக்கத்தொழில் அதிகமாயுள்ள தேசங்கள் உணவுப் பொருள் சம்பந்தப்பட்டமட்டிலும் அதிக உணவுப் பொருளுற்பத்தியாகும் தேசங்களைச் சார்ந்திருக்கின்றன. இந்தியாவிலும், அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலும் ஜனாகாரம் அதிகப்படுவதால் அத்தேசங்களின் உணவுப் பொருள்கள் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகாமல் உள்நாட்டிலேயே செலவழிந்துகொண்டு வருகின்றன. குறைந்த கூலிக்கு விவசாயிகள் நிலத்தில் உழைப்பதால் தான் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் அதிகக்கூலியும், மேன்மையான வாழ்க்கை நிலையும் அடைகிறார்கள். அடிப்படையாகச் செய்தொழிலின் முன்னேற்றத்துக்கு விவசாயிகளே காரணமென்று சொல்லலாம்.

சீனா, ஜப்பான், இந்தியா முதலிய தேசங்களில் ஜனத்தொகை அதிகமாகப் பெருகிக் கொண்டே வருகிறது. கனடாவிலும், அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலும் இன்னும் லட்சக்கணக்கான ஜனங்கள் வசிப்பதற்கு இடமிருப்பதாகக் கருதப்படுகிறது. சைபீரியாப் பிரதேசத்தில் இன்றும் 80,000,000 ஜனங்கள் வசிக்க

முடியுமென்பது சிலர் கொள்கை. தென் அமெரிக்காவிலுள்ள புல்வெளிப் பிரதேசங்களில் பிளேடா நதியின் கடல்வாய் (Plata estuary) சுற்றுப்புரத்தில் அதிக ஜனங்கள் வசிக்க முடியுமென்பது சிலர் அபிப்பிராயம். தென் ஆபிரிக்காவில் கேப் முதல் ரோடிஷியாவரை ஜனவாஸமில்லாத நிலங்களிருக்கின் றன. கிழக்கு ஆபிரிக்காவில் 5,000 அடிகளுக்கு உயரேயுள்ள இடங்கள் ஜன வசதியுள்ளன. ஆஸ்திரேலியாவில் இன்றும் அதிக ஜனங்கள் வசிக்கமுடியுமென்று சிலர் மதிக்கின்றனர். ஆஸ்திரேலியாவின் வெப்பநிலைப் பிரதேசங்களில் 1,500,000 ஜனங்கள் வசிக்கமுடியுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் ஜனப்பரப்பைச் சற்று கவனிப்போம். விவசாயமே முக்கியமாயுள்ள தேசமாகிய இந்தியாவில் நில அமைப்பே ஜனத்தொகையின் பரப்புக்கு முக்கியமான காரணம். இடைவிடாமல் பயிர்செய்வதற்குச் சமநிலங்கள் முக்கியம். அந்நிலங்கள் செழிப்பாயும் ஜல வடிவுக்குள்ள வசதிகளுள்ளதாயும் இருக்கவேண்டும். ஹிமோத்பர்வதத்தின் சரிவுகளில் சிலர் பயிர் செய்து வருகின்றனர். ஆகிலும் மலைப்பிரதேசங்கள் பயிர்த் தொழிலுக்கு அவ்வளவு சௌகரியமில்லை. ஹிந்து, கங்கை நதிப்பிரதேசங்களில் நிலத்தை ஆழ்ந்து உழுது பயிர் செய்வதற்கு வேண்டிய வசதிகள் நன்ருய் அமைந்திருக்கிறது. ஆகையால் அப் பிரதேசங்களில் ஜன நெருக்கம் அதிகமாயிருக்கிறது. உதாரண மாக வங்காளத்தில் 1 சதுர மைலுக்கு 608 ஜனங்கள் வசிக்கிருர் கள்; பிஹாரில் 1 சதுர மைலுக்கு 409 ஜனங்கள் வசிக்கின்றனர். இந்தியாவில் நில அமைப்புத் தவிர, மழைப் பொழிவும் ஜன நெருக் கத்திற்கு மற்ெருரு முக்கியமான காரணம். வருஷத்தில் 40 அங் குலத்திலிருந்து 50 அங்குலம் வரை தவருமல் மழை பெய்யக் கூடிய பிரதேசங்கள் விவஸாயத்திற்கும் அதனல் ஜன நெருக்கத் திற்கும் காரணமாயிருக்கிறது. வங்காளத்தில் கீழ்ப்பாகங்களில் வருஷத்திற்கு 100 அங்குலம் மழையிருப்பதால் 1 சதுர மைலுக்கு 625 ஜனங்கள் வசிக்கிருர்கள். ஸிண்ட் (Sind) மாகாணத்தில் மழை குறைவாகயிருப்பதால் அதாவது வருஷத்திற்கு 8 அங்குலம் மழையிருப்பதால் 1 சதுர மைலுக்கு 70 ஜனங்களுக்கு மேல்

இல்லை. மழை தவறாமல் பெய்யக்கூடிய இடங்களில்தான் ஜன நெருக்கம் அதிகமாயிருக்கிறது. சென்னை மாகாணத்தில் கடற்கரைப் பிரதேசங்களில் மழை தவறாமற் பெய்வதால் ஜன நெருக்கம் மற்ற விடங்களைவிட அதிகமாயிருக்கிறது. உதாரணமாக கோதாவரி ஜில்லாவில் 1 சதுர மைலுக்கு 578 ஜனங்களைக் காண்கிறோம்; கொச்சியில் 1 சதுர மைலுக்கு 662 ஜனங்களும், மலபாரில் 1 சதுர மைலுக்கு 585 ஜனங்களும் காணப்படுகின்றன

இந்தியாவில் ஜன நெருக்கத்திற்கு நீர்ப்பாய்ச்சல் இன்னொரு முக்கிய காரணம். பஞ்சாபில் கால்வாய்ப் பாசனம் அதிகமாயுள்ள இடங்களில் ஜன நெருக்கமும் அதிகமாயிருக்கிறது. பஞ்சாபில் மழை 20 அங்குலத்திற்குக் குறைவாயுள்ள இடங்களில் ஜன நெருக்கம் நீர்ப்பாய்ச்சல் வசதியைப் பொருத்திருக்கிறது. ஸின்ட் மாகாணத்தில் நீர்ப்பாய்ச்சல் வசதியுள்ள இடங்களில் 1 சதுர மைலுக்கு 225 ஜனங்கள் வசிக்கிறார்கள்.

இந்தியாவில் ஜன நெருக்கம் விளையும் உணவுப் பொருள்களையும் பொருத்திருக்கிறது. ஆனால் நவீனப் போக்கு வரவு சாதனங்கள் விருத்தியடைந்திருப்பதாலும் அதனாற் பொருள்கள் விளையுமிடமிருந்து விற்பனையாகுமிடத்திற்கு எளிதாகக் கொண்டு வர முடிவதாலும் வியாபாரஸ்தலங்கள் ஜன நெருக்கமடைகின்றன. கைத்தொழில்கள் விருத்தியடைவதால் தொழிற்சாலைகள் ஏற்படும் இடங்கள் ஜன நெருக்கமாயுள்ளன.

ஜனநெருக்கமுள்ள இருபது தேசங்களின் புள்ளி விவரங்கள்

தேசம்		1 சதுரமைலுக்குள்ள நபர்கள்
பெல்ஜியம்	...	704·9
இங்கிலாந்தும் வேல்ஸும்	...	700·0
நெதர்லன்ஸ்	...	674·2
ஜப்பான்	...	469·2
ஜெர்மனி	...	369·3
இத்தாலி	...	355·2

தேசம்		1 சதுரமைலுக்குள்ள நபர்கள்
செக்கோ ஸ்லோவிகியா	...	280·0
ஸ்விட்ஸரலெண்ட்	...	261·2
ஹங்கரி	...	250·6
போலண்டு	...	278·1
டென்மார்க்கு	...	224·6
ஆஸ்திரியா	...	208·8
போர்ச்சுகல்	...	205·7
இந்தியா	...	204·8
பிரான்ஸ்	...	197·1
யுகோஸ்லேவியா	...	158·8
புல்கேரியா	...	157·0
ருமேனியா	...	153·7
கிரீஸ்	...	136·0
ஸ்பெயின்	...	126·4

மால்தஸ் வரையிட்ட ஜனத்தோகை வளர்ச்சிவிதி

(Malthusian Law of Population)

பதினெட்டாவது நூற்றுண்டின் கடைசியில் மால்தஸ் (Malthus) என்பவர் ஜனத்தொகை வளர்ச்சி விஷயமாக ஒரு வியாசம் எழுதினர். அவ்வியாசத்தில் ஜனத்தொகை சம்பந்தமாக ஒரு புதுக் கொள்கையை நிரூபித்தார். அக்கொள்கையின் முக்கியக் கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறுவோம்.

(1) ஜனத்தொகையின் வளர்ச்சி பிழைப்பு வழிகளைச் சார்ந்திருக்கிறது. ஒரு தேசத்திலுள்ள ஜனத்தொகை எல்லையில்லாமல் விருத்தியடையமுடியாது. ஜனத்தொகை வளர்ச்சியடையும் எல்லை ஜனங்கள் வாழ்வதற்கு வேண்டிய பிழைப்பு வழிகளால் கட்டுப்பட்டுவருகிறது. ஆனல் தேசத்திற்குத் தேசம் மொத்த ஜனத்தொகை வேறுபட்டுவருகிறது. அவ்வேறுபாட்டிற்குக் காரணம் பல தேசங்களிலுள்ள ஜனங்களின்

வாழ்க்கை நிலையேயாம். ஒரு தேசத்து ஜனங்களின் பிழைப்புத் திட்டம் காலத்திற்குக் காலம் மாறுபடலாம். ஆனால் கடைசியாக ஜனத்தொகையின் வளர்ச்சி குறைந்த பட்சம் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைப் பொருத்திருக்கிறது.

(2) வேறு தடங்கல் ஒன்றுமில்லாவிடில் பிழைப்பு வழிகள் விருத்தியானால் ஜனத்தொகையும் விருத்தியடைகிறது. ஒரு தேசத்தை எடுத்துக்கொள்வோம். பிழைப்பு வழிகள் அதிகரித்தால் அத்தேசத்தில் இப்பொழுது வழங்கிவரும் பிழைப்புத் திட்டத்தில், முன்னைவிட இன்னும் அதிக ஜனங்களைக் காப்பாற்ற முடியும். சாதாரணமாக அனுபவத்திலிருந்து நாம் தெரிந்துகொள்வதென்னவென்றால் பிழைப்பு வழிகள் அதிகரிக்கும்கால் ஜனத்தொகையும் அதிகரிக்கின்றது.

(3) ஜனத்தொகையை அதிகரிக்கவிடாமல் பிழைப்புவழிகளுக்குச் சமமாக இருப்பதற்குள்ள தடங்கல்களை இருவகையாகப் பிரிக்கலாம். (*a*) நேராக இறப்பு வீதத்தை அதிகப்படுத்தக் கூடியவை. அதாவது யுத்தங்கள் பிணிகள் முதலியன. (*b*) பிறப்பு வீதத்தைத் தடுக்கக்கூடிய முறைகளாவன—வயதாகி விவாஹம் செய்தல், பிறப்பைத் தடுக்கும் முறைகளை அனுசரித்தல் முதலியன.

மானிடப் பிழைப்பிற்குப் பூமியில் பொருள் உண்டாக்கும் சக்தியைக் காட்டிலும் மனிதனுடைய பிரஜோற்பத்திச் சக்தி அதிகமாயிருக்கிறது. பிழைப்புக்கு வேண்டிய பொருள்கள் சுலபமாய்க் கிடையாமலிருப்பது ஜனத்தொகை வளர்ச்சியடையாமலிருப்பதற்கு ஒரு சாசுவதமான தடங்கலாயிருக்கிறது. ஆகையால் சமூகவாழ்க்கையானது துன்பத்திற்கும் சுகத்திற்கும் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. ஜனாகாரம் அதிகரித்து அதற்கு வேண்டிய பிழைப்பு வழிகள் குறைவதால் ஜனங்கள் பிணிகளால் பீடிக்கப்படுகின்றனர். இல்லாவிடில் யுத்தங்கள் ஏற்படுகின்றன. இதனால் அநேக ஜனங்கள் இறந்துபோய் ஜனத்தொகை குறைகின்றது. இத்தகைய ஜனக்குறைவால் கொஞ்சக்காலம் ஜனங்கள் இன்ப நலம் அடைகின்றனர். இங்கிலையில் ஜனாகாரம் மறு

படியும் பிழைப்பு வழிகளைவிட அதிகரிக்கின்றது. மறுபடியும் இன்னொரு துன்பகாலம் உண்டாகின்றது. இன்ப காலத்தை அதிகப்படுத்தலும், துன்பகாலத்தைக் சிறிதுகாலம் வராமல் தடுத்தலும் சில முறைகளைப் பொருத்திருக்கிறது. அவை யாவன :—(1) பொருளாக்கு முறைகளைப் பெருக்கலும் அதன் மூலமாகப் பிழைப்பு வழிகளை அதிகரித்தலும் (2) ஜனத்தொகை அதிகரிக்காமலிருப்பதற்குப் பிரஜோர்ப்பத்தியை அடக்கி நடத்தல். வேண்டியபொழுது கர்ப்பத்தடைசெய்து ஜனவிருத்தியைக் குறைக்கவேண்டுமென்று இக்காலத்தில் சிலர் கருதுகின்றனர்.

இவ்விதமாகப் பொருள் செழிப்பானது பிழைப்பு வழிகள், ஜனத்தொகை இவ்விரண்டும் மாறும் இனத்தின் சார்பலனுயிருக்கிறது. அதாவது பிழைப்புவழிகளுடன் நேரில் மாறுகிறது; ஜனத்தொகையுடன் தலைகீழாக மாறுகிறது. ஜனத்தொகை பிழைப்பு வழிகளைவிட வேகமாக வளர்ச்சியடைவதால், ஜன வளர்ச்சியை நாம் தடுக்காவிட்டால் ஜனவாழ்க்கையின் செழிப்புக் குறைகிறது. இவ்விதக் கொள்கையுடையவர்கள் பால்ய விவாஹத்தையும், பிரிவினையில்லாக் குடும்பங்களையும் கெடுதலுள்ளவைகளாகப் பாவிக்கின்றனர். இவ்விரண்டு வழக்கங்களும் பணம் சேகரிக்கும் வழிகளுக்கு ஏற்படும் கெடுதலைக் கவனியாமல் பிறப்பு வீதத்தை அதிகப்படுத்துகின்றன. ஜனத்தொகையின் வளர்ச்சி அதிகரிக்காமலிருப்பதற்கு ஒரு உபாயம் என்னவென்றல் ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்கள் பிழைப்புத் திட்டம் குன்றக்கூடிய காரியங்களைத் தடுக்கவேண்டும். அதாவது பொருட் செழிப்பைக் குறைக்கக்கூடிய வம்சவிருத்தியை அதிகரிக்கக்கூடாது. இப்பேர்ப்பட்ட பொருட்செழிப்புச் சம்பந்தமான கொள்கை ஒழுக்க முன்னேற்றத்துக்கு விரோதமாகத் தோன்றலாம். ஆனல் இம்முறையைத் தழுவினுலொழிய இக்காலத்தில் ஒரு தேசத்தார் பொருட்செழிப்பு அடைய முடியாது.

இந்தியாவின் ஜனத்தொகை வளர்ச்சி
(The Growth of Population in India)

1931-ம் வருஷத்துக் குடிமதிப்புப்படி இந்தியாவின் ஜனத்தொகை 352·8 மிலியன். 1921-ம் வருஷத்து ஜனத்தொகை

யுடன் உற்று நோக்குமிடத்து 33·9 மிலியன் ஜனங்கள் அதிகம். (10·6). கீழ்க்குறிக்கப்பட்டிருக்கும் இலக்கங்களிலிருந்து ஜனத் தொகை எவ்வாறு வளர்ச்சியடைந்திருக்கிற தென்பது நன்கு விளங்கும்

காலம்	ஜனத்தொகை (மிலியன்)	தேறின வளர்ச்சி (மிலியன்)	மொத்த வளர்ச்சி) (சத வீதம்
1881—1891	287·31	27·70	13·2
1891—1901	294·36	4·37	2·5
1901—1911	315·15	19·00	7·1
1911—1921	318·94	3·69	1·2
1921—1931	352·83	33·86	10·6

1941-ம் வருஷத்தில் எடுக்கப்படும் குடிமதிப்பு 400 மிலியனாக இருக்கலாமென்று மதிக்கப்படுகிறது. இந்தியாவில் ஜன சலனம் சம்பந்தமாக நாம் முக்கியமாக கவனிக்கத் தக்கவை அதிகப் பிறப்பு வீதமும், இறப்பு வீதமுமேயாம். ஒவ்வொரு ஐந்து வருஷங்களுக்குள்ள சராசரிக் கணக்கில் 1930-ம் வருஷத் துடன் முடியும் ஐந்து வருஷ சராசரிப்படி 1000 நபர்களுக்குள் 33·3 பிறப்பும், 24·3 இறப்பும் என்று கணக்கிட்டிருக்கின்றனர். மேநாடுகளுடன் உற்று நோக்குமிடத்து இந்தியாவில் சராசரி வயது புருஷருக்கும், பெண்டிருக்கும் (1921-ம் வருஷ மதிப்புப் படி) முறையே 24·8-ம், 24·7-ம்; 1931-ம் வருஷ குடிமதிப்புப் படி 23·2-ம், 22·8-ம் ஆகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தியா வில் பிறப்பு வீதம் அதிகமாயிருப்பதற்குள்ள காரணங்களில் முக்கி யமானவை பாலிய விவாஹமும், குறைந்த பிழைப்புத் திட்டமும், குடும்பம் விருத்தியடையாமலிருப்பதற்குள்ள முறைகளையும் அநுசரிக்காமலிருப்பதேயாம். இறப்பு வீதம் அதிகமாயிருப்பதற்கு முக்கிய காரணங்கள் ஜனங்களின் குறைந்த சக்தியும், பல வியாதி களுமேயாம். காலரா, அம்மை, காலா அஸ்ஸர், மலேரியா, வயத்துக்கடுப்பு முதலிய வியாதிகளால் அநேக ஜனங்கள் பீடிக்கப் படுகின்றனர்.

ஜன நெருக்கமானது 1901-ம் வருஷ மதிப்புப்படி 1 சதுர மைலுக்கு 167லிருந்து 1931-ம் வருஷ மதிப்புப்படி 1 சதுர மைலுக்கு 195 ஆக, பெருகியிருக்கிறது. இப்பேர்ப்பட்ட ஜன நெருக்கம் மற்ற தேசங்களின் ஜனநெருக்கத்தைவிட அதிக மென்று சொல்லமுடியாது. ஆனால் இந்தியாவில் சில இடங்கள் ஜனங்கள் வசிப்பதற்குள்ள வசதியில்லாமலிருக்கின்றன. வேறு சில இடங்களில் அதிக ஜன நெருக்கத்தைக் காண்கிறோம்.

கூலி வேலை (Labour).

உலகத்தில் மக்கட் பரப்பைக் கவனிக்குமிடத்து ஒவ்வொரு தேசத்தாரும் உற்பத்தி சக்தி உடையவராயிருக்கிறார்களென்பது கவனிக்கத்தக்கது. உலகத்திலுள்ள நிலங்களைப் பண்படுத்தலும், வியாபாரத்தை விருத்தி செய்தலும் பற்பல தேசங்களின் பொருளுற்பத்திச் சக்தியைப் பொருத்திருக்கிறது.

ஸ்வதேச மக்கள் (Natives):—உலகத்தில் பெருகி முன்னேற்றமடைந்த மக்கள் முதல் முதல் மிதமண்டலப் பிரதேசங்களில் வசித்தனர். பிறகு அப்பிரதேசங்களிலிருந்து சென்று மற்ற நாகரீகக் குறைவுள்ள பிரதேசங்களைப் பொருளாதார முறையிலும் அடக்கி ஆளுகின்றனர். மிக வெப்பப் பிரதேசங்களில் ஐரோப்பியர் ஸ்வதேச ஜனங்கள் மூலமாய்ப் பொருள் பலன்களைத் தேடியெடுத்துக்கொண்டு போகின்றனர். அப்பிரதேசங்களில் ஆரம்பத்தில் குடிகள் எண்ணத்திலும், பொருளுற்பத்திபண்ணும் சக்தியிலும் குறைவற்றவராகக் காணப்பட்டனர். பொருளுண்டாக்கும் சக்தி மிகவெப்பப் பிரதேச ஜனங்களுக்குக் குறைவாகவேயிருக்கிறது. ஆனால் அப்பிரதேசங்களில் குடியேற்றமடைந்த ஐரோப்பியர் ஸ்வதேச ஜனங்களின் கூலி வேலையால் பொருளுற்பத்தியை அதிகப்படுத்தி வருகின்றனர். மிக வெப்பப்பிரதேசங்களில் பொருளுற்பத்தி அப்பிரதேச குடிகளின் கூலி வேலையைப் பொறுத்திருக்கிறது. இப்பிரதேசங்களிலுள்ள உஷ்ணத்தினால் ஐரோப்பியர் எக்காலமும் வசிக்க முடியாததால் ஸ்வதேச ஜனங்களை வைத்து வேலை நடத்தும்படியாயிருக்கிறது.

நீகிரோ கூலி வேலைக்காரர் :— மேல் இந்தியா தீவுகளில் ஸ்பானியர் (Spaniards) குடியேறின காலத்தில் அத் தீவுகளில் கடினமான வேலைகள் செய்வதற்குப் போதுமான ஜனங்கள் இல்லாததால் ஆபிரிக்காவிலிருந்து நீகிரோ ஜாதியாரைக் குடியேறச் செய்தனர். மேல் இந்தியா தீவுகளிலும், அமெரிக்காவில் வெப்பப் பிரதேசங்களிலும் பொருளாதாரப் பெருக்கத்திற்கு முக்கிய காரணம் நீகிரோக்களின் கூலி வேலையேயென்று கூறலாம். வட அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் தென் நாடுகளிலுள்ள சர்க்கரை, பருத்தி, புகையிலைத் தோட்டப் பயிர்களுக்கு நீகிரோ கூலி வேலைக்காரர்களை உபயோகித்து வந்தனர். அந்நாடுகளில் நாளடைவில் நீகிரோக்கள் அடிமைத் தன்மை ஒழிந்து சாதாரண கூலி வேலைக்காரர்களாயிருக்கின்றனர்.

அயனாந்தப் பிரதேசங்களின் கூலி வேலைக்காரர் :—அயனாந்தப் பிரதேசங்களில் விளைவிக்கக்கூடிய பொருள்கள் அப்பிரதேச ஜனங்களின் கூலி வேலையால் அதிகரிக்கப்பட்டுவருகிறது. அப்பிரதேசங்களில் விளையும் பொருள்களாகிய தேயிலை, காப்பி, வாசனைத் திரவியங்கள் ஒரு காலத்தில் வாழ்க்கைக்கு வேண்டிய பொருளாகக் கருதப்படாமலிருந்தன. ஆனால் அவை தற்காலத்தில் வாழ்க்கைக்கு இன்றியமையாதன. அயனாந்தப் பிரதேசங்களின் ஜனங்களுக்கு வாழ்க்கை நிலை தாழ்ந்த நிலைமையிலிருப்பதால் அவர்கள் நிலத்தின் பொருள் சுறண்டல் வகையில் அதிக ஊக்கமற்றவர்களாக யிருக்கின்றனர். ஆனால் அப்பிரதேசங்களில் பொருள் சுறண்டுவதில் ஐரோப்பியர் அதிக ஊக்கமுள்ளவர்களாயிருப்பதால் ஸ்வதேசக் கூலி வேலைக்காரர்களுக்கு அதிகக் கூலியைக் கொடுத்து வேலையை அதிகமாக வாங்குகின்றனர். காங்கோப் பிரதேசத்தில் ரப்பர் பயிர்த் தோட்டங்களில் ஸ்வதேசக் கூலி வேலைக்காரர்களை ஐரோப்பியர் மிகக் கொடூரமாய் வேலைவாங்கி வந்தனர்.

பரதேசக் கூலி வேலைக்காரர் உழைப்பு :—மிக வெப்பப் பிரதேசங்களில் ஸ்வதேசக் கூலி வேலைக்காரர் அதிகமாகக் கிடைக்காததாலும், வேலையில் ஊக்கமில்லாதவர்களாயு மிருப்பதால் பரதேசங்களிலிருந்து கூலி வேலைக்காரர்களைக் கொண்டு

வந்து வேலைகள் நடத்தப்பட்டுவருகின்றன. சைனு, இந்தியா தேசங்களில் ஜனத்தொகை அதிகமாயிருப்பதால் இவ்விரண்டு தேசங்களும் கூலி வேலைக்காரர்களைச் சேகரிக்கத் தகுதியான இடங்களாயிருக்கின்றன. இந்தியாவிலிருந்து கூலி வேலைக்காரர் பர்மா, முரிஷியஸ், நெடால், பிஜி, பிரிட்டிஷ் கயானு, மலேயா முதலிய இடங்களில் ஒப்பந்தக் கூலி வேலைக்காரராக வேலை செய்து வருகின்றனர். இம்மாதிரிக் கூலி வேலைக்காரர் கிடைக்காத மற்ற அயனுந்தப் பிரதேசங்களில் பொருளாதாரப் பெருக்கல் குறைவாகவே யிருக்கிறது. பர்மாவின் தாழ்நிலப் பிரதேசங்களும், சியாம் தேசமும் சமீபமாயிருந்தும் சியாமில் தகர களங்களை விருத்திபண்ணுவதைப்போல் பர்மாவின் தகர களங்களை விருத்தி பண்ணமுடிய வில்லை. அதற்குக் காரணமென்ன வென்றால் சீனியர்களை பர்மாவில் கூலி வேலைக்காரர்களாக உபயோகப்படுத்த முடியாமல் சில நிர்ப்பந்தங்களை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

வெள்ளையர் ஆஸ்திரேலியா அரசாங்க முறை (White Australia Policy) :—ஆஸ்திரேலியாவில் தெற்கிலும், தென் கிழக்கிலுமுள்ள பிரதேசங்களே வெள்ளையர் வசிப்பதற்கேற்றதாயிருக்கின்றன. ஆஸ்திரேலியாவில் மிகவெப்பப் பிரதேசங்கள் வெள்ளையர்கள் குடியேற்றமடைந்து உழைப்பதற்குத் தகுதியில்லை. நாகரீகத்திலும், பொருள் ஆக்க முயற்சியிலும் வேறுபாடுள்ள ஜாதியர் ஓரிடத்தில் அமைந்தால் அதனுல் பலவித இடையூறுகள் ஏற்படுகின்றன. ஆசியா தேசத்தாரும், வெள்ளையரும் ஓரிடத்தில் வேலைக்குப் போட்டிபோடுவதில் வெள்ளையர்களுக்கு அநேக அசௌகரியங்கள் உண்டாகின்றன. சீனரும், ஜப்பானியரும் வெள்ளையர்களைவிட கூலிவேலைப் போட்டியில் திறமையுள்ளவர்களா யிருக்கின்றனர். ஆகையால் வெள்ளையர் அவர்களை வேலைசெய்து பிழைக்கும் இடங்களுக்கு வரமுடியாமல் தடுக்கின்றனர்.

தற்கால வெளியேற்றம் (Temporary Migration) :—அயனுந்தப் பிரதேசங்களுக்குத் தற்காலக் குடியேற்றம் அடிக்கடி ஏற்படுகிறது. ஐரோப்பாவிலிருந்து வருஷாவருஷம்

காப்பி அறுவடை காலத்தில் பிரேஸில் தேசத்திற்கு ஆயிரக் கணக்கான கூலிவேலைக்காரர் போகின்றனர். அவ்விடம் அறுவடை முடிந்தவுடன் ஆர்ஜெண்டின் தேசத்தில் கோதுமை அறுவடைக்குச் செல்லுகின்றனர். அதற்குப் பிறகு ஐரோப்பாவுக்குத் திரும்பிப்போகின்றனர்.

மிதவெப்பப் பிரதேசங்களில் தொழிளாலரின் சிக்கல் வேறு விதமாயிருக்கிறது. இப்பிரதேசங்களில் வேலைப்போட்டி ஒரே ஜாதியாருக்குள்தானிருக்கிறது. ஐரோப்பாவில் மித வெப்பப் பிரதேசங்களில் சில புதிய இடங்கள் குடியேற்றத்துக்கு வசதியுள்ளனவாயிருக்கின்றன. அநேக புதிய பிரதேசங்களில் கூலி வேலைக்கு உழைப்பவர் குறைவாயிருப்பதால் அவ்விடங்களில் குடியேற்றம் அதிகரிக்கும் பொருட்டு நிலங்கள் இனமாகக் கொடுப்பதும், இலவசப்பிரயாணமும் அதிகக்கூலியும் கொடுக்கப் படுகிறது. அப்பேர்ப்பட்ட புதிய தேசங்களில் ஆரம்பத்தில் விவசாயக் குடியேற்ற நாடுகளாக விளங்கி, பின் ஜனத்தொகை அதிகப்பட அவ்விடங்களிலுள்ள தாதுப்பொருள்கள் பெருகுவதற்குத் தொழிற்சாலைகளும் ஏற்படுகின்றன.

ஜனநெருக்கத்திற்குச் சில பொதுக்காரணங்கள்

விவசாயமே முக்கியமாயுள்ள தேசமாகிய இந்தியாவில் ஜன நெருக்கமானது நிலத்தைத் தவறுமலும் நிதானமாகவும் பண் படுத்தித் தானியங்கள் விளைவிக்கக்கூடிய நிலமையைப் பொருத்திருக்கிறது. ஜனநெருக்கத்திற்குப் பல காரணங்களிருக்கின்றன.

(1) **மழை வீழ்ச்சி** :—விவசாயத்தின் செழிப்புக்கு இது இன்றியமையாதது. வருஷாவருஷம் குறைவற்ற மழை பெய்தல் ஜனங்களின் வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் பெரிய உதவியாயிருக்கிறது.

(2) **பூமியின் இயற்கை அமைப்பு** :—ஏராளமான மழையினால் விவசாயத்திற்குள்ள பிரயோஜனம் பூர்த்தியடையப் பூமியின் இயற்கை அமைப்பு முக்கியம். வங்காளத்தின் கீழ்ப்பாகங்களில் வடிகால் இயற்கை முறையிலே அமைந்திருப்பதால் நிலங்களில்

நீர் தங்குவதில்லை. சில இடங்களில் 1 சதுரமைலுக்கு 1,000 ஜனங்கள் வசிக்கின்றனர். வங்காளத்தின் மேற்பாகத்தில் மழை போதுமானபடி இருந்தபோதிலும் நீர்வடிய வசதியில்லாமலிருக்கிறது.

(3) **நதிநீரோதநதிகள்:**—நதிகள் பூமியைச் செழிப்படையச் செய்வதுடன் உள்பிரதேசங்களுக்கு நீர்ப்பாய்ச்சல் வசதி உண்டாக்குகின்றன. வங்காளத்தைப்போலுள்ள இடங்களில் அடிக்கடி நதிகளின் ஜலம் கரைகளுக்குமேல் எழும்பி வண்டலைப் பக்கத்தரைகளில் வடியச்செய்கின்றன. அப்பேர்ப்பட்ட வண்டல் வடிதல் நிலத்துக்குச் செழிப்பை உண்டாக்குகின்றது. பெரிய நதிகளாகிய கங்கை, யமுனை, ஸிந்து, பிரம்மபுத்தராவும் அவைகளின் உபநதிகளும் நிலத்தைச் செழிக்கப்பண்ணி ஜனநெருக்கத்துக்கும் காரணமாகின்றன.

(4) **நீர்ப்பாய்ச்சல்:**—நீர்ப்பாய்ச்சல் வசதிகள் ஏற்படுவதால் வறண்ட பிரதேசங்களாகிய சிண்டு, பஞ்சாப் முதலியன செழிப்படைந்துகொண்டு வருகின்றன. பஞ்சாபில் சென்ற 25 வருஷத்தில் ஏற்பட்டிருக்கிற கால்வாய் வசதிகளால் ஜனநெருக்கம் அதிகரித்து விவசாயமும் எவ்வாறு விருத்தியடைகிறதென்பதை விளக்குகிறது.

(5) **தரை:**—ஜலவசதி தவிர நிலத்தின் சேர்மானமும் ஜன நெருக்கத்துக்கு ஒரு முக்கிய அம்சமாயிருக்கிறது. வண்டல் சேர்ந்த நிலங்கள் சில வகைத் தானியங்கள் விளைய அதிகப் பொருத்தமாயிருக்கிறது.

(6) **பயிர்கள்:**—ஏராளமான ஜலமுள்ள இடங்களில் அரிசி, சணல் இலகுவாய் உண்டாக்கமுடியும். தேயிலைக்கும் அதிக மழை வேண்டியிருக்கிறது. இவ்விதமாகப் பயிர்கள் விளைவிக்கக்கூடிய இடங்களில் ஜன நெருக்கத்தை அதிகமாகக் காணலாம்.

(7) **போக்குவரவு சாதனங்கள்:**—போக்குவரவு வசதிகளினால் அநேக இடங்களில் ஜன நெருக்கம் அதிகரிக்கின்றது. துறைமுகங்களில் ஏற்படும் ஜனநெருக்கம் இக்காரணத்தினாலேயாம்.

(8) தொழிற் பெருக்கம்:— கைத்தொழில்கள் பெருகுமிடங்களில் ஜன ஸமூகம் அதிகரிக்கிறது. இக்காரணத்தினால் கல்கத்தா, பம்பாய், கான்பூர், ஜாம்ஷெட்பூர் முதலிய இடங்களில் ஜனநெருக்கம் அதிகமாயிருக்கின்றது. இதே மாதிரியாக வர்த்தகம் விருத்தியாக ஜன நெருக்கமும் அதிகப்படும்.

(9) சரித்திர சம்பந்தமான காரணங்கள்:— தேசங்களின் தலைநகரங்களிலும், கல்வியும், நாகரீகமும் பெருகிய இடங்களிலும் ஜனநெருக்கம் அதிகமாயிருக்கிறது. டெல்ஹி, லக்னவ், காசி, ஆகிரா முதலிய இடங்களில் ஜன நெருக்கம் அதிகமாயிருப்பதற்கு இது ஒரு காரணமாகும்.

IX

ஓரிடத் தொழிற் செறிவு,

(LOCALISATION OF INDUSTRY)

கைத்தொழில்கள் ஓரிடத்தில் சேர்ந்திருத்தல் முக்கியமாக பூகோள நிலையும், பொருளாக்க நிலையும் பொறுத்திருக்கிறது. முதன்மையாக பூகோள நிலையைச் சற்று கவனிப்போம். மூலப் பொருள்கள் கிடைக்கக்கூடிய இடங்களின் சமீபத்திலே கைத் தொழில்கள் அமைக்கப்படுகின்றன. உதாரணமாக பம்பாய், ஆமதாபாத் முதலிய இடங்களில் பஞ்சு நெசவுத் தொழில்கள் ஏற்பட்டிருப்பதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் பம்பாய் மேட்டுப்பரப்பு நிலங்களில் பஞ்சு ஏராளமாய் விளைவதேயாம். இதே மாதிரியாக வங்காளத்தில் சணல் உற்பத்தியாவதால் இந்தியாவிலுள்ள சணல் தொழிற்சாலைகள் வங்காளத்திலேயே கல்கத்தாவைச்சுற்றிவர ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இரும்பு, உருக்குத் தொழிற்சாலைகள் முக்கியமாக வங்காளத்திலும், பீஹாரிலும் இரும்பு நிலக்கரி களங்களின் சமீபத்தில் அமைக்கப் பட்டிருக்கின்றன. சில நெசவுத் தொழில்களில் சாயம் போடுவ தற்கும், சுத்தம் செய்வதற்கும் நல்ல தண்ணீர் வேண்டியிருப்ப தால் அக் கைத்தொழில்கள் சாதாரணமாக நதிகள் உற்பத்தியாகும் உயர் பாகங்களிலே அமைக்கப்படுகின்றன. கடிதாசுகள் செய் யும் தொழிற்சாலைகள் பெரிய நதிகள் ஓடிவரும் மலையடிவாரத் திலே அமைப்பது விசேஷமாயிருக்கிறது. இரும்பும், இரும்பைப் போல் பளுவான சாமான்கள் செய்யப்படும் தொழிற்சாலைகள் அவைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைக்கும் இடங் களுக்குச் சமீபத்தில் ஸ்தாபிக்கப்படுகின்றன. இங்கிலாந்து தேசத்தில் தொழிற் புரட்சி ஆரம்ப காலத்தில் நிலக்கரியும் இரும் பும் கிடைக்கக்கூடிய இடங்களில் தொழிற்சாலைகள் ஏற்பட்டன. ஆனால் தற்காலத்தில் நிலக்கரிக்குப் பதிலாக ஜலசக்தியினால் இயந்திரங்கள் ஓட்டப்படுவதால் ஜலசக்தி வசதியுள்ள இடங்களில்

தொழிற்சாலைகள் ஏற்படுகின்றன. மரச்சோறு, தாள் தொழிற்சாலைகள் அவைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைக்கும் இடங்களிலே காணப்படுகிறது.

கப்பல்கள் மரத்தினல் செய்யப்பட்டுவந்த காலங்களில் மரங்கள் கிடைக்கும் தேசங்களின் துறைமுகங்களிலே கப்பல் கட்டுதல் வழக்கமாயிருந்தது. உதாரணமாக நார்வே, ஸ்வீடன் தேசங்களில் மரங்கள் ஏராளமாய்க் கிடைப்பதால் மரக்கப்பல்கள் அத்தேசங்களின் துறைமுகங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

ஓரிடத் தொழிற் செறிவு சரியான தொழிலாளர் கிடைப்பதையும் பொறுத்திருக்கிறது. கைதேர்ந்த தொழிலாளர் கிடைக்கக் கூடிய இடங்களில் சில தொழில்கள் ஏற்படுகின்றன. லங்கிஷார் (Lancashire) நெசவுத் தொழிற்காரர் கைதேர்ந்த வேலைக்காரராயிருந்தால் பஞ்சு நெசவு தொழிற்சாலைகள் அவ்விடம் முதன்மையாக அமைந்தன. ஸ்காட்லண்டின் கீழ் ஜில்லாக்களில் சணல் தொழிற்சாலைகள் ஏற்பட்டிருப்பதற்கும், ஷெவ்வீல்ட் (Sheffield) நகரில் உருக்கு வேலைகள் கீர்த்தியடைந்திருப்பதற்கும் ஷை கூறிய காரணங்களேயாம்.

ஓரிடத் தொழிற்செறிவு விற்பனைப் பிரதேசத்தையும் பொறுத்திருக்கிறது. எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் செய்பொருள்களை உற்பத்தியாகுமிடமிருந்து விற்பனையாகுமிடங்களுக்குக் கொண்டுபோவது அவசியம். மூலப்பொருள்களுக்கும் துறைமுகங்கள் சமீபமாக இருத்தல் வேண்டும். பளுவான சாமான்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் உண்டாக்குமிட மிருந்து விற்பனையாகுமிடங்களுக்கு எடுத்துச்செல்லுதல் சிக்கனமாகவும் லாபகரமாகவும் இருக்கவேண்டும்.

ஓரிடமிருந்து மற்ற இடங்களுக்கு ரெயில் மூலமாய் அனுப்பப்படும் பொருள்களுக்கு ரெயில் வீதக் கூலிகள் குறைவாயிருத்தல் நலம். அப்படியில்லாவிடில் சந்தைகளில் சரக்குகளைக் குறைந்த விலைக்கு விற்கமுடியாது. முக்கியமாக விவசாயப் பொருள்கள் விளையுமிடமிருந்து விற்பனையாகுமிடங்களுக்கு அனுப்ப ரெயில் கூலி குறைவாகவேயிருக்கவேண்டும்.

தவிரவும் காய்கறிகள், பழவர்க்கங்கள் முதலியன நகரங்களுக்கு அனுப்புவதற்கு ரெயில் கூலி சகாயமாயிருத்தல் அவசியம்.

ஓரிடத் தொழிற் செறிவுக்கு சீதோஷ்ண நிலையும் ஒரு முக்கிய காரணமாகிறது. இதற்கு உதாரணமாக லங்கஷார் பஞ்சுநெசவுத் தொழிற்சாலைகளும், அமெரிக்காவிலுள்ள காலிபோர்னியா சலனப்படத் தொழிலையும் எடுத்துக் கூறலாம்.

கைத்தொழில்கள் ஓரிடத்தில் சேர்ந்திருப்பதால் அநேக அனுகூலங்கள் உண்டாகின்றன :—(1) ஒரு தொழில் ஒரே இடத்தில் பல காலமாக நடந்து வருவதால் அத்தொழிலுக்கு கௌரவம் ஏற்படுகிறது. அத்தொழிலின் பொருள்களுக்கு ஒரு கீர்த்தி ஏற்படுகிறது. டாக்கா (Dacca) மஸ்லின்களும், காஷ்மீர் கம்பளிப்போர்வைகளும் ஷெவ்வீல்ட் (Sheffield) வெட்டுக் கருவிகளும் இத்தன்மையாலே மேன்மையாக விளங்குகின்றன. (2) கைதேர்ந்த வேலைக்காரர்களுக்கு ஒரு பெரிய அனுகூலமாயிருக்கிறது. பெரிய தொழிற்சாலைகள் அமைந்திருக்கும் இடங்களில் சென்று தங்கள் திறமைக்குத்தக்க வேலைகளில் அமர்ந்து கொள்ளலாம். தவிரவும் ஓரிடத்தில் வேலைக்காரர்கள் வேலை செய்வதால் அவர்களின் திறமை பரம்பரையாக ஏற்படுவதற்குள்ள வசதிகள் உண்டாகின்றன. வேலைக்காரர்களின் மக்கள் தினசரிப் பழக்கத்தால் தங்கள் பெரியோர் செய்யும் வேலைகளின் நுட்பங்களைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். (3) பெரிய தொழில்கள் ஓரிடத்தில் சேர்ந்திருப்பதால் அவைகளுக்கு அனுகூலமாக உபதொழில்கள் அநேகம் ஏற்படுகின்றன. பெரிய தொழில்களின் உபபொருள்கள் வீணாகாமல் வேறு சில சிறிய தொழில்களுக்கு உபயோகப்பட்டுவருகின்றன.

ஓரிடத் தொழிற் செறிவினால் உண்டாகும் சில அசௌகர்யங்களைக் கவனிப்போம். (1) ஓரிடத்தில் கைத்தொழில்கள் அமைவதால் அத்தொழிலுக் குரியவர்களுக்குமட்டும் வேலை கிடைக்கிறது. உதாரணமாக இரும்புத் தொழிற்சாலைகள் ஓரிடத்தில் சேர்ந்திருப்பதால் தேகபலமுள்ள வேலைக்காரர்களுக்குமட்டுமே வேலை கிடைக்கிறது. அவ்வேலைக்காரரைச்

சேர்ந்த பெண்பிள்ளைகளுக்கும் வாலிபருக்கும் வேலையில்லாம லிருக்கிறது. ஒருவர் சம்பாத்தியத்தை வைத்துப் பலர் ஜீவனம் பண்ணும்படி ஏற்படுறது. இவ்வித இடையூறுகளை நீக்க சில சேர்க்கைத் தொழில்களும் நடத்துவது வழக்கம். (2) கைத் தொழில்கள் ஓரிடத்தில் சேர்ந்திருப்பதால் அவ்விடத்தில் ஜன நெருக்கம் அதிகப்படுகிறது; நிலப்பிரீயம் ஏற்படுகிறது; விலை வாசிகளும் கூடுகின்றன. கைத்தொழில்களுக்குத் தளர்ச்சி ஏற் படும்கால் தொழிலாளரில் அநேகர் வேலையிலிருந்து நீக்கப்படுகிறார் கள். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகப்படுகிறது. இதற் காகவே ஓரிடத்தில் பலவிதமான தொழில்கள் அமைந்திருப்பது நலமாகக் கருதப்படுகிறது.

இக்காலத்தில் போக்குவரவு வசதிகளினாலும், மின்சாரச் சக்தியினாலும் கைத்தொழில்கள் ஓரிடத்தில் சேர்ந்திருப்பதை விட சௌகரியமாக வெவ்வேறு இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

X

இயந்திர சக்தியின் மூலாதாரங்கள்

(SOURCES OF MECHANICAL POWER)

முதலில் எல்லாச் சக்திக்கும் மனிதனுடைய தேகபலமே மூலாதாரமாயிருந்தது. பண்டைக்காலத்தில் கைத்தொழில்கள் தேசிய முறையில் கைப்பிரயோகத்தால் நடத்தப்பட்டு வந்தன. இக்காலத்தில் அநேக வேலைகள் இயந்திரங்களால் செய்யப்பட்டு வருகின்றன. கைகளால் செய்யும் வேலைகள் குறைந்துகொண்டே வருகின்றன. இந்தியாவில் கைவேலைத் தொழில்கள் இயந்திரங்களினால் செய்யப்படும் பொருள்களுடன் போட்டி போடமுடியவில்லை. முதலில் உழவுக்கும் போக்குவரவுச் சாதனங்களுக்கும் விலங்குகள் உபயோகப்பட்டன. அநேக காலங்களாகக் காற்றினாலும், ஜலத்தினாலும் உண்டாகும் சக்தியும் உபயோகப்பட்டு வந்தது. இதற்கு உதாரணமாகப் பாய் மரக்கப்பல்களும், காற்றினால் இயக்கப்படும் இயந்திரங்களையும் எடுத்துக் கூறலாம். ஆனால் அவைகளின் சக்திக்கு அதிக வேகம் கிடையாது.

(1) **மின்சாரம்:** இயந்திரங்களை இயக்க நீர்வீழ்ச்சியின் சக்தி உபயோகப்பட்டு வருகிறது. ஆனால் அப்பேர்ப்பட்ட சக்தி பள்ளத்தாக்குகளிலுள்ள நீர்வீழ்ச்சிகளிலாவது அல்லது மலையடிவாரத்திலுள்ள நதிப்போக்குகளிலாவதுதான் கிடைக்கின்றது. கைத்தொழில்கள் முதல் முதல் நீர்வீழ்ச்சியுள்ள இடங்களில் அமைந்தன. மின்சாரசக்தி கண்டுபிடிக்கப்பட்டது முதல் நீர்வீழ்ச்சியில்லாத இடங்களிலும்கூட கைத்தொழில்கள் ஏற்பட்டு மின்சார சக்தியினால் நடைபெற்று வருகின்றன. நார்வே தேசத்திலுள்ள தொழிற்சாலைகள் நீர்வீழ்ச்சியினால் உண்டாகும் மின்சார சக்தியைக்கொண்டு விருத்தியடைந்து வருகின்றன. ரெயில்வண்டிகள் ஓடுவதற்கும் மின்சாரசக்தி உபயோகப்படுகிறது. ஸ்விட்ஸர்லண்டு, கனடா தேசங்களில் நீர்வீழ்ச்சியினால் இயக்கப்படும் இயந்திரங்கள் மூலமாய் மின்சாரசக்தி உண்டாக்கப்பெற்று அதன் மூலமாய்க் கைத்தொழில்கள் நடந்து வருகின்

றன. தென் இந்தியாவில் உபயோகப்பட்டு வரும் மின்சாரசக்தி பைக்காராவிலிருந்தும், சில சமுத்திரத்திலிருந்தும் உற்பத்தியாகிறது. தற்காலத்தில் உலகத்திலுள்ள நீர்சக்தி 500,000,000 குதிரைத் திறனுக (horse-power) மதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதில் 7 சதவீதம்தான் உபயோகப்பட்டு வருகிறது.

(2) **நிலக்கரி:** ஆதிகால முதல் மரக்கட்டைகளே எரிப்பதற்கு உபயோகப்பட்டு வருகின்றன. 18-வது நூற்றுண்டின் இறுதியில் தொடங்கிய தொழிற் புரட்சிக் காலமுதல் நிலக்கரி பெருவீத தொழில்களில் உபயோகப்பட்டு வருகிறது. அநேக தேசத்தாருக்கும் தற்காலத்தில் நிலக்கரி வேண்டியிருக்கிறது. நிலக்கரியில் இருவகை கவனிக்கத்தக்கது—அனல் மலிநிலக்கரி (anthracite coal), புகைமலி நிலக்கரி (bituminous coal). அனல்மலி நிலக்கரி அதிகக் கரிச்சத்துள்ளதாகையால் அதிக உஷ்ணம் வேண்டிய வேலைகளுக்கு உபயோகப்பட்டுவருகிறது. புகைமலி நிலக்கரி அவ்வளவு கரிச்சத்துள்ளதல்ல. ஆனல் அதிகக் கரியெண்ணெயும் கரியாவியும் உள்ளது. நல்ல பிரகாசமான சுடராக எரியத்தக்கது.

நிலக்கரியை லாபகரமாகச் சில விஷயங்களில்தான் உபயோகிக்கமுடியும். அதிக ஆழமுள்ள நிலக்கரிச் சுரங்கம் 4,000 அடி ஆழமுள்ளது. நிலக்கரிக்களங்களைச் சரியானபடி பிரயோஜனப்படுத்தப் போதுமான வேலையாட்களும், போக்குவரவு சாதனங்களும் வேண்டும். இக்காலத்தில் வெட்டியெடுக்கப்படும் நிலக்கரியில் சராசரி 100-க்கு 25 வீணுகின்றது. நிலக்கரி உற்பத்தியாகும் தேசங்களாவன—வட அமெரிக்கா ஐக்கிய நாடுகள், பிரிட்டன், ஜெர்மனி (ஸார் நிலக்கரிக்களங்கள்), பிரான்ஸ், பெல்ஜியம், ருஷியா, இந்தியா. இந்தியாவின் விளைவு அதிகரித்துக்கொண்டு வருகிறது. தென் அமெரிக்காவில் நிலக்கரி சொற்பமாயிருப்பதால் அக்கண்டத்துத் தேசங்களின் கைத்தொழில்கள் மேன்மையடையவில்லை.


(3) **மண்ணெண்ணெய்:** இதுவும், இதன் சிலபொருள்களும் வழுக்குப்பொருள்களாகவும், வெளிச்சம் கொடுக்கும்

பொருள்களாகவும், எரிப்பதற்கும் உபயோகப்பட்டுவருகின்றன. பெட்ரோல் (petrol) மண்ணெண்ணெயிலிருந்து சுத்தப்படுத்தி எடுக்கப்படும் எண்ணை. இது மோட்டார் வண்டிகளுக்கும் ஆகாயக் கப்பல்களுக்கும் உபயோகப்படுகிறது. மண்ணெண்ணெயிலிருந்து அநேக பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.

மண்ணெண்ணெய் குழாய் வழியாக வெகுதூரம் கொண்டு போகப்பட்டுக் கடைசியில் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதியாகின்றது. மண்ணெண்ணெய் களங்கள் காணப்படும் முக்கிய தேசங்களாவன—அமெரிக்கா ஐக்கிய நாடுகள் (60%); ருஷியா (9%), வினிஸீலா (Venezuela) (9%); மெக்ஸிகோ; டச்சு கிழக்கு இந்தியா; பர்மா; பெர்ஷியா (Persia).

(4) சாராயம் (alcohol) சக்தி உண்டாக்கும் மூலாதாரங்களில் சாராயம் மிகவும் முக்கிய ஸ்தானம் பெறக்கூடியதாகக் கருதப்படுகிறது. விலைக்குறைவால் பெட்ரோலுக்குப் பதிலாக உபயோகப்பட்டு வருகிறது. அநேக தாவரப் பொருள்களிலிருந்து சாராயம் உண்டாக்கப்படுகிறது.

சமுத்திரத்தின் உப்பற் சக்தியும், ஸஹாரா பிரதேசத்திலுள்ள சூரியவெப்பமும் மின்சக்தி உண்டாக்குவதற்குள்ள மூலாதாரங்களாகக் கருதப்படுகிறது.



XI

தொழிலாளிகளின் நிலைமை

இந்தியாவில் பொறித்தொழின்மை (Industrialism) சென்ற 50 வருஷங்களாக அதிகரித்து வருகிறது. பன்னாட்டு கூலியாட்கள் சங்கத்தின் ஆளுகைக் கமிட்டியில் இந்தியாவுக்கு ஒரு பிரதிநிதி கொடுக்கப்பட்டிருக்கிறது. பொறித்தொழில்களில் மேன்மையடைந்த தேசங்களில் இந்தியா 6-வது அல்லது 7-வது ஸ்தானம் பெற்றிருக்கிறது. மேன்மேலும் இந்தியா ஒரு பெரிய கைத்தொழில் தேசமாகுமென்பது அநேகர் அபிப்பிராயம். மின் சக்தி ஆதாரங்கள், மூலப்பொருள்கள், ஏராளமான கூலிவேலைக் காரர் முதலியன இந்தியாவில் குறைவில்லாமல் கிடைக்கின்றன. தவிரவும் உண்டாக்கப்படும் பொருள்களுக்கு விற்பனைக்கு வேண் டிய சாதனங்களிருக்கின்றன. ஸ்வதேசியமுதலும், பிரவர்த்தியும் கொஞ்சக் காலமாகத் தேசத்தின் பொறித்தொழில், வாணிபம் முதலியவற்றில் ஈடுபட்டு வருகிறது. ஜனகாரமும் அதிகரித்து வருகிறது. அதனால் பண்படுத்திவரும் நிலத்தைவைத்து ஜீவிக் கும் ஜனகாரம் அதிகமாயிருக்கிறது. ஸ்வதேசியக் கைத்தொழில் கள் பொறித் தொழில்களுடன் போட்டி போடுவதில் சக்தி யற்றனவாயிருக்கின்றன. இக்காரணங்களால் இக்கால பொறித் தொழில்கள் இந்தியாவுக்கு இன்றியமையாதது.

இந்தியாவில் பொறித்தொழில்கள் சில மாகாணங்களில் பெரிய நகரங்களுக்குச் சமீபமாய் அமைந்திருக்கின்றன. கைத் தொழில்கள் பெருகிக்கொண்டு வருவதால் சிறிய நகரங்களிலும், இந்தியத் தனியாட்சி நாடுகளிலும் பரவிக்கொண்டு வருகின்றன. பெரிய கைத்தொழில்களில் வேலை செய்பவர் மிகவும் குறை வாகவேயிருக்கின்றனர். தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களி லும், தோட்டப்பயிர் (plantations) களிலும் வேலை செய்வோர் ஐம்பது லட்சமாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றனர்.

இந்தியாவில் பெரும்பாலோரின் தொழில் விவஸாயம். வருஷம் பூராவும் விவஸாயிகளுக்கு வேலையில்லை. நிலம் இல்லாதவர்களும் கொஞ்சம் நிலம் உள்ளவர்களும் பிழைப்பதற்காக நகரங்களிற் சென்று குடியேறுகின்றனர். மழைபெய்து செழிப்பு ஏற்பட்டால் ஒரு சாரார் திரும்பவும் கிராமங்களுக்குச்சென்று விவஸாயத்தைக் கவனிக்கிறார்கள். தொழிற்சாலைகள் பெருகவே தொழிலாளர் நிலைமை அபிவிருத்தி அடையவேண்டுமென்ற உணர்ச்சி ஏற்பட்டது. முதல் தொழிற்சாலைச்சட்டம் (Factory Act) 1881-ம் வருஷம் உண்டாக்கப்பட்டது. இதன் மூலம் வேலைநேரம் 9 மணி; வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை; அபாய மேற்படாமல் இருக்கப் பாதுகாப்பு; ஏழு வயதிற்குட்பட்ட குழந்தைகளை வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடாதென்ற நிர்ணயம் ஏற்பட்டது. ஆனால் தொழிலாளர்களின் நிலைமை உயர்ந்துவிடவில்லை. மேலும் மேலும் கிளர்ச்சி செய்யவேண்டிய அவசியம் இருந்தது. சந்தர்ப்பம் ஏற்பட்ட சமயங்களிலெல்லாம் கிளர்ச்சி செய்ய ஆரம்பிக்கவே 1881-ல் ஏற்பட்ட சட்டம் பல கமிஷன்களின் சிபார்சுகளின் பேரில் 1889-ம், 1911-ம் வருஷங்களில் திருத்தியமைக்கப்பட்டு பலத்த எதிர்ப்புக்களின் மத்தியில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

தொழிற்சாலைச்சட்டம் அமுலுக்கு வரவேண்டிய சமயத்தில் ஐரோப்பிய மகாயுத்தம் 1914-ல் ஆரம்பமாயிற்று. யுத்தம் ஆரம்பமாகவே உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைத்தது. தேவையும் அதிகம் ஏற்பட்டது. யுத்ததேவைகளைப் பூர்த்திசெய்யத் தொழிற்சாலைகளை அதிகரிக்க வேண்டியதாயிற்று. தொழிற்சாலைகள் அதிகமாயின. விவஸாயப்பண்டங்களுக்கும் அதிகத் தேவை ஏற்பட்டது. தொழிற்சாலைகள் அதிகரிக்கவே அதிகத் தொழிலாளர்களை அமர்த்தவேண்டியதாயிற்று. ஆனால் போதுமான தொழிலாளர்கள் கிடைப்பது அரிதாயிற்று. தொழிலாளர்கள் அதிகச் சம்பளத்திற்காக முதன்முதலாகக் கட்டுப்பாடான கிளர்ச்சிகள் செய்தார்கள். லாபத்தைக்கருதிய முதலாளிகள் வேலை நிறுத்தங்களை நீடிக்கவிடாமல் அதிகச் சம்பளங்களைக் கொடுத்துத் தடுத்துவிட்டார்கள். யுத்தம் நின்றவுடனே சம்பளத்

தைக் குறைக்க ஆரம்பித்தார்கள். இந்தக் காலத்தில்தான் தொழிலாளர்களும் தொழிற் சங்கங்களின் அவசியத்தை உணர்ந்தார்கள்.

மகாயுத்தத்திற்குப் பின்னால் தொழிலாளர் நிலைமையைச் சீர்திருத்த 1919-ம் வருஷத்தில் வாஷிங்டன் (Washington) நகரில் அகில உலகத்தொழிலாளர் மகாநாடு நடந்தது. அதில் இந்தியாவும் பங்கெடுத்துக்கொண்டது. இதன் காரணமாக இந்தியத் தொழிற்சாலைகளில் வேலைநேரம் 10 மணியாகவும், பெண்களுக்குப் பிரசவகால சகாயமும், இரவு வேலை இருக்கக்கூடாதென்றும் முடிவு செய்தார்கள். வேலைநேரம் குறையவே சம்பளமும் குறைந்தது. அகவிலையும் அதிகரித்தது. உடனே நெருக்கடியும் எற்பட்டது. தொழிலாளர்கள் ஆமதாபாத் பம்பாய் முதலான இடங்களில் கிளர்ச்சிகள் உண்டாக்கவே அரசாங்கத்தார் தலையிட்டு வசதிகள் செய்து கொடுப்பதாக வாக்களித்தனர்.

அரசாங்கத்தார் லேபர் டிபார்ட்மெண்ட் (Labour Department) ஒன்றை எற்படுத்தி, தொழிலாளர் நிலைமையைப் பரிசீலனை செய்து மத்திய கவர்ன்மெண்டார் லேபர் டிபார்ட்மெண்டின் சிபார்சுகளை வைத்துக்கொண்டு 1911-ம் வருஷத்திய தொழிற்சாலைச் சட்டத்தைத் திருத்தி 1922-ம் வருஷம் புதுச்சட்டம் நிறைவேற்றினார்கள். தொழிற்சாலைச் (factory) சட்டத்தின் கீழ் எற்படும் குற்றங்களைக் கண்டிக்கவும், தொழிலாளர் குறைகளைக் கவனிக்கவும் லேபர் ஆபீஸரும் (Labour Officer) நியமிக்கப்பட்டார். இதற்குப்பின்னர் தொழிற்சாலைகள் அதிகரிக்கவே மேற்படி சட்டத்தில் 1923, 1926, 1931 ஆகிய வருஷங்களில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. தவறுகளைக் கண்டிக்கவும், சீர்திருத்தவும் தொழிற்சாலைப் பார்வையாளர்களையும் அதிகப்படியாக நியமனம் செய்தார்கள்.

தொழில் அபிவிருத்தி அடையத் தொழிற்சங்க அவசியமும் தொழிலாளர் குறைகளை நிவர்த்திசெய்யச் சட்டங்களின் அவசியமும் எற்பட்டது. தொழிலாளர்கள் கட்டுப்பாடான இயக்கத்தைச் சட்ட வரம்பிற்குட்பட்டு நடத்த 1926-ம் வருஷம் தொழிற் சங்கச் சட்டம் நிறைவேற்றினார்கள். படிப்படியாக

அநேக சட்டங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள். 1929-ல் தொழிற் சச்சரவுச் சட்டமும் ஏற்பட்டது.

தொழிற்சாலைகளில் (Factories) கூலிவேலைக்காக வரும் குழந்தைகளுக்கு வயது நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது. இரவில் வேலை செய்யக்கூடாது. சிறுவர்கள் சுரங்கங்களிலும் வேலை செய்யக்கூடாது. தொழிற்சாலைகளில் சிறுவர்கள் எத்தனை மணி நேரம் வேலை செய்யலாமென்பதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களைத் தொழிற்சாலைகளில் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளக்கூடாது. இந்தியத் தொழிற்சாலைகளில் 12-ம், 15-ம் வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பெரியோர்களுக்கு ஏற்பட்ட நேரத்தில் பாதிநேரம்தான் வேலை செய்யலாம். 15-ம், 17-ம் வயதுக்குட்பட்டவர் பெரியவர்களுக்குச் சமமாகவாவது அல்லது பூமியின் அடியில் செய்யும் வேலைகளுக்காவது ஏற்றுக் கொள்வதில்லை. 1929-ம் வருஷம் முதல் பெண்பிள்ளைகள் சுரங்கங்களில் தரைக்குள்ளே வேலை செய்யக்கூடாது. வேலையால் நஷ்ட ஈடு, சமூக இன்ஷூரன்ஸ், வேலையின்மை இன்ஷூரன்ஸ் முதலியன இன்னும் சரியானபடி ஏற்படவில்லை.

கூலி நிமித்தமாகச் சில சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வங்காள மாகாணத்தில் சவுக்கார்கள் வேலையாட்கள் கூலி வாங்கும் தினத்தில் சட்டப்படி தங்கள் கடனை வசூல் செய்யக்கூடாது. சில மாகாணங்களில் தாழ்ந்த கூலி (minimum wage) சட்டப்படி விதிப்பதற்காக வேண்டிய சாதனங்களிருக்கின்றன. தொழிலாளர் சங்கங்கள் சரியானபடி விருத்தியாகவில்லை. ஆகையால் தொழிலின் முறை வியவஹாரங்கள் சரியானபடி ஏற்படுத்துவதில் அதிக சிக்கல்களிருக்கின்றன. இருந்தாலும் தொழிலாளர் சங்கங்களின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது. தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் ஏற்படும் வியவஹாரங்களைத் தீர்ப்பதற்கு வேண்டிய மத்யஸ்த கழகமும் இணங்கச்செய்யும் கழகமும் இன்னும் ஆரம்ப நிலைமையில்தான் இருக்கின்றன. பன்னாட்டுத் தொழிலாளி சம்பந்தமான ஸ்தாபன (International Labour Organisation) மூலமாய் அநேக சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருக்

கின்றன. தோட்டப்பயிர் (Plantations) சம்பந்தமாக முதல் சட்ட நிருபணம் 1863-ம் வருஷம் இயற்றப்பட்டது. 1881-ம் வருஷம் முதல் தொழிற்சாலைச் சட்ட நிருபணமும்; 1901-ம் வருஷம் சுரங்கங்கள் சம்பந்தமான சட்டமும்; 1919-ம் வருஷம் அதன் விஷயமாகச் சில முக்கியத் திருத்தங்களும் இயற்றப்பட்டன. 1936-ம் வருஷத்தில் பன்னாட்டுத் தொழிலாளி ஆபீஸ் (International Labour Office) வழக்காறுகளில் 14 வழக்காறுகளை இந்திய கவர்ன்மெண்ட் அமுலுக்குக் கொண்டுவந்தனர். ஆனால் இம்மாதிரியாக அமுலுக்குக் கொண்டுவருவதில் இரண்டு தடங்கல்கள் இருக்கின்றன—முதலாவது இந்தியாவுக்குச் சில வழக்காறுகள் பொருத்தமில்லை; இரண்டாவது இந்திய சுய ஆட்சி நாடுகளிலுள்ள கூலி வேலைக்காரர்களுக்கு இவ்வழக்காறுகளை ஊர்ஜிதத்தில் கொண்டு வரமுடியவில்லை.

இயந்திரங்களினால் செய்யப்பட்ட பொருள்களின் போட்டியினால் அநேக சிற்பிகள் விவசாயத்தொழிலைக் கைப்பற்றும்படி ஏற்பட்டன. 1891-ம் வருஷத்தின் குடிமதிப்புப்படி 100-க்கு 62 நபர் நிலத்தை வைத்துப் பிழைப்பவர்களாகக் கணக்கிடப்பட்டனர்; 1901-ல் 100-க்கு 68; 1911-ல் 100-க்கு 72; 1921-ல் 100-க்கு 73; மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 90 பெயர்கள் கிராமவாசிகளாகயிருக்கிறார்கள்—கீழ்க் குறிப்பிட்ட தொகைகள் கவனிக்கத்தக்கவை:

	1891	1901	1911	1921	1931
நாட்டுப்புறம் (Rural)	90·5	90·1	90·5	89·8	89[illegible]
நகரப்புறம் (Urban)	9·5	9·9	9·5	10·2	11[illegible]

நகரங்கள் விருத்தியாவதும், கிராமங்கள் குறைவதும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எண்ணம்	1891	1901	1911	1921	1931
கிராமங்கள்	713,925	728,605	720,342	685,622	—
நகரங்கள்	2,034	2,145	2,150	2,313.	—

XII

உலகப்போக்குவரவு, அறிவிப்புச் சாதனங்கள்
(WORLD-TRANSPORT & COMMUNICATIONS)

போக்குவரவு சாதனங்களினால் வர்த்தகம் விர்த்தியடைகிறது. சரக்குகளை உற்பத்தியாகுமிடங்களிலிருந்து உண்ணுமிடங்களுக்குக் கொண்டுபோகப் போக்குவரவு வசதிகள் முக்கியம். ஜனங்களின் வாழ்க்கைப் போராட்டத்திற்கும் போக்குவரவு சாதனங்கள் அவசியமான உபாயங்களாயிருக்கின்றன. அறிவிப்புச் சாதனங்களாகிய டெலிபோன், தந்தி முதலியன வியாபார விரிவுக்கு முக்கியக் கருவிகளாயிருக்கின்றன. எல்லாத் தேசங்களிலும் விளையும் பொருள்களின் விலைகளை எளிதில் தெரிந்து கொள்ளுகிறோம். தானியங்கள் அறுவடையாவதற்கு முன் தந்தி தபால் மூலமாய் விலைபேசி முடிப்பது சுலபமாயிருக்கிறது. கனடாவின் கோதுமையும், அமெரிக்காவின் பருத்தியும், இந்தியாவின் எண்ணெய் வித்துக்களும் இம்மாதிரியே உலக வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்றன. பன்னாட்டு வியாபாரம் முன்னேற்றமடைந்திருப்பதற்கு முக்கிய காரணம் இக்காலப் போக்குவரவு வசதிகளேயாம். பல தேசத்தாரும் தம் நாட்டில் விளையாப்பொருள்களை மற்ற தேசங்களிலிருந்து சீக்கிரமாயும் குறைந்த விலைக்கும் பெற்றுக்கொள்வதற்குப் போக்குவரவு வசதிகளே ஒரு முக்கிய காரணம்.

சீதோஷ்ண நிலையும் போக்குவரவு சாதனங்களும்

ஒரு பிரதேசத்தின் வண்டிகளின் அமைப்பு, அவைகள் ஓடுவதற்கு வேண்டிய சக்தி முதலியன அப்பிரதேசத்தின் வெப்ப நிலை, காற்று, ஈரப்பதன் முதலியவைகளைப் பொருத்திருக்கிறது. குளிர்ச்சியான துந்திராப் பிரதேசத்தில் பனி உறைந்திருப்பதால் பனிக்கட்டியின் மீது சக்கரமில்லாத வண்டிகளை (sledges) உபயோகிக்கின்றனர். துந்திராப் பிரதேசத்திற்குத்

தெற்கில் ஊசி இலை மரக்காடுகள் இருக்கின்றன. ஆறுகளாலும் மற்றெவ்வகையாலும் போக்குவரவுக்குரிய வசதிகளைப் பெற்றிராததால் காட்டிலுள்ள மரங்கள் வெட்டப்படவில்லை. இக்காலத்தில் ரோடுகள், ரெயில்பாதைகள் கால்வாய்கள் முதலியன வாயு நூல் (meteorology) கட்டிட நூல் (engineering) ஒருமைநிலை முறையை அநுசரித்துச் சீதோஷ்ண நிலைக்குத் தக்கவாறு அமைக்கப்பட்டுவருகின்றன. லண்டன் நகரத்தில் அடர்ந்த மூடுபனியால் போக்குவரவுக்கு ஒரு நாளில் அநேக லட்சம் பவுன் நஷ்டமாகிறது. ரெயில்களுக்கும் மூடுபனிகாலத்தில் அதிகச் செலவு ஏற்படுகிறது. வெண்பனி வீழ்ச்சியுள்ள மிதவெப்ப உள்நாட்டுப் பிரதேசங்களில் (கனடாவில் ராக்கீஸ் மலைப்பிரதேசம், ஸ்விட்ஸர்லண்ட்) ரெயில்வண்டிகளுக்குப் பனிப்பாறை வீழ்ச்சியால் இடையூறு ஏற்படாமலிருப்பதற்குப் பாதுகாப்புக் கருவிகள் அமைக்கவேண்டியிருக்கிறது.

மரங்கள் வெட்டுதல் லாபகரமாயிருக்கிறதற்குப் போதுமான கூலி வேலைக்காரர்தவிர அவைகளை எடுத்துச்செல்லும் சத்தம் குறைவாகவேயிருக்கவேண்டும். கனடாவில் வெட்டியமரங்கள் பனி உறைந்த நதிகளின் வழியாய்ச் சரசமாய்க் கொண்டுபோகப் படுகின்றன. வட அமெரிக்காவின் பெரிய இயற்கை ஏரிகளிலும், பால்டிக் கடலிலும் மாரிகாலத்தில் பனியை உடைக்கக் கூடிய தோணிகளை உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது. அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் குறுக்காகச் செல்லும் கப்பல்கள் பிப்ரவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரை மிதக்கும் பனிக்குன்றுகளாலும், மூடுபனியாலும் ஏற்படும் அபாயத்திற்குட்படாமலிருப்பதற்காகத் தென்திசையாகவே செல்லுகின்றன. நியூ பிரன்ஸ்விக் (New Brunswick) நோவா ஸ்கோஷியா (Nova Scotia) முதலிய நாடுகளில் வெட்டப்படும் மரங்கள் ஹாலிபாக் (Halifax) துறைமுகம் வழியாக ஏற்றுமதியாகிறது. ஏனென்றால் செயிண்டு லாரன்ஸ் நதிப்பிரதேசத்தில் கோடை காலத்தில் பனிக்கட்டி உருகுவதால் சிறு நதிகள் போக்குவரவுக்கு மிகவும் சாதகமாயிருக்கின்றன. கோடைகாலத்தில் இந்நதிகள் வழியாகச் சிறு படகுகளில் எங்கும் செல்லலாம். ஐரோப்பாவின் வட

பாகத்தில் பால்டிக் துறைமுகங்கள் நவம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம்வரை பனியால் மூடப்பட்டிருக்கின்றன. அக்காலங்களில் தோணிகளுக்குப் பதிலாகச் சக்கரமில்லாத வண்டிகள் உபயோகப்படுகின்றன.

அயனந்தப்பிரதேசங்களிலும் அவைகளை அடுத்த பிரதேசங்களிலும் உறைபனியாலும், வெண்பனியாலும் போக்குவரவு சாதனங்களுக்கு அவ்வளவு இடையூறு நேரிடுவதில்லை. இப்பிரதேசங்களில் பருவக்காலங்களிற் பெய்யும் மழையால் போக்குவரவுக்கு அநேக இடையூறுகள் ஏற்படுகின்றன. இந்தியாவில் மழைக்காலங்களில் மாட்டுவண்டிகளுக்கு ரோடுகளில் பாரம் ஏற்றிச்செல்லுதல் அதிகச் சிரமமாயிருக்கிறது. ரெயில் பாதைகளும், ரோடுகளும் மழையினால் சேதப்படாமல் பாதுகாத்து வருகிறார்கள். வறண்ட பிரதேசங்களாகிய கிழக்கு ஆபிரிக்கா, ஈஜிப்த், வட மேற்கு அமெரிக்கா முதலியவற்றில் மணற்காற்றடிப்பதால் ரெயில் பாதைகளைப் பாதுகாப்பதற்கு ஏராளமான பணம் செலவழிகின்றது. ஆபிரிக்காவில் ஸஹாரா பாலைவனத்தில் சாத்துவணிக மார்க்கங்கள் நீர் ஊற்றுக்களுள்ள இடங்கள் வழியாய்ப் போகின்றன. ஆஸ்திரேலியாவில் குவின்ஸ்லந்திலிருந்து (Queensland) தென் ஆஸ்திரேலியாவுக்கு மாடுகள் போகும் மார்க்கங்கள் ஊற்றுக் கிணறுகளுள்ள இடங்களைச் சார்ந்திருக்கின்றன. இதனால் சில மார்க்கங்கள் எவ்வாறு ஜலவசதிகளுள்ள இடங்களைப் பொறுத்திருக்கிறதென்பதைத் தெரிவிக்கிறது. இதேமாதிரியாக உள்நாட்டு நீர்மார்க்கங்களின் உபயோகம் காலாகாலத்துப் பெய்யும் மழையின் அளவைப் பொறுத்திருக்கிறது. சில நதிகளில் பருவக்காலத்து வெள்ளத்தினால் அக்காலங்களில் போக்குவரவு வசதிகள் குறைந்துவிடுகின்றன. அப்பேர்ப்பட்ட நதிகளில் ஜலத்தைக் குறைப்பதற்கு அணைகள் கட்டவேண்டியதாயிருக்கிறது. ஆஸ்திரேலியாவில் மர்ரே, டார்லிங் நதிகளிலும் தென் ஆபிரிக்காவில் ஆரஞ்சு நதியிலும் ஜலம் அதிக மாறுபாடு அடைவதால் அவைகளில் கப்பல்கள் செல்லுவதற்குள்ள வசதிகள் குறைந்துவிடுகின்றன. இந்தியாவில் ஸிந்து நதியில் கப்பல்கள் போவதற்குள்ள அகலமிருந்தபோதிலும், அதன் கரைகள் மாறு

பாடு அடைவதாலும் மணல்மேடுகள் ஏற்படுவதாலும் கப்பல் போக்குவரத்துக்கு வேண்டிய சௌகரியமில்லாமலிருக்கிறது.

கடல்மேல் போக்குவரவு நிலத்தின் மேலுள்ள போக்கு வரவைவிட மழையையும் காற்றையும் பொறுத்திருக்கின்றது. கப்பல்களுக்குச் சீதோஷ்ண நிலையை அநுசரித்து நீர் மார்க்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இம்மார்க்கங்களை அநுசரிக்காவிட்டால் புயற்காற்றாலும், அடர்ந்த மூடுபனியாலும், பனிக்கட்டியினாலும் இடையூறுகள் ஏற்படுகின்றன. இயற்கையிலே உண்டாகும் விபத்துக்களை மனிதனால் மாற்றமுடியாதபோதிலும், கப்பல்களின் உருவங்களை அமைப்பதிலும், கப்பல்களை இயக்குவதிலும் அநேக சீர்திருத்தங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகத்தில் வழங்குகின்றன. அமெரிக்காக் கண்டம் சமீபகாலத்தில் கண்டுபிடிக்கப்பட்டதின் காரணங்களில் சில வாயுநூல் சார்பாயுள்ளதென்று சொல்லப்படுகிறது. அவையாவன:— (1) வட அட்லாண்டிக் சமுத்திரத்திலுள்ள பனி மூடிய நதிகளும், அடர்ந்த மூடுபனியும் (2) கொலம்பஸ் காலத்துக்கு முன்னுள்ள மாலுமிகள் வடகிழக்குக் காற்றுகளை எதிர்த்துப் போவதற்கு வேண்டிய கருவிகள் இல்லாமலிருந்தனர். இங்கிலீஷ் சானல் (English Channel) புயற்காற்றுக்குட்பட்டிருப்பதால் புகைக்கப்பல்கள் உபயோகத்தில் வரும்வரை இங்கிலாந்துக்கும் ஐரோப்பா தேசங்களுக்குமுள்ள வியாபாரம் குறைவாகவேயிருந்தது. பாய்மரக் கப்பல்கள் உபயோகப்பட்டுவரும் காலத்தில் கடல் மார்க்கங்களும், கடலில் போக்குவரத்தும் பருவக்காற்றின் போக்கை அநுசரித்திருந்தன. 18-வது நூற்றாண்டுவரை லண்டனிலிருந்து இந்தியாவுக்குச் செல்லும் கப்பல்களின் போக்குவரவு மார்க்கத்தையும், காலத்தையும் கவனிக்குங்கால் அவை இந்தியப் பருவக் காற்றை ஒட்டியிருந்தன. இக்காலத்தில் புகைக்கப்பல்கள் காற்றுகள் வீசும் திசைகளை அநுசரிக்காமல் செல்ல முடியும். ஆனால் அதிகச் செலவில்லாமலிருப்பதற்காகப் பெருங் காற்றுக்களை அநுசரித்துப் போகின்றன. துறை முகங்கள் வாயுநிலை வசதிகளைக் கவனித்து அமைக்கப்படுகின்றன.

ஸ்தல விவரம் போக்குவரவின் ஒரு அம்சம்
(Topography as a Factor in Transport)

போக்குவரவு சாதனங்களை அமைப்பதிலும், மார்க்கங்கள் தீர்மானிப்பதிலும் சீதோஷ்ண நிலையைவிட ஸ்தலவிவரம் முக்கிய மென்று சொல்லலாம். மணற்கரைகள், அமிழ்ந்த பாறைகள், கரையோரமுள்ள அகலம் முதலியன கடல்மேல் போக்குவரவுக்குக் கவனிக்கத்தக்கவை. உள்நாட்டு நீர் வழிகளில், விரைவிகள் (rapids) நீர்வீழ்ச்சிகள் முதலானவை ஜலமார்க்கப் பிரயாணத்திற்கு அதிக இடையூறு விளைவிக்கின்றன. அவைகளைத் தடுக்கக் கால்வாய்களும், தூர் எடுத்தலும், ஸ்தல அமைப்புக்குத் தக்க படித் தோணிகள் அமைத்தலும் அவசியம். தரையின் இயற்கை அமைப்பால் போக்குவரவு சாதனங்கள் வேறுபாடு அடைகின்றன. சமவெளிகளில் போக்குவரவு சுயேச்சையாகவும் சிரமமில்லாமலும் ஏற்படுகிறது. மலைப்பிரதேசங்களில் சுயேச்சையாக ஏற்றிச்செல்லல் அவ்வளவு சாத்தியமன்று. இதற்கு உதாரணமாக ஐரோப்பாவின் வடசமவெளியும், இந்தியாவில் ஹிமயமலைத் தொகுதியையும் எடுத்துக் கூறலாம். தென் அமெரிக்காவின் மத்திய ரேகைக் காடுகளும், பின்லெண்ட் தேசத்து ஏறிகளால் நிறைந்த சமவெளிகளும், பிளாரிடா (Florida) சதுப்பு நிலப் பள்ளத்தாக்குகளும் தரை மார்க்கங்களுக்குப் பெரிய தடங்கலாயிருக்கின்றன.

தாழ்நிலங்களிலும், மலைப்பிரதேசங்களிலும் நதிப்பள்ளத்தாக்குகள் நீர்வழிகளும், நிலவழிகளும் சேருவதற்குள்ள வசதிகளை உண்டாக்குகின்றன. உதாரணமாக ரெயின் (Rhine) டானியூப் (Danube) நதிகளின் பள்ளத்தாக்குகள் ஐரோப்பாவின் மேட்டுப் பிரதேசத்திலிருந்து முறையே வடக்காயும், தென் கிழக்காயும் சென்று, போக்குவரவு வசதிகள் ஏற்படுத்திக் கடைசியில் ரெயின் நதி வடகடற் பிரதேசத்துடன் சேருகிறது. ஆனல் டானியூப் முக்கியப் போக்குவரவு இடங்களைவிட்டுக் கருங் கடலிற் போய்ச்சேருகின்றது.

ஆகாயத்தின்மேல் போக்குவரவுத் தேசங்களின் இயற்கை அமைப்பைப் பொறுத்திருக்க வேண்டியதில்லையென்று நாம்

நினைக்கலாம். ஆனால் ஆகாயக்கப்பல்களுக்கு இறங்குவதற்குச் சமவெளிகள் அவசியம். வாயுநிலையும் அதிக மாறுபாடில்லாமலிருக்கவேண்டும். மலைப்பிரதேசங்களில் இவ்வித அம்சங்கள் கிடையாது. ஆகாயத்தின்மேல் போக்குவரவு ஜனங்கள், தபால்கள், மெல்லியதும் ஆனால் விலை உயர்ந்ததுமான சாமான்கள் முதலியன எடுத்துச்செல்ல வசதிகளுடைய ஜனநெருக்குள்ள தாழ்ந்த பிரதேசங்களில் அதிகமாகப் பெருகியிருக்கின்றன. வேண்டிய இடங்களில் போக்குவரவு பெருகுவதற்குத் தகுந்த நில அமைப்பு ஐரோப்பாவில் காணலாம். ஐரோப்பாவில் இயற்கையாயுள்ள மார்க்கங்கள் அட்லாண்டிக் சமுத்திரக் கரையோரம் வந்து கவிகின்றன. ஐரோப்பாவின் மலைத்தொகுதிகள் கிழக்கு மேற்குத் திசையாய்ப் போகின்றன. ஆல்ப்ஸ் மலைத்தொகுதியில் இயற்கையான கணவாய்களும், வழிகளும் அமைந்திருக்கின்றன. தவிரவும் மலையைக் குடைந்து செயற்கை வழிகள் மக்கள் முயற்சியால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஐரோப்பாவின் வடமேற்கிலுள்ள தாழ்நிலங்களில் அதிகக் கிளைகளுள்ள நதிகள் மெதுவாகச் செல்லுகின்றன. ஆகையால் 150,000 மைலுக்கு அந்நதிகள் மூலமாய் ஜெர்மனி, ஹாலண்ட், பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய தேசங்களில் கால்வாய்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஐரோப்பாவில் முக்கிய ரெயில்மார்க்கங்கள் உள்நாட்டு நீர்வழிகளுடன் ஒன்றுபட்டிருக்கின்றன.

உலகத்தில் இயற்கையிலும், மக்கள் பிரவர்த்தியினாலும் ஏற்பட்டிருக்கிற நேர்த்தியான நீர்வழிகள் வட அமெரிக்காவிற் காணலாம். செயிண்டு லாரன்ஸ் நீர்வழி 2,200 மைலுக்கு உள்நாட்டிற் புகுந்து, பொருளுற்பத்திக்கேற்ற சமவெளிகளை வட அட்லாண்டிக் சமுத்திரத்துடன் சேர்க்கிறது. மிஸிஸ்ஸிபி நதித்தொகுதிகள் 1,250 மைலுக்குப் பெரிய கப்பல்கள் போவதற்குள்ள வசதியுள்ளதாயிருக்கிறது. ஆனால் வியாபார முறையில் அவ்வளவு முக்கியமல்ல. ஏனென்றால் உள்நாட்டுப்பிரதேசங்களை அட்லாண்டிக் சமுத்திரக்கரையுடன் நன்றாகச் சேர்க்கவில்லை. ஐரோப்பாவில் டானியூப் நதியைப்போல், அமெரிக்காவில் மிஸிஸ்ஸிபிநதி பிரயோஜனமற்ற வழியாய் ஓடுகிறது. வட அமெரிக்காவின் கடற்கரையானது அக்கண்டத்தின் பரப்பள

வுடன் பார்க்குமிடத்துச் சுருக்கமாயும், வளைவற்றதாயுமிருப்பதாகக் கூறலாம். இயற்கையாய் அமைந்த துறைமுகங்கள் குறைவு. சிறந்த துறைமுகங்கள் கிழக்கு கடற்கரையிலிருக்கின்றன. அவ்விடத்தில் தாழ்நிலங்களும், பள்ளத்தாக்குகளும் சமுத்திரத்தால் தாக்கப்பட்டிருக்கின்றன. வட அமெரிக்காவின் நிலமார்க்கங்கள் அக்கண்டத்தின் மேற்கு, கிழக்குப் பக்கங்களில் முற்றுநிலையுறுகிறது.

தென் அமெரிக்காவின் இயற்கைத் தோற்றமும், நில அமைப்பும் அக்கண்டத்தின் நிலவழிகளைத் தென்வடலாக அமைத்திருக்கின்றன. இவ்வித அமைப்பை முக்கியமாக மேற்குப் பக்கத்தில் நன்றாகக் காணலாம். ஆண்டிஸ் மலைக்கும் கடற்கரையோரமுள்ள மலைத்தொடருக்கும் இடையேயுள்ள நெடும்பள்ளத்தாக்குகளின் வழியாய் ரெயில் பாதைகள் அமைந்திருக்கின்றன. ஆண்டிஸ் மலைத்தொடரை இரண்டு ரெயில்பாதைகள்தான் குறுக்கிட்டுப் போகின்றன. ஆர்ஜண்டினாவின் தாழ்ந்த பிரதேசங்களில் ரெயில்பாதைகள் அநேகம் இருக்கின்றன. இவ்விருப்புப் பாதைகள் பிளேட் நதியிலிருந்து வடமுகமாய்ச்சென்று, பரனா, உருகுவே, பராகுவே உள்நாட்டு நீர்வழிகளுக்கு அநுகூலமாயிருப்பதுடன், தென் முகமாய்ச் சென்று, தென்நாடுகளின் சமுத்திரப் போக்குவரவுக்கும் அநுகூலமாயிருக்கின்றன. வட அமெரிக்காவுடன் உற்று நோக்குமிடத்து, தென் அமெரிக்காவின் கடற்கரை தாழ்ந்ததாயும் அல்லது பாறைகளால் மூடப்பட்டதாயுமிருக்கிறது. ரியோ டெ ஜனிரோ (Rio de janero) வால்பரைஸோ (Valparaiso) காலோ (Calloo) முதலியன நேர்த்தியான துறைமுகங்களாயிருந்தபோதிலும் மலைகளால் தடுக்கப்பட்டிருக்கின்றன. ஆறுகளின் கடல்வாயிலுள்ள துறைமுகங்களாகிய போனஸ் அயிரஸ் (Buenos Ayres) மாண்டி விடியோ (Monte Video) குயாகுல் (Guayaquil) முதலியன மணற்கரைகளால் தாக்கப்படுகின்றன.

ஆசியாவின் இயற்கைத் தோற்றம் நிலவழிகளைக் கிழக்கு மேற்குத் திசையாகச் சைபீரியா, மஞ்சூரியா சமவெளிகள் வழியாயும், நதிப்பிரதேச வழியாயும் போகும்படி அமைத்திருக்

கின்றன. நீர்வழிகள் இந்திய பஸவிக் சமுத்திரங்களின் வழியாய்ச் செல்லுகின்றன. வட சமவெளிகள் பனியால் மூடப்பட்ட கடலை நோக்கிச் சரிகின்றன. ஆகையால் வடபக்கமாக ஓடும் நதிகள் உள்நாட்டு நீர்வழிகளாக உபயோகப்படவில்லை. மத்திய ஆசியாவைக் குறுக்கிடுகிற மடிப்பு மலைத்தொகுதிகள் சைபீரியாவின் வடபக்கத்து நிலத்தை அரேபியா, இந்தியா, சைனு தேசங்களின் சமவெளிகளிலிருந்து பிரிக்கிறது. ஆசியாவின் முக்கியமான பத்துத் துறைமுகங்களில் கல்கத்தா ஒன்றுதான் நதியின் முகத்துவாரத்திலிருக்கிறது. ஷான்கை (Shanghai) ரெங்கூன், கராச்சித் துறைமுகங்கள் ஆற்றின் கடல் வாயிலிருக்கின்றன. மற்ற ஆறு துறைமுகங்கள் (ஹாங்காங், கொழும்பு, கோப், யோக்கஹாம, சிங்கப்பூர், பம்பாய்) தரைக்குச் சமீபமாகிய தீவுகளில் அமைந்திருக்கின்றன.

ஆபிரிக்கா, ஆஸ்திரேலியாக் கண்டங்களின் இயற்கைத் தோற்றமும் அமைப்பும், அக்கண்டங்களில் துறைமுகங்களும், உள்நாட்டு நீர்வழிகளும், குறைந்திருப்பதற்கு முக்கிய காரணமாயிருக்கிறது. ஆபிரிக்கா அநேகமாய் ஒரு சம பீடபூமி. வடமேற்குப் பாகத்தில்தான் ஒரு மடிப்பு மலைத்தொகுதி இருக்கிறது. தென்மேற்கில் ஒரு சிறு மலைத்தொகுதி ஏற்பட்டிருப்பதால் அவ்விடம் வளைந்த கடற்கரையானது சில இயற்கைத் துறைமுகங்களுக்கு ஏதுவாயிருக்கிறது. (அல்ஜீர்ஸ், தூனிஸ், கேப் டவுன்). ஆபிரிக்காவிலுள்ள மற்றத் துறைமுகங்களில், சில தீவுகளின் பேரிலும், சில ஆற்றின் கடல்வாய்க்குச் சமீபத்திலும் இருக்கின்றன (அலெக்ஸாண்டிரியா, போர்ட்எலிஸபெத், மொம்பாஸா, போர்ட்ஸெயிட்). ஆபிரிக்காவின் நதிகளில் படகோடும் இடங்கள் நடு நீர் வீழ்ச்சிகளாலும், அருவிகளாலும் தடுக்கப்பட்டிருக்கின்றன. நெயில், காங்கோ நதிப்பிரதேசங்களில் ரெயில் பாதைகள் நீர் வீழ்ச்சிகளைச் சுற்றி வரும்படியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக ஆபிரிக்காவில் ரெயில் மார்க்கங்கள் நதித் தொகுதிகளுக்குச் சம்பந்தமில்லாமல் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆஸ்திரேலியாவை இயற்கையமைப்பின்படி மூன்று பெரிய பிரதேசங்களாகப் பிரிக்கலாம் :—கிழக்கேயுள்ள மலைப்பிரதேசம்;

மேற்கேயுள்ள பீடபூமிப் பிரதேசம்; மத்தியிலுள்ள சமவெளிப் பிரதேசம். ரோடுகள் கணவாய்கள் வழியாகவும், பள்ளத்தாக்குகள் சார்பாயும் அமைந்திருக்கின்றன. ரெயில் பாதைகளும் அதே வழியாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. கீழ் கடற்கரைக்கும், மேற்குக் கடற்கரைக்கும் சமீபத்திலுள்ள மலைப்பிரதேச வழியாய் ரெயில் பாதைகள் முதலில் அமைக்கவேண்டியிருந்ததால் அதிகப் பணச் செலவுள்ளதாயிருந்தன. மத்திய சமவெளிகள் வழியாகச் செல்லுகின்ற மர்ரே, டார்லிங் நதிகள் கப்பற் போக்குவரத்துக்கு அதிகப் பிரயோஜனமற்றவைகளாயிருக்கின்றன. ஆகையால் ஆஸ்திரேலியாவில், ஆபிரிக்காவைப்போல் கடல்வழி வணிகம் பொருளாதாரப் பெருக்கத்திற்கு இன்றியமையாததாயிருக்கிறது.

தாவர வர்க்கங்களும், விலங்கினங்களும் எவ்வாறு தரை மார்க்க சாதனங்களின் அம்சங்களாவன: (Plant and Animal Life as Factors in Land Transport):—

உலகத்திற் பல இடங்களில் சாமான்களை ஏற்றிச்செல்ல மனிதன் தாவர வர்க்கங்களையும், விலங்கினங்களையும் தன் பிரயோஜனத்திற்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. எல்லா இடங்களிலும் காடுகள் மனிதன் போக்குவரவுக்குப் பெரிய தடங்கலாயிருக்கின்றன. மிகு வெப்பமண்டலக் காடுகளில் பயிர் பச்சைகள் ஏராளமாயிருப்பதால் அவ்விடங்களில் போக்குவரவு வசதிகள் ஏற்படுத்துவது சுலபமான காரியமன்று. நடை பாதைகளும், ரெயில் பாதைகளும் மலைப்பிரதேசங்களில் அடிக்கடி மரம் செடிகளால் மூடப்படுவதால் அவைகளை அடிக்கடி நீக்கவேண்டியிருக்கிறது. நடை பாதைகள் சிலகாலம் உபயோகப்படாமலிருந்தால் பயிர் பச்சைகளால் மூடப்பட்டுவிடுகின்றன. மிதமண்டலக் காடுகளில் நடை பாதைகள் அமைப்பது அவ்வளவு கஷ்டமில்லை. மிகு வெப்ப மண்டலக் காடுகளைப்போலவே வறண்ட பிரதேசங்களிலுள்ள முள் காடுகளும், புதர்களும் போக்குவரவுக்கு வசதியற்றனவாயிருக்கின்றன. துந்திராப்பிரதேசத்தில் கற்பாசிகளும், குட்டைப் புதர்களும் தரையில் பூராவும் வியாபித்திருப்பதால் மனிதர் நடமாட முடியாத ஒரே சதுப்பு நிலமாயிருக்கின்றன.

பண்டைக்காலமுதல் மக்கள் விலங்குகளைப் பழக்கி வந்தனர். ஆதியில் விலங்குகளைப் பழக்குவதற்குமுன் மக்களே பொதிகளைச் சுமந்து வந்தனர். நியூகினி, ஆஸ்திரலேஷ்யா முதலிய இடங்களில் வெகுகாலமாக அத்தேசத்து ஜனங்களே தங்கள் பொதிகளைச் சுமந்து வந்தனர். பொதி சுமக்கும் தொழில் ஆதிகாலத்தில் பெண்டிரின் உரிமையாயிருந்தது. ஆபிரிக்காவில் வெகுகாலமாக மனிதரே பொதிசுமக்கும் பிராணிகளின் வேலையைச் செய்துவந்தனர். நீகிரோ போர்ட்டர்கள் 50 பவுண்டிலிருந்து 100 பவுண்டு கனமுள்ள தலைச்சுமைகளை ஒரு நாளைக்கு, 10 மைல் முதல் 20 மைல் வரை தூக்கிச் செல்லுகின்றனர். சைனு, ஜப்பான் தேசங்களில் ஜன நெருக்கமுள்ள இடங்களில் உணவுப்பொருள்கள் மக்களுக்கும், விலங்குகளுக்கும் போதாததால் தேயிலை, பட்டு முதலிய பொதிகளை மனிதரே வெகுதூரம் சுமந்து செல்லுகின்றனர். கைவண்டிகள் மனிதரால் இழுக்கப்படுகின்றது. இப்போக்குவரவு ஏராளமான கூலியாட்கள் உள்ள பிரதேசங்களில் பொதிசுமக்கும் விலங்குகளை விட இலாபகரமாயிருக்கிறது. முன்னேற்றமடைந்த தேசங்களில்கூட அநேக சாமான்களைத் தலைச்சுமையாக எடுத்துச் செல்லுகின்றனர். ரெயில்களில் சாமான்களை ஏற்றலும், இறக்கலும், வீடுகளுக்குத் தேவையான சாமான்களைக் கொண்டுபோய்க் கொடுத்தலும் கூலியாட்கள் மூலமாய் நடைபெறுகிறது.

விலங்குகளின் பரப்பு அவைகளின் உணவின் பரப்பைப் பொறுத்திருக்கிறது. பயிர் பச்சையும், அதற்கேற்ற சீதோஷ்ண நிலையும் விலங்கினங்களுக்கு முக்கியமாக வேண்டும். உலகத்திலுள்ள பெரும் இயற்கைப் பிரதேசங்களுக்குத் தக்கவாறு மிருகங்கள் அமைந்திருக்கின்றன. கொஞ்சம் வறண்ட புல் பிரதேசங்களில் ஒட்டகையும், துந்திரா சமவெளியில் கலைமானும், மிக வெப்பமண்டலக் காடுகளில் யானையும், பனியுள்ள மேட்டுப் பிரதேசங்களில் இலாமாவும், சடை எருமையும் காண்கிறோம். ஆனால் மனித முயற்சியால் சில விலங்குகளை அவைகளுக்கு இயற்கையாயுள்ள பிரதேசங்களிலிருந்து மற்றப் பிரதேசங்களுக்குக் கொண்டுவருகின்றனர். குதிரை, கழுதை, கோவேர்

கழுதை முதலிய விலங்குகள் ஆசியாக் கண்டத்தில் மேற்கு, தென் மேற்குப் பாகங்களில் இயற்கையாக வசிக்கும் மித மண்டலங்களிலும், வெப்ப மண்டலத்தைச் சார்ந்த புல்பிரதேசங்களிலுமிருந்து அவைகளுக்குச் சமீபமான பிரதேசங்களிலும் காணப்படுகின்றன. குதிரைகள் அதிக உஷ்ணமும், ஈரப்பதனுமுள்ள பிரதேசங்களில் வாழ்வதில்லை. அவைகள் குளிர்ந்த மித மண்டலக் காடுகளில் காணப்படுகின்றன. உலகத்திலுள்ள குதிரைகளில் 100-க்கு 20 தான் அயனுந்தப் பிரதேசங்களில் அதிக ஈரப்பதனில்லாத இடங்களில் காணப்படுகின்றன. கழுதை, கோவேர் கழுதை முதலிய இனங்கள் மலைப்பிரதேசங்களிலும் மித வெப்பப்பிரதேசங்களிலும் உபயோகப்பட்டுவருகின்றன. எருதும் அதன் இனத்தைச் சேர்ந்த சில பிராணிகளும் மிக வெப்பப் புல்பிரதேசங்களிலும், மித வெப்பப்பிரதேசங்களிலுள்ள விவசாய நிலங்களிலும் உபயோகப்பட்டு வருகின்றன. மக்களின் உபயோகத்திலிருக்கும் விலங்குகளும் அவைகளின் பரப்பும், பிரயோஜனமும், கீழ்க்கண்ட குறிப்புக்களால் விளக்கலாம்.

விலங்குகள் (Animals)	பரப்பு (Distribution)	குணத்தன்மையும், பிரயோஜனமும் (Characteristics and Utility)
குதிரை மட்டக்குதிரை (pony)	உலகத்தில் அகப்படும் இவ்விலங்குகளின் மதிப்பு 110 மிலியன்கள் ; அவற்றுள் ஈரேஷ்யா 45% ; வட அமெரிக்கா 26% ; தென் அமெரிக்கா 9% ; ஆஸ்திரேலியா 2% ; மிதமண்டலங்களும், ஐரோப்பியர் குடியேறிய பிரதேசங்களும்.	அதிக உஷ்ணமும், குளிர்ச்சியும், ஈரப்பதனும் பொறுக்காது ; தகுந்த தீவனமும் தண்ணீரும் தேவை. (*i*) குதிரைகள் 5 டன் வரை பளுவான வண்டியை இழுக்கும். (ii) குதிரைகள் ½ டன் முதல் 1 டன் வரை இழுப்பதுடன் மணிக்கு 6-8 மைல் வரை செல்லும். (iii) பொதிகுதிரையும், சவாரிக்குதிரையும் 300 பவுண்டு எடுத்துச்செல்லும் சக்தியுடையன. பொதிசுமக்கும் பிராணிகளில் குதிரைகள் மேலானவை.
கோவேர் கழுதை (mule) கழுதை (ass)	உலகத்தில் அகப்படும் இவ்விலங்கினங்களின் மதிப்பு 20 மிலியன்கள் ; அவற்றுள் ஐக்கியநாடுகள் 36% ; இந்தியா 8% ; தென் ஆபிரிக்கா 4% ;	குதிரையைவிட அதிக காலம் ஜீவிக்கத் தக்கவை ; குதிரையை விட அதிக வேகமுள்ளவை ; தவிரவும் குதிரையைவிடக் குறைந்த தீனியில் ஜீவிக்கும். ஒரு கோவேர் கழுதை ½ டன் முதல் 1

	ஆர்ஜென்டினு 4% ; ஐயர்லண்ட் 1% ;	டன் வரை பளுவுள்ள சாமான்களை இழுக்கும் சக்தியுள்ளது.
	வறண்ட பருவக்காலங்களையுடைய வெப்ப மண்டலத்தைச்சார்ந்த பிரதேசங்களும் மித மண்டலங்களும்.	கழுதையும், கோவேர் கழுதையும் :— 150—250 பவுண்டு வரை தூக்கிச் செல்லும். 4 பவுண்டு சாமான் வண்டியை மணிக்கு 4—6 மைல் வீதம் இழுத்துச்செல்லும்.
எருது, எருமை இனங்கள்	முன்னேற்றமடையாத மித மண்டலங்கள் ; ஈரப்பதனுள்ள மிக வெப்ப மண்டலங்களும் ; மிக வெப்ப மண்டலங்களைச் சார்ந்த பிரதேசங்களும். உலகத்தில் அகப்படும் இவ்விலங்கினங்களின் மொத்த மதிப்பு 250 மிலியன்கள். அவற்றுள் இந்தியாவும், தென்கிழக்கு ஆசியாவும் 50% ; ருஷ்யாவிலும், தென்கிழக்கு ஐரோப்பாவிலும் 21% ; மத்திய அமெரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் 20% ; தென் ஆபிரிக்கா 2% ;	குதிரையைவிட வேகக்குறைவாயும் ஆனால் அதிக பாரத்தை இழுக்கும் தன்மையையும் உடையன. உஷ்ணம், ஈரப்பதன், பயிரழிக்கும் பூச்சிகள் முதலியவற்றைக் குதிரையைவிடப் பொறுக்கும் தன்மையுள்ளன. 150 பவுண்டு தூக்கவும், 2,000 பவுண்டு இழுக்கவும் பலம் உள்ளன.

விலங்குகள் (Animals)	பரப்பு (Distribution)	குணத்தன்மையும், பிரயோஜனமும் (Characteristics and Utility)
நாய்கள்	எல்லாப் பிரதேசங்களிலும், மற்ற மிருகங்கள் அகப்படாத பிரதேசங்களிலும் உபயோகப்படுகின்றன. உதாரணமாக வடமேற்கு ஐரோப்பா, துந்திரா சமவெளி	எஸ்கிமோ ஜாதியர் உபயோகிக்கும் நாய்கள் 100 பவுண்டு கனத்தை இழுக்கிறது. பெல்ஜியன் நாய் 150 பவுண்டு இழுக்கிறது. செயிண்ட் பெர்நாட் நாய் 30-60 பவுண்டு சுமக்கும்.
ஒட்டகம்	கொஞ்சம் வறண்ட பூமியும், பாலைவனப் பிரதேசமும் வட ஆபிரிக்காவும் ஈரேஷியாவும்—2 மிலியன் ஆஸ்திரேலியா—6,000	உணவும் ஜலமும் இல்லாமல் 3—10 நாள் வரை ஜீவிக்கும்; வறண்ட புல் பயிர்களைத் தின்று ஜீவிக்கும். 450 பவுண்டு கனமுள்ள சாமான்களை ஒரு நாளைக்கு 15—20 மைல் வீதம் தூக்கிச் செல்லும்; 1,200 பவுண்டு கனமுள்ள சாமான்களை மணிக்கு 2—3 மைல் வீதம் இழுத்துச்செல்லும்.
கலைமான்	துந்திரா சமவெளி; ஈரேஷியாவின் வட காட்டுப்பிரதேசம்; வட அமெரிக்காவில் சில பிரதேசங்கள்.	எவ்விதமான குளிர்ச்சியையும் தாங்கும்; சத்தில்லாத உணவு போதுமானது; எருதை விடக் குறைவாகவே இழுக்கவும், சுமக்கவும் திறனுடையது.

யானை	இந்தியாவின் மிக வெப்ப மண்டலக் காடுகளிலும், ஆசியாவின் தென் கிழக்குப் பாகமும். சீயாம்—8,000	ஏராளமான தீனி தேவை; மலைப்பிரதேசத்தில் உபயோகப்படுகிறது; 900 பவுண்டு வரை சுமக்கும்; 2—3 டன்கள் இழுக்கும்.
இலாமா	பொலிவியா; பீரு; ஆண்டிஸ் மலையின் மேட்டு நிலங்கள். 1 மிலியன்.	அதிகவேகமுள்ளது. 1 நாளைக்கு 12-14 மைல்கள் 100 பவுண்டு சுமையுடன் செல்லும்.
சடை எருமை	மத்திய ஆசியாவின் மேட்டு நிலங்களில் மட்டும்தான் காணப்படுகிறது	வெண்பனிப் பிரதேசத்தில் வசிக்கின்றது. 90—120 பவுண்டு வரை சுமக்கவும், இழுக்கவும் சக்தியுள்ளது.
வெள்ளாடு, ஆடுகள்	மத்திய ஆசியாவின் மேட்டு நிலங்களில் மட்டும் காணப்படுகின்றன.	25—35 பவுண்டு வரை சுமக்கும்.

போக்குவரத்துச் சாதனங்களின் முறையில் மானிட பொருளாதார யோசனைகள் (Human and economic considerations as factors in transport):—முன்னேற்றமடைந்த பிரதேசங்களில் பெருவீதப் பொருளுற்பத்தியாவதால் அவ்விடங்களில் போக்குவரவு சாதனங்கள் அதிகத் தேர்ச்சியடைந்தும் பெருகியுமிருக்கின்றன. பெருவீதப் பொருளுற்பத்தி சமீபகாலத்தில் ஏற்பட்டது. சென்ற 150 வருஷங்களாக அவ்விதப் பொருளுற்பத்தி ஓங்கி வளர்ந்துகொண்டு வருகிறது. தொழில்களும், போக்குவரவு சாதனங்களும் அபிவிருத்தியடைந்தால்தான் பெருவீதப் பொருளுற்பத்தியும் அதிகரிக்கும். முதல் நீராவிக்கப்பல் 1819-ம் வருஷம் அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்தது. 1825-ம் வருஷம் நீராவியால் இயக்கும் ரெயில்கள் உபயோகத்தில் வந்தன. 1880-ம் வருஷம் பெட்ரோல் இன்ஜின் கண்டுபிடித்த பிறகுதான் மோட்டார் வண்டிகள் ஏற்பட்டன. மின்சார சக்தியால் செல்லும் வண்டிகளும் இயந்திரங்களினால் இயக்கப்படும் விமானங்களும் சமீபகாலமுதல் உபயோகப்பட்டு வருகின்றன. பெருவீதப் பொருளுற்பத்தி இலாபகரமாயிருக்க வேண்டுமானால், பளுவான வண்டிகள் போவதற்கு வேண்டிய ரோடுகளும், நீராவியாலும், மின்சார சக்தியினாலும் இயக்கக்கூடிய வண்டிகளும், நீரின்மேல் போக்குவரவும் அவசியம் வேண்டும். உழைப்புப் பகுப்புள்ள தேசங்களில் பொருள் விளைவிப்போருக்கும், பொருள் நுகர்வோருக்கும் வேண்டியவற்றை அடைவதற்குத் தகுந்த போக்குவரவு சாதனங்கள் ஏற்பட்டு வருகின்றன. சரக்குகளைப் பத்திரமாயும், துரிசாயும் எடுத்துச்செல்லும் வசதிகள் தவிர அவைகளைத் தகுந்த முறையில் எடுத்துச் செல்லவேண்டும். எண்ணெ, பால் முதலிய நீர்மங்களை எடுத்துச்செல்லுவதற்கு ஏற்பட்ட வண்டிகளும், அழியக்கூடிய சாமான்களாகிய, இறைச்சி, பழம் முதலியன குளிர்ச்சியினால் பாதுகாப்பதற்குரிய வண்டிகளும், கால்நடைகளை ஏற்றிசெல்லுவதற்குரிய வண்டிகளும், தவிரவும் பெரிய சாமான்களை ஏற்றவும் இறக்கவுமுள்ள இயந்திரங்களும் இக்காலத்தில் வழங்கி வருகின்றன. கப்பல்களிலிருந்து கோதுமை முதலிய சரக்குகளைத் துரிதமாய் எடுப்பதற்கு உறிஞ்

சிக் குழாய்களும், பெரிய பளுவான சாமான்களை நகற்றுவதற்குத் தூக்குக்கருவிகளும் உபயோகத்திலிருக்கின்றன.

ஐரோப்பா தேசத்தார் ரெயில் பிரயாணங்களில் தனிமையாயிருப்பதற்குள்ள வசதிகளில் பிரியப்படுகிறார்கள். ஆகையால் பிரிட்டன் தேசத்து ரெயில் வண்டிகளின் அமைப்பைக் கவனித்தால் அவை அறை அறையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் கனடாவிலும், ஐக்கிய நாடுகளிலும் அவ்வளவு சிறு அறைகளாகத் தடுக்கப்படாமல் புல்மன் சலூன் (Pullman Saloon) மாதிரியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வித வண்டிகள் பகலில் எல்லாப் பிரயாணிகளும் பொதுவாய் உட்காரக்கூடிய இடமாயும், இரவில் தனித்தனி அறைகளாகவும் உதவுகின்றன. ரெயில்கள் சமீபகாலத்தில் ஏற்பட்ட தேசங்களில் அதிக தூரம் வண்டிகள் செல்லவேண்டியிருப்பதால், சரக்குகளைமட்டும் இழுத்துச் செல்லும் வண்டிகள் பிரத்யேகமாகச் செல்லுகின்றன.

இயந்திரத்தால் இயக்கப்படும் தரை மார்க்கப் போக்குவரவும், குதிரைவண்டிப் போக்குவரவும், அவற்றின் சாதபேதமும் (Horse-drawn *versus* mechanically-driven road transport) :— குதிரை வண்டிகளும், இயந்திரங்களால் இயக்கப்படும் வண்டிகளும் அதிகப் பிரயோஜனப்படவேண்டுமானால், சரியானபடி அமைக்கப்பட்ட ரோடுகள் வேண்டும். முன்னேற்றமடைந்த தேசங்களில் தரம்தரமாக ரோடுகளை ஏற்படுத்தி அவைகளை நல்ல நிலைமையில் பாதுகாத்து வருகிறார்கள். சிறுதூரத்திற்கும், நிறுத்தவும், போகவும் ஏற்படும் பிரயாணத்திற்கும், குதிரை வண்டிப் பிரயாணம் இக்காலத்திலும் எக்காலத்திலும் அதிகச் செலவில்லாததாயும் திருப்திகரமாயுமிருக்கிறது. இங்கிலாந்தில் சிறு தூரப் பிரயாணத்திற்குக் குதிரை வண்டிச்செலவு மோட்டார் வண்டிச்செலவில் மூன்றில் ஒரு பங்குதான் ஆகின்றது. நெடுந்தூரப்பிரயாணத்திற்கு மோட்டார் வண்டிகளும், மின்சாரம் அல்லது நீராவிச் சக்தியினால் செல்லும் வண்டிகளும் குதிரை வண்டியைவிட வேகத்திலும் கன அளவிலும் நிகரற்றன. குதிரை வண்டிகளும், மோட்டார் வண்டிகளும் சரக்குகளை வீடுவீடாய் ஏற்றவும் இறக்கவும் சௌகரியமாயிருக்கின்றன. இவ்விரண்டு போக்குவரவு சாதனங்

களும் ரெயிலைவிடக் கூட்டவும் குறைக்கவும் முடியும். மோட்டார் வண்டிகள் குறைந்த விலைக்கு உண்டாக்கப்படும் ஐக்கிய நாடுகளில்கூடக் குதிரை வண்டிகள் மோட்டார் வண்டிகளைவிட இரண்டு மடங்கு அதிகமாயிருக்கின்றன. பிரிட்டனில் குதிரை வண்டிக்கும் மோட்டாருக்குமுள்ள தகவுப்பொருத்தம் 4 : 1 ஆக மதிக்கப்படுகிறது. குதிரை வளர்க்கும் தொழில் தேர்ச்சியடைந்திருக்கும் ஜெர்மனியில் குதிரை வண்டிகள் மோட்டார் வண்டிகளைவிட 50 மடங்கு அதிகம். விவசாயமே முக்கியமான தேசங்களில் குதிரைக்கு வேண்டிய தீவனம் செழிப்பாய்க் கிடைக்கும். குதிரைகளைப் போக்குவரவுக்கு உபயோகப்படுத்துவதில் வேறொரு சௌகரிய மென்னவென்றால் குதிரையால் தன் இனப் பெருக்கம் ஏற்படும்.

போக்குவரவில் ரெயிலுக்கும் மோட்டாருக்குமுள்ள சாதபேதம் (Rail *versus* motor transport):—மோட்டாரைவிட ரெயில் மூலமாய்த் துரிதமாயும், சௌகரியமாயும், சிக்கனமாயும் பளுவான சாமான்களை வெகுதூரம் எடுத்துச்செல்ல முடியும். இதற்கு உதாரணமாக இடம் நிறைக்கும் சரக்குகளாகிய, கோதுமை, நிலக்கரி, இரும்பு தாதுகள் முதலியவற்றை எடுத்துக்கூறலாம். ஆனால் சரக்குகளை எடுத்துச் செல்லும் சத்தம் தேசத்துக்குத் தேசம் வித்தியாசப்படுகிறது. ரெயில் சத்தங்கள் பல விஷயங்களைப் பொறுத்து விதிக்கப்படுகின்றன. சரக்குகளின் அளவு, வண்டியின் அமைப்பு, வண்டி போகும் நேரம், ரெயில் வண்டியுடன் மற்றப் போக்குவரவு சாதனங்களின் போட்டிப்பு முதலிய இவ்விஷயங்கள் ரெயில் சத்தம் தீர்மானிப்பதில் கவனிக்கத்தக்கவை. இக்காலத்தில் ரெயிலுக்கும் மோட்டார் வண்டிகளுக்கும் போட்டி ஏற்பட்டிருக்கிறது. மோட்டார் வண்டிகளிலுள்ள சௌகரியங்கள் பலவிதம். மோட்டார்கள் சரியான ரோடுகளில் வேண்டிய இடங்களுக்குப் போகும் தன்மையுடையன. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வண்டிமாற்றுதலில்லாமல் நேராகச் செல்லமுடியும். ஆனால் தூரதேசப் பிரயாணத்திற்கு ரெயிலிலுள்ள வசதி மோட்டாரில் கிடையாது. சரக்குகளை ஏற்றிச்செல்லும் ரெயில்கள் 500 டன்கள் இழுக்கமுடியும்.

ஆனல் ஒரு மோட்டார் லாரி 10 டன்னுக்கு மேல் இழுக்கமுடியாது. மோட்டார் வண்டிகளுக்குப் பிரத்யேகமாக அதிக ரோடுகள் வேண்டியதில்லை. ரெயில்களுக்கு பிரத்யேகமாக ரோடுகளும், ஸ்டேஷன்களும், அவைகளைப் பாதுகாக்க வேலையாட்களும் வேண்டும். மோட்டார் போக்குவரவு வசதிகளைக் குதிரை வண்டியில் செல்லும் வசதிக்கும், ரெயிலில் செல்லும் வசதிக்கும் நடுத்தரமாகச் சொல்லலாம். ஆகையால் ரெயிலுடன் போட்டிபோடுவதைவிட ரெயிலும், மோட்டாரும் கூட்டுப்பொறுப்பாக இருப்பதே நலம். உலகத்திலுள்ள மோட்டார் வண்டிகளில் 100-க்கு 75 அமெரிக்காவின் ஐக்கிய நாடுகளில் இருக்கின்றன. அவற்றுள் 80% வியாபார விஷயமாயுள்ள வண்டிகள் (Commercial vehicles). அதிகப் போக்குவரவுள்ள இடங்களுக்கு ரோடுகள் முக்கியமாய் வேண்டும். ரோடுகள் போடுவதற்குள்ள பொருட்செலவு ரெயில் பாதைகள் அமைக்கும் செலவில் பத்தில் ஒரு பங்காக மதிக்கப்படுகிறது. மோட்டார் வண்டிகளுக்குள்ள ஆரம்பச்செலவு ரெயில் வண்டிகளின் செலவைவிடக் குறைவு. ரெயில் பாதைகள் அமைப்பதால் ஏற்படும் செலவுக்குள்ள பணம் இல்லாத தேசங்களில் மோட்டார் வண்டிகளை உபயோகப்படுத்துவதே லாபகரமாயிருக்கும். முன்னேற்றமடையாததும், வெள்ளையர் குடியேறியதுமான மிதவெப்பப் பிரதேசங்களிலும், இந்தியாவிலும் மோட்டார் வண்டிகளை ரெயிலுக்குப் பதிலாக அநேக இடங்களில் சுலபமாக உபயோகப்படுத்தமுடியும்.

உள்நாட்டு நிலமார்க்க சாதனங்களும், நீர்மார்க்க சாதனங்களும், அவைகளின் சாதபேதமும். (Inland Land Transport *Versus* Water Transport) :— நிலவழிகளை விட நீர்வழிகளில் போக்குவரவுச் சத்தம் குறைவாகவேயிருக்கிறது. ஆனல் நீர்வழிகளில் அதிகத் துரிதமாய்ச் செல்லமுடியாது. நீர்மார்க்கத்தில் வேக வீதத்தை அதிகப்படுத்த அதிகச் செலவாகிறது, உள்நாட்டு நீர்வழிகளில் கரைகளுக்கு அதிகச் சேதமில்லாமலிருக்கும் பொருட்டு படகுகள் நிதானமாகச் செல்லவேண்டியதாயிருக்கிறது. ஸ்யூஸ் கால்வாயில் கப்பல்கள் மணிக்கு 4 அல்லது 6 மைல் வீதம் செல்லுகின்றன. அநேக ஏரிகளும், நீரோட்டம்

அதிக வேகமில்லாத நதிகளுமுடைய பிரதேசங்களில் ஏராளமான ஜலமிருக்கும் பட்சத்தில் கால்வாய்கள் இலகுவாய் ஏற்படுத்தி அதன் மூலமாய்ச் சரக்குகள் எடுத்துச்செல்ல முடியும். நீர்வழிகள் நிலவழிகளைவிட லாபமாயிருப்பதற்குப் பல காரணங்கள் உள. நதிகளும், ஏரிகளும் இயற்கையாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் போக்குவரத்து உரிமை யாவருக்கும் உண்டு. படகுகளை இயக்குவதற்கு வேண்டிய சக்தி தரையில் வண்டிகளை இயக்குவதற்குள்ள சக்தியைவிடக் குறைவாக இருந்தால் போதுமானது. 1 விநாடிக்கு 1 அடி வீதம் நல்ல ரோட்டில் 1 குதிரைத் திறனால் 1,000 பவுண்டு கனமுள்ள பாரத்தை இழுக்கமுடியும்; ரெயிலில் 10,000 பவுண்டு இழுக்கமுடியும்; நீர்மார்க்கத்தில் 60,000 பவுண்டு இழுக்கமுடியும்.

தரைமேற் போகும் வண்டிகளின் செலவைவிடப் படகுகளை இயக்கும் செலவு குறைவாகவேயிருக்கிறது. தவிரவும் நீர்வழிகளிற் செல்லும் சரக்குகளுக்கும் இன்ஷூரன்ஸ் செலவும் குறைவு. நிலக்கரி, தானியங்கள், தாதுப்பொருள்கள், மரம் முதலியவற்றிற்கு நீர்வழிகளே பொருத்தமுள்ளது. வட அமெரிக்காவில் பெரிய ஏரிகளில் 14,000 டன்கள் வரையுள்ள கப்பற் சரக்குகள் படகுகள் மூலமாய்ச் செல்லுகின்றன. நாலு அல்லது ஐந்து தோணிகளால் சேர்க்கப்பட்ட அடுக்குத்தோணிகள் 5,000—6,000 டன்கள் வரையுள்ள சரக்குகளை ரையின் (The Rhine) நதி மூலமாய் எடுத்துச் செல்லுகின்றன. இங்கிலாந்தில் பெரிய படகுகள் நிலக்கரியை யார்க்ஷயர் நிலக்கரிக்களங்களிலிருந்து ஹம்பர் துறைமுகத்திற்குக் கொண்டுபோகின்றன. பிரான்ஸ், ஹாலண்ட், பெல்ஜியம், ஜெர்மனி, வட அமெரிக்கா முதலிய தேசங்களில் நீர்வழிப்போக்கு வரத்து ரெயில் போக்குவரத்துக்கு அநுசரணையாயிருக்கிறது. ஐரோப்பாவின் வடபக்கத்துத் தாழ்நிலங்களில் படகுப் போக்குவரத்துக்குரியதாய், 160,000 மைல்கள் நீளமுள்ள நதிகளும், கால்வாய்களுமிருக்கின்றன. ஹாலண்டைத்தவிர மற்ற இடங்களில் கால்வாய்ப் போக்குவரவு சாதனங்கள் நிலத்தின்மேல் போக்குவரவு சாதனங்களுடன் அவ்வளவு போட்டிப்பு இல்லை. சைனா, இந்தியா முதலிய முன்னேற்றமடையாத தேசங்களின் ஜனநெருக்கமுள்ள தாழ்

நிலங்களில், ரெயில் வசதியில்லாத இடங்களில் கால்வாய்களே முக்கிய போக்குவரவு சாதனங்களாக இருக்கின்றன.

போக்குவரவு வசதிகள் எவ்வாறு உள்நாட்டு நகரங்களின் அமைப்புக்கும் வளர்ச்சிக்கும் ஒரு முக்கிய அம்சமாயிருக்கின்றன (Transport facilities as a Factor in the Location and Growth of Inland Towns) :-பண்டைக்கால முதல் போக்குவரவு வசதிகள் தொழில் முறையிலும், வியாபார முறையிலும், இராஜிய முறையிலும் முக்கியமான நகரங்கள் ஏற்படுவதற்கு ஒரு விசேஷ காரணமாயிருக்கிறது. இக்காலத்தில் ஒரு நகரமாவது அங்குள்ள ஜனங்களுக்கு வேண்டிய பொருள்களைத் தானே உற்பத்திபண்ணுவதில்லை. நாகரீகமடைந்த தேசங்களில் வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகளை வெளித்தேசங்களிலிருந்து அடையவேண்டியிருக்கிறது. தினசரி வாழ்க்கை வியாபாரத்தின் நிலைமையைப் பொறுத்திருக்கிறது. போக்குவரவு வசதிகளில்லாமல் வியாபாரம் விருத்தியடைவதில்லை. பொதுவாகப் பிரதானிய போக்குவரத்து வழிகள் சிறிய போக்குவரத்து வழிகளால் பலப்படுகின்றன. போக்குவரத்து வழிகளிலுள்ள பிரதேசங்களில் உள்நாட்டு வியாபார ஸ்தலங்கள் ஏற்படுகின்றன. இரண்டு மூன்று உள்நாட்டு நீர்வழிகள், நிலவழிகள், ரெயில் மார்க்கங்கள் சேரக்கூடிய இடங்களில் பெரிய ஊர்கள் ஏற்படுகின்றன. நிலவழிகளிலிருந்து நீர்வழிகளுக்கு மாற்றுதலும், கப்பல்களிலிருந்து நதிவழியாய்ச்செல்லும் தோணிகளுக்கு மாற்றுதலும் அடிக்கடி ஏற்படுகின்றது. அப்பேர்ப்பட்ட மாற்றும் இடங்கள் பெரிய ஊர்களாகின்றன. வெவ்வேறு அளவுள்ள ரெயில் பாதைகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குச் சரக்குகளை மாற்றும் இடங்கள் பெரிய வியாபார ஸ்தலங்களாகின்றன. பிரதான நகரங்கள் ஏற்படுவதற்கு அவைகளை எளிதில் சேரக்கூடிய தன்மை ஒரு முக்கிய காரணமாகச் சொல்லலாம். ஆக்கத்தொழிற் பிரதேசங்களில் போக்குவரவு வசதிகளுக்கும், ஜனநெருக்கத்துக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கிறது. அப்பேர்ப்பட்ட வசதிகள் குறைவாயிருக்கும் இடங்களில், ஜனங்கள் வேலை செய்யும் இடங்களுக்குச் சமீபத்தில் வசிக்கவேண்டியதாயிருக்

கிறது. அதனால் ஜனநெருக்கம் ஏற்படுகின்றது. இக்காலத்தில் இருக்குமிடத்திற்கும் வேலைசெய்யுமிடத்திற்கும் போக்குவரவு வசதிகள் ஏற்படுவதால் சோலை நகரங்களும், நகரங்களையடுத்த இருப்பிடங்களும் ஏற்படுகின்றன. போக்குவரவு வசதிகள் விருத்தியடைவதால் ஜனங்கள் சமமாக எல்லா இடங்களிலும் பரவியிருக்கமுடியும்.

கடற்போக்குவரவு: கடல்மார்க்கங்களும், கடல்வழிவணிகமும், (Ocean Transport; Seaways and Seaborne Trade):—பல நூற்றுண்டுகளாக மக்கள் உள்நாட்டு நதிகளிலும் ஏரிகளிலும், ஒடுங்கிய கடல்களிலும் போக்குவரத்து முறையைக் கைக்கொண்டபோதிலும், சமுத்திரப் போக்குவரவு சாதனங்களில் அதிகத் தேர்ச்சியடையவில்லை. சென்ற 100 வருஷங்களாகத்தான் மேநாட்டாரின் நாகரீகமும் கடல் வணிகமும் விருத்தியடைந்து வருகின்றன. கடல்மார்க்கமாய்ச் சரக்குகளை ஏற்றிச் செல்லுதல் தரைமார்க்கத்தைவிடக் குறைந்த செலவில் நடத்த முடியும். மாண்டிரீல் துறைமுகத்திலிருந்து லிவர்ப்பூல் துறைமுகத்திற்குக் கப்பலேற்றுமதிச் செலவு 1 மைலுக்கு 1 டன்னுக்கு ·06 பென்ஸ்! ஆனால் இங்கிலாந்தில் ரெயில் மார்க்கமாய் 1 மைலுக்கு 1 டன்னுக்கு 20·3 பென்ஸ் ஆகிறது. ஒரு கப்பலில் 8,000 முதல் 10,000 டன்கள் வரை கப்பற் சரக்குகள் ஏற்றிச் செல்லமுடியும்; ரெயிலில் 500 முதல் 600 டன்கள் வரை ஏற்ற முடியும். நிலமார்க்கத்தைவிட நீர்மார்க்கங்கள் சரக்குகளை ஏற்றிச் செல்ல லாபகரமாயிருப்பதற்குப் பல காரணங்கள் உள. முதலாவது சமுத்திரம் ஒரு இயற்கையாய் அமைந்த நீர்வழியாயிருக்கிறது. அதில் எத்திசையிலும் செல்லலாம். சில நாட்டுரிமைகள் தவிர, சமுத்திரம் எல்லா தேசத்தாருக்கும் பொதுவாயிருக்கிறது. ஆகையால் கடலில் செல்லும் சுபாவம் உடைய தேசத்தார் கடல் வணிகத்திற்குப் போட்டி போடுகின்றனர். அதனால் கப்பலேற்றுமதி வரிகள் பொதுவாக எல்லாத்தேசத்திலும் ஒரே விதமாயிருக்கின்றன. போட்டியைக் குறைப்பதற்காக அநேகக் கப்பலோட்டும் கம்பெனிகள் ஒன்று சேர்ந்து கப்பல் வீதவரிகளைத் தீர்மானிக்கின்றனர். இப்பேர்ப்பட்ட போட்டியினால் கப்பல்

கட்டுவோர் கப்பல்களை இயக்கும் செலவைக் குறைக்கவும், கப்பல்கள் எடுத்துச்செல்லும் அளவை அதிகப்படுத்தவும் வேண்டிய முறைகளை அநுசரித்து வருகின்றனர். ஒரு பெரிய கப்பலின் போக்குவரவுச் செலவு சிறிய கப்பலின் செலவைவிடக் குறைவாகவேயிருக்கிறது. கப்பல்களின் அளவை நிர்ணயிக்கக்கூடிய விஷயங்கள் கவனிக்கத்தக்கது. முதலாவது கப்பல்களின் துறைமுகவசதி; இரண்டாவது கப்பல்களை இயக்கும் கருவிகளின் திறன். முன்காலத்தில் கப்பல் கொள்ளும் பாரத்தில் அதிக கவனம் செலுத்திவந்தனர். கப்பல்போகும் வேகத்தைப்பற்றி அவ்வளவு கவனிக்கவில்லை. இக்காலத்தில் கப்பல் கொள்ளும் பாரத்தைவிடக் கப்பல் போகும் வேகமே முக்கியமாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் இக்காலம் பெரிய கப்பல்களின் அடைப்பறை உலக கடல் வணிகத்திற்குத் தக்கபடி குறைவாகவே இருக்கின்றன. பழைய காலங்களில் துறை முகங்கள் கப்பல்களின் அளவுக்குத் தக்கபடி அமைக்கப்பட்டன. இக்காலத்தில் கப்பல்கள் துறைமுகத்துக்குத் தக்கபடி அமைக்கப்படுகின்றன. உலகக் கடல் போக்குவரத்தில் ஈடுபட்ட கப்பல்கள் 400 அடிகளிலிருந்து 500 அடிகள் வரை நீளமுள்ளன. 20 அடிகளிலிருந்து 25 அடிகள் வரையுள்ள நீர் அகழம் வேண்டும்.

பாய்மரக் கப்பல்களும், நீராவிக் கப்பல்களும் (Sailing Ships *Versus* Steamers):-பழைய காலத்தில் கடல் வணிகம் 500 டன்கள் சுமை எடுக்கும் மரக்கலங்களினாலேயே நடத்தப்பட்டுவந்தன. இக்காலத்தில் அப்பேர்ப்பட்ட மரக்கலங்கள் மிகவும் குறைவாகவே யிருக்கின்றன. மரம், தானியம், தாதுப்பொருள் முதலிய இடம் நிறைக்கும் சரக்குகளை எடுத்துச்செல்லப் பாய்மரக் கப்பல்கள் இன்றும் உபயோகத்திலிருக்கின்றன. ஐரோப்பாவில் வடக்குக் கடலைச் சுற்றியுள்ள இடங்களுக்கும், வட அமெரிக்கா, தென் அமெரிக்காத் துறைமுகங்களுக்கும் பாய்மரக் கப்பல்கள் இன்றும் உபயோகத்தில் வழங்கிவருகின்றன. உலகப் பாய்மரக் கப்பல்களில் அநேகம் சிறுதூரத்திற்கும், கடற்கரையோர வியாபாரத்திற்கும் உபயோகப்பட்டுவருகின்றன. பாய்மரக் கப்பல்களையும், நீராவிக் கப்பல்களையும், உற்றுநோக்கு

மிடத்து, நீராவிக் கப்பல்கள் பலத்திலும், கனக்குறைவிலும், சுமை எடுத்துச் செல்லும் தன்மையிலும், வேகத்திலும் விசேஷ மானவை. ஒரு கப்பலின் பிரயாணக் காலம் கப்பலுக்குப் பயன் படும் கரியைப் போதுமானபடி கப்பலில் வைத்துக்கொள்ளும் இடத்தைப் பொறுத்திருப்பதால் சமுத்திர மார்க்கங்களில் கப்பல் கரி எடுக்கும் வசதிகள் வேண்டும். பாய்மரக் கப்பல்களைவிட நீராவிக் கப்பல்கள் துரிதமாயும், குறிப்பிட்ட நேரத்திலும் போகத்தக்கவை.

எண்ணெ, நிலக்கரியின் சாதபேதம் (Oil *Versus* Coal):- நீராவிக் கப்பல்களின் பருமையும், வேகமும் இக்காலத்தில் அதிகப்பட்டிருக்கிறது. ஆனால் நிலக்கரி அதிகமாகச் செல வாகிறது. ஆகையால் கப்பலுக்குப் பயன்படும் கரி ஏற்றிக் கொள்ளக் கப்பலில் போதுமான இடம் வேண்டியிருப்பதால் கப்பற் சரக்குகளுக்குள்ள இடம் குறைவாகவேயிருக்கிறது. கப்பல்களின் நிலக்கரி நுகர்வைக் குறைப்பதற்கு அநேக உபாயங் கள் கண்டுபிடித்திருக்கின்றனர். 1920-ம் வருஷம் முதல் கப்பல்களை இயக்க நிலக்கரிக்குப் பதிலாக எண்ணெயை உப யோகிக்கின்றனர். எண்ணெ நிலக்கரியைவிடக் கிராக்கியான போதிலும் உபயோகத்திற்குச் சௌகரியமாயிருக்கிறது. ஒரு கப்பலில் கரிக்குப் பதிலாக எண்ணெயை உபயோகிப்பது சுத்த மாயும் செலவில் குறைவாயுமிருக்கிறது. தவிரவும் ஒரு கப் பலுக்குப் பயன்படும் கரியை ஏற்றும் நேரத்தைவிட எண்ணெயை எடுக்கும் நேரம் குறைவுள்ளது. கரிக்கு அதிக இடம் வேண்டும் எண்ணெக்குச் சுருக்கமான இடம் போதுமானது. இக்காரணங் களினால் எண்ணெயை உபயோகிக்கும் கப்பல்களின் உழைக்கும் காலமும் ஊதியமும் அதிகமாகவேயிருக்கும். நிலக்கரியினால் ஓடும் கப்பல்களைவிட எண்ணெயால் ஓடும் கப்பல்களுக்கு இயந் திரங்களை இயக்குவோர் குறைவாகவே போதுமானது. அதனால் கப்பல் இயக்குவோர் கூலியும், கப்பலில் இடமும் அதிகமாயிருக் கும். எண்ணெயால் இயக்கப்படும் கப்பல்களில் சில அசௌ கரியங்களிருக்கின்றன. எண்ணெயால் ஓடும் கப்பல்களின் இயந் திரங்கள் அதிக விலையுள்ளவை. ஆனால் எல்லா விஷயங்களையும்

சேர்த்துக் கவனிக்குமிடத்து எண்ணெயால் ஓடும் கப்பல்கள் கரியால் ஓடும் கப்பல்களைவிட முப்பது சதவீதம் அதிகத் திறமை யுள்ளதாக மதிக்கப்பட்டிருக்கின்றன. சமீபகாலமுதல் மோட்டார்க் கப்பல்களுக்கும் எண்ணெயால் இயக்கப்படும் யந்திரங்கள் (Internal Combustion Engines) அமைக்கப்பட்டிருக்கின்றன. எண்ணெயால் இயக்கப்படும் கப்பல்களைவிட இவ்விதமான மோட்டார் கப்பல்கள் குறைந்த செலவில் உபயோகப்பட்டுவருகின்றன.

கப்பற்றொழிலின் இசைப்பு (Organization of Shipping) :—மக்கள் போக்குவரவுக் கப்பல்கள் ரெயில்வண்டிகளைப் போலக் குறிப்பிட்ட நேரத்தில் துறைமுகங்களுக்குச் செல்லுகின்றன. தபால்கள், தங்கம், வெள்ளி முதலிய சாமான்கள் பிரயாணிக் கப்பல்கள் மூலமாய்ச் செல்லுகின்றன. வேகத்திலும், செலவிலும் குறைவாயுள்ள கப்பல்கள் விவசாயப் பொருள்களையும், செயற்கைப் பொருள்களையும் வேண்டிய துறைமுகங்களுக்குக் கொண்டுபோகின்றன. சரக்கேற்றும் கப்பல்களில் பழம், வெண்ணெ, இறைச்சி முதலிய உணவுப்பொருள்கள் பாதுகாப்பதற்குரிய கருவிகளிருக்கின்றன. இப்பேர்ப்பட்ட கப்பல்கள் பிரயாணிக் கப்பற் கம்பெனியாருக்குச் சொந்தமாயிருக்கின்றன. ரெயில்வே கம்பெனியாருக்குச் சொந்தமாயுள்ள கப்பல்களும் சில இருக்கின்றன. இவைகளும் குறிப்பிட்ட நேரங்களிற் செல்லுகின்றன. நாடோடிக் கப்பல்களில் மூலப்பொருள்களும், செய்பொருள்களும் கொண்டுபோவதற்குள்ள வசதிகள் இருக்கின்றன. நாடோடிக் கப்பல்களுக்குக் குறிப்பிட்ட மார்க்கங்களாவது, கால அட்டவணையாவது கிடையாது. எங்கெந்தத் துறைமுகங்களில் கப்பற் சரக்குகள் கிடைக்குமோ அவ்விடங்களுக்குச் செல்லுகின்றன. இக்கப்பல்கள் இடம் நிறைக்கும் செயற்கைப் பொருள்களும், கச்சாச் சரக்குகளும் சிக்கனமாக ஏற்றிச் செல்லவும், சமுத்திரப்பிரயாணம் பலநாள் செய்யும் சக்தியுள்ளனவாயும் அமைக்கப்படுகின்றன. சரக்குகளை ஏற்றிச் செல்லப் பல தேசக் கப்பல்கள் போட்டிபோடுவதால், நாடோடிக் கப்பல்களின் இயக்கச்செலவு கூடியமட்டும் குறைவாகவே யிருக்கின்றன. மக்கள் பிரயாணக் கப்பல்களைவிட

நாடோடிக் கப்பல்களின் வேகமும் குறைவாகவேயிருக்கின்றன. நாடோடிக் கப்பலின் போக்குவரவு, அதன் சொந்தக்காரரின் இஷ்டத்தையும், அல்லது கப்பற் சரக்கு ஏற்றுவோர் இஷ்டத்தையும், அல்லது அக்கப்பலை ஓட்டும் தலைவனுடைய சமயோஜித அபிப்பிராயத்தையும் பொறுத்திருக்கிறது.

நாடோடிக் கப்பலின் பிரயாணத்திற்கு ஒரு உதாரணம் (An example of a voyage by a Tramp Steamer) :— ஒரு வருஷம் ஜூன் மீ ஒரு நாடோடிக் கப்பல் கிளாஸ்கோவிலிருந்து கல்கத்தாவுக்கு இருப்புப்பாதைச் சாமான்களுடன் புறப்படுவதாக எடுத்துக்கொள்வோம். அப்பேர்ப்பட்ட கப்பலில் அதிக கனமான இருப்புப்பாதைச் சாமான்கள் ஏற்றிச் செல்லுவதால் கப்பலுக்கு வேண்டிய நிலக்கரியுடன் போகமுடியாது. ஆனால் போகும் வழியில் நிலக்கரி ஏற்றுமிடங்களிருக்கின்றன. கேப் (Cape) அல்லது ஸூயஸ் வழியாய்ப் போவதால் நிலக்கரி ஏற்றுமிடங்களிருக்கின்றன. கல்கத்தாவைச் சேர்ந்தவுடன் லாயிட் ஏஜெண்டுகள் மூலமாய் ஆஸ்திரேலியா துறைமுகமாகிய சிட்னி (Sydney)க்குக் கோணிப்பைகள் எடுத்துச் செல்ல ஒப்பந்தம் பண்ணுகிறது. கோணிப்பைகள் இலேசான சாமான்களாவதால் கப்பலுக்குப் பயன்படும் கரியைக் கப்பலில் சரக்குத் தூக்கிச்செல்லும் இடமிருக்குமளவு எடுத்துச் செல்லுகிறது. ஆஸ்திரேலியாவில் மயிர்த்தோல்களைக் கோணிப்பைகளில் போட்டுக் கப்பலில் ஏற்றுவதற்குக் கொஞ்சம் நாளாகுவதால் நாடோடிக் கப்பலானது அடிச்சுமைச் சரக்குகளுடன் பக்கத்திலுள்ள நியூகாஸல் (Newcastle) துறைமுகத்திற்குச் செல்லுகிறது. அவ்விடத்தில் சில்லியின் (Chile) துறைமுகமாகிய வால்பரைஸோ (Valparaiso)க்கு நிலக்கரி ஏற்றிச் செல்லுகிறது. சில்லியில் நிலக்கரி குறைவாயிருப்பதால் இக்கப்பலில் ஏற்றிச் செல்லும் நிலக்கரி அவ்விடத்தில் எளிதாகச் செலவாகும். தவிரவும் வால்பரைஸோ துறைமுகம் சென்றவுடன் கப்பலுக்கு வேண்டிய கரி ஏற்றிக்கொள்ளவேண்டியதில்லை. பிறகு சில்லி துறைமுகங்களில் கிடைக்கக்கூடிய காலகை, தகரதாது முதலிய சரக்குகளை அடிச்சுமையாக ஏற்றிக்கொண்டு ஸான் பிரான்

ஸிஸ்க்கோ (San Francisco) துறைமுகத்திற்குச் செல்லுகின்றது. அவ்விடமிருந்து வான்குவருக்கு (Vancouver) அடிச்சுமையுடன் சென்று அவ்விடம் அறுவடையான சோதுமையை ஏற்றிக் கொண்டு பனமா கால்வாய் வழியாக லிவர்ப்பூலுக்குப் போகிறது. இப்பேர்ப்பட்ட சுற்றுப்பிரயாணம் முடிய எட்டுமாதம் வரை ஆகிறது. போகும் இடமெல்லாம் சரக்குகள் ஏற்றிச் செல்லுவதால் இந்தக் கப்பலின் பிரயாணம் லாபகரமாயிருக்கிறது.

கடற் கப்பல் வழிகள், அவைகளின் தன்மையும், அமைப்பும் (Ocean Shipping Routes, their characteristics and lay-out):—ரெயில் பாதைகளைப்போல் கடல்மார்க்கங்கள் ஒரே வழியாகச் செல்ல முடியாது. காற்று, சீதோஷ்ணநிலை முதலிய விஷயங்களை அநுசரித்துக் கடல்மார்க்கங்கள் சில மாறுபாடுகள் அடைகின்றன. பொதுவாக மக்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களின் (Liners) மார்க்கங்கள் அதிகமாக மாறுபாடு அடைவதில்லை. ஆனால் நாடோடிக் கப்பல்கள் ஒவ்வொரு பிரயாணத்திற்கும் ஒவ்வொரு வழியாய்ச் செல்லுகின்றன. எல்லாக் கப்பல்களும், அதாவது மக்கள் ஏற்றிச் செல்லும் கப்பல்களும், சரக்குகள் ஏற்றிச் செல்லும் கப்பல்களும்—இலாபத்தையே முக்கியமாகக் கருதுகின்றன. சில சமயம் இலாபம் கிடையாவிடில் அரசாங்கத்தார் கப்பற்றொழில் உதவிப்பொருள் அளிக்கின்றனர்; இல்லாவிடில் தபால்கள் எடுத்துச் செல்லவும், சுதேசத் துறைகளிற் செய்யும் வியாபாரத்திற் பரதேசத்தாரின் போட்டியைச் சட்ட மூலமாய்க் குறைக்கவும் இன்னும் பலவித உதவியும் அளிக்கின்றனர்.

வட அட்லாண்டிக் மார்க்கம் (North Atlantic Route):– இது ஐரோப்பாவுக்கும், வட அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரைக்குமுள்ள மார்க்கம். மேற்கு இந்தியத் தீவுகளும் (The West Indies) இந்தக் கடல் மார்க்கத்தில் அடங்கியவை. இம்மார்க்கமாய்ச் செல்லும் வணிகக் கப்பல்களின் மொத்தக் கப்பற் சுமையில் நான்கில் ஒரு பங்கு இவ்வழியாகவே செல்லுகிறது. கடல்மேல் போக்குவரத்துக்கு இம்மார்க்கம் சௌகரியமாயிருக்கிறது. அயர்லண்டின் தென்மேற்குப் பாகமும், ஐக்கிய நாடு

களின் கீழ்கரையும் கப்பல்கள் சுருக்கமான வழியாய்ப் போகும்படி அமைந்திருக்கின்றன. இம்மார்க்கத்தில் கப்பல்கள் சிறிது தெற்குமுகமாகவே செல்லுகின்றன. அவ்வழி சிறிது சுற்று வழியாயிருப்பினும் சௌகரியமான வழியாயிருக்கிறது. ஏனென்றால் கோடை காலத்திலும், வசந்த காலத்திலும், நியூ பவுண்ட்லண்ட்க்கு (Newfoundland) 40°—50° வடக்கேயும், வட அமெரிக்காவின் சமீபத்திலும், பனிமிதப்பினாலும் அடர்ந்த மூடுபனியாலும் கப்பல்கள் அவ்வழியாய்ச் செல்வது அபாயத்தை விளைவிக்கக் கூடியதாயிருக்கிறது. அட்லாண்டிக் சமுத்திரத்தின் குறுக்காகச் செல்லும் கப்பல்கள் கேப் ரேஸுக்குத் (Cape Race) தென் கிழக்கே 400 மைலுக்குள்ள இடத்திலிருந்து பிரிந்துபோகின்றன. வட அட்லாண்டிக் மார்க்கத்தின் இரு புறத்திலும் நீராவிக் கப்பல்களுக்கும், மோட்டார் கப்பல்களுக்கும் இயக்குவதற்கு வேண்டிய கரியும், எண்ணெயும் ஏராளமாகக் கிடைக்கின்றது. வட அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்குமுள்ள நேர் போக்குவரவு சம்பந்தப்பட்ட விஷயத்தில் பிரிட்டிஷ் கப்பல்களுக்கும், இதர கப்பல்களுக்கும் சமமான போட்டியிருக்கிறது. இம்மார்க்கத்தில் மக்கள் போக்குவரவு அதிகமாயிருக்கிறது; ஆனால் கப்பல் சரக்குகள் போக்குவரவில் அதிக லாபமில்லை. ஸ்காண்டினேவியா (Scandinavia)விலிருந்து மரச்சோறும், தாதுப்பொருள்களும், ஸ்பெயினிலிருந்து (Spain) தாதுப் பொருள்களும் தவிர, மற்ற சரக்குகள் முக்கியமாக செயற்கைப் பொருளாயிருக்கின்றன. ஆனால் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்குப் போகும் சரக்குகளில் சில, செயற்கைப் பொருள்களாகவும், அதிகமாக இடம் நிறைக்கும் மூலப்பொருள்களாகவும், உணவுப்பொருள்களாகவும் இருக்கின்றன. ஆகையால் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்குச் செல்லும் பொருள்களைவிட, அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்குச் செல்லும் பொருள்களுக்கு மூன்று மடங்கு அதிக இடம் வேண்டியிருக்கிறது. இதனால் கப்பல்கள் முதல் மேற்குப் பிரயாணத்தை அடிச்சுமையுடன் அல்லது கொஞ்சம் சரக்குகளுடன் செய்ய வேண்டியிருக்கிறது. பிரிட்டிஷ் கப்பலேற்றுமதி சம்பந்தப்பட்ட விஷயத்தில், பிரிட்டிஷ் கப்பல்கள் முதலாக நிலக்கரி

யுடன் தென் அமெரிக்காவின் கீழ்கடற்கரைப் பிரதேசம் சென்று, அவ்விடமிருந்து ஐக்கிய நாடுகளின் கீழ்கடற்கரைப் பிரதேசங்களுக்குக் காப்பியும், மற்றக் கப்பற் சரக்குகளும் எடுத்துச் சென்று. கடைசியாகக் கோதுமை முதலிய சரக்கு களுடன் ஐரோப்பாவுக்குத் திரும்புகின்றன.

வட அட்லாண்டிக் பிரதேசத்திலிருந்து இந்தியாவுக்கும் தூரக் கிழக்கு நாடுகளுக்கும், மத்தியதரைக் கடல் வழியாய்ப் போதல் (North Atlantic *Via* the Mediterranean to India and the Far East) :—கப்பல்களில் ஏற்றிச் செல்லும் சரக்குகளின் எண்ணத்திலும், மதிப்பிலும் வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் குறுக்காகச் செல்லும் கப்பல் மார்க்கத்தைவிட இம்மார்க்கம் மிகவும் முக்கியமானது. இங்கிலாந்தின் மொத்தக் கப்பற் சுமையில் மூன்றில் ஒரு பங்கு இவ்வழியாகச் செல்லு கின்றது. கோதுமை, எண்ணெ விதைகள், அரிசி முதலியன, இந்தியா, பர்மா, தென்கிழக்கு ஆசியாப் பிரதேசங்களிலிருந்து ஏற்றுமதியாகிறது. இந்தக் கடல் மார்க்கம் நாகரீகத்திலும், பொருளாதாரப் பெருக்கத்தில் வித்தியாசமுள்ள ஐரோப்பியத் தேசத்தாருக்கும், உலக ஜனத்தொகையில் அதிகமாயுள்ள ஆசியா தேசத்தாருக்கும் போக்குவரவு சாதனமாயிருக்கிறது.

இம்மார்க்கத்தில் கப்பற் கரி வேண்டிய இடங்களில் எடுத்துக்கொள்ள வசதிகளிருப்பதால், கப்பல்களில் கப்பல் சரக்குகள் ஏற்றிச் செல்ல அதிக இடமிருக்கிறது. இதனால் சரக்குகள் ஏற்றிச் செல்வதில் அதிக லாபம் அடையமுடியும். இம்மார்க்கத்திலிருக்கும் மத்தியதரைப் பிரதேசங்களிலிருந்தும், இந்தியாவிலிருந்தும், தூர கிழக்கு நாடுகளிலிருந்தும் உணவுப் பொருள்களும், மூலப்பொருள்களும், ஐரோப்பாவிலுள்ள வட மேற்குப் பிரதேசங்களுக்கும், வட அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகளின் வடகிழக்குப் பிரதேசங்களுக்கும் ஏற்றுமதியாகிறது. ஆனால் இம்மார்க்கப் பிரதேசங்களிலுள்ள ஜனங்களின் பொருளுற்பத்தி குறைவாயிருப்பதால் அவர்களின் இறக்குமதிச் சரக்குகளின் அளவு ஏற்றுமதிச் சரக்குகளைவிடக் குறைவாகவே யிருக்கிறது. ஆகையால் கப்பல்கள் கிழக்குப் பிரதேசங்களி

லிருந்து மேனுடுகளுக்கு அதிக பாரத்துடன் செல்லுகின்றன. இத்தன்மையை இந்தியாவிலிருந்து மேனுடுகளுக்கு ஏற்றிச் செல்லும் சரக்குகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இங்கிலாந்திலிருந்து புறப்படும் கப்பல்கள் முக்கியமாக நிலக்கரி, இரும்பு, உருக்குச் சாமான்களை மத்தியதரைக் கடற் பிரதேசங்களுக்குக் கொண்டுபோகின்றன. திரும்பி வரும்பொழுது ஸ்பெயின், கிரீஸ், வட ஆபிரிக்கா முதலிய தேசங்களிலிருந்து பழவர்க்கங்களும், ஈகிப்த்லிருந்து வெங்காயமும், மார்செயில் துறைமுகத்திற்கு உள்நாடுகளிலிருந்து வந்துசேரும் சரக்குகளையும் ஏற்றிக்கொண்டு வருகின்றன. திரும்பிவரும்பொழுது ஏற்றிக்கொள்ளக்கூடிய சரக்குகள் இல்லாத பட்சத்தில் இக் கப்பல்கள் அடிச்சுமையுடன் அட்லாண்டிக் சமுத்திரம் வந்து சேருகின்றன. அல்லது இந்து மகா சமுத்திரத்திற்குச் சென்று அவ்விடமிருந்து இந்தியாவின் கோதுமையையும், எண்ணெவிதைகளும், பர்மாவின் அரிசியும் ஏற்றிக்கொண்டு திரும்பி வருகின்றன. இம்மார்க்கத்தில் கிழக்கு நாடுகளிலிருந்து ஏற்றுமதியாகும் சரக்குகள் ரப்பர், தேயிலை, பலவகைத் தானியங்கள், மாங்கனிஸ், தோல் முதலியனவாம். மேனுடுகளிலிருந்து இந்நாடுகளுக்கு வரும் சரக்குகள் நிலக்கரி, இரும்பு, எஃகு சாமான்கள் முதலியனவாம்.

மார்ச்சு, ஏப்ரல் மாதங்களிலும், டிசம்பர், ஜனவரி மாதங்களிலும் இந்தியாவின் கோதுமையும், பர்மாவின் அரிசியும் மேனுடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. ஜப்பான், சைனு தேசங்களின் கடல்மார்க்க வியாபாரத்திற்கு வேண்டிய கப்பல்கள் இந்தியா, பர்மா தேசங்களுக்கு வேண்டிய கப்பல்களைவிடக் குறைவாகவே யிருக்கின்றன. சைனு, ஜப்பான் தேசங்களுக்குச் செல்லும் கப்பல்கள் இந்தியாவிலிருந்து பருத்தியும், அரிசியும் ஐரோப்பாவிலிருந்து நிலக்கரி, சிமிண்டு, ரசாயனப்பொருள்கள் முதலியனவும் கொண்டுபோகின்றன. திரும்பி வருகையில் சோயாபீன்ஸ், பின்னல் தொழிலுக்குரிய வைக்கோல்கள், பட்டு முதலியன கொண்டுவரப்படுகின்றன. ஹாங்காங்குக்கும், மனில்லாவுக்கும் வடக்கேயுள்ள துறைமுகங்கள் பனமா கால்வாய் மூலமாய் வட அமெரிக்காவுக்குச் சமீபமாயிருப்பதால் வட

அமெரிக்காவின் கீழ்ப்பிரதேசங்களிலிருந்து கப்பல்கள் பனுமா கால்வாய் வழியாகச் சென்று, திரும்பி வருகையில் ஸூயஸ் கால்வாய் வழியாக வருகின்றன. பனுமா கால்வாய் திறக்கப்பட்ட காலமுதல் ஐரோப்பாவிலிருந்து தூர கிழக்கு நாடுகளுக்குள்ள கப்பற் போக்குவரவு அதிகமாக மாறுபாடு அடையவில்லை. யோக்க ஹாமாவிலிருந்து ஐரோப்பாவுக்குப் பனுமா கால்வாய் வழியாக 700 மைல்கள் குறைவாகவே இருக்கிறது. அப்படியிருந்தபோதிலும் கப்பல்கள் யோக்க ஹாமாவிலிருந்து இந்து மகா சமுத்திரவழியாயும், ஸூயஸ் வழியாயும் ஐரோப்பாவுக்குச் செல்லுகின்றன. ஏனெனில் இவ்வழிகள் சுற்றுவழியாயிருந்த போதிலும் கப்பலுக்கு வேண்டிய நிலக்கரி வேண்டிய இடங்களில் ஏற்றிச் செல்ல வசதியுள்ளன.

வட அட்லாண்டிக் சமுத்திரத்திலிருந்து இந்தியாவுக்கும், தூர கிழக்குப் பிரதேசங்களுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் கேப் வழி மார்க்கம். (The Cape Route from the North Atlantic to India, the Far East & Australia) :—இந்த மார்க்கத்திற்கு வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் இரண்டு முடிவு இடங்களிருக்கின்றன—ஐரோப்பாவின் வடமேற்குப் பிரதேசமும், வட அமெரிக்காவின் வடகிழக்குப் பிரதேசமும். கேப் முனைக்குக் கிழக்கே மூன்று முடிவு இடங்களிருக்கின்றன—வங்காளக்குடாக் கடற்றுறைமுகங்கள், கீழ் இந்தியத் தீவுகளின் துறைமுகங்கள், ஆஸ்திரேலியாவின் துறைமுகங்கள். சமுத்திரவழியின் அதிக நீளமும், அட்லாண்டிக், அண்டார்டிக் சமுத்திரங்களின் காற்றுப் போக்கும், இந்திய மகா சமுத்திரத்தின் பருவக்காற்றும் பாய்மரக் கப்பல்களுக்கு அதிக அனுகூலமாயிருக்கின்றன. இக்கடல் மார்க்கத்தில் இக்காலம் வரை பாய்மரக் கப்பல்களின் போக்குவரவு அதிகம். மரம், அரிசி, எண்ணை, கொப்ரா முதலிய சரக்குகள் பர்மாவிலிருந்தும், கிழக்கு இந்தியத் தீவுகளிலிருந்தும், ஆட்டு ரோமம், தோல்கள், கோதுமை முதலியன ஆஸ்திரேலியாவிலிருந்தும் ஏற்றுமதியாகி இக்கடல் மார்க்கமாகச் செல்லுகின்றன. ஸூயஸ் மார்க்கத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால் கேப் மார்க்கத்துக்குத் துறைமுகங்கள் குறைவாகவேயிருக்கின்றன. கப்பற்கரி ஏற்றுமிடங்கள் ஒன்றுக்கொன்று தூரத்திலிருக்கின்றன. வாயு

நிலை வசதிகளும் அவ்வளவு சௌகரியமில்லை. ஆஸ்திரேலியாவுக்குள்ள கடல் வழிகளில் கேப் மார்க்கமாயும், ஸூயஸ் வழியாயும் போவதில் அதிக வித்தியாசமில்லாமலிருந்த போதிலும், கேப் மார்க்கம் இந்தியாவிலிருந்தும், தூர் கிழக்கு நாடுகளிலிருந்தும் 4,000 மைல்கள் அதிகமாயிருக்கிறது. இயந்திரங்களால் இயக்கப் படும் கப்பல்களுக்கும், பாய்மரக்கப்பல்களுக்கும் உள்ள வழிகள் கேப் முனையில் ஒன்றுகூடுகின்றன. ஆனால் கேப் முனையை விட்ட பிறகு அவைகளின் மார்க்கங்கள் வித்தியாசப்படுகின்றன. பாய்மரக் கப்பல்களுக்குக் காற்றும், நீரோட்டமும் சௌகரியமாயிருக்கக்கூடிய வழியாய்ப் போவது சுற்றுவழியாய் இருந்தபோதிலும் விரைவாய்ப் போகும் வழியாகக் கருதப்படுகிறது. ஆகையால் பாய்மரக் கப்பல்கள் போகும் வழிகள் பருவக்காற்றுகளினால் தீர்மானிக்கப்பட்டு வளைந்த வழியாக இருக்கின்றன. நீராவிக் கப்பல்கள் எப்பொழுதும் நேராகவே செல்லுகின்றன. ஆனால் நீராவிக் கப்பல்களுக்கும் சுற்றுவழி சில வேளை சௌகரியமாயிருக்கிறது. பெரிய கப்பல்களுக்கு ஸூயஸ் வழியாய்ப் போவதில் அநேக நிர்பந்தங்கள் உண்டு. முதலாவது கால்வாய் வரி கொடுக்க வேண்டும். தவிரவும் ஸூயஸ் கால்வாயில் குறைந்த வேகத்தில் செல்ல வேண்டும். ஆகையால் கேப் மார்க்கம் தூரமாய் இருந்த போதிலும் இந்த நிர்பந்தங்களை உத்தேசித்து கப்பல்கள் அவ்வழியாகவே செல்லுகின்றன. ஸூயஸ் வழியாயுள்ள போக்குவரவில் ஈடுபட்டவை முக்கியமாக தபால்களும், பிரயாணிகளும், சீக்கிரம் அழிந்துவிடக்கூடிய சாமான்களும், குளிர்ச்சியில் பாதுகாக்கப்பட்ட உணவுப் பொருள்களாகிய இறைச்சி, பழம் முதலியனவேயாம். ஐரோப்பாவின் வடமேற்குப் பிரதேசங்களுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் உள்ள போக்குவரவு கேப் மார்க்கமாய் அதிகரித்து வருகின்றது. ஐக்கிய நாடுகளின் கிழக்கரைத் தேசங்களுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் ஏற்கனவே குறைவாயிருந்த கடற் போக்குவரத்து இப்பொழுது குறைந்துகொண்டே வருகிறது. இவ்விரண்டு கண்டங்களுக்குமுள்ள போக்குவரவு பனமா கால்வாய் வழியாய்ச் செல்லுகிறது. கேப் மார்க்கமாய்ச் செல்லும் மற்றொரு முக்கியமான கப்பற் போக்குவரவு ஐரோப்பாவிலிருந்தும், ஐக்கிய நாடுகளின் கிழக்கரைப் பிரதேசத்திலிருந்தும், ஆசியாவின் தென்

கிழக்குப் பிரதேசங்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் கப்பற்சுமையில் ஒன்றுக்குப் பாதி எண்ணெ; பாக்கி சரக்குகள் ஆசியாவுக்கும் கிழக்கு இந்திய தீவுகளுக்கும் கொண்டுபோகப்படும் செயற்கைப் பொருள்களாம். திரும்பி வரும் கப்பல்கள் ஜாவாவிலிருந்து சர்க்கரையும், சீயாமிலிருந்து அரிசியும், பிலிப்பைன்விலிருந்து காச்சிறக்கும் (hemp), சிங்கப்பூரிலிருந்து கொப்பரை, தேயிலை முதலியனவும் கொண்டுவருகின்றன.

பனமா கால்வாய் ஏற்பட்டதால் ஐரோப்பாவுக்கும், ஆசியாவுக்கும் அல்லது வட அமெரிக்காவின் கீழப்பிரதேசங்களுக்கும், ஆசியாவில் ஹாங்காங்கிலிருந்து தென்முகமாயுள்ள கடற்கரைப் பிரதேசங்களுக்கும் உள்ள தூரம் குறைவுபடவில்லை. நியூயார்க் நகரத்திலிருந்து ஷான்கைக்குப் போகும் தூரம் பனமா வழியாய்ப் போவதில் குறைவாயிருந்தபோதிலும், பழைய இந்தியச் சமுத்திரத்தின் வழி இன்னும் உபயோகப்பட்டுவருகிறது. தென் ஆபிரிக்காவுடன் ஏற்படும் கடல் மார்க்க வியாபாரம் வட அட்லாண்டிக்கிலிருந்து கேப் டவுனில் ஒன்றுசேருகிறது. 1922-ம் வருஷம் வரை தென் ஆபிரிக்காவிலிருந்து தங்கம், வைரம், ஆட்டு ரோமம், தீக்கோழி இறகுகள் முதலியன ஏற்றுமதிப் பொருள்களாக விளங்கின. இடம் நிறைக்கும் சரக்குகளாகிய வெட்டு மரம், தானியங்கள், இயந்தரங்கள் இறக்குமதிப் பொருள்களாக இருந்தன. தென் ஆபிரிக்காவுக்கு வரும் கப்பல்கள் அங்குள்ள துறைமுகங்களில் அநேக சரக்குகளை இறக்கிவிட்டு, அடிச்சுமையுடன் இந்தியா, ஆஸ்திரேலியா முதலிய கண்டங்களிலுள்ள துறைமுகங்களுக்குக் கப்பற் சரக்குகளுக்காகச் செல்வது வழக்கம். இப்பொழுது வணிகச் சமநிலை மாறியிருக்கிறது. தென் ஆபிரிக்காவின் ஏற்றுமதிகள் அதிக இடத்தை நிரப்பக்கூடிய பொருள்களாயிருக்கின்றன. ஏனென்றால் நிலக்கரியும், சோளமும் ஏராளமாக ஏற்றுமதியாகின்றன. ஆகையால் அதிகக் கப்பல்கள் அடிச்சுமையுடன் செல்வதில்லை.

அட்லாண்டிக் சமுத்திரத்தில் குறுக்காகச் செல்லும் இதர மார்க்கங்கள் (Other Transatlantic Routes) :— இவைகளை மூன்றாகப் பிரிக்கலாம்.

(1) ஐரோப்பாவையும், வட அமெரிக்காவையும் இணைக்கும் நீர்வழிகள்.

(2) ஐரோப்பாவையும், தென் அமெரிக்காவையும் இணைக்கும் நீர்வழிகள்.

(3) வட அமெரிக்காவையும், தென் அமெரிக்காவையும் இணைக்கும் நீர்வழிகள்.

ஐரோப்பாவிலிருந்து, தென் அமெரிக்காவுக்குத் தென் அட்லாண்டிக் சமுத்திர வழியாகச் செல்லும் மார்க்கம் (South Atlantic Route from Europe to S. America):-ஐரோப்பாவுக்கும் தென் அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்துக்குமுள்ள போக்குவரவில், 15% இங்கிலாந்துக் கப்பல்களால் நடைபெற்று வருகின்றன. நீராவிக் கப்பல் வசதிகளும், எளிதில் அழியக்கூடிய சரக்குகளைக் குளிர்ச்சியில் பாதுகாப்பதற்குள்ள வசதிகளும் ஏற்பட்டது முதல் சென்ற 50 வருஷ காலமாக இக்கடல் மார்க்கத்திற் போக்குவரவு அதிகரித்து வருகிறது. உலகத்தின் கப்பற் போக்குவரத்தில் இம் மார்க்கத்தை மூன்றாவதாகச் சொல்லலாம். ஐரோப்பியர் குடியேற்றமானது வட அமெரிக்காவைவிடத் தென் அமெரிக்காவிற் குறைவாகயிருக்கிறது; ஜனநெருக்கமும் குறைவு; கைத்தொழில்கள் ஏற்படுவதற்குரிய சாதனங்கள் குறைவாயிருப்பதால் விவசாயப் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழில்களே விருத்தியடைகின்றன. ஐரோப்பாவிலிருந்து தென் அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களாவன—நிலக்கரி, இரும்பு, எஃகு, ரசாயனப் பொருள்கள், சிமிண்டு முதலியனவாம். தென் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களாவன—தானியாதிகள், இறைச்சி, பதனிட்டதும், பதனிடாததுமான தோல்கள், காப்பிக்கொட்டை, ஆழிவிரை முதலியனவாம். ஐரோப்பாவுக்கும், தென் அமெரிக்காவுக்கும் ஏற்பட்டிருக்கிற போக்குவரவில் மூன்று விஷயங்கள் கவனிக்கத்தக்கவை:—முதலாவது, பிரயாணிகள் போக்குவரவு குறைவாகவேயிருக்கிறது. அப்பேர்ப்பட்ட குறைந்த பிரயாணிகளுள் வட ஐரோப்பாவைவிடத் தென் ஐரோப்பாவிலிருந்து தென் அமெரிக்கா

வுக்குக் குடியேறும் ஜனம் அதிகம் ; இரண்டாவது, நிலக்கரி வியாபாரம் அதிகம். பிரிட்டன் (Britain) தேசம் மட்டுமே வருஷத்திற்கு இரண்டு மிலியன் டன்கள் நிலக்கரி ஏற்றுமதி செய்கின்றது. மூன்றாவது, தென் அமெரிக்காவின் துறைமுகங்களில் நானாவித மான கைத்தொழில்கள் குறைவாகவேயிருக்கின்றன. ஐரோப்பாவுக்கும், தென் அமெரிக்காவுக்குமுள்ள கப்பற் போக்குவரவிற் கப்பலேற்றுமதி மிகவும் அதிகமாயிருக்கிறது. பிரேஸில் தேசத்திலிருந்து திரும்பும் கப்பல்களில் கப்பற் சரக்குகள் குறைவாயிருப்பதால் அதற்கு ஈடாக பிளேட் நதித் துறைமுகங்களிலிருந்து ஏராளமான பொருள்கள் ஏற்றுமதியாகின்றன. ஆர்ஜன்டைன், உருகுவே முதலிய தேசங்களின் துறைமுகங்களிலிருந்து வரும் கப்பற் சுமை அதிகமாயிருப்பதால், தென் ஆபிரிக்காவிலிருந்தும், தென் அமெரிக்காவின் பஸிபிக் சமுத்திரக்கரையிலிருந்தும் அதிக பாரமில்லாமல் வரும் கப்பல்கள் இத்துறைமுகங்களிலிருந்து ஏராளமான சரக்குகளை ஏற்றிச் செல்லுகின்றன.

வட அமேரிக்காவுக்கும், தென் அமேரிக்காவுக்கும் உள்ள நீர்மார்க்கங்கள் :—வட அமெரிக்காவிலுள்ள கீழ்க் கரைத் துறைமுகங்களுக்கும், தென் அமெரிக்காவிலுள்ள கீழ்க் கரைத் துறைமுகங்களுக்கும் போக்குவரவு அதிகரித்துக்கொண்டு வருகிறது. ஆனால் ஐரோப்பாவுக்கும், தென் அமெரிக்காவுக்கும் அட்லாண்டிக் சமுத்திரத்தின் குறுக்காக ஏற்பட்டிருக்கும் போக்குவரவைக் காட்டிலும் குறைவாகவேயிருக்கிறது. தென் அமெரிக்காவின் அட்லாண்டிக் கரைப் பிரதேசங்கள் ஐரோப்பாவுடன் அதிக வியாபாரம் செய்து வருகின்றன. தென் அமெரிக்காவுக்கும், இங்கிலாந்துக்குமுள்ள கடல்வணிகம் தென் அமெரிக்காவுக்கும், வட அமெரிக்காவுக்குமுள்ள வியாபாரத்தைவிட இரண்டு பங்கு அதிகமாகச் சொல்லலாம். வட அமெரிக்காவுக்கும், தென் அமெரிக்காவுக்குமுள்ள வியாபாரம் ஐரோப்பாவுக்கும், தென் அமெரிக்காவுக்குமுள்ள வியாபாரத்தைப் போலிருக்கிறது. ஆனால் ஒரு வித்தியாசமென்னவென்றால் ஐக்கிய நாடுகளிலிருந்து தென் அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் சரக்குகளில் மண்ணெண்ணெயும், மோட்டார் வண்டிகளும் முக்கியமானவை. ஐரோப்பாவி

லிருந்து தென் அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களில் நிலக்கரியும், மரமும், இருப்புப் பாதைச் சாமான்களும் முக்கிய மானவை.

பஸிபிக் சமுத்திரத்தின் நீர்வழிகள் (Seaways of the Pacific Ocean):—பஸிபிக் மகா சமுத்திரத்தின் பரப்பளவு அதிகமாயிருந்த போதிலும் கடல் வணிக முறையில் அதிக மேன்மையடையவில்லை. சென்ற நூற்றாண்டின் மத்திய கால முதல்தான் பஸிபிக் சமுத்திரத்தின் நீர்வழிகள் பிரபலமாயின. அமெரிக்காக் கண்டத்தின் தாதுப் பொருள்கள் சமீப காலத்திற் றான் வியாபார முறையில் வெட்டியெடுக்கப்பட்டன. தவிரவும் உலகக் கப்பலேற்றுமதியில் ஜப்பான் தேசத்துத் துறைமுகங்கள் ஈடுபடத் தொடங்கின. பாய்மரக் கப்பல்களின் போக்குவரவு பஸிபிக் சமுத்திரத்தில் அதிகமாக ஏற்படவில்லை.

ஆஸ்திரேலியா, நியூ ஸிலண்ட் தேசங்களின் துறைமுகங் களாகிய ஸிட்னியும், வெல்லிங்டனும், வட அமெரிக்காவின் ஸான்பிரான்ஸிஸ்கோ, வான்குவர் துறைமுகங்களுக்கும் நேராகக் கடல் மார்க்கம் ஒன்று இருக்கிறது. இது தவிர மற்ற எல்லாக் கடல் மார்க்கங்களும் பஸிபிக் சமுத்திரத்தின் ஓரமாகச் செல்லு வதேயொழிய குறுக்காகச் செல்லவில்லை. பஸிபிக் சமுத்திரத்திற் செல்லும் பாய்மரக் கப்பல்கள் ஒரே வழியை உபயோகிப்பதில்லை. வட அமெரிக்காவிலிருந்து சைனா, ஜப்பான் தேசங்களுக்குப் பஸிபிக் சமுத்திர வழியாய் வெட்டுமரம், மண்ணெண்ணை முதலிய சரக்குகளை ஏற்றிச்செல்லும் பாய்மரக் கப்பல்கள் வியாபாரக் காற்றுகளை அநுசரித்துச் செல்லுகின்றன. திரும்பிவரும் பொழுது மித மண்டல மேல் காற்றுகளை அநுசரித்து வட பக்க மாக வருகின்றன. அமெரிக்காவிலிருந்து பஸிபிக் சமுத்திர வழியாய் மேற்கே செல்லும் கப்பல்களின் ஏற்றுமதிப் பொருள் களாவன—பருத்தி, இரும்பு, எஃகுச் சாமான்கள், நெசவுப் பொருள்கள், மண்ணெண்ணெய் முதலியவை.

அக்கப்பல்கள் திரும்பி வருகையில் கொண்டுவரும் பொருள் களாவன—பட்டு, சோயாபீன்ஸ், எண்ணை, விளையாட்டுச்

சாமான்கள், தேயிலை, கொப்பரை, சர்க்கரை, ரப்பர், அரிசி முதலியவைகளேயாம். இறக்கேற்றுத் துறைமுகங்களாகிய யோக்கஹாம, ஷான்கை, ஹாங்காங், சிங்கப்பூர், மனில்லா முதலியன பஸிவிக் சமுத்திரத்தின் மேற்குக் கரையோரத்திலுள்ள போக்குவரவுக்கு இருப்பிடங்களாயிருக்கின்றன. ஆஸ்திரேலியா கண்டத்தின் போக்குவரவு அநேகமாக இந்திய மகாசமுத்திரத்தின் வழியாகச் செல்லுகிறது. தென் அமெரிக்காவின் பஸிவிக் சமுத்திரக்கரையோரமுள்ள தேசங்களின் போக்குவரவு பஸிவிக் சமுத்திர வழியாய்ச் செல்லாமல் பனமா அல்லது கேப் ஹார்ன் மூலமாய் அட்லாண்டிக் சமுத்திர வழியாகச் செல்லுகின்றன. சில்லியிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களாகிய காலனை, செம்பு, தோல்கள், புகையிலை முதலியன மகல்லன் ஜலசந்தி வழியாய்ச் செல்லுகின்றன. சில்லிக்கு வடக்கேயுள்ள தேசங்களின் ஏற்றுமதிப் பொருள்களும் தபால்களும், பிரயாணிகளும் பனமாக் கால்வாய் வழியே உபயோகிக்கின்றனர்.

துறைமுகங்கள் (Seaports)

கடற் போக்குவரவுக்குத் துறைமுகங்கள் அவசியம். கப்பல், சரக்குகள் ஏற்றவும் இறக்கவும் கப்பல் தங்கும் இடங்கள் வேண்டும். கப்பல் சரக்குகளில் சில தரை மார்க்கமாய்ச் சில இடங்களுக்குச் செல்லவேண்டியிருப்பதால் அவைகள் துறைமுகங்கள் வழியாய்ச் செல்லுகின்றன. பொதுவாக ஒரு கப்பல் சரக்குகள் பூராவும் நீர்வழியால் ஒரே இடத்திற்குப் போவதில்லை. பற்பல இடங்களுக்குக் கப்பல் சரக்குகள் செல்லுவதால் வேண்டிய சரக்குகள் அவ்விடங்களுக்குரிய துறைமுகங்கள் மூலமாய்ப் பிரிவினையாகின்றன. ஒவ்வொரு துறைமுகத்திலும் கப்பல் சரக்குகள் ஏற்றவும், இறக்கவும், கப்பல் தங்குமிடத்தில் சரக்குகளைக் காற்று, மழையால் சேதப்படாமல் வைத்திருப்பதற்குரிய இடவசதிகள் முதலியன அவசியம் வேண்டும். கப்பல் தங்குமிடம் தவிர, அவ்விடத்திலிருந்து உள்நாட்டுக்குப் போக்குவரவு வசதிகளும் அவசியம். மால்டா தீவில் வலெட்டாவும், ஸிலோனில் திருன்காமலேயும் இயற்கையாய் அமைந்த நேர்த்தியான கப்பல் தங்குமிடங்களாயிருக்கின்றன. ஆனல் அவை முக்கிய சமுத்திர ஸ்தலங்களே

யொழிய துறைமுகங்களாகக் கருதப்படவில்லை. ஏனென்றால் தகுந்த வர்த்தகப் போக்குவரவும், உள்நாட்டுடன் போக்குவரவு வசதிகளும் இல்லை. சில துறைமுகங்கள் சரக்குகளை நீர்வழியாக ஏற்றிச் செல்லுவதால் ஏற்படும் லாபத்தை அடைவதற்காகக் கூடியமட்டும் உள்நாட்டிற்குள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு உதாரணமாக மான்டிரீயல், லண்டன், ஹாம்பர்க், ஆன்டெர்ப், புயூனஸ் அயிர்ஸ் முதலியவற்றை எடுத்துக் கூறலாம். ஒரு நதியின் முகத்துவாரத்தில் அமைந்திருக்கும் துறைமுகமானது உள்நாட்டு நீர்வழிகள் மூலமாய் லாபகரமாகச் சரக்குகளை அனுப்ப முடியும். சில உள்நாட்டுத் துறைமுகங்கள் கால்வாய்கள் மூலமாகச் சமுத்திரத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. (உதாரணமாக, மான்செஸ்டர், ஆம்ஸ்டர்டாம், நியூஆர்லியன்ஸ்).

சென்ற 50 வருஷங்களாகக் கடல்வணிகம் சில குறிப்பிட்ட துறைமுகங்கள் மூலமாய் நடந்துவருகின்றன. கப்பல்கள் சரக்குகளை அதிகமாக ஏற்றும்பொருட்டுப் பெரியதாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட பெரிய கப்பல்கள் அதிகப்பட அவைகளின் போக்குவரவுக்கேற்ற துறைமுகங்கள் குறைவாகவேயிருக்கின்றன. நியூயார்க், ஸான் பிரான்ஸிஸ்கோ, வான்குவர், கேப்டவுன், கொழும்பு, சிட்னி, யோக்கஹாம, வால்பரைஸோ, மார்ஸேயில் முதலிய துறைமுகங்களில் நேர்த்தியான கப்பல் தங்குமிடங்கள் இருக்கின்றன. அதற்குக் காரணம் இத்துறைமுகங்களுக்கும் கடற்கரையை ஒட்டிய உள்நாட்டுப் பள்ளத்தாக்குகளுக்கும் போக்குவரவு வசதிகளிருக்கின்றன. சில காரணங்களால் சில துறைமுகங்களுக்கு நல்ல கப்பல் தங்குமிடங்கள் அமைந்திருக்கின்றன. உதாரணமாகப் பம்பாய், ஹாங்காங் முதலிய துறைமுகங்களில் கப்பல் தங்குமிடங்கள் கடற்கரைக்கும் அதன் சமீபத்திலுள்ள தீவுக்கும் மத்தியில் அமைந்திருக்கின்றன. மாண்டிரீல், கியூபெக் முதலிய துறைமுகங்கள் நதிமுகத்துவாரத்திலிருக்கின்றன. மேற்கூறிய துறைமுகங்களெல்லாம் முதல் தரமான துறைமுகங்களாகக் கருதப்படுகின்றன.

முதல் தரமான துறைமுகங்களின் வேறுசில அம்சங்கள் கவனிக்கத்தக்கவை. அதாவது கடல் உப்பும் சமயத்தில் 25

அடியிலிருந்து 30 அடி வரை அகலமுள்ளதாயிருக்கவேண்டும்; தவிரவும் 450 அடி முதல் 600 அடி வரை நீளமுள்ள கப்பல்களுக்குப் போக்குவரவுக்கும், தங்கவும் வேண்டிய வசதிகள் இருக்கவேண்டும். பெரிய நீராவி மோட்டார்க் கப்பல்கள் தங்குவதற்கும், போக்குவரவுக்கும் வசதிகளில்லாத துறைமுகங்கள் முதற் தரத் துறைமுகங்களாக இக்காலத்தில் கருதப்படவில்லை. உலக வர்த்தகத்தின் மாறுபாட்டினுற் சில துறைமுகங்கள் மேன்மையும் சில துறைமுகங்கள் க்ஷீணமும் அடைந்திருக்கின்றன.

இந்தியாவுக்கு கேப் மார்க்கம் கண்டுபிடித்தவுடன் மத்திய தரைக் கடலிலுள்ள துறைமுகங்களின் மேன்மை குன்றி லிஸ்பன் துறைமுகம் உன்னத பதவி அடைந்தது. கொஞ்சகாலத்தில் இந்தியாவிலும், ஆசியாவின் தென்கிழக்குப் பிரதேசங்களிலும் ராஜீய பொருளாக்கச் செல்வாக்குப் போர்ச்சுகல் தேசத்திலிருந்து, ஹாலண்டுக்கும், கடைசியாக பிரிட்டனுக்கும் சென்றவுடன் முதலில் ஆம்ஸ்டர்டாமும், பிறகு லண்டனும் கிழக்குப் பிரதேசங்களின் சரக்குகளை வாங்குவதற்கும், விற்பதற்கும் ஒரு இருப்பிடமாயிற்று. ஸூயஸ் கால்வாய் ஏற்பட்டவுடன் ஜினேவா, மார்செயில் துறைமுகங்களுக்குப் புனர் துவாரோஹணம் ஏற்பட்டது. பனமாக் கால்வாய் ஏற்பட்டது முதல் வட அமெரிக்காவின் பஸிபிக்கரைத் துறைமுகங்கள் மூலமாய்ப் போக்குவரவு அதிகரித்து வருகிறது. நிலக்கரிக்குப் பதிலாக மின்சார சக்தியினல் அதிகத் தொழில்கள் ஏற்பட்டிருப்பதால் நார்வே தேசத்தில் இக்காலம் வரை சிறியதாயிருந்த துறைமுகங்கள் வியாபார நிலைமையில் மேன்மையடைந்திருக்கின்றன.

சென்ற 50 வருஷங்களாக உலகத்தின் துறைமுகங்களிலுள்ள போக்குவரத்து அதிக மாறுபாடு அடைந்திருக்கிறது. இறக்கேற்றுத்துறைப் போக்குவரவு குறைந்து துறைமுகங்கள் மூலமாய்ச் செல்லும் சில மூலப்பொருள்களும், செயற்கைப் பொருள்களும் அதிகரித்துவருகின்றன. கடல்மார்க்க வணிகம் பெருகுவதாலும், அநேக தேசங்கள் கடல்மார்க்க வணிகத்தில் ஈடுபடுவதாலும் கப்பலேற்றுமதி நேரிடையாகவே அநேக தேசங்

களுக்கு ஏற்பட்டிருக்கிறது. கப்பற் சரக்குகள் மொத்தமாய் அனுப்பப்பட்டு வருகின்றன. வட அமெரிக்கா ஐக்கிய நாடுகளுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் நேராகக் கப்பலேற்றுமதி நடந்து வருகின்றது. ஆனல் தேயிலை சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஐக்கிய நாடுகளுக்கு இந்தியா, சிலோன் தேசங்களிலிருந்து செல்லும் தேயிலை நேரில் செல்லாமல் லண்டன் இன்னும் தேயிலை வியாபாரத்திற்கு இறக்கேற்றுத்துறையாயிருக்கிறது. பெரிய கப்பல்கள் செல்லும் மார்க்கங்கள் சில சமயம் சுருக்குவழியில்லாத போதிலும் கொஞ்ச சாமான்கள் அனுப்புவதில் அவைகளை அப் பெரிய கப்பல்கள் மூலமாய் அனுப்புவது லாபகரமாயிருக்கிறது. இறக்கேற்றுத்துறை வணிகம் க்ஷீணமடைந்திருப்பதற்கு வேறு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, கரை மார்க்கப் போக்குவரவும், கடல் மார்க்கப் போக்குவரவும் ஒரே சங்கத்தாருடைய ஆதினத்தில் இருந்துகொண்டு வருகிறது. இரண்டாவது தரம்தரமாய்ப் பிரிக்கப்பட்ட சரக்குகள் உலக வியாபாரத்தில் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன.

துறைமுகங்கள் பலவிதம். சில துறைமுகங்கள் தரை மார்க்கமாய் வரும் சரக்குகளைக் கப்பலில் ஏற்றுமிடங்களாயிருக்கின்றன. சிட்டகாங் (Chittagong in Bengal), கால்வெஸ்டன் (Galveston in U. S. A.) முறையே தேயிலை, பருத்தியாய சரக்குகளை ஏற்றுவதற்குக் கப்பல் தங்கும் இடங்களாக இருக்கின்றன. அநேக துறைமுகங்கள் அநேகவித சரக்குகளை மாற்றுமிடமாக இருக்கின்றன. வேறுசில துறைமுகங்களில் போக்குவரவு முயற்சியும் ஒன்றுசேர்ந்திருக்கின்றன. ஒரே இடத்தில் கொடுக்கல் வாங்கல் வசதிகள் இருப்பதால் லிவர்ப்பூல் துறைமுகம் உலகத்திலுள்ள பருத்திக்கெல்லாம் விற்பனை இடமாயிருக்கிறது. அநேக சரக்குகளுக்கு லண்டன் நகரம் ஒரு உலகச் சந்தையாயிருக்கிறது. கடல்மேல் போக்குவரவு லாபகரமாயிருப்பதால் எல்லாப் பெரிய துறைமுகங்களிலும் ஏற்றுமதி, இறக்குமதிக்கு வேண்டிய வசதிகள் ஏற்பட்டு வருகின்றன. சில மூலப்பொருள்கள் உள்நாட்டுப் பிரதேசங்களைவிட துறைமுகங்களில் லாபமாய்க் கிடைப்பதால் அநேகம் தொழிற்சாலைகள் துறைமுகப்பட்டணங்களில் ஏற்படு

கின்றன. உள்நாட்டுப் பிரதேசங்களிலிருந்து சரக்குகளைத் தரைமார்க்கமாய்த் துறைமுகங்களுக்குக் கொண்டுவருவதற்குச் செலவு ஏற்படுவதால், இச்செலவுகளைக் குறைப்பதற்குப் பிரிட்டன் தேசத்தில் அநேக கைத்தொழில்கள், கூடியமட்டிலும் சமுத்திரக் கரையோரங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. பளுவான சாமான்களாகிய தாதுப்பொருள்கள், மரம், கோதுமை சர்க்கரை, எண்ணெவித்துக்கள், எண்ணெ முதலியன மொத்தமாகவே அனுப்பப்படுவதால் இவை சம்பந்தமான தொழிற்சாலைகள் கடற்கரையோரமே அமைக்கப்படுகின்றன. உதாரணமாகப் பிரிட்டன் தேசத்தில் உலோகங்கள் சம்பந்தமான கைத்தொழில்கள் தென் வேல்ஸிலும், இங்கிலாந்தின் வடகிழக்குப் பாகத்திலும், கிளைடு (Clyde) பிரதேசத்திலும் அமைந்திருக்கின்றன ; மரவேலை பேப்பர் தொழிற்சாலைகள் லண்டனைச் சுற்றிவர அமைந்திருக்கின்றன ; நெருப்புப்பெட்டித் தொழிற்சாலைகளில் அநேகம் லிவர்ப்பூல் துறைமுகத்தில் காணலாம் ; சர்க்கரையைச் சுத்தி செய்யும் சாலைகள் கிளைடு, தெம்ஸ் பிரதேசத்திலும், தாவர வெண்ணெ, சோப், மெழுகுவர்த்தி, வர்ணங்கள் முதலியவை சம்பந்தமான தொழிற்சாலைகள் முக்கியமான துறைமுகங்கள் பக்கத்திலும் காணலாம். இதே மாதிரியாக மற்ற தேசங்களிலும் தொழிற்சாலைகள் துறைமுகங்களுக்குச் சமீபமாக இருப்பதைக் காணலாம். உதாரணமாகச் சணற்றொழிற் சாலைகள் கல்கத்தாத் துறைமுகத்தைச் சார்ந்திருக்கின்றன ; கோகோவும், தாவர வெண்ணெத் தொழில்களும் ராட்டர்டாம் (Rotterdam) துறைமுகத்தைச் சார்ந்திருக்கின்றன ; வித்துக்களிலிருந்து எண்ணெகளை உற்பத்திசெய்யும் தொழில்கள் மார்செயில் (Marseilles) துறைமுகத்தைச் சார்ந்திருக்கின்றன.

வியாபாரத்திற்கும், தொழில்களுக்கும் செல்வாதார வசதிகள் அவசியம். ஆகையால் முக்கியத் துறைமுகங்களில் பாங்குகள் (Banks) ஏற்பட்டிருக்கின்றன. நாணயமாற்றும் பாங்குகள் அநேகமாகத் துறைமுகங்களில் ஸ்தாபிக்கப்படுகின்றன. உலகத்திலுள்ள 60 பெரிய நகரங்களில் 32 நகரங்கள் துறைமுகங்களேயாம்.

ஆகாயத்தின்மேற் போக்குவரவு, தபால், தந்தி, கம்பியில்லாத் தந்தி, பத்திரிகைகள் (Air Transport, Posts, Telegraphs, Wireless, Newspapers)

ஆகாயத்தின்மேற் போக்குவரவும் பூகோள நிலையும் (Geographical Factors in Aviation) :—ஆகாயத்திற் போக்குவரவு வசதிகளை நிர்ணயிக்கக்கூடிய பூகோள அம்சங்களில் சீதோஷ்ண நிலை மிகவும் முக்கியமானது. கடற் போக்குவரவைவிட ஆகாயத்தின்மேற் போக்குவரவு காற்று, மழை முதலியவற்றைப் பொறுத்திருக்கின்றன. அதிக மழை, வெண்பனிப் புயல் முதலியன கப்பற் பிரயாணம் சம்பந்தப்பட்ட விஷயத்திற் கப்பல்களைத் தாமதிக்கப்பண்ணுகின்றன. ஆனல் ஆகாயத்தின்மேற் பிரயாணத்தில் வாயுநிலை சரியாயில்லாவிடில் ஆகாயக்கப்பல்கள் கீழே இறங்கும்படி ஏற்படுகிறது. மூடுபனியுள்ள தரைகளில் ஆகாயக்கப்பல்கள் இலகுவாக இறங்கமுடிவதில்லை. சமுத்திரத்தில் ஒரு கப்பல் ஓரிடத்தில் அநேக மணி நேரம் தங்கமுடியும். ஆனல் ஆகாயக்கப்பலானது அம்மாதிரித் தங்கமுடியாது. காற்றின் வன்மையும் போக்கும் அடிக்கடி மாறிக்கொண்டிருப்பதால் அதை நிர்ணயித்து ஆகாயக்கப்பல்கள் செல்லவேண்டியதாயிருக்கிறது. ஆகாயக் கப்பல்களின் கால அட்டவணையில் கப்பல்கள் புறப்படும் நேரந்தான் குறிப்பிடப்படுகின்றன. அவைகள் போய்ச்சேரும் நேரம் குறிப்பிடுவதில்லை. வெகுதூரம் செல்லும் ஆகாயக்கப்பல்கள் காற்றுக்களால் பாதிக்கப்படுகின்றன. விமானங்கள் செல்லும் வழி நிலத்தின் இயற்கை அமைப்பையும் பொறுத்திருக்கிறது. இறங்குவதற்குச் சதுப்பு நிலமில்லாமல் ஒரே சமமாகவுள்ள தரைவேண்டும். உயரமான மலைத்தொகுதிகள் ஆகாயமார்க்கமாய்ச் செல்லும் கப்பல்களுக்கு ஒரு இடையூருயிருக்கின்றன. மலைப்பிரதேசங்களில் காற்றுநிலை ஒரேமாதிரியில்லாமல் அடிக்கடி புயற்காற்றுகவும் மாறும் தன்மை யுடையனவாயும் இருக்கின்றன. ஆகையால் அம்மலைப்பிரதேசங்களின்மேற் பறந்து செல்லுதல் அபாயத்திற்கு ஏதுவாயிருக்கிறது. ஆகையால் வணிக சம்பந்தமான

ஆகாயப் போக்குவரவு தாழ்ந்த பிரதேசங்களின் மூலமாகவே ஏற்படுகிறது. விமானங்கள் மலைப்பிரதேசங்களின் குறுக்கே செல்லாமல் அவைகளைச் சுற்றிச் செல்லுகின்றன. மியூனிக் (Munich) நகரத்திலிருந்து ஆல்ப்ஸ் மலையின்மேலாக மைலானுக்குப் (Milan) போகும் ஆகாயக்கப்பல்களும், சிக்காகோ (Chicago) நகரத்திலிருந்து ஸான் பிரான்ஸிஸ்கோ (San Francisco) நகரத்திற்கு ராக்கீஸ் மலைமேலாகச் செல்லும் கப்பல்களும் கூடியமட்டும் பள்ளத்தாக்குகளையும், மலைப்பிளவுகளையும் அனுசரித்துச் செல்லுகின்றன. ஆகாயப் போக்குவரவு நாகரீகமடைந்த தேசத்தாரால் விருத்தியடைந்து வருகிறது.

ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் தொழில்களும், வியாபாரமும் தேர்ச்சியடைந்திருப்பதால் தரைமார்க்க வசதிகள் தவிர, ஆகாயப் போக்குவரவுகள் துரிதமாய்ச் செல்லுவதற்கும், வணிக சம்பந்தத்திற்கும் அதிகமாக வழங்கிவருகின்றன. சமீப காலத்தில் முன்னேற்றமடைந்த தேசங்களாகிய ஆஸ்திரேலியா, ஆர்ஜென்டினா, வட அமெரிக்காவின் விவசாயப் பிரதேசங்கள் முதலியவற்றில் தரை வழிகள் இன்றும் அதிகமாக விருத்தியடையாததால் ஆகாயப் போக்குவரவு அதிக நன்மை யளித்து வருகிறது. பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்குப் போகும் மார்க்கத்தில் கிராய்டன்—பேஸல் மார்க்கத்திலும், அலெக்ஸாண்டிரிய–பாக்டாட்—கராச்சி மார்க்கத்திலும் தரைமேல் செல்லும் விமானங்களும், மத்தியதரைக்கடலில் ஜினேவாவிலிருந்து அலெக்ஸாண்டிரிய வரை ஜலத்தின் மேலாகச் செல்லும் விமானங்களும் உபயோகப்பட்டுவருகின்றன.

ஆகாயத்தின்மேற் போக்குவரவும், தரைமேற் போக்குவரவும் ஒப்பிட்டுப் பார்த்தல்:—Air Transport compared with Surface Transport):—ரெயிலையும், நீராவிக்கப்பல்களையும்விட விமானங்கள் வேகமாகச் செல்லுகின்றன. ஆனால் சுமை கொள்ளளவு மிகவும்குறைவு. ஆகாயமார்க்கமாய் எடுத்துச் செல்லும் சரக்குகளுக்கு இன்ஷுரன்ஸ் தவணைக் கட்டணம் குறைவாயிருப்பதால் ஆகாயமார்க்கமாய்ச் செல்லுதல் அவ்வளவு அபாயமாகக் கருதப்படவில்லை. மேனாடுகளில் ஜனங்கள் பிர

யாணமும், தபால்களும், ஆகாய விமானங்கள் மூலமாய் நடை பெற்று வருகிறது. முன்னூறு விண்ணூர்திகளிற் கொள்ளும் சாமான்கள் ஒரு ரெயில்வண்டியில் ஏற்றிச் செல்லமுடியும். ஆகாயமார்க்கப் பிரயாணம் அதிகச் செலவுள்ளதாயிருக்கிறது. ஒரு டன் சாமான்களுக்கு ஒரு மைலுக்கு ஆகாயமார்க்கமாய்ச் செல்ல 1 ஷி. 10 பென்ஸும், ரெயில்மார்க்கமாய் 2½ பென்ஸும் ஆகிறது. ஆகாய மார்க்கத்தில் சமீபதூரப் பிரயாணத்திற்கு நெடுந்தூரப் பிரயாணத்தைவிடச் சத்தக்கூலி அதிகமாயிருக்கிறது. வியாபார வழியில் உபயோகப்பட்டுவரும் விண்ணூர்திகள் ரெயில்களைவிட இரண்டு பங்கும், புகைக்கப்பல்களைவிட நான்கு மடங்கும் வேகமாகச் செல்லுகின்றன. ஆகையால் தபால்களுக்கும், வியாபார விஷயமாய்த் துரிதமாய்ச் செல்லுவதற்கும் ஆகாய விமானங்கள் சௌகரியமாயிருக்கின்றன.

ஆகாயமார்க்கமாய்ப் போக்குவரத்தல் (Aerial Transport):—தபால்களும், கனமில்லாத பொருள்களும், அதிக விலையுள்ளதும் ஆனால் அதிக இடத்தை நிரப்பாததுமான பொருள்களும் ஆகாய விமானங்கள் மூலமாய் அனுப்பப்படுகின்றன. மேனாடுகளில் பட்டுகள், வாசனைத் திரவியங்கள், மோட்டார் வண்டிகளின் உறுப்புகள், வாத்தியங்கள் முதலியன ஆகாய விமானங்கள் மூலமாய் அனுப்பப்படுகின்றன. ஐரோப்பாவின் ஆகாய மார்க்கங்களில் சாமான்களைக் காட்டிலும் பிரயாணிகளின் போக்குவரவே அதிக லாபகரமாயிருக்கிறது. ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் ஆகாய விமானங்களில் பிரயாணிகளே அதிகமாக இருக்கிறார்கள். வட அமெரிக்காவில் விமானங்களில் 100-க்கு 60 தபால்களையும் பிரயாணிகளையும் தூக்கிச் செல்லுகின்றன. உலகத்தில் பழக்கத்திலிருக்கும் குறிப்பிட்ட ஆகாய வழிகள் 56,000 மைல்கள் தூரமிருக்கின்றன. தற்காலத்தில் 1,000 மைல்கள் வரை இரவும் பகலும் ஓரிடம் தங்காமல் ஆகாய விமானங்கள் செல்ல முடியும். ஆகாய விமானங்கள் நாளுக்கு நாள் சீர்திருத்தங்கள் அடைந்து வருகின்றன.

தபால், தந்தி, டேலிபோன், கம்பியில்லாத்தந்தி முதலியன :- ஷை அறிவிப்புச் சாதனங்களினால் பன்னாட்டு வியாபாரமும், உலக

நாகரீகமும் அதிகரித்து வருகின்றன. இப்பேர்ப்பட்ட அறிவிப்பு வசதிகள் சென்ற நூற்றாண்டின் ஆரம்பகாலமுதல் ஏற்பட்டு விர்த்தியடைந்து வருகின்றன. இது விஷயமாகச் சில முக்கிய வருஷங்கள் கவனிக்கத்தக்கவை.

1840 பிரிட்டனில் பென்ஸ் போஸ்டேஜ் ஸ்தாபிக்கப்பட்டது.

1849 ராயட்டர் அனுப்பும் உலகச் செய்தி ஸ்தாபனம் (Reuter's News Agency)

1850 தந்தியின் உபயோகம் ஆரம்பம்.

1855 பென்ஸ் நியூஸ்பேபர் ஆரம்பம்.

1866 அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் முதல் தந்திக் கம்பிகள் (Cables) ஸ்தாபிக்கப்பட்டன.

1874 பொதுத் தபாற் சங்கம் (General Postal Union) ஆரம்பம்

1876 டெலிபோன் ஆரம்பம்

1901 மார்க்கோனி என்பவர் கண்டுபிடித்த கம்பியில்லாத் தந்தி ஆரம்பம்.

1902 பஸிபிக் மகா சமுத்திரத்தில் முதல் தந்திக் கம்பிகள் (Cables) ஸ்தாபனம்.

1907 அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் குறுக்காகக் கம்பி யில்லாத் தந்தியின் உபயோகம் ஆரம்பம்.

1927 அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் மூலமாய்க் கம்பி யில்லாத் தந்தியும், டெலிபோனும் ஸ்தாபனம்.

XIII

உலக வர்த்தகம்

(World Commerce)

உலக வர்த்தகத்தின் அம்சங்களை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்—வணிகம் (Trade), மார்க்க ஸாதனம் (Transport), செல்வாதாரம். இவற்றைக் கீழ்க்கண்டபடி விளக்கலாம்.


வணிகம்
(Trade)

- உள்நாட்டு வணிகம் (Home Trade)
  - மொத்த வியாபாரம் (Wholesale Trade)
  - சில்லறை வியாபாரம் (Retail Trade)
- வெளிநாட்டு வணிகம் (Foreign Trade)
  - இறக்குமதி (Import)
  - ஏற்றுமதி (Export)


மார்க்க ஸாதனம்
(Transport)

- நீர்மேல் போக்குவரவு
  - நதிகள், ஏரிகள், கால்வாய்கள்
  - பிரயாணிக் கப்பல்கள் (Liners)
    நாடோடிக் கப்பல்கள் (Tramps)
- ஆகாயத்தின்மேல் போக்குவரவு
- தரைமேல் போக்குவரவு
  - மோட்டார்
  - ரெயில்

செல்வாதாரம்
(Finance)



மானிட வதப்புப் பொருள்கள் அடைவதற்குள்ள கூட்டு முயற்சிகள்
(Human Wants Supplied by Combined Efforts)



உள்நாட்டு வியாபாரம் மொத்தமாயும் சில்லறையாகவும் நடைபெறுகிறது. வெளிநாட்டு வியாபாரம் ஏற்றுமதி, இறக்குமதி மூலமாகப் பல தேசங்களுடன் நடக்கிறது. இங்கிலாந்தைப் போலுள்ள சில தேசங்களின் செழிப்புக்கு வெளிநாட்டு வியாபாரமே முக்கியம். இங்கிலாந்து தேசத்தார் செயற்கைப் பொருள்களைப் பல தேசங்களுக்கு அனுப்பி இயற்கைப் பொருள்களையும் உணவுப் பொருள்களையும் அத்தேசங்களிலிருந்து இறக்குமதி செய்கின்றனர். இம்மாதிரி செய்யாவிடில் இங்கிலாந்து தேசத்துக் கைத்தொழில்களுக்குக் கச்சாச் சரக்குகள் கிடைப்பது அரிது. தவிரவும் இம்மாதிரி வியாபாரத்தால் உணவுப்பொருள்களையும் இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம். கைத்தொழில்கள் விருத்தியடையாவிடின் இங்கிலாந்து தேசத்துப் பணச் செழிப்பு குறைவடையும்; தவிரவும் வேலையில்லாத் திண்டாட்டம் அத்தேசத்துத் தொழிலாளிகளுக்கு ஏற்படும். தேசத்தின் சுபிட்சமும் குன்றும். இக்காரணங்களினாலே இங்கிலாந்து தேசத்தாருக்குப் பன்னாட்டு வியாபாரம் இன்றியமையாதது. வெளிநாட்டு வியாபாரம் விருத்தியடையப் பாங்குகள், கமிஷன் ஏஜெண்டுகள், மொத்த வியாபாரிகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள், போக்குவரவு சாதனங்கள், வாணிபத்தில் முதலைப் போடுதல் முதலியவற்றில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு தேசத்தார் வேண்டிய பொருள்களில் சிலவற்றைத் தம் நாட்டிலே உற்பத்தி செய்யாமல் அன்னிய நாடுகளிலிருந்து ஏன் பெற்றுக்கொள்ளுகின்றனர்? பன்னாட்டு வியாபாரத்தாற் பண்டம் மாற்றும் தேசங்கள் பரஸ்பரம் லாபம் அடையலாம். எவ்வாறு லாபம் அடையலாமென்பதை ஒரு உதாரணத்தால் விளக்குவோம். ஒரு குறிப்பிட்ட கூலிகளின் உழைப்பால் இங்கிலாந்தில் 6 கம்பளிகள் அல்லது 4 மரக்கால் கோதுமை உண்டாக்கமுடியுமென்று வைத்துக் கொள்வோம். அதேமாதிரி கூலி உழைப்பால் இந்தியாவில் 3 கம்பளி அல்லது 6 மரக்கால் கோதுமை உண்டாக்கமுடியுமென்று வைத்துக்கொள்ளுவோம். இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு 6 மரக்கால் கோதுமை அனுப்பினால், இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு 6 கம்பளிகள் அனுப்பமுடியும். இங்கிலாந்துக்குக் கோதுமையின் மதிப்பு கம்பளியைவிட 1½ மடங்கு

அதிகம். ஆகையால் இங்கிலாந்து தேசத்தார் 6 கம்பளிக்குப் பதிலாக 6 மரக்கால் கோதுமையை மாற்றிக்கொண்டால், அவர்களுக்குக் கூலி உழைப்பு ஒன்றுக்குப் பாதி லாபம். இந்தியாவுக்கு இங்கிலாந்தைவிட கூட ஒரு பங்கு கூலி உழைப்பு லாபம். இவ்விதமாக இரண்டு தேசங்களும் பரஸ்பரம் லாபம் அடைகின்றன.

உள்நாட்டு வியாபாரம் (Home Trade):—உள்நாட்டு வியாபாரத்தை இரண்டாகப் பிரிக்கலாம்—மொத்த வியாபாரம் (Wholesale Trade), சில்லறை வியாபாரம் (Retail Trade). மொத்த வியாபாரி சரக்குகளை மொத்தமாய் வாங்கி மொத்தமாய் விற்கிறான்; சில்லறை வியாபாரி கொஞ்சம் கொஞ்சமாய் வாங்கி விற்கிறான். மொத்த வியாபாரியும், சில்லறை வியாபாரியும் ஒருவரை ஒருவர் சார்ந்திருக்கின்றனர். சில்லறை வியாபாரி மொத்த வியாபாரியிடமிருந்து சரக்குகளை வாங்கவேண்டியதாயிருக்கிறது. மொத்த வியாபாரியின் சரக்குகள் சில்லறை வியாபாரிகளின் மூலமாய் விற்பனையாகின்றன.


மொத்த வியாபாரியின் சரக்குகள் கிடைக்கும் இடம் அவ்வியாபாரத்தின் தன்மையைப் பொறுத்திருக்கிறது. செயற்கைப் பொருள் வியாபாரமாயின் மொத்த வியாபாரி சரக்குகளைக் கைத்தொழிலாளிகளிடம் வாங்குகிறான்; உணவுப்பொருள்களை மொத்தமாய் வாங்கி, சில்லறை வியாபாரிகளுக்குப் பிரிவினை செய்யும் வியாபாரமாயிருந்தால், விளைச்சற் பொருள்களை விளைவிப்போர்களிடமிருந்தும், தரகனிடமிருந்தும் வாங்குகிறான்.

கைத்தொழிலாளர்களால் மூலப்பொருள்கள் செயற்கைப் பொருள்களாக ஆக்கப்பட்டு மொத்த வியாபாரிக்கு விற்பனையாகின்றன. பிறகு மொத்த வியாபாரி சில்லறை வியாபாரிக்கு விற்கிறான். மொத்த வியாபாரத்துக்கு மூலதனம் அதிகமாய் வேண்டியிருப்பதால் மொத்த வியாபாரி சிலவேளை இரண்டு மூன்று சரக்குகளையே மொத்த வியாபாரம் பண்ணுகிறான். ஆனால் பெரிய நகரங்களில் சில பெரிய கூட்டுக்கடைகள் அநேக சரக்குகளை மொத்த வியாபாரம் பண்ணுகின்றனர். இத்தகைய பண்டகசாலைகளை நடத்துவோர் பெரிய கிட்டங்கிகளிலும், கடைகளிலும் சாமான்களைச் சேகரித்து வைக்கின்றனர். தற்காலத்

தில் மேனாடுகளில் கைத்தொழிலாளரில் அநேகர் சரக்குகளை நேராகவே சில்லறை வியாபாரிகளுக்கு விற்கின்றனர். இதற்கு உதாரணமாக மிதியடி, துவிச்சக்கரவண்டி, துணி ஆகிய வியாபாரங்களை எடுத்துக் கூறலாம். இப்பேர்ப்பட்ட வியாபாரத்தினால் தரகன் பெரும் லாபத்தை நீக்கி பொருள் நுகர்வோர் பூரணலாபத்தையும் அடைய முடியும்.

மொத்த வியாபாரத்தில் தகுந்த லாபம் அடைவதற்கு வேண்டிய சாதனங்களாவன: (1) பெருமுதல் (2) பொறுத்தமான வியாபாரஸ்தலம்; (3) பொருள்களை வாங்குவதிலும் விற்பதிலும் தகுந்த தேர்ச்சியுடைமை; (4) வாடிக்கைக்காரரிடம் நடந்துகொள்ளும் நவீன முறைகள்; (5) சந்தையில் நாடோடி விலைகள், சரக்குகளின் இருப்பு முதலியவற்றைத் தெரிந்துகொள்ளும் தன்மை; (6) மேற்பார்வை அதிகாரி முன்யோஜனையுள்ளவராயும், வியாபாரத்திற் தேர்ச்சியடைந்தவராயும், ஒழுங்கான முறையில் நடத்துபவராயும் இருக்கவேண்டும்.

இத்தகைய குணங்கள் அமைந்த வியாபாரம் லாபகரமாகவேயிருக்கும்.



சில்லறை வியாபாரியின் சார்பலன்கள் :—சில்லறை வியாபாரியின் முக்கிய தொழிலானது சரக்குகளை வாங்குவோருக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தலேயாம். முதலாவது சில்லறை வியாபாரி சரக்குகளை மொத்த வியாபாரியிடமிருந்து வாங்கு

கிறான். பிறகு அவைகளை விற்பதற்கு வேண்டிய ஸ்தலங்களுக்குக் கொண்டுவருகிறான். சமான்களை வாங்க வாடிக்கைக்காரர்களை வசீகரப் படுத்தவேண்டியிருக்கிறது. வியாபாரத்திற்குப் பொருளுற்பத்தி சாதனங்களாகிய நிலம், உழைப்பு, முதல் தொழில் முயற்சி நான்கும் வேண்டியிருக்கிறது. வாடிக்கைக் காரர்களை வசீகரப்படுத்தவும், சரக்குகளை விற்பனை செய்யவும் வேலைக்காரர் வேண்டும். எவ்வித வியாபாரத்துக்கும் முதல் வேண்டும். அதாவது கையிலிருக்கும் ரொக்கப்பணம் தவிர கடன் வாங்கவேண்டியிருக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து நடத்தும் தொழில்முயற்சி இன்றியமையாதது. சில்லறை வியாபாரிகள் வாடிக்கைக்காரர்களுடைய தேவைகளை அநுசரித்து வியாபாரம் நடத்தவேண்டும்.

வியாபாரமும் மனிதனின் பொருளாக்கச் சுற்றுப்பாடும் (Trade and Man's Economic Environment):—மனிதனுடைய பொருளாக்க வாழ்க்கையானது சுற்றுப்புற பூகோள நிலையைப் பொறுத்திருக்கிறது. பண்டைக்காலத்தில் நாகரீக சாமான்கள் ஒன்றுமில்லாமல் ஜனங்கள் வசித்து வந்தனர். அவர்களது தினசரி வாழ்க்கைப் போராட்டம் மிகவும் கடுமையாயிருந்தது. ஆனால் இக்காலத்தில் எத்தேசத்திலும் வசிக்கின்ற ஜனங்கள் மற்ற தேசங்களில் கிடைக்கக்கூடிய சாமான்களைப் பெற்று உபயோகித்து வருகின்றனர். ஒவ்வொரு தேசத்திலும் ஜனங்களின் உணவுப்பொருள்கள், ஆடைகள் முதலிய பலவித சாமான்கள் மற்ற தேசங்களிலிருந்து எளிதாய்ப் பெறுகின்றோம். தேசங்களுக்குள் வியாபாரசம்பந்தம் அதிகரித்து வருகின்றது. ஆஸ்திரேலியாவிலுள்ள ஆட்டுப் பண்ணைகளில் அல்லது இந்தியாவின் விவசாயப் பிரதேசங்களில் வறட்சி ஏற்பட்டாலும் அல்லது தூரகிழக்கு நாடுகளிலும் தென் அமெரிக்காவிலும் அரசியற் குழப்பங்கள் ஏற்பட்டாலும், வட அமெரிக்கா கண்டத்தின் பஞ்சு உற்பத்தியாகும் நிலங்களில் பருத்தி வண்டுகளால் கெடுதல் அடைந்தாலும், கனடா தேசத்துப் பிரெய்ரி (Praire) பிரதேசங்களில் கோதுமை விளைச்சல் குறுகினாலும், இவ்விஷயங்கள் ஒவ்வொரு தேசத்தின் தினசரி வாழ்க்கைக்குக் கெடுதல் விளைவிக்கின்றன. நாகரீகம் வளர்ச்சியடைவதால் ஒவ்வொரு தேசத்தாரின்

வாழ்க்கை மற்றப்பிரதேசங்களின் நிலையைப் பொறுத்திருக்கிறது. வியாபாரமூலமாய் மக்கள் தங்களுடைய பூகோள சுற்றுப்பாட்டை அதிகப்படுத்திக்கொண்டு வருகின்றனர். நாகரீகமடைந்த ஐரோப்பிய தேசத்தாருக்கு பூமியின் மற்றப் பிரதேசங்களிலுள்ள பொருள்களைக் கைப்பற்றுவது இன்றியமையாததாயிருக்கிறது. ஆகையால் அவர்கள் அரசியல் முறை மூலமாவது, பொருளாக்க முறையை உத்தேசித்தாவது, அல்லது செல்வாதார முறையினுலாவது அத்தேசங்களிலுள்ள பொருள்களைக் கைப்பற்ற எத்தனிக்கின்றனர்.

மக்கள் ஏன் வியாபாரம் செய்கின்றனர்? (Why do Men Trade?) :—பண்ட மாற்றுதல் பண்டைக்கால முதல் வழங்கிக்கொண்டு வருகிறது. ஏனெனில் எல்லாத் தேசத்தாருக்கும் வியாபாரம் பரஸ்பரம் நன்மையை விளைவிக்கின்றது. பூமியின் பிரதேசங்களில் பொருள்கள் சில இடங்களில் குறைவாயும், சில இடங்களில் அதிகமாயும் இருப்பதால் அக்குறைபாடுகளைச் சமரசப்படுத்திக்கொள்வதற்கு வாணிபம் முக்கிய சாதனமாயிருக்கிறது. வாணிபம் மக்களின் தினசரி வாழ்க்கைப் போராட்டத்தின் கடுமையைக் குறைக்கின்றது. ஒரு தேசத்தில் உண்டாக்க முடியாத பொருள்களை மற்றப் பிரதேசங்களிலிருந்து வியாபார மூலமாய்ப் பெற்றுக்கொள்ளமுடியுமாகையால், மக்கள் வாழ்க்கையின் பிழைப்புத் திட்டமும், சௌக்கியமும் அதிகரிக்கின்றது. மக்களின் உற்பத்தி சக்தி அதிகப்படுவதற்கும் வியாபாரம் முக்கியமே. தவிரவும் மக்கள் முயற்சிகளில் மிகச்சிறு சக்தியால் மிகப்பெரு பலன் அடைவதற்கும் வியாபாரமே ஒரு காரணம்.

வியாபாரப் பொருள்கள் ஏன் இனத்திலும் குணத்திலும் வித்தியாசப்படுகின்றன? (Why do Commodities of Trade differ in kind and character?)

உலகத்தில் ஒவ்வொரு தேசத்திலும் தேவையான பொருள்கள் அத்தேசத்திலேயே விளைவிக்கமுடியுமென்றால் ஒரு தேசத்திற்கும் மற்ற தேசங்களுக்கும் பண்ட மாற்றுதல் அவசியமன்று. ஆனல் இயற்கையிலே எல்லா தேசங்களின் பூகோள நிலை ஒரே

மாதிரியாயில்லை. சில பிரதேசங்களில் உண்டாகும் பொருள்கள் மற்றப் பிரதேசங்களில் எளிதில் உண்டாக்க முடியாது. ஆகையால் தேசத்திற்குத் தேசம் பண்டமாற்றுதல் இன்றியமையாததாயிருக்கிறது.

இயற்கையிலுண்டான மூலங்களின் வித்தியாசத்தினாலும், ஜனங்களின் சமூக நிலையும், ஆக்குத்திறனும் தேசத்திற்குத் தேசம் வித்தியாசப்படுவதாலும், சில தேசங்களுக்கு மற்றவைகளைவிட சில அநுகூலங்களிருக்கின்றன. பிரிட்டிஷ் பருத்தி ஆடைகள், ஜப்பானியருடைய அரக்கு சாமான்கள், இந்தியாவின் பித்தளைப் பாத்திரங்கள், ஜெர்மனியின் சாயங்கள், அமெரிக்காவின் இயந்திரங்கள், இவ்வகையான சாமான்கள் கீர்த்தியடைந்திருப்பதற்குக் காரணம் அவைகளை உற்பத்திபண்ணும் தேசத்தாரின் தேர்ச்சியும், அறிவுமேயாம். நாகரீகம் பெருகிக்கொண்டு வருவதால் ஆக்கும் திறனும் எல்லாத் தேசத்திலும் பரவுகின்றது. உதாரணமாக பிரிட்டனில் செய்யப்படும் டைப் அடிக்கும் இயந்திரங்கள், அதே மாதிரி அமெரிக்காவில் செய்யப்படும் சாமான்களுடன் விற்பனைக்குப் போட்டி போடுகின்றன. இந்தியாவில் சுத்தமான பித்தளையில் செய்யப்படும் பித்தளைப் பாத்திரங்களைப் போல் பெர்மிங்காமில் (Birmingham) செய்யப்படும் போலிப் பித்தளைப் பாத்திரங்கள் மேல்பார்வையில் அதிக வித்தியாசமில்லாமலிருப்பதால் அவை இரண்டுக்கும் விற்பனையில் போட்டி ஏற்படுகின்றது. இத்தகைய ஒரே விதமான சமம் எல்லா தேசங்களின் சாமான்களுக்கும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. செயற்கைப் பொருள்களுடன், இயற்கைப் பொருள்களிலும் இம்மாதிரி இயக்கத்தைக் காண்கிறோம்.

வியாபாரத்தில் ஜனங்களின் தேர்ச்சியினால் உண்டாகும் வித்தியாசங்களைவிட அவர்களுடைய சமூக நிலையினால் உண்டாகும் வித்தியாசங்கள் முக்கியமென்று கூறலாம். இப்பேர்ப்பட்ட வித்தியாசங்கள் சிறிது ஜாதி பேதத்தையும் முக்கியமாக ஜன நெருக்கையும் பொறுத்திருக்கின்றன. ஒவ்வொரு ஜீவப் பிராணியும் அடிப்படையாக தரையிலிருந்தும், தண்ணீரிலிருந்தும் உற்பத்தியாகும் பொருள்களையே எதிர்பார்த்திருக்கின்றன. ஒரு பிர

தேசத்திலுள்ள ஜனநெருக்கம் அதிகப்பட, அப்பிரதேச விளைவுப் பொருள்களின் மேலுள்ள பளுவு அதிகப்படுகிறது. ஏனென்றால் அப்பிரதேசத்து ஜனங்கள் தங்கள் வாழ்வின் பிழைப்புத் திட்டம் முன்னேற்றமடைய நிலங்களில் உண்டாகும் இயற்கைப் பொருள் களை அதிகப்படுத்தவேண்டியிருக்கிறது. நாளடைவில் இவ்வியற் கைப் பொருள்கள் உற்பத்தியாகும் தேசங்களிலேயே செயற் கைப் பொருள்களாக மாறுதல் அடைய வேண்டும். இயந்திரங் களால் ஓட்டப்படும் தொழிற் பொறிகள் கடைசியாக ஏற்படா விட்டால் அத்தேசத்து ஜனங்களின் நாகரீகமும் முன்னேற்றமும் விருத்தியடைவதில்லை. இதற்கு உதாரணமாக சைனு, இந்தியா, ஜாவா தேசங்களை எடுத்துக் கூறலாம். மேல்நாட்டார் உபயோ கித்துவரும் தொழில் முறைகளை ஜப்பான் தேசத்தார் உபயோ கித்துவரும்வரை அத் தேசத்தாரைப்போலிருந்தனர். குடியேற்ற நாடுகளிலுள்ள வெள்ளையர்கள் அவர்கள் தாய்தேசத்திலுள்ளவர் களைப்போல் நாகரீகமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஜனநெருக்கம் குறைவாயுள்ள கனடா (Canada), ஆஸ்திரேலியா (Australia) தேசங்களில் தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு வேண்டிய வசதிகளிருக்கின்றன. முக் கியமாக ஆஸ்திரேலியாவிலிருந்து ஆட்டு ரோமமும், கனடாவி லிருந்து கோதுமையும் ஏற்றுமதியாகும் பொருள்களுள் முதன் மையாயிருக்கின்றன. இத்தேசங்கள் தங்கள் தாய் நாட்டிலிருந் தும் மற்ற தேசங்களிலிருந்தும் இறக்குமதி செய்கின்றன.

ஐரோப்பாவிலுள்ள இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முத லிய பழைய தேசங்களுக்கும், அமெரிக்கா ஐக்கிய நாடுகளுக்கும் இதே மாதிரியாக வியாபாரம் நடந்து வருகின்றது. ஐக்கிய நாடு களிலிருந்து இங்கிலாந்துக்கு உருக்குச் சாமான்களும், பிரான்ஸ்க்கு பதனிட்ட தோல்களும், ஜெர்மனிக்கு கீல் எண்ணை யும் (coal tar) ஏற்றுமதியாகிறது. அதற்குப்பதிலாக அத் தேசங்களிலிருந்து உயர்தர வெட்டுக்கருவிகள், நவீன் கால்மிதி கள், சாயங்கள் முதலிய செயற்கைப்பொருள்கள் இறக்குமதி யாகின்றன. முன்னேற்றமடைந்த தேசங்களில் ஜனத்தொகை அதிகப்பட, ஜனநெருக்கத்தால் ஏற்படும் வாணிப வித்தியாசங்கள் மறைந்து போகின்றன. உதாரணமாக ஆஸ்திரேலியாவில் இரும்

புத் தொழிற்சாலைகள், கம்பளத் தொழிற்சாலைகள் முதலியன ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. கனடா (Canada) கீழ் மாகாணங்களில் பஞ்சுநெசவுத் தொழிற்சாலைகளும் பொறிவலாளர் தொழிற்சாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. ஜன நெருக்கத்தால் ஏற்படும் வியாபார வித்தியாசங்கள் மறைவதற்குள்ள காரணங்களில் இரண்டு முக்கியமாய் கவனிக்கத்தக்கவை. முதலாவது இப்புதிய தேசங்களில் தங்களுக்கு வேண்டிய பொருள்களைத் தாமே உற்பத்தி செய்துகொள்ள வேண்டுமென்ற இயக்கம்; இரண்டாவது ஜனநெருக்கம் அதிகப்படுவதால் உற்பத்தியாகும் பொருள்கள் உற்பத்தியாகும் தேசங்களிலேயே செலவழிந்துவிடுகின்றன. மேற் குறிப்பிட்ட காரணங்களில் இரண்டாவது காரணமே ஸ்வதேசத் தொழிற்களை (home industries) ஏற்படுத்துவது அத்தேசங்களுக்கு அனுகூலமென்று தெரிவிக்கிறது. ஆகையால் நாளடைவில் இயற்கைப் பொருள்களை ஏற்றுமதி செய்வதும், செயற்கைப் பொருள்களை இறக்குமதி செய்வதும் குறைந்துகொண்டே வருகிறது. இப்பேர்ப்பட்ட முறை விருத்தியடைய பாதுகாப்பு வரிகள் (protectionist tariff) விதிக்கப்படுகின்றன.

தரையின் அமைப்பு (Geological formation), ஸ்தலவிவரம் (topography), உலக ஸ்தானம் (world position) இவைகளினால் இயற்கைப் பொருள்கள் வித்தியாசப்படுகின்றன. அப்பேர்ப்பட்ட வித்தியாசங்களினால் சில பிரதேசங்களில் விளையும் பொருள்கள் மற்ற சில பிரதேசங்களில் காண்பதரிது. ஆகையால் தேசங்கள் ஒன்றுக்கொன்று பண்டங்கள் மாற்றிக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

தேசத்திற்குத் தேசம் வெப்பநிலை வித்தியாசமிருக்கிறது. ஆகையால் குளிர்ச்சியுள்ள பிரதேசங்களுக்கும், வெப்ப நிலையுள்ள பிரதேசங்களுக்கும் பரஸ்பரம் பண்டங்களை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இக்காரணத்தைக் கொண்டே இந்தியாவிலிருந்து தேயிலையும், மத்திய அமெரிக்காவிலிருந்து பச்சைவாழையும் (bananas), சானல் தீவுகளிலிருந்து (Channel Islands) உருளைக்கிழங்கும் வியாபாரமாகின்றன. தவிரவும் வாயுநிலை,

பனிப் பொழிவு, நீராவி ஆவியாக மாறுதல், அழுத்தத் தொகுதிகள் முதலியன மிகவும் முக்கியமென்று கருதப்படுகிறது. ஏனென்ருல் இக்காரணங்களினுல் சில நிலங்கள் ஆடுமாடு மேய்ப்பதற்கும் சில நிலங்கள் உலர்த்திய பழங்கள் உண்டாக்குவதற்கும் வேண்டிய தன்மையை உடைத்தாயிருக்கிறது.

தரையின் அமைப்பு வித்தியாசங்களினுல் பூமியில் தாதுப் பொருள்கள் செழிப்பாக அல்லது குறைவாகயிருப்பதற்கும், பூமியின் அடித்தரையில் ஜலம் தங்குவதற்குமுள்ள தன்மை ஏற்படுகின்றது. இங்கிலாந்தின் நிலக்கரி களங்களும், வட அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள மண்ணெண்ணெக் களங்களும் மேல்தரமாயிருப்பதற்குக் காரணம் மேற் குறிப்பிட்ட பூமியின் அமைப்பேயாம்.

இந்தியாவில் மத்திய மாகாணங்களில் (Central Provinces) எண்ணெ வித்துக்கள் செழிப்பாக உற்பத்தியாவதற்குக் காரணம் கிணறுகளிலிருந்து இறவைப்பாய்ச்சலேயாம். தரையும், அடித்தரையும் நீர் படியும் தன்மையுடையதால் கிணற்றிறவை சாத்தியமாயிருக்கிறது. மேலும் பூமிக்கேற்றவாறு பயிர் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். உதாரணமாக கோதுமை கனத்த மண்ணிலும், உருளைக்கிழங்கு மெல்லிசான மண்ணிலும் நன்ருகப் பயிரிடலாம்.

ஸ்தல விவர (topography) வித்தியாசத்தினுல் பலதேச வியாபாரப் பொருள்கள் வித்தியாசப்படுகிறதென்பதை கவனிப்போம். மலைப்பிரதேசங்களில் தாதுப்பொருள்கள், மரங்கள், பழவர்க்கங்கள் முதலியன விளைகின்றன. இப்பொருள்கள் அப்பிரதேசங்களிலிருந்து ஏற்றுமதியாகின்றன. தவிரவும் இப்பிரதேசங்களில் ஜல சக்தி அல்லது மின்சார சக்தியால் நடத்தப்பட்டுவரும் தொழில்களின் பொருள்கள் இலேசானதாயும் ஆனுல் அதிக விலையுள்ளதாயுமிருக்க வேண்டியதாயிருக்கிறது. ஏனெனில் மலைப்பிரதேசங்களிலுள்ள தொழிற்சாலைகளுக்கு இடவசதியும் போக்குவரவு சாதனங்களும் குறைவாகயிருக்கின்றன.

ஒரு தேசத்தின் பூகோள நிலைக்கும் அதன் வியாபாரத்திற்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கிறது. ஒரு தேசம் மற்ற வியா

பார ஸ்தலங்களிலிருந்து எட்டியிருந்தால் விளைவுப்பொருள்களுக்குப் போக்குவரவு செலவுகள் அதிகப்பட்டு சாமான்களின் விலையும் கூடுதலாகும். இது வியாபாரத்திலுண்டாகும் லாபத்தைக் குறைக்கும். உதாரணமாக சைபீரியா (Siberia) விலுள்ள கோதுமை உலக வியாபாரத்தில் ஈடுபடாமலிருப்பதற்கு முக்கியமாக போக்குவரவு சாதனங்கள் குறைவாயிருப்பதேயாம். இங்கிலாந்து தேசம் வியாபாரத்தில் முன்னேற்றமடைந்திருப்பதற்கு ஒரு முக்கிய காரணம் அதன் மத்திய ஸ்தானமென்று கருதப்படுகிறது.

வர்த்தகப் பொருளுற்பத்தியில் மனித செல்வாக்கு எத்தன்மையது: (Man's influence as an Agent in the Production of Commodities entering into Trades):--

மக்களின் சக்தியால் தாவரப்பொருள்களையும், விலங்கினப் பொருள்களையும் வியாபாரத்திற்காக அதிகரிக்கமுடியும். மலேயாவிலிருந்து ரப்பரும், பிரேஸிலிலிருந்து காப்பிக்கொட்டையும், ஆடுமாடுகளிலிருந்து உற்பத்தியாகும் பொருள்களும் உலக வியாபாரத்தில் மக்கள் முயற்சியால் கூட்டப்பட்டும் குறைக்கப்பட்டும் வருகிறது. மக்கள் முயற்சிகளால் சீதோஷ்ணநிலை, நிலத்தின் தன்மை, பூமியின் அமைப்பு முதலியவற்றை மாற்றமுடியாது. ஆனால் பூகோள நிலையை அநுசரித்துப் பயிர்த்தொழில்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் மக்கள் முயற்சியால் நிலங்களைப் பண்படுத்தி வியாபாரத்திற்கு வேண்டிய பொருள்கள் விளைவிக்கப்பட்டு வருகின்றன. கனடாவில் கோதுமை பயிர் செய்வதில் புது ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு விளைச்சல் பன்மடங்கு அதிகமாயிருக்கிறது.

தாதுப்பொருள்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் அவைகளை அதிகப்படுத்துவதில் மனிதன் சக்தியற்றவனாயிருக்கிறான். தாதுப்பொருள்கள் இயற்கையிலே எவ்விடமிருக்கின்றனவோ அவ்விடம்தான் அவைகளை மனித முயற்சியால் சுறண்ட முடியும். தாதுப்பொருள்கள் பூமியில் பற்பல இடங்களில் காணப்படுவதால் ஒவ்வொரு தேசத்தாரும் அவைகளைக் கைப்பற்ற முயற்சிக்கின்றனர். தாவரப் பொருள்களையும் விலங்கினப் பொருள்களையும்

போலில்லாமல், தாதுப்பொருள்கள் சில இடங்களில்தான் அகப்படுகின்றன. எல்லா தேசத்தாருக்கும் தொழில் அபிவிருத்திக்கும், வியாபாரத்திற்கும் தாதுப்பொருள்கள் இன்றியமையாதது. உலகத்தில் அகப்படும் தாதுப்பொருள்கள் குறைந்து கொண்டே வருகிறது.

ஆகையால் குறைந்துவரும் தாதுப்பொருள்களை சரிவர உபயோகப்படுத்தப் பன்னாட்டு வர்த்தகர்களும் ஒன்று சேர்ந்து முயற்சிக்கவேண்டியிருக்கிறது. உதாரணமாக உலகத்தில் இக்காலத்தில் கிடைக்கும் எண்ணெ, பிளாட்டினம், காலகை முதலிய தாதுப்பொருள்கள் குறுகிக்கொண்டே வருவதால் அவைகளை எவ்வாறு சேகரித்து வர்த்தக முறையில் உபயோகப்படுத்தமுடியுமென்பது முக்கிய விஷயமாயிருக்கிறது. சில மூலப்பொருள்கள் வியாபாரத்திற்கு ஜீவக் கருவிகளாகவிருப்பதால் அவைகளை சேகரிப்பதற்குப் பன்னாட்டு வர்த்தகர்கள் ஒன்று சேர்ந்து தனியுரிமை ஏற்பாடு செய்துவருகின்றனர். இதற்கு உதாரணமாக மண்ணெண்ணெ, இரும்புப்பாளம், செயற்கைப்பட்டு முதலியவற்றை எடுத்துக் கூறலாம்.

சில தேசத்தார் மற்றவர்களைவிட ஏன் அதிகமாக வியாபாரம் செய்கின்றனர்? Why do people of some countries trade more than others?) :—ஒருவராகவும், பலராகவும் ஜனங்கள் வியாபாரம் பண்ணுகின்றனர். வியாபாரமூலமாய்த்தான் பொருள்களை அதிகப்படுத்தவும் வேண்டிய பொருள்களை அடையவும் முடியும். பொதுவாக நாகரீகம் அதிகப்பட ஜனங்களின் தேவையான பொருள்களும் அதிகப்பட்டு அப்பொருள்களை அடைவதற்குள்ள முயற்சியும் அதிகமாகிறது. நாகரீகம் என்றால் என்னவென்பதை சற்று கவனிப்போம். தம் வாழ்நிலையை சுற்றுப்புறத்திலுள்ள பூகோள நிலைக்குத்தக்கபடி மாற்றிக்கொள்பவரே நாகரீகமடைந்தவரென கருதப்படுகின்றனர். இக்காலத்தில் நாகரீகம் பொருளுற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறது. இக்காலப் பொருளாக்க முன்னேற்றத்தின் சின்னங்கள் பல; பொருளுற்பத்தி அதிகரிக்கச் செய்தல்; மக்கள் விரும்பும் பொருள்கள் விருத்தியாகி அவைகளை யடையவேண்டிய மார்க்கத்தைத் தேடு

தல்; வியாபார முறைகளைச் செவ்வனே பரவி அவை மூலமாய்ப் பொருளைத் திரட்டுதல்.

வணிக ஜாதியார் (Commercial Peoples) :—தாழ்ந்த குறுக்கை (s. latitude) களிலும், உயர்ந்த குறுக்கை (n. latitude) களிலுமுள்ள பிரதேசங்கள், நடு குறுக்கை (middle latitude) களிலுள்ள பிரதேசங்களுடன் ஒத்துப்பார்க்குமிடத்து நாகரீகத்தில் தேர்ச்சிக் குறைவுள்ளனவாகவே இருந்திருக்கின்றன. ஏனென்றால் அயனுந்த பிரதேசங்களிலுள்ள ஜனங்கள் தங்கள் தினசரி வாழ்க்கை இலகுவாய் நடத்துவதற்குள்ள சாதனங்களிருந்தமையால் தாங்கள் முன்னேற்றமடைவதற்கு வேண்டிய புத்திக்கூர்மையும், ஆசையும் இல்லாதவர்களாயிருக்கின்றனர். வெகு குளிர்ச்சியுள்ள பிரதேசங்களிலுள்ளவர்கள் மூலப்பொருள்களில்லாமையாலும், அதிக சீதமுள்ள நிலையினுலும் பிரவர்த்தி பண்ண இயலாதவர்களாயிருக்கின்றனர். மத்திய குறுக்கை (middle latitude) ப்பிரதேசங்களிலுள்ள வெள்ளையர்களும், மஞ்சள் நிற ஜாதியாருமே வியாபாரத்தில் பிரபலமடைந்திருக்கின்றனர். இக்காலத்தில் உலக வர்த்தகம் வெள்ளையர்களிடமிருக்கிறது. அவர்களுள் பன்னுட்டு வணிகம் வடமேற்கு ஐரோப்பாவிலுள்ள தேசங்களுக்கும், அமெரிக்கா தேசத்து ஜனங்களுக்குமே நடந்துகொண்டு வருகிறது.

இக்காலத்தில் வியாபார முறையில் ஜப்பான் ஐந்தாவது ஸ்தானம் பெற்றிருக்கிறது. ஆனுல் மஞ்சள் நிற ஜாதியார்களின் நாகரீகமும் வியாபாரமும் கொஞ்ச காலம் வளர்ச்சியடையாமலிருந்தது. ஏனென்றால் சீனு, ஜப்பான் முதலிய தேசங்கள் மத்திய ஆசியாவிலுள்ள மலைகளின் தடங்கலாலும், உபயோகமற்ற பாஸிவிக் மகாசமுத்திரத்தினுலும் பன்னுட்டு வணிகத்தில் கலந்துகொள்ளாமலிருந்தன. ஜனத்தொகை அதிகரிக்காதவரை சீனு, ஜப்பான் தேசத்தார் உலக வணிகத்திலும், மற்ற தேசத்தாருடனும் சம்பந்தத்தை அபேட்சிக்கவில்லை. சீனு தேசத்தாருக்கு இம்மாதிரி நடந்துவருவதற்கு வேண்டிய வசதிகளிருந்தன. வடிநிலங்களின் விஸ்தீரணமும், உள்நாட்டு வியாபாரமும் அவர்களுக்கு அநுகூலமாயிருந்தன. ஆனுல் நாளடைவில் ஜன நெருக்

கத்தாலும், நிலத்தின் விளையும் பொருள்களின் குறைவினாலும் உலக வியாபாரத்தில் ஈடுபடும்படி ஏற்பட்டுவிட்டது. இவ்விஷயத்தில் சீனர்களைவிட ஜப்பானியர் முதன்மையாகத் தோன்றுகின்றனர். இந்தியாவும் பிரிட்டிஷ் சம்பந்தத்தால் உலக வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறது. உலக வர்த்தகத்தில் உன்னத ஸ்தானம் பெற்ற தேசங்களுள் இந்தியா தேசமானது ஏழாவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

வணிகமற்ற ஜாதியார் (Non-commerical peoples):—ஆதிகாலமுதல் மிதவெப்பப் பிரதேச (temperate regions) ஜாதியார் அயனாந்தப் பிரதேச (tropical regions) ங்களைத் தங்கள் பொருள்களை விற்பதற்குரிய இடங்களாகவும், தமக்கு வேண்டிய மூலப்பொருள்களைப் பெறுவதற்குரிய இடங்களாகவும், பாவித்து வந்தனர். படிப்படியாக அயனாந்தப் பிரதேசங்களெல்லாம் உலக வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறது. செல்வாதார முறையிலும், சிக்கன முறையிலும் அயனாந்தப் பிரதேசங்களெல்லாம் வெள்ளையர்களுக்குள் அடங்கியிருக்கின்றன. உதாரணமாக ஆபிரிக்கா கண்டம் (லைபீரியா, ஈகிப்த் தவிர) ஐரோப்பியர் ஆட்சிக்குள் அடங்கியிருக்கிறது. அயனாந்தப் பிரசேதங்களில் பொருள் சுறண்டுவதில் வெள்ளையர்கள் ஸ்வதேச ஜனங்களின் உதவியை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. அமெரிக்காவில் அடிமை வேலையும், ஜாவாவில் நிர்ப்பந்த வேலையும் கொஞ்சகாலம் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமாய் விசேஷ அனுகூலமில்லை யென்பதைத் தெரிந்துகொண்டனர். இவ்விதக் கட்டாய வேலை நிறுத்தப்பட்டவுடன் இப்பிரதேசங்களில் பொருளுற்பத்திக்கு ஸ்வதேச ஜனங்களின் சம்மதத்தை எதிர்பார்க்கவேண்டியதாயிற்று. ஆனால் ஸ்வதேச ஜனங்கள் மனப்பூர்வமாக வெள்ளையர்களுக்காக வேலைசெய்ய மறுக்கின்றனர். ஆகையால் அயனாந்தப் பிரதேசங்களைப் பொருளுற்பத்தி நோக்கத்துடன் கைப்பற்றியிருக்கும் வெள்ளையருக்கு மூன்று மார்க்கங்கள்தான் இருக்கின்றன. முதலாவது அப்பிரதேசங்களை விட்டுப் போதல்; இரண்டாவது இயந்திரங்களினால் அநேக வேலைகளைச் செய்தல், சில தேர்ச்சியடைந்த வேலைக்காரர்களை மட்டும் வைத்துக்கொள்ளல்; மூன்றாவது, வேலைசெய்யத் தயாராயிருக்கும் கூலியாட்களை மற்றத் தேசங்களிலிருந்து கொண்டுவந்து

வேலைகளை நடத்தல். இந்த மூன்றாவது முறைப்படியே மலேயா, ஜாவா, பிரிட்டிஷ் கயானா, ஆபிரிக்காவின் அயனாந்தப் பிரதேசம் முதலிய இடங்களில் கூலிவேலை நடந்துவருகிறது. இப்போர்ப் பட்ட கூலி வேலைக்காரர்களை முக்கியமாக சீனாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் ஒப்பந்தத்தின்பேரில் கொண்டுவருவதால் கென்யா, மலேயா முதலிய இடங்களில் அரசியல் வழியிலும், சமூக வழியிலும் அநேக கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மிகு குளிர்ச்சிப் பிரதேசங்களில் பொருள்கள் விளைவிப்பதற்கு வேண்டிய வசதிகள் இல்லை. ஆகையால் இப்பிரதேசங்களைக் கைக்கொள்ள ஒருவரும் ஆசைப்படுவதில்லை.

பொதுவாக உலகத்திலுள்ள மானிடரை அவர்கள் நாகரீகத்தையும், உலக வியாபாரத்தையும் கவனித்துப் பின்வருமாறு பிரிக்கலாம். (1) ஐரோப்பாவின் வடமேற்கு, தென்மேற்குத் தேசத்தார், கனடாவின் தென் பாகத்திலும், ஐக்கிய நாடுகளில் வடபாகத்திலும் வசிப்பவர்கள் ; ஜப்பானியர், ஆஸ்திரேலியாவின் தென் பாகத்தில் வசிப்பவர் ; டாஸ்மேனியா, நியூஸீலண்ட் தேசத்தார். (2) கனடா வடபாகம், தென் ஆபிரிக்கா ; பிரேஸில் தென் கிழக்கு, ஆர்ஜண்டினா ; சில்லி ; சைபீரியாவின் தென் பாகம், வட இந்தியா, சீனாவின் வடபாகமும், மத்திய பாகமும் ஆகிய இவற்றிலுள்ளவர்கள். உலக வர்த்தகத்தில் அதிக ஈடுபடாத தேசத்தாருள் இரண்டு பிரிவுகளைக் குறிப்பிடலாம் :—

(1) ஐரோப்பியர்கள் பொருள் சேகரித்துத் தமக்குப் பிரயோஜனப்படுத்திக்கொள்கிற அயனாந்தப் பிரதேசங்கள்–இந்தியா, சிலோன், பர்மா, மலேயா, கிழக்கு இந்தியத் தீவுகள், மேற்கு இந்தியத் தீவுகள், தென்கிழக்கு ஆசியா ; தென்அமெரிக்காவின் அயனாந்தப் பிரதேசங்கள் (அமஸான் வடிநிலம் தவிர) ; ஆபிரிக்காவின் அயனாந்தப் பிரதேசம் (காங்கோ வடிநிலம் தவிர), வடக்கு ஆஸ்திரேலியா. ஷை கண்ட பிரதேசங்களில் ஜனநெருக்கமுள்ள இடங்கள் தவிர, மற்ற எல்லாப் பிரதேசங்களிலும் வெளிநாட்டு வியாபாரம உள்நாட்டு வியாபாரத்தைவிட அதிகம். (2) மிக்க குளிர்ச்சியும், மிக்க வெப்பமுமுள்ள பிரதேசங்களும்—நடுக்கோட்டுப் பிரதேசங்களும், துந்திர வெளிகளும், இப்பிரதேசங்களி

லுள்ள ஜனங்களுக்கு வியாபாரத்திற்கு வேண்டிய வசதிகள் ஒன்றும் இல்லாமலிருக்கின்றன.

ஒரு தேசத்தின் பரப்பளவும் அதனுலுள்ள வியாபாரமும் (Size of country as a factor in Trade). ஒவ்வொரு நபர்கணக்காக ஒரு தேசத்தின் வியாபாரத்தைப் பார்க்குமிடத்துச் சிறிய தேசங்கள் பெரிய தேசங்களைவிட உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரம் இரண்டிலும் அதிக வியாபாரம் செய்வதாகக் காணப்படுகிறது. பொதுவாக ஒரு தேசம் சிறிதாகயிருக்குமிடத்து அதன் இயற்கைப் பொருள்கள் எண்ணத்திலும், பல தினுசுகளிலும் குறைவாகயிருக்கும். ஆகையால் அத்தேசத்தார் வியாபாரத்தை அதிகப்படுத்தித் தம் வாழ்க்கைத் திட்டத்தை உயர்த்த வேண்டியிருக்கிறது. இந்தியாவில் ஒரு நபர் சம்பந்தமாக வியாபாரத் தொகை ரூ. 15 என்று மதிக்கப்படுகிறது. இதே விதமாக சீனுவில் வியாபார மதிப்பு இந்தியாவின் மதிப்பில் பாதிதான். இந்த இரண்டு தேசங்களிலும் வியாபாரப் பொருள்களை உண்டாக்குவதும், உண்ணுவதும் ஸ்வதேச ஜனங்களே ; முன்னேற்றமடைந்த மற்ற தேசங்களிலும் இதே மாதிரியான சம்பவத்தைக் காண்கிறோம். பெல்ஜியத்தில் ஒரு மனிதன் சார்பான வியாபாரம் 230 பவுண்டாக மதிக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் பெல்ஜியத்தைவிட 10 மடங்கு பெரியதான பிரிட்டனில் ஒரு மனிதன் சார்பான வியாபாரம் 39 பவுண்டுதான்.

வியாபாரச் சமநிலை (Balance of Trade). ஒவ்வொரு தேசத்தின் வியாபார முறையில் ஏற்றுமதி, இறக்குமதி சாமான்களைக் கவனிக்குங்கால் அவை சமமாயிருப்பதில்லை. ஒன்றைவிட ஒன்று அதிகமாக அல்லது குறைவாகக் காணப்படுகிறது. ஒரு தேசத்தின் ஏற்றுமதி சாமான்கள் இறக்குமதிச் சாமான்களைவிட அதிகரித்தால் அத்தேசத்தின் வியாபாரம் அநுகூலமாயுள்ளதென்று கருதப்படுகிறது. ஏற்றுமதி குறைந்து இறக்குமதி அதிகரித்தால் வியாபாரம் பிரதிகூலமாகக் கருதப்படுகிறது. ஆனுல் ஒரு தேசத்தின் ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களை மட்டும் கவனித்து அத்தேசத்திற்கு வியாபாரத்திஞல் லாபம் அல்லது நஷ்டம் என்று சொல்லக்கூடாது. உதாரணமாக

இந்தியாவின் ஏற்றுமதிப் பொருள்கள் இறக்குமதிப் பொருள்களைவிட அதிகமாகவே இருக்கின்றன. ஆகையால் இந்தியாவானது வெளிநாட்டு வியாபாரத்தில் அநுகூலமடைகிறதென்று கூறலாம். ஆனால் இந்தியாவின் அதிக ஏற்றுமதிப் பொருள்கள் இங்கிலாந்திலிருந்து வாங்கிய கடனின் வட்டிக்கும், இந்தியாவில் வேலைபார்த்துப் பென்ஷன் உரிமைபெற்ற வெள்ளையர்களின் பென்ஷனுக்கும், கப்பற் கூலிக்கும் ஈடாகின்றது.

ஒரு தேசத்தின் வியாபாரத்தினால் லாபமா அல்லது நஷ்டமாவென்ற விஷயத்தைத் தீர்மானிக்க நாம் அத்தேசத்தின் வியாபாரச் சமநிலை (Balance of Trade) மட்டுமல்லாமல், கணக்கு சமநிலை (Balance of Accounts) யையும் கவனிக்கவேண்டும். இவ்விதத் தீர்மானத்திற்குப் பல ஜாப்தாக்களை கவனிக்கவேண்டும்.

1. ஏற்றுமதி இறக்குமதிச் சரக்குகள்.
2. கப்பற் கூலிகள்.
3. இன்ஷூரென்ஸ் கூலிகள்.
4. பிரயாணிகளின் செலவுகள்.

வியாபாரச் சமநிலைக்கும், தொழில் விரிவடைவதற்குமுள்ள சம்பந்தம் (Relation of Balance of Trade to Industrial Development). ஒரு தேசத்தின் இறக்குமதி சாமான்களுக்கு ஏற்றுமதி சாமான்கள் மூலமாய் உடனே அல்லது கொஞ்ச காலத்தில் செல்லாகின்றனவாவென்பது அத்தேசத்தின் பொருளாக்க நிலையைப் பொறுத்திருக்கிறது. கென்யா, நைஜீரியா, மெஸப்பொடேமியா முதலிய தேசங்கள் முன்னேற்றமடைவதற்கு மற்ற தேசங்களிலிருந்து கடன் வாங்க வேண்டியிருக்கிறது. நீர்ப்பாய்ச்சல் வசதிகள், ரெயில் பாதைகள், எண்ணைக்களங்கள் இத்தகையன விருத்திசெய்ய ஏராளமான பொருள் கடன் வாங்கியிருக்கின்றனர். இந்நிலைமையில் இறக்குமதி ஏற்றுமதிக்கணக்கைவிட அதிகமாகத் தோன்றுகிறது. இந்நிலையை ஒரு தேசத்தின் முன்னேற்றத்திற்காக வேண்டிய சாதனங்களையடையும் நிலை (Equipment stage) என்று கூறலாம்.

பொருளுற்பத்திக்கு வேண்டிய சாதனங்களைப் பெற்றபிறகு ஒரு தேசமானது வாங்கின கடனுக்கு வட்டி கொடுக்கும் நிலையை அடைகிறது. (interest-paying stage) ஆஸ்திரேலியா, நியூ ஸிலண்ட், இந்தியா, டச் கீழ் இந்தியத் தீவுகள், தென் அமெரிக்கா ஆகியவை இந்நிலையிலிருக்கின்றன. இத்தேசங்களுக்கு வியாபார சமநிலை அநுகூலமாகத் தோன்றுகிறது. அதாவது அவைகளின் ஏற்றுமதி இறக்குமதியைவிட அதிகமாயிருக்கின்றது. ஏனென்றால் அத்தேசங்களின் ஏற்றுமதி தங்கள் இறக்குமதிக்குச் செல்லாவதுடன், வாங்கிய கடனுக்கும், கடனின் வட்டிக்கும் செல்லாகின்றன.

தேசங்களின் பொருளாக்கப் பெருக்கம் அதிகப்பட வாங்கிய கடனைக் கொடுப்பதுடன் தங்கள் முதல்களை மற்ற தேசங்களில் தொழில்கள் விருத்தியடையக் கொடுக்கின்றனர். இந்நிலையை மூன்றாவதாகிய வியாபாரத்தில் முதல் மடக்கும் நிலையெனக் கூறலாம். இதற்கு உதாரணமாக வட அமெரிக்கா ஐக்கிய நாடுகளைக் கூறலாம். இம்மூன்றாவது நிலையை வாணிபத்தில் முதல் போடும் நிலையாகக் கூறலாம். இந்நிலையில் ஏற்றுமதி இறக்குமதியைவிட அதிகப்படுகிறது; ஏற்றுமதியின் உபயோகமாவன, (i) இறக்குமதிக்குச் செல்லாகப் பாவிக்கலாம். (ii) கடன் கொடுப்பதற்காக (iii) முன்னதாகவே வேண்டிய பொருள்களைச் சில தேசங்களுக்குக் கொடுத்தல்.

கடன்கள் பூறாவும் பைசலாவதுடன், மற்ற தேசங்களுக்குக் கொடுத்துக்கொண்டுவந்த முதலுக்கு வட்டி சம்பாதிக்கும் நிலையில், ஒரு தேசத்தின் நான்காவது நிலை ஏற்படுகிறது. அதாவது வருமானமுள்ள நிலை என்று கூறலாம். பிரிட்டன் இந்த நிலையிலிருக்கிறது. மற்ற தேசங்களுக்குக் கடன் கொடுப்பதில் பிரிட்டன் முதன்மையாகவேயிருக்கிறது. சில தேசங்களிலிருந்து கொடுத்த கடனுக்கு சாமான்களாகவும், சில தேசங்களிலிருந்து வட்டிக்கு சாமான்களாகவும், இன்னும் சில தேசங்களிலிருந்து வட்டிக்கும் முதலுக்கும் சாமான்களாகவும் வந்துகொண்டிருக்கின்றன.

உலக வர்த்தகத்தின் தரமும் போக்கும் எவ்வாறு மக்கள் நிர்மாணத்தில் அடங்கின (The Extent of Man's control over the Character and Course of Trade) :— இயற்கையிலே பரவியிருக்கும் தாவரப் பொருள்களும் விலங்கினப் பொருள்களும் மக்கள் முயற்சியால் வேண்டிய இடங்களிலும் பரவப்பட்டு வருகின்றன. ஆனால் மக்கள் முயற்சியால் தாதுப்பொருள்களை வேண்டிய இடங்களில் பரவச்செய்வது சுலபமான காரியமன்று. விவசாயிகள் என்ன முயற்சிசெய்தாலும் கொயினா, ரப்பர், தேயிலை, கரும்பு முதலியன வியாபாரத்திற்காக அயனாந்தப்பிரதேசங்களைத்தவிர வேறு பிரதேசங்களில் விளைவிக்கமுடியவில்லை. ஆனால் இப்பேர்ப்பட்ட பொருள்களை அவைகள் விளையும் பிரதேசங்களிலிருந்து வெகு தூரத்திலிருக்கும் மற்ற அயனாந்தப் பிரதேசங்களில் நாற்றாக எடுத்துச்சென்று உண்டாக்குவது சாத்தியமாயிருக்கிறது. ஈரேஷியாவில் மித மண்டலப் பிரதேசங்களிலும், மித மண்டலப் பிரதேசங்களைச் சார்ந்த பிரதேசங்களிலும் உண்டாகும் பொருள்களாகிய கோதுமை, வாற்கோதுமை, பருத்தி, சணல், அத்திப்பழம் முதலியன ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா கண்டங்களில் பூமத்திய ரேகைக்குத் தெற்கேயுள்ள அதே சீதோஷ்ணநிலையுள்ள பிரதேசங்களில் பயிரிடப்பட்டு வருகின்றன. ஆஸ்திரேலியாவிலுள்ள உலர்த்திய பழங்கள், அமெரிக்காவின் பருத்தி, கனடாவின் கோதுமை இவைகளெல்லாம் ஒரு விதத்தில் மக்கள் முயற்சியால் உண்டாக்கப்பட்டு வரும் பொருள்களென்று கருதலாம். ஏனெனில் இப்பொருள்களை ஆக்குவதற்கு வேண்டிய பூகோள வசதியுள்ள தேசங்களைத் தெரிந்து அவ்விடங்களில் மனித முயற்சியால் இப்பொருள்கள் உண்டாக்கப்பட்டு வருகின்றன.

தாவரப்பொருள்களைப்போலவே விலங்கினப் பொருள்களும் மக்கள் முயற்சியால் பல பிரதேசங்களில் பரவுகின்றன. அமெரிக்கா, ஆஸ்திரேலியா கண்டங்களில் வியாபார நோக்கத்தின் பொருட்டு விளைகின்ற உணவுப்பொருள்கள், ஆட்டுரோமம், பதனிடாத தோல்கள் முதலியன இயற்கையாகவே வெகுகாலமாக உற்பத்தியாகிவந்த தேசங்களிலிருந்து இத்தேசங்களுக்கு மக்கள்

முயற்சியால் கொண்டுவரப்பட்டன. தவிரவும் பிரவிக் குணவிதிகளையும், சேதனப் பொருள்களை உண்டாக்கும்விதத்தையும் அனுசரித்துச் சில பிரதேசங்களில் இதுவரையும் உண்டாக்க முடியாத பொருள்களை உற்பத்திபண்ணி வருகின்றனர். இதற்கு உதாரணமாகக் கோதுமையின் பல இனங்கள், நீளப்பருத்தி, கொட்டையில்லாத முந்திரிப்பழம், பீட் சர்க்கரை இவைகளை எடுத்துக்கூறலாம். மக்கள் முயற்சியால் எவ்வாறு வியாபாரப் பொருள்களை உண்டாக்கவும் மாற்றவும் முடியுமென்பது விலங்கினப் பொருள்களினால் நன்கு விளக்கலாம். ஆடுகளை மாமிசத்திற்காகவும், ரோமத்திற்காகவும் வெவ்வேறு விதமாக வளர்க்கின்றனர். மாடுகளை உணவுக்காகவும், பாலுக்காகவும், தோலுக்காகவும் வெவ்வேறு வளர்க்கு முறையிருக்கிறது.

மக்கள் முயற்சியால் ஒரு பிரதேசத்தின் மூலப்பொருள்களை அதிகமாக உபயோகத்திற் கொண்டுவரப்படுவதால் வியாபாரத்தின் தன்மையும் அளவும் அதிகரித்துக்கொண்டுவருகிறது. ஒரு தேசத்தின் மூலாதாரங்கள் எல்லாம் உபயோகப்படுவது அத்தேசத்தாரின் பிழைப்புத் திட்டத்தையும், ஜனத்தொகையையும் பொறுத்து இருக்கிறது. ஐரோப்பா, ஆசியா கண்டங்களில் வீட்டுத் தொழில்கள் (household industries) மிகுதியாயுள்ள இடங்களில் மூலதாரங்கள் தீவிரமாக உபயோகப்பட்டு வருகின்றன. தவிரவும் ஜனநெருக்கமும் அவ்விடங்களில் அதிகமாயிருக்கின்றன. உதாரணமாக ஜப்பான் தேசத்தில் வீட்டுத்தொழில்கள் விருத்தியடைந்த இடங்களில் 1 சதுர மைலுக்கு 2,000 ஜனங்கள் வசிக்கின்றனர். இதேமாதிரியாக இட்டாலியின் தென்பாகத்தில் விவசாயத்தின் கடைசிப்பகுதியாகக் கருதப்படுகிற தோட்டப்பயிர் கைவேலையாக நடந்துவருகிறது. மிதவெப்பப் பிரதேசங்களில் அநேக இடங்களில் விவசாய மூலாதாரங்கள் அழுத்தப் பயிர் மூலமாயும், இருபோகத்தினாலும் இன்னும் அதிக பிரயோஜனமடையலாம். சீனதேசத்தில் ஏராளமான தாதுப்பொருள்களும், கூலிவேலைக்காரர்களும் இருப்பதால் பெரிய தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு வேண்டிய சாதனங்களிருக்கின்றன. அதிக மழையுமுள்ளதும், பூமியின் பரப்பில் பாதிக்குமேலுள்ளதுமான அயனாந்த பிரதேசங்

களில் சாஸ்திர ஆராய்ச்சியினுல் விளையும் பொருள்களை அதிகரிக்கமுடியும். ஜாவா தீவில் 1 சதுர மைலுக்கு 600 நபரும், பர்படோஸ் (Barbados) தீவில் 1,170 நபரும், கியூபா (Cuba) தீவில், 1,500 நபரும் ஜீவனம் செய்கின்றனர். இத்தகைய உதாரணங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால், சரியான ராஜ்ய பரிபாலனமும், ஜனப்பாதுகாப்பும் இருக்கும் பட்சத்தில், அயனுந்தப் பிரதேசங்களில் சரியான உழைப்பாளர் மூலமாய் வாழை, அரிசி, ரப்பர், கரும்பு, எண்ணெக்கொட்டைகள், தாவர சம்பந்தமான நார்கள் முதலியன உண்டாக்குவதுடன் அவைகளை மிதவெப்ப தேசங்களிலுண்டாகும் செயற்கைப் பொருள்களுடன் இனமாற்றிக் கொள்ளலாம்.

அசேதனப் பொருள்கள் சம்பந்தப்பட்ட வியாபாரத்தில் அப் பொருள்கள் அதிகரித்தலும், குறைத்தலும் மக்கள் முயற்சிக்குள் அடங்கவில்லை. எற்கனவே உலகத்தில் வியாபித்திருக்கும் பாறைகள் (rocks), கனியம்கள் (ores) முதலியன கூட்டவாவது, குறைக்கவாவது மனிதனுல் இயலாத காரியம். இதுவரையும் உலக வியாபாரத்திற்குள் வராத பொருள்கள் சில புதிய தேசங்களில் கண்டு பிடிக்கப்பட்டால் அப்பொருள்களின் சம்பந்தமாக புதிய வியாபார வழிகள் (trade routes) எற்படுகின்றன. உதாரணமாக சில்லி (Chile) தேசத்தின் காலகைகளும் (nitrates), ஜராக் (Irak) தேசத்தின் எண்ணெக் களங்களும் (oil fields) எடுத்துக் கூறலாம். வியாபாரத்தின் மார்க்கங்களும், தன்மையும் இக்காலத்தில் அதிக மாறுபாடு அடைந்திருந்த போதிலும் மக்கள் முயற்சிக்கு ஒரு எல்லையில்லை யென்று நாம் கருதக்கூடாது.

வியாபாரம் ஓங்கி வளர்தலும், குறைதலும் அடிப்படையாக பூகோள அம்சங்களினுல் நிர்ணயிக்கப்படுகின்றன.—அதாவது தாதுப்பொருள்களின் பரப்பு; பொருள்கள் உற்பத்தியாகும் இடத்திற்கும் விற்பனையாகும் இடத்திற்குமுள்ள தூரம்; தாவரப் பொருள்களும், விலங்கினப் பொருள்களும் கிடைக்கக்கூடிய பருவ காலம். ஆனுல் தேசத்திற்கு தேசம் வியாபாரம் அநேக தடங்கல்களுக்குட்பட்டிருக்கின்றன. அதாவது—வியாபார உடன்படிக்கைகள் (commercial treaties), வணிகம், கப்பற்றொழில் முறை

கள் (trade and shipping regulations), வரி (taxation), அரசியல் நன்கொடை (bounties), உதவிப் பொருள் (subsidies). வியாபாரி களுக்குள் வியாபார ஒப்பந்தங்கள் (trade agreements), கூட்டுகள் (combines), மாபெரும் கம்பெனிகள் (trusts) முதலியன மூலமாய் வியாபாரம் நடந்துவருகிறது.

சொந்த வணிகம் செய்வோரும், கவர்ன்மெண்டாரும் எவ் வாறு இக்காலத்தில் வியாபாரத்தை நடத்திவருகின்றனர் என்ப தைச் சற்றுக் கவனிப்போம். முதலாவது ராஜீய மேற்பார்வை, மாபெரும் இணையம் (trusts) இவை நல்லதா அல்லது கெடுதலா என்பது ஒரு பெரிய கேள்வி. அதில் அபிப்பிராயபேதமிருக்கிறது. சரித்திர மூலமாய் நாம் பார்த்தால் வியாபார விஷயத்தில் அதிக அடக்குமுறை ஏற்பட்டால் வியாபாரம் க்ஷீணமடையும்; அல்லது வர்த்தகர்கள் அடக்குமுறைக்குட்பட்டு வியாபாரம் செய்யாமல் வேறு வழிகளைக் கண்டுபிடிப்பார்கள். இந்தியாவுக்கும் மத்திய தரைக்கடலைச் சார்ந்த தேசங்களுக்குமுள்ள நில வர்த்தகம் துருக்கியர் ஏற்படுத்திய சுங்க வரிகளினால் கொஞ்சக்காலம் நடத்தமுடியவில்லை. ஆனால் வெள்ளையர்கள் சமுத்திரமார்க்க மாக ஒரு புதிய வழி கண்டுபிடித்து வியாபாரத்தை நடத்திவந்த னர். ஸ்பெயின், போர்ச்சிகல் (Spain and Portugal) தேசங்கள் 16-வது நூற்றாண்டில் தென் அமெரிக்காக் கண்டத்தின் வியாபா ரத்தைத் தமக்கே தனி உரிமையாகப் பாவித்து வந்ததால், கொஞ் சக்காலத்தில் அவ்வியாபாரம் க்ஷீணமடைந்து, அக்கண்டத்துத் தேசங்களெல்லாம் அரசியல் முறையில் ஸ்வாதீனம் அடைந்தன. சமீபகாலத்தில் ருஷ்யாவில் சோவியட் கவர்ன்மெண்ட் (Soviet Government) ஏற்பட்டவுடன், 1917—1920 வரை வெளிநாட்டு வியாபாரம் ஒன்றுமில்லாமலிருந்தது. இப்பொழுதும் ருஷ்யா வின் உள்நாட்டு வியாபாரமும், வெளிநாட்டு வியாபாரமும் குறை வாகவே இருக்கிறது. சமீபத்தில் அமெரிக்கன், பிரன்சு மோட் டார் தொழிற்சாலைகள் இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின் றன. அப்படிச் செய்யாவிடில் இங்கிலாந்து கவர்ன்மெண்ட் விதிக் கும் இறக்குமதி வரிகளை அவர்கள் கொடுக்கும்படி ஏற்படுகிறது. இதே மாதிரியாக இந்தியாவிலும், ஆஸ்திரேலியாவிலும் விதிக்கப்

பட்டுவரும் பாதுகாப்பு வரிகள் (protective duties) கொடுக்காம லிருப்பதற்காக அத்தேசங்களிலேயே பிரிட்டிஷ் நெசவுத் தொழிற்சாலைகளும், இரும்புத் தொழிற்சாலைகளும் ஏற்படுத்தப் பட்டுவருகின்றன.

வியாபார விஷயமாய் கவர்ன்மெண்ட் தலையிடுதலைக் கவனிப் போம்.

(1) ராஜ்ய வருமானத்தை உத்தேசம்பண்ணி இறக்குமதி வரிகள் (Import duties for revenue purposes only) :—இப்பேர்ப் பட்ட வரிகளால் ராஜ்ய பரிபாலனத்திற்கு வேண்டிய வருமா னத்தை அடையலாம். வியாபாரம் செழிப்படையவேண்டுமானால் ஒவ்வொரு தேசத்திலும் ராஜ்ய பரிபாலனம் ஒழுங்காய் நடக்க வேண்டும். சுங்கமற்ற வணிக முறையைத் தழுவிய தேசங்கள் இறக்குமதி வரிகளைக் குறைவாகவே விதிக்கின்றனர். சமீபகாலம் வரை இங்கிலாந்து தேசத்தார் இம்முறையே கைக்கொண்டு வந் தனர்.

சில தேசங்களில் தங்கள் தேசத்திலேயே வேண்டிய பொருள் களை உற்பத்திபண்ணிக்கொண்டு வெளி தேசங்களில் அதிக வியா பாரமில்லாமலிருக்கிற முறையைக் கைக்கொண்டு வருகின்றன. இம்முறையை நிறைவேற்ற வெளி தேசங்களிலிருந்துவரும் சாமான்களுக்கு அதிக இறக்குமதி வரிகளை விதிக்கின்றனர். அப் பேர்ப்பட்ட வரிகள் உள்நாட்டுச் சரக்குகளைக் காப்பாற்றும் வரிக ளாகின்றன. இந்தியாவும், அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களும் தம் நாடுகளிலே தங்களுக்கு வேண்டிய அநேக பொருள்கள் விளைவிக்கும் தன்மையுடையனவாயிருப்பதால், வெளி தேசங்களை வியாபார முறையில் எதிர்பாராமலிருக்கும் முறையைக் கைக் கொள்ளமுடியுமென்று சிலர் கருதுகின்றனர். ஆகையால் இறக்கு மதி வரிகள் சில சாமான்கள்பேரில் கடுமையாக விதிக்கப்பட்டு வெளி தேசத்துப் பொருள்கள் வருவதைக் குறைப்பதும், உள் நாட்டுத் தொழிற்சாலைகளை விருத்திபண்ணுவதுமாயிருக்கிறது. ஆஸ்திரேலியா, இந்தியா, கனடா தேசங்களில் உள்நாட்டுத் தொழில்களை இவ்விதமாக முன்னிலைக்குக் கொண்டுவரப்

படுகின்றன. இங்கிலாந்தில் (Safeguarding of Industries Act, 1921) தொழிற் பாதுகாப்பு வரிப்பிரகாரம் தொழிலாளர் தங்கள் தொழில்களுக்கு இடையூறுயுள்ள வெளிநாட்டுச் சாமான்களை இறக்குமதி வரி மூலமாய்த் தடுக்கக் கவர்ன்மெண்ட் உதவியை எதிர்பார்க்க முடியும். பிரிட்டிஷ் அரசாட்சியில் அமைந்த தேசங்களுள் ஒருவருக்கொருவர் வியாபார முன்னேற்றத்தை உத்தேசித்து ரக்ஷண வரிகளைப் போட்டுக்கொள்ளலாம். சில சமயங்களில் ஒரு தேசத்தின் இறக்குமதி வரி அத்தேசத்திற்குப் போதாதென்று கருதப்பட்டால், உள்நாட்டுப் பொருளுற்பத்திக்குக் கவர்ன்மெண்ட் உபகிரஹம் அல்லது பொருளுதவி (subsidy) செய்கின்றனர். இந்தியாவில் தாத்தா இரும்புத் தொழிற்சாலை (Tata Iron and Steel Works) இவ்விதமான உதவி பெற்றது. 1925-ம் வருஷம் முதல் இங்கிலாந்தில் சர்க்கரை குறைந்த விலைக்குக் கிடைக்கும்பொருட்டு அத்தேசத்துப் பீட்சர்க்கரை (beet-sugar)த் தொழிற்சாலைகள் சர்க்காரிடமிருந்து பொருளுதவி பெற்றுவந்தன.

(2) ஏற்றுமதி வரிகள் :—

இவைகளை இறக்குமதி வரிகளைப்போல் அவ்வளவு அதிகமாக விதிப்பதில்லை. எல்லா தேசத்தாரும் ஏற்றுமதி வரி விதிக்க முடியாது. மற்ற தேசங்களிலில்லாத சில முக்கியமான பொருள்கள் ஒரே தேசத்திலிருக்குமானால் அத்தேசத்தார் ஏற்றுமதி வரி விதிக்கமுடியும். சில்லியில் (Chile) காலகையும், பிரேஸில் (Brazil) காப்பியும், பிடரேட் மலேயா நாடுகளில் (Federated Malay States) ரப்பரும் ஏற்றுமதி வரிக்கு உட்பட்டு அத்தேசங்களுக்கு விசேஷமான வருமானத்தைக் கொடுக்கின்றன. இதே மாதிரியாக, சணல், தோல்கள், தேயிலை, அரிசி முதலிய சாமான்கள் இந்தியா, பர்மா, சிலோன் முதலிய தேசங்களில் ஏற்றுமதி வரி விதிக்கப் பொருத்தமாயிருக்கின்றன.

ஒரு தேசத்தின் ஏற்றுமதியை நன்கொடைகள் மூலமாயும் உதவிப்பொருள் மூலமாயும் மாறுபாடு அடையச்செய்யலாம். 1903-ம் வருஷம்வரை பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனியும், 1908-ம் வருஷம்வரை ருஷ்யாவும் பீட்சர்க்கரைத் தொழிலை இவ்

வாறே முன்னிலைக்குக் கொண்டுவந்தனர். இங்கிலாந்தில் நிலக்கரி ஏற்றுமதி அதிகரிக்க இம்மாதிரியே 1925-26-ம் வருஷங்களில் நன்கொடைகள் அளிக்கப்பட்டன. 1920-ம் வருஷம் பிரிட்டன் தேசத்துக் கடல் தாண்டிய வணிகம் சம்பந்தமாக பிரிட்டனி லிருந்து ஏற்றுமதி செய்வோருக்கு எக்ஸ்போர்ட் கிரெடிட் காரண்டி (Export Credit Guarantees) மூலமாக உதவிபுரிந்து வந்தனர்.

ஒரு தேசத்தின் வியாபாரம் சட்டமியற்றுதலின் மூலமாய் மாறுபாடு அடைகிறது. இவ்விதமாகப் பதினேழு, பதினெட்டா வது நூற்றாண்டுகளில் வைதேஹகர்கள் (mercantilists) வியாபா ரத்தைச் சட்டத்தின் உதவியால் நடத்திவந்தனர். இப்பொழுது அநேகக் கைத்தொழில்களும், வியாபாரமும் கவர்ன்மெண்டார் மேற்பார்வையிலும் இருக்கின்றன. பொருளுற்பத்தியும், பண்டங் கள் மாற்றுதலும் சில குறிப்பிட்ட சங்கங்கள் மூலமாய் நடந்து வருகின்றன. பிடரேட் மலேயா மாகாணங்களில் ரப்பர் உற் பத்திபண்ணுவதும் ஏற்றுமதி செய்வதும் சில விதிகளுக்கு அடங்கி நடைபெறுகின்றன.

சில தேசங்களில் துரைத்தனத்தார் சில வியாபாரங்களைத் தனியுரிமையாக நடத்திவருகின்றனர். இட்டாலியில் உப்பும் புகையிலையும், பிரான்ஸில் புகையிலையும், நெருப்புக்குச்சியும், இந் தியாவில் உப்பும், அபினும், இதற்கு உதாரணமாக எடுத்துக் கூற லாம். அமெரிக்காவில் நாவ சட்டப்படி (Navigation laws) சமுத்திரக்கரையோர வியாபாரம் அமெரிக்கன் கப்பல்களில்தான் கொண்டுபோகலாம்.

வணிக உடன்படிக்கைகள் (Commercial treaties) மூலமாக வியாபாரம் எவ்வாறு விருத்தியடைகின்றன என்பதைச் சற்றுக் கவனிப்போம். பிரிட்டன் தேசத்து வெளிநாட்டு வியாபாரம் முன்னேற்றமடைவதற்கு மற்ற தேசங்களுடன் வணிக உடன் படிக்கைகள் செய்துவருகின்றனர். பிரிட்டன் தேசத்துச் சரக்கு கள் மற்ற தேசங்களில் விதிக்கப்படும் வரிகளைக் குறைவாகக் கொடுத்து அத்தேசங்களில் விற்பனையாகின்றன. அதேமாதிரி யாகத் தாமும் மற்ற தேசத்துச் சரக்குகள் விஷயத்தில் நடந்து

கொள்ளுகின்றனர். கனடா தேசத்து வரியைக் கவனித்துப் பார்த்தால் மூன்று வகுப்பாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது :—(i) பிரிட்டன் தேசத்துக்குப் பிரியமான வரி (ii) கனடாவுடன் உடன்படிக்கை பண்ணியிருக்கும் தேசத்தாருக்கு ஒருவிதமான வரி (iii) கனடாவுடன் உடன்படிக்கையில்லாத மற்ற தேசங்களுக்கு அதிகமான வரி.

அநேக முன்னேற்றமடைந்த நாடுகள் வியாபார வளர்ச்சிக்காகத் தங்கள் (trade commission) வணிக பிரதேஷ்டாக்கள் நியமித்துவருகின்றனர். வியாபார விஷயங்கள் தேசத்திற்குத் தேசம் பரவும்பொருட்டு தந்தி வசதிகளும், தபால் வசதிகளும் உலகமெல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பிரிட்டனில் வெளிநாட்டு வியாபாரத்திற்காக ஒரு வெளிநாட்டு வியாபார டிபார்ட்மெண்ட் (Overseas Trade Department) ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. தவிரவும் வணிகக் கழகங்கள் (Chambers of Commerce) சந்தைகள் (fairs), பொருட்காட்சிகள் (Exhibitions) மூலமாகத் தேசங்களின் உள்நாட்டு வியாபாரமும் வெளிநாட்டு வியாபாரமும் அதிகரித்து வருகின்றன.

தேசங்கள் அடிக்கடி யுத்தங்களில் ஈடுபடுவதால் உலக வர்த்தகம் மிகக்கெடுதல் அடைகிறது. யுத்தத்தால் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் அபாரமாயிருக்கின்றன. பொருள் உற்பத்தியும், பண்டங்கள் மாற்றலும், போக்குவரவு வசதிகளும் எல்லாம் குறைந்துபோகின்றன. வியாபாரம் வியாபாரமுறையிலே நடக்காமல் கவர்ன்மெண்டாரின் கடுமையான நிபந்தனைகளுக்குட்பட்டு நடத்தவேண்டியதாயிருக்கிறது. சர்க்கார் வரிகள் அதிகப்படுகின்றன. தேசங்களின் நாணய மதிப்புக் குறைந்துவிடுகிறது. இத்தகைய விஷயங்களெல்லாம் தேசங்களின் வியாபாரத்தைக் குறைத்து ஜனங்களின் சுபிக்ஷத்தையும் குறைக்கின்றன. ஆகையால் யுத்தங்களால் உலக வர்த்தகத்துக்குப் பலவிதமான இடையூறுகள் ஏற்படுகின்றன.

கவர்ன்மெண்ட் சம்பந்தமில்லாமல் வியாபாரிகள் எவ்வாறு வியாபாரத்தை நடத்திவருகின்றனர் என்பதை கவனிப்போம். பண்டைக்காலமுதல் வியாபாரிகள் பொருளுற்பத்திக்கும்,

பொருள் விற்பனைக்கும் சங்கங்கள் ஏற்படுத்திவந்தனர்:— துணிகர வணிகக்கூட்டம் (Merchant adventurers), வணிகச்சங்கம் (Merchant guild) பட்டயக் கம்பெனிகள் (Chartered companies) இக்காலத்தில் கூட்டுகளும் (Combines) மாபெரும் கம்பெனிகளும் (trusts) தீவிரமாயும் ஏராளமாயும் வியாபாரத்தில் முனைந்திருக்கின்றன. இப்பேர்ப்பட்ட வணிகக் கூட்டத்தார் சரியான முறையைக் கைக்கொண்டால் உலக வர்த்தகத்துக்கு அநேக அனுகூலங்களை விளைவிக்கமுடியும். பொருளுற்பத்தியிலும் போக்குவரவு சாதனங்களிலும், பொருள் விற்பனையிலும் சிக்கனமாகவும், லாபமாகவும் வியாபாரத்தை நடத்த முடியும். 1925-ம் வருஷம் வரை தென் அமெரிக்காவிலிருந்து மாட்டிறைச்சி ஏற்றுமதி செய்யும் பிரிட்டிஷ், அமெரிக்கன், டச்சுக் கம்பெனிகள் இரண்டு பெரிய கூட்டுகளாய் (Combines) வியாபாரம் பண்ணிக்கொண்டு வந்தன. 1926-ம் வருஷம் பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி முதலிய தேசங்களில் எஃகு உற்பத்திபண்ணும் முதலாளிகள் ஒரு ஸ்டீல் கார்டல் (Steel cartel) ஏற்படுத்தினர். ஒவ்வொரு தேசத்தின் விளைவுப் பொருள்களுக்கும் ஒரு அளவுத்திட்டம் விதிக்கப்பட்டு வந்தது. கனடாவில் கோதுமை விளைவிப்போர் ஒரு பெரிய கூட்டுறவு விற்பனை சங்கம் ஏற்படுத்தியிருக்கின்றனர். (Canadian wheat pool). இப்பேர்ப்பட்ட கூட்டுகளினால் சில பொருளுண்டாக்குவோர் தங்களுக்குள் ஒரு 'ரிங்' (Ring) ஏற்படுத்திக்கொண்டு பொருள் நுகர்வோர்களுடைய பலனைத் தேடி யெடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள்.

பொருள் நுகர்வோர் தாங்கள் சரசமாய் சாமான்களை வாங்குவதற்குப் பெரிய சங்கங்கள் ஏற்படுத்துவது அவ்வளவு அதிகமாக இல்லை. கூட்டுறவு வியாபாரத்தில் சென்ற 50 வருஷ காலத்தில் முக்கியமான மாறுபாடு என்னவென்றால் கூட்டுறவு மொத்த வியாபாரச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் லட்சக்கணக்கான வியாபாரம் செய்கின்றன.

ஒரு தேசத்தின் செல்வாதார முறைக்கு அத்தேசத்து ஜனங்களின் வியாபாரம் எவ்வளவு இன்றியமையாதது என்பது அவசியம் கவனிக்கத்தக்கது. ஜனங்கள் தங்கள் மீக்கும்

பணத்தை சேவிங்ஸ் பாங்குகளிலும், மற்ற பாங்குகளிலும் போடுவதால் அப்பணம் வியாபாரிகளுக்கு பாங்குகள் மூலமாய் உபயோகப்பட்டு வருகின்றது. பன்னாட்டு வர்த்தகத்தில் ஏராளமான பொருள்கள் வாங்குவதும் விற்பதுமாயிருப்பதால் அவைகளின் கணக்கு வரவு செலவு உண்டியல்கள் (Bills of exchange) மூலமாய் நடைபெறுகின்றன. லண்டனில் மாற்றக்கூடிய உண்டியல்களுக்கு மதிப்பு அதிகம். ஏனென்றால் பிரிட்டிஷ் நாணயம் களங்கமற்றதாயும் எவ்விடத்திலும் எளிதாக மாற்றக்கூடியதாயும் இருக்கிறது. இங்கிலாந்தின் செழிப்புக்கு அத்தேசத்தார் அயல் தேசங்களில் போட்டிருக்கும் விடுமுதல்கள் (Investments) முக்கிய காரணமாகும். மற்ற தேசங்களுக்குக் கடன் கொடுத்திருக்கும் முதலும் வட்டியும் அத்தேசங்களிலிருந்து இங்கிலாந்துக்கு இறக்குமதியாகிற பொருள்கள் மூலமாய் அடைகின்றனர். வருஷத்திற்குச் சராசரி வட்டி மட்டும் சுமார் 160,000,000 பவுன் சம்பாதிக்கின்றனர். 1910-ம் வருஷம் முதல் இங்கிலாந்தின் வியாபார விடுமுதல் மொத்தத்திலும், மற்ற தேசங்களில் பரவியிருப்பதிலும் சில மாறுபாடு அடைந்துகொண்டு வருகிறது. ஆஸ்திரேலியா, கனடா, மலேயா, ஆர்ஜிண்டின், பிரேஸில் முதலிய தேசங்களில் அதிகரித்தும், ஐக்கிய நாடுகளிலும், சீன, பீருவிலும் (Peru) குறைந்து மிருக்கின்றன. இங்கிலாந்துக்குச் செல்லாக வேண்டிய வட்டித்தொகை சரக்குகளாக வருகின்றன. இங்கிலாந்து கடன் கொடுக்கும் தேசங்கள் இங்கிலாந்துக்கு அதிகச் சரக்குகள் ஏற்றுமதி செய்வதற்குள்ள கடமைக்குட்படுகின்றன. கடன் வாங்கும் தேசங்களும் இங்கிலாந்து தேசத்துச் சரக்குகளாகக் கடனைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகையால் லண்டனில் ஒரு தேசத்தார் கடன் வாங்கினால் இங்கிலாந்தின் ஏற்றுமதி அதிகரிக்கிறது. உதாரணமாக தென் அமெரிக்காவிலும் இந்தியாவிலும் ரெயில்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் லண்டனில் வாங்கும் கடன் இரும்பு சாமான்களாக அத்தேசங்களுக்கு ஏற்றுமதியாகின்றது.

XIV

இந்தியாவின் வணிகம்

ஆதிகாலமுதல் இந்தியாவுக்கும், மற்ற தேசங்களுக்குமுள்ள வர்த்தகம் கடற்மார்க்கமாயும், தரைமார்க்கமாயும் நடைபெற்று வந்தது. இந்தியாவானது வணிகத்தின் ஒரு இருப்பிடமாயிருந்தது. கிறிஸ்து பிறப்பின் ஆறுவது அல்லது ஏழாவது நூற்றாண்டிற்கு முன் இந்தியாவுக்கும், இத்தாலி, கிரீஸ், ஈகிப்த், பினேஷ்யா, அரேபியா, பாரஸிகம், சிரியா, சைனு, மலேயா முதலியவற்றிற்கும் வணிக நடைபடிக்கைகள் ஏற்பட்டிருந்தன. மனுதர்ம சாஸ்திரம் ஏற்பட்ட காலமுதல் இந்தியர்கள் கப்பல்கள் கட்டுவதிலும், கடல் மார்க்கமாய் வாணிபமுறையில் போக்குவரத்திலும் தேர்ச்சியடைந்திருந்தனர். இந்தியக் கப்பல்கள், அரபிக்கடல். செங்கடல், பாரஸிக வளைகுடா, இந்து சமுத்திரம் முதலியவற்றில் போக்குவரத்து இருந்ததற்குத் தகுந்த ஆதாரமிருக்கிறது. அக்காலத்தில் இந்தியாவின் முக்கிய துறைமுகங்களாக விளங்கியவற்றுள் புரோச், ஸூரட், மஸூலிப்பட்டணம், நெல்குண்டா முதலியவற்றை எடுத்துக் கூறலாம். இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான சரக்குகளாவன—உயர்ந்த பட்டுப் பருத்தி ஆடைகள், முத்துக்கள், வயிரங்கள், இதர அபூர்வமான கல்கள், தந்தம், வாசனைத் திரவியங்கள், மருந்துச் சரக்குகள் முதலியனவாம். இறக்குமதிச் சரக்குகளில் முக்கியமானவை, தங்கம், வெள்ளி, பித்தளை, செம்பு, தகரம் முதலியனவாம்.

மத்திய ஆசியா, சைனு, ஆசியாவின் மற்ற பிரதேசங்கள் இவைகளுடன் வர்த்தகம் தரை மார்க்கமாய் சாத்து வணிகமாயிருந்தது. அநேக வணிக் மார்க்கங்கள் இருந்தன. தவிரவும் உள்நாட்டு வணிகமும் அதிக விமரிசையாய் நடந்துவந்தது, பெரிய நதிகளும், ரஸ்தாக்களும் உள்நாட்டு வணிகத்திற்கு அனுகூலமாயிருந்தன.

இடைக்கால இந்தியாவிலும் வணிக முனைப்பு தீவிரமா யிருந்தது. ஆனால் முகம்மதிய அரசாட்சிக் காலத்தில் கடல் வணிகம் க்ஷீணமடைந்திருந்தது. தரைமார்க்க வணிகம் குறைவுபடாம லிருந்தது. 1498-ம் வருஷம் வாஸ்கோடி காமா கேப் வழியைக் கண்டுபிடித்தது முதல் கடல் வணிகம் மறுபடியும் ஐரோப்பிய ரால் தீவிரமாய் ஆரம்பிக்கப்பட்டது. பதினேழாவது, பதி னெட்டாவது நூற்றாண்டுகளில், போர்ச்சுகீஸ், டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலேய கம்பெனியார் இந்தியாவின் வியாபாரத்திற்காகப் போட்டிபோடத் தொடங்கினர். கடைசியில் கிழக்கிந்திய வணிகக் கூட்டத்தார் இந்தியாவில் சுய உரிமை அடைந்தனர். நீராவிக் கப்பல்கள் கண்டுபிடித்த பிறகு இந்தியாவின் கடல் வணிகம் அதிகரித்தது. கடைசியாக ஸூயஸ் கால்வாய் ஏற்பட்டவுடன் இந்தியாவுக்கும், ஐரோப்பாவுக்குமுள்ள கடல்வழி குறைந்தது. அதனால் இந்தியாவின் வெளிநாட்டு வாணிபம் விரைவாக பெருகி வந்தது. இந்தியாவின் வெளிநாட்டு வாணிபம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது. ஆனால் இந்தியரின் பங்கு குறைவாகவேயிருக்கிறது. உள்நாட்டு வர்த்தகம் முழுவதும் அநேகமாக இந்தியர் கைக்குள்ளிருக்கிறது. இதிலும்கூட தொழில் முயற்சிக்குரிய குணங்கள் இந்தியர்களுக்கு இன்னும் பூரணமாக ஏற்படவில்லை.

இந்தியாவின் உள்நாட்டு வணிகமுறை :—பழைய காலமுதல் ஒவ்வொரு கிராமத்திலும் கிராம வியாபாரிகளிருக்கின்றனர். தற்காலத்தில் அநேக கிராம வியாபாரிகள் வியாபாரம் பண்ணுவதுடன் பணம் கொடுக்கல் வாங்கல் செய்கின்றனர். வாங்குவதும் விற்பதும் கிராமச்சந்தைகளில் நடைபெறுகின்றன. சந்தைகள் கிராமங்களில் ஒவ்வொரு நாளும், அவற்றிற்குச் சமீபமாயுள்ள சில விடங்களில் குறிப்பிட்ட நாள்களிலும் அமைக்கப்படுகின்றன. இப்பேர்ப்பட்ட சந்தைகளுக்கு ஊர் ஊராய்ச் செல்லும் வர்த்தகர்களும் வருவது வழக்கம். பொதுவாக ஒரு நதிக்கரையோரமாவது, அல்லது பெரிய ரஸ்தாக்கள் சந்திக்கக்கூடிய இடங்களிலாவது அல்லது பெரிய திருவிழா நடக்கும் இடங்களிலாவது சந்தைகள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் விளையும்

பொருள்களில் கிராமத்தில் செலவழியும் பொருளைத்தவிர மற்றவை வியாபார ஸ்தலங்களுக்கு வருவது வழக்கமாயிருக்கிறது. உள்நாட்டு வியாபாரம் இருவகையாகப் பிரிக்கலாம்.— (1) துறைமுகங்களுடன் ஏற்படும் போக்குவரத்து (2) உள்நாட்டுப் பிரதேசங்களில் ஏற்படும் போக்குவரத்து. துறைமுகங்களுடன் ஏற்படும் வியாபாரத்தில் ஏற்றுமதி விவசாயப் பொருள்களாகவும், இறக்குமதி செய்பொருள்களாகவும் இருக்கிறது. உள்நாட்டு வியாபாரமானது தேசத்தில் ஒவ்வொரு இடத்திலுமுள்ள விளைவுப்பொருள்களை மற்ற இடங்களில் விற்பனை செய்வதேயாம். உள்நாட்டு வியாபாரத்திலும் சரக்குகள் அநேக தரகன்கள் மூலமாய்ச் செல்லுகின்றன.

வியாபார முயற்சி அதிகமாயுள்ள இடங்கள் புதிய பட்டணங்களாகின்றன. சரித்திர சம்பந்தமாய் மேன்மை யடைந்திருந்த நகரங்கள் அவ்விடங்களில் வியாபாரம் குறைந்ததால் தற்காலம் க்ஷீணமடைந்திருக்கின்றன. இந்தியாவில் சில ஜாதியார் வெகு காலமாக வியாபாரத்திலேயே அமர்ந்து வியாபார முறையை நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கின்றனர். ராஜபுதன தேசத்திலுள்ள மார்வாரிகளை இந்தியாவில் எல்லாவிடத்திலும் காணலாம். இதே மாதிரியாக சென்னை மாகாணத்திலுள்ள செட்டியார்கள் வியாபாரத்துறையே கைப்பிடித்திருக்கின்றனர். பம்பாய் மாகாணத்தில் வியாபாரம் அநேகமாக பார்ஸிகர் (Parsis), பதியாஸ் (Bhatiyas) இவர்கள் மூலமாகவே நடந்துவருகிறது. வட இந்தியாவில் வியாபாரம் அநேகமாக பனியாஸ் (Banias), ஜாதியாரின் தனி உரிமைபோல் நடந்துவருகிறது. முகம்மதியருக்குள் பம்பாய், குஸரட் இவ்விடங்களிலுள்ள போராஸ் (Boras) கோஜாஸ் (Khojas) முதலானவர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

போக்குவரவு

சென்ற நூற்றாண்டின் மத்திய காலம்வரை இந்தியாவின் உள்நாட்டு வணிகத்திற்குப் பொதி சுமக்கும் விலங்குகளாகிய மாடுகள், குதிரைகள், ஒட்டகம், கழுதை முதலியன உபயோகப்பட்டுவந்தன. ரஸ்தாக்களில் மாடுகளும், குதிரைகளும் இழுக்

கும் வண்டிகளே முக்கியப் போக்குவரத்துச் சாதனங்களாயிருந்தன. நீர்வழிகளில் படகுகள் உபயோகித்தனர். ரெயில் பாதை ஏற்பட்ட காலமுதல் ஷை சாதனங்களின் உபயோகம் கொஞ்சம் குறைந்திருப்பதாகச் சொல்லலாம்.

ரஸ்தாக்கள் அமைப்பதும், கால்வாய்கள் வெட்டுவதிலும் பழைய காலமுதல் இந்து இராஜாக்களும், முகம்மதிய அரசர்களும் அதிக ஊக்கமுள்ளவர்களாயிருந்தனர். பழைய காலத்து அரசர்கள் அமைத்த ரஸ்தாக்களும், கால்வாய்களும் உறுதியிலும் கீர்த்தியிலும் பழைய கால ரோமாபுரியர் கட்டுமானங்களுக்கு ஒப்பிடலாம். இக்காலத்திலும் அவைகளின் சின்னங்களைக் காணலாம். கிழக்கிந்திய கம்பெனியாரின் அரசாட்சியின் ஆரம்ப காலத்தில் ரஸ்தாக்களும், கால்வாய்களும் அதிகமாகக் கவனிக்கப்படவில்லை. 1857-ம் வருஷத்திற்குப் பிறகு ரெயிலும், ரஸ்தாவும் விருத்தியடையத் தொடங்கின. இப்பொழுது 37,000 மைல்களுக்கு ரெயில்பாதைகள் போடப்பட்டிருக்கின்றன; ரஸ்தாக்களின் விஸ்தீரணம் 26,000 மைல்களாக கணக்கிடப்பட்டிருக்கிறது. கப்பலோடும் வசதிகளுள்ள நதிகளில் நீராவிக்கப்பல்களின் போக்குவரத்து ஏற்பட்டிருக்கிறது. அறிவிப்பு வசதிகள்—தபால், தந்தி, டெலிபோன் முதலியன—வியாபாரத்திற்கு அனுகூலமாயிருக்கின்றன.

இந்திய வாணிபத்தின் தற்கால நிலைமை:—இந்தியாவின் வாணிப நிலைமையை கவனிக்குமிடத்து உள்நாட்டு வியாபாரம் வெளிநாட்டு வியாபாரத்தைவிட 3 பங்கு அதிகமாயிருக்கிறது. உள்நாட்டு வியாபாரம் பெரும்பாலும் துறைமுகங்களைச் சார்ந்திருக்கிறது. துறைமுகங்களுக்கு அனுப்பப்படும் பொருள்கள் உணவுப்பொருள்களும், கச்சாசரக்குகளாகவும், துறைமுகங்களிலிருந்து உள்பிரதேசங்களுக்கு வரும் பொருள்கள் அயல் நாடுகளிலிருந்து வரும் செயற்கைப் பொருள்களாகவும் இருக்கின்றன. உள்நாட்டு வியாபாரத்தில் ஐக்கிய மாகாணங்கள் மற்ற மாகாணங்களைவிட அதிக வியாபாரமுள்ள மாகாணமாயிருக்கிறது. தேயிலை அஸ்ஸாம் மாகாணத்தின் முதன்மைச் சரக்கு; பிஹாரில் நிலக்கரியும், பம்பாயில் பருத்தி, கோதுமை, வித்துக்களும்,

சென்னை மாகாணத்தில் பருத்தி, வேர்க்கடலையும் முதன்மைச் சரக்குகளாக விளங்குகின்றன.

இந்தியாவின் வெளிநாட்டு வியாபாரம் உள்நாட்டு வியாபாரத்தைவிடக் குறைவாகவே யிருந்தபோதிலும், தேச வியாபாரத்தின் மொத்த மதிப்புக்கு ஒரு முக்கிய அறிகுறியாயிருக்கிறது.

சமீப காலங்களாக இந்தியாவின் வெளிநாட்டு வியாபாரம் சில மாறுபாடுகள் அடைந்திருக்கிறது. 1914-18-ம் வருஷங்களின் முந்திய ஐந்து வருஷங்களில் இந்தியாவின் வெளிநாட்டு வியாபாரம் சராசரி 431 கோடி ரூபாய்களாக மதிக்கப்பட்டது. 1918-ம் வருஷம் முதல் ஐந்து வருஷ கணக்கின்படி வெளிநாட்டு வியாபாரம் 639 கோடி ரூபாய்களாக மதிக்கப்பட்டது. 1936-37-ம் வருஷத்தில் கடல் வணிகம் மட்டும் 376 கோடி ரூபாய்களாக மதிக்கப்பட்டது. தவிரவும் இந்தியாவின் ஏற்றுமதி, இறக்குமதி சரக்குகளிலும், அவற்றில் ஈடுபட்டிருக்கும் தேசத்தாரிலும் சில மாறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. 1929-ம் வருஷம் முதல் இந்தியாவின் வெளிநாட்டு வணிகம் குறைந்துகொண்டே வந்தது. 1933-34-ம் வருஷத்தில் இந்தியாவின் மொத்த வெளிநாட்டு வியாபாரம் 336 கோடி ரூபாய்களாக மதிக்கப்பட்டது.

இறக்குமதி, ஏற்றுமதி சரக்குகளும், அவற்றின் தொகையும், மதிப்பும் கவனிக்கத்தக்கவை. இறக்குமதி சரக்குகள் அநேகமாக செய்பொருள்களாகவே இருக்கின்றன. இறக்குமதியாகும் வாணிகப் பொருள்களில் 72% செய்பொருள்களாக இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானது பருத்தி நூல் சரக்குகள்; இங்கிலாந்திலிருந்தும், ஜப்பானிலிருந்தும் முக்கியமாக இறக்குமதியாகின்றன. இந்தியாவில் பருத்திநூல் துணிகள் அதிகமாக சமீப காலங்களில் உண்டாக்கப்படுவதால் இச்சரக்குகளின் இறக்குமதி குறைந்துகொண்டே வருவதாகச் சொல்லலாம்.

பருத்திநூல் துணிகளுக்கு அடுத்தபடியாக இறக்குமதியாகும் பொருள்களாவன—இயந்திரங்கள், இரும்பு முதலிய உலோகத்தால் உண்டாக்கப்படும் பணிமுட்டு (hardware) பலவித உலோகங்கள், கண்ணாடி சரக்குகள், கம்பளங்கள், பட்டுச் சரக்குகள்

முதலியன, தாவர எண்ணெய்கள், மண்ணெண்ணை வகைகள் வெளி தேசங்களிலிருந்து இறக்குமதியாகின்றன. உணவுப் பொருள்கள் (சர்க்கரை திராட்சரசம், உப்பு முதலியன) இறக்குமதியின் ஒரு முக்கிய அம்சமாயிருக்கின்றன.

ஏற்றுமதி : இந்தியாவின் ஏற்றுமதி முக்கியமாக மூலப் பொருள்களாகவே இருக்கின்றன. சமீப காலங்களில் இந்தியாவின் ஏற்றுமதி சரக்குகளின் மதிப்பு மிகவும் குறைந்திருக்கிறது.

வருஷம்	ஏற்றுமதி மதிப்பு கோடி ரூபாய்
1928-29	345
1932-33	206
1936-37 (தங்கம் ஏற்றுமதி உள்பட)	232·69

மூலப் பொருள்களும், பூரூவும் பண்படுத்தாப் பொருள்களும் ஏற்றுமதியில் முதன்மையாகக் காணப்படுகின்றன. ஏற்றுமதிப் பொருள்களில் முக்கியமானவை, பருத்தி, சணல், தேயிலை, எண்ணை வித்துக்கள் முதலியனவாம்.

இந்தியாவிலிருந்து வெளிதேசங்களுக்கு ஏற்றுமதியாகும் பருத்தியின் விபரத்தை பின்வரும் புள்ளிகளால் விளக்கலாம்.

[400 பவுண்டு நிறையுள்ள ஆயிரம் பேல்கள் (bales)]

தேசங்கள்	1934-35	1935-36	1936-37	1937-38
இங்கிலாந்து	347	456	622	395
இதர ஆங்கிலேய இராஜ்யங்கள்	6	11	14	23
ஜப்பான்	2055	1759	2426	1359
இத்தாலி	278	154	165	151
பிரான்ஸ்	148	168	155	95
சைனா	142	109	72	69
பெல்ஜியம்	153	224	312	196
ஸ்பெயின்	60	67	26	—
ஜெர்மனி	153	264	218	166
இதர தேசங்கள்	148	185	258	277
மொத்தம்	3496	3,397	4,268	2,731

இந்திய கவர்ன்மெண்டாருக்கும், ஜப்பானுக்கும் ஏற்பட்டிருக்கும் வர்த்தக ஒப்பந்தப்படி ஜப்பான் பெரும்பாலும் இந்தியாவின் பருத்தியை வாங்கி வருகின்றது.

இந்தியாவின் சணலுக்கு அதிக தேவையிருப்பதால் வங்காளத்தில் விளையும் சணல் முழுவதும் ஏற்றுமதியாகின்றது. 1938-ம் வருஷக் கணக்கின்படி 3,074,100 ஏக்கர் நிலங்களில் சணல் பயிராகின்றது. சணல் விளைச்சலை விருத்திசெய்வதற்காக ஒரு மத்திய சணல் கமிட்டி (Central jute committee) ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. 1936-37-ம் வருஷத்திய புள்ளி விவரங்களின்படி பண்படுத்திய சணல், 28 கோடி ரூபாய்களுக்கும், பண்படுத்தாத சணல் சுமார் 15 கோடி ரூபாய்கள் வரையிலும் ஏற்றுமதியாயின. இங்கிலாந்து, வட அமெரிக்கா ஐக்கிய நாடுகள், ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம் இத்தேசங்களே இந்தியாவின் சணலை வாங்குகின்றனர்.

இந்தியாவின் தேயிலை பெரும்பாலும் (80%) இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகின்றது. தேயிலையின் ஏற்றுமதியை 20 கோடி ரூபாயாக மதிப்பிடலாம். தற்காலத்தில் தேயிலையின் ஏற்றுமதி பன்னாட்டு ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருக்கிறது. தேயிலை உற்பத்தி செய்யும் தேசங்கள் எவ்வளவு ஏற்றுமதி செய்யவேண்டுமென்பதை கட்டுப்படுத்தியிருக்கின்றனர்.

எண்ணெ வித்துக்கள் சுமார் 18 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதியாகின்றது. பெரும்பாலும் இந்தியாவின் நிலக்கடலை பிரான்ஸ் தேசத்திற்கு ஏற்றுமதியாகின்றது.

இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் தேசங்களில் இங்கிலாந்து தேசம் முதன்மை ஸ்தானம் பெற்றிருக்கிறது. இந்தியாவின் மொத்த வெளிநாட்டு வியாபாரத்தில் 34% இங்கிலாந்துடன் ஏற்பட்டிருக்கிறது. வெகுகாலமாக இந்தியாவின் இறக்குமதிப் பொருள்கள் பெரும்பாலும் இங்கிலாந்து தேசத்திலிருந்தே வந்துகொண்டிருந்தது. ஆனால் தற்காலத்தில் சில மாறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அம்மாறுபாடுகளை பின்கண்ட புள்ளி விவரங்களால் விளக்கலாம்.

பண்யங்கள் சம்பந்தமாயுள்ள
வர்த்தகம் மட்டும் (1936-37)

நூற்று வீதம்

	இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகுதல்	இந்தியாவுக்கு இறக்குமதியாகுதல்
இங்கிலாந்து	32·1	38·4
இதர ஆங்கில இராஜ்யங்கள்	14·2	10·8
ஜப்பான்	15·0	17·0
ஐக்கிய நாடுகள் (U. S. A.)	9·5	6·5
ஜெர்மனி	4·7	9·7
பெல்ஜியம்	3·6	2·2
பிரான்ஸ்	4·0	0·9
இத்தாலி	2·4	1·0
நெதர்லண்டஸ் (Netherlands]	2·2	1·1

இந்தியாவிலும், இதர தேசங்களிலும் ஜனங்களின் சராசரி வர்த்தகத்தை கீழ்க்கண்டபடி எடுத்துக்காட்டலாம்.

தேசம்		ஒரு ஆளின் சராசரி வர்த்தக மதிப்பு ப. ஷி. பெ.
இந்தியா	...	1— 4—4
இங்கிலாந்து	...	40—10—4
பிரான்ஸ்	...	21— 7—4
ஜெர்மனி	...	10— 5—4
இத்தாலி	...	7— 9—4
வட அமெரிக்கா ஐக்கிய நாடுகள்	...	16— 8—4
ஜப்பான்	...	6— 8—4
சைனு	...	1— 7—4

இந்தியாவின் சுமை வணிகம் அநேகமாக பிரிட்டிஷ் கப்பல்கள் மூலமாய் நடைபெறுகின்றது. இதை 80% ஆக கணக்கிடலாம். இந்தியாவுக்கு சொந்தமான கப்பல்கள் கப்பலேற்றுமதியில் தாழ்ந்த நிலைமையிலிருக்கின்றன. இந்தியாவின் எல்லைகளிலுள்ள தேசங்களுடன் ஏற்பட்ட வியாபாரம் இந்தியாவின் கடல் வணிகத்தில் 6% ஆக மதிக்கப்பட்டிருக்கிறது. இது விஷயமாகவுள்ள புள்ளி விவரங்கள் பூரணமாயில்லை. ஆகையால் அவை அவ்வளவு நம்பத்தக்கதல்ல. எல்லைப் பிரதேசங்களுடன் ஏற்பட்டிருக்கும் வியாபாரத்தின் தோராய மதிப்பு இறக்குமதி 17 கோடி ரூபாய்களாகவும், ஏற்றுமதி 15 கோடியுமாக குறிப்பிடலாம். இவ்வியாபாரம் சமீபகாலத்தில் அதிகரித்துக்கொண்டுவருகிறது. கரையோர வணிகத்தின் தேறின மதிப்பு 120 கோடி ரூபாய்களாக மதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வித வியாபாரம் பெரும்பாலும் கீழ்கரை துறைமுகங்களுக்கும், பர்மாவுக்கும், பம்பாய்க்கும், கராச்சிக்கும் ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவில் இறக்குமதியாயிருக்கும் தங்கத்தின் மதிப்பு கீழ்க்கண்ட புள்ளி விவரங்களால் விளக்கலாம். 1930—31-ம் வருஷம் வரை இந்தியாவில் தங்கம் இறக்குமதியாகிக்கொண்டே வந்திருந்தது. 1900—1901 முதல் 1930—31 வரையுள்ள 31 வருஷங்களில் 547·76 கோடி ரூபாய்களுக்கும் தங்கம் இறக்குமதியாகியிருந்தது. 1910—11 முதல் 1930—31 வரை 75,139,670 அவுன்ஸ் தங்கம் இந்தியாவில் இறக்குமதியாயிற்று. அதன் விலை 457·86 கோடி ரூபாயாக மதிக்கப்பட்டது. 1931—32 முதல் 1936—37 வரையுள்ள 6 வருஷத்தில் 35,404,000 அவுன்ஸ் தங்கம் (298·29 கோடி ரூபாய் மதிப்பு) ஏற்றுமதியாயிற்று. இந்தியாவின் வாணிபம் சம்பந்தமாக மேற்கூறிய குறிப்புகளிலிருந்து நாம் சில விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம். முதலாவது. இந்தியாவின் இறக்குமதியைவிட ஏற்றுமதி அதிகம். 1909—10 லிருந்து 1913—14 வரை இறக்குமதியைவிட ஏற்றுமதி 42·19 கோடி ரூபாய் அதிகம்; 1914—1915 முதல் 1918—19 வரை ஏற்றுமதி இறக்குமதியைவிட 30·14 கோடி ரூபாய் அதிகம். 1920—21லும் 1921—22லும் வாணிபச் சமநிலை இந்தியாவுக்கு விபரீதமாகயிருந்தது. 1922—23

முதல் வாணிபச் சமநிலை இந்தியாவுக்கு அனுகூலமாயிருந்தது. இந்தியாவின் வாணிபச் சமநிலை விஷயமாக கீழ் குறிப்பிட்ட விஷயம் கவனிக்கத்தக்கது.

இந்தியாவுக்கு ஏற்படுகிற வருமானங்களாவன :—

(1) இந்தியாவின் ஏற்றுமதிக்குள்ள கொடுதொகை

(2) இந்தியாவுக்கு இறக்குமதியாகிற மூலதனம்

(3) இந்தியாவில் வாசம் செய்யும் அயல் நாட்டினருக்குள்ள செலுத்துத் தொகை (பிரயாணிகள் உள்பட)

இது நிற்க இந்தியாவிலிருந்து வெளி தேசங்களுக்குள்ள கொடுதொகையாவன :—

(1) இந்தியாவின் இறக்குமதிக்குள்ள கொடுதொகை

(2) இந்தியாவில் வெளிநாட்டாரின் விடுமுதலுக்குள்ள வட்டி

(3) இந்தியாவின் கடல் வணிகம் சம்பந்தமாக கப்பலேற்றுமதி கூலி.

(4) வெளிநாடுகளுக்குப் போயிருக்கும் இந்தியர் செலவுக்காக அனுப்பப்படும் தொகை.

(5) அயல்நாட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளுக்கு கட்ட வேண்டிய சந்தா.

சாதாரண காலங்களில் இந்தியாவுக்கு வாணிபச் சமநிலை அனுகூலமாயிருக்கிறது. ஆனால் இங்கிலாந்துக்கு இந்தியாவின் கடமைகள் அதிகம். ஆகையால் இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதியைவிட அதிகமாயிருந்தபோதிலும் இப்பேர்ப்பட்ட மிகுதிக்கு ஒரு சிறிய பாகம்தான் ஸ்வர்ணரஜதம் சேர்ந்த பணங்களாக (bullion) இந்தியாவுக்கு வருகிறது. மற்ற ஏற்றுமதி மிகுதிக்கு நேரான பலன்கள் இல்லையென்பது அநேகரின் கொள்கை.

இந்தியாவில் இறக்குமதியாகும் பொருள்களின் மதிப்பை கீழ்க்கண்ட புள்ளி விவரங்களால் எடுத்துக் காட்டலாம்.

இறக்குமதி

வருஷம்		ரூபாய்	
1929-30	...	250	கோடி
1930-31	...	173	,,
1931-32	...	131	,,
1932-33	...	135	,,
1933-34	...	117	,,
1934-35	...	135	,,
1935-36	...	152	,,
1936-37	...	144	,,
1937-38	...	177	,,
1938-39	...	156	,,

ஏற்றுமதி

வருஷம்		ரூபாய்	
1929-30	...	319	கோடி
1930-31	...	227	,,
1931-32	...	161	,,
1932-33	...	136	,,
1933-34	...	151	,,
1934-35	...	156	,,
1935-36	...	155	,,
1936-37	...	192	,,
1937-38	...	190	,,
1938-39	...	170	,,

விலை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியகாலமுதல் பண்டங்களின் விலை அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. 1901–10-ம் *வருஷம் வரையுள்ள* 10 *வருஷ சராசரி விலை அதற்கு முந்திய* 10 *வருஷ சராசரி விலையைவிட அதிகம்.* 1911–20-ம் *வருஷம் வரையுள்ள* 10 *வருஷ சராசரி விலை* 1901—10-ம் *சராசரி விலை*

யைவிட அதிகம். 1917லிருந்து 1920-ம் வருஷம்வரை விலைவாசிகள் மிகவும் அதிகமாயிற்று : 1929-ம் வருஷம் முதல் பண்ட விலை திடீரென்று இறங்கிற்று.

பண்டங்களின் விலை ஏற்றத்திற்கு என்ன காரணம்? விலை ஏற்றம் பலவிதமாக ஏற்படலாம் : (1) பண்டங்களுக்குள்ள தேவை அதிகரித்தல் (increase in the demand for commodity) ; (2) பண்டங்களின் இருப்பு குறைதல் (decrease in the supply of commodities) ; (3) பண்டமாற்றுத் துணைக்கருவி கூடுதல் (an addition to the quantity of the medium of exchange) ; (4) பண்டமாற்றுத்துணைக்கருவி விரைவாய் கைமாறுதல் (increase in the rapidity of exchange.)

1890-ம் வருஷம் முதல் இந்தியாவின் ஜனத்தொகை 10% வீதம் அதிகரித்திருக்கிறது. ஜனவிருத்தியுடன் பிழைப்புத் திட்டமும் உயர்ந்திருக்கிறது. அதனால் ஜனங்களின் தேவையும் அதிகம். இந்தியாவின் உணவுப் பொருள்களுக்கு மற்ற தேசங்களில் அதிக தேவை ஏற்பட்டுக்கொண்டேயிருக்கிறது. உணவுப் பொருள்கள் சில மாகாணங்களில் அதிகமாயும், சில மாகாணங்களில் குறைவாயுமிருக்கின்றன. பண்டங்களின் தேவைக்குத்தக்கபடி, பண்டங்களின் இருப்பு அதிகப்படவில்லை. தவிரவும் பண்டமாற்றுத் துணைக்கருவியானது நாணயம், 'செக்' உண்டியல் முதலியனவாக இருப்பதால் இவைகளின் வேகத்தால் பண்டமாற்றுதல் எவ்வளவு அதிகப்படுகிறதென்பதை நாம் இலகுவாய் கணக்கிட முடியவில்லை. வெள்ளி நாணயத்தை சர்க்காரின் நோக்கப்படி முறைப்படுத்துதல் விலை ஏற்றத்திற்கு ஒரு காரணமாகயிருக்கலாம். தவிரவும் உலகத்தில் மற்ற தேசங்களிலுள்ள விலை ஏற்றத்தினால் இந்தியாவிலும் விலை ஏற்றம் ஏற்பட்டிருக்கிறது. 1914-18-ம் வருஷங்களில் அபார விலை ஏற்றத்திற்குக் காரணம் நாணயத்தாளை மட்டுக்குமிஞ்சி அரசியலார் வெளியிட்டதேயாம். யுத்தத்தை நடத்துவதற்கு அதில் ஈடுபட்ட அரசியலார் மாற்றமுடியா தாள்நாணயத்தை வெளியிட்டனர். தங்கப் பணப் பழக்கம் குறைந்துவிட்டது. அநேகமாக தங்கம் பாங்கு காப்பு நிதியாக சேர்க்கப்பட்டது. மட்டுக்குமிஞ்சி நாணயத்தாள்

வெளியிட்டதால் பணத்திற்கு மதிப்பிழிவு ஏற்பட்டது. அதனுல் பண்டங்களின் விலே ஏற்றமடைந்தது. துணிவு வியவஹாரத்திஞலும் (speculation) விலே ஏற்றம் அதிகமாயிற்று. விலே ஏற்றமுள்ள காலங்களிலெல்லாம் இந்தியாவின் விவசாயப் பொருள்களுக்கு தகுந்த லாபம் கிடைத்தது. ஆனுல் ஏற்றுமதியாகும் பொருள்களே இவ்வித லாபத்தை அடைந்தன. 1929-ம் வருஷம் பண்டங்களின் விலே திடீரென்று இறங்கிவிட்டதால் ஒரு பெரிய வாணிபத் தளர்ச்சி ஆரம்பித்தது. இதனுல் செய்தொழில்களே விட விவசாயிகளுக்கு பெருநஷ்டம் உண்டாயிற்று. இந்தியாவில் விவசாயிகளின் வருமானம் எவ்வாறு குறைந்ததென்பதை பின் வரும் புள்ளிகளால் விளக்கலாம். 1928-29-ம் வருஷத்தில் இந்தியாவின் விவசாயப் பொருள்கள் 1,034 லட்சமாக மதிக்கப்பட்டது. 1933-34ல் அப்பொருள்களின் மதிப்பு 473 லட்சம் ஆகிவிட்டது. அதாவது இந்தியாவின் பெரிய எட்டு மாகாணங்களின் விளேச்சல் பொருள்களின் விலே மதிப்பை கவனிக்குமிடத்து அவை 53% குறைந்துவிட்டன.

XV

கூட்டுறவு

(CO-OPERATION)

ஒரு பொதுக் காரியத்தின் பொருட்டு பலர் சேர்ந்து பாடுபடுவது கூட்டுறவு என்பது. குடும்ப வாழ்க்கையில் கூட்டுறவிருக்கிறது. புருஷன் பெண்ஜாதி, சகோதர சகோதரிகள், பெற்றோர் குழந்தைகள், எல்லோரும் வீட்டைச் சார்ந்த காரியாதிகளைச் செய்வதில் ஒருவர்க்கொருவர் உதவிபுரிந்து அதனால் பயனடைகின்றனர். பரஸ்பர ஒற்றுமையில்லாவிடில் குடும்ப வாழ்க்கை சரிவர நடைபெறாது; குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றாய் வசிப்பது கடினமாகும்.

அவ்வாறே ஒரு கிராமத்தில் வசிக்கும் ஜனங்களுக்குள் கூட்டுறவுண்டு. உழவாளன், நெசவுக்காரன், புரோகிதன், நாவிதன், குயவன், வண்ணான் முதலிய கிராமவாசிகள் பலவிதங்களில் ஒருவர்க்கொருவர் உதவிபுரிகின்றனர். ஒரு காட்டு மிருகம், திருடன் அல்லது இதர எதிரிகள் கிராமத்தாருக்குத் தொந்தரவு புரியவந்தால் எல்லோரும் ஒன்றுசேர்ந்து அவ்வெதிரிகளைத் துரத்துகிறார்கள். தங்கள் சௌகரியத்தை உத்தேசித்துப் பொதுக் கிணறுகளையும் ஏரிகுளங்களையும் அமைப்பது, நீர்ப்பாய்ச்சலுக்காக வாய்க்கால்களை வெட்டுவது, கோயில் கட்டுவது, தினந்தோறும் வருஷாந்திரமும் கோயிலில் பூஜை உற்சவாதிகளை நடத்த ஏற்பாடுகளைச் செய்வது, ஆக இவைபோன்ற பல பொதுக்காரியாதிகளையும் நடைபெறச் செய்வதற்காக எல்லா கிராமவாசிகளும் ஒன்று சேருகிறார்கள்.

தேசம் முழுவதையும் கவனித்துப் பார்த்தால் அதனைச் சார்ந்த பெரிய விஷயாதிகளிலும் ஒற்றுமை நிறைந்துளது. இவ்வித ஒற்றுமையைப் பலர் உணராமலிருக்கலாம். காவேரியாற்றை, சேலம் ஜில்லா மேட்டூரில் ஒரு பெரிய அணைக்கட்டால் தடுத்து

தஞ்சாவூர் ஜில்லாவின் கீழ்பாகத்தில் நீர்ப்பாய்ச்சல் வசதிகள் ஏற்படும்பொருட்டு நூற்றுக்கணக்கான மைல்கள் தண்ணீர் கொண்டுபோகப்படுகிறது. அது போலவே நீலகிரி மலை மீதுள்ள பைகாரா என்னும் நதியில் உண்டாக்கப்படும் மின்சார சக்தியானது மைதானங்களில் வெகு தூரத்திலுள்ள நகரங்களுக்குப் பிரகாசமுண்டாவதின் பொருட்டு நூற்றுக்கணக்கான மைல்கள் கம்பிகளின் மூலமாகச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேற்குக்கரை பிரதேசங்களில் வசிப்பவர்கள் கோதாவரி, வங்காளம், பர்மா ஆகிய விடங்களினின்றும் தமக்குத் தேவையான அரிசியைப் பெறுகிறார்கள். ஒருவரையொருவர் அறியாத ஆயிரக்கணக்கான ஜனங்கள் தேசத்தின் பொதுவான சௌகரியங்களை உத்தேசித்து ஒன்றுசேர்ந்து நடத்திவரும் ரெயில்வே முதலிய பல பெரிய இயக்கங்களை நாம் கவனிப்போமானால் கூட்டுறவின் பெருமையானது நமக்குத் தெளிவாகப் புலப்படும்.

மனிதனுக்கும் கீழ்ப்பிராணிகளுக்கும் முக்கியமான வித்தியாசம் இக்கூட்டுறவேயாகும்; கூட்டுறவின் பெருமையை உணர்ந்து அப்பியாசத்தில் கொண்டுவந்திருப்பதால் தன்னைவிடப் பலமுள்ள சிங்கம், புலி, யானை முதலிய காட்டு மிருகங்களை வசப்படுத்த மனிதனுக்குச் சக்தியுண்டாயிருக்கின்றது. பசி, தாகம், குளிர் முதலியவற்றையும் ஜெயிக்க அவனுக்கு சக்தியிருக்கிறது. மானிட வாழ்க்கையின் அபிவிருத்தி அல்லது நாகரீக வளர்ச்சிக்குக் கூட்டுறவானது ஆதாரமாயுளது. ஆனால் தற்கால உலக நிலைமையைக் கவனித்தால் மனிதன் இன்னும் எவ்வளவோ விதங்களில் கூட்டுறவு முறையை அனுசரிக்கக்கூடும் எனத் தெரிகிறது. வாழ்க்கைச் சம்பந்தமான அநேக விஷயங்களில் ஒற்றுமை ஏற்படாததே மனிதனுடைய பல துன்பங்களுக்கும் காரணமாகும். ஒற்றுமையைப் பூராவும் கடைப்பிடிப்பானேயாகில் தனது துன்பங்களை யகற்றி அபரிமிதமான சுகத்தை அவன் அடையக்கூடும்.

கூட்டுறவு சங்கமாவதென்ன?

சுயவுதவி, பரஸ்பர உபகாரம், உலக நீதி வழுவாமை, ஆகிய கூட்டுறவு கோட்பாடுகளை யனுசரித்து எவ்வித வியாபாரம் அல்

லது தொழிலையாவது நடத்தித் தமது ஜீவன நிலைமையை அபிவிருத்தி செய்துகொள்ளும்பொருட்டு 10 அல்லது 10-க்கு மேற்பட்ட சாமான்னிய பொருளாதாரமுள்ள நபர்கள் தாமாக ஒன்று சேர்ந்து ஏற்படுத்திக்கொள்ளும் அமைப்பிற்கு, கூட்டுறவு சங்கம் எனப் பெயர்.

விவரிக்கவேண்டிய குறிப்புகள்

(*a*) **சங்கம்** :—ஒருவர் அல்லது இருவர் சேர்ந்தால் சங்கமாகாது. சங்கமென்றால் பலர் சேரவேண்டும். நமது தேசக் கூட்டுறவு சட்டத்தின்படி குறைந்தது 10 நபர்களாவது ஒரு கூட்டுறவு சங்கத்தில் மெம்பர்களாக விருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டுளது. அவர்கள் தமக்கென்று சில விதிகளை ஏற்படுத்திக்கொண்டு அவற்றின்படி நடப்பதற்கு உடன்படவேண்டும். இல்லாவிடில் அத்தகைய அமைப்பானது கூட்டுறவு சங்கமல்ல. சங்க விதிகளில் மெம்பர்களுடைய சுதந்திரங்களும் கடமைகளும் குறிக்கப்படுகின்றன. சுதந்திரங்களைப் பெற எவ்வளவு ஆவலிருக்கிறதோ அவ்வளவு ஊக்கத்துடன் தமது கடமைகளையும் செலுத்த மெம்பர்கள் தயாராயிருக்கவேண்டும். விதிகளின்படி ஒரு நபர் நடப்பானென்று இதர மெம்பர்களுக்கு நம்பிக்கையில்லாவிடில் அந்நபரை மெம்பராகச் சேர்ப்பது கூடாது.

(*b*) **தாமாகச் சேருவது** :—தனக்குச் சௌகரியமுண்டென்று உணர்ந்த பிறகு அவ்வுணர்ச்சியின் பயனாக ஒருவர் தாமே சங்கத்தில் மெம்பராகச் சேரவேண்டும். மெம்பராவதால் உண்டாகக்கூடிய பயன்களைப் பிறர் எவ்வளவுதான் எடுத்துரைத்த போதிலும் நன்கு தனக்குள் ஆலோசித்துப் பிறகே ஒருவர் மெம்பராகச் சேருவதா அல்லது சேரவேண்டாமா என்று நிர்ணயிக்க வேண்டும். பிறர் கட்டாயத்திற்காக ஒரு காரியத்தைச் செய்வதென்பது கூட்டுறவு கோட்பாட்டிற்கு விரோதமாகும்.

(*c*) **சாமான்னிய பொருளாதாரம்** :—ஜமீன்தார்கள், பாக்டெரி சொந்தக்காரர்கள், லேவாதேவி செய்யும் பாங்கர்கள் ஆகிய இவர்கள் போன்ற பணக்காரர்களுக்காகவும் வாழ்க்கைச் சிறப்பினால் அதிகார தோரணை பொருந்தி வாழ்பவர்களுக்காகவும் அல்ல ;

ஆனால் விவசாயிகள், கைத்தொழிலாளிகள், சிப்பந்திகள் முதலிய எண்ணிறந்த எளியோர்களின் துன்பங்களை விலக்கி அவர்கள் வாழ்க்கையை மேன்மேலும் அபிவிருத்தியடையச் செய்வதே கூட்டுறவு முறையின் நோக்கமாகும். ஏழை ஜனங்களைத் தொந்தரவு செய்து அல்லது அவர்களைக் கருவிகளாகக்கொண்டு பொருள் சம்பாதிக்க ஏற்படுத்தப்படும் செல்வவந்தர்களின் சங்கங்கள் கூட்டுறவு கொள்கைகளுக்கு விரோதமானவை.

(*d*) **ஜீவன நிலைமை அபிவிருத்தி** :—கூட்டுறவு சங்கத்தின் நோக்கம் அதன் மெம்பர்களுடைய ஜீவனம் அல்லது பொருளாதார நிலைமையை அபிவிருத்திசெய்வதே. இதற்கு அவர்களுடைய வருமானமாவது அதிகரிக்கவேண்டும், அல்லது செலவாவது குறையவேண்டும். அல்லது இரண்டு விதத்திலும் சௌகரியம் ஏற்படவேண்டும். பல தொழில்களுக்கும் தேவையான பண முதல், ஆயுதங்கள், கருவிகள், சிறந்த விதைகள், எருக்கள் முதலிய வசதிகளைக் கொடுத்து பொருட்களை மேன்மேலும் உண்டாக்குவதற்கு மெம்பர்களுக்குச் சங்கமானது உதவிபுரியலாம். உண்டாக்கப்படும் பொருட்களை அவர்கள் தனிமையாக விற்பதைவிட சங்கத்தின்மூலமாக விற்க ஏற்பாடு செய்து அதிக லாபத்தைப் பெறலாம். இம்மாதிரி பல வழிகளில் மெம்பர்களுடைய வருமானம் அதிகரிக்கக்கூடும்.

தனிமையாக ஒவ்வொருவரும் சாமான்களை வாங்கினால் அதிக விலை கொடுக்கும்படி நேரிடும். எல்லா மெம்பர்களும் ஒன்று சேர்ந்து தங்களுக்குத் தேவையான பொருட்களைச் சங்கத்தின் மூலமாய் மொத்தமாக வாங்கினால் விலை குறைவாகி லாபம் கிடைக்கும். விவாகங்கள், கருமாதி முதலிய குடும்பச் சடங்குகளின் விஷயமாக ஏற்படும் செலவுகளைக் குறைக்கவும், பிரதிபலனில்லாத மார்க்கங்களில் செலவு செய்து கடன்படுவதைத் தவிர்க்கவும், தங்கள் வருமானத்திற்கேற்றபடி செலவுகளை மட்டுப்படுத்தவும், கோர்ட்டுகளுக்குச் சென்று பணத்தை விரயம் செய்யாமல் தங்களுக்குள்ளாகவே மத்தியஸ்தர்களின் மூலமாய் தங்கள் வழக்குகளைத் தீர்த்துக்கொள்ளவும், சங்கத்தில் தமது வருமான மிகுதியை க்ஷேம நிதியாகச் சேர்த்துவைக்கவும், தமது குழந்தை

களைக் கல்விச்சாலைகளுக்கு அனுப்பவும், குடும்பத்தில் யாருக்காவது தேக அசௌக்கியம் நேரிட்டால் சிகிச்சை செய்யவும், இம்மாதிரி பலவிதங்களில் தாமே சங்கமூலமாகப் பல ஏற்பாடுகளையும் செய்துகொண்டு செலவைக் குறைத்து, வீண் செலவுகளை நிறுத்தி எதிர்கால க்ஷேமத்தின் பொருட்டுப் பணம் சேகரித்து ஒற்றுமையாகப் பாடுபட சங்கம் உதவி புரியலாம்.

(*e*) **வியாபாரம் அல்லது தொழில்:**—மெம்பர்களின் தொழில் அல்லது வியாபார அபிவிருத்திக்காகக் கூட்டுறவு சங்கம் ஏற்படுவதே யொழிய தருமம் செய்ய ஏற்படும் அமைப்பல்ல. மெம்பர்கள் தாம் பெறும் கடன்களைத் திருப்பிச் செலுத்தவேண்டும். சங்கத்தின் மூலமாகப் பெறும் கடன்களைத் திருப்பிச் செலுத்தவேண்டும். சங்கத்தின் மூலமாகப் பெறும் சாமான்களுக்குப் பணங்கொடுத்துத்தான் தீரவேண்டும். துன்பங்களைத் தவிர்ப்பது தருமமே யல்லாது வியாபாரமாகாது. ஒரு குருடன் அல்லது கிழத்தனம் அல்லது பலஹீனத்தால் சம்பாதிக்கும் திறமையின்றி வருந்தும் ஒருவனுக்கு தருமம் செய்து சம்ரக்ஷணை செய்யவேண்டியதுதான். ஆனால் அது வியாபாரமாகாது. அவ்வித நபருடன் நாம் என்ன வியாபாரம் செய்யக்கூடும்? பொருட்களை யுண்டாக்கச் சக்தியில்லாமல் கூலிவேலைகூடச் செய்யக் கூடாத ஒருவன் சங்கக் கடனைத் திருப்பிச் செலுத்தமுடியாது. இத்தகைய நபர்களும் சோம்பேறிகளும் சங்கத்தில் மெம்பர்களாகச் சேர்க்கப்படக்கூடாது.

கூட்டுறவுக் கொள்கைகள்

(சுயவுதவி, பரஸ்பர உபகாரம், உலகநீதி வழுவாமை)

சுயவுதவி:—தன்னுடைய பொருளாதார நிலைமையையும் நடத்தையையும் சீர்திருத்திக்கொள்ள மெம்பர் ஆவலுடன் பாடுபடச் சித்தமாயிருக்கவேண்டும். எக்காரியத்திலும் நெறியுடன் வாழ்வது, மேன்மேலும் அறிவை விருத்தி செய்துகொள்வது நற்போதனைகளை யனுசரித்து நடப்பது துற்போதனைகளைத் தவிர்ப்பது, எப்போதும் தன் அபிவிருத்தியைக் கருதி கடமைகளை இடைவிடாது அவ்வப்போது செய்வது, ஆகிய பல விதங்

களில் ஒவ்வொரு மெம்பரும் முயலவேண்டும். இதுதான் சுயவுதவி. தன் அபிவிருத்தியைக் கருதாத ஒருவன் சங்கமெம்பராயிருக்கத் தகுதியல்ல.

பரஸ்பர உபகாரம்:—சங்கத்தினுல் எல்லோருக்கும் பயன் ஏற்படக்கூடியவாறு மெம்பர்கள் ஒருவருக்கொருவர் உதவி புரியவேண்டும். பலரும் சிநேகமாக நடந்துகொண்டு க்ஷேமமடையவேண்டுமென்ற நோக்கம் ஒவ்வொரு மெம்பருடைய மனதிலும் பதியவேண்டும். பொருமை, வெறுப்பு முதலிய கெட்ட குணங்களுக்கு இடங்கொடுக்கக் கூடாது. ஒவ்வொருவரும் க்ஷேமத்தையும், எல்லோரும் ஒவ்வொருவருடைய க்ஷேமத்தையும் கருதுவதே கூட்டுறவின் உலகப் பிரசித்திபெற்ற கொள்கை. சுயவுதவியும் பரஸ்பர உதவியும் சேர்ந்தாற்போல் நடத்தையில் அப்பியாசம் செய்யலாம். சுயநலம் என்பது கூட்டுறவு கொள்கைக்கு விரோதமாயுளது. ஒரு காரியத்தைச் செய்வதால் அல்லது செய்யாதிருப்பதால் பிறருக்குத் துன்பம் ஏற்படாவண்ணம் ஒவ்வொரு மெம்பரும் கவனித்துக்கொள்ளவேண்டும்.

உலகநீதி வழுவாமை:—யோக்கியமாயும் நெறியுடனும் மெம்பர்கள் நடந்துகொள்வது கூட்டுறவு சங்கத்தின் முக்கிய நோக்கம். பொய் சொல்வது, விலைவாசிகளில் ஏமாற்றுவது, விஷயங்களை பிறரிடமிருந்து ஒளித்து ரகசியமாக வைப்பது, பிறரை வஞ்சித்துப் பொருள் சம்பாதிப்பது முதலிய கெடுதலான வழிகளை கூட்டுறவு கொள்கை அறவே ஒழிக்கக் கருதுகிறது. மெம்பர்கள் எப்போதும் பிறர் தம்மிடம் நம்பிக்கைவைக்கும்படி நாணயமாக நடந்துகொள்ளவேண்டும்.

பரோபகாரம்—லாபம் கருத்தல்ல:—பரோபகாரத்தையே கூட்டுறவானது மேற்கொண்டுளது. இதர போட்டி வியாபார முறைகளில் பிறரை யடக்கி அதிக லாபம்பெற முயலுவது நோக்கமாயிருக்கிறது.

வித்தியாசங்கள்

(*a*) சாவுகார் போன்ற லேவாதேவிக்காரரும் கூட்டுறவு சங்கமும்:—சாவுகார் தன் லாபத்தை யல்லாது கடன் வாங்கு

பவனுடைய லாபத்தைக் கருதுவதில்லை. கடன் வாங்குபவனுடைய தேவையை யனுசரித்து சாவுகார் வட்டி விகிதத்தை ஏற்றிவருகிறான். சில சமயங்களில் தான் கொடுக்கும் பணத்தைவிட அதிகத் தொகைக்கு புரோநோட்டை எழுதி வாங்கிக்கொள்ளுகிறான். கடன் வாங்குபவனுடைய மதியின்மையை நன்றாய்த் தெரிந்துகொண்டு திருப்பிச் செலுத்தப்படும் தொகைகளுக்கு சாவுகார் ரசீது கூடக் கொடுப்பதில்லை. பொய்க் கணக்குகளை வைத்து ஏமாற்றுவதுமுண்டு. கடன்காரனைக் கூடுமானால் அடியோடு மோசம் செய்து அவனுடைய சொத்து முழுவதையும் அபகரிப்பதற்கும் சாவுகார் முயற்சி செய்கிறான்.

மெம்பர்களின் தேவைகளைக் கவனித்து அவர்களுக்குச் சௌகரியங்களைச் செய்யவே கூட்டுறவு சங்கமானது ஏற்படுகிறது. எக்காரியத்திற்காகக் கடன் தேவையென விசாரித்து அதற்கு எவ்வளவு பணம் வேண்டுமோ அவ்வளவு பணமே கடன் கொடுபடுகிறது. கடனை சௌகரியமான தவணைகளிலும் சிறிய தொகைகளாகவும் திருப்பிச் செலுத்தலாம். சங்கவிதிகளுக்கு எல்லோரும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். இதனால் கடன் வாங்குபவனுக்கும் இதர மெம்பர்களுக்கும் சௌகரியமுண்டு. சங்கக் கணக்குகள் சரிவர எழுதிவைக்கப்படுகின்றன. சங்கக் காரியதரிசிகளில் ரகசியம் ஒன்றுமில்லை. பிறரை வஞ்சித்து, லாபம் பெறுவதென்பது கூட்டுறவு சங்க நடத்தையில் கிடையாது.

(b) **வியாபாரியும் கூட்டுறவுப் பண்டகசாலையும்:**—நாம் கணக்குத் தெரியாமலோ அல்லது அஜாக்கிரதையாகவோ இருந்தால் வியாபாரி நம்மை ஏமாற்றிவிடுவான். தனது லாபத்தை அதிகப்படுத்திக்கொள்வதற்காகச் சுத்தமான சமான்களைக் கொடுக்காமல் கலப்பிடமானவற்றையே கொடுப்பான். அபினி, சாராயம் முதலிய கெடுதலான வஸ்துக்களை விற்கவும் முன்வருவான். வாங்குபவனுக்கு நல்ல சாமான்களைக் கொடுக்கவேண்டுமென்கிற கவலை அவனுக்கில்லை. நமக்கு நல்ல பொருட்களைக் கொடுத்து உபகாரம் செய்வது அவனுடைய நோக்கமல்ல. எவ்விதத்திலாவது கூடியவரையில் ஏராளமான லாபத்தைச் சம்பாதிக்க

வேண்டுமென்பதே அவனுடைய எண்ணம். விவசாயிகள் நல்ல பருத்தி அல்லது நிலக்கடலையைத் தரகுக்காரனுக்கு விற்றால் அவன் தன் லாபத்தை உத்தேசித்து நல்ல சரக்குடன் கெடுதலானவற்றைக் கலந்து விற்பதால் வாங்குபவர்கள் விலை குறைவாகக் கொடுக்கத்தான் முயலுவார்கள். கடைசியாக விவசாயிதான் கஷ்டப்படவேண்டும். ஏனெனில் அவனுடைய பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்காது. தரகாளர்கள் நிறையிலும், மாமூல்களைப் பெறுவதிலும், பொருட்களுக்குக் கூடியவரையில் குறைந்த விலை கொடுத்து வாங்கி அதிக விலைக்கு விற்பதிலும், தாம் அதிக லாபம் சம்பாதிப்பதிலும் கருத்தாயிருப்பதால், விவசாயிதான் இவற்றால் ஏமாந்துபோகிறான். விவசாயிகளைப் போன்ற எளியவர்களை ஏமாற்றவே தரகாளர்கள் எண்ணுவதால் அவர்களை கூட்டுறவுச் சங்கத்தில் மெம்பர்களாகச் சேர்ப்பது கூடாது.

கூட்டுறவு இயக்கத்தின் சுருக்கமான சரித்திரம்

தற்காலத்தில் உலகத்தின் ஏறக்குறைய எல்லா தேசங்களிலும் கூட்டுறவு சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஐரோப்பா கண்டத்தில் சில தேசங்களில் அவைகள் வெகுவாக அபிவிருத்தியடைந்து ஜனங்களுக்கு ஏராளமான பயன்களை விளைத்துவருகின்றன. அவற்றின் சிறப்பான நிலைமையைக் கவனித்தே நமது சர்க்காரும் இத்தேசத்தில் இவ்வியக்கத்தை ஸ்தாபித்தனர்.

ஐரோப்பா கண்டத்துத் தேசங்களுள் மூன்று தேசங்கள் கவனிக்கத்தக்கவை—இங்கிலாந்து, டென்மார்க்கு, ஜெர்மனி.

(*a*) இங்கிலாந்தில் கூட்டுறவு இயக்கமானது மற்ற தேசங்களைவிட முன்பாகவே ஸ்தாபிக்கப்பட்டது. அங்கு ஸ்தாபிக்கப்பட்டு இப்பொழுது சுமார் நூறு வருடங்களாகின்றன. பாக்டெரிகள் அல்லது பெரிய தொழிற்சாலைகளில் வேலைசெய்து பிழைக்கும் எளிய ஜனங்களின் முன்னேற்றத்தைக் கருதி ஷை இயக்கமானது அத்தேசத்தில் துவக்கப்பட்டது. நமது தேசத்தில் லேவாதேவி சங்கங்களே முக்கியமாகக் கருதப்பட்டு முத

லில் ஸ்தாபிக்கப்பட்டன. ஆனால் இங்கிலாந்திலோ எளிய தொழிலாளர்கள் தமது உணவுப் பொருட்களையும் உடுப்புகளையும் மலிவாகப் பெறுவதை முன்னிட்டு கூட்டுறவுப் பண்டகசாலைகள் (கோவாபரேடிவ் ஸ்டோர்கள்) அவசியமெனக் கருதப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டன. கடைகளைத் தமக்கென்று ஏற்படுத்தி அவற்றிலேயே தேவையான பொருட்களை வாங்குவதால் மத்தியிலுள்ள தரகாளர்கள் பெறும் லாபத்தைச் சங்க மெம்பர்கள் தாமே பெறலாயினர். கூட்டுறவுப் பண்டகசாலைகளில் பொருட்களை இதர வியாபாரிகள் விற்கும் விகிதத்திற்கே மெம்பர்கள் பணங்கொடுத்து வாங்குகிறார்கள். ஆனால் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கணக்குகள் முடிவு கட்டப்பட்டு ஏற்படும் லாபத்தை அதாவது இதர வியாபாரிகள் தமக்கென்று வைத்துக்கொள்ளும் லாபத்தை, மெம்பர்களுக்குள் அவரவர்கள் வாங்கின பொருட்களின் மதிப்பிற்கேற்றபடி பங்கிடப்படுகிறது. இம்மாதிரி திருப்பிக் கொடுக்கப்படும் லாபப் பணத்திற்கு டிவிடெண்டு எனப் பெயர் வழங்குகிறது. தற்காலத்தில் இங்கிலாந்தில் ஒரு பவுனுக்கு இரண்டு ஷில்லிங் அதாவது நூற்றுக்குப் பத்துவீதம் டிவிடெண்டு சாதாரணமாகக் கொடுபடுகிறது. சுமார் 1,200 கூட்டுறவு பண்டக சாலைகள் இப்போதிருக்கின்றன. அவற்றில் சுமார் 75 லக்ஷம் மெம்பர்களிருக்கிறார்கள். அதாவது அத்தேசத்தில் மொத்த ஜனங்களில் மூன்றில் இரண்டு பாகம் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் மெம்பர்களாகவிருந்து பயனடைகிறார்கள். சில சங்கங்கள் மிகப் பெரியனவாயிருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் 50,000-க்கு மேற்பட்ட மெம்பர்களிருக்கிறார்கள். அவற்றில் 1936-ம் வருஷத்தில் விற்பனையான சரக்குகளின் மொத்த மதிப்பு பத்துக் கோடியே ஏழு லக்ஷம் பவுன் அல்லது ஏறக்குறைய 150 கோடி ரூபாய்கள். அச்சங்கங்கள் அனைத்தும் சேர்ந்து ஓர் மொத்த விற்பனைச் சங்கத்தை ஸ்தாபித்திருக்கின்றன. அச்சங்கமானது மெம்பர் சங்கங்களின் பயனைக் கருதி கோதுமை, வெண்ணை முதலிய உணவுப்பொருட்களை மொத்தமாக வாங்குகிறது; தனது தொழிற்சாலைகளில் ஜோடுகள், சோப்புகள், உடைகள் முதலிய வஸ்துக்களைத் தயாரிக்கிறது; இந்தியாவிலும், இலங்கையிலும் தேயிலைத் தோட்டங்களைச்

சொந்தமாகப் பெற்றுள்ளது. இங்கிலாந்து தேசத்துக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் எளிய தொழிலாளரான மெம்பர்களுக்கு வருஷந்தோறும் பல கோடி ரூபாய்கள் மிகுதிவைக்கின்றன. இச்சங்கங்களில்லாவிடில் இவ்வளவு லாபமும் இதர வியாபாரிகளுக்கே சேர்ந்துவிடும்.

(b) **டென்மார்க்கு** :—ஓர் சிறிய தேசம். நமது ஜில்லாக்களில் இரண்டுக்குச் சமானமான விஸ்தீரணமும் ஜனத்தொகையுமிருக்கின்றன. ஆனால் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் மூலமாக ஜனங்கள் தமது பொருட்களை விற்கவும், தமக்குத் தேவையான பொருட்களை வாங்கவும் டென்மார்க்கு தேசத்தில் நடந்துவரும் ஒழுங்கைக் கவனித்தால் உலகில் வேறு எத்தேசத்திலும் கூட்டுறவுச் சங்கங்களின் விஷயத்தில் இவ்வித ஊக்கமும் உற்சாகமும் இல்லையென்று கூறவேண்டும். அத்தேசத்தில் பசுக்கள், பன்றிகள், வாத்துகள், கோழிகள் ஆகியவற்றை ஜனங்கள் விசேஷமாக வைத்துக்கொண்டு வளர்க்கிறார்கள். வெளிதேசங்களுக்கு வெண்ணை, பன்றி இறைச்சி, முட்டைகள் ஆகிய வஸ்துக்களை ஏராளமாக ஏற்றுமதி செய்கிறார்கள். கூட்டுறவு முறைகளை யனுசரிப்பதால் அத்தேசத்துக் கால்நடைகள் வெகு சிறப்பாய் வளருகின்றன. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மேற்கண்ட வஸ்துக்களுக்கு நல்ல விலையும் கிடைக்கிறது. ஜனங்கள் தமக்குத் தேவையான பொருட்களையும், தமது கால்நடைகளுக்கு தீவனமும், விவசாயக் கருவிகளையும், எருக்களையும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வாங்கிக்கொள்ளுகிறார்கள். இதர தேசங்களிலிருந்து வெகு ஜனங்கள் டென்மார்க்கு தேசத்திற்குச் சென்று அங்கு கூட்டுறவு சங்கங்கள் நடைபெறும் ஒழுங்கை ஆராய்ச்சி செய்கிறார்களென்றால் கூட்டுறவு இயக்கம் அத்தேசத்தில் எவ்வளவு சிறப்பாயிருக்கிறதென்பதை நாம் யூகித்துக்கொள்ளலாம்.

(c) **ஜெர்மனி** :—ஜெர்மனியில் கூட்டுறவு லேவாதேவி முறை முதன் முதலில் ஆரம்பமாயிற்று. ஆகவே அத்தேசமே அதற்குப் பிறப்பிடமென்று கூறலாம். கிராம லேவாதேவிச் சங்கமும் அர்பன் பாங்கியும் அங்குதான் ஆரம்பிக்கப்பட்டன.

ரெய்பீஸன் (Raiffesin) என்னும் உதாரகுணமுள்ள பெரியார் அந்தேசத்து எளிய விவசாயிகளுக்கு உதவிபுரிவதைக் கருதி கிராம லேவாதேவி சங்கத்தை ஸ்தாபித்தார். நமது நாணய சங்கங்களும் அத்தேசத்திய சங்கங்களைப் போலவே யுள்ளன.

(*d*) **இந்தியா:**—கூட்டுறவு இயக்கசம்பந்தமாக முதலில் ஊக்க முண்டானது நமது சென்னை ராஜதானியிலேதான். ஜெர்மனி தேசத்துக் கூட்டுறவு நாணய சங்கங்களும் நில அடமான பாங்கிகளும் நடைபெறும் ஒழுங்கை ஆராய்ச்சிசெய்து நம் தேசத்தில் அவ்வித சங்கங்கள் ஏற்படக்கூடிய வசதிகளைப்பற்றி அறிக்கை ஒன்று தயாரிப்பதற்காக நமது சர்க்கார் ஸர் ப்ரெடிரிக் நிகல்ஸன் (Sir Frederick Nicholson) எனும் பெரியாரை 1892-ம் வருஷத்தில் நியமித்தார்கள். 1895-ம் வருஷத்தில் அவர் ஒரு அறிக்கையைத் தயாரித்தார். அந்த அறிக்கையானது இப்போதுகூட வெகுவாக மதிக்கப்படுகிறது. அதில் இத்தேசத்தில் நாணய சங்கங்கள் ஸ்தாபிக்கப்படுவதால் ஜனங்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகளை விவரித்து எழுதப்பட்டிருக்கிறது. சிலகாலத்தின் பிறகு கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட ஓர் கமிட்டியார் ஷை அறிக்கையை ஆராய்ச்சி செய்தார்கள். அக்கமிட்டியாரின் சிபார்சின்பேரில் மத்திய சட்டசபையில் ஒரு சட்டம் 1904-ம் வருஷத்திய சட்ட சங்கங்களின் ஆக்டு என்ற பெயருடன் விதிக்கப்பட்டது. 1912-ம் வருஷத்தில் அச்சட்டமானது சில மாறுபாடுகளுடன் மறுபடியும் விதிக்கப்பட்டது. நமது மாகாணத்தில் ஷை சட்டம் மற்றும் அநேக மாறுபாடுகளுடன் 1932-ம் வருஷத்தில் நிர்மாணிக்கப்பட்டது. 1904-ம் வருஷத்திய ஆக்டின்படி நாணய சங்கங்கள் மட்டுமே ஸ்தாபிக்கப்படலாமென்றிருந்தது. 1912-ம் வருஷத்திய ஆக்டினால் சென்ட்ரல் பாங்கிகள், யூனியன்கள் முதலிய இதர வகைச் சங்கங்களும் ஸ்தாபிக்கச் சௌகரியமேற்பட்டது.

1905 முதல் 1928 வரை எல்லா மாகாணங்களிலும் சங்கங்களும் மெம்பர்களின் சங்கியையும், சங்கங்களின் மூலதனங்களும் நாளாவட்டத்தில் அபிவிருத்தியடைந்தன. சில மாகாணங்களில் மெதுவாக அபிவிருத்தி ஏற்பட்டுவருகிறது. மற்றும் சில

வற்றில் அபிவிருத்தியே இல்லாமல் கூட்டுறவு இயக்கமானது தாழ்வான நிலைமையை யடைந்துவருகிறது. 1930-ம் வருஷ முதல் விவசாயப் பொருட்களின் விலைவாசிகள் வெகுவாக குறைந்துவிட்டதால், மெம்பர்கள் சங்கங்களினின்றும் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தத் திறமை குன்றி வருந்துகிறார்கள். தவணை கடந்த பாக்கிகள் ஏராளமாக ஏற்பட்டு சங்கங்கள் முன்போல மெம்பர்களுக்குக் கடன்கொடுக்க இணங்குவதில்லை. எங்கும் சங்கங்கள் சீர்திருத்தப்பட்டுக் கெடுதலான சங்கங்கள் மூடிவிடப்படுகின்றன. தற்காலத்தில் புதிய சங்கங்கள் வெகு குறைவாயும், ஜாக்கிரதையுடனும் ஸ்தாபிக்கப்படுகின்றன. நமது சங்கங்களின் மெம்பர்களுக்குக் கூட்டுறவுக் கொள்கைகளைப்பற்றிய விவரங்கள் சரிவரத் தெரியாததே கூட்டுறவு இயக்கத்தின் தற்காலத் தாழ்ந்த நிலைமைக்கு முக்கிய காரணம்.

கூட்டுறவு சட்டத்தின் முக்கிய நிபந்தனைகள் :—கூட்டுறவு சங்கங்களின் சட்டத்திற்கும், அச்சட்டத்தின்கீழ் கவர்ன்மெண்டார் விதித்துள்ள விதிகளுக்கும், ஒவ்வொரு சங்கத்திற்கும் ஏற்பட்டு ரிஜிஸ்திராரவர்களால் ரிஜிஸ்தர் செய்யப்பட்டுள்ள பைலாக்களுக்கும் எல்லா சங்கங்களும் கட்டுப்படுகின்றன. ஒவ்வொரு மெம்பரும் ஷை விதிகளின் சாராம்சத்தை அறிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம். கூட்டுறவுச் சங்கச்சட்டம், விதிகள், பைலாக்கள் ஆகியவற்றின் காப்பிகள் ஒவ்வொரு சங்கத்தின் ஆபீஸிலும் வைக்கப்பட்டு சௌகரியமான காலங்களில் மெம்பர்கள் அவற்றை உபயோகிக்க வசதிகள் இருக்கவேண்டும்.

சட்டத்தைக் கவனிப்போம். ஆரம்பத்தில் கூட்டுறவு சங்கங்களின் நோக்கமானது குறிக்கப்படுகிறது. நல்வாழ்க்கை, தொழில் அபிவிருத்தி, பொருட்களை மேன்மேலும் உண்டாக்கி ஜனங்கள் தமது வருமானத்தை அதிகப்படுத்துவது ஆகிய விஷயங்களை முன்னிட்டு மெம்பர்களுக்குள் சிக்கனம், சுய உதவி, பரஸ்பர உபகாரம் முதலிய நன்மார்க்கங்களைப் பரவச்செய்வதே கூட்டுறவு சங்கங்களின் நோக்கம்.

ஷை சட்டத்தின்படி ரிஜிஸ்திராரைக் கவர்ன்மெண்டார் நியமிக்கவேண்டுமென்றிருக்கிறது. எல்லா சங்கங்களுக்கும் ரிஜிஸ்

திரார் ஓர் சிநேகிதராக விருந்து அவை நடைபெறுவதற்குத் தேவையானபடி அவ்வப்போது ஆலோசனைகளைக் கொடுத்துதவ வேண்டும். தவிர அடியிற்கண்ட அதிகாரங்களும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன :—

(1) சங்கத்தையும் அதன் பைலாக்களையும் ரிஜிஸ்தர் செய்வது ;

(2) வருஷத்திற்கு ஒரு முறையாவது ஒவ்வொரு சங்கத்தின் கணக்குகளையும் தானாக அல்லது தன்னால் நியமிக்கப்பட்ட ஒருவரைக்கொண்டு தணிக்கை செய்வது ;

(3) சங்கவிஷயமாக ஏற்படும் வழக்குகளைத் தானாக அல்லது மத்தியஸ்தர்களை நியமித்து அவர்கள் மூலமாக விசாரணை நடத்துவது ;

(4) வாய்தா பிரகாரம் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறும் மெம்பர்களின் சொத்துக்களைத் தேவையானல் ஏலத்திற்குக் கொண்டுவருவது ;

(5) சங்க நிர்வாக சபையார் மகா சபையைக் கூட்டத் தவறினல் ரிஜிஸ்திரார் மகா சபையைக் கூட்டலாம் ;

(6) ஒரு சங்கத்தின் பொருளாதார நிலைமையையும் அதன் நிர்வாகத்தையும்பற்றித் தானாக அல்லது தன்னால் நியமிக்கப்பட்ட ஒருவரைக்கொண்டு விசாரணை நடத்துவது ;

(7) கடன் கொடுத்தவரின் வேண்டுகோளின்பேரில் சங்கத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்வது ;

(8) சங்கம் சரிவர நடைபெறவில்லையென்று அபிப்பிராயப்பட்டால் அதன் நிர்வாகத்தைத் தானே ஏற்றுக்கொள்வது ;

(9) சங்கத்தின் பணத்தை துர்வினியோகப்படுத்தியதற்கோ அல்லது கையாடியதற்காகவோ, சங்க நிர்வாகத்தை நடத்துபவர் அல்லது முன்பு நடத்திவந்தவரிடமிருந்து வசூலிப்பது ;

(10) சங்கத்தை ரத்துச்செய்வது ;

(11) சங்கத்தை ரத்துச்செய்வதற்காக ஒரு லிக்விடேடரை நியமிப்பது ;

ரிஜிஸ்திராருக்குள்ள அதிகாரங்களில் ஒன்றை அல்லது எல்லாவற்றையும் ஜாயிண்ட் ரிஜிஸ்திரார், டிப்டி ரிஜிஸ்திரார்கள் முதலிய இதர ஆபிஸர்களுக்கும் கவர்ன்மெண்டார் கொடுக்கலாம்.

வரையறுக்கப்பட்டதும் வரையறுக்கப்படாததுமான பொறுப்புகள் :—விவசாய நாணயச்சங்கம் வரையறுக்கப்படாத பொறுப்புடனேயே ஸ்தாபிக்கப்படவேண்டும். அதாவது அச்சங்கம் ரத்துச்செய்யப்பட நேரிடுங்காலத்தில் மெம்பர்கள் ஒவ்வொருவராகவும் எல்லோருமாகவும் சங்கக்கடன்களுக்கு உத்திரவாதமாகிறார்கள்.

சங்கங்கள் மெம்பர்களாகச் சேர்ந்துள்ள ஒரு சங்கம் வரையறுக்கப்பட்ட பொறுப்புடனேயே ஸ்தாபிக்கப்படவேண்டும்.

மற்ற சங்கங்கள் ஷை இரண்டுவிதப் பொறுப்புகளில் ஏதாவது ஒரு விதமாயிருக்கலாம். ஒவ்வொரு சங்கத்திற்கும் ஆஸ்தியென்றும் பொறுப்பென்றும் உண்டு. சங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் ஏதாகிலுமிருந்தால் அவையும் மெம்பர்கள் அல்லது மெம்பர்களல்லாத இதர நபர்களிடமிருந்து வரவேண்டிய பாக்கிகளும் சங்கத்தின் ஆஸ்திகளாகும். மெம்பர்களுக்கு அல்லது மெம்பர்களல்லாதவர்களுக்கும் சென்ரல் பாங்கி, டிபாஸிடர்கள் முதலியவர்களுக்கும் சங்கம் கொடுக்கவேண்டிய பாக்கிகளே அதன் பொறுப்புகளாகும். செவ்வையாக நடைபெறும். ஒரு சங்கத்தில் பொறுப்புகளைவிட ஆஸ்திகள் அதிகமாயிருக்கும். வசூலிக்கமுடியாத கடன்களால் அல்லது சங்கத்தின் சொத்துக்களின் மதிப்பு குறைவதால் ஆஸ்திகளின் மதிப்பு குறையக்கூடும். ஆகையால் சங்கத்தின் பாக்கிகளை இடைவிடாது வசூலிக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

ஒரு சங்கத்தின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதோ அல்லது வரையறுக்கப்படாததோ வென்பது அதன் ஆஸ்திகளைவிட கடன்கள் அதிகமாகும்போதுதான் ஜனங்கள் உணர நேரிடும்.

வரையறுக்கப்பட்ட பொறுப்பினையுடைய ஒரு சங்கத்தில் மெம்பர்கள் எடுத்துள்ள பங்குகளின் தொகைமட்டில்தான் நஷ்டப்பட நேரிடும். பங்குத்தொகை பூராவையும் செலுத்தியிருந்தால் மெம்பர்கள் வேறு பணம் ஒன்றும் செலுத்தவேண்டியதில்லை. மெம்பர்களின் பங்குத்தொகைகளுக்கு மேற்பட்டு கடன்களிருந்தால் கடன் கொடுத்தவர்கள்தான் நஷ்டமடையவேண்டும். வரையறுக்கப்படாத பொறுப்பு சங்கத்திலோ சங்கம் கொடுக்க வேண்டிய பாக்கிகள் பூராவும் செலுத்தப்படும் வரையில் மெம்பர்கள் தமது சொத்துக்களை விற்றுக்கொடுத்துத்தான் தீரவேண்டும். சங்கம் ரத்துச்செய்யப்படும் பங்கு ஒன்றுக்கு இவ்வளவு என்று பணங்கொடுக்கவேண்டுமென்று முதலில் மெம்பர்கள் கேட்கப்படுவார்கள். சில மெம்பர்கள் பூராவையுமோ அல்லது ஏதாவது ஒரு பாகத்தையோ செலுத்தமுடியாதெனில் இதர மெம்பர்களிடமிருந்து பாக்கிகள் வசூலிக்கப்படும். ஒரு மெம்பருக்காவது ஏதாகிலும் சொத்துள்ளவரையில் சங்கத்திற்குக் கடன் கொடுத்தவர்களுக்குத் தமக்கு வரவேண்டிய பாக்கி விஷயத்தில் பயமேயில்லை.

ஆகவே வரையறுக்கப்படாத பொறுப்பானது வெகு அபாயகரமானது. ஆனால் சங்கத்தில் நன்னடத்தையுடையவர்கள் மெம்பர்களாகச் சேர்க்கப்பட்டு, கடன்களைப் பயனுண்டாகக்கூடிய காரியாதிகளுக்கும் சரியான ஜாமீன்பேரிலும் கொடுத்து, கொடுபடும் கடன்கள் குறிக்கப்பட்ட காரியங்களுக்கே செலவழிக்கப்படுகிறதா என்று கவனித்து, பாக்கிகளைத் தீவிரமாக வசூலித்து அதாவது மெம்பர்கள் சங்கத்தின் பைலாக்களைச் சரிவரக் கற்றறிந்து அவற்றின் பிரகாரம் நடப்பார்களேயானால் வரையறுக்கப்படாத பொறுப்பினால் அபாயம் எந்நாளும் ஏற்படாது.

மெஜாரிட்டியடைந்த 10 நபர்களாவது சேர்ந்தாலல்லாது சங்கம் ரிஜிஸ்தர் செய்யப்படமாட்டாது.

லேவாதேவி சங்க மெம்பர்கள் ஒரே பட்டணத்தில் அல்லது கிராமங்களின் தொகுதியில் வாசஞ் செய்பவர்களாகவோ அல்லது ஒரே கூட்டம், வகுப்பு, ஜாதி அல்லது தொழிலைச் சேர்ந்தவர்களாகவோ இருத்தல் அவசியம்.

சங்க பைலா மாறுதல்கள் ரிஜிஸ்திராரவர்களால் ரிஜிஸ்தர் செய்யப்பட்டாலன்றி சட்டப்படி அமுலில் கொண்டுவரமுடியாது.

எவ்வளவு பங்குகளை யெடுத்துக்கொண்டாலும் ஒரு மெம்பருக்கு ஒரே வோட்டுத்தானுண்டு.

ரிஜிஸ்தர் செய்யப்படுவதால் சங்கமானது சட்டப்படி கிரமமாக ஏற்பட்டதோர் அமைப்பாகிறது. தன் பெயரில் சொத்துக்களை வைத்துக்கொள்ளவும், வழக்குகளைக் கோர்ட்டில் தாக்கல் அல்லது பிரதிவாதம் செய்யவும் இன்னும் பல காரியாதிகளை நடத்தவும் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட ஒரு சங்கத்திற்கு அதிகாரமுண்டு.

ஒரு மெம்பர் சங்கத்திற்குச் செலுத்தவேண்டிய பாக்கிகளுக்காக அவருடைய பங்குகளையும் டிபாஸிட்டுகளையும் வரவு வைத்துக்கொள்ளச் சங்கத்திற்கு அதிகாரமிருக்கிறது.

மெம்பரின் பங்குப்பணத்தைப் பிடிக்க எந்த கோர்ட்டுக்கும் அதிகாரமில்லை.

சங்கத்தினின்றும் ஒரு மெம்பர் விலகிவிட்டால் அந்தத் தேதி முதல் இரண்டு வருஷங்கள் வரையில் சங்கம் கொடுக்கவேண்டிய கடன்களுக்கு உத்தரவாதமாவார். மெம்பர் இறந்துவிட்டால் இறந்த தேதி முதலாக இரண்டு வருஷங்கள் வரையில் அவருடைய சொத்தானது சங்கக் கடன்களுக்கு உத்தரவாதமாகிறது. வருமான வரி, ஸ்டாம்பு, ரிஜிஸ்ட்ரேஷன் கட்டணங்கள் ஆகியவற்றைக் கூட்டுறவு சங்கங்கள் செலுத்தாமலிருக்க அனுமதிபெறலாம்.

ரிஜிஸ்தர் செய்யப்பட்ட எந்தச் சங்கத்திற்கும் கடன்கள் அல்லது இதர வகைகளில் கவர்ன்மெண்டார் பணவுதவி புரியலாம். மெம்பரல்லாதவர்களுக்குச் சங்கம் கடன் கொடுக்கக் கூடாது. தன்னிடம் கடன் வாங்கியுள்ள ஒரு சங்கத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்யக் கடன்கொடுத்த சென்ரல் பாங்கிக்குச் சுதந்தரமுண்டு.

சென்னை மாகாணத்தில் சங்கங்களின் முக்கிய வகைகள்: வருஷந்தோறும் ஒவ்வொரு மாகாணத்திலும் கூட்டுறவு சங்கங்

கள் நடைபெற்றுவருவதைப்பற்றி அந்தந்த ரிஜிஸ்திரார் தனது கவர்ன்மெண்டுக்கு ஒரு ரிபோர்ட்டைத் தயாரித்து அனுப்புகிறார். அந்த ரிபோர்ட்டுகளினின்று பலவகைச் சங்கங்களைப்பற்றிய விவரங்களையும் பல மாகாணங்களிலும் கூட்டுறவு இயக்கத்தின் நிலைமையையும் நாம் தெரிந்துகொள்ளலாம்.

1935-ம் வருஷத்தில் இத்தேச முழுவதிலும் 1,06,000 கூட்டுறவுச் சங்கங்களிருந்தன. அவற்றில் 43 லக்ஷம் மெம்பர்களிருந்தார்கள். அவற்றின் மூலதனம் 52 கோடி ரூபாய். இதர மாகாணங்களைவிட பஞ்சாப், பம்பாய், சென்னை ஆகிய இம்மூன்று மாகாணங்களில் கூட்டுறவு இயக்கமானது சிறிது செவ்வையாக நடைபெற்றுவருகிறதெனத் தெரிகிறது.

1936-ம் வருஷம் ஜூன் 30-ம் தேதிவரையில் நமது மாகாணத்தில் 13,330 சங்கங்களிருந்தன. சென்ற 6 அல்லது 7 வருஷங்களில் வருஷந்தோறும் சங்கங்களின் மொத்த சங்கியை குறைந்து வந்துளது. வருஷா வருஷம் புதிதாக ஏற்படும் சங்கங்கள், கெட்டுப்போய் ரத்துச்செய்யப்படும் சங்கங்களைவிட மிகக் குறைவு. சென்ற நான்கு வருஷங்களில் 1768 சங்கங்கள் ரத்துச் செய்யப்பட்டன. ஆனால் 558 சங்கங்கள்தான் புதிதாக ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கின்றன.

நமது மாகாணத்திலுள்ள சங்கங்களை நான்கு விதமாகப் பிரிக்கலாம்: விவசாய சங்கங்கள், விவசாயமல்லாத இதர சங்கங்கள், சென்ரல் பாங்கிகள், யூனியன்கள்.

(1) **விவசாய சங்கங்கள்:** இச்சங்கங்கள் கிராமவாசிகளுக்காக ஏற்பட்டவை. இவற்றின் சங்கியை மிகவும் அதிகம். மொத்தம் 13,330 சங்கங்களில் விவசாய சங்கங்கள் மட்டும் 11,515. இவற்றில் முக்கிய வகைகளாவன:

சாதாரண லேவாதேவி சங்கங்கள்	...	10,989
பிரதம நில அடமான பாங்கிகள்	...	80
கடன் விற்பனை சங்கங்கள்	...	74
பால் சப்ளை சங்கங்கள்	...	11

முதல் வகுப்பாகிய சாதாரண நாணய சங்கங்கள் வரையறுக்கப்படாத பொறுப்புடன் நமது கிராமங்களில் ஏற்பட்டுள்ள அமைப்புகளே. ஆரம்பத்தில் வெகு வருஷங்கள் வரையில் இச் சங்கங்கள் பழைய கடன்களைத் தீர்ப்பதற்காக கடன்களைக் கொடுத்துவந்தன. இப்பொழுது விவசாயச் செலவுகளுக்கும் கால்நடைகள் வாங்கவும் இம்மாதிரி பொருள் சம்பாதிக்க அவசியமான காரியாதிகளுக்காகக் குறுகிய காலக்கடன்கள் மட்டும் கிராம சங்கங்களால் கொடுக்கப்படுகின்றன. இத்தேசத்தில் இவ்வித கிராம சங்கங்களே அதிகமாயிருக்கின்றன.

நில அடமான பாங்கிகள் நிலங்களின் அடமானத்தின் பேரிலேயே கடன் கொடுக்கின்றன. 20 வருஷாந்திர தவணைகளாகத் திருப்பிச் செலுத்தக்கூடியவாறு நீண்ட காலக் கடன்கள் கொடுபடுகின்றன. சாதாரண லேவாதேவி சங்கங்களைவிட நில அடமான பாங்கிகள் கொடுக்கும் கடன்களுக்கு வட்டி விகிதம் மிகக்குறைவு, பழைய கடன்களைத் தீர்க்கவும், கிணறுகளை வெட்டுவது போன்ற காரியமாக நில சாகுபடிக்குத் தேவையான அபிவிருத்தி ஏற்பாடுகளைச் செய்துகொள்ளவும் ஷை பாங்கிகள் கடன் கொடுக்கின்றன.

கடன் விற்பனை சங்கங்கள் தானியங்களின் ஜாமீன்பேரில் அவற்றின் மதிப்பில் நூற்றுக்கு 60 அல்லது 70 வரையில் கடன் கொடுக்கின்றன. அப்படி ஜாமீனுக வைக்கப்படும் தானியங்களைப் பத்திரமாகக் காப்பாற்றுவதற்காக ஷை சங்கங்களில் கிடங்குகள் அமைக்கப்படுகின்றன. இச்சங்கங்களும் குறுகிய காலக்கடனையே கொடுக்கின்றன. பருத்தி, நிலக்கடலை, வெல்லம், நெல் முதலிய விவசாயப் பொருள்களை நல்ல விலை கிடைக்கும் வரையில் விற்காமல் சில மாதங்கள் நிறுத்திவைத்துக்கொள்வதற்கு அனுகூலமாக ஷை சங்கங்கள் கடன் கொடுத்து உதவுகின்றன. இதனுல் விவசாயிகளுக்கு லாபம் ஏற்படச் சாத்தியமாயிருக்கிறது. இச்சங்கங்களின் சங்கியை அதிகமாக வருகிறது. இவற்றுக்கு சாதகமாக கவர்ன்மெண்டின் ஆதரவில் ஒரு மாகாண விற்பனைச் சங்கம் (Provincial Marketing Society) ஏற்பட்டிருக்கிறது. ஷை கடன் விற்பனைச் சங்கங்களின் மூலமாக லக்ஷகணக்கான ரூபாய் மதிப்புள்ள விவசாயப் பொருட்கள் விற்கப்பட்டுவருகின்றன.

சென்னை நகருக்கு அருகாமையில் பால் சப்ளை சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந்நகரில் ஏராளமாகப் பால் தேவையாயிருப்பதால் ஷை சங்கங்கள் நன்றாய் வேலைசெய்ய சௌகரியமுண்டு. இச்சங்கங்களின் மெம்பர்கள் பசுக்களையும், எருமைகளையும் வாங்கவும், சங்கங்களுக்குப் பால் சப்ளை செய்யவும், சாதாரணப் பிரதம சங்கங்களினின்று கடன் பெறுகிறார்கள். அவர்கள் ஷை சங்கங்களுக்கு சப்ளைசெய்யும் பாலானது மோட்டார் வண்டிகளில் சென்னையிலுள்ள பால் சப்ளை யூனியனுக்கு அனுப்பப்படுகிறது. அவ் யூனியனானது ஜனங்களுக்குச் சப்ளை செய்கிறது. 1936-ல் விற்கப்பட்ட பால் மதிப்பு ரூ. 1,70,000. பால் சப்ளை செய்யும் கிராமவாசிகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது.

(2) **விவசாயமல்லாத சங்கங்கள்.** நகரவாசிகளுக்காக ஏற்பட்டவை. 1936-ல் 1,480 சங்கங்களிருந்தன. அவற்றின் முக்கிய வகைகள் பின்வருமாறு :

க்ரெடிட் சங்கங்கள்	1063
பண்டகசாலைகள்	60
பள்ளிக்கூடங்கள், காலேஜுகளுக்காக ஏற்பட்ட சங்கங்கள்	86
நெசவுக்காரர் சங்கங்கள்	50
வீடுகட்டும் சங்கங்கள்	118
கூலிக்காரர் சங்கங்கள்	18
வாழ்வைச் சிறப்பாக்க ஏற்பட்ட சங்கங்கள்	21

நகரங்களிலுள்ள நாணய சங்கங்கள் வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் (Limited Liability) ஏற்பட்டுள்ளன. இவ்வகையைச் சார்ந்த 1,063 சங்கங்களில் பொது ஜனங்களுக்கு 702-ம், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு 215-ம், முனிசிபாலிடிகள், தொழிற்சாலைகள் முதலியவற்றில் வேலைசெய்யும் சிப்பந்திகளுக்கு 141-ம் சங்கங்களிருக்கின்றன. மாதாந்திர சம்பளம் பெறுபவர்கள் சேர்ந்த கடைசி இருவகைச் சங்கங்களில் மெம்பர்களுடைய

கடன்களுக்காக மாதாமாதம் சம்பளத்திலிருந்து தவணைகளைப் பிடித்து அந்தந்த இலாகா தலைமை ஆபீஸர்கள் சங்கங்களுக்கு அனுப்புகிறார்கள்.

கூட்டுறவுப் பண்டகசாலைகள் (Stores) மெம்பர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை விற்கின்றன. இவற்றில் பெரியது திருவல்லிக்கேணி கோவாபரேடிவ் ஸ்டோர் (Triplicane Co-operative Store). அதற்கு 25 கிளைச்சங்கங்களிருக்கின்றன. மாதம் சுமார் ரூ. 75,000-க்கு பொருட்கள் விற்பனையாகின்றன 1936-ம் வருஷத்தில் எல்லாப் பண்டகசாலைகளும் விற்பனை செய்த பொருட்களின் மதிப்பு ரூ. 20 லக்ஷம். இங்கிலாந்திலுள்ள பண்டகசாலைகளைப் போலவே நம் தேசத்திலுள்ளவை நடைபெறுகின்றன. பள்ளிக்கூடங்கள், காலேஜுகள் ஆகிய அமைப்புகளுக்காக ஏற்பட்டுள்ள சங்கங்கள் மாணாக்கர்களுக்குப் புஸ்தகங்களையும், எழுது கருவிகளையும் விற்கின்றன. மொத்தமாகப் புத்தகங்களை வாங்குவதால் பிரசுரிப்பவர்களிடமிருந்து ஷை சங்கங்களுக்குக் கமிஷன் கிடைக்கிறது. அதனால் விலை சரசமாக புஸ்தகங்களை விற்க இச்சங்கங்களுக்குச் சௌகரியம் ஏற்படுகிறது.

நெசவுக்காரர் சங்கங்கள் மெம்பர்களுக்குத் தேவையான பணமும் நூலும் சப்ளைசெய்து அவர்கள் நெய்த துணிகளையும் விற்க அவர்களுக்கு உதவி செய்கின்றன. சமீபத்தில்தான் இச் சங்கங்களுக்கு ஆதரவாக ஓர் மாகாண நெசவுக்காரர் சங்கம் ஏற்பட்டது. இதற்குக் கவர்ன்மெண்டார் கிராண்டு கொடுக்கிறார்கள்.

கட்டிட சங்கங்கள் மெம்பர்கள் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்குக் கடன் கொடுக்கின்றன. இந்தக் கடன்கள் 15 முதல் 20 வருஷங்களுக்குள் திருப்பிச் செலுத்தக்கூடிய நீண்டகாலக் கடன்கள். இந்த சங்கங்கள் கவர்ன்மெண்டாரிடமிருந்து கடன் பெறுகின்றன.

லேபர் சங்கங்கள், அதாவது கூலிவேலை செய்பவர்களுக்காக ஏற்பட்டுள்ள சங்கங்கள் ரஸ்தாக்களை ரிபேர் செய்வது போன்ற வேலைகளை லோகல் போர்டுகள் முதலிய அமைப்புகளிடம் கண்ட்

ராக்டில் எடுத்து மெம்பர்களே அவ்வேலைகளைச் செய்கிறார்கள். மெம்பர்களுக்கு வேலை கிடைத்து பிழைக்க ஏற்பாடு செய்வதே இச்சங்கங்களின் நோக்கம்.

நல்வாழ்வு சங்கங்கள் 1936-ம் வருஷத்தில்தான் துவக்கப் பட்டன. விவாகங்கள், கருமாதிகள் முதலிய குடும்பச் சடங்குகளுக்காக ஏற்படும் செலவுகளைக் குறைக்கவும், சுகாதாரம், கல்வி முதலிய பொது விஷயங்களில் மெம்பர்களின் குடும்பங்கள் சௌகரியங்களைப் பெறவும் இச்சங்கங்கள் முயற்சி செய்கின்றன. பஞ்சாபிலும் கூட்டுமாகாணங்களிலும் (United Provinces) இவ்வித சங்கங்கள் அநேகமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இதர வகைச் சங்கங்களில் முக்கியமாக தென் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி கவனிக்கத்தகுந்தது. அதில் மெம்பர்கள் ரூ. 100 முதல் ரூ. 5,000 வரையில் தமது ஆயுளை இன்ஷியூர் செய்யலாம்.

(3) **யூனியன்கள்:** நாணய சங்கங்களை மேற்பார்வை செய்து அவை சரிவர நடைபெறத் தேவையான மார்க்கங்களை எடுத்துக் காட்டுகின்றன. 1936-ல் 281 யூனியன்களிருந்தன. முன் வருஷங்களில் அவற்றின் சங்கியை அதிகமாயிருந்தது. அவற்றை நடத்தப் போதுமான பணம் கிடைக்காததால் அநேக யூனியன்கள் மூடப்பட்டன. மேற்பார்வை செய்யப்படும் சங்கங்கள் யூனியனின் மெம்பர்கள் ஒவ்வொரு யூனியனிலும் கூட்டுறவு முறைகளில் பயிற்சிபெற்ற ஒன்று அல்லது இரண்டு சூபர்வைசர்களிருக்கிறார்கள்.

முன் ஒவ்வொரு ஜில்லாவிலும் யூனியன்களுக்குத் தலைமையாக ஒரு பெடரேஷன் ஏற்பட்டிருந்தது. அந்த பெடரேஷன் யூனியன்களின் செலவுக்குப் பணவுதவிசெய்து அவற்றின் நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டுவந்தது. இப்போது பெடரேஷன்கள் ரத்துச் செய்யப்பட்டு அவற்றின் வேலைகளை சென்ட்ரல் பாங்கிகளே நடத்திவருகின்றன.

சூபர்வைசர்களுக்குக் கூட்டுறவுப் பயிற்சி கொடுப்பதற்காக இம்மாகாணத்தில் 6 பயிற்சிச்சாலைகளிருக்கின்றன. தமிழ் ஜில்

லாக்களுக்கு ஒன்றும், தெலுங்கு ஜில்லாக்களுக்கு ஒன்றுமாக பாஷை பெடரேஷன்களும், ஒரு மாகாணக் கூட்டுறவு யூனியனுமிருக்கின்றன. இவை தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் கூட்டுறவுப் பத்திரிகைகளைப் பிரசுரித்துவருவதோடு கான்பரென்ஸுகளையும் கூட்டுகின்றன. கூட்டுறவுப் பிரசாரமே இவற்றின் வேலையாகும்.

(4) சென்ட்ரல் பாங்கிகள்: முக்கியமான அமைப்புகள். பொதுவாக ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு சென்ட்ரல் பாங்கி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சிற்சில ஜில்லாக்களில் மட்டும் இரண்டு வீதமும் ஒரு ஜில்லாவில் நான்குமிருக்கின்றன. ஷை சென்ட்ரல் பாங்கிகள் அந்தந்த ஜில்லாவிலுள்ள நாணய சங்கங்களுக்குக் கடன் கொடுத்துதவுவதுடன் அவற்றை மேற்பார்வையும் செய்கின்றன. அவற்றில் சில தனி நபர்களும் ஜில்லாவிலுள்ள எல்லாச் சங்கங்களும் மெம்பர்களாயிருக்கிறார்கள். முக்கியமாக பண ஆதாரம் பொது ஜனங்கள் போடும் டிபாஸிட்டுகளே. கிராம சங்கங்களின் க்ஷேம நிதியும் சென்ட்ரல் பாங்கியில் டிபாஸிட்டு செய்யப்படுகிறது.

மதராஸ் ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்கியானது (Madras Provincial Co-operative Bank) எல்லா சென்ட்ரல் பாங்கிகளுக்கும் தலைமை பாங்கியாயிருக்கிறது. அதில் எல்லா சென்ட்ரல் பாங்கிகளும் சில தனி நபர்களும் மெம்பர்களாயிருக்கிறார்கள். ஆனால் சென்ட்ரல் பாங்கிகளே பெரும்பாலும் மாகாண பாங்கியில் பங்குகளை எடுத்துக்கொண்டிருக்கின்றன. பொது ஜனங்களிடம், டிபாஸிட்டுகளைப் பெற்று சென்ட்ரல் பாங்கிகளுக்குத் தேவையானபோது கடன் கொடுத்து உதவுவதே ஷை மாகாண பாங்கியின் நோக்கம்.

மதராஸ் கோவாபரேடிவ் சென்ட்ரல் நில அடமான பாங்கியானது பிரதம நில அடமான பாங்கிகளுக்குக் கடன் கொடுக்கிறது. டிபெஞ்சர்களின் மூலமாக இந்த பாங்கியானது பணம் பெறுகிறது. கவர்ன்மெண்டார் இந்த பாங்கியினால் பிறப்பிக்கப்படும் டிபெஞ்சர்களின் அசலுக்கும் வட்டிக்கும் ஜாமீன் கொடுக்கிறார்கள்.

(5) இயக்கத்தின் அமைப்பு: லேவாதேவி விஷயமாகப் பிற்கண்ட சங்கங்கள் ஏற்பட்டுள்ளன.

(a) **சாதாரண லேவாதேவி சங்கங்கள்:—**

மாகாண பாங்கி
|
சென்ட்ரல் பாங்கிகள்
|
விவசாய சங்கங்களும், இதர சங்கங்களும்
|
தனி நபர் மெம்பர்கள்

(b) **நில அடமான பாங்கிகள்:—**

சென்ட்ரல் நில அடமான பாங்கி
பிரதம நில அடமான பாங்கி
|
தனி நபர் மெம்பர்கள்

மேற்பார்வை விஷயமாகப் பிற்கண்ட சங்கங்களிருக்கின்றன:

சென்ட்ரல் பாங்கிகள்
|
யூனியன்கள்
|
பிரதம சங்கங்கள்

(6) டிபார்ட்மெண்டின் அமைப்பு:

ரிஜிஸ்திரார்
|
ஜாயிண்டு ரிஜிஸ்திராரும் அடிஷனல் ஜாயிண்டு
ரிஜிஸ்திராரும்—2
|
சாதாரண டிப்டி ரிஜிஸ்திரார்கள்—20
(நில அடமான பாங்கிகளுக்காக டிப்டி ரிஜிஸ்திரார்கள்—2)
|
சாதாரண சப் டிப்டி ரிஜிஸ்திரார்கள்—28
நில அடமான பாங்கிகளுக்காக சப் டிப்டி ரிஜிஸ்திரார்கள்—20
|
ஸீனியர் இன்ஸ்பெக்டர்கள்—70
ஜூனியர்.........—595

கவர்ன்மெண்டார் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செய்யும் உதவிகள் :—

இந்தியாவில் கூட்டுறவுச் சங்கங்கள் கவர்ன்மெண்டாரின் ஆதரவின் பேரில் முன்னேற்றமடைந்துவருகின்றன. முதலாவது கூட்டுறவுச் சங்கங்கள் எழுதிக்கொடுக்கும் கடன் பத்திரங்களுக்கு ஸ்டாம்பு கிடையாது. பத்திரங்களை ரிஜிஸ்தர் செய்ய வேண்டியிருந்தால் ரிஜிஸ்தர் பீசும் கிடையாது. கூட்டுறவு பாங்குகள் பெந்தகமாக கடன் கொடுக்கும் பக்ஷத்தில் பெந்தகம் வைக்கும் சொத்துக்கு வில்லங்க ஸர்டிபிகேட் வாங்கவேண்டியிருந்தால் அதுவும் இனாமாக பெறலாம். ஏழை ஜனங்களுக்கு அதிகச் செலவு ஏற்படாமலிருக்கும் பொருட்டு இம்மாதிரி சௌகரியங்களைச் செய்திருக்கின்றனர்.

கூட்டுறவுச் சங்கங்கள் சரிவர நடைபெறுவதற்கு பிரத்தியேகமான உத்தியோகஸ்தர்கள் அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்பட்டும், கணக்குகள் அடிக்கடி பரிசோதிக்கப்பட்டும் வருகின்றன. ஒவ்வொரு வருஷத்திய கணக்கும் தணிக்கையாளரின் பத்திரத்துடன் வெளியிடப்படுகின்றது.

ஐக்கிய நாணய சங்கங்களின் லாபத் தொகைகளுக்கு வருமான வரி கிடையாது. இச்சங்கங்கள் தங்கள் மெம்பர்களுக்கு பங்குத்தொகைக்காகக் கொடுக்கும் டிவிடெண்டுக்கும் வருமான வரி கிடையாது.

போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கு கணக்குகளில் இச்சங்கங்கள் பேரால் தொகைகள் போட அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த ஊரில் கூட்டுறவுச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றதோ அவ்வூர் சர்வே படங்களையும் செட்டில்மெண்டு ரெஜிஸ்தர்களையும் இனாமாகச் சங்கங்கள் பெற்றுக்கொள்ளமுடியும். ஐக்கிய நாணய சங்கங்களில் ஒரு மெம்பரால் போடப்பட்ட பங்குத் தொகையை அந்த மெம்பரால் யாருக்காவது வரவேண்டிய தொகைக்காக ஜப்திசெய்ய முடியாது. கூட்டுறவுச் சங்கங்கள் தாம் வசூலிக்கவேண்டிய கடன் தொகைகளை கோர்ட்களில் அதிக செலவில்லாமல் வசூலிக்க முடியும்.

XVI

பொருளுற்பத்தி

(PRODUCTION)

பொருளாக்க நூலில் பொருளுற்பத்தி என்பது பொருள்களின் உபயோகத்தை அதிகரிக்கச் செய்தலேயாம். உதாரணமாக ஒரு மரக்கட்டையைத் தச்சுவேலையால் மேஜை, நாற்காலி முதலிய சாமான்களாகச் செய்யமுடியும். மரக்கட்டையாயிருப்பதின் பிரயோஜனத்தைவிட மேஜை, நாற்காலி முதலிய சாமான்களாக மாறினவுடன் அவை அதிக உபயோகமடைகின்றன. ஆகையால் இப்பேர்ப்பட்ட உற்பத்திச் சக்தி பொருளாக்க நூலில் பொருளுற்பத்தி என்று சொல்லப்படுகிறது.

பொருளுற்பத்தி பலவிதமாயிருக்கலாம்:—(1) சில பொருள்களின் உருவத்தை மாற்றுதலினலுண்டாகும் பிரயோஜனம். உதாரணமாக ஒரு மரக்கட்டையை மேஜை, நாற்காலி முதலிய சமான்களாகச் செய்யலாம். பஞ்சை நூலாக நூற்றுப் பிறகு துணியாக நெய்யலாம். இத்தன்மையான செயல்கள் உருவம் மாறுதலால் அதிகப் பிரயோஜனமடைகின்றன.

(2) காலத்தினல் பொருள்களுக்குப் பிரயோஜனம் அதிகரிக்கச் செய்யலாம். உதாரணமாகப் பழங்கள், மீன் முதலிய உணவுப்பொருள்களைக் கெடுதல் அடையாமல் பாதுகாத்து வைத்தலால் அவை அதிகப் பிரயோஜனமடைகின்றன.

(3) இடம் மாறுதலினல் பொருள்களின் பிரயோஜனம் அதிகரிக்கலாம். நிலத்தை உழுது தானியங்களை உண்டாக்குதலும், கடலிலிருந்து மீன் முதலிய விசேஷமான பொருள்களை எடுப்பதும், பூமியிலிருந்து தாதுப்பொருள்களை வெட்டி எடுத்தலும், விளைவுப்பொருள்களை விற்பனையாகும் இடங்களுக்கு எடுத்துச் செல்லலும் பொருளுற்பத்திச் செயல்களேயாம்.

பொருளுற்பத்திக்குச் சாதனங்கள் (Agents of Production) :— பொருளுற்பத்திக்குள்ள சாதனங்கள் பொருளாதார நூலில் நான்காக வகுக்கப்பட்டிருக்கின்றன—நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் முயற்சி.

நிலமும் பொருளுற்பத்தியும் :— பொருளுற்பத்திக்கு நிலம் இன்றியமையாதது. நிலம் என்றால் பூமியின் மேற்பரப்பை மூடியிருக்கும் தரைமட்டுமல்ல. நிலம் செழிப்படைவதற்கு வேண்டிய உஷ்ணம், மழை, காற்று முதலியவைகளுக்கும் நிலத்திற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. விவசாய நிலம், புல்பிரதேசம், கட்டிடங்களுக்குறிய நிலம், காட்டு நிலம், ஜலசக்தி, காற்றுச்சக்தி இவைகளெல்லாம் பொருளுற்பத்திக்குச் சாதனமாகிய நிலத்தில் அடங்கியனவாகக் கருதப்படுகிறது. விவசாய நிலம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் அது இயற்கையிலேயே செழிப்புள்ளதாயிருக்கவேண்டும். மண்ணின் இயல்பே நிலத்தின் செழிப்புத் தன்மைக்கு ஒரு முக்கிய காரணம். மண்ணில் கல், மணல், களிமண், ஆம்பி முதலிய பொருள்கள் கலந்துள்ளன. இப்பொருள்களின் கலவை விகிதத்திற்கேற்ப மண்ணின் இயல்பும் வித்தியாசப்படும். பூமியின் மேற்றரை இடத்துக்கேற்றவாறு அமைப்பிலும், ஆழத்திலும் வேறுபட்டுளது. மேற்றரை சில இடங்களில் வெண்ணிறமாகவும் சில இடங்களில் செந்நிறமாகவும், சில இடங்களில் கருநிறமாகவும் இருக்கும். மணலுள்ள தரை வெண்ணிறமாகவும், இரும்புள்ள தரை செந்நிறமாகவும், தாவர வஸ்துக்கள் சேர்ந்த தரை கருநிறமாகவும் இருக்கும். மேற்றரைக்குக் கீழேயுள்ள கீழ்த்தரை உஷ்ணம், மழை, காற்று என்பவற்றால் நேரே தாக்கப்படாமையால், மேற்றரையிலும் பார்க்கக் கெட்டியாகவும், ஈரலிப்புள்ளதாகவுமிருக்கும். அதில் தாவர வஸ்துக்களில்லை.

நிலத்திற் காணப்படும் எவ்வகையான மண்ணும் கற்பாறையின் சிதைவெனக் கருதப்படுகிறது. கற்பாறையிலிருந்து மண்ணாக மாறும் மாற்றம் காற்று, நீர், உஷ்ணம், குளிர் முதலிய இயற்கைச் சக்திகளினால் ஏற்படுகின்றது. இவைகளைக் கற்பாறை தாக்கி அரிப்பதனால் அது சிறுச்சிறு அணுக்களாகத் தகர்கின்றது. இவ்வணுக்களே மண்ணாகும். இப்படியாக உண்டாக்கப்பட்ட மண்

ணிற் சில பகுதி உற்பத்தியான இடத்திலேயே தங்குகின்றது. அது நாளடைவில் பல பொருள்களுடன் கலக்கின்றது.

மண்ணிற் சில பகுதி காற்றினாலும், வெள்ளத்தினாலும், ஆறுகளினாலும் உற்பத்தியான இடத்திலிருந்து வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. இத்தகைய மண் அதிகமாக மலையடிவாரங்களிலும், கடற்கரைகளிலும், நதிமுகத்துவாரங்களிலும் காணப்படும். தண்ணீர் ஓடும்போது களிமண், மணல், சிறுகற்கள் முதலியவற்றையும் கொண்டுசெல்லும். நீரோட்டம் குறைந்ததும் அவைகள் அடிப்படையில் விடப்படுகின்றன. முதலாவதாகக் கற்களும், பின் மணலும் அதன்பின் மண்ணும் விடப்படும். இதனாற்றான் நதிமுகத்துவாரத்தில் மண் அதிகமாகக் காணப்படுகிறது. நதிமுகத்துவாரத்தில் விடப்பட்ட மண் மிகவும் செழிப்பானது.

நாம் உபயோகித்து வரும் பூமியின் மண் கற்களின் சிதைவேயாகும். கல்லானது பற்பல சாதனங்களால் மண்ணாக மாறுகின்றது. காற்று, நீர், உஷ்ணநிலை ஜீவஜெந்துக்கள் இவைகளால் தாக்கப்படுகின்றது. கற்பாறைகளும் காற்றினால் தாக்கப்பட்டுப் படிப்படியாகத் தேய்ந்து மண்ணாக மாறுகின்றன. உஷ்ணநிலை எப்பொழுதும் மாறுபட்டுக்கொண்டே இருக்கிறது. இதனாற் கற்பாறைகள் வெடித்து மண்ணாக மாறுகின்றன. கற்பாறைகளில் பல தாதுவஸ்துக்கள் கலந்துள்ளன. ஒவ்வொரு வஸ்தும் சூட்டினாலும், குளிரினாலும் விரிந்து சுருங்கும் தன்மையுள்ளது. இப்படியாகத் தாதுவஸ்துக்கள் விரிந்து சுருங்குவதாற் கற்பாறைகள் சிறுச்சிறு துண்டுகளாக வெடிக்கின்றன. இத்துண்டுகள் நாளடைவில் அரிபட்டு மண்ணாக மாறும்.

நமது கண்ணுக்குப் புலப்படாத லட்சக் கணக்கான ஜீவ அணுக்கள் மண்ணிலிருக்கின்றன. சில தரைகளிலுள்ள ஜீவ அணுக்கள் பயிர்களுக்கு உபயோகமுள்ளன; சில தீங்குள்ளன. பண்படுத்தப்படாத தரைகளில் தீங்குள்ள ஜீவ அணுக்களுண்டு. இவற்றைத் திறமையான கிருஷிக முயற்சியால் இல்லாது செய்துவிடலாம். உபயோகமான அணுக்கள் செழிப்பான தரைகளி

ளுண்டு. இவை ஆகாயத்திலுள்ள உப்பு வாயுவைப் பிரித்தெடுத்துப் பிராணவாயுவுடன் கலக்கச் செய்து பயிர்களுக்கு உதவுகின்றன. நெற்பயிர்களின் வேர்களில் மணிபோன்ற சிறு முடிச்சுகளிருப்பதை நாம் பார்க்கலாம். இவை ஜீவ அணுக்களால் ஆக்கப்பட்டவை.

தாவரங்கள் தரையிலிருந்து தம் உணவாகிய பசளையை இடைவிடாது பெற்றுக்கொள்ளுகின்றன. இதனாற்றான் மேற்றரைப் பயிர்கள் செழித்து வளர்ந்து பசளையினளவுக்குத் தக்கதாகப் பலனைத் தருகின்றன. ஆனால் பசளையுள்ள மேற்றரை மண், ஓரிடத்தில் அல்லது ஓர் பயிர்த்தாளில் நிலையாயிராது. மழை நீருடன்போய் நதிகளிலும், குளங்களிலும் அடைகின்றது. இப்படி மண் நீரினால் அரிப்பட்டுப்போதல் பயிர் வர்க்கங்களுக்குக் கெடுதியானதாகும். மண்ணரிப்பைத் தடுப்பதற்குக் கிருஷிகப் பகுதியார் பல வகையான முறைகளை ஆராய்ச்சிசெய்து வருகின்றனர்.

பொருளுற்பத்திக்கு நிலத்தை நன்றாகப் பண்படுத்தல்வேண்டும். தரையைப் பண்படுத்திப் பயிர் செய்யாது அநேக காலமாக விட்டால் அது வயிரித்துக் கடினமானதாகிவிடும். ஆகையினால் தரையைப் பல முறைகளிலும் பண்படுத்திப் பவனம், நீர், வெளிச்சம் முதலியன புகச் செய்தல் வேண்டும்.

ஒரே தரையில் வருஷா வருஷம் மாற்றுப் பயிரிடலைக் கைக்கொண்டு பயிர் செய்து வந்தாலும், அத்தரையிலுள்ள சில மூலப்பொருள்களற்று, தரையின் செழிப்புக் குறைவடையும். ஆதலால் அத்தரையில் வளரும் பயிர்கள் நற்பலனைக் கொடுப்பதற்குத் தரையின் செழிப்பு அதிகரிக்கச் செய்யவேண்டும். தரையின் செழிப்பைப் பசளைகள் மூலம் அதிகரிக்கச் செய்யலாம்.

இலைப்பசளை தரைக்கு மிகவும் விசேஷமானது. இது நிலத்தின் கசிவைக் கூட்டுகின்றது. ஒரு கிடங்கில் இலைகள் வைக்கோல், உமி, சாம்பல், எரு முதலியவற்றைக் குவித்துக் காற்றும் வெயிலும் படாதபடி காப்பாற்றி இடையிடையே நீர் ஊற்றி ஈரலிப்பாக்கி பசளையாக உபயோகிக்கலாம். மாடு, ஆடு,

கோழி முதலியவற்றின் எரு சிறந்த எருவாகும். இந்தியாவில் மாட்டெருவைப் பயிருக்கு உபயோகப்படுத்தாமல் அநேகர் அடுப்பு எரிக்க உபயோகப்படுத்துகின்றனர். மாட்டெருவை ஒரு பொழுதும் கலகலப்பாய்க் குவித்துவைத்தல் கூடாது. சத்துள்ள எருவும் பக்குவக் கேட்டினால் குறைவடையும். ஆதலின் எருவைப் பக்குவப்படுத்தவேண்டும்.

வியாபாரிகளிடத்தில் விலைக்கு வாங்கும் பசளைகள் அநேகமிருக்கின்றன. உப்புவாயுவுள்ள பலவகை உப்புக்கள், பிரகாசித அமில உப்புக்கள் (Phosphatic manures) சாம்பற்கார உப்புக்கள், எலும்புத்தூள், பிண்ணாக்கு, சுண்ணாம்புமுதலியன வியாபார பசளைகளெனப்படும். உப்புவாயு பயிர்களின் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்கின்றது. சாடதலவண அமில உப்பு (Sodium nitrate) கெந்தக நவச்சார உப்பு (Sulphate of Ammonia), சுண்ணதலவண சார அமில உப்பு (Calcium cyanamide) முதலிய உப்புகள் மிகவும் விசேஷமான பசளைகளாகும். சாடதலவண அமில உப்பு தென் அமெரிக்காவிலுள்ள சில்லி தேசத்தில் தரையில் அடைபொருளாக ஏராளமாய்க் காணப்படுகிறது. இதில் உப்புவாயு 15 உண்டு. இப்பசளை நீரில் அதிக விரைவாகக் கரையுந் தன்மையுள்ளது. இது வறண்ட நிலங்களிலுள்ள மணற்றரைக்கு அதிக வாய்ப்பானது. கீரை, புகையிலைக் கன்று போன்ற இலை உதவும் பயிர்களுக்கு விசேஷமான பசளையாகும்.

கெந்தக நவச்சார உப்பு பயிர்களுக்கு நேரே உபயோகப்படுவதில்லை. உபயோகமாவதற்குமுன் தரையின் மேற்பகுதியில் பல மாற்றங்களடைகிறது. ஆகையினால் இப்பசளை ஆழத்திற்குச் செல்லாத வேர்களையுடைய பயிர்களுக்கே ஏற்றது. சுண்ணாதலவண சார அமில உப்பு தென்னை முதலிய விருக்ஷங்களுக்கு விசேஷமானதாக காணப்படுகின்றது. எலும்புப் பசளையை உபயோகிக்கும்பொழுது நன்றாக மாவாக்கப்படவேண்டும். சாம்பற்கார உப்புகள் நெல் முதலிய பயிர்களுக்கு மிகவும் விசேஷமானவை. மணற்றரைகளில் இவ்வுப்புகளிருப்பதால் உப்புவாயு அதிகரிக்கின்றது. சாம்பற்கார உப்புள்ள பசளைகளிற் கயினிற் (Kainite), மீயூறெயிற் சாம்பற்கார உப்பு (muriate of potash);

கெந்தக சாம்பற்கார உப்பு (sulphate of potash) என்பன விசேஷமானவை.

இந்தியாவின் பரப்பளவு (1,819,000 சதுர மைல்கள் அல்லது 1,164,009,000 எக்கர்கள்) கீழ்க்கண்டபடி பிரிவினைப்பட்டிருக்கிறது.

	எக்கர்	ஜனத்தொகை
1. பிரிட்டிஷ் மாகாணங்கள் (British Provinces)	669,345,000	271,527,000
2. இந்திய அரசர்கள் நாடுகள் (பிரிட்டிஷ் மாகாணங்களிலுள்ளவை) (Indian States lying within British Provinces)	76,172,000	26,367,000
3. இந்திய அரசர் நாடுகள் (இந்திய கவர்ன்மெண்டாருடன் நேர்சம்பந்தமுள்ளவை) (Indian States having direct relations with the Government of India)	369,228,000	57,645,000
4. தனிப்பகுதியாக அரசாட்சி நடைபெறும் பிரதேசங்கள் (Specially administered areas)	16,293,000	2,686,000
5. பிரிட்டிஷ் பலுசிஸ்தான் (British Baluchistan)	34,706,000	463,000

பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள நிலத்தின் பரப்பளவை (669,345,000 எக்கர்) கவனிக்குமிடத்து, 49,618,000 எக்கர்கள் அதாவது 7·4% நிலமானது பயிரிடாமலிருக்கிறது; பயிரிடப்பட்ட நிலத்தின் தேறின விஸ்தீரணம் 229,115,000 எக்கராக கணக்கிடலாம் (34·2%). பொதுவாக பிரிட்டிஷ் இந்தியாவில் 230,000,000 எக்கர் நிலத்தால் 272,000,000 ஜனங்கள் போஷிக்கப்படுகிறார்கள். அதாவது தலைக்கு ·85 எக்கர் நிலமாகச் சொல்லலாம்.

இந்திய தனி ஆட்சி நாடுகளின் பரப்பளவு 141,175,000 எக்கர்கள். அதில் 11,017,000 எக்கர்கள் (7·7%) பயிரிட நிலம்; பயிரிடப்பட்ட நிலம் 70,117,090 எக்கர்கள் (49·4%). பொதுவாக இந்திய தனியாட்சி நாடுகள் குறைவான மழையுள்ளதும், அதனால் அதிக பொருளுற்பத்தி வசதியில்லாததுமாயிருக்கின்றன. ஆகையால் அவ்விடங்களில் புன்செய்ப் பயிர்களே மிகுதியாக இருக்கின்றன.

இந்திய தானியாட்சி நாடுகளின் புள்ளி விவரங்களை பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்த்துப் பார்க்குமிடத்து 333,500,000 எக்கர்களுக்கு புள்ளி விவரங்களிருக்கின்றன. இந்நிலங்களில் பயிராகும் முக்கிய தானியங்களின் நூற்று வீதத்தை கீழ்க்கண்டபடி குறிப்பிடலாம்.

		சதவீதம் (1930-31)
உணவுப் பொருள்கள்		77·3
அரிசி		26·0
கோதுமை		9·4
வாற்கோதுமை		2·4
தினைகள்		29·7
சோளம்		2·5
காணவகைகள்		5.8
இதர தானியங்களும், பருப்பு வகைகளும்		11·2
சர்க்கரை		0·8
இதர உணவுப் பொருள்கள்		3·4
	மொத்த உணவுப் பொருள்கள்	81·5
எண்ணை வித்துக்கள்		7·0
பருத்தி		6·9
சணல்		0·05
விலங்குகளின் தீனிப்பயிர்கள்		3·75
உணவுப் பொருள்களில் அடங்காத மற்ற வணிகப் பயிர்கள்		0·8
	வணிகப் பயிர்களின் மொத்தம்	18·5

பருவக்காற்றும், இந்தியாவின் வியவசாயச் செழிப்பும்.

இந்தியாவின் வியவசாயம் பருவக்காற்றினால் உண்டாகும் மழையைப் பொருத்திருக்கிறது. கோடை காலத்தில் அரபிக் கடலிலிருந்தும், வங்காளக்குடாக்கடலிலிருந்தும் தென்மேற்குப் பருவக்காற்று இந்தியாவையும், பர்மாவையும் நோக்கி அடிக்கிறது. இக்காற்று கடலில் உண்டாகும் ஏராளமான நீராவியைக் கிரகித்துக்கொண்டு வருகிறது. அரபிக்கடலிலிருந்து இந்தியாவை நோக்கி அடிக்கும் இக்காற்று மேற்குத்தொடர்ச்சி மலையால் தடுக்கப்பட்டு உயரச் செல்லுகிறது. அங்குள்ள உயரத்தில் குளிர்ச்சி அதிகம். ஆதலால் இக்காற்றில் உள்ள நீராவி ஜலமாக மாறி மழையாகப் பெய்கிறது. அதனால் இந்தியாவின் மேற்குக் கடற்கரையிலுள்ள மேற்குத்தொடர்ச்சி மலையின் மேற்குப் பாகத்தில் மழை பெய்கிறது. இது கோடைகால மழையாகும். இம்மாதிரியே பர்மாவில் வங்காளக்குடாக்கடலிலிருந்து அடிக்கும் தென்மேற்குப் பருவக்காற்று பர்மாவின் மேற்குக் கரையிலுள்ள அரக்கான், யோமா, ஷான் முதலிய மலைகளால் தடுக்கப்பட்டு உயரச்சென்று குளிர்ச்சியடைவதால் அதன் மேற்குக் கரையில் அதிக மழை பெய்கிறது.

இந்தியாவில் அக்டோபர் மாதத்தில் குளிர்காலம் ஆரம்பிக்கிறது. இக்காலத்தில் இமயமலைப் பிரதேசங்களிலிருந்து வடகிழக்குப் பருவக்காற்று தென்மேற்குத் திசையை நோக்கி வீசுகிறது. இது இந்தியா முழுவதும் அடிக்கிறது. இது தரைப் பாகத்திலிருந்து அடிக்கும் காற்றானபடியால் நீராவியில்லாது வறண்டிருக்கிறது. இக்காற்றினால் இந்தியாவிற்குப் பெரும்பாலும் மழையில்லை. ஆனால் இக்காற்றின் ஒரு பாகம் வங்காளக்குடாக்கடலைத் தாண்டித் தென் இந்தியாவின் கிழக்குக் கடற்கரையை நோக்கி அடிக்கிறது. இது வங்காளக்குடாக்கடலைத் தாண்டி வரும்பொழுது கொஞ்சம் நீராவியை உட்கொள்ளுகிறது. பிறகு இது கிழக்குத்தொடர்ச்சி மலைகளால் தடுக்கப்பட்டுக் கோதாவரி நதியிலிருந்து திருநெல்வேலி ஜில்லாவரையிலுள்ள கடற்கரைச் சமவெளியிலும், இலங்கைத்தீவின் வடக்கு, கிழக்கு ஆகிய பாகங்களிலும் மழையைப் பெய்விக்கிறது. நிலவரி கவர்ன்

மெண்டாரின் முக்கிய வருமானம். நிலவரியானது வியவசாயத்தின் செழிப்பைப் பொருத்திருக்கிறது. நிலத்தின் விளைவு பருவக் காற்றைப் பொருத்திருக்கிறது. நில விளைவு குறைந்தால் கவர்ன்மெண்டார் வசூலிக்கும் நிலவரியும் குறைந்துபோகிறது. நிலவிளைவு குறைவதால் ஏற்றுமதி குறையும். அரிசி, சணல், தேயிலை முதலிய விவசாயப் பொருள்களின் பேரிலுள்ள ஏற்றுமதிச் சுங்கம் குறைந்துபோகும். ஏற்றுமதி குறைவதால் வெளிதேசங்களிலிருந்து இந்தியாவுக்குவரும் இறக்குமதியும் குறையும். இதனல் இறக்குமதி வரிகளால் ஏற்படும் வருமானம் குறைகிறது. தவிரவும் விவசாயத்தினல் செழிப்பில்லாவிடில் விவசாயிகளுக்கு வெளிநாட்டுப் பொருள்களை வாங்கும் திறனும் குறைந்துபோகின்றது. மேற்கூறிய விஷயங்களினல் இந்தியாவின் வியாபாரமும், பொருளுற்பத்தியும் குறைந்து, ஜனங்களின் வருமானமும் குறைந்துவிடுகின்றது. இதனல் வருமான வரி (income tax) யினல் கவர்ன்மெண்டார் அடையும் வருமானமும் குறைந்துவிடும். வியாபாரமும், பொருளுற்பத்தியும் ஒடுங்குவதால் ரெயில் வருமானமும் குறைகின்றது. துறைமுக வரி, வருமான வரி, ரெயில் வருமானம் இவைகள் மூன்றும் இந்திய கவர்ன்மெண்டாரின் மொத்த வருமானத்தில் 75% ஆக கணக்கிடலாம். இவ்வாறு இந்திய கவர்ன்மெண்டாரின் வரவு செலவு மதிப்புத்திட்டம் பருவக்காற்று மழையைப் பொருத்த ஒரு வட்டாட்டம் என்று கூறுவது உண்மையே.

நிலத்தில் மக்கள் நெருங்கி அமைதல் :—

இந்தியாவில் நிலத்தைப் பிழைப்பு வழியாகக்கொண்டு வசிக்கும் ஜனங்கள் அநேகர். பத்து வருஷத்திற்கு ஒருதரம் ஏற்படும் மக்கட்டொகை அறிக்கை (Census Report) யிலிருந்து நிலத்தினல் வசிக்கும் ஜனங்களின் எண்ணம் கீழே குறித்திருப்பது கவனிக்கத்தக்கது.

1891	...	...	62%
1901	...	...	68%
1911	...	...	72%
1921	...	...	72%
1931	...	...	73%

இந்தியாவில் வெகு ஜனங்கள் விவசாயத்தினாற் பிழைப்பதற்குப் பல காரணங்களிருக்கின்றன. ஸ்வதேசத் தொழில்கள் இக்காலப் பொறித் தொழில்களின் போட்டியினால் க்ஷீணமடைந்துபோயின. ஜனத்தொகையும் நாளடைவில் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இந்தியாவிலுள்ள மொத்த நிலத்தில் பயிரிடப்பட்ட நிலத்தின் தகவுப் பொருத்தமும், பயிரிடப்பட்ட ஒரு 100 ஏக்ராவிலுள்ள ஜனத்தொகையும் பின்வருமாறு கணக்கிடப்பட்டிருக்கிறது.

மாகாணம் (Province)	மொத்த நிலத்துக்கும் பயிரிடப்பட்ட நிலத்துக்குமுள்ள தகவுப்பொருத்தம் (சதவீதம்) (Proportion of cropped to total area (per cent)	பயிரிடப்பட்ட 100 ஏக்ராவிலுள்ள ஜனத்தொகை (Population per 100 acres of cropped area)
அஸ்ஸாம் (Assam)	18	131
வங்காளம் (Bengal)	47	188
பம்பாய் (Bombay)	55	56
மத்திய மாகாணம் (Central Provinces)	37	59
மதராஸ் (Madras)	38	125
பஞ்சாப் (Punjab)	42	80
ஐக்கிய மாகாணம் (United Provinces)	52	127

இந்தியாவில் முக்கியமாக உண்டாக்கப்படுகிற பயிர்கள்

பயிர்கள் (Crops)	எக்ரா பத்து லட்சம் (Acres in millions)	மொத்தப் பயிரிடப்பட்ட பரப்புக்குத் தகவுப் பொருத்தம் (Percentage to total gross area cropped)
உணவுத்தானியங்கள் (Food grains)	205	80
நார் பயிர்கள் (Fibres)	14	5·4
எண்ணெய் வித்துக்கள் (Oil seeds)	14	5·5
தீனிப் பயிர்கள் (Fodder crops)	8·6	3·4
பழங்களும், காய்கறிகளும் (Fruits and Vegetables)	5·5	2·1
கரும்பு (Sugar cane)	2	1

பிரிட்டிஷ் இந்தியாவில் நிலப்பரப்பு:
(Distribution of land in British India).

	எக்ரா பத்துலட்சம் (Acres in millions)
மொத்தப் பரப்பளவு (Total area) ...	666
காட்டு நிலம் (Area under forest) ...	88
பயிரிடப்படாத நிலத்தின் பரப்பளவு (Area not available for cultivation) ...	153
பயிரிடக்கூடிய தரிசு ...	151
கரம்பு நிலம் (Fallow land) ...	51
பயிரிடப்பட்ட நிலத்தின் தேறின பரப்பளவு (Net cropped area) ...	223

உணவுப் பொருள்கள் விளையும் நிலத்தின் மொத்தப் பரப்பளவு 215 மிலியன் ஏக்கர்கள்; உணவுப் பொருள்களில்லாத பொருள்கள் விளையும் நிலத்தின் பரப்பளவு ·41 மிலியன் ஏக்கர்கள்; மொத்தப் பயிரிடப்பட்ட நிலத்தில் உணவுப் பொருள்களும், உணவுப் பொருள்களில்லாத பொருள்களும் முறையே உள்ள சதவீதம் 84-ம், 16-ம் ஆக கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஜனத்தொகையும், உணவின் தொகுதியும் (Population and Food Supply) :—இந்தியாவில் ஜனத்தொகை விருத்தியாவதற்குத் தக்கபடி பொருள் விருத்தியாகவில்லை. சென்னை மாகாணத்தை எடுத்துக்கொள்வோம். 1921-ம் வருஷத்தின் ஜனத்தொகையை விட 1931-ம் வருஷத்தில் நூற்றுக்கு 10·4 விகிதம் ஜனத்தொகை அதிகரித்திருக்கிறது. பொருள் உற்பத்தியிலோ அதாவது முக்கியமாக நில சாகுபடியிலோ அதே பத்து வருஷங்களில் நூற்றுக்கு 1·5 விகிதம்தான் அதிகரித்திருக்கிறது. மொத்த நிலத்தின் அதிகரிப்பு நூற்றுக்கு 5·7 விகிதம் தான் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஜனங்கள் அதிகரிப்பதே போலப் பொருளுற்பத்தியும் அதிகமாகவில்லை.

சென்னை மாகாணத்தில் 1921-ம் வருஷத்திலும் 1931-ம் வருஷத்திலும் மக்கள்தொகை, நிலச் சாகுபடி முதலியவைகளை காட்டும் பட்டி கவனிக்கத்தக்கது.

வருஷம் (year)	மொத்த ஜனத் தொகை 10 இலட்சத்தில் (Total population in millions)	விஸ்தீரணம் சதுரமைல்கள் (Area in sq. miles)	ஒவ்வொரு சதுர மைலிலுமுள்ள மக்கள் (Density per sq. mile)	சாகுபடி ஆகாத நிலங்கள்-ஏக்கர் (Area not available for cultivation)	சாகுபடி செய்யக் கூடிய தரிசுகள்—ஏக்கர் (Cultivable waste other than fallow)
1921	42·32	142,300	298	21,411,397	12,178,856
1931	46·74	142,300	329	20,515,113	13,099,483

வருஷம் (year)	சாகுபடி செய்யப்படாத நிலம்-ஏக்கர்கள் (Current Fallows)	சாகுபடி செய்யப்பட்ட நில விஸ்தீரணம்-ஏக்கர்கள் (Net area sown)	வாரச்சாகுபடி நிலம் (Holding)			ஒரு ஆளுக்கு உரிய நிலம்-செண்டு (Average holding per head of population cents)
			நன்செய் ஏக்கர் (Wet)	புன்செய் ஏக்கர் (Dry)	மொத்தம் ஏக்கர் (Total)	
1921	10,032,332	33,012,214	5,163,821	20,963,663	26,127,484	62
1931	10,704,152	33,495,798	5,361,041	22,250,290	27,611,331	59

கீழ்க்காணும் அட்டவணையிலிருந்து இந்தியாவிலுள்ள பல மாகாணங்களிலும் சதுர மைலுக்கு எத்தனை மக்கள் இருக்கிறார்களென்பதையும், மற்ற தேசங்களில் சதுர மைல் ஒன்றில் எத்தனை பேர் இருக்கிறார்களென்பதையும் அறியலாம்.

மாகாணம் அல்லது தேசம் (Province (British territory) or country)	பரப்பு 1,000 சதுர மைல் (Area 1000 Sq. m.)	ஜனத்தொகை பத்துலக்ஷங்கள் (Population millions)	ஜனநெருக்கம் சதுர மைல் ஒன்றுக்கு (Density per Sq. m.)
பர்மா	233·7	14·67	63
மதராஸ்	142·3	46·76	329
பம்பாய்	123·6	21·80	176
ஐக்கிய மாகாணம்	106·3	48·41	455
மத்திய மாகாணம் (பீரார் உன்பட)	99·9	15·51	155
பஞ்சாப்	99·0	23·58	238
பீஹாரும், ஒரிஸ்ஸாவும்	83·05	37·68	454
வங்காளம்	77·5	50·11	646
அஸ்ஸாம்	55·0	8·62	157
பெல்ஜியம்	11·7	8·13	692
பிரிட்டன்	88·7	44·89	505
இத்தாலி	119·7	42·16	352
பிரான்ஸ்	212·9	41·0	195
ஜப்பான்	260·8	85·10	330

இந்திய மாகாணங்களில் சென்னை மாகாணம் பரப்பளவில் இரண்டாவதாயும், ஜனத்தொகையில் மூன்றாவதாயும், ஜனநெருக்கத்தில் நான்காவதாயுமிருக்கிறது. இந்திய மாகாணங்களில் விவசாயமே முக்கிய தொழிலாயிருந்தபோதிலும் ஜனநெருக்கம் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

பொருளுற்பத்தி சம்பந்தமாகச் சில சாதனங்களைக் கவனிப்போம் :

(1) **பூகோள நிலை :**—பூகோள நிலையை மனிதப்பிரவர்த்தியால் அதிகமாக மாற்றமுடியாது. ஒரு தேசத்தின் பூகோள நிலையிலிருந்து கிடைக்கக்கூடிய இயற்கை மூலங்கள், நிலத்தின்

போக்கு, வருஷாந்திர மழை, நிலத்தின் செழிப்பு முதலிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம். உதாரணமாக இந்தியாவில் மழையின் பரப்பிலிருந்து எந்த நிலங்களில் அரிசியும், எந்த நிலங்களில் கோதுமையும் பயிரிடலாமென்று தீர்மானிக்கிறோம். தவிரவும் ஜனங்களின் உணவுப் பொருள்களும் உண்டாகும் இடத்தைப் பொருத்திருக்கிறது. வங்காளம், மதராஸ், பர்மா, பம்பாய் மேற்கு ஜில்லாக்கள் முதலிய இடங்களில் ஏராளமான மழையிருப்பதால் அரிசி பயிரிடப்பட்டு ஜனங்களின் முக்கிய உணவுப் பொருளாகவுமிருக்கிறது. ஆனால் வட இந்தியாவில் நிலத்தின் குணமும், மழையும், வறண்ட பொது நிலையும், மாரிகாலத்தில் பனி நீர்ப்படிவும் ஏற்படுவதால் கோதுமை முதலிய தானியங்கள் பயிரிடப்பட்டு அவை ஜனங்களின் உணவுப்பொருள்களாகின்றன.

(2) **தாதுப்பொருள்கள்**:—ஒரு தேசத்திலுள்ள கைத்தொழில்கள் அவ்விடமுள்ள தாதுப்பொருள்களைப் பொருத்திருக்கிறது. இயந்திரத் தொழிற் புரட்சிக்காலமுதல் தாதுப்பொருள்கள் தொழில்களுக்கு இன்றியமையாதது.

(3) **சீதோஷ்ணநிலை** :–அயனாந்தப் பிரதேசங்களில் ஜீவன ஆவஸ்யகங்கள் எளிதாய்க் கிடைக்கின்றன. வடதுருவ மண்டலங்களில் ஜீவன ஆவஸ்யகங்களுக்கு அதிக மானிட முயற்சி வேண்டியிருக்கிறது.

(4) **இட அமைப்பு**:—ஒரு தேசத்தின் வியாபாரமும் போக்குவரவு சாதனங்களும் அத்தேசத்தின் இட அமைப்பைப் பொருத்திருக்கிறது. 15-வது நூற்றாண்டில் அமெரிக்காக் கண்டம் கண்டுபிடிக்கும்வரை இங்கிலாந்து தேசம் ஐரோப்பாவின் ஒரு மூலையிலிருப்பதாகப் பாவிக்கப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு உலகத்தின் மத்திய ஸ்தானத்தை அடைந்து செழிப்படைந்தது. தென் ஆசியாவில் இந்தியா இதேமாதிரி மத்யஸ்தானம் பெற்றிருக்கிறது.

(5) **ஜனங்கள்** :—ஒரு தேசம் செழிப்படையவேண்டுமானால் அத்தேசத்தார் உழைப்பாளிகளாயிருக்கவேண்டும். தேசத்தின் சூழ்நிலையில் பொருளுற்பத்திக்குள்ள விஷயங்களை நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும். சுறுசுறுப்பாயும் சிக்கனமாயும்

இருக்கவேண்டும். ஒழுங்கு வழியில் நடந்துகொள்ளும் தன்மை மிகவும் அவசியமானது. இத்தன்மை யில்லாவிடில் கூட்டுறவுச் சங்கங்களும் கூட்டுப்பங்கு வியாபாரமும் சரியானபடி நடைபெறுது. தேசத்திலுள்ள இயற்கை மூலங்களை நன்ருக உபயோகிப்பதற்குள்ள ஊக்கம் வேண்டும். தொழில்களில் தக்க தேற்சியடைதல் அவசியம். இந்தியாவில் அநேக தொழில்களில் தொழில் முறைகள் தெரியாதவர்கள் இருந்து நடத்துவதால் அத்தொழில்கள் நெடுநாளாக நடைபெறுமல் கேடு அடைகின்றன. பொருளுற்பத்திக்கு வேண்டிய சாதனங்கள் ஏராளமாக இருந்தபோதிலும் அவைகளை உபயோகப்படுத்தாமலிருப்பதால் இந்தியா தேசத்தை எளிய ஜனங்கள் வசிக்கும் ஒரு செல்வம் நிறைந்த தேசம் என்று சொல்வது பொருத்தமாயிருக்கிறது. ஒரு தேசத்தின் பூகோள நிலையை மனிதப்பிரவர்த்தியால் அதிகமாக மாற்ற முடியாது. ஆனல் ஒரு தேச ஜனங்களின் குணங்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் படிப்பினலும் பழக்கத்தினலும் மாற்றுதல் முடியுமென்று சொல்லலாம்.

(6) காடுகள் (forests) :—பொருளுற்பத்திக்கு காடுகள் பலவிதமாய் அனுகூலமாயிருக்கின்றன. எல்லா தேசங்களிலும் முக்கியமான காடுகள் கவர்ன்மெண்டார் கைவசமிருக்கின்றன. இந்தியாவில் முழுவதும் முற்காலத்தில் பெரியகாடுகள் அடர்ந்திருந்தன. ஜனத்தொகை அதிகரிக்கவே இக்காடுகள் சிறிது சிறிதாக வெட்டப்பட்டுப் பயிரிடும் நிலங்களாக மாற்றப்பட்டன. ஆனல் மேட்டுப்பாங்கான இடங்களிலும், மலைச்சரிவுகளிலும் உள்ள காடுகள் வெட்டப்படவில்லை. அங்கு இன்னும் பிரம்மாண்டமான விருக்ஷங்களைக் காணலாம். வருஷத்தில் மழை அளவு எண்பது அங்குலங்களுள்ள காடுகளில் அதிக உயரமான விருக்ஷங்களைக் காணலாம். இவை எப்பொழுதும் இலைகளை உதிர்க்காமல் பசுமையாகவே இருக்கின்றன. இம்மரங்கள் மிகவும் உறுதியாயிருப்பதால் இவை ரெயில்ப் பாதைகளுக்கு உபயோகப்படுகின்றன. இவை மேற்குத்தொடர்ச்சி மலைகளிலும், இமயமலையின் அடிவாரத்திலும், அஸ்ஸாமிலுள்ள காடுகளிலும் காணப்படுகின்றன. இம்மரங்கள் அதிகமாக வெட்டப்படவில்லையென்றே கூறலாம்.

சுமார் நாற்பது அங்குல மழை பெய்யும் இடங்களிலுள்ள காடுகள் கோடையில் வறண்டுவிடுகின்றன. ஆகையால் இங்குள்ள மரங்கள் கோடையில் இலைகளை உதிர்த்துவிடுகின்றன. இத்தகைய காடுகளில் தேக்கும், சால் என்ற மரமும் விசேஷமாய்ப் பயிராகிறது. பர்மாவில் தேக்கும், இமயமலையின் அடிவாரத்தில் சாலும், தேவதாரும் விசேஷம். இம்மரங்களை வெட்டி வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். இந்தக் காடுகளை கவர்ன்மெண்டார் வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாத்துவருகின்றனர்.

மழை அளவு 40 அங்குலத்திற்குக் குறைவாயுள்ள காடுகளில் உயரமான மரங்கள் வளருவதில்லை. இங்கு வளரும் மரங்கள் பெரும்பான்மையும் அடுப்பெரிப்பதற்கு உபயோகப்படுகின்றன. தக்ஷிண பீடபூமியின் கிழக்குப் பாகத்தில் இத்தகைய காடுகளே விசேஷம். ஆனால் கிழக்குத்தொடர்ச்சி மலைச்சரிவுகளில் உயர்ந்த மரங்களைக் காணலாம்.

இந்தியாவிலுள்ள காடுகளில் மூங்கில் சந்தனமரம் முதலானவைகளும் பயிராகின்றன. மூங்கில் பல வேலைகளுக்குப் பயன்படுகிறது. சந்தனமரம் சோப்பு செய்யவும் வாசனைத்தைலம் இறக்கவும் உபயோகப்படுகிறது. இந்தியாவில் நமக்கு வேண்டிய பலவகை மரங்கள் கிடைக்கின்றன. வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய தேக்கு, கருங்காலி முதலான மரங்களும், சாமான்கள் செய்வதற்கு வேண்டிய தேவதாரு, சால் முதலான பல மரங்களும், அடுப்பெரிப்பதற்கு வேண்டிய சவுக்கு முதலான பல மரங்களும் கிடைக்கின்றன. பர்மாவிலிருந்து தேக்கு மற்ற தேசங்களுக்கு ஏற்றுமதியாகிறது.

இந்தியாவில் கவர்ன்மெண்டு காடுகள் 250,000 சதுரமைல்கள். அவை பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்த பரப்பளவில் 20 சதவிகிதம். காடுகளில் பெரும்பான்மையும் பர்மா, அஸ்ஸாம், வங்காளம், தக்ஷிணபீடபூமி, மத்திய மாகாணங்கள், மதராஸ், ஹிமோத்பர்வதத்தின் கீழ்ப்பிரதேசங்கள் முதலிய இடங்களில் காணப்படுகின்றன. 25,000 மர இனங்களிருக்கின்றன. இந்தியா தேசத்துக் காடுகளில் விளையும் பொருள்கள் பல. அவைகளில் முக்கிய

மானவை—கடுக்காய், அரக்கு, பிசின், சந்தனக்கட்டை, சாயை, முஞ்சிப்புல்கள், மிளகு, ஏலம், ரப்பர் முதலியனவாம்.

பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள காடுகளின் பரப்பளவு கீழ்க் குறிப்பிட்ட இலக்கங்களால் விளக்கலாம்.

மாகாணம்	மாகாணத்தின் பரப்பளவு (சதுர மைல்)	காடுகளின் பரப்பளவு (சதுர மைல்)	மொத்த பரப்பளவுக்கும் காடுகளின் பரப்பளவுக்கு முள்ள தகவுப் பொருத்தம்	காடுகளின் தேறின வரும்படி (ரூபாய்கள்)
அந்தமான் தீவுகள்	3	2·2	70·2	4
அஸ்ஸாம்	49	22·5	45·7	300
மத்திய மாகாணங்கள்	100	20	19·7	1515
மதருஸ்	142	20	13·7	1180
வங்காளம்	80	11	13·5	550
பம்பாய்	123	12·5	10	2060
பஞ்சாப்	97	8	8	800
பீஹார், ஒரிஸா	83	3	3·5	156

புலங்களின் அமைப்பும் அளவும்
(The form and size of holdings)

இந்தியாவில் பெருவீத விவசாயத்திற்கு புலங்களின் அமைப்பும், அளவும் ஒரு தடங்கலாயிருக்கிறது. ஒவ்வொரு மாகாணத்திலும் விவசாயிகளுடைய புலங்கள் மிகவும் குறைந்த அளவாயிருக்கின்றன. தவிரவும் அப்புலங்கள் ஒரே தொகுதியாயில்லாமல் பலவிடங்களில் சிதறிக் கிடக்கின்றன. ஒவ்வொரு இடத்திலுமுள்ள புலங்கள் சிறு துண்டுகளாகிவிடுகின்றன. இதனல் பயிரிடும் நிலங்கள் பயனற்ற புலங்களாக இருக்கின்றன. ஆகையால் பெருவீத முறையில் விவசாயத்தை நடத்த சாத்தியமில்லை.

இம்மாதிரி புலங்கள் சிதறிக்கிடப்பதற்கு பல காரணங்களிருக்கின்றன. ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே வருவதால் பயிரிடும் நிலம் பங்கிடப்பட்டு நிலத்தின் வீதாசார அளவு

குறைகின்றது. நமது தேசத்தில் நிலத்தை பங்கிடும் முறையை மாற்றுவது இலகுவான காரியமன்று. சிறு புலங்களைக் தொகுக்கும் முறைகளை (Consolidation of holdings) ஜனங்கள் அனுசரிக்கவேண்டியது அவசியம். பஞ்சாப் மாகாணத்தில் கூட்டுறவு சங்கங்கள் இவ்விஷயங்களை கவனித்துவருகின்றன. மத்திய மாகாணத்தில் 1928-ம் வருஷம் புலங்களை ஒன்றுகூட்டும் சட்டம் இயற்றப்பட்டது. இவ்வித முயற்சிகளைக் கைவிடாமல் நடத்த வேண்டியது அவசியம்.

கீழ்க்காணும் விபரங்களிலிருந்து ஒவ்வொரு விவசாயியும் எவ்வளவு சிறிய நிலத்தைப் பயிரிடுகிறானென்று விளக்கலாம்.

மாகாணம்	ஏக்கர்	
பம்பாய்	12·2	(ஒரு ஆளுக்கு)
பஞ்சாப்	9·2	,,
மத்திய மாகாணம்	8·5	,,
சென்னை	4·9	,,
வங்காளம்	3·1	,,
பீஹார், ஒரிஸ்ஸா	3·1	,,
அஸ்ஸாம்	3·0	,,
ஐக்கிய மாகாணம்	2·5	,,

மற்ற தேசங்களில் ஒவ்வொரு விவசாயியும் சராசரி எவ்வளவு நிலம் தன் உரிமையில் வைத்து பயிரிடுகிறானென்பது கவனிக்கத் தக்கது.

தேசம்	ஒரு விவசாயிக்குள்ள சராசரி நிலம் ஏக்கர்
இந்தியா	5
ஜப்பான்	4·2
ஜெர்மனி	21
இங்கிலாந்து	55
வட அமெரிக்கா ஐக்கிய நாடுகள்	157
கனடா	198

அமெரிக்கா முதலிய நாட்டினர் இவ்வுண்மையை உணர்ந்து மழையின் பொருட்டு காடுகளை பயிராக்கிவருகின்றனர்.

கற்றவர்களும் செல்வர்களும் கிராம வாழ்க்கையை விரும்பாமல் நகரப் புறங்களுக்குச் செல்லுகின்றனர். இத்தகைய வழக்கமும், மனப்பான்மையும் ஒழிதல் வேண்டும். உழவருள் பெரும்பாலோர் நிலங்களுக்கு இடும் எருக்களைச் சேர்ப்பதில் கருத்துக் கொள்வதில்லை. எந்த தானியத்தையும் வித்தாக உபயோகிக்கின்றனர். விளைவு குறைதற்கு இது ஒரு முக்கியமான காரணம். வளமுடைய நிலத்தில் நன்றாக விளைந்த பயிரைத் தெரிந்தெடுத்து அவற்றிலுள்ள தானியத்தையே வித்தாக கொள்ளுதல்வேண்டும். அவ்வாறே ஒவ்வொரு தடவையும் சிறந்த தானியத்தையே தெரிந்தெடுத்து அவற்றை விதைத்தால், அதிகமாகப் பலன் கிடைக்கும். பயிர்த்தொழில் செய்பவர்களுட் பலர் கையிற் பொருள் இல்லாமையாலும் உழவு மாடுகள் இல்லாமையாலும் ‘ பருவத்தே பயிர்செய் ’ என்பதையறிந்திருந்தும் தக்ககாலத்திற் பயிரிடமுடியாமல் காலம் தாழ்த்துப் பயிரிடுகின்றனர். இதனாலும் தகுந்த விளைவு விளையாமற் போகின்றது.

நமது நாட்டில் பயிர்த்தொழிலுக்கு துணைபுரிவர் இல்லை. வாணிகம் முதலான தொழில்களுக்கு உதவியாகப் பொருள் நிலயங்கள் அமைக்கப்பட்டிருத்தல் போல இத்தொழிற்கு பொருள் நிலயங்கள் பல இடங்களிலும் இல்லாதது ஒரு பெருங்குறை. சில காலங்களாக துரைத்தனத்தார் விவசாயிகளுக்கு கடன் கொடுத்து, உழவுத் தொழிலை விருத்தி செய்கின்றனர். உழுதொழில் செய்பவர்களுக்குப் பொருளுதவி செய்யும் பொருட்டு பல சட்டங்களை விதித்துள்ளனர். ஐக்கிய நாணய சங்கங்களை அமைத்து, குறைந்த வட்டிக்குக் குடிகளுக்குக் கடன் கொடுத்து பல தடவைகளாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கின்றனர். சமீப காலத்தில் பொருள் நிலையம் ஒன்று ஏற்படுத்தியுள்ளனர். குடியானவர்கள் பெருந்தொகையை கடனாக வாங்கி அதனை இருபது வருஷங்கள் வரையிலும் சிறிது சிறிதாகத் திருப்பிக் கொடுக்கலாம். இவ்வாறு அரசாங்கத்தார் பல உதவிகளைச் செய்திருப்பினும் அவற்றின் நன்மையை உழவர்கள் நன்கு

அறிந்துகொள்ளவில்லை. உழவர் பயிரிடுதற்கு வேண்டும் பொருளை செல்வர்களிடத்தில் அதிக வட்டிக்கு வாங்குதலினால் அவர்கள் பயிர் விளைந்து, அறுவடையானவுடனே அம்மாசூலைக் குறைந்த விலைக்கு விற்றுக் கடன் கொடுத்துவிடுகின்றனர். அந்த தானியத்தின் இலாபத்தை வியாபாரிகளே அடைகின்றனர். வேறு சிலர் பொருளின் அவசியத்தைக் கருதி விளையும் தானியத்தை மிகவும் குறைந்த விலைக்குக் கொடுப்பதாக உடன்பட்டு, முன்னரே கடன் வாங்குகின்றனர். விவசாயத்தை வளம்படுத்துவதற்கென்று கடன் வாங்குவோர் அரியர். கடன் வாங்கும் விவசாயிகள் அனைவரும் தங்கள் குடும்பச் செலவுக்காகத்தான் கடன் வாங்குகின்றனர். இதுவே விவசாயிகளின் கடன் அதிகரிப்பதற்கு ஒரு முக்கியமான காரணம்.

உழவுத்தொழிலை உயர்வுறச் செய்வதற்குள்ள கருத்தை அதிகப்படுத்தவேண்டும். இன்னும் பயிர் செய்யப்படாமல் கிடக்கின்ற நிலங்களை யெல்லாம் பயிரிடுவதற்கு ஏற்றதாகப் பண்படுத்தவேண்டும். நீர்வளமற்ற பாகங்களுக்கு சமீபத்தில் உள்ள ஆற்றுநீர் பாயும்படியான வசதியிருக்குமாயின், அதற்கேற்ற ஆறுகளையும், வாய்க்கால்களையும் வெட்டிவிட்டு நீர் பாயும்படி செய்தல் வேண்டும். நீரைத் தேக்கிவைத்துக்கொள்ளுவதற்காக அணைக்கட்டுகளும் கட்டப்படவேண்டும். ஒவ்வொரு கிராமங்களிலும் குடியானவர்களின் சங்கங்களை நிறுவி, அதன் மூலம் பயிர்த்தொழிலை ஓங்கச் செய்வதற்குரிய முறைகளை அவர்களுக்குப் பயிற்றுவிக்கவேண்டும். கிராமவாசிகளுக்குள் ஒற்றுமையையும் சிக்கன முறையையும் வளர்க்கவேண்டும். கிராமப் பள்ளிக்கூடங்களில் எல்லாம் விவசாயத்தொழிலைப்பற்றிப் போதிக்கவேண்டும். இவ்வாறு செய்வோமாயின் நாமும், பிறநாட்டினரைப்போல் உழவுத்தொழிலில் மேன்மை அடையலாம்.

XVII

இந்தியாவின் விளைபொருள்கள்

நமது தேசமாகிய இந்தியா ஒரு விவசாயப் பிரதேசமாகும். இங்கு வசிக்கும் ஜனங்களில் நூற்றுக்கு 90-க்குமேல் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர் ஆங்காங்குள்ள நிலவளத்திற்கும், நீர் வசதிக்கும், சீதோஷ்ண நிலைமைக்கும் ஏற்பப் பல விதப் பயிர்களைச் செய்கிறார்கள். ஓரிடத்தில் நிலவளம், சீதோஷ்ண ஸ்திதி, மழை முதலியவைகளுக்கும் அங்குப் பயிராகும் தாவரவர்க்கங்களுக்கும் நெருங்கிய சம்பந்த முண்டென்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். சமவெளிகளில் விளையும் தாவரங்கள் மலைப்பிரதேசத்தில் விளையா. அதைப்போலவே மலையில் வளரும் தாவரங்கள் சமவெளியிற் பயிராகா. நமது தேசத்தில் பயிராகும் விளைபொருள்களைப் பற்றியும், அவை எங்கெங்கு விசேஷமாய்ப் பயிராகின்றனவென்பதையும் அவை அங்குப்பயிராவதற்கு இயற்கையாயமைந்துள்ள வசதிகள் என்னவென்றும் இப்பொழுது தெரிந்துகொள்வோம்

தானிய வகைகள் (Cereals)

1. நெல் :—இந்தியாவில் வண்டல் மண் படிந்த சமவெளிகளிலே நெல் விசேஷமாய்ப் பயிராகிறது. மழை அளவைக் காட்டும் இந்தியாப் படத்தைப் பார்த்தால் அப்பிரதேசங்களில் வருஷத்தில் 40 அங்குலத்திற்குக் குறைவாக மழை அளவுள்ள இடங்களில் தண்ணீர் இறைத்து நெல் பயிரிடுகிறார்கள். இப்பிரதேசங்களிலுள்ள ஜனங்களுக்கு அரிசியே முக்கியமான உணவாகும். வைக்கோல் கால் நடைகளுக்கேற்ற உணவாக இருக்கிறது. வங்காள மாகாணத்தில் நெல் அங்குள்ள ஜனங்களின் உணவுக்கு வேண்டியதற்கு மேல் அதிகமாகச் சாகுபடியாகிறது. அதனால் கல்கத்தாத் துறைமுகம் வழியாய் ஐரோப்பாவுக்கு அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

2. **கோதுமை** :—கோதுமை பயிராகும் இடங்களையும் அங்கு பெய்யும் மழை அளவையும் இந்தியாப் படத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். கோதுமைக்கு நெல்லைப்போல் அதிக மழை வேண்டாம். நெல்லின்பேரில் தண்ணீர் தங்குவதுபோல் கோதுமையினடியில் தங்கினால் அவை அழிந்துவிடும். ஆகவே வருஷத்தில் 40 அங்குல மழைக்குக் குறைவாக மழை பெய்யுமிடங்களில் கோதுமை நன்றாய்ப் பயிராகும். கோதுமை விளைவதற்கு நிலம் தவிடுபோல் மிருதுவானதாயிருக்கவேண்டும். ஏனென்றால் அதன் வேர்கள் புழுதியான விடங்களில் வெகுதூரம் உட்சென்று ஈரத்தைக் கிரகிக்கும். விதைத்தவுடன் தீவிரமாக முளைகிளம்பி இலைகள் செழிக்கச் சிறிது மிதமான மழை அளவு வேண்டும். பிறகு தானியம் முற்றுவதற்கு ஏராளமான உஷ்ணம் வேண்டும். இக்காரணத்தால் இதை மாரிக்கால முடிவில் விதைத்துக் கோடைக்கால ஆரம்பத்தில் அறுவடை செய்கிறார்கள். அதிக நீராவியைக் கொண்ட ஈரக்காற்று ஒன்றே இப்பயிருக்குச் சத்துரு. நமது தேசத்தில் பஞ்சாப் சமவெளியும், ஐக்கிய மாகாணங்களுமே இந்தியாவில் விளையும் கோதுமை அளவில் முக்காற்பங்கு விளைகின்றன. வடமேற்கு மாகாணங்கள், நருமதை நதிதீரம், தக்ஷணத்தின் வடமேற்குப் பாகம் முதலிய இடங்களில் சிறிது கோதுமை பயிரிடப்படுகின்றது.

ஐரோப்பியர்களுக்குக் கோதுமையே முக்கிய ஆகாரப்பொருளாகும். தவிர வட இந்தியாவிலுள்ளவர்களுக்கும் கோதுமை முக்கிய ஆகாரப் பொருளாகும். இந்தியாவில் விளையும் கோதுமையில் சிறிது ஐரோப்பாவுக்கு ஏற்றுமதியாகின்றது.

3. சோளம், கம்பு, கேழ்வரகு முதலிய புன்செய்த் தானியங்கள் :—கோதுமையும் நெல்லும் விளைவிப்பதற்கு வேண்டிய நிலவளமும், நீர்வளமுமில்லாத பாகங்களில் சோளம், கம்பு, கேழ்வரகு முதலான புன்செய்த் தானியங்கள் பயிரிடப்படுகின்றன. இப்பயிர்களுக்கு அதிகத் தண்ணீர் வேண்டியதில்லை. வருஷத்தில் மழை அளவு 20 அங்குலங்களுள்ள இடங்களில்கூட இவை விசேஷமாய்ப் பயிராகின்றன. மழை அளவு 40 அங்குலத்திற்கு மேல் இருக்குமிடங்களில் இவை பயிரிடப்படுவதில்லை.

பஞ்சாபின் வறண்ட பிரதேசங்களிலும், சிந்து மாகாணத்திலும், வடமேற்கு எல்லை, மத்திய மாகாணங்களிலும், தக்ஷணத்தில் கர்னூடகப் பிரதேசத்திலும் இவை பயிராகின்றன. சோளமும், கம்பும், கேழ்வரகும் ஏழை ஜனங்களின் முக்கிய ஆகாரப் பொருள்களாகும்.

4. **பருப்பு தினுசுகள்** (Pulses) :—கோதுமை அரிசி முதலியவற்றை முக்கிய ஆகாரப் பொருளாகக் கொள்பவர்கள் பருப்பு தினுசுகளையும் ஆகாரத்தோடு சேர்த்து உட்கொள்கின்றனர். இப்பருப்புத் தினுசுகள் புன்செய்ப் பயிராகும். வட இந்தியாவிலும் தக்ஷணத்தில் மழை சொற்பமாயுள்ள இடங்களிலும் இவைகளைப் பயிரிடுகிறார்கள். இப்பயிர்களுக்குப் பூமியின் செழுமை அதிகமாக வேண்டுவதில்லை. இத்தினுசுகளில் அடங்கியவை இதுவரை, உளுந்து, மொச்சை, கடலை, பச்சைப்பயிர், கொள் முதலியன.

5. **கரும்பு** :—புல் இனத்தைச் சேர்ந்த ஒரு பயிராகும். நெல்லைப்போல் ஒரு நன்செய்ப் பயிரேயாகும். நெல்லுக்குத் தேவையான அவ்வளவு நிலவளமும், நீர்வளமும், உஷ்ணமும் கரும்புக்கு வேண்டும். நிலத்தைச் செம்மையாக உழுது புழுதியாக்கி அதிக ஆழமில்லாத கிடங்குகள் வெட்டுவார்கள். பிறகு கரும்பின் முளைக்கணுக்களைத் தரித்து ஜாண் அளவு துண்டுகளாக்கி, அவற்றை முளை கிளம்புவதற்கேற்றபடி பூமியிற் பதிவுசெய்வார்கள். கணுக்களினின்றும் முளைகள் கிளம்பி வளர்ந்து செடிகளாக உயரும்போது நீண்ட இலைகள் போன்ற தழைகளைக் கழித்து அதி ஜாக்கிரதையாகப் பாதுகாப்பார்கள். நன்றாக முற்றியவுடன் கரும்பை வெட்டி ஆலையில் இட்டுக் கருப்பஞ்சாற்றைச் சேகரித்துப் பெரிய கொப்பறைகளிலிட்டுப் பதமாகக் காய்ச்சி வெல்லமாக்குவார்கள். பிறகு அதைப் பன்முறை சுத்தப்படுத்தி வெள்ளைச்சர்க்கரை செய்வார்கள். பெரிய சர்க்கரை ஆலைகளில் கரும்பினின்றும் சர்க்கரை செய்வதோடு, சாராயமும் செய்கிறார்கள். இந்தியாவில் கரும்புக்கு ஏற்ற நிலங்கள் பெரும்பாலும் நதிமுகப் பூமிகளேயாகும். பீஹாரும் ஐக்கிய மாகாணங்களும் இந்தியாவில் முக்கியமாகச் சர்க்கரை உற்பத்திபண்ணும்

இடங்கள். நமது நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரை மிகவும் குறைவாயிருப்பதால் ஜாவா முதலிய வெளி நாடுகளிலிருந்து சர்க்கரை இறக்குமதி செய்கிறோம். ஆனால் இப்பொழுது உள் நாட்டுச் சர்க்கரை விருத்தியாவதால் அயல் நாட்டுச் சர்க்கரை குறைந்துகொண்டே வருகிறது.

6. **தேயிலை, காப்பிக்கொட்டை:**—இவை தோட்டக்காற் பயிர்கள். சற்றேறக்குறைய ஒரே விதமான சீதோஷ்ணம், மழை அளவு, நிலவளம் முதலியவற்றை வேண்டுவன. தேயிலை:—இது ஒரு புதர் போன்ற செடியின் இலை. தேயிலை விதைகள் நாற்று விட்டு வளர்த்து மூன்றடி உயரம் வளர்ந்ததும் பிடுங்கி மலைச்சரிவு களில் நடுகிறார்கள். மூன்று வருஷத்திற்குப் பிறகு அவைகளி னின்றும் தேயிலை பறிக்கிறார்கள். இதன் நடுவில் களைகளைத் தரித்துப் புஷ்பிக்காதபடி பார்த்துக்கொள்ளுகிறார்கள். இச்செடி யைச் சுமார் நாலடிகளுக்குமேல் வளரவிடாமல் நுனிகளைத் தரித் துக்கொண்டு வருவார்கள். இலைகளை ஒவ்வோர் இலையாகக் கிள் ளிச் சேகரித்துப் பதம் செய்யவேண்டியதனால் மனிதன் நின்று பார்க்கக்கூடிய உயரத்திற்குமேல் இதை வளரவிடமாட்டார்கள். மழை அளவு அதிகமாகவுள்ள உஷ்ணமான மலைச்சரிவுகளே தேயிலைக்கு ஏற்றவை. ஏனெனில் இப்பயிருக்கு அதிக மழை வேண்டியிருந்தாலும் மழை ஜலம் வேரில் தங்காமல் உடனே வடிந்துவிடவேண்டும். இந்தியாவில் அஸ்ஸாமிலுள்ள மலைச் சரிவுகளிலும், மேற்குத்தொடர்ச்சி மலைகளிலும், சிலோன் முதலிய விடங்களிலும் அதிகமாகப் பயிரிடுகின்றனர். இந்தியாவில் விளை யும் தேயிலையில் முக்காற்பங்கு அஸ்ஸாமில் விளைகிறது. இந்தி யாவின் தேயிலையை மேல் நாட்டார் அதிகமாக உபயோகிக்கின்ற னர். இந்தியாவும், சீனாவுமே உலகத்தாருக்கு வேண்டிய தேயிலையை ஏற்றுமதி செய்கின்றது. இத்தேயிலைத் தோட்டங் களில் அநேக கூலியாட்கள் வேலைசெய்து பிழைக்கின்றனர்.

7. **காப்பிக்கொட்டை:**—தேயிலையைப்போல் பானத்திற்கு உதவும் மற்றொரு வகைப் பயிர். இது முதலில் அரேபியா, அபி ஸினியா முதலிய இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டது. இப்பொழுது இந்தியாவில் நீலகிரி, மேற்குத்தொடர்ச்சி மலைச்

சாரலின் உட்புறம் முதலிய பிரதேசங்களில் காப்பித் தோட்டங்கள் காணப்படுகின்றன. இதற்கும் உஷ்ணமான சீதோஷ்ண நிலைமையும் அதிக மழை அளவும் ஜலம் தங்காத மலைச்சரிவான பூமியும் வேண்டும். இப்பயிருக்குக் காற்று அடைப்பான சரிவுகளே ஏற்றவை. காற்றினாலும், இப்பயிருக்குப் பல கெடுதல்கள் ஏற்படும். இதைச் சிறு செடிகளாக நாற்றுவிட்டு நட்டு விருத்தி செய்கிறார்கள். காப்பிச்செடி வலிவான கிளைகளையுடைய தாவரமல்ல. இதன் கணுக்களில் கொத்துக்கொத்தாய்க் காய்கள் பிடிக்கும். பிறகு அவை முற்றுப் பழமான பிறகு அவற்றை உலுக்கிச் சேர்ப்பார்கள். பிறகு அவைகளை ஜலத்தொட்டிகளிற் சிறிது ஊறவைத்து மிதித்தால் தோல் நீங்கிக் கொட்டைகள் ஒன்று சேரும். அவற்றை உலர்த்திப் பதம்செய்து விற்பனை செய்வார்கள்.

கிராம்பு வகை:—ஏலக்காய், ஜாதிக்காய், லவங்கம், மிளகு, வால்மிளகு முதலியவை. இவ்வினத்தைச் சார்ந்தவை இவை உஷ்ணப் பிரதேசத்துப் பயிர்கள். மழை அளவும், உஷ்ணமும் அதிகமாகவுள்ள மலை நாட்டிலும், மலைச்சாரியிலும் இவை விசேஷமாக விளைகின்றன. தென் இந்தியா, இலங்கைத் தீவு, சுமத்ரா, ஜாவா முதலிய கிழக்கு இந்தியத் தீவுகளில் மட்டுமே விசேஷமாகப் பயிரிடப்படுகின்றன. ஆதியில் ஐரோப்பியர் இந்தியாவை நாடி வந்த காரணம் இப்பொருள்கள் நிமித்தமேயாகும். மேற்குத்தொடர்ச்சி மலைச்சரிவில் மலையாளம், திருவாங்கூர், குடகு, நீலகிரி முதலியவிடங்களில் இத்தோட்டக்காற் பயிர்களை விசேஷமாகச் செய்கிறார்கள்.

இந்தியாவின் வணிகப் பயிர்

1. சணல் (Jute):—சணல் நாரினால் கோணிகள் பின்னுகிறார்கள். இப்பயிருக்கு அதிக உஷ்ணமும், அதிக மழையும் வேண்டும். இதற்கு செழிப்பான நிலவளமையும் வேண்டும். இந்தியாவில் வங்காளத்தில் இது விசேஷமாய்ப் பயிரிடப்படுகின்றது. உலகத்திற்கு வேண்டிய சணல் நார் பெரும்பாலும் வங்காளத்திலிருந்தே ஏற்றுமதியாகின்றது. கல்கத்தாவுக்கருகில் அநேக சணற்

சாலைகள் இருக்கின்றன. இங்கே சணல் நாரை எடுத்துக் கோணிப் பைகள் செய்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

2. வேர்க்கடலை (Groundnut) :— இது புன்செய்ப் பயிர். மணற்பாங்கான நிலங்களில் இது நன்றாய் வளருகின்றது. பூமியை உழுது புழுதியாக்கி வேர்க்கடலையைத் தோல் உறித்து முதிர்ந்த பருப்புகளைப் பூமியில் விதையும்படி விதைப்பார்கள். சொற்ப மழை சிறிது சிறிதாக அவ்வப்போது பெய்தால் இப்பயிர் நன்றாய் வளரும். இதன் வேர்களில் அதிகக் காய் பிடிக்கும். காய் முற்றினவுடன் நிலத்தை வெட்டிக் காய்களைச் சேகரிப்பார்கள். வேர்க்கடலை இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் முக்கியமான பொருள்களில் ஒன்று. வேர்க்கடலையிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள். இது மெழுகுவத்தி செய்யவும் உபயோகப்படுகின்றது. இதன் பிண்ணாக்கை வயல்களுக்கு உரமாகப் போடுகிறார்கள்.

3. பருத்தி :— உணவுப்பொருள்களைப் போலவே உடுக்கும் பொருள்களும் மனிதர் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. உடைகள் தயார் செய்ய உதவும் தாவரங்களில் பருத்தி முதன்மையானதாகும். ஏழை முதல் பணக்காரர் வரையில் எல்லா மனிதர்களும் பருத்தி ஆடையையே விசேஷமாக உபயோகிக்கின்றனர்.

பருத்தியென்பது இழையாக நீட்டக்கூடிய ஒரு பொருள். இது எவ்வளவுக்கெவ்வளவு நீண்டு நுண்ணிய இழையாக ஆகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதன் விலையும் அதிகமாகும். நாம் உடுக்கும் ஆடைகள் 30, 40, 60, 80 முதலான நிம்பர் நூல் இழையால் நெய்தவை என்று கூறுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இச் சங்கியை எவ்வளவு உயர்கிறதோ அவ்வளவு மெல்லிய இழையாலான வஸ்திரம் என்று அறியவேண்டும். மேலும் பருத்தியினுடைய தரம் அதன் நிறத்தையும் பொறுத்ததாகும். இந்தியாவில் கிடைக்கக்கூடிய பருத்தி பழுப்பு வர்ணமாகவும், ஈகிப்த் (Egypt) வட அமெரிக்கா நாடுகளில் கிடைப்பது தூய்மையான வெண்ணிறமாகவும் இருக்கிறது.

பருத்திச் செடியானது கரிசல் மண் பூமிகளில் விசேஷமாகப் பயிராகிறது. இதற்கு மழை அளவும், ஈரமும் சிறு செடியாக

நிலவரி ஏற்பாடுகள்
(Land Revenue Settlements)

இந்தியாவில் நில உரிமைத் திட்டத்தை (Land tenure) இரண்டு வகையாக பிரிக்கலாம்—ஜமீன் நிலம், குடியானவன் நிலம். நிலவரியானது சர்க்காரால் ஒருவரிடமிருந்து அல்லது பூஸ்திதி உரிமையுள்ள ஒரு கூட்டத்தாரிடமிருந்து வசூலித்தால், அவ்வித வரி ஜமீன் நிலவரி ஏற்பாடு என்று சொல்லப்படுகிறது. நிலவரியானது நிலத்தை பயிர் செய்யும் குடியானவனிடமிருந்து வசூலித்தால் அதை குடிவார ஏற்பாடு என்று சொல்லப்படுகிறது. இரண்டுவித ஏற்பாட்டிலும் குடிவாரக்காரர்கள் உண்டு. ஜமீன் நிலவரி ஏற்பாடு வங்காளத்திலும், ஐக்கிய மாகாணத்திலும், பஞ்சாபிலும், மத்திய மாகாணத்திலும், சென்னை மாகாணத்தில் சில பாகங்களிலும் வழங்கிவருகிறது. குடிவார ஏற்பாடானது பம்பாய், சிந்து, அஸ்ஸாம், சென்னை முதலிய மாகாணங்களில் காணலாம்.

நிலத்தீர்வை ஏற்பாடு நிலையான நிலவரி ஏற்பாடு, தற்கால நிலவரி ஏற்பாடு என இரு வகையாகப் பிரிக்கலாம். நிலையான நிலவரி ஏற்பாடு வங்காளத்திலும், சென்னை, ஐக்கிய மாகாணம் இவைகளின் சில பாகங்களில் காணலாம். இந்தியாவின் மற்ற இடங்களில் நிலவரி ஏற்பாடு 10 வருஷமுதல் 30 வருஷம்வரை ஒரே மாதிரியாக விதிக்கப்படுகிறது. இந்தியாவின் மொத்த விஸ்தீரணத்தில் 20% நிலையான நிலவரியுள் அடங்கியது; 33% நிலையற்ற நிலவரி விதிக்கப்பட்டுள்ள பூஸ்திதிகளாய் சில ஜமீன்தார்களுக்கு சொந்தமாயிருக்கிறது; 47% குடியானவரிடமிருக்கிறது.

இந்தியாவின் நிலவரி நிலவாரமா (rent of land) அல்லது வரியா (tax) என்பதைப்பற்றி ஒரு வாக்குவாதம் வெகு காலமாக நடைபெற்றுவருகிறது. வாரமென்றால் பூமி முழுவதும் சர்க்காருக்கு சொந்தமென்றும், நாம் நிலவரியாகக் கொடுக்கும் பணம் சர்க்காருக்கு நிலவாரமாகக் கொடுக்கும் பணமென்றும் ஏற்படும். நிலவாரமென்றும் விதர்க்கத்தை நாம் ஒப்புக்கொண்டால் சர்க்காருக்கு நிலவரியை கூட்டவும் குறைக்கவும் அதிகாரமுண்டு. வரி என்று சொல்வோமாகில் பூமி நிலஸ்வான்களுக்கே சொந்தமென்

றும் சர்க்கார் மற்றவைகளைவிட நிலங்களின் பேரில் அதிக வரி போட அதிகாரம் இல்லையென்றும் ஏற்படும். முடிவாக இந்தியாவின் நிலவரியை நிலவாரத்தின் பேரிலுள்ள வரியென்றே (tax on) rent) நாம் சொல்லலாம்.

விவசாய வகைகள்

விவசாயத்தை இரண்டு விதமாகப் பிரிக்கலாம்—பிழைப்பு விவசாயம், செழிப்பு விவசாயம். அநேக விவசாய தேசங்கள் விவசாயத்தை பிழைப்பு வழியிலே நடத்திவருகின்றனர். இடைக் காலத்து விவசாயம் இம்மாதிரியே நடைபெற்றது. இக்காலத்திலும் சில தேசங்களில் விவசாயிகள் தம் உணவுக்கு வேண்டிய அளவே நிலத்தை பயிரிடுகின்றனர். மிகு வெப்பப்பிரதேசங்களில் இக்காலத்திலும் விவசாயமானது இத்தன்மையிலே நடைபெற்றுவருகின்றது. இவ்வித விவசாய முறையில் உண்டாக்கப்படும் உணவுப்பொருள்கள் குறைவாகவேயிருக்கின்றன. ஜனகாரம் அதிகரிப்பதால் இவ்வித பிழைப்பு விவசாயம் பட்டினி விவசாயமாகவே யிருப்பதாகச் சொல்லலாம். இந்தியாவில் விவசாயம் இம்முறையில்தான் இருக்கிறது.

வியாபார முறையில் நடைபெறும் விவசாயத்தை செழிப்பு விவசாயமென்று சொல்லலாம். இவ்வித விவசாயம் பெருவீத முறையில் நடைபெறுகிறது. இந்தியாவில் சணல், பருத்தி, தேயிலை, காப்பிக்கொட்டை முதலியன செழிப்பு விவசாயமென்று கூறலாம்.

வேளாண்மைக் கடன்
(Agricultural Indebtedness)

எல்லா தேசங்களிலும் பயிர்செய்வோர் கடன்படுதல் சகஜமாயிருக்கிறது. ஆனல் சிறு பண்ணைகளாகப் பயிர்செய்யும் குடியானவர்கள் தமக்கு ஏற்படும் கடனல் அதிகமாக கஷ்டப்படுகின்றனர். அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய தேசங்களில் விவசாயிகளுக்கு ஏற்படும் கடனுக்கு முக்கிய காரணம் விவசாயப் பொருள்களின் விலைமட்டம் திடீரென்று குறைந்துபோவதினு

லேயும், அல்லது பருவக்காலங்களின் தடுமாற்றத்தினாலேயுமாம், தம் ஜீவனத்திற்கு வேண்டிய முறையில் விவசாயத்தை நடத்துவோர் நிலத்தில் போதுமான வருமானமில்லாததால் எளிதில் கடன்படுகிறார்கள். தவிரவும் அநேக விவசாயிகள் பயனற்ற விஷயங்களில் செலவு செய்வதற்காக கடன் வாங்குகின்றனர். ஐக்கிய மாகாண பாங்கு விசாரணைச் சபையாரின் அறிக்கைப்படி 100-க்கு 20 ரூபாய்கள் பயனற்ற விஷயங்களுக்கு விவசாயிகள் கடன் வாங்கியிருப்பதாக தெரிவித்திருக்கின்றனர். வங்காளத்திலும், மதராஸ் மாகாணத்திலும் விவசாயக்கடன் இத்தன்மையதேயாம். சென்னை மாகாணத்தில் அநேக ஜில்லாக்களில் 60% பயனற்ற விஷயங்களுக்கு வாங்கிய கடனேயாம். இந்தியாவில் விவசாயிகள் குடும்ப சம்ரக்ஷணைக்காகவும், பலவித டம்பச் செலவுகளுக்காகவும் கடன்வாங்குகின்றனர். கடன் அதிகரிப்பதற்கு ஒரு முக்கிய காரணம் அதிக வட்டிக்குக் கடன் வாங்குவதேயாம். வட்டி வீதமானது கடன் வாங்குவோர் நிலைமையைப் பொருத்தும், கடன் திரும்பக் கொடுக்கும் காலத்தைப் பொருந்தும், கடனுக்காகக் கொடுக்கும் ஈடையும் பொருத்திருக்கிறது. பொதுவாக நிலத்தில் குடிவாரக்காரராயிருப்பவர்கள் வாங்கும் கடனுக்கு வட்டி அதிகமாயும், நில ஸ்வானாயிருப்பவர் கடனுக்கு வட்டி குறைவாயுமிருக்கிறது. சென்னை மாகாணத்தில் 9% லிருந்து 12% வரை சாதாரண நடப்புவட்டியாயிருக்கிறது. கிராமங்களிலுள்ள உண்டியல் கடைக்காரர் 18% லிருந்து 24% வரை வட்டி வசூலிக்கின்றனர். நிலஸ்வான் நிலத்தை அடமானமாக வைத்து வாங்கும் கடனுக்கு வட்டி 9% விருந்து 12% வரை வேறுபடுகிறது.

இவ்விதமாக கடன் வாங்குவதால் பயிர்செய்தல் பலனற்றதாயிருக்கிறது. கடன் வாங்கிப் பயிர்செய்வோர் நிலத்தை இழக்கின்றனர். ஒற்றிவைக்கும் நிலங்களெல்லாம் கடைசியில் விற்கப்படுகின்றன. முப்பது வருஷங்களுக்கு ஒரு தடவை அநேக நிலங்கள் கைமாறுகின்றன. அவ்விதமாக மாறுவதில் விவசாயத்தில் ஊக்கமில்லாதவர்களிடம் நிலம் சேருகிறது. பழையகாலத்தில் கிராமங்களில் ஐக்கிய பத்தியம் அதிகமாயிருந்ததால் கிராம விவசாயிகளின் கடன் கூடுதலடையாமலிருப்பதற்கும், நிலம் பரா

தீனமடையாமலிருப்பதற்கும் அது ஒரு பெரிய ஆதரவாயிருந்தது. விவசாயிகளின் கடன் அதிகரித்துவந்ததற்குள்ள காரணங்களில் சிலவற்றைக் கூறலாம். (1) 1884-ம் வருஷம் முதல் விலைவாசி ஏற்றமடைந்ததால் நிலஸ்வான்கள் கடன் வாங்குவதற்கு ஊக்கத்தைக் கொடுத்தது. (2) கவர்ன்மெண்ட் சட்டங்களாகிய இந்திய காண்டிராக்ட் ஆக்ட் (Indian Contract Act), கிரிமினல் பிரோஸிஜர் கோடு (Criminal Procedure Code) முதலியன கடன் கொடுத்தவருக்கு அனுகூலமாயிருந்தன. பத்திரங்கள் பதிவுசெய்யும் ஆக்ட் (Registration of Documents Act, 1864), சொத்து கைமாற்றல் ஆக்ட் (Transfer of Property Act, 1882) முதலியன நிலத்தை எளிதில் ஒற்றிவைக்க அனுகூலமாயிருந்தன.

சென்ற 40 வருஷங்களாக விவசாயிகளின் கடன் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது. நில அடைமானம் மூலமாக வாங்கிய கடனின் மதிப்பு சென்னை மாகாணம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் கீழ்க்கண்ட புள்ளி விவரங்களால் விளக்கலாம்.

1891-92	6·67	கோடி ரூபாய்கள்
1900	7·75	,, ,,
1914	14·78	,, ,,
1919-1920	20	(சராசரி)

பாங்கு விசாரணைச் சபையாரின் மதிப்புப்படி ஆங்கில இந்தியாவின் விவசாயக்கடன் 881 கோடி ரூபாய்கள். திருவாங்கூரில் விவசாயக்கடன் 25 கோடி ரூபாய்கள். விவசாயிகள் எதற்காகக் கடன் வாங்குகிறார்களென்பதன் புள்ளி விவரம் சென்னை மாகாணத்திற்கு ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது.

கடன் வாங்கும் நோக்கம்	மொத்தக் கடனில் நூற்றுக்கு எவ்வளவு என்பது சதவீதம்
பழங் கடன் கொடுக்க	25·1
கலியாணம் முதலியன	10·5
நிலவரி கொடுக்க	3·3
பல முடைக்காக	6·1

விவசாயச் செலவுக்காக	10·0
நில சீர்திருத்தம்பண்ண	4·4
தம் பிள்ளைகளின் படிப்புக்காக	1·4
வியாபாரத்துக்காக	12·9
நிலம் வாங்க	13·8
வீடுகட்ட	5·6
மற்றச் செலவுக்காக	6·9
மொத்தம்	100

ஷை செலவுகளை பயனுள்ள செலவு, பயனில்லாத செலவு என இருவகையாகப் பிரிக்கலாம்.

பயனுள்ள செலவுக்காக	37·1%
பயனில்லாத செலவுக்காக	41·7%
பிள்ளைகளின் படிப்புக்காக	1·4%
வியாபாரத்துக்காக	12·9%
பலவகைச் செலவுக்காக	6·9%
	100

உழவின் உயர்வு

உணவுப் பொருளை மிகுதிப்படுத்தவேண்டுமாயின் உழவுத் தொழிலை உயர்வடையச் செய்யவேண்டும். உலகில் உள்ள தொழில்கள் எவற்றினும் சிறந்தது உழவுத் தொழிலே. அத்தொழில் புரிபவன் பிறர்க்கு அடிமையானவனன்று. பிறருடைய உதவியை எதிர்பார்க்க வேண்டியதில்லை. உழவுத் தொழில் நடத்தும் குடியானவனுடைய கையையே உலகத்தார் அனைவரும் எதிர்பார்க்க வேண்டும்.

இத்தகைய உயர்வான உழவுத்தொழில் முதல் முதல் எவ்வாறு உண்டானதென்பதைப் பற்றி சிறிது கவனிப்போம். இத்தொழில் இன்று அல்லது நேற்று ஏற்பட்ட தொழிலன்று வரலாற்றுக் காலத்திற்கு எட்டாத மிகப் பழங்காலத்திலேயே எழுந்ததாகும். பண்டைக்காலத்தில் மக்கட்டொகுதியின் எண்ணிக்கை

குறைந்திருந்த நாளில் இயற்கையாகக் காடுகளிற்றோன்றிய காய், கனி, கிழங்கு வகைகளை உணவாக உட்கொண்டு உயிர்வாழ்ந்தனர். வரவர மக்கட்கூட்டமும் அவர் தம் அறிவும் நாகரீகமும் பெருக்கமடைந்தன. மக்களின் எண்ணிக்கை மிகுதிப்படவே இயற்கையாக உண்டான உணவுப்பொருள்கள் போதவில்லை. ஆகையால் நிலத்தைப் பண்படுத்திப் பயிர்செய்யத் தொடங்கினர்.

முதலிற் பயிர்செய்யத் தொடங்கின காலத்தில் வெறும் நிலத்தில் விதைகளைத் தெளித்துத் தண்ணீர் பாய்ச்சி, அதனாற் கிடைக்கும் குறைந்த பயனைப் பெற்றுவந்தனர். பின்னர் நிலத்தைக் கிளறியபின் விதைகளை விதைத்ததால், பயிர்கள் செழிப்பாக வளர்ந்து மிகுதியான பலனைத் தருமெனக் கண்டறிந்தனர். அதனாற் கலப்பைகளைக்கொண்டு நிலத்தைக் கைகளினாலேயே உழத் தொடங்கினார்கள். அதன் பிறகு கலப்பைகளில் மாடுகளைப் பிணைத்து ஓட்டுவதன் மூலம் நிலத்தை நன்றாக அழுந்த உழப் பயின்றனர்.

எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக உழுது சூரிய வெப்பத்தினாலும், காற்றினாலும் புழுதியை நன்றாய் உலர வைக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு மண் வளம்பெறும். இவ்வாறு செய்தால் மிகுதியாக எருவிடவேண்டாம். இவ்வுண்மையை மேல் நாட்டினர் நன்குணர்ந்து நிலத்தை ஆழ உழுதற்கான இரும்பு கலப்பைகளையும் மற்றும் பல வகையான கருவிகளையும் கண்டுபிடித்து மாடு, குதிரை முதலியவைகளைக் கொண்டும், இயந்திரங்களைக் கொண்டும் நன்றாக உழுகின்றனர். உழவுத் தொழில் முன்னேற்றமடைவதற்காக புதிய புதிய கருவிகளையும், முறைகளையும், எருவகைகளையும் கண்டுபிடித்துக்கொண்டே வருகின்றனர்.

உழைப்பு உறுதி பயக்கும். நிலத்தை எவ்வளவுக்கெவ்வளவு பண்படுத்துகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு பயனை அடையலாம். ஜப்பான், அமெரிக்கா, ஜெர்மனி முதலிய தேசங்களில் உழவுத் தொழிலால் நம் தேசத்தைவிட அதிக பலனைப் பெறுகின்றனர். அதற்குக் காரணம் அவர்களுடைய உழைப்பும் முயற்சியுமேயாகும்.

எவ்வகைத்தொழிலிலும் கேடுகள் உண்டாகக்கூடும் என்றும், உழவுத் தொழிலிற் கேடு உண்டாகாது என்றும் புகழ்ந்து கூறுத

லும் உண்டு. ஆயினும் இக்காலத்தில் இந்தியாவில் பயிர்த்தொழில் வளர்ச்சியடையாமலிருப்பதற்குக் காரணங்கள் பலவுள :—

(1) பயிர்த்தொழில் புரிவோர் விசேஷ கல்வி யறிவில்லாதவர்களாயிருக்கிறார்கள். கல்வி பயின்ற மக்கள் பயிர்த்தொழிலை இழிந்ததெனக்கருதி விட்டுவிட்டு வேறு உத்யோகங்களை நோக்கிச் செல்லுகின்றனர். பணக்காரர்களும் நிலங்களைக் கண்காணிப்பதில்லை. வேலைக்காரர்களிடம் நிலத்தை ஒப்படைத்துவிட்டு கிடைக்கும் வருவாயைக்கொண்டும், மேலும் செலவிற்கும் போதாவிடிற் கடன் வாங்கிக்கொண்டும் காலம் கழிக்கின்றனர். ஆதலால் படிப்பற்ற ஏழைக் குடியானவர்களாலேயே பயிர்த்தொழில் நிகழ்ந்துவருகின்றது.

மற்றைய நாடுகளிற் பயிர்த்தொழில் செழித்தோங்குவதற்குக் காரணம் கற்றவர்கள் அத்தொழில்களிற் கருத்தூன்றி வளர்ச்சியடையச் செய்வதேயாகும். மற்றைய நாடுகளிற் பொதுவாக எல்லா வேலைகளும் கற்றவர்களார் நடத்தப்படுகின்றன. ஆதலால் ஒரு காலத்தில் நம்மைவிடத் தாழ்ந்த நிலையில் வாழ்ந்த வேறு நாட்டினர் இப்பொழுது நம்மைவிட மிக்க உயரிய நிலையை அடைந்திருக்கின்றனர்.

உழவுத்தொழில் புரிபவருக்கு சாஸ்திர ஞானம் அவசியமன்று என நம்மவர் கருதுகின்றனர். அது சரியன்று. உழவர் ஒவ்வொரு பொருள்களின் இயல்பினையும், அவற்றின் வேறுபாடுகளையும், பலவகை நிலங்களின் இயல்புகளையும் நுட்பமாக அறிந்திருக்கவேண்டும். பூதநூல், வேதிநூல், பயிர்நூல், தரைநூல், நுண்ணிய உயிர்நூல் முதலிய பலவகையான கலைகளின் உதவி உழவுத்தொழிலுக்கு மிகவும் இன்றியமையாததாகும். மேற்கூறிய கலைகளை கற்காதவரையிலும் உழவுத்தொழிலை உயர்வடையச் செய்யமுடியாது. கல்வியறிவுடன் உழவுத்தொழிலை நடத்தும் மேல்நாட்டினர் நிலங்களின் பாகுபாடுகளைப் பகுத்துணர்ந்து இன்னின்ன பயிர்கள் நன்றாக வளருமென்பதைக் கண்டறிந்து அதற்கு ஏற்றாற்போலப் பயிர்செய்து அதிக விளைவுப்பொருள்

களைப் பெறுகின்றனர். பயிர்களுக்கு உண்டாகும் நோய்களை அறிந்து அவற்றை வராமல் தடுத்தற்கும் வந்த நோய்களை போக்குதற்கும், ஆடுமாடுகளுக்கு வரும் பிணிகளைத் தீர்த்தற்கும் பல வகையான சாஸ்திர ஆராய்ச்சிசெய்துவரப்படுகிறது. குடிகளுக்கு விவசாய சாஸ்திர ஞானம் அவசியமாகுமென அறிந்து துரைத்தனத்தார் விவசாய கலாசாலைகள் ஏற்படுத்தியிருக்கின்றனர். தென் இந்தியாவில் கோயம்புத்தூர் விவசாய கலாசாலையில் பயிர்த்தொழில் விஷயமாக படிப்பு கற்பித்துவரப்படுகிறது.

தவிரவும் வேறு சில இடங்களில் பழைய முறைப்படி சில வயல்களிலும், புதிய முறைப்படி சில வயல்களிலும் பயிரிட்டு அம்முறைகளின் ஏற்றத் தாழ்வுகளை துரைத்தனத்தார் காட்டி வருகின்றனர். விவசாயச் சீர்திருத்தத்தைக் குறித்து ஆலோசனை செய்யுமாறு விவசாயச் சபை (Royal Commission on Agriculture) ஒன்று ஏற்படுத்தி அச்சபையார் கூறியவாறே உழவுத் தொழில் ஆராய்ச்சிச் சங்கம் (Agricultural Research Council) ஒன்று அமைத்திருக்கின்றனர்.

ஆடுமாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் வேண்டிய அளவு தற்காலத்தில் இல்லை. முற்காலத்தில் ஒவ்வோர் கிராம பக்கத்தும் பெருங் காடுகள் பொது நிலங்களாக இருந்தன. அந்நிலங்கள் யாரும் பயிரிடுவதில்லை. அதனால் ஆடுமாடுகள் முதலானவை அவற்றில் நன்றாக மேய்ந்து வளரும். மிகுந்த வலிமையுடைய காளைகளை ஏரிற் பூட்டின் நிலத்தை அதிக ஆழமாக உழமுடியும். ஆழ உழுதால்தான் பயிர் செழிப்பாக வளர்ந்து நல்ல பலனைத் தரும். இக்காலத்தில் மேய்ச்சற்கு உரிய நிலங்களெல்லாம் தனித்தனியே ஒவ்வொருவருக்கு உரிமையாய் விடுவதனால் பொதுவான மேய்ச்சல் நிலம் இல்லை என்னலாம். அரசாங்கத்தார் இவ்விஷயத்தை கவனிப்பது இன்றியமையாததாகும். நமது முன்னோர்கள் காடுகளை மிகுதியாக வளர்த்திருந்தார்கள். ஆனால் இக்காலத்தில் நம்மவர்கள் காடுகளை அழிப்பதில் தலையிட்டிருக்கின்றார்களே யன்றி வளர்ப்பதில் தலையிடவில்லை. நமது நாட்டிற் காடுகள் குறைந்து வருவதனாலேயே வரவர மழையும் குறைவாகப் பெய்கின்றது.

இருக்கும்போது அதிகமாக வேண்டும். ஆனால் பூவிட்டவுடன் கொட்டைபிடித்து முற்றுவதற்கு அதிக உஷ்ணம் வேண்டும். இடையில் மழை சொற்பமாகவே இருக்கவேண்டும். செடிகளில் காய்கள் வெடித்தபின் பருத்தியைச் சேகரித்து, அதனின்றும் கொட்டைகளைப் பிரித்தெடுப்பார்கள். பிறகு அதிக இடம் கொள்ளாமல் அதைப் பேல்களாகச் செய்து ஏற்றுமதி செய்கிறார்கள். கொட்டைகள் மாடுகளுக்கு உணவாகும். எண்ணெய் வித்துக்களாகவும் உபயோகப்படுகின்றன.

பருத்தியில் இரண்டு வகைகள் உண்டு. அவை குட்டை நூற்பருத்தி, நீள நூற்பருத்தி. பஞ்சின் இழைகள் பருமனாயும், குட்டையாயும் இருக்கும் பருத்திக்குக் குட்டை நூற்பருத்தி (short staple cotton) என்று பெயர். இது இந்தியாவில் தொன்றுதொட்டுப் பயிராவதால் இது இந்தியப் பருத்தி அல்லது சுதேசிப் பருத்தி என்று கூறப்படும். இது கெட்டியான பலவித ஆடைகளும், வஸ்திரங்களும் நெய்வதற்கு உபயோகப்படுகிறது. பஞ்சின் இழைகள் மெல்லியவையாயும், நீளமாயும் இருக்கும் பருத்திக்கு நீள நூற்பருத்தி (long staple cotton) என்று பெயர். இது அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்குச் சமீபகாலத்தில் கொண்டுவந்து பயிரிடப்பட்டது. ஆதலால் இதற்கு அமெரிக்கன் பருத்தி என்னும் வேறொரு பெயரும் உண்டு. இப்பருத்திக்கு நெற்பயிருக்கு வேண்டுவது போலச் சமவெளியான பூமியும், வண்டல் மண்ணும் அதிக நீர்ப்பாசனமும் வேண்டும். ஆகையால் இவ்வகைப் பருத்தி சிந்து, பஞ்சாப் மாகாணங்களில் அதிகமாய் விளைகின்றது. இது நயமான ஆடைகள் நெய்வதற்கு உபயோகப்படுகிறது. சிந்து, பஞ்சாப் மாகாணங்களில் பயிராகும் பருத்தி கராச்சித் துறைமுகத்தின்வழியாய் இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகிறது; பஞ்சாப் சமவெளியிலும், தக்ஷிண பீடபூமியின் வடக்கில் உள்ள பெரிய நிலப்பாக முழுவதிலும் (Deccan plateau) பம்பாய் மாகாணத்தில் பெரும் பான்மையான பாகமும், மத்திய மாகாணத்தின் தென் மேற்குப் பாகங்களும், நைஸாம் இராஜ்யத்தின் வடமேற்குப் பாகமும், சென்னை மாகாணத்தில் சில இடங்களிலும் பருத்தி விளைகின்றது.

பருத்தியைத் தவிர வஸ்திரங்களை நெய்ய உபயோகப்படும் பொருள்கள் இந்தியாவில் பல உள. அவற்றில் லினன் (linen) ஒன்று. ஆனால் இந்தியாவில் அதை ஆளிவிதை (linseed) சேகரிக்கும் பொருட்டு விளைவிக்கிறார்கள். இது உஷ்ணப் பிரதேசத்திலும் சம சீதோஷ்ணப் பிரதேசத்திலும் ஏராளமாக விளைகின்றன. கற்றாழையும் (hemp) பலவிடங்களில் பயிர் செய்கிறார்கள். இது மழை சொற்பமாயுள்ள இடங்களிலும் வளரும். இதன் நாரிலிருந்தும் உடைகள் செய்கிறார்கள்.

இந்தியாவின் மூலப் பொருள்களின் விளைச்சல் மற்ற தேசங்களுடன் ஒப்பிடுமிடத்து மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருப்பதை பின் குறிப்புக்களால் விளக்கலாம்.

பயிர்	இந்தியா ஒரு ஏக்கருக்கு	முன்னேற்றமடைந்த தேசங்களில் ஒரு ஏக்கருக்கு
கோதுமை (Wheat)	10½ புசல் (bushels)	கனடா 17 டென்மார்க் 42
வாற்கோதுமை (Barley)	17 ,,	கனடா 25
சோளம் (Maize)	13½ ,,	ஐக்கிய நாடுகள் 24
அரிசி	1,428 பவுண்டு	இத்தாலி 4,760 ஜப்பான் 3,470
பருத்தி (Cotton)	52 பவுண்டு	ஐக்கிய நாடுகள் 107 ஈகிப்த் 248
ஆளிவிதை (Linseed)	385 பவுண்டு	ஈகிப்த் 1,119
சணல் (Jute)	740 பவுண்டு	ஜப்பான் 865
கரும்பு (Sugar-cane)	10 டன்	ஜாவா 40

XVIII

விவசாயச் சரக்குகளின் விற்பனை

(AGRICULTURAL MARKETING)

இந்தியாவில் விவசாய சம்பந்தமாய் நியமிக்கப்பட்ட ராஜாங்க கமிஷன் சில சிபார்சுகள் செய்தனர். ஷை சிபார்சுகள் பாங் விசாரணைக் கமிட்டியாரால் பூர்ணமாக அங்கீகரிக்கப்பட்டன. ஆகையால் 1934-ம் வருஷத்தில் சென்னையில் மாகாணப் பொருளாதார சங்கம் விவசாய சரக்குகளின் (பயிர்விளை பொருள்களும், கால்நடை மூலியமாகக் கிடைக்கக்கூடிய சாமான்களையும்) விற்பனையை அபிவிருத்தி செய்யவேண்டிய சாதனங்களைத் தீவிரமாய்க் கையாளவேணுமென்ற யோசனையை வற்புறுத்தினார்கள்.

1934-ம் ஹு ஆகஸ்ட் மாதம் சென்னை அரசாங்கத்தில் ஒரு மாகாண மார்கெட்டிங் (Marketing) அதிகாரியை நியமித்தார்கள். இந்திய சர்க்கார் டில்லியிலிருக்கும் இம்பீரியல் விவசாய ஆராய்ச்சி சங்கத்திற்கு (Imperial Council of Agricultural Research) மார்க்கெட்டிங் பிரிவு நியமிப்பதற்கு வேண்டிய பணம் கொடுத்தார்கள். மாகாண மார்க்கெட்டிங் அதிகாரிகளுடைய வேலைகளையும், சுதேச ஸமஸ்தானங்களின் மார்க்கெட்டிங் அதிகாரிகளுடைய வேலைகளையும் இசைத்துப் பார்ப்பதற்காக ஒரு மார்க்கெட்டிங் நிபுணரும், அவருக்கு உதவியாக மத்திய மார்க்கெட்டிங் உத்தியோகஸ்தர்களும் இம்பீரியல் சங்கத்தால் நியமிக்கப்பட்டார்கள். தவிர ஒவ்வொரு மாகாணத்திலும் இரண்டு அல்லது மூன்று உதவி மார்க்கெட்டிங் அதிகாரிகளும் வியாபார விஷயத்தைக் குறித்த விசாரணைகளைக் கூடிய சீக்கிரத்தில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டார்கள். சென்னை ராஜதானியில் 1935-ம் வருஷம் பிப்ரவரி மாதம் மூன்று உதவி மார்க்கெட்டிங் அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். விற்பனை ஆராய்ச்சி விசாரணைகளில் ஏற்படும் புதுத்துறைகளில் விவசாய பொருள்களின் விற்பனையை சீர்திருத்தி ஒழுங்குப்படுத்த உதவி செய்வதற்காக 1937-ம் ஹு

ஜனவரி மாதம் மற்றொரு உதவி மார்க்கெட்டிங் அதிகாரியும் நியமிக்கப்பட்டார்.

விற்பனைப் பிரச்னைகளைப் பரிசோதித்து அபிவிருத்தி செய்வதற்கும், சரக்குகளை, நிதானப்படுத்தித் தரம் தரமாகப் பிரித்து வியாபாரம் செய்யும் முறைகளைப்பற்றியும், மாகாண சர்க்கார்களுக்கும், மாகாண விவசாய இலாகாக்களுக்கும் யோசனைகளை இந்திய சர்க்கார் மார்க்கெட்டிங் நிபுணர் எடுத்துக்காட்டவேண்டும். விற்பனை விஷயமான பிரச்னைகளில் செய்யப்படவேண்டிய வேலைகளுள் முக்கியமானவை வியாபார வழியில் தற்பொழுதிருந்துவரும் பழக்க வழக்கங்களின் விசாரணையும் விற்பனைக்குத் தேவையான சௌகரியங்கள் ஏற்படுத்திக் கொடுத்தலும். இதில் புதிய விற்பனை ஸ்தலங்கள் ஏற்படுத்துவதும் சரக்குகளைச் சேகரம் செய்துவைக்கக் கிடங்கு வசதிகளைச் சீர்திருத்திவிடுவதும், கூட்டுறவு விற்பனையைப் பிரபலப்படுத்துவதும், ஆகிய இது போன்ற வசதிகளை உண்டுபண்ணுவது அடங்கும். மத்திய மார்க்கெட்டிங் உத்தியோகஸ்தர்களும் (Central Marketing Staff) ஸமஸ்தான மார்க்கெட்டிங் உத்தியோகஸ்தர்களும், மாகாணத் தலைமை மார்க்கெட்டிங் உத்தியோகஸ்தர்களும் கலந்து ஆலோசித்து ஒவ்வொரு சரக்குகளின் விற்பனை விஷயமாக அபிவிருத்தி திட்டம் அமைக்கவேண்டும். அந்தப்படி தயாரித்த திட்டம் சரியாய்க் கையாளுவதில் மாகாண மார்க்கெட்டிங் உத்தியோகஸ்தர்களும் ஒத்துழைக்கவேண்டும்.

ஒவ்வொரு சரக்கும் விளைவு செய்பவரிடமிருந்து கடைசியாக உபயோகப்படுத்துபவரிடம் போய்ச் சேரும்வரை உள்ள படிப்படியான, நிலைமையை முழுவதுமாய்த் தெளிவாயும் விவரமாயும் எடுத்துக்காட்டுவது மார்க்கெட் விசாரணைகளின் நோக்கம். ஒவ்வொரு சரக்கின் வியாபாரத்தின் தன்மையை மாகாணங்களிலும் சுதேச ராஜ்யங்களிலும் விசாரணைசெய்து இந்தியா முழுமைக்கும் பொருந்தவைத்து, அச்சரக்கின் உலக வியாபார நிலைமையுடன் பார்வையிடவேண்டும். வியாபார வசதிகளின் ஆராய்ச்சிகள் விசாலமான நோக்கமுடையதாயும் பூர்த்தியாயும், பின்னல் அபிவிருத்தி செய்வதற்கு சாதகமுள்ளதாயும் இருக்கவேண்டும்.

முக்கியமான எல்லா விவசாய சரக்குகளும், கால்நடை மூலியமாய் கிடைக்கக்கூடிய பொருள்களும் இந்த திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் மேற்சொன்ன நோக்கத்திற்கிசைவாய் இந்தியா பூராவுக்குமே முக்கியமாக இருக்கப்பட்ட அரிசி, கோதுமை, ஆளிவிதை, பார்லி அரிசி, கடலை, மக்காச்சோளம், நிலக்கடலை, புகையிலை, திராட்சை, வாழைப்பழம், மாம்பழம், பேர்ஸ், ஆப்பிள் பழங்கள், அன்னுசுப் பழங்கள், ஆரஞ்சி, எலுமிச்சை ஜாதிப் பழங்கள், உருளைக்கிழங்கு, பால், பாலிலிருந்து கிடைக்கக்கூடிய வஸ்துக்கள், கால்நடை, தோல், முட்டைகள், தேங்காய், கடுகு வகைகள், ஆடு வகையருக்கள், கம்பளியும் ரோமமும், நெய், வெண்ணெய், காப்பிக்கொட்டை, சணல், சர்க்கரை, மீன், முந்தரிக்கொட்டை, அரக்கு முதலிய பொருள்களின் விற்பனை ஆராய்ச்சி விசாரணைகள் செய்யப்பட்டுவருகிறது. தவிரவும் சென்னை ராஜதானியிலுள்ள கூட்டுறவு வியாபாரவசதியின் ரிப்போர்ட்டுகளையும் சந்தை, திருவிழா முதலியவற்றின் சங்கியைகளையும் கணக்கிட்டு இதுவரை 33 விற்பனை ஆராய்ச்சி விசாரணைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

தற்காலம் மார்க்கெட்டிங் உத்தியோகஸ்தர்களுடைய வேலைகள் :—விளைபொருள்கள் உண்டாகும் முக்கியமான கிராமங்களுக்கும் அப்பொருள் செலழிக்கப்படும் முக்கியமான கிராமங்களுக்கும் வியாபார ஸ்தலங்களுக்கும் போய் விளைவு செய்பவர்களையும், வியாபாரிகளையும், தரகுகாரர்களையும், தொழிலாளர்களையும், போக்கு வரவு சாதன ஏஜெண்டுகளையும், சந்தை பிரதிநிதிகளையும், இன்னும் இது சம்பந்தமான மற்றவர்களையும் நேரில் சந்தித்து அவர்களுடன் கலந்து ஒவ்வொரு சரக்கின் வியாபார முறைகளை யறிந்து, சரக்கை பரிசீலனைசெய்து அவற்றின் சகல குணுகுணங்களையும் கண்டுபிடிப்பதும், மாதிரிகைகள் சேகரிப்பதும், சரக்கை பல விதங்களில் தரந்தரமாகப் பிரித்துக் கட்டுவதும், சரக்கு போடுமிடங்களைக் கண்டுபிடிப்பதும், சப்ளை விளைவு செய்பவர்களிடமிருந்தும், வியாபாரிகளிடமிருந்தும், வார மாத, வருஷ விலை ஜாப்தாக்களைச் சேகரிப்பதும், விலை வித்தியாசங்களையும், அவற்றின் காரணங்களையும்பரிசீலனை செய்வதுமேயாகும்.

சென்ற மூன்று வருஷங்களில் கோதுமை, ஆளிவிதை, முட்டைகள், நிலக்கடலை, கால்நடை, அரிசி, பால், புகையிலை, வாழைப் பழங்கள், தோல், திராட்சை, அன்னாசிப் பழங்கள், காப்பிக் கொட்டை பேர்ஸ்களும் (pears), ஆப்பில்களும், இதர பழவகைகளும், உருளைக்கிழங்கு, கம்பளி ரோமம், நெய்யும், வெண்ணெயும், எலுமிச்சை ஜாதிப் பழங்கள், சந்தைகள் திருவிழாச் சந்தைகள், கூட்டுறவு விற்பனை ஆகிய 21 விற்பனை ஆராய்ச்சி விசாரணைகள் செய்து அவைகளைப்பற்றிய ரிப்போர்ட்டுகள் இந்திய மார்க்கெட்டிங் நிபுணருக்கும் மதராஸ் சர்க்காருக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன. மாகாண ரிப்போர்ட்டுகளையும் சுதேச ஸமஸ்தானங்களின் ரிப்போர்ட்டுகளையும், டில்லி மத்திய மார்க்கெட்டிங் உத்தியோகஸ்தர்கள் இந்தியா பூராவுக்கும் பொருந்தும்படி சேர்த்து விற்பார்கள். இந்த வகையில் முதல் பிரசுரமாக அகில இந்திய கோதுமை வியாபார விஷயங்களடங்கிய ரிப்போர்ட்டு பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்தியா முழுவதும் சம்பந்தப்பட்ட ரிப்போர்ட்டுகள் வெளியிட்டபிறகுதான் உண்மையான வியாபார நிலைமை நமக்குத் தெரியவரும்.

விளைவு செய்பவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கம் எற்படுத்துவதும், சரக்கை தரம் வாரியாகப் பிரித்து ஒவ்வொரு தரத்துக்கும் பொதுவான குணத்திட்டங்களேற்படுத்துவதும், சரக்குகள் கெடாமல் பத்திரப்படுத்துவதற்கு வேண்டிய சாதனங்களை அபிவிருத்தி செய்வதும், விளைவு செய்பவர்களுக்கு மேற்கொண்டு சுலபமான பண சௌகரியங்கள் செய்வதும், நிறையையும் அளவையும் ஒழுங்குபடுத்துவதும், சரியான தருணத்தில் சரக்குகளின் விலைவாசிகளையும், விற்பனை விஷயங்களையும், விளைவு செய்பவர்களுக்கு தெரியப்படுத்துவதுமான பொதுப்படையான விஷயங்கள் மூலமாக விற்பனையை சீர்திருத்தலாமென்று இதுவரை செய்திருக்கும் விற்பனைப் பரிசோதனைகளிலிருந்து தெரியவருகிறது.

விளைபொருள் விற்பனை அபிவிருத்தி விஷயமாய்ச் செய்து வரும் வேலை பலவற்றுள்ளும் முக்கியமானது விளைபொருள்களுக்குப் பொதுவான குண வகுப்புகள் நிர்ணயிப்பதும் விளைவிப்போர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் எற்படுத்துவதும் பிரத்தியேக

மாய்க் குறிப்பிடவேண்டியவை. இதுவரை புகையிலைக்கும் முட்டைகளுக்கும் குணவகுப்புகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. நிலக்கடலையில் மூன்று பிரிவுகள் நிரந்தரமாக வகுக்கப்பட்டிருக்கின்றன. மாம்பழம், ஆரஞ்சுப்பழம், நெய், காப்பிக்கொட்டை ஆகியவற்றிற்கு குணவகுப்புகள் பிரித்தல் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

மார்க்கெட்டிங் உத்தியோகஸ்தர்கள் மார்க்கெட்டுகளை ஆராய்ச்சி செய்வதுடன் பலவிதமான சரக்குகளின் விற்பனை விஷயங்களை விவசாயிகளுக்கும் ரெயில்வே கம்பெனியார்களுக்கும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும், பொது சங்கங்களுக்கும், வியாபாரிகளுக்கும், தெரியப்படுத்தி வருகிறார்கள். அவைகளில் முக்கியமானது என்னவென்றால் மாகாணத்திலும், மாகாணத்துக்கு வெளியிலுமுள்ள வியாபாரிகளுடைய விலாசம் சரக்குகளின் போக்குவரவுகள், நடக்கும் விலைவாசிகள் முதலியன தெரிவித்தல். மார்க்கெட்டிங் உத்தியோகஸ்தர்களுடைய வேலையைச் சரக்குகளை விற்றுக்கொடுக்கும் ஏஜெண்டுகளின் வேலைபோல பாவித்துக் கொள்ளக்கூடாது.

1934-ம் வருஷத்திலிருந்து ஒரு வியாபார மாகாண போர்டு சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. விவசாய டைரக்டர் இந்த போர்டின் சேர்மன். மாகாண மார்க்கெட்டிங் ஆபிஸர் காரியதரிசி. கூட்டுறவு சங்கங்களுடைய ரிஜிஸ்ட்ரார், கைத்தொழில் இலாகா டைரக்டர், மற்றும் இதர இரண்டு பொதுஜனங்கள் ஆகிய இவர்கள் இந்த போர்டின் மெம்பர்கள். இந்த போர்டு மூன்று மாதத்திற்கொருதரம் கூடி, விற்பனை விஷயமாக யோசனைகள் செய்து, மாகாண சர்க்காருக்கும், ரெயில்வே கம்பெனி முதலியோர்களுக்கும் விவசாய சரக்குகளின் வியாபார அபிவிருத்தி விஷயமான சிபார்சுகள் செய்கிறது. இந்த போர்டால் நிறைவேற்றப்பட்ட சில விஷயங்கள் இங்கு குறிப்பிடத்தக்கது. அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் அரிசியை பூராவும் தடுத்துவிடவேண்டும் அல்லது அபாரமான இறக்குமதி வரி போடவேண்டுமென்றும், பர்மாவிலிருந்து வரும் அரிசிக்கு குறித்த அளவுக்கு மேல் போகாமல் வரையறுக்க வேண்டுமென்றும், அரசாங்கத்தா

ரிடம் வற்புறுத்தியது. இந்த போர்டின் சிபார்சுகளின் பேரில் தென் இந்தியா ரெயில்வே கம்பெனியார் தங்களுடைய ரெயில்வே ஸ்டேஷன்களுக்கு பக்கத்திலுள்ள காலி இடங்களை குறைந்த குத்தகைக்கு கொடுத்து ரெயில்வே மூலியமாக கொண்டுபோகும் சரக்குகளுக்குக் கிடங்குகள் கட்டுவதற்கு சம்மதித்தார்கள். கூட்டுறவு சங்கங்கள் மெம்பர்களுடைய சரக்குகளை ஸ்டாக் செய்வதற்காக கிடங்குகள் கட்டவும், மெம்பர்களுடைய நிலையில் நிற்கும் பயிர்களுக்கு குறைந்த காலக்கடன் கொடுத்து உதவிசெய்ய வேண்டுமென்றும், மற்றும் இது போன்ற உதவிகளை மெம்பர்களுக்கு செய்யவேண்டுமென்றும் இந்த போர்டார் கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்தார்கள். கவர்ன்மெண்டார் இப்பொழுது கிடங்குகள் கட்டுவதற்கு வேண்டிய முழுத்தொகையை நூற்றுக்கு 3½ ரூபாய் வட்டி வீதம் கடன் கொடுக்க தயாராயிருக்கிறார்கள். இந்திய சர்க்கார் அமைத்திருக்கும் கிராம அபிவிருத்தி பண்டிலிருந்து இப்பொழுது மாகாண சர்க்கார் கிடங்குகள் கட்டுவதற்கு செலவாகிற பணத்தில் ¼ பங்கு இலவசமாக கொடுப்பதற்கும் தயாராயிருக்கிறார்கள். ஆனால் பாக்கி ¾ பங்கு சங்கத்தில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். தேவையானால் இந்த ¾ பங்குத்துகையையும், மாகாண பண்டிலிருந்து குறைந்த வட்டிக்குக் கடனாக கொடுப்பார்கள். இந்த போர்டின் சிபார்சின் பேரில் தென்னிந்திய ரெயில்வே கம்பெனியார் ஒரு வேகன் (waggon) வாழையின் குறைந்த விகிதத்தை 240 மணுவிலிருந்து 160 மணுவாக குறைத்தார்கள். வட ஸர்க்கார்வில் வாழை விளையக்கூடிய முக்கியமான இடங்களிலிருந்து வடதேசத்திலுள்ள முக்கிய பட்டணங்களுக்கு ஏற்றுமதியைத் தூண்டுவதற்காக ரெயில்வே சார்ஜ் குறைக்கப்பட்டிருக்கிறது. போர்டாரின் சிபார்சுகளின்பேரில் எம். எஸ். எம். ரெயில்வே கம்பெனியார் கறவை வற்றிய கால்நடைகளை மதராஸிலிருந்து காவிரிப்பேட்டைக்கும், தெனாலிக்கும் இடையிலுள்ள எல்லா ஸ்டேஷன்களுக்கும் மேய்ச்சலுக்காக கொண்டுபோவதற்கு சார்ஜை ஒன்றுக்குப் பாதி குறைத்துவிட்டார்கள். பட்டணத்திற்குவரும் கறவை மாடுகளுக்கு வேகன் பேரில் ஏற்பட்டிருந்த டெர்மனில் சார்ஜ் ஆகிய ரூ. 4ஐ ரத்து செய்துவிட்டார்கள். இதனால் வம்சவிருத்தி செய்வதற்குத் தகுதியாயுள்ள கறவைமாடுகளை வற்றியவுடன் அனாவசியமாய்க் கசாப்புக்கடைகளுக்கு அனுப்புவது குறைவுபடும்.

சென்னை ராஜதானியிலுள்ள பற்பல கடனுக்கும் விற்பனைக்குமாக அமைந்த சங்கங்களின் (Loan and Sale Societies) வேலையையும் ஒருமைப்படுத்தவும் அவைகளில் தங்கிப்போகும் அதிகப்படி சரக்குகளைச் சென்னையிலும் இதர வியாபார ஸ்தலங்களிலும் விற்பனை செய்யவேண்டி சென்னையில் மாகாண விற்பனைச் சங்கம் ஒன்று எற்படுத்தப்பட்டிருக்கிறது. கூட்டுறவு சங்கங்களின் ரிஜிஸ்ட்ராரும் மாகாண மார்க்கெட்டிங் ஆபிஸரும் அதில் டைரக்டர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். புதிதாய் எற்படுத்தப்படும் உற்பத்தி செய்வோர் சங்கங்களின் சரக்குகள் இந்த மாகாண விற்பனைச் சங்க மூலமாய்த்தான் அநேகமாய் விற்பனையாகின்றன. இந்த சங்கம் தற்சமயம் பற்பலவிடங்களிலிருந்து வரக்கூடிய 30 விதமான சரக்குகளில் வியாபாரம் செய்கிறது. இந்த சரக்குகளின் விலைவாசி பிரதிவாரமும் பிரசுரிக்கப்பட்டு வருகிறது.

XIX

இந்தியாவின் நீர்ப்பாய்ச்சல்
(IRRIGATION IN INDIA)

இந்தியாவின் அநேக பாகங்களில் வருஷ சராசரி மழை குறைவாகவேயிருக்கிறது. மொத்த மழை அதிகமாயிருந்த போதிலும் பயிர்களுக்குத்தக்கபடியாவது அல்லது பருவக்காலத்திற்கேற்றபடியாவது பரவியிருக்கவில்லை. எல்லாவிடங்களிலும் பயிருக்கு ஜலம் அதிகமாய் வேண்டும். புன்செய்ப் பயிரைவிட நன்செய்ப் பயிர் சாகுபடியாக நீர்ப்பாய்ச்சல் வேண்டியிருக்கிறது. இவ்விதம் நீர்ப்பாய்ச்சுவதற்கு நீர்ப்பாசனம் என்று பெயர்.

ஆதிகாலமுதல் இந்தியாவில் நீர்ப்பாய்ச்சல் பழக்கத்திலிருந்தது. இந்து ராஜாக்களும், மகம்மதிய அரசர்களும் கட்டிய கால்வாய்களின் சின்னங்கள் இக்காலத்திலும் இந்தியாவில் அநேக இடங்களில் காணலாம். பழைய காலத்தில் இந்து ராஜாக்கள் ஆயிரக்கணக்கான ஏரிகளைக் கட்டினர். தென் இந்தியாவில் ஏரிப் பாசனத்தால் லக்ஷக்கணக்கான ஏக்கர்கள் பயிரிடப்படுகின்றன. சில இடங்களில் ஜலம் குளத்திலிருந்து குளத்திற்குப் போகின்றது. பிரிட்டிஷ் அரசாட்சியின் ஆரம்ப காலத்தில் நீர்ப்பாசனங்கள் சரியாய்க் கவனிக்கப்படவில்லை. தக்ஷிணப் பிரதேசத்தில் அழிந்துபோன பெரிய ஏரிகளின் சின்னங்களை இப்பொழுதும் காணலாம். பழைய பெரிய ஏரிகளை மராமத்துப் பார்க்கவும், கால்வாய்களைக் கட்டவும் கவர்ன்மெண்டாரின் முக்கிய கடமையென்று ஸர் ஆர்தர் காட்டன் என்பவர் ஆதிகாலத்திலேயே வற்புறுத்தினர். ஆனால் சென்ற நூற்றாண்டின் மத்திய காலம் வரை இவ்விஷயமாக அரசாங்கத்தார் அதிகமாய்க் கவனிக்கவில்லை.

நீர்ப்பாசன முறைகள் மூன்று வகையாகப் பிரிக்கலாம்—(1) கால்வாய்ப் பாசனம் (2) ஏரி அல்லது குளப்பாசனம் (3) கிணற்றுப்பாசனம்.

இந்தியாவில் அதிக மழையுள்ள இடங்களில் உற்பத்தியாகும் சில பெரிய நதிகள் மழை குறைவாயும் அல்லது மழையே இல்லாத இடங்கள் வழியாகச்சென்று கடலை யடைகின்றன. இவ்வித நதிகள் வட இந்தியாவில் கங்கை, யமுனை, சிந்து ஆகிய நதிகளும், தக்ஷிணத்தில் மஹாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி முதலியனவாகும். இந்நதிகளில் பெருகும் ஜலத்தை ஆங்காங்கு அவைகளின் குறுக்கே அணைகள் கட்டித் தேக்கி அவ்வணைக்கட்டுகளிலிருந்து பெரிய கால்வாய்கள் வழியாக ஜலம் பாயும்படி செய்து லக்ஷக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பாயும்படி செய்திருக்கின்றனர். சென்னை மாகாணத்தில் அநேக அணைகள் பதினாறாவது நூற்றாண்டில் கிருஷ்ண தேவராயர் என்னும் பெரிய அரசனால் கட்டப்பட்டன. வட இந்தியாவில் வெகு காலத்திற்குமுன் கட்டியவை யமுனைக் கால்வாய்களேயாம். பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் ஆரம்ப அரசாட்சியில் பழைய கால்வாய்களை மராமத்துச் செய்துவந்தனரேயொழிய புதிய நீர்ப்பாசனங்கள் ஒன்றும் ஏற்படுத்தவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மூன்று பழைய கால்வாய்ப் பாசனங்களைச் சீர்திருத்தம் பண்ணினர்—பஞ்சாப்பில் மேற்கு யமுனா கால்வாய் (Western Jumna Canal), கிழக்கு யமுனா கால்வாய் (Eastern Jumna Canal), காவிரி டெல்டா. 1832-33-ம் வருஷத்திலுள்ள பஞ்சத்தின் பிறகு அநேக கால்வாய்ப் பாசனங்கள் ஏற்பட்டன. யமுனா கால்வாய்களைவிட காவிரி டெல்டா மிகவும் பழமையானது. காவிரி டெல்டாவில் 1,500 மைல்கள் பெரிய கால்வாய்களும், பிரிவுகளும், 200 மைல்கள் பல சிறிய கால்வாய்களுமிருக்கின்றன. காவிரி டெல்டாவில் நீர்ப்பாசனம் காட்டன் என்பவர் முயற்சியால் 1846-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.

நீர்ப்பாசனக் கால்வாய்களில் இரண்டு வகையுண்டு. சில இடங்களில் வாய்க்கால்கள் நதியின் அடிப்பாகத்திற்குச் சற்று மேட்டில் இருக்கும். இவைகளுக்கு நதிகளில் வெள்ளக்காலங்களில் மட்டும் ஜலம் கிடைக்கும். ஆகையால் அக்காலங்களில்

மட்டும் அவைகளின் வழியிலுள்ள புலங்களுக்கு ஜலம் பாய்ந்து அவற்றில் சாகுபடி நடக்கும். இவ்விதம் மேட்டிலுள்ள வாய்க்காலுக்குத் தண்ணீர் ஏறும்படிசெய்ய ஆங்காங்குச் சிறு கல்லணைகளுண்டு. இவ்வித வாய்க்கால்களுக்கு வெள்ளக்காலப் பாசனக் கால்வாய்கள் (Inundation Canals) என்று பெயர். இவ்வித வாய்க்கால்ப்பாசனம் சிந்து நதிதீரத்தில் காணலாம். இவ்வித நீர்ப்பாசனம் அநிச்சயமான பாசனமாகக் கருதப்படுகிறது. வேறு சில இடங்களில் நதிகளில் பெரிய அணைக்கட்டுகள் கட்டி அவைகளுக்குப்பின் நீர் நிலைகள் (Reservoirs) ஏற்படுத்தி அங்கு வெகு ஆழமாகத் தண்ணீர் தேங்கும்படி செய்து அத்தண்ணீரைக் கால்வாய்கள் மூலமாகப் பாசனத்திற்கு வேண்டிய அளவில் சிறிது சிறிதாக வருஷம் முழுவதும் பாயும்படி ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இவ்விதப் பாசனக் கால்வாய்களுக்கு எக்காலத்திலும் ஜலம் பாயும் பாசனக் கால்வாய்கள் (Perennial Canals) என்று பெயர்.

இந்தியாவிலுள்ள கால்வாய் நீர்ப்பாசனங்களில் காவிரி டெல்டா மிகவும் பெரியதும், லாபகரமாயுமுள்ளது. சென்னை மாகாணத்தில் ஏழு டெல்டாக்கள் இருக்கின்றன. ஒரிஸ்ஸாவில் மஹாநதி டெல்டா மிகவும் முக்கியமானது. பஞ்சாப் மாகாணத்தில் பாரி டூஆப் கால்வாய் (Bari Doab Canal) 1850-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. இது மூலமாய் 369 மைல் பெரிய கால்வாய் வழியாகவும், 1,200 மைல்கள் சிறிய கால்வாய்கள் வழியாகவும் ஜலம் பாய்கின்றது. 'சீனுப்' கால்வாய் மூலமாய் 400 மைல்கள் பெரிய கால்வாய்கள் வழியாகவும், 1,200 மைல்கள் சிறிய கால்வாய்கள் வழியாயும் ஜலம் பாய்கிறது. ஸர் ஹிண்ட் கால்வாய் 1882-ம் வருஷம் முதல் உபயோகத்தில் வந்தது. 1901-ம் வருஷம் முடிவுபெற்ற ஜீலம் கால்வாய் 1½ மிலியன் ஏக்கர் சாகுபடிக்கு உபயோகப்படுகிறது. ஜீலம் நதியின் அதிக ஜலம் 'சீனுப்' நதியில் சேர்க்கப்பட்டு, அது தவிர மீதி ஜலம் ரெயிர் (Rair) நதியிலும் பாரி டூஆப் வழியாயும் பாய்கிறது. ஷை உபாயம் இந்தியாவிலுள்ள கால்வாய்க் கட்டிடக் கலைகளில் மிகவும் உன்னதமாகக் கருதப்படுகிறது. ஐக்கிய மாகாணங்களில் கங்கை நதிக் கால்வாய்களின் ஜலம் 400 மைல்களுக்குப் பெரிய கால்வாய்கள்

வழியாயும், 2,700 மைல்களுக்குச் சிறிய கால்வாய்கள் வழியாயும் பாய்கிறது.

இந்தியாவிலுள்ள வாய்க்கால் பாசனத்தில் பஞ்சாப் மாகாணத்திலுள்ள கால்வாய்க்கரைப் புதூர் (Canal Colonies) கவனிக்கத்தக்கது. வனாந்திரமாயிருந்த இரண்டு மிலியன் ஏக்கர் பயிரிடுவதற்குரிய செழிப்பான பிரதேசமாகி அநேக ஜனங்கள் அவ்விடங்களில் வசிக்கின்றனர்.

சிந்து (Sind) மாகாணத்தின் கால்வாய்ப் பாசனம் கவனிக்கத்தக்கது. சிந்து மாகாணத்திலுள்ள சிந்துநதிச் சமவெளி மிகவும் செழிப்பான உரமுள்ள மண் நிறைந்தது. ஆனால் இங்கு பெய்யும் மழையளவு 20 அங்குலத்திற்கும் குறைவு. இப்பிரதேசத்தில் சில பாகங்கள் 10 அங்குலத்திற்கும் குறைந்த மழையைப் பெறும் பாலை வனங்களாகவும் உள்ளன. வெகு காலமாகச் சிந்து நதியிலும், பஞ்ச நதியிலும் வெள்ளக்காலத்தில் மட்டும் பாய்ந்து சிறிது சாகுபடிக்கு மட்டுமே உதவியாயிருந்தது. ஆதலால் இந்நதிகள் பாயும் இடத்தைவிட்டுத் தூரமாக விலகியிருக்கும் இடங்களெல்லாம் வனாந்திரத் தரிசு நிலங்களாகக் கிடந்தன. இப்பொழுது இந்நதியில் பல இடங்களில் அணைகள் கட்டியும், அவ்வணைகளிலிருந்து கால்வாய்கள் வெட்டியும் வனாந்திரமாயிருந்த பிரதேசத்தைச் செழிப்பான வேளாண்மை நிறைந்த வயல்களாக ஆக்கியிருக்கிறார்கள். இவ்வணைகளில் பெரியது சுக்கூர் (Sukkur) என்னுமிடத்தில் கட்டியுள்ள லாயிட் அணை. இது உலகத்திலுள்ள பெரிய அணைகளில் ஒன்று. இதனால் 7½ மிலியன் ஏக்கர் நிலங்கள் சாகுபடியாகின்றன.

இதே மாதிரியாகச் சென்னை மகாகாணத்தில் சமீபகாலத்தில் கட்டியது மேட்டூர் அணை. இது காவிரி நதியின் கரையிலுள்ள ஈரோடு நகரத்திற்கு வடமேற்கில் சுமார் 80 மைல்கள் தூரத்தில் மேட்டூர் என்னுமிடத்தில் காவிரி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இவ்வணை உலகத்திலுள்ள மிகப் பெரிய அணைக்கட்டுகளில் ஒன்று. இது சுமார் ஒரு மைல் நீளமுள்ளது. இதைக் கட்ட 7 கோடி ரூபாய் செலவாயிற்று. இவ்வணையில், ஏராளமான ஜலத்தைத் தேக்கிவைத்துக் கொஞ்சம் கொஞ்ச

மாகக் காவிரியில் ஜலம் பாயும்படி செய்து திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய ஜில்லாக்களிலுள்ள நிலங்களுக்குப் பாயும்படி ஏற்பாடு செய்திருக்கின்றனர். இவ்வணைக்கட்டினால் சுமார் 13 லக்ஷம் ஏக்கர் நிலங்கள் சாகுபடியாகின்றன.

மதுரைஜில்லாவிலுள்ள பெரியார் நதியில் பெரிய அணைகள் கட்டி அவைகளுக்குப் பின் ஏரிகள் ஏற்படுத்தி அவைகளில் தங்கும் தண்ணீரைக் கால்வாய் வழியாய்ப் பாசனத்திற்கு வேண்டிய அளவு வருஷம் முழுவதும் பாயும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது இந்தியாவிலுள்ள கால்வாய்ப் பாசனங்களில் மிகவும் விநோதமானது. வடசர்க்கார் சமவெளியிலுள்ள கிருஷ்ணா, கோதாவரி நதிகளுக்குக் காவேரி நதியில் கட்டியிருப்பதைப் போன்ற பெரிய அணைகள் கட்டி ஜலத்தைத் தேக்கிக் கால்வாய்களின் வழியாக அநேக லட்சம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிறார்கள். கிருஷ்ணா நதியில் பெஸ்வாடா என்னுமிடத்திலும், கோதாவரியில் தவளேஸ்வரம் என்னுமிடத்திலும் அணைகள் கட்டப்பட்டுள்ளன.

ஏரி அல்லது குளப்பாசனம் எவ்வாறு ஏற்பட்டிருக்கிறதென்பதைச் சற்றுக் கவனிப்போம். இந்தியாவில் சில இடங்களில் சிறிய காட்டாறுகளிருக்கின்றன. இவைகளில் மழை காலத்தில் மட்டும் வெள்ளம் வருகின்றது. இவ்வாறுகளின் ஜலத்தை ஏரி அல்லது குளங்களில் தேக்கி அக்குளங்களுக் கீழ் மட்டத்திலுள்ள புலங்களுக்குச் சிறு வாய்க்கால் மூலமாகப் பாயும்படி செய்திருக்கிறார்கள். தென் இந்தியாவில் கிழக்குக் கடற்கரைப் பாகங்களில் நன்செய்ச் சாகுபடிக்கேற்ற சமவெளிகளிருக்கின்றன. இவை ஒவ்வொன்று வழியாகவும் பல காட்டாறுகள் செல்லுகின்றன. இவைகளில் மழை பெய்யும்பொழுது தான் ஜலம் வரும். ஒவ்வொரு நதியும் பாயும் பிரதேசத்தில் சில இடங்களில் நாலா பக்கங்களிலும் சுவர்கள் போலக்கரைகள் கட்டிக் குளங்கள் அல்லது சிறு ஏரிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மழை காலத்தில் மழை ஜலம் நதியின் வழியாயோடி மேற்கூறிய ஏரிகளில் தேங்கி நிற்கும். இந்த ஜலத்தைச் சிறு வாய்க்கால்கள் வழியாக அவ்வேரிகளுக்குத் தாழ்ந்த மட்டத்திலுள்ள நூற்றுக்

கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பாய்ச்சி நன்செய்ப் பயிர்களை விளைவிக்கிறார்கள். இவ்விதம் கர்நாடகத்திலுள்ள நெல்லூர், தென் ஆற்காடு, இராமநாதபுரம், மதுரை ஆகிய ஜில்லாக்களின் வறண்ட சமவெளிகளில் நெல் பயிராகின்றது. தென் ஆற்காடு ஜில்லாவில் ஏரிப்பாசனத்தால் கரும்பு ஏராளமாய்ப் பயிராகிறது. இங்குள்ள நெல்லிக்குப்பத்தில் கரும்பு இயந்திரசாலைகளில் சர்க்கரை செய்கிறார்கள். வட இந்தியாவில் இராஜபுதனத்தின் (Rajputana) கிழக்குப் பாகங்களிலும், ஐக்கிய மாகாணத்தின் தெற்கிலுள்ள மேட்டு வெளிகளிலும் ஏரிப்பாசனம் இருக்கிறது. இராஜபுதனத்தில் இவ்வித ஏரிகளுள்ள இடங்களில் தான் செழிப்புள்ள நிலங்கள் உள்ளன. அன்றியும் அவ்விடங்களில்தான் பெரிய நகரங்கள் ஏற்பட்டுள்ளன. வடசர்க்காரிலும், ஒரிஸ்ஸா மாகாணத்திலும் கடற்கரைச் சமவெளிப்பாகத்தில் ஏரிப்பாசனம் உள்ள நிலங்கள் அதிகமாயுள்ளன. பம்பாய் மாகாணத்தில் முக்கியமான நீர்நிலைகள் மலைப்பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கின்றன. (Lake Fife and Lake Whiting).

கிணற்றுப்பாசனம் சிலவிடங்களில் காணப்படுகின்றன. கிணறுகளை வெட்டி அவைகளில் ஊறும் ஜலத்தை இறைத்து அவைகளுக்கருகிலுள்ள சில நிலங்களைச் சாகுபடி செய்கிறார்கள். மழை ஜலம் பூமியின்மேல் பள்ளத்தாக்குகளின் வழியாக நதிகளில் வடிந்து பூமிக்குள்ளும் ஊறிச்செல்லுகிறது. மணல், சுண்ணாம்பு, சரளை நிலங்களாகிய துவாரமுள்ள நிலங்கள் (porous rocks) தண்ணீரை உறிஞ்சும். இவ்விதம் உட்செல்லும் ஜலம் அதற்கடியிலுள்ள நீரை உறிஞ்சாத கல், களிமண்போன்ற பாறைகளின் (non porous rocks) மேல் தங்கி நிற்கும். மழையின்றி நதிகளில் ஜலம் வற்றிப் போன பிறகும் பூமிக்கடியில் இவ்விதம் உட்சென்றுள்ள நீர் காணப்படும். தரையிலுள்ள மணலை ஆழமாய்த் தோண்டினால் இந்த ஜலம் அடியிலிருந்து ஊறிவரும். இவ்விதம் தோண்டப்பட்ட நீர்நிலைகளுக்குக் கிணறுகள் என்று பெயர். நமது நாட்டில் பற்பல இடங்களில் கிணறுகள் தோண்டி அவைகளிலுள்ள ஜலத்தை மர ஏற்றங்களைக்கொண்டும், மாடுகளால் இழுக்கப்படுகின்றன. கமலை ஏற்றங்களைக்கொண்டும் அவற்றின் பக்கத்திலுள்ள நிலங்களுக்குப் பாய்ச்சி வேளாண்மை செய்கிறார்கள்.

நீர்ப்பாய்ச்சல் நிர்வாக முறையில் நீர்ப்பாய்ச்சல் கட்டுமானங்களைப் பெருவீதக்கட்டுமானங்கள், சிறுவீதக் கட்டுமானங்கள் என இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இப்பிரிவுகளில் ஒவ்வொன்றும் மறுபடியும் (1) பொருளுற்பத்திக் கட்டுமானங்கள் (Productive works), (2) காப்புக் கட்டுமானங்கள் (Protective works) எனப் பிரிக்கப்பட்டிருந்தன. இலாபகரமான கட்டுமானங்கள் (1) வது பிரிவின்கீழ் வைக்கப்பட்டன. செலவழிந்த முதலுக்கு வட்டிகூடக் கட்டாத கட்டுமானங்கள் (2) வது பிரிவின்கீழ் வைக்கப்பட்டன. காப்புக் கட்டுமானங்களுக்குப் பஞ்சம் உதவி நிதியிலிருந்து உதவி புரிந்தனர். 1919-ம் வருஷத்துத் தேசியச் சீர்திருத்தத்தின் பிறகு நீர்ப்பாய்ச்சல் துறை (Irrigation Department) மாகாணங்களின் அதிகாரத்துள் அமைக்கப்பட்டன. தவிரவும் எல்லாக் கட்டுமானங்களும் பொருளுற்பத்திக் கட்டுமானங்கள் அல்லது காப்புக் கட்டுமானங்கள் என இரண்டு பிரிவுக்குள் வைக்கபட்டன. பொருளுற்பத்திக் கட்டுமானங்களாவது கட்டுமானம் பூர்த்தியாய் 10 வருஷங்களுக்குள் முதலுக்கு வட்டியும் அக்கட்டுமானங்களை நிர்வாகம் பண்ணவேண்டியதற்குள்ள செலவும் கிடைக்கக்கூடியவேயாம். மற்றவைகளெல்லாம் பொருளுற்பத்தி பண்ணாத கட்டுமானங்களாகப் பிரிக்கப்பட்டன. நீர்ப்பாய்ச்சல் கட்டுமானங்கள் கட்ட ஒரு மைலுக்குச் சராசரி ரூ. 30,000 முதல் ரூ. 50,000 வரை செலவழிகிறது. நீர்ப்பாய்ச்சல் கட்டுமானங்களுக்காகச் செலவழிந்த முதலுக்குத் தேறின வரும்படி 7% ஆகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

வெகு காலமாக நீர்ப்பாய்ச்சல் மூலமாய் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு வருஷத்திற்கு 1½ கோடி ரூபாய் தேறின வரும்படி கிடைத்தது. இப்பொழுது சில மாகாணங்களுக்கு (மதராஸ், ஐக்கிய மாகாணங்கள், பஞ்சாப்) நீர்ப்பாய்ச்சல் மூலமாய் அதிக வரும்படி கிடைக்கிறது. நீர்ப்பாய்ச்சலால் மொத்த வரும்படி 6 கோடி ரூபாயாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. தண்ணித் தீர்வையானது பயிரின் இனத்தையும், பாசனத்தின் விஸ்தீரணத்தையும் பொருத்திருக்கிறது. வட இந்தியா மாகாணங்களிலும் பம்பாயில் சில விடங்களிலும் ஜல வரி நிலவரியுடன் சேர்த்து விதிப்பதில்லை.

சென்னை மாகாணத்தில் ஜலவரியும் நிலவரியும் சேர்த்துத் திரட்டிய வீத வரி (Consolidated rates) யாக வசூலிக்கின்றனர். ஒரு ஏக்கருக்கு நீர்ப்பாய்ச்சல் வரிப்பளு ரூ. 3·53 ஆகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

நீர்ப்பாய்ச்சலினுல் உண்டாகும் அனுகூலங்கள் பல. பயிரிடுவோருக்கு அது ஒரு பெரும் பாக்கியம். ஏனென்றுல் வறட்சிக் காலத்தில் வயல் விளைச்சலுக்கு வேண்டிய தண்ணீர் கிடைப்பதுடன் சாதாரண காலங்களில் வயல் விளைச்சலை அதிகப்படுத்துகிறது. ஆகையால் நிலஸ்வான்களுக்கு நிலத்தியல் வருவாய் அதிகமாய்க் கிடைக்கின்றது. நீர்ப்பாய்ச்சல் வசதிகளால் அநேகப் பிரதேசங்கள் பஞ்சத்தால் பீடிக்காமலிருக்கமுடியும். ஜனங்களின் உணவுப்பொருள்களும் அதிகரித்து வருகின்றது. கவர்ன்மெண்டாருக்கு நிலவரி வரும்படியும் அதிகமாகக் கிடைக்கின்றது.

1902-ம் வருஷத்திய நீர்ப்பாய்ச்சல் கழகத்தாரின் (Irrigation Commission) நில அளவுப்படி பயிரிடப்பட்ட நிலத்தில் 19½% நீர்ப்பாய்ச்சல் வசதிகளால் பயிரிடப்பட்டன. நீர்ப்பாய்ச்சல் வசதிகளால் பயிரிடப்பட்ட நிலங்களுள் 42% ராஜாங்கக் கட்டுமானங்கள் மூலமாய்ப் பயிரிடப்பட்டது; பாக்கி, தனித்த கட்டுமானங்கள். நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமாகச் சுமார் 100 கோடி ரூபாய் வரை பெருமுதல் செலவழிந்திருக்கிறது.

இந்தியாவில் நீர்ப்பாய்ச்சல் வசதிகள் அதிகரித்துக்கொண்டிருந்தபோதிலும் இன்னும் அதிக வசதிகள் ஏற்படுத்தவேண்டும். இந்தியாவில் கிடைக்கக்கூடிய ஜலம் பூராவும் மக்களின் உபயோகத்திற்குட்படவில்லை. அநேக வருஷங்களுக்குமுன் காட்டன் என்னும் நிபுணர் எழுதிய குறிப்பு கவனிக்கத்தக்கது. அதாவது 6 பென்ஸ் சிலவில் 1,000 கெஜம் கனமுள்ள ஜலத்தை உபயோகப்படுத்தி, அதனுல் அதின் மதிப்பு 10 ஷில்லிங் ஆகுமாயின், அப்பேர்ப்பட்ட நீர்ப்பாய்ச்சல், வசதி கிடைக்குமானுல், அதற்கு ஒரு தங்கச் சுரங்கத்தைக்கூட ஒப்பிடமுடியாது. ஆகையால் நதிகளிலிருந்தும், ஓடைகளிலிருந்தும் கடலில் சேரும் ஜலத்தைக் கால்வாய்கள் மூலமாயும், நீர்நிலைகள் மூலமாயும் உபயோகத்திற்குக் கொண்டுவரவேண்டும். விவசாயிகளுக்குக் கிணறுகள் வெட்ட

வும், குளங்கள் மராமத்துக்கும் போதுமான கடன்களும், உதவிக் கொடைகளும் கொடுக்கவேண்டும். உள்நாட்டுக்கால்வாய்களில் படகு போக்குவரத்துக்குரிய சீர்திருத்தங்கள் செய்யவேண்டும்.

இந்தியாவின் பல மாகாணங்களிலும் விளையும் மொத்த விளைவில், நீர்ப்பாய்ச்சலால்மட்டும் ஏற்படும் விளைவைப் பின் அட்டவணையில் காண்க.

மாகாணங்கள்		விளைவு
வங்காளம்	...	17%
சென்னை	...	25%
பம்பாய்	...	4%
மத்திய மாகாணங்கள்	...	9%
பீஹார் & ஒரிஸா	...	22%
ஐக்கிய மாகாணங்கள்	...	28%
பஞ்சாப்	...	57%
சிந்து (Sind)	...	74%

XX

பொருளுற்பத்தி விதிகள்

(LAWS OF PRODUCTION)

(1) குறைந்து செல் பயன்முறை (Law of Diminishing Return). ஒரு குடியானவன் ஒரு ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிடுவதாக வைத்துக்கொள்வோம். பயிரிடுவதற்காக ரூ. 10 செலவழிப்பதாக வைத்துக்கொள்வோம். அச்செலவினால் நிலத்திலிருந்து கொஞ்சம் கரும்பு உண்டாகிறது. மறுதடவை பயிரிடுவதில் ரூ. 20 செலவழித்து நிலத்தை சரியானபடி பயிர்செய்தால் விளைச்சல் முன்னைவிட அதிகமாயிருக்கலாம். செலவு செய்த பணத்தைவிட அதிகப் பயன் கிடைக்கலாம். அதாவது வரவர வரும்படி அதிகமாகும் நிலை ஏற்படலாம். ஆனால் இதே மாதிரியாக இன்னும் செலவு செய்துகொண்டிருந்தால் விளைச்சல் செலவுக்குத்தக்கபடி இருக்குமென்று சொல்லமுடியாது. அதிகப் பணம் செலவழித்து நிலத்தைப் பயிரிடுவதால் செலவுக்குமேற் விளைச்சலில்லாமல் செலவைவிட குறைவாக விளைச்சல் ஏற்படலாம். அப்படி ஏற்படும் சமயத்தில் நிலத்தில் அதிக முயற்சி பண்ணி பயிரிடுவது இலாபகரமாயிருக்காது. ஏனெனில் வர வர வரும்படி குறையும் நிலை ஏற்படுகிறது. இதை ஒரு புற நிலை எண்ணால் விளக்கலாம்.

ரூ. 10 பெருமான செலவு	... 4 மணங்கு சர்க்கரை
ரூ. 20 பெருமான செலவு (20 = 10 + 10)	... 4 + 5 ,, (வரும்படி அதிகமாகும் நிலை)
ரூ. 30 பெருமான செலவு (30 = 10 + 10 + 10)	... 4 + 5 + 2 மணங்கு சர்க்கரை (வரும்படி குறையும் நிலை)


ஷை பொருளுற்பத்தி விதியானது ஒவ்வொரு குடியானவனும் அனுபவத்திலிருந்து தெரிந்துகொண்டிருக்கிற விஷயமே.

இதை பொருள்நூலாளர் குறைந்து செல் பயன் முறை என்று குறித்திருக்கின்றனர்.

(2) **விரிந்து செல் பயன்முறை** (Law of Increasing Return):—ஒவ்வொரு தொழிலுக்கும் தொழிலுக்குத் தக்கபடி ஒரு பரிமாணம் இருக்கிறது. சாதாரணமாக ஒரு தொழிலின் ஆரம்பத்தில் அதிக முதலும் முயற்சியும் இல்லையென்று வைத்துக்கொள்வோம். தகுந்த முதலும் முயற்சியும் ஏற்பட்டால் அதனால் உண்டாகும் பயன் ஏற்பட்ட செலவைவிட அதிகமாயிருக்கலாம். அநேக கைத்தொழில்களில் இவ்வித முறையை நாம் பார்க்கலாம். அவ்விதமாக வரவர வரும்படி அதிகப்படுகிற தொழில்கள் பெருவீதத் தொழில்களாக ஏற்படுகின்றன. தொழில் சம்பந்தமான அறிவினாலும், தொழில் அமைப்பு சீர்திருத்தங்களினாலும் அநேக கைத்தொழில்களில் வரவர வரும்படியை அதிகப்படுத்த முடியும்.

மாறாப்பலன் முறை (Law of Constant Return)

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு தொழிலில் உழைப்பும் முதலும் அதிகமாக பிரயோகப்படுத்துவதால் கிடைக்கும் பலன் அதிகமாகப் பிரயோகப்படுத்தின பரிமாணத்திற்குத் தக்கபடி இருக்குமாயின் அவ்வித சம்பவத்தை மாறாப் பலன்முறை என்று கூறுகிறோம். உதாரணமாக கம்பள வியாபாரம் அதிகமாக வளர்ச்சியடையாத ஒரு நாட்டில் கம்பளத்திற்கு தேவை ஏற்பட்டால் கம்பளமானது பெருவீத முறையில் உற்பத்தி பண்ணப்படும். பெருவீத முறையை அனுசரிப்பதால் அத்தொழிலில் மிகு பலன்கள் ஏற்படலாம். ஆனால் அவ்வித பெருவீத பொருளுற்பத்திக்கு வேண்டிய மூலப்பொருள்களாகிய ஆட்டுரோமம் முதலியன அதிகமாகவேண்டும். அப்பேர்ப்பட்ட மூலப்பொருள்களை பெருவீத முறையில் உற்பத்திசெய்யத் தொடங்கினால் கடைசியில் அம்மூலப்பொருள்களை குறைபலன் முறையில்தான் பெறுகிறோம். ஆகையால் கம்பளி வியாபாரம் விரிவு அடைவதால் உண்டாகும் மிகுபலன்கள் அவ்வியாபாரத்திற்கு வேண்டிய மூலப்பொருள்களின் குறைபலனால் சமநிலையாக்கப்படுகிறது.


பொருளுற்பத்தி சாதனங்களை
ஒழுங்குபடுத்தும் ஏற்பாடு (Organization) —அதனில்
அடங்கியவை.
உழைப்பு
(Labour)
முயற்சி
(Enterprise)
இயற்கைச்
சக்திகள்
(Gifts of Nature)
மூலதனம்
(Capital)
பொருள்

XXI

விவசாயமும், கைத்தொழிலும் ஒப்பிடுதல்
(AGRICULTURE & MANUFACTURE COMPARED)

(1) விவசாயமே முக்கிய தொழிலாகவுள்ள தேசங்களில் முயற்சியில் சுயேச்சை (Freedom of Enterprise) அதிகமாக கிடையாது. ஆனால் இப்பேர்ப்பட்ட முயற்சியில் சுயேச்சை கைத்தொழிலின் முக்கிய அம்சமாயிருக்கிறது. விவசாயி தன் தொழிலுக்காக நிலம் இருக்கும் இடத்திற்கு செல்லுகிறான். ஆனால் கைத்தொழில் விஷயத்தில் மூலப்பொருள்கள் கைத் தொழில் ஸ்தாபிக்கப்படும் இடங்களுக்கு கொண்டுவரப்பட்டு செயற்கைப் பொருள்களாக மாறுகின்றன.

(2) விவசாயத் தொழில் இயற்கைச் சக்திகளை பொருத் திருக்கிறது. பருவகாலத்திற்குத் தக்கபடி விவசாயத்தை நடத்த வேண்டியிருக்கிறது. ஆனால் கைத்தொழிலில் இவ்விஷயங்களை அவ்வளவு கவனிக்கவேண்டியதில்லை.

(3) விவசாயத்தை பெருவீத பொருளுற்பத்தி முறைக்கு கைத்தொழிலைப்போல் அவ்வளவு தூரம் அமைக்கமுடியாது. தவிரவும் விவசாயத்தொழிலில் கைத்தொழிலைப்போல் அவ்வளவு வேலைப்பகுப்பு சாத்தியமில்லை.

(4) விவசாயத்தின் விளைச்சல், மழை வாயுநிலை முதலிய இயற்கையில் ஏற்படக்கூடிய அம்சங்களைப் பொருத்திருக் கிறது. ஆகையால் மாசூல் சில தடவை அதிகமாயும், சில தடவை குறைவாகவும் கிடைக்கின்றது. ஆனால் கைத்தொழிலில் இவ் வித மாறுபாடுகள் கிடையாது.

(5) விவசாயத்தில் வரவர வரும்படி குறையும் நிலை (Law of Diminishing Return) ஏற்படுகிறது. கைத்தொழிலில்

வரவர வரும்படி குறையும் நிலை ஏற்பட்டபோதிலும் அதற்கு கைம் மாருக வரவர வரும்படி கூடும் நிலையும் அதிகமாக காணலாம்.

(6) விவசாயத்தில் கைத்தொழிலைப்போல இயந்திர வேலைக்கு அவ்வளவு அதிக இடமில்லை. சாஸ்திர ஆராய்ச்சியினுல் ஏற்படும் சீர்திருத்தங்களை விவசாயத்தைவிட கைத்தொழிலில் அதிகமாக உபயோகிக்க முடியும். ஆனுல் வேதிப்பகுப்பினுலும் மின்சாரத்தினுலும் விவசாயத்தை விருத்தியடையச் செய்யலாம்.

(7) விவசாயப் பிரதேசங்களில் பொதுவாக தொழிலாளிகளின் போக்குரிமை குறைவாகவேயிருக்கிறது. நிலம் குடியானவனுக்கே சொந்தமாயிருக்கும் இடங்களில் குடியானவன் தன் நிலத்தைவிட்டு நகர்வதில்லை. கைத்தொழில் விருத்தியடைந்த தேசங்களில் கூலிவேலைக்காரர் சுயேச்சையாய் பரவுவதற்கு ஒரு விதமான தடங்கலும் கிடையாது.

(8) விவசாய நடபடிக்கைகள் எல்லாரும் எளிதில் தெரிந்து கொள்ளக்கூடிய தன்மைகள் உடையன. ஆகையால் விவசாயத்திற்கு கைத்தொழிலைவிட உழைப்புப் பகுப்பு குறைந்த பட்சமாயிருக்கிறது.

(9) கைத்தொழிலில் கிடைக்கும் இலாபம் விவசாயத்தில் கிடைக்கும் இலாபத்தைவிட அதிகமாகவேயிருக்கிறது. இதனுல் ஒரு தேசத்தின் மூலப்பொருள்களை மற்ருெரு தேசத்தின் செயற்கைப் பொருள்களுக்காக பண்டமாற்றுதலில் இரு தேசத்தாரும் பரஸ்பரம் நன்மையடைந்தபோதிலும், செயற்கைப் பொருள்களை உண்டாக்கும் தேசத்தாரின் இலாபம் அதிகமாகவேயிருக்கிறது.

(10) கைத்தொழில் மேன்மையடைந்த தேசத்தில் பொருளுற்பத்தி அதிகமாயிருப்பதால் அத்தேசத்தார் விவசாய தேசத்தாரைவிட அதிக ஜனங்களை காப்பாற்றமுடியும்.

(11) விவசாயத்தொழிலைக் கைப்பற்றுவோர் சுயேச்சையாக வசிக்கின்றனர். தவிரவும் விவசாயத்தொழில் சுவாதந்திரியத்தையும் மற்ற குண சம்பத்துக்களையும் விளைவிக்கின்றது.

ஆனல் பெருவீத கைத்தொழிலானது கூலிவேலைக்காரரின் சுயேச்சையையும் மற்றும் சில மேன்மையான குணங்களையும் நிக்கிரகம் செய்கின்றது.

(12) விவசாயம் பிரதம தொழிலாயிருக்கின்றது. கைத்தொழில் இரண்டாம் பட்சமாகத்தான் கருதப்படுகிறது. இதனால் விவசாயம் மேலானதும், கைத்தொழில் அதைவிட கீழானதுமான தொழில் என்றும் கருதக்கூடாது. உலக சுபிக்ஷத்தை கவனிக்குமிடத்து இரண்டும் இன்றியமையாதது. ஆனல் முன்னேற்றமடைந்த சில தேசத்தார் கைத்தொழிலுக்கு விவசாயத்தை விட அதிக பிரதான்யம் அளித்திருக்கின்றனர்.

கிராம வாழ்க்கையும், கிராமவாசிகளின் பொருளாதார நிலைமையும்

இந்தியாவில் ஆயிரக்கணக்கான கிராமங்களிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயமே முக்கிய தொழிலாயிருக்கிறது. நன்செய் நிலங்களில் நெல், கரும்பு முதலிய பயிர்களும், புன்செய் நிலங்களில் கேழ்வரகு, கம்பு, சோளம் முதலான பயிர்களும் செய்யக் காணலாம். இக்குடியானவர்களுக்குப் பயிரிட வேண்டிய கருவிகளைச் செய்யவும், வாழ்க்கைக்கு வேண்டிய பாத்திரங்கள், இரும்பு சாமான்கள், தோல் சாமான்கள் முதலிய செய்யவும், வீடு கட்டுவதற்கு வேண்டிய செங்கல், ஓடு முதலியவற்றைத் தயாரிக்கவும், சில தொழிலாளிகள் கிராமத்திலேயே வசிக்கின்றனர். குடிகளின் உடைகளைச் சுத்தம் செய்யவும், குடிகளுக்கு க்ஷவரம் செய்யவும் சில தொழிலாளர்களுமிருக்கின்றனர். பிறகு, கிராமவாசிகளுக்கு வேண்டிய பொருள்களை விற்கவும், இவர்களது விளைபொருள்களை வாங்கவும், சில வியாபாரிகள் இருக்கின்றனர். விவசாயிகளுக்கு பயிரிடும் தொழில் செய்வதற்கு அநேக ஹரிஜனங்கள் இருக்கின்றனர். இவர்கள் கிராமத்தினருகில் கூட்டமாய் வசிக்கின்றனர்.

ஒவ்வொரு கிராமத்திலும் பெரும்பான்மையோர் விவசாயிகளும், மற்றவர் வியாபாரிகள், கருமான், தச்சன், குயவன், வண்ணான், அம்பட்டன் முதலானோரும் இருக்கக் காணலாம். நமது

தேசத்தில் மேற்கண்ட பல தொழில்களைச் செய்யும் ஜனங்களும், அவரவர் செய்யும் தொழிலுக்கேற்ப, பல ஜாதியாராக வகுக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் கூடி ஐக்கியமாக ஒவ்வொருவரின் நலம்பொருட்டு மற்றவர் உழைத்துவருகின்றனர். ஆகவே கிராமவாசிகளின் வாழ்க்கையை ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒப்பிடலாம்.

கிராமவாசிகளின் வருமானத்தை கவனிப்போம். நிலத்தில் வேலை செய்பவர்களின் வருமானம் மிகவும் குறைவாகும். பெரும்பாலும் ஒவ்வொரு விவசாயியின் நிலம் சொற்பமாதலால் அதில் வரும் வரும்படியில் அதிக மீதம் கிடையாது. அதிக நிலமுடையவரே செல்வந்தரெனக் கூறலாம். மற்றக்குடிகள் வருஷாவருஷம், மாடு வாங்கவும், விதை வாங்கவும், இதரச் செலவுகளுக்கும் கடன் வாங்க வேண்டியிருக்கிறது. கிராம லேவாதேவிக்காரரிடம் (Village moneylenders) அதிக வட்டிக்குக் கடன் வாங்கிவருவதால் விவசாயிகள் க்ஷீணமடைந்து வருகின்றனர். தற்காலத்தில் கவர்ன்மெண்டார் குடிகளுக்குச் சொற்ப வட்டியில் கடன் கொடுப்பதற்கு ஐக்கிய நாணய சங்கங்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

நமது தேசத்தில் பெரும்பான்மையோர் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுக் கிராமங்களிலேயே வசிப்பதால், கிராம முன்னேற்றமடையும் முயற்சிகளை (Rural uplift) அரசாங்கத்தார் செய்து வருகின்றனர். விவசாயிகளுக்கு புது முறைகளைப் போதிக்கவும், சிறந்த விதைகளை விற்கவும், கவர்ன்மெண்டார் விவசாய இலாகா ஏற்படுத்தி இருக்கிறார்கள். மேலும் விவசாயிகளுக்குக் கூலிவேலை செய்து பிழைக்கும் ஏழைக் குடிகளையும், ஹரிஜனங்களையும் ஒவ்வொரு கிராமத்திலும் காணலாம். இவர்கள் முன்னேற்றமடையும் பொருட்டும், கல்வி பயிலும்பொருட்டும் ஏழைக்குடிகள் முன்னேற்றத்திற்குரிய இலாகா (Labour department) ஏற்படுத்தி இருக்கின்றனர்.

கிராமக் கைத்தொழில்கள்

சில கிராமங்களில் விவசாயிகள் பயிர்த்தொழில் செய்வதோடுகூட ஆடு மாடு வளர்த்தல், கோழி வளர்த்தல், தோட்டக்

கால் பயிர்களாகிய காய்கறிகள், வாழை, வெற்றிலை முதலிய பல தொழில்களையும் செய்கின்றனர்.

நகரங்களுக்கருகிலுள்ள கிராமங்களில் பசு, எருமை முதலியவைகளை வளர்த்து அவைகளின் பாலிலிருந்து தயிர், வெண்ணெய் முதலியன தயாரித்து பட்டணங்களுக்கு கொண்டுபோய் விற்கின்றனர். ஆடுகள் வளர்ப்பவர் அந்த ஆடுகளை கசாப்புக் கடைக்காரர்களுக்கு விற்றுவிடுகின்றனர். அவர்கள் ஆட்டிறைச்சியை விற்று ஜீவிக்கின்றனர். கோழி வளர்ப்பவர் கோழிமுட்டைகளையும், கோழிகளையும் பட்டணங்களில் விற்று இலாபமடைகின்றனர்.

சில கிராமங்களில் பானை செய்தல், களிமண்ணால் அழகான பொம்மை செய்தல், கூடை முடைதல், ஜரிகை வேலை, தந்த வேலை, பித்தளைப் பாத்திரங்கள் செய்தல், பாய் பின்னுதல், பருத்தி பட்டு நூல்களால் துணிகள் நெய்தல் முதலான பலவகைத் தொழில்கள் நடைபெறுவதைக் காணலாம். நமது நாட்டில் பெரும்பாலும் ஸ்திரீகள் உடுக்கும் சேலைகள் நாட்டுப்புறங்களில் கைத்தறியில் நெய்தவைகளேயாகும். மகம்மதியர் உடுக்கும் லுங்கி என்ற ஆடைகள் கைத்தறியில் நெய்யப்பட்டதேயாகும். சென்னை இராஜதானியில் அநேக கிராமங்களில் லுங்கி நெய்யப்பட்டு சிலோன், சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகுகின்றது. ஒவ்வொரு கிராமத்திலும் கதர்நூல் நூற்கும் தொழிலையும், கதர்துணி நெய்யும் தொழிலையும் காங்கிரஸ் சபையார் அபிவிருத்தி செய்து வருகின்றனர்.

பொருளாதார நூல் கற்பவர் தங்கள் கிராமத்தில் கைத்தொழில் நடக்கும் இடத்திற்குப் போய்ப் பார்வையிடவேண்டும். அங்கு அக்கைத்தொழில் நடப்பதற்குரிய வசதிகள் என்னவென்று தெரிந்துகொள்ளுங்கள். அங்கு உற்பத்தியாகும் பொருள்களை எங்கு கொண்டுபோய் விற்கிறார்கள்? அப்பொருள்களை உற்பத்தி செய்ய எவ்வளவு செலவாகிறதென்றும், அவைகளை என்ன விலைக்கு விற்கிறார்களென்றும், அவர்களுக்கு என்ன இலாபம் கிடைக்கிறதென்றும் விசாரிக்கவேண்டும்.

நகர வாழ்க்கையும், நகரவாசிகளின் பொருளாதார நிலைமையும் :—பட்டணங்களில் வசிக்கும் ஜனங்கள் பயிரிடும் குடிகளல்லர். அவர்கள் உத்தியோகத்தின் பொருட்டோ அல்லது வியாபாரத்தின் பொருட்டோ அல்லது கூலிவேலை செய்து பிழைக்கும் பொருட்டோ அங்கு வந்து சேர்ந்தவர்களாவர். பலர் கைவண்டி இழுத்தல், குதிரைவண்டி, மாட்டுவண்டி ஓட்டுதல் முதலிய தொழில்களைச் செய்கிறார்கள். அன்றியும் பட்டணத்தில் பல தொழில்கள் நடைபெறும் சாலைகள் இருப்பதால் அநேக ஜனங்கள் கூலிவேலை செய்து பிழைப்பதற்கு ஏதுவாயிருக்கிறது. நமது நாட்டிலுள்ள பட்டணங்களில் அநேகர் வியாபாரம்செய்து ஜீவிக்கின்றனர். சுற்றுப்பக்கத்து கிராமங்களில் விளையும் பொருள்களை வாங்கி வெளி தேசங்களுக்கு அனுப்புவதும், வெளி தேசத்திய சரக்குகளை வாங்கி கிராமவாசிகளுக்கு விற்பதும் இவர்களுடைய முக்கிய தொழிலாகும். பட்டணங்களில் அநேக தொழிற்சாலைகள் தவிர அநேக கவர்ன்மெண்டு உத்தியோக சாலைகள் இருக்கின்றன. இந்த ஆபிசுகளில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள் அங்கே வசிக்கின்றனர். பட்டணத்தில் வசிக்கும் ஜனங்களுக்கு வேண்டிய காய்கறிகளைப் பயிர்செய்து அங்கு கொண்டுபோய் விற்பது அதனருகிலுள்ள கிராமவாசிகளின் தொழிலாகும். உதாரணமாக சென்னையைச் சுற்றியுள்ள பல கிராமங்களிலுள்ள ஜனங்கள் காய்கறிகளையும், பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றையும் சென்னைக்குக் கொண்டுவந்து விற்று ஜீவிக்கின்றனர். ஆகவே ஒரு பட்டணத்தைச் சுற்றியுள்ள கிராமவாசிகள் அப்பட்டணத்து ஜனங்களுக்கு இன்றியமையாத பொருள்களைத் தந்து அவர்களுக்கு வேண்டிய பொருள்களைப் பெற்று ஜீவிக்கின்றனர்.

பட்டணங்களில் நடைபெறும் தொழிற்சாலைகள் பெரிய செல்வந்தர்களுக்குச் சொந்தமாகும். இவர்கள் தொழிற்சாலைகளில் ஏற்படும் இலாபத்தில் பெரும் பகுதியை எடுத்துக்கொண்டு சிறு பகுதியையே தொழிலாளர்களுக்கு சம்பளமாகக் கொடுக்கின்றனர். இக்காரணத்தால் பட்டணங்களிலுள்ள தொழில்சாலைகளில் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் சச்சரவு உண்டாகி வேலை நிறுத்தம் ஏற்படுகிறது.

பட்டணங்களில் வசிக்கும் ஜனங்களின் தினசரி வருமானம் கிராமவாசிகளின் வருமானத்தைவிட அதிகமாகும். ஆனால் நகர வாசிகள் வீட்டுக் குடிக்கூலி கொடுக்கவும், காய்கறிகள், பால், தயிர் முதலான உணவுப் பொருள்கள் வாங்கவும் அதிக செலவு செய்யவேண்டியிருக்கிறது. பட்டணங்களிலுள்ள ஜனங்களின் வருமானத்தை உத்தேசமாய்க் கணக்கிட்டுப் பார்ப்போம். மாதம் 200 ரூபாய்க்குமேல் வருமானமுள்ளவர்கள் மிகவும் சிலரே யாவர். ரூ. 100 முதல் ரூ. 200 வரை வருமானமுள்ளவர் பலர். ரூ. 100-க்கு குறைந்த வருமானமுள்ளவர் அநேகர். ஒருவிதத் தொழிலுமின்றி இருப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகமாயிருக்கின்றது. பட்டணங்களிலுள்ளவர்களின் சராசரி மாத வருமானத்தை கணக்கிட்டுப் பார்த்தால் மிகவும் குறைவாகவேயிருக்கும். ஆகவே நம் நாட்டிலுள்ள ஜனங்களில் பெரும்பாலோர் மிகவும் ஏழை மக்களே என்று திண்ணமாய்க் கூறலாம்.

நகரத் தொழிற்சாலைகள்

நகரங்களில் இயந்திரங்களினுதவியால் பல கைத்தொழில்கள் நடைபெறுகின்றன. தோல் பதனிடுதல், சோப்பு செய்தல், பென்சல் செய்தல், கண்ணாடிசாமான்கள் செய்தல், துணி நெய்தல் முதலிய பல தொழில்கள் நடைபெறுகின்றன. ஒரு நகரத்தில் நடைபெறும் தொழிலுக்கு அந்நகரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் உற்பத்தியாகும் விளைபொருள்களுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. இதற்கு பல உதாரணங்கள் கூறலாம். கல்கத்தாவுக்கருகில் சணல் விசேஷமாக உற்பத்தியாவதால் இந்நகரில் அநேக சணற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. பம்பாயைச் சுற்றி பருத்தி விசேஷமாய்ப் பயிராவதால் பம்பாயில் அநேக நெசவுச் சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. மைசூரில் சந்தனமரங்கள் அதிகமாக இருப்பதால் அங்கே சந்தனசோப்பு செய்யும் தொழிற்சாலைகள் காணப்படுகின்றன.

நமது நாட்டில் இரும்பு, நிலக்கரி முதலியன ஏராளமாகக் கிடைக்கவில்லை. தவிரவும் நம் நாட்டு நீர்வீழ்ச்சிகளும் பூரணமாக உபயோகப்படவில்லை. அதிக முதல் வைத்து இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து வாங்கவேண்டியிருக்கிறது. இக்

காரணங்களினால் இச்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களின் விலை அதிகமாகிறது. நீர்வீழ்ச்சிகளின் சக்தியாலும் நிலக்கரியின் சக்தியாலும் வெளிநாடுகளில் ஓட்டப்படும் இயந்திரங்களின் உதவியால் தயாரிக்கப்படும் சாமான்கள் நமது நாட்டில் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. நம்மவர்களும் குறைந்த விலைக்குக் கிடைக்கும் வெளிநாட்டு சாமான்களை வாங்குகிறார்களேஒழிய தேசாபிமானங்கொண்டு உள்நாட்டு சாமான்களை ஆதரிப்பதில்லை. இக்காரணத்தினால் நம் தேசத்தில் ஏற்பட்ட தொழிற்சாலைகள் நாளுக்குநாள் க்ஷீணித்துக் கடைசியில் எடுக்கப்பட்டன.

உங்கள் கிராமத்துக்கருகிலிருக்கும் பட்டணத்திலுள்ள ஏதாவதொரு தொழிற்சாலைக்குப் போய்ப் பாருங்கள். அத்தொழிற்சாலை நடைபெறுவதற்கேற்ற வசதிகள் யாவை? அதற்கு வேண்டிய உற்பத்திப்பொருள்கள் எங்கிருந்து கிடைக்கின்றன? இயந்திரங்கள் ஓட்டும் சக்தி எதனின்றும் கிடைக்கின்றது? இத்தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களின் விலை என்ன? இப்பொருள்கள் வெளிநாட்டில் உற்பத்தியாகும் அதே பொருள்களைவிட உறுதியாயிருக்கிறதா? இவைகளின் விலை அதிகமா அல்லது குறைவா? அத்தொழிற்சாலைகள் நாளுக்குநாள் அபிவிருத்தியடைந்து வருகிறதா? அல்லது க்ஷீணித்துவருகிறதா? இதற்கு காரணம் என்ன? இவ்விஷயங்கள் பொருளாதாரநூல் கற்போர் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டியது அவசியம்.

XXII

இந்தியாவின் கைத்தொழில்கள்

பண்டைக்காலத்தில் இந்தியாவின் கைத்தொழில்கள் உன்னத பதவியிலிருந்தன. பதினெட்டாவது நூற்றாண்டுவரையிலும் இந்தியாவின் கைத்தொழில்களின் பதவி ஐரோப்பா கண்டத்து கைத்தொழில்களுக்குச் சமமாகவே இருந்தன. இந்தியாவின் செய்பொருள்கள் அன்னிய தேசங்களில் விற்பனையாகிவந்தன. சமீபகாலம்வரை இந்தியாவின் கைத்தொழில்கள் இயந்திரங்களால் இயக்கப்படாமல் கைவேலையாகவே இருந்தன. இந்திய வினைஞர்கள் பிறவி உரிமையினாலும், அனுபவத்தினாலும் கைத்தொழில்களில் அதிக சாமர்த்தியமுள்ளவர்களா யிருந்தார்கள். பிரிட்டன் தேசத்தார் நாகரீகமற்றவர்களாயிருக்கும் காலத்தில் இந்தியாவிலுள்ள டாக்கா (Dacca) மஸ்லின்களும், காஷ்மீர் கம்பளங்களும், டெல்ஹியின் சித்திரப்பட்டாடைகளும் ரோமாபுரி ராஜ பரிவாரத்தில் அலங்காரப்பொருள்களாக விளங்கின.

பதினெட்டாவது நூற்றாண்டின் பின்பாகத்தில் ஐரோப்பாவில் தொழிற் புரட்சி ஆரம்பித்தது. அதனால் பழைய தொழில் முறைகள் நீக்கப்பட்டுப் புதிய இலாபகரமான முறைகள் ஏற்பட்டன. உழைப்பைக் குறைக்கும் இயந்திரங்களால் பொருள்கள் உண்டாக்கும் முறை ஏற்பட்டது. ஒவ்வொரு தொழிலிலும் ஏராளமான மூலதனம் போடப்பட்டன. சிறுவீத பொருளுற்பத்திக்குப் பதிலாகப் பெருவீத பொருளுற்பத்தி எல்லாத் தொழில்களிலும் ஏற்பட்டது. இவ்வித மாறுபாடுகளால் பொருளுற்பத்தி சக்தி அதிகரித்தது.

ஆனால் இந்திய வினைஞர்கள் பண்டைக்கால முறைப்படியே தங்கள் கைத்தொழில்களை நடத்தி வந்தனர். தவிரவும் கிழக்கிந்திய வணிகக் கூட்டத்தார் (East India Company) இந்தியாவின் உள்நாட்டுத் தொழில்களை முன்னேற்றமடைய இடங்

கொடுக்கவில்லை. இக்காரணங்களால் பத்தொன்பதாம் நூற்றுண்டின் மத்திய காலத்திற்குள் இந்தியா ஒரு விவசாய தேசமாகவே ஆகிவிட்டது. சமீப காலமுதல் இந்தியாவின் கைத்தொழில்கள் சம்பந்தமான இடையூறுகள் நீக்கப்பட்டு வருகின்றன. கைத்தொழில்கள் முன்னேற்றமடைவதற்குரிய சாதனங்கள் ஏற்பட்டுவருகின்றன. சில முக்கிய கைத்தொழில்களின் தற்கால நிலைமையைக் கவனிப்போம்.

(1) பஞ்சு நெசவுத் தொழில் (Cotton Industry) :—இந்தியாவில் சுமார் 30 லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன அவைகளின் வருஷ வரும்படி 50 கோடி ரூபாய்களாக மதிக்கப்பட்டிருக்கிறது. துணி நெசவில் இந்தியக் கைத்தறிகள் சம்பூரண நிலைமையிலிருந்தன. இந்திய மஸ்லின்கள் ஒப்பற்ற நெசவுத் தன்மையுள்ளனவாய் விளங்கின. பழைய காலத்தில் பருத்தியிலிருந்து பருத்திக்கொட்டையை நீக்குதல் கைவேலையாகவே இருந்தது. இக்காலத்தில் இவ்வேலை இயந்திரங்களால் செய்யப்படுகின்றது. பழைய காலத்தில் நூல் நூற்றல் குடிசைத் தொழிலாகவே இருந்தது. இக்காலத்தில் இயந்திரங்களால் நூல் நூற்கப்படுகின்றது. கைகளால் இயக்கப்படும் இராட்டினத்தில் நூல் நூற்கவேண்டுமென்று தேசம் பூறுவும் ஒரு புதிய கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அயல் நாடுகளிலுள்ள இயந்திர நெசவின் போட்டியால் இந்தியாவின் கைநெசவு க்ஷீணமடைந்துவிட்டது. அதனால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வேலையில்லாமலிருக்கின்றனர்.

கைத்தறி பொறித்தறியைவிட அதிகச் செலவுள்ளதாகக் கருதப்படுகிறது. ஆனால் கைத்தறியில் அநேக அனுகூலங்களிருக்கின்றன :—(1) தொழிலுக்குக் குறைவான மூலதனம் இருந்தால் போதும். (2) கைத்தறியில் உண்டாக்கப்படும் துணிகள் உரப்பான துணிகளாயிருந்தபோதிலும், பொறித்தறி துணிகளைவிட உறுதியுள்ளவாயிருக்கின்றன. அலங்காரத் தன்மையுள்ள துணிகள் கைத்தறியால்தான் செய்யமுடியும். இந்தியாவில் நெசவுக்காரர் தலைமுறை தலைமுறையாகக் கைதேர்ந்த கைத்தறி வேலைக்காரராயிருக்கின்றனர். கைத்தறியில் வேலைக்

காரரின் பிழைப்புத் திட்டம் குறைவாகவே யிருக்கிறது. தேச சமூக வழக்கங்களினால் தொழிற்சாலைகளில் வேலை செய்யமுடியாத பெண்டிருங்கூட குடிசைத் தொழில்களில் வேலைசெய்து பிழைக்கமுடியும்.

இந்தியாவின் கைநெசவுத் தொழில் க்ஷீணமடைந்திருந்த போதிலும் முழுதும் ஒழியவில்லை. தற்காலத்தில் கைநெசவின் முன்னேற்றத்திற்காகத் துரைத்தனத்தாராலும், தேசாபிமானிகளினாலும் பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. கைத்தறியைச் சீர்படுத்துவதற்கு வேண்டிய சாதனங்களாவன :— (1) நெசவுகாரரின் படிப்பை அபிவிருத்தி பண்ணவேண்டும் ; (2) நெசவு சம்பந்தமாகக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துதல் ; (3) தொழில் சம்பந்தமாகக் கடன் வாங்குதற்குரிய வசதிகள் ஏற்படுத்தல்.

நெசவுத் தொழிற்சாலைகள்

சென்ற 50 வருஷங்களாக பம்பாய் மாகாணத்திலும், மத்திய மாகாணத்திலும் பொறித்தறித் தொழிற்சாலைகள் பெருகிக்கொண்டு வருகின்றன. 1881-ம் வருஷம் 55 பஞ்சு நெசவுத் தொழிற்சாலைகளிருந்தன ; 1923-ம் வருஷம் அவைகளின் லக்கம் 321 ; நெசவுத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் நூலும் துணியும் விருத்தியடைந்திருப்பதைக் கீழ்க்கூறிய தொகைகளால் விளக்கலாம்.

வருஷம்	நூல் மிலியன் பவுண்டு	துணி மிலியன் பவுண்டு	துணி மிலியன் கெஜம்
1914	683	274	1164
1923	706	405	1725
1933	1016	695	3170
1936	1056	761	3571
1937	1051	782	3572
1938	1160	864	4084

இப்பொழுது இந்தியாவிலுள்ள இயந்திரச் சாலைகள் தொழில் தன்மையில் அயல்தேசத்துச் சாலைகளுக்குச் சமமாக இருக்கின்றன. ஆனால் இந்தியாவிலுள்ள ஜனங்களுக்கெல்லாம் உள்நாட்டுத்துணி போதுமானதில்லை. ஆகையால் வருஷாவருஷம் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு அயல்நாட்டுத்துணிகள் இறக்குமதியாகின்றன. 1914-ம் வருஷம் முதல் இந்தியாவின் நெசவுத்தொழில் வளர்ந்துகொண்டே வருகிறது. தறிகளும், இராட்டினங்களும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. இந்தியாவில் நூற்கப்படும் நூலில் பாதிக்குமேல் 1—20 நம்பர் நூலாக நூற்கப்படுகிறது. ஆகையால் இந்தியாவில் நூற்கப்படும் நூல் பருமனாகவே இருக்கிறது. மெல்லிய நூல் நூற்பதற்கு வேண்டிய முயற்சிகள் ஏற்பட்டுவருகின்றன. துணிச்சரக்குகளின் சராசரி இறக்குமதியும், அவ்வித இறக்குமதியால் லங்கிஷார், ஜப்பான் இவைகளின் பகுதியும் கீழ்க்கூறிய தொகையால் விளக்கலாம்.

வருஷம்	இறக்குமதி மிலியன் கெஜம்	நூற்று வீதம் இங்கிலாந்து	நூற்று வீதம் ஜப்பான்
1909-10–1913-14	2617	97·4	0·1
1919-20–1923-24	1336	88·8	8·5
1923	1593	91·2	6·8
1933	1225	49·1	48·5
1936	947	46·4	52·4
1937	954	43·7	54·6
1938	591	45·1	51·8

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவில் 195 இயந்திரச் சாலைகளும் (Mills), 42,000 தறிகளும், 5 மிலியன் இராட்டினமும் இருந்தன. 1914-ம் வருஷத்தில் 264 இயந்திரச்சாலைகளும், 96,688 தறிகளும், 6½ மிலியன் இராட்டினமும் ஆயின. 1937-ம் வருஷம் 370 இயந்திரச் சாலைகளும், 197,810 தறிகளும், 9¾ மிலியன் இராட்டினமும் கணக்கிடப்பட்டன.

பட்டு நெசவு (Silk Weaving)

இந்தியாவில் பட்டு நெசவு அநேகமாகக் கைத்தறியினால் செய்யப்படுகிறது. கிழக்கிந்திய வணிகக் கூட்டத்தார் (East India Company) அரசாட்சியின் ஆரம்ப காலத்தில் பட்டுத் தொழில் உன்னத பதவியிலிருந்தது. 1766—1785-ம் வருஷம் வரை வங்காளத்திலிருந்து இங்கிலாந்துக்கு, சராசரி 5,60,285 பவுண்டு நிறையுள்ள பட்டு ஏற்றுமதியாயிற்று. ஜப்பான், சைனா முதலிய தேசங்களிலிருந்து இந்தியாவுக்குப் பட்டு வரத் தொடங்கியது. இதுமுதல் இந்தியாவின் பட்டுத்தொழில் க்ஷீணமடைந்து விட்டது. இந்தியாவில் இப்பொழுது பட்டுத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர் வெளி தேசங்களின் பட்டு நூல்களையே உபயோகித்து வருகின்றனர். பல தேசங்களிலிருந்து செயற்கைப் பட்டு வருவதால் இயற்கைப் பட்டுத் தொழில் குறைந்துகொண்டே வருகிறது. தற்காலத்தில் இந்தியாவின் பட்டுத் தொழில் குடிசைத் தொழிலாகவே இருக்கிறது. அதனால் அநேக பெண்டிர் இத்தொழிலில் உழைக்கமுடியும். இத்தொழிலில் தேர்ந்தவரின் அபிப்பிராயமென்னவென்றால் இந்தியாவில் பட்டுத் தொழில் பொறித் தொழிலாக அமைக்காமல் கைத்தறியாகவே அமைக்க வேண்டும் என்பதே. நெசவுத் தொழிலை இந்திய கம்மியன் தன் இருப்பிடத்திலேயே குடிசைத் தொழிலாக நடத்துவது மிகவும் பொருத்தமாயிருக்கிறது. ஜப்பான் தேசத்தார் நெசவுத் தொழிலில் முன்னேற்றமடைந்திருப்பதற்கு இதுவே காரணமென்பது பெரியோரின் அபிப்பிராயம்.

சணல் தொழில் (Jute Industry)

கோணிப்பைகள் செய்வதற்குச் சணல் முக்கிய மூலப் பொருளாயிருக்கிறது. சென்ற 75-வருஷங்களாக வங்காளத்தில் சணல் ஏராளமாக விளைந்துவருகின்றது. சணல் நூற்கும் இயந்திரசாலை 1855-ம் வருஷம் சிராம்பூர் என்னும் இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. 1859-ம் வருஷம் முதல் பொறித்தறி தொழிற்சாலை ஹூகிலி (Hughli) நதிக்கரையில் ஸ்தாபிக்கப்பட்டது. நாளடைவில் ஹூகிலி நதியின் இருகரைகளிலும் அநேக சணற் றொழிற்

சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. ஆதி முதல் இத்தொழில் விருத்தியடைந்துகொண்டே வந்தது. சணற்றொழிற் சாலைகளில் போடப்பட்டிருக்கும் மூலதனத்தைக் கவனிக்குமிடத்து அம்மூலதனம் பெருகிக்கொண்டே வருகிறது. 1901-ல் 36 சணற்சாலைகளும், 16,119 தறிகளும், 331,382 இராட்டினமும் இருந்தன. 1,14,795 நபர்களுக்கு அதன் மூலமாகப பிழைப்புக் கிடைத்தது. 1914—18-ம் வருஷ யுத்தத்தால் இத்தொழில் விருத்தியடைந்தது. 1930-ம் வருஷம் தறிகள் எண்ணம் 58,000; தற்காலத்தில் 67,000 தறிகள் இருக்கின்றன. அவற்றுள் 64,509 வங்காளத்திலிருக்கின்றன. இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் சணலின் தொகையிலிருந்து சணல் வியாபாரம் எவ்வாறு கூடுதலடைந்திருக்கிறதென்பதை விளக்கலாம்.

வருஷம்	ஏற்றுமதி சணல் (பண்படாதது) (000 டன்கள்)	ஏற்றுமதி சணல் (பண்படுத்தியது) (000 டன்கள்)	மொத்தம்	பண்படுத்திய சணல் நூற்று வீதம்
1920	592	652	1244	52
1925	696	812	1508	54
1929	898	911	1809	50
1933	563	680	1243	55
1936	771	752	1523	49
1937	820	972	1792	54
1938	747	1020	1767	58

சணற்றொழிலிலுள்ள விடுமுதல் 18 கோடி ரூபாய்களும், 21/8 மிலியன் பவுனுமாக மதிக்கப்பட்டிருக்கிறது. இவ்விடுமுதல் அநேகமாக ஐரோப்பியர் கைவசமிருக்கிறது.

கம்பளித் தொழில் (Woollen Industry)

இந்தியாவின் கம்பளித் தொழில் ஜெர்மனி தேசத்துக் கம்பளங்களின் போட்டியினால் அதிகமாக விருத்தியடையாமலிருக்

கிறது. நவீன முறைப்படி கம்பளங்களைச் செய்வதற்கு வேண்டிய தொழிற்சாலைகள் கொஞ்சகாலமாக ஏற்பட்டிருக்கின்றன. பஞ்சாப், ஐக்கிய மாகாணங்கள் இவைகளில் இத்தொழில் முக்கியமாக விருத்தியடைந்திருக்கிறது. டாரிவால் (Dhariwal), கான்பூர் முதலியன இத்தொழில் சம்பந்தமான முக்கியஸ்தலங்கள். கம்பளங்கள் செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் கிடைக்காமலிருப்பது இத்தொழிலின் முன்னேற்றத்திற்கு ஒரு இடையூறாயிருக்கிறது.

தாள் தொழில் (Paper Industry)

தற்காலத்தில் இந்தியாவில் உண்டாக்கப்படும் தாள் இயந்திர உதவியால் செய்யப்படுகிறது. 1870-ம் வருஷம் முதல் காகித சாலை பாகீரதி நதியின் கரையில் ஸ்தாபிக்கப்பட்டது. வட இந்தியாவில் ஏராளமாக வளரும் சாபை (Sabai) புல் தாள் செய்வதற்கு மூலப்பொருளாயிருக்கிறது. தாள் செய்வதற்கு மரச் சோறு அதிகமாக உபயோகப்பட்டுவரவில்லை. நாணலிலிருந்து தாள் செய்வதற்குள்ள வழிகள் ஆராய்ச்சி பண்ணப்பட்டு வருகிறது. இந்தியாவின் தாள் தொழிலுக்கும் வெளி நாடுகளிலிருந்து வரும் தாள் தொழிலுக்கும் போட்டி இருக்கிறது. ஆகையால் தாள் தொழில் முன்னேற்றமடையக் காப்பு வரிகள் வேண்டுமென்பது அநேகருடைய அபிப்பிராயம்.

சாயம் போடுதல் (Dyeing)

முன் ஒரு காலத்தில் சாயம் போடுதல் ஒரு பெரிய தொழிலாக இருந்தது. ஆனால் இப்பொழுது செயற்கைச் சாயப் பொருள்கள் ஜெர்மனி தேசத்திலிருந்து வருவதால் உள்நாட்டுச் சாயத்தொழில் க்ஷீணமடைந்திருக்கிறது. இதனால் சாயம் போடுவோர் வேலையில்லாமல் மற்ற வழிகளில் ஜீவனோபாயம் தேடும்படி ஏற்பட்டிருக்கிறது.

சிமிந்துத் தொழில் (Cement Industry)

பண்டைக் காலத்தில் இந்தியாவில் கட்டிட வேலைகளுக்குக் கருங்கல், செங்கல், மரம் முதலியவற்றை உபயோகப்படுத்தினர்.

இப்பொழுது சிமிந்து உபயோகப்பட்டு வருகின்றது. சிமிந்துத் தொழில் 1904-ம் வருஷம் சென்னையில் (Madras) ஆரம்பிக்கப் பட்டது. இந்தியச் சிமிந்து கம்பெனிகள் 1914-ம் வருஷம் முதல் எற்பட்டன. இப்பொழுது ஆண்டுதோறும் 1 மிலியன் டன் சிமிந்து இந்தியாவில் உண்டாக்கப்படுகிறது. அயல் தேசங் களிலிருந்து இறக்குமதியாகும் சிமிந்து குறைந்துகொண்டே வருகிறது.

சர்க்கரைத் தொழில் (Sugar Industry)

ஆதிகாலமுதல் இந்தியாவானது கரும்பு விளைச்சலுள்ள தேசமாகவே இருந்தது. ஆனல் கரும்பிலிருந்து வெல்லம் பழைய முறையில் உண்டாக்கப்பட்டது. கவர்ன்மெண்டார் பாதுகாப்புவரி போடத்தொடங்கியது முதல் இந்தியாவில் சர்க் கரை உண்டாக்குவதற்குள்ள இயந்திரசாலைகள் ஏராளமாக ஸ்தா பிக்கப்பட்டன. இப்பொழுது சுமார் 150 இயந்திரச்சாலைகள் இருக்கின்றன. உயர்தர சர்க்கரை ஆண்டிற்கு 1 மிலியன் டன் உண்டாக்கப்படுகிறது. கரும்பு விளைவிக்கக்கூடிய நிலங்கள் ஏராளமாயிருந்தபோதிலும் ஒரு எக்கரில் உண்டாகும் சர்க்கரை குறைவாகவே இருக்கிறது. இது விஷயமாகக் கவர்ன்மெண் டார் ஆராய்ச்சி பண்ணி வருகிறார்கள். கரும்புகளில் சரியான இனமும் பயிரிடவேண்டும். உழைப்பைக் குறைக்கும் இயந்திரங் கள் உபயோகப்படுத்துவதால் வட இந்தியாவில் கரும்பு பயிரிடு தல் ஒரு மணங்குக்குச் சராசரி 4·7 அணுவாகிறது; கையினல் பயிரிடுவதால் 5 அல்லது 6 அணுவாகிறது. தற்காலத்தில் கரும்பு பயிரிடுமுறை அதிக நஷ்டமடையக்கூடிய முறையாயிருக் கிறது. கரும்பைப் பிழியும் இயந்திரங்கள் மாடுகளால் இயக்கப் படுவதால் கரும்பிலுள்ள சத்து குறைவாகவே எடுக்கப்படுகிறது.

தஞ்சாவூர் டெல்டாவில் கரும்பு சாகுபடி செய்யப் பணத் தொகை மிகவும் அதிகமாகிறது. அது ஆண் மக்களுக்கும், பெண் மக்களுக்கும் கொடுக்கும் ஊதியத்தையும், எருவின் கிரையம், அதைப் பரப்பும் செலவு முதலியவைகளையும் பொறுத்திருக்கிறது. ஒரு எக்கர் நிலத்தில் கரும்பு சாகுபடி செய்ய விதைகள், கரும்பு

வெட்டும் கூலி உட்பட ரூ. 150லிருந்து ரூ. 175 வரை ஆகிறது. இங்கு ஆள் ஒன்றுக்கு ஐந்தணா வீதமும், பெண்களுக்கு இரண்டணா வீதமும் கூலி வழங்கி வருகிறது. இதனடியில் கரும்பு சாகுபடி செய்ய சராசரி என்ன செலவாகுமென்ற விபரம் பின் குறிப்பிட்டிருக்கிறது. முட்டுக்கொடுக்க ஏற்படும் செலவையும், கரும்பு விதைகள் விலைக்கு வாங்கும் செலவையும் சேர்க்காமல் ஒரு எக்கருக்கு 100 ரூபாயிலிருந்து 125 ரூபாய்வரையில் தான் செலவாகும். ஒரு எக்கர் கரும்புப் பயிரிலிருந்து கிடைக்கும் வருமானம் கரும்பின் இடையைப் பொறுத்தும், வெல்லம், சர்க்கரை முதலியவைகளுடைய விலையைப் பொறுத்தும், கரும்பாகவே சமீபத்திலுள்ள ஆலைகளுக்குக் கொடுத்தால் அச்சமயம் அவர்கள் நிதானிக்கும் விலைவாசி முதலியவைகளைப் பொறுத்துமிருக்கிறது. 30 டன் கரும்பு கொடுக்கக்கூடிய ஒரு எக்கர் நிலத்திலிருந்து எச்செலவும் போக 75 ரூபாயிலிருந்து 150 ரூபாய்வரையுள்ள ஒரு தொகையை எதிர்பார்க்கலாம்.

தஞ்சாவூர் டெல்டாவில் கரும்பு ஒரு எக்கர் சாகுபடி செய்யச் சராசரி செலவு :—

		ரூ. அ. பை.
4 தடவைகள் உழுவதற்கு	...	10—0—0
கிடங்கு வெட்ட	...	6—0—0
எருக்களும் எரு பரப்புதலும் :—		
20 வண்டி சாணி எரு வண்டி ஒன்றுக்கு 8 அணா வீதம்	...	10—0—0
200 ராத்தல் எலும்புத்தூள்	...	6—8—0
100 ராத்தல் அமோனியா எரு	...	5—0—0
500 ராத்தல் கடலைப் பிண்ணாக்கு	...	15—0—0
மேற்படி எருக்களை வயல்களில் கொண்டு போய்ப் பரப்ப	...	5—0—0
சணப்பு பசுந்தாள்—விதைகளின் விலை—விதைபோடச் செலவு—தழை பறித்துப் போடச் செலவு முதலியன	...	3—0—0
12,000 விதைகளுக்கு—1,000 விதைகள் ரூ. 2—8—0 ஆக	...	30—0—0

கரும்பு விதைகள் நடுவதற்கு	6—0—0
களை எடுக்க	3—8—0
மண்ணணைக்க ...	12—0—0
கரும்புத் தோகைகளை இரண்டு தடவை உரிக்க ...	7—0—0
முட்டுக் கொடுத்துக் கட்டுவதற்கு ...	18—0—0
தண்ணீர் பாய்ச்ச, வடிகட்ட ...	8—0—0
கரும்பு வெட்டியெடுக்க ...	30—0—0
	175—0—0

(குறிப்பு:—ஒரு டன் கரும்பை வெல்லமாகச் செய்யச் சராசரி ரூபாய் மூன்று ஆகிறது).

பதன் செய்த தோல் (Leather):—இந்தியாவில் ஏராளமான அதளும் தோலும் உண்டாகின்றன. ஆனால் அவை பெரும்பாலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. 1903-ம் வருஷம் சென்னையில் தோல் பதனிடுவதற்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டது. பதனிட்ட தோல் விஷயமாய் மூன்று இடங்களில் (மதராஸ், கான்பூர், கல்கத்தா) ஆராய்ச்சிச்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தியாவிலுள்ள அதளும், தோலும் (Hides & skin) குறைந்த விலைக்குக் கிடைக்கும் பொருட்டு அவைகளின்பேரில் ஒரு ஏற்றுமதி வரி (15%) 1919-ம் வருஷம் விதிக்கப்பட்டது இந்தியாவில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் எல்லா இடங்களிலும் காணலாம்.

எண்ணெயும், எண்ணெய் விதைகளும் (Oil & oil seeds):- இந்தியாவில் எல்லா இடங்களிலும் எண்ணெயும் எண்ணெய் வித்துக்களின் சம்பந்தமான தொழில்களையும் காணலாம். பருத்தி விதை சம்பந்தமான தொழிலினால் வட அமெரிக்கா ஐக்கிய நாடுகள் தொழிலபிவிருத்தி யடைந்திருக்கின்றன. இந்தியாவிலிருந்து பருத்தி விதை ஏற்றுமதியாவது தேசத்திற்கு அதிக நஷ்டம் உண்டாவதென்றே கருதப்படுகிறது. எண்ணெய் வித்துக்களை ஏற்றுமதி செய்வதால் அவைகளிலிருந்து எண்ணெய் உற்பத்தி செய்யும் தொழில்கள் குறைவதுடன், பிண்ணாக்கு முதலியன நிலத்துக்கு எருவாக உபயோகப்படுத்த முடியாமலுமிருக்கிறது.

உலோகசம்பந்தமான கைத்தொழில்கள் (Metallurgial industries):—இரும்புத் தொழில்கள் :-பழைய காலத்தில் இந்தியாவின் இரும்புத் தொழில்கள் உன்னத பதவியிலிருந்தன. இரும்பை உருக்கலும், உருக்கு இரும்புகள் செய்தலும் பழைய கால முதல் வழங்கிவந்தது. உலோகங்களில் வேலை செய்யும் தொழில்களில் இந்தியரின் கீர்த்தி பல தேசங்களில் பரவியிருந்தது. 1912-ம் வருஷத்தில் டாட்டா இரும்புத் தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட்டது. இத்தொழிற்சாலையில் நவீன முறையில் இரும்புச் சாமான்கள் செய்யப்படுகின்றன. கவர்ன்மென்டார் இறக்குமதி வரியினாலும், உதவிப்பொருளாலும் இரும்புத் தொழில் முன்னேற்றமடைவதற்கு வேண்டிய முறையை அனுசரித்து வருகின்றனர்.

பித்தளை, செம்பு இவைகளால் ஏராளமான பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. மூர்ஷிடபாத், ஸ்ரிநகர், காசி, மிர்ஸாபூர், மோரடபாத் இவைகளை முக்கிய ஸ்தலங்களாகக் குறிப்பிடலாம். மூல்டான், கட்டாக், மதுரை, பூனா முதலிய இதர பட்டணங்களில் செய்யப்படும் சித்திர வேலையுள்ள சாமான்கள் இந்தியா முழுதும் கீர்த்தியடைந்திருக்கின்றன. இத்தொழில்கள் கைவினைகளாகவே காணப்படுகின்றன. இரும்புப் பெட்டிகள் செய்யும் தொழில் எல்லாவிடங்களிலும் வியாபித்திருக்கிறது. அலுமினியம் சம்பந்தமான கைத்தொழில் சென்ற 30 வருஷங்களாக மதராஸில் பெரிய தொழிலாக அமைக்கப்பட்டிருக்கிறது.

கண்ணாடித் தொழில் (Glass industries) :—இந்தியாவில் நவீன முறையில் கண்ணாடிச்சாமான்கள் செய்வதற்கு வேண்டிய சாதனங்கள் இன்னும் ஏற்படவில்லை. முதலாவது தேர்ச்சியடைந்த வேலைக்காரர் வேண்டும். இரண்டாவது சீதோஷ்ணநிலைக்குத் தக்கவாறு ஊதுஉலைகள் அமைப்பதற்குரிய அனுபவம் வேண்டும். மூன்றாவது உயர்தரக் கண்ணாடிகள் செய்வதற்கு வேண்டிய தொழில் முறைகள் கற்பதற்குரிய வசதிகளில்லை. ஆனால் இந்தியாவில் கண்ணாடிச் சாமான்கள் செய்வதற்கு வேண்டிய சில அனுகூலங்களிருக்கின்றன. முதலாவது தீயிரை (fuel) இலாபகரமாய்க் கிடைக்கின்றது. இரண்டாவது கண்ணாடிச் சாமான்கள் உள்நாட்டிலேயே விற்பனை செய்யமுடியும்.

ரசாயனத் தொழில்கள் (Chemical industries) :—இந்தியாவின் ரசாயனத் தொழில்கள் அயல் நாடுகளின் போட்டியால் க்ஷீணமடைந்துவிட்டன. ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய்களுக்கு ரசாயன சரக்குகள் இறக்குமதியாகின்றன. சில ஔஷதங்களும், தைலங்களும் சிறிய தொழிற்சாலைகளில் செய்யப்படுகின்றன. ஆனால் பெரும்பாலும் அயல்நாட்டு மருந்துச் சரக்குகளே இறக்குமதியாகின்றன. ரசாயன சரக்குகள் நம் தேசத்திற் செய்ய முடியாததால் தேசத்தின் அநேக தொழில்கள் விருத்தியடையாமலிருக்கின்றன. அநேக காடிகளும் (Acids) காரங்களும் (alkalis) இந்தியாவிற் செய்யமுடியாததால் பேபர், ஔஷதங்கள், நெருப்புப்பெட்டி முதலியன ஏராளமாகச் செய்யமுடியவில்லை. கனமான ரசாயனப்பொருள்கள் ஆதாரக் கைத்தொழிலாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் கரிப்பொருள்கள் (Carbon compounds) செய்வதற்கு ஏராளமான வசதிகளிருப்பதாக சில நிபுணர்கள் எண்ணுகின்றனர். இந்தியாவில் கீல் எண்ணெய் தொழில் (Coal tar industry) ஏற்படுத்துவது அவசியம். சமீப காலத்தில் இந்தியாவின் ரசாயனத் தொழில்கள் நவீன முறையில் அமைக்கப்பட்டு வருகின்றன. பரோடாவில் அலம்பிக் ரசாயனத் தொழிற்சாலையும் (Alembic chemical works) கல்கத்தாவில் வங்காள ரசாயனத் தொழிற்சாலையும் (Bengal chemical works) உதாரணமாக எடுத்துக்கூறலாம்.

புகையிலைத் தொழில் (Tobacco industry) :—புகையிலைத் தொழிற்சாலைகளைப் பல இடங்களில் காணலாம். புகையிலைச் சுருட்டுகள் செய்யும் சங்கேதம் இந்தியர்கள் இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்ளவில்லை. இந்தியாவில் செய்யப்படும் சுருட்டுகளைவிட அமெரிக்காவில் செய்யப்படும் சுருட்டுகள் அயல்நாடுகளில் மேன்மையடைந்திருக்கின்றன.

இந்தியாவில் இக்காலம்வரை பெருவீதக் கைத்தொழில்கள் அன்னியநாட்டு மூலதனத்தாலே அபிவிருத்தியடைந்திருக்கின்றன. இவ்வாறு அன்னிய மூலதனத்தால் கைத்தொழில்களை விருத்திபண்ணுவது தேசத்திற்கு நஷ்டமா அல்லது லாபமா என்பது ஒரு பெரிய கேள்வி. அன்னிய நாட்டு மூலதனத்தால் தொழில்களை விருத்தி பண்ணுவது எப்பொழுதும் ஒரு தேசத்

திற்கு நஷ்டத்தை விளைவிப்பதாக நாம் எண்ணக்கூடாது. ஜப்பான் தேசத்தின் முன்னேற்றத்தைக் கவனிக்குமிடத்து அயல் நாட்டு மூலதனத்தால் ஜப்பானியர் தொழில்களை அபிவிருத்தி பண்ணியிருக்கின்றனர். ஆனால் தொழில்களில் ஏற்படும் லாபத்தைக் கூடியமட்டும் தேசத்தைவிட்டுப் போகவிடாமல் தடுத்திருக்கின்றனர். இந்தியாவில் ரெயில் பாதைகள், நீர்ப்பாசனம் இவைகள் அயல் நாட்டு மூலதனத்தின் உதவியால் தேசத்தின் நன்மைக்காகவே உபயோகப்பட்டுவருகின்றன. ஆனால் இந்தியாவின் கைத்தொழில்களை உள்நாட்டு மூலதனத்தால் விருத்திபண்ண வேண்டும். அயல் நாட்டு மூலதனத்தை உபயோகிப்பதால் உண்டாகும் நஷ்டங்களாவன — (1) தொழில்களில் கிடைக்கும் லாபம் பெரும்பாலும் அயல் நாடுகளுக்குக் கொண்டுபோகப்படுகிறது. (2) தொழில்கள் நடத்தும் முறையும் கூடியமட்டும் மூலதனத்தின் நன்மையை அனுசரித்திருக்கிறது. (3) அன்னிய முதலாளிகள் தங்கள் செல்வாக்கால் அரசியல் முறையையும்கூடத் தமக்கு வேண்டியபடி நடத்த எத்தனிக்கின்றனர். (4) தாதுப் பொருள்கள் சம்பந்தமான தொழில்களைத் தன் நலப் பொருளாதார அபிவிருத்தியை உத்தேசித்து நடத்துவதால் தேசத்தின் மூலப் பொருள்கள் விரைவாய்க் குறைந்துபோகின்றன.

இந்தியாவில் எத்தொழிலை முதன்மையாக வளர்க்க வேண்டியது — விவசாயமா அல்லது கைத்தொழிலா? இந்தியா தேசமானது இயற்கை அமைப்பால் விவசாயத்திற்கே ஏற்ற தேசமென்பது சிலர் அபிப்பிராயம். ஆனால் வேறு சிலர் கைத்தொழில்களில் பிரதானமடைய வேண்டுமென்று கூறுகின்றனர். அப்படியில்லாவிடில் தேசத்தின் வருமானத்தை அதிகரிக்க முடியாது. தேசத்தின் செல்வமும், செழிப்பும் கைத்தொழில்களால்தான் அதிகரிக்கமுடியும். இவ்விரண்டு அபிப்பிராயங்களையும் கவனிக்குமிடத்து விவசாயமும், கைத்தொழிலும் ஒன்றையொன்று பொறுத்திருக்கிறது. வட அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் கைத்தொழிலும், விவசாயமும் சமமாகவே விருத்தியடைகின்றன. அதே மாதிரியாக இந்தியாவிலும் கைத்தொழிலும், விவசாயமும் ஒன்றுக்கொன்று துணையாக வளரச் செய்யவேண்டும்.

இந்தியாவில் கைத்தொழில்கள் விருத்தியடைவதற்கு வேண்டிய சாதனங்களிருக்கின்றன. தவிரவும் சமீபகாலமுதல் பெருவீதக் கைத்தொழில்கள் விருத்தியடைந்து வருகின்றன. தேசத்தின் பொருளுற்பத்தி விஷயமாகக் கைத்தொழில்களை எவ்வாறு அமைக்கவேண்டும்? பெருவீதப் பொருளுற்பத்தியினால் உண்டாகும் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் சற்றுக் கவனிப்போம். பெருவீதப் பொருளுற்பத்தியினால் உண்டாகும் அனுகூலங்களாவன :—

(1) கூலிவேலைக்கு உழைப்போரை அவர் திறமைக்குத் தக்கபடி வகைவகையாகப் பிரிக்கமுடியும். (2) நவீன இயந்திரங்களை உபயோகிக்க முடியும். (3) பொருளுற்பத்தி விஷயத்தில் சீர்திருத்தங்கள் இலகுவாய் ஏற்படுத்தமுடியும். (4) சரக்குகளை இலாபகரமாய் உற்பத்தி செய்ய முடியும். (5) உப பலன்கள் (bye-products) பல ஏற்படுகின்றன. (6) நவீன இயந்திரங்களை நினைத்து உண்டுபண்ணுவதற்குரிய ஆவசியகம் ஏற்படுகின்றது.

பெருவீதப் பொருளுற்பத்தியினால் உண்டாகும் இடையூறுகளைச் சற்றுக் கவனிப்போம் :—(1) உண்டாக்கப்படும் பொருள்களுக்கு விற்பனையில்லாமற்போனால் அதிக நஷ்டம் ஏற்படுகிறது. (2) ஏராளமான மூலதனமில்லாமல் பெருவீதப் பொருளுற்பத்தி சாத்தியமன்று. (3) பெருவீதப் பொருளுற்பத்தியினால் உண்டாகும் இலாபத்தினால் முதலாளிகளின் செல்வம் அதிகரித்து வருகிறது. ஆனால் கூலிவேலைக்காரர் சுவாதீனமன்றி வேலை செய்யும்படி ஏற்படுகிறது.

இது நிற்க, சிறுவீதப் பொருளுற்பத்தியினால் உண்டாகும் லாப நஷ்டங்களைச் சற்றுக் கவனிப்போம் :- (1) சிறிய தனமுள்ளவர்கள் தம் தகுதிக்குத் தக்கபடி தொழில்களை அமைத்து நடத்த முடியும். (2) சிறிய கைத்தொழிலில் உழைப்போர் சுதந்தர விர்த்தியைக் கைக்கொள்ளமுடியும். (3) சிறிய தொழில்கள் ஜன நெருக்கமுள்ள நகரங்களில் அமைக்காமல் சௌகரியமான இடங்களில் அமைக்க முடியும். தவிரவும் சிறிய தொழிலை நடத்துவோர் சுவாதீனமாய்த் தம் தொழிலை நடத்தமுடியும். (4) சிறுவீதத் தொழில் அமைப்பால் பொருளுற்பத்தி அதிகமாகப் பெருக்க முடி

யாது. ஆகையால் தேசச் செழிப்பும், செல்வமும் குறைவாகவே யிருக்கும். ஆனால் சன்மார்க்க வழியையும், சமூக நன்மையையும் கவனித்தால் சிறுவீதப் பொருளுற்பத்தியே விசேஷமென்று சொல்லலாம்.

இந்தியாவின் தொழிற் புரட்சி (The Industrial Revolution in India)

இப்பொழுது இந்தியாவில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் தொழிற் புரட்சியில் மேனாட்டு வழிகளைப் பின்பற்றவேண்டுமோ அல்லது விவசாயத்தையும், குடிசைத் தொழில்களையும் பிரதானமாகக் கைக்கொள்ளவேணுமா என்பதைப்பற்றி அபிப்பிராய பேதமிருக்கிறது. இந்தியாவின் தொழிற் புரட்சியை மேனாட்டு வழிகளில் பின்பற்றவேணுமென்று அபிப்பிராயமுள்ளவர்கள் அவ்விதத் தொழிற் புரட்சியை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். அவ்விதத் தொழிற் புரட்சியைத் துரிதப்படுத்தத் தயாராயிருக்கின்றனர். இந்தியாவின் புனர் ஜனனம் தொழிற் புரட்சியினால்தான் ஏற்படுமென்ற கொள்கையுடையவராயிருக்கின்றனர். ஆனால் வேறு சிலர் மேனாடுகளின் முறையில் தொழிற் புரட்சி ஏற்படுதலை இந்தியர் வெறுக்கவேண்டுமென்கின்றனர். மேனாட்டு வழியைப் பின்பற்றுவதால் ஏற்படும் சடப்பொருள்கள் இந்தியாவின் சன்மார்க்க நிலைமையைக் கெடுத்துவிடுமென்று நினைக்கின்றனர். சுருங்கச் சொல்லுமிடத்து ஒரு வகுப்பினர் மேனாட்டு முறையைப் பின்பற்றுவதால் இந்தியாவுக்குச் செல்வமும் செழிப்பும் உண்டாகுமென்று எதிர்பார்க்கின்றனர்; மற்றொரு வகுப்பினர் மேனாட்டு முறையிலுள்ள தொழிற் புரட்சியினால் இந்தியாவின் சமூக வாழ்க்கையும், பொருளாக்க வாழ்க்கையும் கெடுதலடையுமென்று கூறுகின்றனர்.

இப்பேர்ப்பட்ட அபிப்பிராய பேதமிருப்பதால் உண்மையான வழி என்னவென்று சற்றுக் கவனிப்போம். இவ்விரண்டு கொள்கைகளிலும் சில உண்மைகள் இருக்கின்றன. மேனாடுகளில் ஏராளமான பணம் இருந்தபோதிலும் தனத்தின் பக்கத்தில் தரித்திரத்தையும் பார்க்கிறோம். தொழிற் புரட்சி ஏற்பட்ட காலமுதல்

ஐரோப்பாவிலுள்ள தேசங்களில் உழைப்பாளிகள் இயந்திரங்களின் அடிமைகளாகவும், வேலையில்லாத் திண்டாட்டத்தினுலும் எவ்வாறு கஷ்டப்படுகின்றனரென்பது தெரிந்த விஷயம். பொருளாதார நூலின் கொள்கைகள் போட்டியையே அடிப்படையாகக் கொண்டிருப்பதால் தனவான்களுக்குத் தனம் விருத்தியாவதும், வறியவர்களுக்கு வறுமை விருத்தியாவதும் சகஜமாயிருக்கிறது. தவிரவும் புதிய தொழிற் கோட்பாடுகளால் ஜனங்களின் இயல்பான வாழ்க்கை ஒழிகின்றது.

ஆனல் தொழில் மாறுபாடுகள் எல்லாத் தேசங்களிலும் நாளடைவில் பரவிக்கொண்டே யிருக்கின்றன. அவற்றைத் தடுத்தல் சுலபமன்று. ஆகையால் காலத்திற்கேற்ற தொழில் முறைகளைக் கைப்பற்றுவதே நமது கடமையாகும். இந்தியாவின் தற்காலத் தொழிற் புரட்சியில் நவீன முறையையும் தேசத்தின் பழைய முறைகளையும் கூடியமட்டும் இசையப்பண்ணுதலே சிறந்ததாகும்

இந்தியாவில் பெருவீதப் பொருளுற்பத்தியைக் கைப்பற்றுவதாகத் தீர்மானித்தாலும், சிறிய கைத்தொழில்கள் க்ஷீணமடைவதற்கு நியாயமில்லை. கூட்டுறவினுல் அநேக சிறிய கைத்தொழில்களை முன்னேற்றமடையச் செய்யலாம். ஜப்பான் தேசத்தில் சிறிய கைத்தொழில்களே முன்னேறியிருக்கின்றன. வேலைக்காரர்களின் திறமையினுலும், கவர்ன்மெண்டார் விதிக்கும் பாதுகாப்பு வரிகளினுலும் சிறிய கைத்தொழில்கள் உன்னத நிலைமையிலிருக்கின்றன. சிலவேளை சிறிய கைத்தொழில்கள் பெரிய கைத்தொழில்களுடன் ஒன்றுக்கொன்று சேர்ப்புத் தொழிலாக விளங்குகின்றன. ஸுவிட்ஸர்லண்ட் தேசத்து ஜனங்களில் மூன்றில் ஒரு பங்கு குடிசைத் தொழில்களிலே ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்தியாவில் அநேக குடிசைத் தொழில்களிருக்கின்றன. அத்தொழில்கள் முன்னேற்றமடையப் பொருளுதவியும், தொழிற் கல்வியும் இன்றியமையாதவை. கவர்ன்மெண்டார் சிறிய தொழில்களுக்குச் செய்துவரும் உதவிகளில் சிலவற்றை இங்குக் குறிப்பிடலாம். முதலாவது 1923-ம் வருஷத்து 5-வது ஆக்டின்படி சென்னை கவர்ன்மெண்டார் சிறிய தொழில்களுக்குப் பொருளுதவி

செய்கின்றனர். செசவு சம்பந்தமாகக் கல்வி கற்பிக்கப்படுகின்றது. வருஷா வருஷம் பொருட்காட்சிகள் அமைக்கின்றனர்.

பொருளாக்கத் திறனைக் கல்வியினால் அதிகப்படுத்தலாம். ஒவ்வொரு நாகரீகமடைந்த தேசத்திலும் தொழிற் கல்வி, துரைத்தனத்தாரால் அல்லது அவர்களின் ஆதீனத்தில் விருத்தியடைந்து வருகிறது. வட அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் ஒவ்வொரு நாட்டிலும் தொழிற்கல்விச்சாலை ஸ்தாபித்திருக்கின்றனர். இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் முதலிய தேசங்களில் இக் கல்வி விஷயமாய் ஏராளமான பொருள் செலவழிக்கின்றனர். ஆனால் இந்தியாவில் தொழிற்கல்வி சம்பந்தமாக அதிக கலா சாலைகளில்லை. பம்பாயில் விக்டோரியா தொழிற் கல்விச் சாலையில் இயந்திரசாலைகளில் வேலை செய்வதற்குரிய முறைகளைக் கற்பிக்கின்றனர். ரூர்க்கி, சிப்பூர், பூனா இவைகளில் கட்டிடக் கலை கற்பிப்பதற்குப் பெரிய கலாசாலைகள் இருக்கின்றன. இவைகளில் தொழிற்கல்வி சம்பந்தமான படிப்புகள் கற்பிக்கின்றனர். தற்காலத் தொழிற் கல்வி முறைக்கும் பழைய காலத்துக் கல்வி முறைக்கும் வித்தியாசமுண்டு. பழைய காலக் கல்விமுறையில் ஒவ்வொரு வாலிபனும் தொழில் பழகும் நிலையில் கொஞ்சகாலமிருந்து பிறகு அவன் ஜாதிக்குரிய தொழில் சங்கத்திற் சேருவது வழக்கம். ஒருவர் ஜாதிக்குரிய தொழிலைவிட்டு வேறொரு தொழிலுக்குப் போவதில்லை. ஆனால் இக்காலத்தில் அவ்வித நிர்ப்பந்தங்களில்லை. ஒவ்வொரு வாலிபனும் ஜாதிபேதமில்லாமல் தன் திறமைக்குரிய தொழிலைக் கற்கமுடியும்.

XXIII

முதல் (CAPITAL)

இக்காலத்தில் பொருளுற்பத்திக்கு முதல் இன்றியமையாதது. பொருளாதார நூலில் முதல் என்றால் பணம் மட்டும் அல்ல. செல்வத்தை அதிகரிக்கப்பண்ணும் தன்மையுள்ள எல்லாப் பொருள்களும், சாதனங்களும் முதலில் அடங்கியவை. மனிதனின் பொருளுற்பத்திச் சக்தி அதிகப்பட நுகரும் பொருளைத் தவிர அதிகப் பொருள் மீதமிருக்கிறது. இப்பேர்ப்பட்ட அதிகப் பொருள் மூலதனமாகிறது.

ஒரு வியாபாரியின் முதலைப் பின்வருமாறு விளக்கலாம்.

1.	கையிலிருக்கும் பணம் (Cash in hand)	ரூ.	125—0—0
2.	பாங்கியிலிருக்கும் பணம் (Cash at Bank)	ரூ.	750—0—0
3.	சோடிப்புச் சாமான்கள் (Furniture, etc.)	ரூ.	210—0—0
4.	சரக்குக் கையிருப்பு (Stock on hand)	ரூ.	500—0—0
5.	வியாபாரத்தில் வரவேண்டிய பணம்	ரூ.	230—0—0
6.	வியாபாரத்திற் கொடுக்கவேண்டிய பணம்	ரூ.	450—0—0
	ஆகவே கையில் ரொக்கம்	ரூ.	875—0—0
	கையிருப்புச் சரக்கு முதலியன	ரூ.	940—0—0
	செல்லாகவேண்டிய பணம்	ரூ.	450—0—0

ஆகையால் வியாபாரியின் முதல் என்ன? கணக்கு முறையில் வியாபாரியின் முதலானது அவனுக்கு வரவேண்டிய பணத்தி

லிருந்து கொடுக்கவேண்டிய பணத்தைக் கழிப்பதில் வரும் மீதம் முதல் எவ்வாறு உபயோகப்படுகிறதென்பதைக் கவனிக்குமிடத்து அதை இரண்டாகப் பிரிக்கலாம்:

(i) பலதடவை உபயோகப்படும் முதல் (Fixed Capital): நிலம், கட்டிடங்கள், இயந்திரங்கள், ஆயுதங்கள் முதலியன.

(ii) உபயோகத்தினால் உருமாறும் முதல் (Circulating Capital): பணம், உணவுப் பொருள் முதலியன.

ஒரு கம்பெனியின் மூலதனத்தைப் பின்வருமாறு பிரித்துக் காட்டலாம்.

(i) கம்பெனியின் சட்டப்படியுள்ள பங்குத் தொகை (Nominal Capital).

(ii) கம்பெனியின் விடப்பட்ட பங்குகள் (Issued Capital)

(iii) கம்பெனியின் பங்காளிகள் செலுத்திய பங்குத்தொகை (Paid Up Capital).

(iv) சட்டப்படியுள்ள பங்குத் தொகைக்கும் வசூலித்த பங்குத் தொகைக்குமுள்ள வித்தியாசம் (Uncalled Capital).

(v) ரிஸர்வ் பங்கு.

பெருமுதல் தேற்றம் (Growth of Capital)

தனசம்பத்துக்குரிய காரணங்களை—பணத்தை சேமிப்பதற்குரிய வசதி, பணத்தை சேமிப்பதற்குரிய கருத்து—என இரண்டு பகுதியாகப் பிரிக்கலாம்.

பணத்தைச் சேமிப்பதற்குரிய வசதிகள் பொருளுற்பத்தியை அதிகரிக்கக்கூடிய அம்சங்கள் எல்லாவற்றையும் பொறுத்திருக்கின்றன. முதன்மையாக ஒரு தேசத்தில் மூலாதாரங்கள் அதிகமாயிருக்கும் பட்சத்தில், அத்தேசத்தின் தனசம்பத்து விருத்தியடைய முடியும். தவிரவும் அத்தேசத்தாரின் உழைப்பும் முக்கியமாகவேண்டும். ஒரு தேசத்தின் செல்வாக்குமுறை ஒழுங்கான வழியில் நடைபெற்றால் அது முதல் விருத்தியடைவதற்கு அனுகூலமாயிருக்கும்.

பணத்தை சேமிப்பதற்குரிய கருத்தும் தனசம்பத்துக்கு ஒரு முக்கிய காரணமாயிருக்கிறது. முதன்மையாக குடும்பப் பற்றுதலுடையவர்கள் பணத்தை அதிகமாக சேகரிக்கின்றனர். இந்தியாவில் குடும்பப்பற்றுதல் அதிகமாயிருப்பதால் அநேகர் தாம் சம்பாதிக்கும் பொருளை கூடியவரை குடும்பத்திற்காக சேமித்து வைப்பது சகஜமாயிருக்கிறது.

பணத்தை சேமித்து வைப்பதற்கு மக்களின் முன்னுணர்ச்சியானது ஒரு விசேஷமான காரணம். சில தேசத்தார் எதிர் காலத்தை உத்தேசித்து பணத்தை முன்னதாகவே சேமித்து வைக்கும் ஊக்கமற்றவராயிருக்கின்றனர். இந்தியாவில் தனத்தை சேமித்துவைக்கும் ஊக்கம் அதிகமாயிருக்கிறது. ஆனால் சேமிக்கும் பணத்தை சடங்குகளுக்கும், மற்ற டம்பச் செலவுகளுக்கும் உபயோகிக்கின்றனர். பலன் கிடைக்கக்கூடிய தொழில்களில் மூலதனத்தை செலவு செய்வதில்லை.

தனசம்பத்து ஏற்படுவதற்கு ஜனங்களின் வருமானத்தில் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை தவிர சேமித்து வைப்பதற்குரிய மீதம் இருத்தல்வேண்டும். அதிக பொருளுற்பத்தி இல்லா தேசங்களில் ஜனங்கள் உற்பத்திசெய்யும் பொருள்கள் தம் நுகர்வுக்கு வேண்டிய அளவாய்த்தானிருக்கிறது. அப்பேர்ப்பட்ட தேசத்தாருக்கு முதலை சேகரிப்பது அரிது. இந்தியாவில் பெரும்பாலும் ஜனங்கள் இத்தன்மையிலிருக்கின்றனர்.

ஜனங்களின் ஆஸ்தியும், ஆயுளும் கவலையற்ற நிலைமையிருப்பதற்குறிய வசதிகளில்லாவிடில், தனம் சேகரிக்கும் ஊக்கம் குன்றிவிடும். உதாரணமாக இந்தியாவில் முகலாய ராஜ்யம் க்ஷீணமடைந்த காலத்தில் சண்டைகளும் சச்சரவும் எங்கும் வியாபித்திருந்ததால் ஜனங்களுக்கு தனத்தை சேமித்து வைப்பது வெகு கடினமாயிருந்தது. இக்காலத்தில் முன்னேற்றமடைந்த நாடுகளில் பணத்தை சேகரிப்பதற்குறிய வசதிகளிருக்கின்றன. பாங்குகள், இன்ஷ்யூரன்ஸ் கழகங்கள் கூட்டுறவு சங்கங்கள் இவைகளெல்லாம் தனசம்பத்துக்கு முக்கிய சாதனங்களாயிருக்கின்றன. முதலுக்கு சரியான வட்டி கிடைக்கும் பட்சத்தில் தனசம்பத்துக்கு அதிக ஊக்கம் ஏற்படும். இந்தியாவில் மூலதனம் அதிக

மாயில்லாமலிருப்பதற்கு ஜனங்களின் வறுமையே ஒரு முக்கிய காரணம். தற்காலத்தில் இந்தியாவில் அதிக மூலதனமில்லாததால் வெளிநாட்டு முதலே அநேக பிரவர்த்திகளிலும், தொழிற்சாலைகளிலும் உபயோகப்பட்டு வருகிறது. உதாரணமாக சணல் தொழிற்சாலைகளும், பஞ்சுத் தொழிற்சாலைகளும், இருப்புப்பாதைகளும், காப்பி, தேயிலைத் தோட்டங்களும் வெளிநாட்டு மூலதனத்தால் நடைபெற்று வருகின்றன. பெருவீதக் கைத்தொழில்களுக்கு வேண்டிய பெருமுதல் இந்தியர்கள் சேமித்து வைக்கும் வரை வெளிநாட்டு மூலதனத்தை உபயோகிக்கவேண்டியிருக்கிறது. வெளிநாட்டு மூலதனத்தை காரணமன்றி வெறுக்கக்கூடாது. வெளிநாட்டு மூலதனத்தால் உண்டாகும் பயன்களை கூடியவரை இந்தியர்கள் அடையும்படி வரையறுக்கவேண்டும். இந்தியாவிலுள்ள வெளிநாட்டு விடுமுதலை பொதுவாகக் கணக்கிடலாம். வெளி தேசங்களிலிருந்து இந்தியாவில் ஈடுபட்டிருக்கும் விடுமுதல் 847½ கோடி ரூபாயிலிருந்து 1,050 கோடி ரூபாய் வரை மதிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளுக்கு இந்தியாவிலிருந்து செல்லாகவேண்டிய கடன்தொகை பவுன் மதிப்புப்படி 363 மிலியன் பவுனாக மதிக்கின்றனர். கைத்தொழில்கள் சம்பந்தமாயுள்ள விடுமுதலில், அதாவது 200 மிலியன் பவுனிலிருந்து 250 மிலியன்வரையில் ஒன்றுக்குப் பாதி வியாபாரத்திலும், பொறித் தொழில்களிலுமிருக்கிறது. மேற்கண்ட மதிப்பில் ஐந்தில் ஒரு பங்கு பாங்குகளிலும், இன்ஷயூரன்ஸ் கம்பெனிகளிலும் அடைபட்டிருக்கிறது; 10% கப்பற்றொழிலிலும், இருப்புப்பாதைகளிலும் அடங்கியது; 5% தேயிலைத் தோட்டங்களிலும், சுரங்கங்களிலும் அடைபட்டிருக்கிறது. மேற்கூறிய வெளிநாட்டு முதல் அநேகமாக இங்கிலாந்திலிருந்து வந்திருக்கிறது. வட அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலிருந்து வந்திருக்கும் விடுமுதல் 39 மிலியன் பவுனாக மதிக்கின்றனர்.

இந்தியாவில் பொருள் ஆக்கமுயற்சியில் ஈடுபடாமல் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பொக்ஷம் 500 கோடியிலிருந்து 800 கோடி ரூபாயாக மதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையாக ஜனங்களின் சேமிக்கும் திறன் மிகவும் குறைவாயிருக்கிறது.

விவசாயிகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் நல்ல மாசூல் காலங்களிலும்கூட அதிக மீதம் கிடைப்பதில்லை. நிலஸ்வான்களின் சொத்து நிலமாகவே யிருக்கிறது. உத்தியோகங்களிலும், இதர ஜீவனோபாயங்களிலுமுள்ளவர்கள் தம் சேமிப்பை தபால் ஆபீஸ் பத்திரங்களிலும், சேமிப்பு நிதிகளிலும், கவர்ன்மெண்ட் பத்திரங்களிலும் போடுகின்றனர்.

உலகத்தில் உற்பத்தியாகும் தங்கத்தில் பெரும்பாகம் இந்தியாவில் அழிந்துவிடுகிறதென்று ஒரு கொள்கையிருக்கிறது. இது உண்மையான கொள்கையன்று. இந்திய பாங்கு விசாரணைச்சபையாரும் (1929), 1919-ம் வருஷத்திய நாணய விசாரணைச்சபையாரும் இவ்விதக் கொள்கை சரியான கொள்கையில்லையென்று எடுத்துக் கூறியிருக்கின்றனர். 1493-ம் வருஷத்திலிருந்து 1924-ம் வருஷம் வரை உலகத்தில் உற்பத்தியான தங்கம், வெள்ளி இவைகளில் முறையே 14%-ம், 34%-ம் இந்தியாவுக்கு ஏற்றுமதியாயிற்று. இந்தியாவின் ஜனத்தொகை உலக ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்காகச் சொல்லலாம். ஆகையால் இந்தியாவுக்கு தங்கமும், வெள்ளியும் மிதமிஞ்சி ஏற்றுமதியானதாக சொல்வது சரியன்று. தவிரவும் கிட்சின் (Kitchin) என்பவர் கணக்கின்படி உலகத்தில் உற்பத்தியான தங்கத்தின் 30% ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களுக்குப் போய்ச் சேர்ந்தது. இந்தியாவில் வந்து சேர்ந்த தங்கம் 14%-க்கு மேலில்லை.

சமீப காலங்களில் இந்தியாவிலுள்ள பணமானது கூட்டுறவு பாங்குகளிலும், மற்றும் இதர பாங்குகளிலும் விடுமுதலாக வந்துகொண்டிருக்கிறது. இவற்றை அதிகப்படுத்துவதற்கு சேமிப்பு சங்கங்கள் ஏற்படுத்தும்படி பாங்கு விசாரணைக் கமிட்டியார் குறித்துச் சொல்லியிருக்கின்றனர். தவிரவும் உண்டியல்கள் அதிகமாக உபயோகப்படுத்தும் முறையை இந்தியர்கள் கைக்கொள்ளவேண்டும். உண்டியல் மாற்றுவதில் ஏற்படும் நிர்ப்பந்தங்களை கூடியவரை குறைக்கவேண்டும். விடுமுதல் சம்பந்தமாக இந்தியாவில் பொருள் அங்காடியை விருத்தியடையச் செய்ய வேண்டும். பத்திரங்களை வாங்கவும், விற்கவும் வசதிகள் ஏற்படவேண்டும். இருணச்சீட்டுகள் (Debentures) கீர்த்திபெற்ற கம்

பெனியாரால் வெளியிடப்பட்டால் அச்சீட்டுகளை பணமுடைய வர்கள் வாங்கமுடியும். ஜனானுகூல நிதிகளும் சரியான முறையில் அமைத்துநடத்துவது நடுத்தர ஜனங்களுக்கு ஒரு பெரிய அனுகூலமாயிருக்கும். சென்னை மாகாணத்தில் சில அடமான பாங்குகள் தாம் வெளியிடும் இருணச்சீட்டுகளால் வேண்டிய மூல தனத்தைப் பெறுகின்றன.

சேமிப்பும், செலவும் (Saving and Spending)

சேமிப்பு (Saving)	சேமிக்கப்பட்டதால் அதிகப்படுவது (adds to)	முதல் Capital
முதல் (Capital)	(முதலிலிருந்து கிடைப்பது) (Yields)	வட்டி (Interest)
வட்டி (Interest)	வட்டியால் அதிகப்படுவது (adds to)	வருமானம் (Income)
வருமானம் (Income)	வருமானத்திலிருந்து ஏற்படுவது (is the source of)	சேமிப்பு (Saving)

XXIV

உழைப்புப் பகுப்பு

(DIVISION OF LABOUR)

பழைய காலத்தில் உழைப்புப் பகுப்பு விசேஷமாக விருத்தியடையவில்லை. ஒவ்வொருவரும் பல வேலைகளை செய்வது சகஜமாயிருந்தது. நாளடைவில் உழைப்புப் பகுப்பு வளர்ச்சியடைந்தது. ஒவ்வொரு கூட்டத்தாரும் ஒருவிதத் தொழிலைக் கைப்பற்றினர். இக்காலத்தில் முன்னேற்றமடைந்த மேனுடுகளில் உழைப்புப் பகுப்பும், உழைப்பின் அமைப்பும் அதிக வளர்ச்சியடைந்திருக்கின்றன.

உழைப்புப் பகுப்பின் நிபந்தனைகள்

(1) உழைப்புப் பகுப்பின் பரிமாணமானது உண்டாக்கப்படும் பொருள்களின் விற்பனையைப் பொருத்திருக்கிறது. பெருவீத உழைப்புப் பகுப்பு நடைபெறுவதற்கு வெகு கூலியாட்களும், எந்திரங்களும் வேண்டியிருக்கின்றன. இவற்ருல் உண்டாக்கப்படும் பொருள்களின் விற்பனைக்கு பெரிய விற்பனைப் பிரதேசங்களிருக்கவேண்டும்.

(2) உழைப்புப் பகுப்பு தொடர்ச்சியான பொருளுற்பத்தியைப் பொருத்திருக்கிறது. வேலைகள் தொடர்ச்சியாய் நடைபெருவிட்டால் கூலி வேலையாட்களும், எந்திரங்களும் குறிப்பிட்ட வேலைப் பகுதிகளை செய்யமுடியாது. விவசாயத் தொழிலைவிட கைத்தொழிலில் உழைப்புப் பகுப்புக்கு அதிக வசதியிருப்பதற்கு ஒரு முக்கிய காரணமென்னவென்ருல் கைத்தொழிலில் தொடர்ச்சியாக வேலை செய்யமுடியும்.

உழைப்புப் பகுப்பின் பலன்கள்: உழைப்புப் பகுப்பினுல் வேலைக்காரர்களுக்கு அவர்கள் சக்திக்கும், யுக்திக்கும் தக்கபடியுள்ள வேலையைப் பிரித்துக் கொடுக்கமுடியும். இதனுல் ஒவ்

வொரு வேலைக்காரரும் பொருளுற்பத்தியை அதிகரிக்க முடியும். மேலும் வேலைப் பிரிவினையில் ஒவ்வொரு வேலையாளும், வேலையின் ஒரே பகுதியைச் செய்துவருவதால் அவ்வேலையில் அதிகப் பழக்கம் ஏற்படுகிறது. பழக்கத்தினால் செய்யப்பட்ட வேலைகள் பரிபூரணமாயிருக்கும். தவிரவும் வேலைப்பிரிவினையால் வேலையாட்களுக்குத்தொழில் பயிலுங்காலம் அதிகமாக வேண்டியதில்லை. ஒவ்வொரு வேலைக்காரரும் ஒரே தொழிலைத் தெரிந்துகொண்டால் போதுமானது.

உழைப்புப் பகுப்பின் குறைகள் : இக்காலத் தொழிற்சாலைகளில் ஏற்பட்டிருக்கும் தொழிற் பிரிவினையில் வேலையாட்களுக்கு ஒரு வேலையின் சில பகுதிகளேதான் தெரியும். எந்திரம்போன்று ஒரு வேலையின் நுண்ணிய பாகங்களையே செய்து வருகின்றனர். இதனால் வேலையாட்களின் மனோபாவம் ஒடுக்கமடையும். எந்திரங்களால் அநேக வேலைகள் செய்யப்படுவதால் கூலிவேலைக்காரருக்கு கிடைக்கும் வேலை குறைவாகவேயிருக்கிறது. இதனால் வேலைப்பிரிவினை வேலையின்மைக்கு ஒரு காரணமாயிருக்கிறது.

வேலைப்பிரிவினையின் முக்கிய பருவங்கள்

(1) மக்களின் ஜாதிக்குத் தக்கபடியுள்ள வேலைப்பிரிவினை : ஆதிகாலத்தில் மனிதன் கடுமையான வெளி வேலைகளைச் செய்வதும், பெண்டுகள் இலகுவான வீட்டு வேலைகளைச் செய்யும்படியும் வேலைப்பிரிவினை ஏற்பட்டிருந்தது. இதை வேலைப்பிரிவினையின் முதல் பருவமாகச் சொல்லலாம்.

(2) வாணிக முறையில் வேலைப்பிரிவினை : நாளடைவில் ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்யும் முறை ஏற்பட்டது. அதாவது நெசவுகாரன், தச்சன், செம்படவன், கொல்லன் என ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு ஜாதியர் ஏற்பட்டனர். இந்தியாவிலுள்ள ஜாதி வேற்றுமையும், பழையகால வாணிபச் சங்கங்களும் இப்பருவத்தை சேர்ந்ததாகச் சொல்லலாம்.

(3) கைத்தொழில் முறையும், தொழிற்சாலை ஸ்தாபனமும் :—இம்முறையில் ஒவ்வொரு தொழிலும் பல பகுதியாகப் பிரிவினையாகி ஒவ்வொரு பகுதியை மட்டும் சிலர் செய்துவரத் தொடங்கினர். ஊசி, பாதரக்ஷை, கடிகாரம் முதலியன இக்காலத் தொழிற்சாலைகளில் செய்யப்படுவதை நாம் கவனிப்போமாஞல் நூற்றுக்கணக்கான வேலைப் பிரிவினைகளிருக்கின்றன.

(4) பன்னாட்டு வேலைப்பிரிவினை :—பன்னாட்டு வணிகமும், போக்குவரவுச் சாதனங்களும் பெருக்கமடைந்த காலமுதல் வேலைப்பிரிவினை அதிக விரிவு அடைந்திருக்கிறது. இக்காலத்தில் ஒவ்வொரு தேசத்தாரும் தம் தேசத்தின் வசதிக்குத் தக்கபடி சில பொருள்களையே உண்டாக்குகின்றனர்.

XXV

பெருவீதப் பொருளுற்பத்தி
(LARGE SCALE PRODUCTION)

தொழிற் புரட்சி ஆரம்பகாலமுதல் பெருவீதப் பொருளுற்பத்தி எல்லா தேசங்களிலும் விருத்தியடைந்துகொண்டே வருகிறது. மேனுடுகளில் எல்லாப் பொறித் தொழில்களும் பெருவீத முறையில் நடைபெற்றுவருகிறது. இந்தியாவில் சில முக்கியமான தொழில்களாகிய சணல் தொழில் சாலைகளும், இரும்புத் தொழில் சாலைகளும், நூல் நூற்கும் பொறிச்சாலைகளும் பெருவீத முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. பெருவீதப் பொருளுற்பத்திக்கு ஏராளமான மூலதனமும், எந்திரங்களும் வேண்டியிருக்கின்றன. சென்ற 150 வருஷங்களாகப் பெருவீத பொருளுற்பத்தி அதிக மேன்மையடைந்திருக்கிறது. வேலைப் பிரிவினையாலும், எந்திரங்களினுலும் பெருவீதப் பொருளுற்பத்தி சிக்கன முறையில் நடத்துவது சாத்தியமாயிருக்கிறது. பெருவீதப் பொருளுற்பத்தியை நிர்வகிப்பதற்குச் சரியான விற்பனைப் பிரதேசம் அவசியமாயிருக்கிறது. போக்குவரவு வசதிகளும் பெருவீதப் பொருளுற்பத்திக்கு அநுகூலமாயிருக்கின்றன.

விளைவிப்பவனுக்கும், விற்பவனுக்கும் பெருவீதப் பொருளுற்பத்தி அதிக இலாபத்தை அளிக்கின்றது. பொருள்நுகர்வோருக்கும், வேலையாள்களுக்கும் அதிக பலன் கிடைக்கின்றன. பெருவீதப் பொருளுற்பத்தியில் பொருள்களின் ஆக்கச் செலவு மிகவும் குறைவாகவே யிருக்கமுடியும். ஆகையால் உண்டாக்கும் பொருள்களைக் குறைந்த விலைக்கு விற்கமுடியும். ஆயிரக்கணக்கான கூலிவேலைக்காரர் பொறிச்சாலைகளில் வேலைசெய்து பிழைக்கின்றனர். பெருவீதத் தொழில் முறையில் ஒரு பொறித்தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்களை வாங்குவதிலும், அப்பொருள்களைச் செய்பொருள்களாக ஆக்குதலிலும், அவற்றை விற்பதிலும், அநேக அனுகூலங்களிருக்கின்றன.

ஆனல் பெருவீதப் பொருளுற்பத்தியானது எல்லையில்லாமல் நடத்த முடியாது. ஒரு தொழிலைப் பெருவீத முறையில் அமைத்தலானது அத்தொழிலை நடத்துபவரின் திறனைப் பொறுத்திருக்கிறது. உண்டாக்கப்படும் பொருள்களுக்குச் சரியான விற்பனைப் பிரதேசமில்லாவிடில் பெருவீதப் பொருளுற்பத்தி நடைபெற முடியாது.

இந்தியாவில் அநேக தொழில்கள் சிறுவீத முறையிலே நடைபெற்று வருகின்றன. சில தொழில்களைப் பெருவீத முறையில் அமைப்பது இலகுவான காரியமன்று. உதாரணமாக விவசாயத் தொழிலைப் பொறித்தொழிலைப்போல் அவ்வளவு பெருவீத முறையில் அமைக்கமுடியாது. இன்னும் அநேக கைத்தொழில்களில் பெருவீதப் பொருளுற்பத்தி பயன்படுவதில்லை. இந்தியாவில் அநேக குடிசைத் தொழில்களாகிய கைநெசவு, தங்க வெள்ளி ஆபரணங்கள் செய்தல் முதலியன சிறிய தொழில்களாகவே இருக்கின்றன. இக்காலத்தில் மின்சாரசக்தியால் சிறிய கைத்தொழில்களை நாட்டுப்புறங்களில் நவீன முறையில் நடத்துவது மேன்மையானதென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இந்தியாவில் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் தொழிற் புரட்சியில் கைத்தொழில்களை எம்முறையில் அமைப்பது நலமென்பதைப்பற்றி அதிக அபிப்பிராய பேதமிருக்கிறது. சிலர் கொள்கைப்படி எல்லாத் தொழில்களும் பெருவீத முறையிலே அமைப்பதே நலமென்று சொல்லப்படுகிறது. ஆனல் வேறு சிலர் இந்தியாவின் குடிசைத் தொழில்களையே முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமென்று சொல்லுகின்றனர். ஏற்கனவே அநேக பொறித் தொழில்கள் பெருவீத முறையில் நடைபெற்று வருகின்றன. அவற்ருல் பொருளுற்பத்தியும் அதிகரித்து வந்துகொண்டிருக்கிறது. இவ்விதத் தொழில்களினுல் இந்தியர்கள் பெரும்பலன் அடைகின்றனர். ஆனல் தற்காலத்தில் வழங்கிவரும் அநேக குடிசைத் தொழில்களையும் நவீன முறையில் கூடியவரை சீர்திருத்தம் பண்ணுவோமாகில் பொதுமக்களின் க்ஷேமலாபம் அதிகரிக்குமென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

XXVI

பொருள் மாறுதல்

(EXCHANGE)

இக்காலப் பொருள் வாழ்க்கையில் பொருள் மாற்றுதலினுல் அநேக அனுகூலங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

(1) ஒவ்வொரு தேசத்தாரும் தம்மால் உண்டாக்கமுடியாத பொருள்களை மற்றத் தேசங்களிலிருந்து பெறுகிருர்கள். இங்கிலாந்திலிருந்து கரியும், ஆஸ்திரேலியாவிலிருந்து ஆட்டுரோமமும் இந்தியாவிலிருந்து சணலும் மற்றத் தேசங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இவ்விதமாக இனமாற்றலால் ஒவ்வொரு தேசத்தாரும் தம் பொருள்களைப் பிறதேசங்களுக்கு அனுப்பி அத்தேசங்களிலுள்ள பொருள்களைத் தமக்குப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

(2) பொருள் மாற்றுதலினுல் ஒவ்வொரு தேசத்தாரும் தம் திறமைக்குத் தக்கபடியுள்ள பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். இதனுல் உலகத்தின் மொத்தப் பொருள் உற்பத்தியை அதிகப்படுத்த முடியும். இவ்வித இனமாற்றுதலில்லாமற் போனுல் ஒவ்வொரு தே த்தாரும் தமக்கு வேண்டிய பொருள்களைத் தாமே செய்துகொள்ளும்படி ஏற்படும். அவ்வித வாழ்க்கை செழிப்படைவதற்கு விரோதமாயிருக்கிறது.

(3) பொருள் மாற்றுதலினுல் ஒவ்வொரு தேசத்தாரும் தம் திறமைக்குரிய பொருள்களைப் பெருவீத உற்பத்தி பண்ணி உலகத்தின் விற்பனையிடங்களில் விற்கமுடியும்.

பொருள் மாற்றுச் சாதனங்கள்

(1) வியாபாரிகள் : உலகத்திலுள்ள பொருள்களை உற்பத்தியாகும் இடங்களிலிருந்து விற்பனைப் பிரதே ங்களுக்குக் கொண்டுவரவேண்டியது அவசியம். இவ்விதத் தொழிலைச் செய்பவர்கள் வியாபாரிகளேயாம். ஆகையால் வியாபாரிகளும் பொரு

ளுற்பத்தி பண்ணும் தொழிலில் ஈடுபட்டவர்களென்று சொல்ல வேண்டும். ஒவ்வொரு தேசத்திலுமுள்ள வணிகர்களைப் பொரு ளுற்பத்தி பண்ணுவோருக்கும், பொருள் நுகர்வோருக்கும் தரக ராகப் பாவிக்கலாம்.

(2) போக்குவரத்துச் சாதனங்கள் :—ரஸ்தாக்கள், ரெயில் பாதைகள், படகோடும் கால்வாய்கள், நதிகள், பெருங்கடற்போக்கு வரத்து இவைகளெல்லாம் ஒவ்வொரு தேசத்திலுள்ள பண்டங் களை மற்ற தேசங்களுக்கு எடுத்துச்செல்ல இன்றியமையாததா யிருக்கின்றன.

(3) விற்பனைப் பிரதேசங்கள் (Markets) :—பொருள் மாற் றுதல் உள்நாட்டுச் சந்தைகளிலும், வெளிநாட்டுச் சந்தைகளிலும் நடைபெற்று வருகின்றது. பொருள்களின் இருப்புக்கும், தேவைக்கும் தக்கபடி சந்தைகளில் விலை ஏற்படுகிறது. பொருள் களை வாங்குதலும், விற்றலும் சந்தைகள் மூலமாகவே நடை பெற்றுவருகின்றது.

(4) பணம் (Money) :—பொருள்களை வாங்கவும், விற்கவும் பணமானது பண்டமாற்றுத் துணைக்கருவியாக உபயோகப்படு கிறது.

சந்தைகள் (Markets)

பொருள்களை வாங்கவும் விற்கவும் ஏற்பட்டுள்ள இடங்களுக் குப் பண்யாகாரங்கள் அல்லது சந்தைகள் என்று பெயர். ஒவ் வொரு ஊரிலும் சந்தைகள் இருக்கின்றன—காய்கறிச் சந்தை, பழச்சந்தை, மளிகைச் சந்தை, பணவியவஹாரச் சந்தை முதலிய வற்றை எடுத்துக்கூறலாம், சந்தைகளைப் பலவிதமாகப் பிரிக்க லாம்—(1) ஓரிடச்சந்தைகள் (Local Markets); (2) உள்நாட் டுச் சந்தைகள் (National Markets); (3) பன்னாட்டுச் சந்தை கள் (International Markets). காலக்கிரமப்படி சந்தைகளை இரு விதமாகப் பிரிக்கலாம்—(1) குறுகிய காலச் சந்தைகள் (Short Period markets); (2) நீடித்தகாலச் சந்தைகள் (Long period Markets). இக்காலத்தில் சில பொருள்களின் விற்பனைப்பிர

தேசங்கள் உலகச் சந்தைகளாக விருக்கின்றன. தங்கம், வெள்ளி, கோதுமை, பருத்தி முதலிய பொருள்களின் சந்தைகள் உலகச் சந்தைகளென்று கூறலாம். இக்காலத்தில் பல பொருள்களின் சந்தைகள் விரிவடைவதற்குப் பல காரணங்களிருக்கின்றன. முதலாவது போக்குவரத்து வசதிகளிருப்பதால் பொருள்கள் உற்பத்தியாகு மிடங்களிலிருந்து விற்பனைப் பிரதேசங்களுக்கு எளிதாக அனுப்பப்படுகின்றன. தவிரவும் தபால், தந்தி அறிக்கைப் பத்திரிகைகள் மூலமாய் எல்லாப் பிரதேசங்களிலுமுள்ள பண்ட விலையைத் தெரிந்துகொள்ளமுடியும்.

ஒவ்வொரு பொருளுக்குமுள்ள விற்பனைப் பிரதேசம் விரிவடைவதற்குச் சில நிபந்தனைகளுண்டு—

(1) பொருளின் தேவை அதிகமாயிருக்கவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு ஒரு பொருளின் தேவை வியாபித்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதன் விற்பனைப் பிரதேசம் விரிவடைகிறது.

(2) ஒரு பொருளானது இலகுவாய் அறியத்தக்கதாயிருக்க வேண்டும். அப்பொருளின் மாதிரியிலிருந்தும், தரத்திலிருந்தும், நாம் அதன் தன்மை தெரிந்துகொள்ளும்படி யிருந்தால், அப்பொருளை வாங்கவும், விற்கவும் இலகுவாயிருக்கும். உதாரணமாகக் கோதுமை, அரிசி, பருத்தி முதலிய சரக்குகளை வியாபாரிகள் நேரில் பார்க்காமல் அச்சரக்குகளின் மாதிரியிலிருந்தும், தரத்திலிருந்தும் வேண்டியவற்றை வாங்குகின்றனர்.

(3) ஒரு பொருளானது சுமக்கத்தக்கதாயும், உறுதியுள்ளதாயுமிருக்கவேண்டும். இக்குணங்கள் அமைந்த பொருள்களுக்கு விற்பனைப் பிரதேசம் விரிவாயிருக்கிறது. உதாரணமாகத் தங்கம், வெள்ளி, கோதுமை, சணல், பருத்தி முதலிய விலை உயர்ந்த சாமான்கள் விற்பனையாகும் சந்தை ஓரிடத்திலில்லாமல் பன்னாட்டுச் சந்தையாயிருக்கிறது.

(4) சரக்குகளின் இருப்பு அதிகமாயிருக்கவேண்டும். பன்னாட்டுச் சந்தைகளில் விற்பனையாகும் பொருள்கள் பெருவீத உற்பத்தியுள்ளவைகளா யிருக்கவேண்டும். மேற்கூறிய அம்சங்கள்

பொருந்திய பொருள்களுக்குப் பொதுவாக உலகச் சந்தைகளில் வாங்கவும் விற்கவுமுள்ள தன்மை ஏற்பட்டிருக்கிறது.

பொருள்களின் விலை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது? முதலாவது ஒவ்வொரு பொருளின் மதிப்பு அதன் தேவையைப் பொறுத்திருக்கிறது. அதாவது எந்தப் பொருள்கள் பிரயோஜனமுள்ளவையோ அவைகளுக்குத் தேவை அதிகம். ஒவ்வொரு பொருளையும் வாங்குவோர் அப்பொருள் எவ்வாறு பிரயோஜனப்படுகிறதென்பதைப் பொறுத்துத் தமக்கு வேண்டிய அளவைத் தீர்மானிக்கின்றனர். இது நிற்க, ஒரு பொருளின் தேவைக்குத் தக்கபடி அப்பொருளின் இருப்பையும் கவனிக்கவேண்டும். அதாவது நாம் உற்பத்தி பண்ணும் பொருள்களில் சிலவற்றிற்கு ஆக்கச்செலவு அதிகமாயும், சிலவற்றிற்கு ஆக்கச்செலவு குறைவாயுமிருக்கிறது. ஆகையால் இப்பொருள்களின் சந்தை விலை அவைகளின் ஆக்கச்செலவையும் பொறுத்திருக்கிறது. ஒருவன் தன் சரக்குகளை ஆக்கச்செலவுக்குக் குறைந்து கொடுப்பது சாத்தியமான காரியமன்று. ஆகையால் ஒரு பொருளின் விற்பனை விலை குறைந்தபட்சம் ஆக்கச்செலவைவிட அதிகமாயிருக்கும்.

பொதுவாகப் பண்டங்களின் விலையானது அவைகளின் தேவையையும், இருப்பையும் (Demand and supply) சார்ந்திருக்கிறது. சந்தையில் ஒரு பண்டத்தின் விலை நாழிகை வட்டத்தையியக்குந் தூக்குப்போல் மேலும் கீழும் அசைந்துகொண்டிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு சமயத்தில் ஒரு விலை ஏற்படுகிறது. அவ்வித விலையானது தேவையும், இருப்பையும் ஒட்டியிருக்கிறது. விலை, தேவை, இருப்பு (price, demand and supply) இவை ஒன்றையொன்று அதைக்கின்றன. அவை மூன்றிற்குமுள்ள சம்பந்தம் காரண காரியம் என்று சொல்லாமல் அன்னியோன்யமான காரணத்துவம் என்று சொல்லவேண்டும்.

பொருள்களின் சமநிலை விலை (Equilibrium price) எவ்வாறு ஏற்படுகிறதென்பதைக் கவனிப்போம்.

(1) பிரதிதினச் சந்தை (Daily market) :—பிரதிதினச் சந்தையை எல்லா ஊர்களிலும் பார்க்கலாம். ஒரு பிரதிதினச்

சந்தையில் அழிபொருள்களின் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது? பழம், காய்கறி முதலிய அழிபொருள்களின் விலை ஒவ்வொரு நாளும் மாறுபடுகின்றது. ஏனென்றால் ஒவ்வொரு நாளும் விலையின் நிர்ணயமானது பொருளின் தேவை, இருப்பு இவற்றைப் பொறுத்திருக்கிறது. ஒரு தினத்தில் பொருளின் தேவை அதிகப்பட்டு இருப்புக் குறைந்திருந்தால் அன்றைத்தினம் விலை ஏற்றமடைகின்றது. இருப்பு அதிகப்பட்டுத் தேவை குறைந்தால் விலை இறங்குகிறது. இவ்விதமாகப் பொருள்களின் தேவைக்கும், இருப்புக்கும் தற்காலச் சமநிலை ஏற்பட்டு அதன் மூலமாய்ப் பண்ட விலை ஏற்படுகிறது.

(2) வழக்க விலை (Normal price) :—வழக்கத் தேவை, வழக்கக்கிடைப்பு இவைகளைப் பொறுத்திருக்கிறது. குறுகிய காலமாயிருந்தால், பொருளின் விலை பொருளின் வழக்கத் தேவையால் நிர்ணயிக்கப்படுகிறது. வருஷபரியந்தமாயிருந்தால் வழக்க விலை வழக்க அடக்கத்தால் அதிகமாக நிர்ணயிக்கப்படுகிறது.

பொருள்களின் விலை சம்பந்தமாக இரண்டு வகை விலைகள் கவனிக்கத்தக்கவை—மொத்தவிலை, சில்லறைவிலை. பொதுவாகப் பண்டங்களின் மொத்த விலையானது பண்டங்களின் தேவை, கிடைப்பு இவைகளைச் சார்ந்திருக்கிறது. பொருள் நுகர்வோரும், பொருள் உண்டாக்குவோரும் இவர்களுடைய போட்டியினால் மொத்த விலை நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் சில்லறை வாணிபத்தில் பொருள்களின் விலை விதிப்பதில் வழக்கமே பிரதானமாயிருக்கிறது. இக்காலத்தில் சில்லறை விலையும்கூட அதிக மாறுபாடில்லாமல் ஸ்திரமான விலையாக விதிக்கப்பட்டுவருகின்றது. அவ்வித ஸ்திரமான விலை ஏற்படுத்துவதால் விற்போருக்கும், வாங்குவோருக்கும் அதிக அனுகூலமாயிருக்கிறது. கொள்வன விற்பனவற்றில் ஏற்படும் அருக்கில்லாமல் விலை கூறமுடியும். அதிக நேரத்தை வீணுக்காமல் ஒப்பந்தத்தைத் துரிதமாய் முடித்துக்கொள்ள முடியும். மேனுடுகளில் இவ்வித ஸ்திரமான விலையுள்ள சில்லறை வியாபாரக் கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் இவ்வித முறையைச் சில்லறை வியாபாரத்தில் ஏற்படுத்தவேண்டியது மிகவும் அவசியம்.

சில பொருள்கள் சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் விலையானது அரிய விலையாயிருக்கிறது. அதாவது ஒரு பொருளானது ஆக்க முடியாததாயும், அரியதாயுமிருக்கும் பட்சத்தில் அப்பொருளுக்கு அதிக விலை ஏற்படுகிறது. உதாரணமாக ரவிவர்மா எழுதிய பழைய படங்கள், பழைய கால ஸ்டாம்புகள், மறுபடியும் அச்சிடாமலிருக்கிற பழைய புஸ்தகங்கள் இவைகளுக்கு அரிய விலை கொடுத்து வாங்குகிறோம்.

பண்டமாற்று முறை

(Exchange by Barter)

கத்தியும் கழியும்

Bயிடம் இருப்பது ஒரு கழி. கழிக்குப் பதிலாக ஒரு கத்தி தேவை



Aயிடம் இருப்பது ஒரு கத்தி, அதற்குப் பதிலாக ஒரு கழி தேவை

பண்டமாற்றுதல்

(நாணய முறையில்)

(Exchange by purchase and sale)

Aயிடம் இருப்பது ஒரு குதிரை. ஆனல் A-க்கு சட்டையும், நாற்காலியும், உணவுப் பொருள்களும் தேவை.	குதிரையை விற்பதால் கிடைப்பது	ரூ. 100	கிடைத்த ரூபாய்க்கு வாங்குவது	Bயிடம்சட்டை ரூ. 30-க்கும் Cயிடம் நாற்காலி ரூ. 20-க்கும் Dயிடம் உணவுப் பொருள் ரூ. 50-க்கும் வாங்குகிறன்.

XXVII

பணச் செலவாணி முறை

(MONEY ECONOMY)

பணப்பழக்கம் பண்டைக்காலமுதல் வழங்கிவந்தது. ஆதியில் சில பண்டங்களே பணமாக உபயோகப்பட்டன. வேட்டையாடி ஜீவனம் பண்ணும் காலத்தில் விலங்குகளின் தோல்களும், மெல்லிய ரோமமும்(Skins and furs) பண்டமாற்றுத் துணைக்கருவியாக உபயோகப்பட்டன. நாகரீகம் விருத்தியடைய முல்லைநிலமக்கள் காலத்தில் ஆடுமாடுகள் செல்வமாகவும், பண்டமாற்றுத்துணைக் கருவியாகவும் உபயோகப்பட்டன. ஆபரணங்களாகக் கருதப்பட்ட மணிகளும், சோழிகளும், சில தேசங்களில் நாணயமாக வழங்கிவந்தன. சில காலங்களில் சில இடங்களில் நாணயமாக உபயோகப்பட்ட பொருள்களாகிய தானியம், எண்ணெய், புகையிலை உப்பு, தேயிலை முதலியவற்றை எடுத்துக்கூறலாம். கொஞ்ச காலங்களுக்குப் பிறகு தங்கமும், வெள்ளியுமே நாணயமாக வழங்கத் தொடங்கின.

நாணயமாக உபயோகப்படுத்தும் பொருள்களுக்கு எவ்விதத் தன்மைகள் இருக்கவேண்டும்?

(1) நாணயமானது எல்லாரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாயிருக்கவேண்டும் (General acceptability). பொதுவாக அப்பேர்ப்பட்ட இயல்பையுடைய பொருள்களைத்தான் பண்டமாற்றுத் துணைக்கருவியாக உபயோகிக்கமுடியும்.

(2) நாணயமானது அசலமான மதிப்புள்ளதாயிருக்கவேண்டும். (Steady value). இத்தன்மை யிருந்தால்தான் நாணயமானது சேமித்து வைப்பதற்கும், எக்காலத்திலும் தகுந்த மூல அளவாயும் இருக்கும்.

(3) நாணயம் உறுதியுள்ளதா யிருக்கவேண்டும். தங்கம், வெள்ளி முதலிய உலோகங்கள் அசையா நிலையுள்ளவை. அழி

பொருள்களாகிய தானியங்களைவிட உலோகங்களை நெடுங்காலம் உபயோகிக்கலாம்.

(4) நாணயமாக உபயோகித்துவரும் பொருளானது சிறிய காத்திரமாயும், அதிக மதிப்புள்ளதாயுமிருக்கவேண்டும் (Large value in small bulk). அதிக காத்திரமாயுள்ள பொருள்கள் பணப்பழக்கத்திற்கு இசைவானதன்று. ஆனால் ஒவ்வொரு தேசத்தாரும் தம்பொருளாதாரப் பெருக்கத்திற்குத் தக்கபடி நாணயமாக உபயோகப்படுத்தும் பொருள்களைத் தெரிந்தெடுக்கின்றனர். பணப்பெருக்கமில்லாத் தேசங்களாகிய சைனு, இந்தியா இவைகளில் செம்பு, வெள்ளி நாணயங்களே உபயோகப்பட்டு வருகின்றன. மேனுட்டார் தங்கத்தையே நாணயமாக உபயோகிக்கின்றனர்.

(5) நாணயமாக உபயோகித்து வரும் பொருளானது இலகுவாகப் பிரிக்கக்கூடியதாயும் ஒரே இயல்புள்ளதாயு மிருக்க வேண்டும். கொடுதொகைகள் சிறிய அளவிலும், பெரிய அளவிலும் கொடுக்கக்கூடிய தன்மை நாணயங்களுக்குப் பொருந்தியிருக்க வேண்டும். தவிரவும் சிறிய நாணயங்களைத் திரட்டினுல் அவை மதிப்பு இழந்துபோகாமலிருக்கும் தன்மை யிருக்கவேண்டும்.

(6) நாணயமாக நாம் உபயோகித்துவரும் பொருளானது எளிதில் அறியத்தக்கதாயிருக்கவேண்டும். தங்கமும், வெள்ளியும், நிறத்திஞலும், ஓசையிஞலும், கனத்திஞலும் எளிதில் தெரிந்துகொள்ளமுடியும்.

(7) நாணயமாக உபயோகித்துவரும் பொருளானது அடித்துத் தகடாக்கக்கூடிய தன்மையுள்ளதாயிருக்கவேண்டும்.

மேற்கூறிய தன்மைகளெல்லாம் தங்கத்திற்கும், வெள்ளிக்கும் பொருந்தியிருக்கிறது. ஆகையால் எல்லாத் தேசத்தாரும் இவ்விரு உலோகங்களை நாணயமாக உபயோகிக்கின்றனர்.

நாணயமுறை (Coinage):—ஆதிகாலமுதல் தங்கமும், வெள்ளியுமே முக்கிய நாணயங்களாக இருந்தன. தங்கம் கண்டுபிடிக்கப்பட்டுப் பல காலம்வரை ஒரு அலங்காரப் பொருளாகவே உபயோகப்பட்டு வந்தது. அதின் பளபளப்பும், அழகும் மக்களின் மனதைக் கவரும் தன்மையுள்ளதாயிருக்கிறது.

ஆதிகாலத்தில் தங்கம் அலங்காரப் பொருளாகவே யிருந்ததென்பதற்குத் தகுந்த ஆதாரமிருக்கிறது. பழைய டிராய் (Troy) நகரில் தங்கவேலைப்பாடுள்ள பொருள்களும், ஈகிப்தில் தங்கப்பிடியுள்ளதும் சக்கிமுக்கிக்கல்லால் செய்யப்பட்டதுமான குத்துவாள்களும் சமீபகாலத்தில் பூமியிலிருந்து வெட்டி எடுத்திருக்கின்றனர். தங்கம் அழிவில்லாப் பொருளென்பதைத் தெரிந்துகொண்டே பழையகால ஜனங்கள் அதைச் சேமித்து வைத்திருந்தனர். வெள்ளியும் பழையகாலமுதல் வழங்கிவந்தது. இவ்விரண்டு உலோகங்களும் அவற்றின் பளபளப்பாலும், இதர பண்புகளாலும் வெகுகாலமாக அலங்காரப் பொருள்களாக உபயோகப்பட்டு வந்தன. 5,500 வருஷங்களுக்குமுன் ஈகிப்த் தேசத்தில் தங்கம் உபயோகப்பட்டு வந்தது. தங்கத்திற்கும், வெள்ளிக்கும் ஒருவிதத் தகவுப் பொருத்தமும் ஏற்பட்டிருந்தது. மீனிஸ் என்பவர் கட்டளைச் சட்டப்படி (Code of Menes) கிறிஸ்து பிறப்பின் 3600 வருஷங்களுக்குமுன் தங்கத்தின் ஒரு பாகம் வெள்ளியின் 2½ பாகத்திற்குச் சமமென்று விதித்திருப்பதாகத் தெரியவருகிறது. ஈகிப்த், அஸ்ஸிரியா முதலிய பழைய தேசத்தார்கள் தங்கத்தையும், வெள்ளியையும் வாணிபமுறையில் உபயோகித்து வந்தனர். ஆனால் பண நடவடிக்கைகளில் தங்கமும், வெள்ளியும் நிறுக்கும்படியிருந்ததாகத் தெரியவருகிறது. ஆதிகால யூதர் சரித்திரத்தில் தங்கமும், வெள்ளியும், ஒவ்வொரு தடவையும் நிறுக்கப்பட்டு வழங்கும் நாணயமாக உபயோகப்பட்டதென்பதற்குத் தகுந்த ஆதாரமிருக்கிறது. தங்கத்தையும், வெள்ளியையும் பாளங்களாக வைத்திருந்தனர். ஆகையால் அப்பாளங்களை நிறுப்பது இலகுவாயிருந்தது.

இதற்குப் பிறகு, பாளங்களிலிருந்து சிறு துண்டுகள் வெட்டப்பட்டு அவைகளின் நிறையும், மதிப்பும் விதிக்கப்பட்டன. கொஞ்சகாலத்தில் இவ்விதத் துண்டுகளின்பேரில் ஒரு முத்திரை பதிக்கப்பட்டது. இவ்வித உபாயமானது தற்கால நாணயமுறையின் ஆரம்பமாகக் கூறலாம். நாணயங்கள் நாணய முறையில் லிடியா (Lydia) தேசத்தில் வழங்கி வந்தன. கிரேக்கர் (Greeks)களும் நாணயங்களை உபயோகித்துவந்தனர். இவ்வித நாணயங்

களில் முத்திரைகள் பதிக்கப்பட்டிருந்தன. பிற்காலத்தில் தங்கம் வெள்ளி இவைகளை உருக்கி மண் அச்சுக்களில் உருவாக்கப்பட்டன. நவீன உபாயங்கள் தெரியாததால் அக்காலத்தில் நாணயங்கள் உளியினாலும் சம்மட்டியாலும் அடித்துச் செய்யப்பட்டன. 1547-ம் வருஷம் இத்தாலியரின் கற்பனா சக்தியினால் இக்கால நாணய முறை ஏற்பட்டது. நவீன நாணய முறை ஸ்பெயினில் 1548-ம் வருஷமும், பிரான்ஸில் 1553-ம் வருஷமும், இங்கிலாந்தில் 1561-ம் வருஷமும் ஏற்பட்டன. இக்காலத்தில் பிம்பங்கள் வெட்டவும், நாணயங்களுக்குப் பல் விளிம்பு செய்யவும், நாணயத்தின்பேரில் எழுத்து வரையவும் யந்திரங்கள் இருக்கின்றன. நாணயமடித்தல் ஆரம்பத்தில் தனிமுயற்சியாயிருந்து படிப்படியாய்ச் சர்க்காரின் தனி உரிமையாகிவிட்டது.

பணத்தின் உபயோகங்கள் (Uses of money)

(1) பணமானது பண்டமாற்றுத்துணைக்கருவியாக உதவுகிறது. பணத்தினால் பண்டங்களும் பணிவிடைகளும் வாங்கவும், விற்கவும் முடியும். ஆகையால் அங்காடிகளில் பரிவர்த்தனத்திற்குப் பணமே சுலபமான கருவியாயிருக்கிறது.

(2) பணமானது பண்டமாற்றுதலுக்கு ஒரு அளவு கருவியாக இருக்கிறது. ஒரு முழக்கோலால் எவ்வாறு சில சாமான்களை அளக்கிறோமோ அவ்வாறே பணத்தினால் பல பண்டங்களின் மதிப்பைத் தீர்மானிக்கிறோம். இனமாற்றுதலில் ஒவ்வொரு பொருளின் மதிப்பை நாம் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம். பணத்தினால் ஒவ்வொரு பொருளின் விலை மதிப்பை நாம் தெரிந்துகொள்ளாவிடில் பரிவர்த்தனம் சமமானவழியில் நடத்தமுடியாது.

(3) பணமானது கொடுதொகைகளின் இக்கால மதிப்புக்கும், பிற்கால மதிப்புக்கும் ஒரு மூல அளவாக இருக்கிறது. (Standard of deferred payments). இக்காலத்தில் அநேக வரவு செலவுகள் நாணயத்தின் பேரில் ஏற்பட்டிருப்பதால் விலையின் மாற்றத்தைத் தெரிந்துகொள்வதற்குப் பணமே ஒரு சரியான திட்டமாயிருக்கிறது.

(4) பணமானது சேகரித்து வைப்பதற்குச் சௌகரிய மாயிருக்கிறது. அநேக பண்டங்கள் சேமத்திரவியமாய் வைப்ப தற்குத் தகுதியற்றனவாயிருக்கின்றன. ஆனால் பணமோ எக் காலத்திலும் அழிவற்ற பொருளாயிருக்கிறது. சேகரித்து வைப் பதற்கு வெகு இசைவாயிருக்கிறது. இதனால்தான் பாடுபட்டுத் தேடிப் பணத்தைச் சம்பாதிப்போரில் அநேகர் அப்பணத்தைப் பொக்கிஷமாக வைத்து வருகின்றனர்.

நாணயத் தொகுதி

ஒரு தேசத்தின் நாணயத் தொகுதியில் உட்பட்டிருக்கும் பணவகைகளாவன :—

(1) **மூலப்பணம்** (Standard money) :—ஒவ்வொரு தேசத்தின் நாணயத் தொகுதியில் மூலப்பணம் முக்கியமானது. எல்லாப் பண்டங்களும், பணிவிடைகளும் மூலப்பணத்தால் அள விடப்படுகின்றன. பொதுவாக மூலப்பணத்தின் சட்டப்படியுள்ள மதிப்பும் அதன் இயல்பான மதிப்பும் ஒன்றாகவே யிருக்கவேண்டும். ஒவ்வொரு தேசத்திலும் மூலப்பணத்தின் மதிப்பு அத்தேசக் கவர்ன்மெண்டாரால் விதிக்கப்படுகிறது. மூலப்பணத்தை இந்தி யாவில் ரூபாயென்றும், இங்கிலாந்தில் பவுண்டு ஸ்டெர்லிங் என் றும், அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் டாலரென்றும், பிரான்ஸில் பிராங்கு என்றும் ஜப்பானில் இயன் என்றும் வழங்குகின்றது. மூலப்பணத்தின் முக்கிய இலட்சணங்களாவன :—

(*a*) தடைப்படாத காசடிப்பு (Free coinage)

(*b*) நாணய மதிப்பும், அதன் இயல்பான மதிப்பும் ஒன்றுபட் டிருத்தல்.

(*c*) எல்லையில்லா மறுக்கமுடியா நாணயமாயிருத்தல் (Unlimited legal tender).

(2) **ஒப்புநாணயம்** (Token money) :—ஒப்புநாணயத் தின் அம்சங்களாவன :—

(*a*) தடைப்படாத காசடிப்புக் கிடையாது. வேண்டிய வரைக் கவர்ன்மெண்டாரால் ஒப்புநாணய மடிக்கப்படுகிறது.

(b) நாணயத்தின் மதிப்பு அதன் இயல்பான மதிப்பைவிட அதிகமாயிருத்தல்.

(c) குறிப்பிட்டவரை தான் மறுக்கமுடியா நாணயமாக வழங்குவது.

(3) **தாள் நாணயம்** (Paper money):—தாள் நாணயம் பண்டைக்கால முதல் பழக்கத்திலிருந்திருக்கிறது. இரண்டு வகைத் தாள் நாணயம் கவனிக்கத்தக்கது. மாறக்கூடிய தாள் நாணயம், மாறுத்தாள் நாணயம். மாறக்கூடிய தாள் நாணயமானது நம்பிக்கையாதாரமான பணம். மாறுத்தாள் நாணயம் மீட்சியில்லாத நாணயம்; யுத்த காலங்களில் கவர்ன்மெண்டார் வெளியிடும் தாள் நாணயம் இத்தன்மையது.

தாள் நாணயத்தால் அநேக அனுகூலங்களிருக்கின்றன. தாள் நாணயம் அதிகச் செலவில்லாதது. பொன் நாணயங்கள் உபயோகத்தில் தேய்வு அடைவதால் அவைகளின் இடை குறைந்து நஷ்டமடைகிறோம். தாள் நாணயத்தில் அவ்வித நஷ்டம் ஏற்படுவதில்லை. பொன் நாணயத்தைவிடத் தாள் நாணயம் உபயோகிப்பதற்கு அதிக வசதியுள்ளது. ஆனால் தாள் நாணயமானது பொன் நாணயத்தைப் போல் பல தேசத்தாரால் அங்கீகரிக்கப்படவில்லை. கவர்ன்மெண்டாரால் மட்டுக்கு மிஞ்சி வெளியிடப்பட்டால் அதன் மதிப்புக் குறைந்துவிடும்.

பணப்பழக்கம் (Circulation of money):-நாணயங்களின் பரிவர்த்தனத்தில் ஒரு முக்கியமான விதி கிரசம்சு என்பவர் பெயரால் வழங்கிவருகிறது. அவ்விதியைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். அதாவது கெட்ட பணமானது நல்ல பணத்தைப் பணப்பழக்கத்திலிருந்து விலக்குகின்றது. கிரசம்சு விதியின் பிரயோகத்தைப் பின்வருமாறு விளக்கலாம்:—

(1) மதிப்பிழந்த தாள் நாணயமும், பொன் நாணயமும் பணப்பழக்கத்திலிருந்தால் பொன் நாணயம் பணப்பழக்கத்திலிருந்து மறைகிறது.

(2) புதிதாய் அடிக்கப்பட்ட நாணயமும், தேய்ந்த நாணயமும் பணப்பழக்கத்திலிருந்தால், புதிய நாணயம் அதரிசனமாகிறது.

(3) தங்கமும், வெள்ளியும் பணப்பழக்கத்திலிருக்கையில் அவைகளின் தகவுப்பொருத்தம் பின்வருமாறு இருப்பதாக வைத்துக்கொள்வோம் :—

நாணயமாக 1 அவுன்ஸ் பொன் = 16 அவுன்ஸ் வெள்ளி
கட்டியாக 1 ,, ,, = 15 ,, ,,

தங்கம் இழிவடைந்த பணமாயும், வெள்ளி விலையுயர்ந்த பணமாயுமாகிவிடுகிறது. ஆகையால் வெள்ளி பணப்பழக்கத்திலிருந்து அதரிசனமாகுகிறது. இவ்வித ஆவிர்ப்பவம் இரு உலோக நாணய முறையில் ஏற்படுகிறது.

விலையுயர்ந்த பணம் பலவிதமாக அதரிசனமாகிறது— (a) நாணயமாயிருப்பதைவிடக் கட்டியாயிருப்பதின் மதிப்பு அதிகமாயிருக்கும் பட்சத்தில் நாணயம் உருக்கப்பட்டு அதன் நிறைக்குத் தக்கபடி விற்கப்படுகிறது. (b) பணத்தைச் சேமித்து வைப்பதில் நல்ல நாணயத்தை ஜனங்கள் சேமித்து வைப்பது வழக்கம். (c) வெளிநாடுகளுக்குச் செலுத்தவேண்டிய பணத்திற்கு நல்ல நாணயம் உபயோகப்பட்டு வருகிறது.

கிரசம்சு விதியை இந்தியச் செலாவணியிலிருந்து விளக்கிக் காட்டலாம். இந்தியாவில் சாவரனும், ரூபாயும் பணப்பழக்கத்திலிருந்தால் சாவரன் அதரிசனமாகிறது. ஏனென்றால் சாவரனின் நாணய மதிப்பும், கட்டி மதிப்பும் ஒன்றாக இருக்கிறது. வெள்ளி ரூபாயானது நாணய மதிப்பு அதிகமாயும் கட்டி மதிப்புக் குறைவாயுமிருப்பதால் சேமித்து வைப்பதற்கு அவ்வளவு தகுதியுள்ளதாயில்லை. ஆகையால் ஜனங்கள் தங்க நாணயத்தைப் பொக்கிஷமாக வைத்துக்கொண்டு, வெள்ளி நாணயத்தைப் பணப்பழக்கத்தில் வைத்துக்கொள்கின்றனர்.

இரு உலோக நாணய முறை (Bimetallism)

இரு உலோகங்களாகிய தங்கமும், வெள்ளியும் நாணயமாக உபயோகப்பட்டுவரும் முறைக்கு இரு உலோக நாணய முறையென்று பெயர். அம்முறையின் முக்கிய அம்சங்களாவன :—

(1) இரு நாணயங்களும் அளவிறந்த மறுக்கமுடியா நாணயமாக வழங்குதல்.

(2) இரு நாணயங்களுக்கும் ஒன்றுக்கொன்று மாற்றுதலுக்கு ஒரு தகவுப் பொருத்தம் ஏற்பட்டிருத்தல். இரு உலோக நாணய முறை கொஞ்சகாலம் அநேக தேசங்களில் நடைபெற்றுவந்தது. இவ்வித நாணயமுறை சரிவர நடத்துவதற்குப் பன்னாட்டு ஒப்பந்தம் அவசியம் வேண்டும். ஆனால் பன்னாட்டுக்கூட்டுறவு ஏற்படுவது மிகவும் அரியது. இரு உலோக நாணய முறை எல்லாத் தேசத்தாராலும் கைவிடப்பட்டிருப்பதற்கு இதுவே ஒரு முக்கிய காரணமாகும்.

இரு உலோக நாணய முறையின் குணுகுணங்களைச் சற்று கவனிப்போம். இரு உலோக நாணய முறையானது ஒரு உலோக நாணய முறையைவிட விலையின் மாற்றம் அதிகப்படாமலிருப்பதற்கு இசைவாயிருக்கிறது. தவிரவும் இரு உலோக நாணய முறையால் தங்க நாணயத் திட்டமுள்ள தேசங்களுக்கும், வெள்ளி நாணயத்திட்டமுள்ள தேசங்களுக்கும் நாணயமாற்று இணைநிலை (Par of exchange) ஏற்படுத்தமுடியும். மேலும் இந்நாணய முறையில் பண்டங்களின் விலை சற்று அதிகமாகவேயிருப்பதால் அவ்வித விலையுயர்வு பொருள் உண்டாக்குவோருக்கும், பாங்குகளுக்கும் அனுகூலமாயிருக்கும்.

ஆனால் இரு உலோக நாணய முறையில் சில குறைகளிருக்கின்றன. அனுபவத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ளக்கூடியதென்னவென்றால் இரு உலோக நாணயமுறையில் கிரசம்சு விதிப்படி (Gresham's law) மதிப்புள்ள நாணயம் பணப்பழக்கத்திலிருந்து அதரிசனமாகுகிறது. இழிவுள்ள நாணயமே பணப்பழக்கத்திலிருக்கிறது. ஆகையால் இரு உலோக நாணய முறை ஒரு உலோக நாணய முறையாகிவிடுகிறது. தவிரவும் இரு உலோக நாணய முறையில் தங்கம், வெள்ளி இவைகளின் நாணய மதிப்புக்கும் (Coin value) கட்டி மதிப்புக்கும் (Bullion value) அதிக வித்தியாசம் ஏற்படும்கால், மதிப்பு அதிகமாயுள்ள நாணயத்தில் கடன் கொடுத்தவர் பணத்தைப் பெற விரும்புகின்றனர். கடன் வாங்கினவர் மதிப்பிழந்த நாணயத்திற் பணத்தைச் செலுத்த விரும்புகின்றனர். இதனால் பணப் பழக்கத்தில் குழப்பம் ஏற்படுகிறது. கொஞ்ச காலமாக உலகத்தில் கிடைக்கும் தங்கம் குறைந்து

விடுமென்ற நினைப்பினால் இரு உலோக நாணய முறையைக் கைக்கொள்ளவேண்டுமென்று சிலர் கூறுகின்றனர். ஆனால் இப்பொழுது உலகத்தில் தங்கம் வேண்டிய அளவு வெட்டி எடுக்கப்படுவதால் இரு உலோக நாணய முறையை எடுத்துக்கொள்ள அது ஒரு தகுந்த காரணமாகச் சொல்லமுடியாது.

தங்க நாணயத்திட்டம் (Gold Standard)

இரு உலோக நாணய முறையைவிட ஒரு உலோக நாணய முறையே கலப்பற்ற திட்டமென்று கருதப்படுகிறது. ஒரு உலோக நாணய முறையில் தங்கம் அல்லது வெள்ளியாவது தேசத்தின் மூல அளவு நாணயமாக எடுத்துக்கொள்ளலாம். இந்தியாவில் வெள்ளியே மூல அளவு நாணயமாகயிருந்து வருகிறது. ஆனால் மேனாடுகளில் தங்கத்தை மூல அளவாக வைத்திருக்கின்றனர். 1914-ம் வருஷம் வரை தங்க நாணயத்திட்டமே அநேக தேசங்களில் அனுசரிக்கப்பட்டுவந்தது. நாணயத்தின் மூல அளவு தங்கத்தின் ஒரு குறிப்பிட்ட இடைக்குச் சமமாக ஏற்படுத்துதலே தங்க நாணயத்திட்டமென்று சொல்லப்படுகிறது. தங்க நாணயத்திட்டத்தின் மூன்று வகைகள் கவனிக்கத்தக்கவை.

(1) பூரணமான தங்க நாணயத்திட்டம் (Full Gold Standard) : இவ்வித நாணயத்திட்டத்தில் தங்கம் நாணயமாக அடிக்கப்பட்டு உபயோகத்திலிருப்பது வழக்கம். தங்க நாணயத்தின் மதிப்பு அதிலிருக்கும் கட்டிக்குச் சமமாக இருக்கவேண்டும். தங்கத்தை வாங்கவும், விற்கவும் தடையில்லாமலிருக்கவேண்டும். இங்கிலாந்தில் இவ்விதத் திட்டம் 1914-ம் வருஷம் வரை நடைபெற்று வந்தது. சவரன் தங்க நாணயமாக வழங்கிவந்தது. ஒரு சவரனின் இடை $113\frac{1}{623}$ கிரெயின் சுத்தத் தங்கமாயிருந்தது. நாணயமாக அடிப்பதற்குச் சவரனிலுள்ள சுத்தத் தங்கமும் அதனுடனுள்ள கலவையும் சேர்ந்து 123.27447 கிரெயின் ஆக மதிக்கப்பட்டது. அவுன்ஸ் கணக்காக எடுத்துக் கூறினால், ஒரு அவுன்ஸ் சுத்தத் தங்கம் $4\frac{1}{4}$ சவரனாக அடிக்கலாம். இங்கிலாந்தின் தங்க சாலையில் தங்கத்தைச் சவரனாக மேற்குறிப்பிட்ட வீதத்தில் நாணயமடிப்பதில் தடையொன்றுமில்லாமல் இருந்தது

சாதாரணமாக இங்கிலாந்துப் பாங்கில் தங்கத்தை வாங்கவும், விற்கவும் வசதி ஏற்பட்டிருந்தது. அதாவது ஒரு அவுன்ஸ் தங்கத்திற்கு ப. 3—17—9 பாங்கிலிருந்து பெறமுடியும்.

(2) தங்கக் கட்டித் திட்டம் (Gold Bullion Standard) — இத்திட்டத்தின்படி தங்கத்தை நாணயமாக அடிக்கவேண்டிய தில்லை. தங்கமானது முக்கியமாக ஒதுக்கு நிதியாக (Reserves) வைக்கப்படுகிறது. தேசத்தின் பிரதான்ய பாங்கானது தங்கத்தை வாங்கவும், விற்கவும் தயாராயிருக்க வேண்டும். தங்க ஏற்றுமதியும், இறக்குமதியும் தடையில்லாமலிருப்பதற்குள்ள வசதியுள்ளதாக இருக்கவேண்டும். உள் நாட்டுப் பணப்பழக்கமானது தாள் நாணய மாகவே யிருக்கிறது. ஆனால் தாள் நாணயத்தைத் தங்கக் கட்டி யாகமாற்றப் பாங்கில் வசதி யிருக்கவேண்டும். உதாரணமாக இங்கிலாந்தில் ஏப்ரல் 1925 முதல் செப்டம்பர் 1931 வரை இவ் விதத் தங்க நாணயத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. தங்கக் கட்டித் திட்டத்தில் ஒரு பெரிய அனுகூல மென்னவென்றால் தங்கம் நாணயமாக இருக்காமல் தங்கக் கட்டி நிறையாக உப யோகப்படுகிறது. ஆகையால் இத்திட்டத்தில் தங்கம் குறை வாகவே யிருந்தால் போதும்.

(3) தங்க நாணய மாற்றுத் திட்டம் (Gold Exchange Standard) :—இவ்விதத் திட்டத்தில் வெள்ளி நாணயமும், தாள் நாணயமும் உள் நாட்டு உபயோகத்திற்கும், தங்கம் வெளி நாட்டுச் செலுத்துத் தொகைக்கும் உபயோகப்படுத்துவது வழக்கம். உள் நாட்டு உபயோகத்திற்குத் தங்கம் கிடைப்பது துர்லபம். வெளி நாடுகளில் உள் நாட்டு நாணயத்தைத் தங்க நாணயமாக மாற்றுவதற்கு ஒதுக்கு நிதி ஒன்று இருக்கவேண்டும். இந்தியா வில் 1893-ம் வருஷம்முதல் 1914-ம் வருஷம் வரை இவ்விதத் திட்டம் பழக்கத்திலிருந்தது.

தங்க நாணயத்திட்டம் சரிவர நடைபெறுவதற்குச் சில முக் கிய விதிகளுண்டு.

(1) தங்க நாணயத்திட்டம் வழங்கி வரும் தேசத்தா ரெல்லாம் அத்திட்டத்தின் தாற்பரியம் தவறாமல் நடத்திவர இணங்கவேண்டும்.

(2) பண்டங்களின் விலையும், நாணயமாற்று வீதமும் கூடிய வரை ஸ்திரமாயிருக்கும் நோக்க முறையைக் கைக்கொள்ள வேண்டும்.

(3) எல்லாத் தேசங்களிலுமுள்ள பிரதான்ய பாங்குகள் விலையின் மாற்றம் ஏற்படாததற்குரிய நோக்க முறையை அனுசரிக்கவேண்டும்.

குறியீட்டு எண்கள் (Index Numbers)

பணத்தின் மதிப்பு மாற்றமடைவதை குறியீட்டு எண்களால் அளவிடலாம். ஒரு குறியீட்டு எண்ணின் அட்டவணைக்குக் கீழ்க் கண்ட குறிப்புக்கள் முக்கியமானவை.

(1) ஒரு மட்டான காலத்தினெல்லையைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

(2) பொருந்திய பண்டங்களைத் தெரிந்தெடுக்கவேண்டும்.

(3) மேற்கூறிய பண்டங்களின் பற்பல காலங்களிலுள்ள நிரக்கு நாமாவைத் தெரிந்துகொள்ளவேண்டும். அவ்வித விலைகளுக்கும், மூலகாலத்து விலைகளுக்குமுள்ள வீதத்தைக் கணக்கிடவேண்டும்.

(4) மேற்கூறிய விலைகளின் சராசரியைக் குறிப்பிடவேண்டும்.

குறியீட்டு எண்கள் எவ்வாறு உண்டாக்குகிறோமென்பதைச் சில புறநிலை எண்களால் விளக்கிக் காட்டலாம்.

		1890		1900		1910	
		ரூ. அ. பை		ரூ. அ. பை		ரூ. அ. பை	
அரிசி	(1 புசல்)	3—0—0	100	2—0—0	$66\frac{2}{3}$	2—8—0	$83\frac{1}{3}$
கோதுமை	(,,)	2—0—0	100	2—8—0	125	2—12-0	$137\frac{1}{2}$
உருக்கு இரும்பு	(,,)	60—0—0	100	50-0—0	$83\frac{1}{3}$	40-0—0	$66\frac{2}{3}$
சர்க்கரை	(1 பவுண்டு)	0—8—0	100	0—12-0	150	0—10-0	125
நிலக்கரி	(1 டன்)	8—0—0	100	7—0—0	$87\frac{1}{2}$	8—8—0	$106\frac{1}{4}$
தேயிலை	(1 பவுண்டு)	1—0—0	100	1—4—0	125	1—2—0	$112\frac{1}{2}$
சராசரிவிலை		$600 \div 6 =$	100	$637\frac{1}{2} \div 6 = 106\frac{1}{4}$		$311/4 \div 6 = 105\frac{5}{24}$	

மேற்குறிப்பிட்ட அட்டவணையில் 1890-ம் வருஷத்தை மூல அளவு வருஷமாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். அவ்வருஷத்திய சாமான்களின் விலையுடன் மற்ற வருஷங்களில் அதே சாமான்களின் விலையை ஒத்துப்பார்க்கிறோம். ஆறு சரக்குகள் மட்டும் அறிகுறியாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். அறிகுறியாக எடுத்துக்கொண்டிருக்கும் சாமான்களின் மூல வருஷத்திய விலையையும், மற்ற வருஷத்திய விலையையும் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிறோம். 1900-ம் வருஷத்திலும், 1910-ம் வருஷத்திலுமுள்ள ஒவ்வொரு சாமானின் விலையை 1890-ம் வருஷத்திய விலையின் சதவீதமாகக் குறிப்பிடுகிறோம். 1890-ம் வருஷத்தில் அரிசியின் விலை ரூ. 3; அவ்விலையை 100 என்னும் இலக்கமாக வைத்துக்கொண்டு 1900-ம் வருஷத்தில் அரிசியின் விலையாகிய ரூ. 2-ம் சதவீதமாக குறிப்பிட்டால் $66\frac{2}{3}$ ஆகிறது. இதே விதமாக மற்ற சாமான்களின் விலை சதவீதத்திற் காட்டமுடியும். ஒவ்வொரு வருஷத்தின் சராசரி விலையானது மற்ற வருஷத்திய பண்டங்களின் அடுத்த விலைகளின் சராசரியினால் நிர்ணயிக்கப்படுகிறது. உதாரணமாக 1890-ம் வருஷத்தின் சராசரி விலை 100; 1900-ம் வருஷத்தின் சராசரி விலை $106\frac{1}{4}$; 1910-ம் வருஷத்தின் சராசரி விலை $105\frac{5}{24}$. ஒவ்வொரு வருஷத்தின் சராசரி விலையானது அவ்வருஷத்தின் குறியீட்டு எண் என்று சொல்லப்படுகிறது.

பண அளவு விதி (Quantity theory of money)

மற்ற விஷயங்கள் சமமாயிருக்கும் பட்சத்தில் பணத்தின் இராசி பெருகுவதால் அதற்குப் பொருத்தமாக அப்பணத்தின் மதிப்பு இறங்குகிறது; அதனால் விலை மட்டம் ஏறுகிறது. தலைமாற்றாயுரைக்கின் பணத்தின் இராசி குறைவதால் அதற்குப் பொருத்தமாக அப்பணத்தின் மதிப்பு ஏறுகிறது; அதனால் விலை மட்டம் இறங்குகிறது.

இக்கொள்கையைப் பொருள் நூலாளர் ஒரு சூத்திரமாக விளக்கிக்காட்டியிருக்கின்றனர். பொருளாக்க வரலாற்றில் இக்கொள்கைக்குள்ள ஆதாரத்தை எடுத்துக்காட்டலாம்.

காலம் (Period)	பண்டங்களின் விலை மட்டம் (Price-level)	காரணங்கள் (Causes)
1894 74	விலை ஏற்றம்	ஆஸ்திரேலியா, கலிபோர்னியா இவைகளிலிருந்து அதிகத் தங்கம் உற்பத்தியாகிப் பணப் பெருக்கம் ஏற்பட்டது. அதனல் பணத்தின் மதிப்பு இறங்கிப் பண்டங்களின் விலைகள் ஏறின.
1874-96	விலை இறக்கம்	சுரங்கங்களிலிருந்து வரும் தங்கம் குறைவாயிருந்ததால் தங்கத்திற்குப் பிரியம் ஏற்பட்டது. தங்க நாணயத் திட்டம் பல தேசங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டதால் பணத்தின் மதிப்பு ஏற்றமடைந்து பண்டங்களின் விலை இறக்கமடைந்தது. பண்டங்களின் உற்பத்தி அதிகப்பட்டதால் விலை இறக்கத்திற்கு இதுவும் ஒரு காரணமாயிற்று.
1914-20	ஒப்பற்ற விலை ஏற்றம்	ஐரோப்பா யுத்தத்தால் தாள்பணம் பல தேசங்களில் ஏராளமாக வெளியிடப்பட்டது. அதனல் பணத்தின் மதிப்பு இறங்கிப் பண்டங்களின் விலை ஏற்றமடைந்தது. பொருளுற்பத்திக் குறைவடைந்ததும்தவிர, பொருள்கள் விரைவாக அழிவடைந்தன.
1920-22	விலை இறக்கம்	விலை ஏற்றத்தினல் பொருளுற்பத்தி அதிகப்பட்டது. பொருளுற்பத்தி அதிகரித்துவரப் பண்டங்களின் விலை குறைவடைய ஆரம்பித்தது. தவிரவும் சில தேசங்களில் கவர்ன்மெண்டார் பொருளுற்பத்திக்குத் தக்கபடி வேண்டிய

காலம் (Period)	பண்டங்களின் விலை மட்டம் (Price-level)	காரணங்கள் (Causes)
		பணப்பழக்கமில்லாமலிருக்கும் நோக்க முறையைக் கைக்கொண்டனர்.
1929-32	விலை இறக்கம்	1929-ம் வருஷத்தில் ஆரம்பித்த பொருளாதார நெருக்கடியால் பண்டங்களின் விலை திடீரென்று இறங்கிற்று. அவ்விலை இறக்கத்திற்குப் பல காரணங்கள் இருந்தபோதிலும் தங்கம் பணப்பழக்கத்திலிருக்கும் நோக்க முறையைச் சில தேசத்தார் கைக்கொள்ளவில்லை. அதனால் பணப்பழக்கத்திற்கு வேண்டிய தங்கம் குறைந்து, தங்கத்தின் விலை ஏற்றமடைந்து பொருள்களின் விலை இறக்கமடைந்தது.

இந்திய நாணயம் (Indian Currency)

ஆதிகாலமுதல் இந்தியாவில் பணப்பழக்கமிருந்தது. கைத்தொழிலும், வர்த்தகமும் வெகுகாலமாக விருத்தியடைந்து வந்ததால் பணம் பண்டமாற்றுத் துணைக்கருவியாக வழங்கிற்று. இந்தியாவில் பழைய காலமுதல் பணப்பழக்கமிருந்ததென்பதற்கு தகுந்த ஆதாரங்களிருக்கின்றன. அவையாவன :—(1) இந்தியாவின் சமூக வாழ்க்கையைப்பற்றி எழுதிய பழைய நூல்கள். (2) வேதங்கள் (3) மனுதர்ம சாஸ்திரம் (4) பௌத்தர்கள் எழுதிய நூல்கள் (5) பழையகால இந்திய நாணயங்கள். வெள்ளி, செம்பு இவைகளால் ஆக்கப்பட்ட நாணயங்கள் உபயோகத்திலிருந்தன. சோழி, அரக்கு முதலிய வஸ்துக்கள் வ்யாவஹாரிகமாக உபயோகப்பட்டு வந்தன. இந்து அரசர்கள் தங்கத்திலும், வெள்ளியிலும் நாணயமடித்தனர்.

முகம்மதிய அரசர்கள் காலத்தில் பல நாணயச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. முகமது பின் துக்ளக் (Muhamad Bin Tuglak)

செல்வாதாரமுறையில் ஒரு புதிய உபாயம் ஏற்படுத்தினர். அதாவது வெள்ளி நாணயங்களை மதிப்பிழந்த நாணயமாக்கிச் செம்பு நாணயங்களை வெளியிட்டார். அப்பேர்ப்பட்ட செம்பு நாணயங்களுக்கு வெள்ளி நாணயங்களுக்குள்ள மதிப்பை விதித்தனர். ஆனால் இவ்விதமான உபாயங்களை நிறைவேற்றமுடியவில்லை. மொகலரசர் அரசாட்சியில் பல இடங்களில் பலவித நிறையுள்ள நாணயங்களடிக்கப்பட்டு வந்தன. அக்பர் சக்கரவர்த்தி ஒரே தன்மையுள்ள நாணயத்திட்டம் ஏற்படுத்த முயன்றார்.

பதினேழாவது நூற்றாண்டில் கிழக்கிந்திய வணிகக்கூட்டத்தார் (East India Company) தங்கள் தொழிற்சாலைகளின் உபயோகத்திற்காக நாணயங்களை வெளியிட்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் இந்தியாவில் சிலவிடங்களில் (e.g. மதராஸ்) தங்க நாணயத்திட்டமும், தங்க நாணயங்களுமிருந்தன. இதர இடங்களில் (e.g. வங்காளம்) வெள்ளி நாணயத் திட்டமும், தங்க நாணயப் பழக்கமும் (Silver standard with gold coins in circulation) ஏற்பட்டிருந்தன. இந்தியா முழுவதிலும் தங்கத்திலும், வெள்ளியிலும் வெளியிடப்பட்ட நாணயங்கள் இனத்திலும், இயல்பான மதிப்பிலும் வேற்றுமையுள்ளனவாயிருந்தன. 1806-ம் வருஷம் கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரிகள் இந்தியா முழுவதும் ஒரே தன்மையுள்ள கம்பட்டம் ஏற்படுத்த அனுமதி கொடுத்தனர். இதுவரை வழங்கிவந்த பழைய நாலுவித நாணயங்களுக்குப் பதிலாக சொற்ப தங்க நாணயங்களும், வெள்ளி ரூபாய்களில் நான்கு இனமும் வெளியிடப்பட்டன. 1818-ம் வருஷம் மதராஸில் தங்க வராகனுக்குப் (Gold pagoda) பதிலாக வெள்ளி ரூபாய் வெளியிடப்பட்டது. 1835-ம் வருஷம் 180 கிரெயின்கள் இடையுள்ளதும், 165 கிரெயின்கள் சுத்த வெள்ளியுடையதுமான வெள்ளி ரூபாய் பிரிட்டிஷ் இந்தியா முழுவதும் மூல அளவு நாணயமாக (Standard coin) வெளியிடப்பட்டது. தவிரவும் கம்பெனியாரின் ஆட்சிக்குள்ளடங்கிய இடங்களில் எவ்விதமான தங்க நாணயமும் மறுக்கமுடியா நாணயமாக (legal tender coin) ஒப்புக்கொள்ளமுடியாதென்று நிரூபித்தனர். 1835-ம் வருஷச் சட்டப்படி 15 ரூபாய்கள் மதிப்புள்ள தங்க மோரா (Gold mohur) நாணயமடிக்க அதிகாரம் கொடுக்கப்பட்

டது. 1841-ம் வருஷ பேரறிவுப்படி அரசாங்க கஜானாக்களில் மோராக்களை செலுத்துவோரிடமிருந்து பெற்றுக்கொள்ளும்படி விதிக்கப்பட்டது. சில வருஷங்களுக்குப் பிறகு ஆஸ்திரேலியா தங்கச் சுரங்கங்களிலிருந்து ஏராளமான தங்கம் வெளிவந்ததால் தங்கத்திற்கு வெள்ளியைச் சார்ந்த மதிப்பு (Value of gold in relation to silver) குறைவடைந்தது. இதனால் 1841-ம் வருஷப் பேரறிவுப்பை நிறைவேற்றமுடியவில்லை. ஆகையால் 1852-ம் வருஷம் இப்பேரறிவு நீக்கப்பட்டது. 1864-ம் வருஷம் அரசியலார் வெளியிட்ட காகித நாணயம் (Paper currency) ரூபாய்க்காவது அல்லது பவுனுக்காவது குறிப்பிட்ட வீதத்தில் மாற்றிக் கொள்ள அனுமதி கொடுத்தனர்.

இவ்விதமாக இந்தியாவின் செலாவணி 1803-ம் வருஷம் வரை வெள்ளி நாணயத்திட்டமாகவே இருந்தது. இந்திய ஸ்வர்ணசாலையில் ஜனங்களுக்கு வெள்ளியை நாணயமாக மாற்றுவதற்குரிய உரிமை ஏற்பட்டிருந்தது. ஆகையால் ரூபாயின் தங்க மதிப்பு (Value of the rupee in gold) வெள்ளிக் கட்டியின் தங்க விலையை (Gold price of the silver bullion) பொறுத்திருந்தது. புதியதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட வெள்ளிச் சுரங்கங்களினாலும், வெள்ளியை அநேக தேசத்தார் முக்கிய நாணயமாக இல்லாமல் விலக்கிவிட்டதாலும் வெள்ளியின் விலை அதிகமாகக் குறைந்தது. ஆகையால் 1871-ம் வருஷம் முதல் ரூபாயின் மாற்று வீதமும் (Exchange rate of the rupee) இறங்கிவிட்டது. 1871-ம் வருஷம் 2 ஷில்லிங்காயிருந்த ரூபாயின் மாற்று வீதம் 1892-ம் வருஷம் 1 ஷி. 3 பெ. க்கு இறங்கிற்று. இந்தியாவின் உள்நாட்டு வியவகாரங்களுக்கு இவ்வித இறக்கம் கவனிக்கத்தக்கதாக இல்லாத போதிலும், தங்க நாணயத்திட்டமுடைய தேசங்களுடன் இந்தியாவின் வெளிநாட்டு வியாபாரத்திற்கு இது ஒரு பெரிய இடையூறாயிருந்தது. ரூபாயின் மாற்று வீதங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் வியாபார நிலைமைகளைப் புரட்டியன. தவிரவும் அயல் நாட்டுப் பெருமுதல் இந்தியாவின் பொருளாதாரப் பெருக்கத்திற்கு ஒரு பெரிய இடையூறாயிருந்தது. மேலும் இந்தியா கவர்ன்மெண்டார் இங்கிலாந்துக்கு தங்களுக்குள்ள பணப்பொறுப்புக்காகப் பணம் அனுப்புவதில் அதிக நஷ்டமடைந்தனர். ரூபாயின் மாற்றுவீதம்

குறைந்துவரவே இங்கிலாந்தில் இந்திய கவர்ன்மெண்டார் சம்பந்தமாகச் செலவழிக்கின்ற பணத்திற்கு இந்தியாவிலிருந்து அனுப்ப வேண்டிய ரூபாய்கள் அதிகமாயின. ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் தங்கள் இங்கிலாந்துக்குப் பணம் அனுப்புவதில் நஷ்டமடைந்ததால் அதற்கு ஈடாக அவர்களுக்குச் சம்பளத்துடன் படியும் கொடுக்கும்படி நேரிட்டது. இதனால் வரியை அதிகப்படுத்தவேண்டியதாயிருந்தது. ரூபாயின் மதிப்பில் மாறுதல் ஏற்பட்டதால் சர்க்காரின் வரவு செலவுத் திட்டம் சரியானபடி கணக்கிடமுடியவில்லை. இப்பேர்ப்பட்ட முட்டுப்பாடால் இந்திய கவர்ன்மெண்டார் பன்னாட்டு இரு உலோக நாணய முறையை (International bimetallism) முன்னேறச் செய்ய எத்தனித்தனர். ஆனால் இந்திய கவர்ன்மெண்டார் முயற்சி சித்தியாகாததாயிருந்தது. ஆகையால் 1892-ம் வருஷம் ஹெர்ஷல் (Herschell) என்பவர் தலைமையில் ஒரு விசாரணைச் சபை நியமிக்கப்பட்டது. இந்தச் சபையின் நிட்கருஷ பத்திரிகைப்படி 1893-ம் வருஷம் இந்திய ஸ்வர்ண சாலையில் ஜனங்களுக்குத் தங்கமும் வெள்ளியையும் நாணயமடித்துக் கொள்ளும் உரிமை நீக்கப்பட்டது. ஆனால் கவர்ன்மெண்டார் ரூபாய் நாணயமடிக்கும் அதிகாரம் வைத்துக்கொண்டிருந்தனர். கீழ்க் குறிப்பிட்ட விஷயமாக அறிக்கைப்பத்திரம் வெளியிடப்பட்டது. (1) ஒரு ரூபாய்க்கு 16 பென்ஸ் வீதம் ரூபாய்களுக்கு பதிலாக இந்திய ஸ்வர்ண சாலைகளில் தங்கம் பெற்றுக்கொள்ளப்படும். (2) சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய பணத்திற்கு ஒரு சாவரன் 15 ரூபாய் வீதமாக முழு சாவரனும், அரை சாவரனும் பெற்றுக்கொள்ளப்படும். இப்பேர்ப்பட்ட உபாயங்களின் தேறின பயன்களாவன—(1) ரூபாயின் மாற்றுவீதம் வெள்ளியின் விலையுடன் இணங்கவில்லை. (2) வெள்ளியானது மூல அளவுத் திட்டமாயில்லாமல் போயிற்று. ஆனால் இன்னும் இந்தியாவின் நாணயத்திற்கு முக்கிய உபகரணமாயிருந்தது. தங்கம்மட்டும் மறுக்கமுடியா நாணயமாகவில்லை.

1898-ம் வருஷம் ஸர் ஹென்ரி பவுலர் (Sir Henry Fowler) என்பவர் தலைமையின்கீழ் இன்னொரு ஆராய்ச்சி சபை நியமிக்கப்பட்டது. இந்தச் சபையினர் அறிவித்த அபிப்பிராயங்களாவன :-

(1) பிரிட்டிஷ் சாவரின் இந்தியாவில் மறுக்கமுடியா நாணயமாக்கவேண்டும்; தவிரவும் இந்தியாவில் வழங்கு நாணயமாக வைக்கவேண்டும்.

(2) ரூபாயின் மாற்றுவீதம் 1 ஷி. 4 பெ. மதிப்பாக வைக்க வேண்டும்.

(3) ரூபாயும் முன்போலவே அளவிறந்த வரையில் மறுக்க முடியா நாணயமாக இருக்கவேண்டும்.

(4) இந்திய ஸ்வர்ண சாலைகளைக் கட்டுப்படுத்தாமல் தங்க நாணயமடிக்கச் செய்யவேண்டும்.

(5) ஸ்வர்ண சாலைகள் ஜனங்களுக்கு வெள்ளி நாணயமடிக்கும் உரிமையைத் திரும்பப் பெறக்கூடாது.

(6) வெள்ளி நாணயமடிப்பதால் ஏற்படும் லாபத்தைக் கவர்ன்மெண்டாரின் வருமானத்துடன் சேர்க்காமல் ஒரு பிரத்யேகமான ஒதுக்கு நிதியாக வைக்கவேண்டும். அந்நிதியைத் தங்கமாக வைத்திருக்கவேண்டும்.

மேற்கூறிய அபிப்பிராயங்களை இந்திய கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டனர். 1899-ம் வருஷம் (செப்டம்பர்) இந்தியா முழுவதும் சாவரின் மறுக்கமுடியா நாணயமாக அறிவிக்கப்பட்டது. ரூபாயும் எல்லையில்லாமல் மறுக்கமுடியா நாணயமாகத் தரிக்கச் செய்தனர். இவ்விதமாக இந்தியாவில் தங்க நாணய இனமாற்றுத் திட்டம் (Gold Exchange Standard) ஏற்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நிபந்தனைகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

(1) தங்கத்தின் பணப்பழக்கம் உள் நாட்டில் அதிகமாகக் கிடையாது.

(2) தேச நாணயத்தை உள்நாட்டு உபயோகத்திற்குத் தங்கமாக மீட்பது அவ்வளவு அவசியமன்று.

(3) வெளிநாடுகளுக்குப் பணம் அனுப்பவேண்டியிருந்தால் அதற்குக் கவர்ன்மெண்டாராவது அல்லது பாங்குகளாவது வேண்டியவரை குறிப்பிட்ட மாற்று வீதப்படி தங்கத்தைக் கொடுக்கத் தயாராகவிருக்கவேண்டும்.

(4) தேச நாணயத்தைத் தங்கமாக மாற்றுவதற்குத் தங்கக் காப்புநிதி வைத்திருக்கவேண்டும்.

1893-ம் வருஷமுதல் இந்திய ஸ்வர்ண சாலைகளில் வேண்டியவரை வெள்ளி நாணயமடிக்கும் உரிமை எடுக்கப்பட்டதால் உடனே ரூபாயின் மதிப்பு ஏறிற்று. 1893-ம் வருஷம் ரூபாயின் மாற்று வீதம் 1 ஷி. 2½ பெ. மதிப்பாக இருந்தது. ஆனால் ரூபாய் நாணயமடிப்பதால் ஏற்படும் பணப்பழக்கம் குறைந்ததால் ஜனங்கள் பொக்கிஷமாய் வைத்திருந்த ரூபாய்களைப் பழக்கத்தில் கொண்டுவந்தார்கள். ஆபரணங்கள் முதலியவற்றுக்கு உபயோகப்பட்டுவரும் வெள்ளியெல்லாம் நாணயப் பழக்கத்திற்கு வந்தது. பிரிட்டிஷ் இந்தியாவிற்கு வெளியிலுள்ள ரூபாய்களெல்லாம்கூட இந்தியப் பொருள் அங்காடியில் வந்து நிரம்பின. ஆகையால் இந்திய ஸ்வர்ண சாலைகள் மூடப்பட்டதின் காரணமாக ரூபாயின் மதிப்பு இறங்கிற்று. ரூபாயின் மதிப்பு இறக்கத்தை இந்திய கவர்ன்மெண்டாரால் தடுக்க முடியவில்லை. கடைசியாக ரூபாய்களை 1 ஷி. 1½ பெ. மதிப்பாக கொடுக்கும்படி ஏற்பட்டது. கொஞ்ச வருஷங்களுக்கு ரூபாய் நாணயமடிக்காமலிருக்கும் முறையை கவர்ன்மெண்டார் பிடிவாதமாய்க் கைக்கொண்டனர். ஆனால் ரூபாயின் மதிப்பு இறங்கிக்கொண்டே வந்தது. 1895-ம் வருஷம் (ஜனவரி) 12½ பெ. மதிப்பிற்கு இறங்கியது. இதற்குப் பிறகு ரூபாயின் மதிப்பு வரவர ஏறத்தொடங்கியது. 1898-ம் வருஷம் சமநிலைக்கு (Par) வந்தது. 1898-ம் வருஷம் முதல் 1916-ம் வருஷம் வரை ரூபாயின் மதிப்பில் அதிக மாற்றம் ஏற்படவில்லை.

இவ்வாறு இந்திய கவர்ன்மெண்டார் பண்ணிய நாணயப் பரிசோதனைகள் பல நிபுணர்களால் கண்டிக்கப்பட்டது. ஆனால் அனுபோகத்திலிருந்து பார்க்குமிடத்து இவ்வித நாணயத்திட்டம் சில விஷயங்களில் அனுகூலமாயிருந்ததென்பது சிலர் அபிப்பிராயம். அதாவது இத்திட்டத்தால் வியாபாரமும் கைத்தொழிலும் விருத்தியடைந்து, ஸர்க்காரின் செல்வாதாரமும் ஸ்திரமான நிலை அடைந்தது. தவிரவும் இந்தியாவில் ஏற்பட்ட தங்க நாணய இனமாற்றுத் திட்டத்தை வேறு சில தேசத்தாரும் பின்பற்றினர். இது நிற்க ஷை நாணயத்திட்டத்தைக் கண்டித்தவர்கள் இதனால் இந்தி

யாவுக்குள்ள பிரதிகூலங்களை எடுத்துரைத்தனர். அதாவது பணத்தேவையான காலங்களில் அதிக நாணயம் வேண்டியிருக்கிறது. அப்பேர்ப்பட்ட பணம் பணத்தேவையில்லாத காலத்தில் மட்டுக்குமேல் அதிகமான பணமாகவிருப்பதால் சாமான்களின் விலையை ஏறச்செய்தன. தவிரவும் ஷை திட்டமானது பணத்திற்கு அசைவற்ற நிலையைப் பெறவில்லை. 1893-ம் வருஷம் முதல் 1923-ம் வருஷம் வரை இந்தியாவில் மற்ற தேசங்களை விட விலை மாற்றங்கள் அதிகமாயிருந்தன. தவிரவும் 1907—8-ம் வருஷத்திய நெருக்கடியில் இந்தியாவின் செலாவணித் திட்டம் சீர்குலைந்துபோகும் போலிருந்தது. 1919—20-ம் வருஷத்திய நெருக்கடியில் செலாவணித் திட்டம் சீர்குலைந்து போயிற்று. தேசச் செலாவணி விஷயமாய்க் கவர்ன்மெண்டார் கூடியமட்டும் தலையிடாமலிருப்பது நல்லது. முடிவாகத் தங்க நாணய இனமாற்றுத் திட்டமானது ஒரு சிக்கான சூத்திரம். சாதாரணமாக ஜனங்கள் தெரிந்துகொள்வதற்குரிய ஒரு இலேசான திட்டமன்று.

மேற்கூறிய நாணயத்திட்டம் உத்தமமானதில்லையென்று வைத்துக்கொள்வோம். அதற்குப் பதிலாக வேறுவழி என்னவென்று கேள்வி ஏற்படுகிறது. இரு உலோக நாணய முறையே சிறந்ததென்று சிலர் கூறினர். ஆனால் அப்பேர்ப்பட்ட முறை சரியானபடி நடைபெறுவதற்குப் பன்னாட்டு ஒற்றுமை வேண்டும். அது சாத்தியமான காரியமன்று. ஆகையால் கலப்பற்ற தங்க நாணயத்திட்டமே மேலானதென்று அநேகர் அபிப்பிராயம் கொண்டனர். தங்க நாணயத்திட்டத்திற்குச் சாதகமாயிருக்கும் விஷயங்களாவன :—

(1) வெள்ளியைவிடத் தங்கமே பண்டமாற்றுத் துணைவிக் கருவியாயிருப்பதற்கு இசைவானதும், சுமக்கத்தக்கதுமாயிருக்கிறது.

(2) தங்க நாணயமே மனதுக்கடுத்த நாணயத்திட்டம்; அதாவது தங்கத்தை ஒதுக்கு நிதியாக வைத்து அதன் சார்பாக தாள் நாணயத்தைப் பணப்பழக்கமாக்குதல்.

(3) தங்க நாணயத்திற்கு ஒருவிதமான கௌரவம் இருக்கிறது.

(4) தருந்த தங்கப் பணப்பழக்கமிருந்தால்தான் தேச நாணயத்தின் மாற்றுவீதம் சரியான நிலையில் நிறுத்த முடியும்.

(5) இந்தியாவில் அதிக தங்கம் இறக்குமதியாகும்படி செய்யவேண்டும். இவ்விதமாக உலகத்திலிருக்கும் அதிக தங்கத்தினுல் ஏற்படும் விலையேற்றத்தை குறைக்க முடியும்.

1913-ம் வருஷம் சேம்பர்லின் (Chamberlain) தலைமையின் கீழ் ஒரு விசாரணைச் சபை நியமிக்கப்பட்டது. இந்தச் சபையார் தங்க நாணய இனமாற்றுத் திட்டம் இந்தியாவுக்கு மேன்மையானதென்று அபிப்பிராயப்பட்டனர். 1914-ம் வருஷம் யுத்தம் ஆரம்பித்ததால் இந்திய நாணயத்திட்டம் விஷயமாக ஒரு விதமான சீர்திருத்தமும் செய்யமுடியவில்லை. 1914—18-ல் உலக யுத்தத்தால் இந்தியாவின் நாணயத்திட்டம் சீர்குலைந்து போனது. வியாபாரமும், பொறித்தொழிலும் நிலைகுலைந்தன. அதனுல் ரூபாயின் மாற்றுவீதம் சமநிலையில்லாமல் மாறுதலடைந்தது. வெள்ளி விலை அதிகமாயிற்று. 1919-ம் வருஷம் ஒரு அவுன்ஸ் வெள்ளி 78 பென்ஸாக விற்கப்பட்டது. ஆகையால் ரூபாயின் மாற்றுவீதம் ஏறிக்கொண்டே வந்தது. 1919-ம் வருஷம் (டிசம்பர்) ரூபாயின் மாற்றுவீதம் 2 ஷி. 4 பெ. ஆக உயர்ந்தது. ஆகையால் கவர்ன்மெண்டார் சாதாரண காலங்களில் தங்க இனமாற்றுத் திட்டத்திற்காக ஏற்படுத்திய உபாயங்களெல்லாம் பிரயோஜனமில்லாமலிருந்தன.

1919-ம் வருஷம் மறுபடியும் ஒரு விசாரணைச்சபை நியமிக்கப்பட்டது (Babington Smith Committee). அச்சபையார் ரூபாயின் மாற்றுவீதம் 2 ஷி. (தங்கம்) மதிப்பாக விதிக்கும்படி அறிவித்தார். 1920-ம் வருஷ இந்திய நாணயச் சட்டப்படி ஒரு சாவரன் மதிப்பு 10 ரூபாயாக விதிக்கப்பட்டது. இவ்வீதத்தினுல் கவர்ன்மெண்டார் அதிக நஷ்டமடைந்தனர். 1921-ம் வருஷம் முதல் 1924-ம் வருஷம் (அக்டோபர்) வரை ரூபாயின் மாற்றுவீதம் 1 ஷி. 6 பெ. ஆக இருந்தது. உலகயுத்தம் ஆரம்ப முதல் (1914) இங்கிலாந்தில் பவுண்டு ஸ்டெர்லிங், சாவரன் இவை இரண்டுக்கும் ஏற்பட்டிருந்த வித்தியாசம் குறைந்து 1925-ம் வருஷத்தில் சமநிலைக்கு வந்தது. இந்தியாவிலும் ரூபாயின் மாற்று வீதம் 1 ஷி. 6 பெ. (தங்கம்) ஆக இருந்தது.

1926-ம் வருஷம் மற்ெறாரு விசாரணை சபை ஹில்டன் இயங் (Hilton-Young) என்பவர் தலைமையின்கீழ் நியமிக்கப்பட்டது. இந்தச் சபையாரின் முக்கிய அறிக்கைகள் கவனிக்கத் தக்கவை.

(1) இந்தியாவில் தங்கக்கட்டி நாணயத்திட்டம் (Gold Bullion Standard) ஏற்படுத்தவேண்டும்.

(2) ரூபாயின் மாற்று வீதம் 1 ஷி. 6 பெ. (தங்கம்) ஆக விதிக்கவேண்டும்.

(3) ரிஸர்வ் பாங்கு என்ற பெயருடன் ஒரு தலைமை பாங்கு ஸ்தாபனம் செய்யவேண்டும்.

இம்மூன்று சீர்திருத்தங்களையும் இந்திய கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டனர். ரூபாயின் மாற்று வீதம் சம்பந்தமாக ஒரு பெரிய வாக்குவாதம் ஏற்பட்டது. தேசீயர்களில் அநேகர் ரூபாயின் மாற்றுவீதம் 1 ஷி. 4 பெ. ஆக விதிக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். இவ்விஷயத்தில் ஏற்பட்ட அபிப்பிராயபேதம் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது.

நாணயமுறைச் சீர்திருத்தங்கள்
(Reform of the coinage)

1896-ம் வருஷம் ஒரு நாணயமுறைச் சீர்திருத்தம் செய்யப்பட்டது. 1835-ம் வருஷ ரூபாய்களை மறுபடியும் வெளியிடவில்லை. 1901-2-ம் வருஷம் முதல் 1840-ம் வருஷத்திய ரூபாய்களையும் இம்மாதிரியே வெளியிடவில்லை. 1906-ம் வருஷம் கலப்புச்செம்பு ஒப்பு நாணயங்கள் சிறு நடைபடிக்கைகளுக்காக வெளியிடப்பட்டன. 1909-ம் வருஷம் ஒரு அணா நிக்கல் நாணயங்களடிக்கப்பட்டன.

இந்திய நாணயங்கள் சம்பந்தமாகக் கீழ் கூறிய குறிப்பு கவனிக்கத்தக்கது.

1 பைசா (pie) = $\frac{1}{12}$ அணா
4 பைசா (pice) = 1 அணா
1 ரூபாய் (16 அணாக்கள்) = 1 ஷி. 6 பெ.
= 0·324 டாலர் (dollar)
= 0·65 யென் (yen)

இந்திய தாள் நாணயம் (Indian Paper Currency)

1839, 1840, 1843-ம் வருஷங்களின் சட்டங்களின்படி வங்காளம், பம்பாய், மதராஸ் இவைகளின் இராஜதானி பாங்குகள் (Presidency Banks) தேவையானபொழுது பணமாகக் கொடுக்கக்கூடிய நோட்டுகள் வெளியிட அதிகாரம் கொடுக்கப்பட்டன. ஆனால் இவ்வித நோட்டுகளின் பரிவர்த்தனம் இராஜ்யதானி நகரங்களில்மட்டும்தான் இருந்தது. 1861-ம் வருஷ சட்டத்தால் முந்திய சட்டங்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. இச்சட்டத்தின்படி அரசாங்கத்தாரே தாள் நாணயத்தை வெளியிட்டனர். ஆகையால் 1861-ம் வருஷமுதல் பாங்கு நோட்டுகள் கிடையாது. தாள் நாணயம் வெளியிடுதல் அரசாங்கத்தாரின் தனி உரிமையாகிவிட்டது.

1905-ம் வருஷத் தாள் நாணய சட்டப்படி தாள் நாணயங்கள் (ரூ. 5, ரூ. 10, ரூ. 50, ரூ. 100, ரூ. 500, ரூ. 1,000, ரூ. 10,000) வெளியிடப்பட்டன. மேற்குறிப்பிட்ட நோட்டுகள் ரூபாய் அல்லது தங்கத்தை அடிப்படையாக வைத்து எல்லையில்லாமல் வெளியிடலாம். நோட்டுகள் வெளியிடுவதற்காகத் தேசத்தை எட்டு வட்டங்களாக வகுத்தனர். அவ்வட்டங்களின் தலைமை ஸ்தலங்களாவன:—கல்கத்தா, கான்பூர், லாஹூர், பம்பாய், கராச்சி, மதராஸ், கள்ளிக்கோட்டை, ரெங்கூன். 1910-ம் வருஷம் வரையிலும் ஒவ்வொரு வகுப்பிலும் வெளியிடப்பட்ட நோட்டுகள் அவ்விடத்திலேதான் நாணயமாக மாற்றமுடியும். சட்டப்படி கவர்ன்மெண்டார் அவ்வித நோட்டுகளை மற்ற வகுப்புக்களில் மாற்றக் கடமைப்பட்டவரில்லை. ஆனால் பழக்கத்தில் அவ்வித நோட்டுகளைக் கவர்ன்மெண்ட் கஜானாக்களிலும், இராஜதானி பாங்குகளிலும் மாற்றுவது சகஜமாயிருந்தது.

1909-ம் வருஷம் இந்தியா முழுவதும் மறுக்கமுடியா நோட்டாக இருந்த ஐந்து ரூபாய் நோட்டு பர்மாவிலும் மறுக்கமுடியா நோட்டாக அறிவிக்கப்பட்டது. ஐந்து ரூபாய் நோட்டு வழக்கமான நோட்டாயிருந்ததால், 1910-ம் வருஷம் 10 ரூபாய் நோட்டும் 50 ரூபாய் நோட்டும் இந்தியா முழுவதும் மறுக்கமுடியா நோட்

டாக வெளியிடப்பட்டன. 1911-ம் வருஷம் 100 ரூபாய் நோட்டும் இந்தியா முழுவதும் பரவக்கூடியதாக அறிவிக்கப்பட்டது.

சட்டப்படி வெளியிடப்படும் நோட்டுக்கு அதின் மதிப்புக்குள்ள தாள் நாணய ஒதுக்கு நிதி (Paper Currency Reserve) ஏற்படுத்தவேண்டும். 1861-ம் வருஷம் வரை இந்தியா கவர்ன்மெண்டார் 4 கோடி ரூபாய்கள் வரை பத்திரங்களுக்கு (Securities) ஈடாக நோட்டுகள் வெளியிட்டனர். 1914-ம் வருஷத்தில் இம்மாதிரி நோட்டுகள் 14 கோடி ரூபாய் வரை வெளியிடப்பட்டது. 1919-ம் வருஷம் நம்பிக்கையாதாரமான நோட்டு 120 கோடி ரூபாய்கள் வரை பெருக்கமடைந்தது. இந்தியாவில் தாள் நாணயமானது சரியானபடி நாணய ஒதுக்கு நிதியன்னியில் வெளியிடக்கூடாதென்ற முறையில் நடத்தப்பட்டது. அலுவலுள்ள காலங்களில் பணத் தேவை அதிகம். ஆகையால் பொருள் அங்காடியில் பணத்திற்கு வட்டி அதிகம். அலுவலில்லாக் காலங்களில் பண இருப்பு அதிகமாயும் அதனால் பணவட்டி குறைவாயுமுளது. இப்பேர்ப்பட்ட மாற்றங்கள் வியாபாரத்திற்குப் பெரிய இடையூறாயிருந்தன. இவ்வித நெகிழ்ச்சியற்ற நிலைமையைச் சீர்ப்படுத்த இரண்டு சீர்திருத்தங்கள் பண்ணப்பட்டன. முதலாவது தாள் நாணய ஒதுக்கு நிதியில் (Paper Currency Reserve) 50 கவர்ன்மெண்ட் பத்திரமாகக் (Government securities) கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. அதனால் நாணயங்கள் அதிகப்படத் தாள் நாணயங்களும் அதிகமாக வெளியிடமுடியும். இரண்டாவது, சரியான உண்டியலுக்கு ஈடாக 5 கோடி ரூபாய் வரை இம்பீரியல் பாங்குக்குக் கூடுதலான நாணயம் வெளியிட உரிமை கொடுக்கப்பட்டது.

தாள் நாணய ஒதுக்கு நிதியில் ஒரு பாகம் லண்டனில் வைத்திருப்பது வழக்கமாயிருந்தது. இதை அநேகர் கண்டனம் பண்ணிவந்தனர், ஏனென்றால் இந்தியாவில் வெளியிடப்படும் நோட்டுக்களை மீட்பதே இந்த நிதியின் முக்கிய கருத்து. ஆகையால் தாள் நாணய ஒதுக்கு நிதி முழுவதும் இந்தியாவிலே இருக்கவேண்டுமென்று அநேகர் அபிப்பிராயப்பட்டனர்.

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் அரசியல் முறையிலும், பொருளாக்கு முறையிலும் நெருங்கிய சம்பந்தம் ஏற்பட்டிருப்ப

தால் வருஷா வருஷம் இந்தியாவிலிருந்து இங்கிலாந்திலிருக்கும் இந்தியா மந்திரிக்குப் பெருந்தொகை அனுப்பும்படியாயிருக்கிறது. இச்செலுத்து' தொகை இங்கிலாந்தில் இந்தியா மந்திரி இந்தியா சம்பந்தமாகச் செலவழிப்பதற்கேயாம். இந்தியா மந்திரி பணம் பெற்றுக்கொள்ளும் உபாயம் கவனிக்கத்தக்கது. லண்டன் பொருள் அங்காடியில் இந்தியா மந்திரி தமக்கு வேண்டியவரை இந்தியாவின் பேரில் உண்டியல் (Council Bills) விற்பது வழக்கம். இவ்வித உண்டியல் மூலமாய்ப் பணம் பெற்றுக்கொள்வது சுலபமாயிருந்தது. இந்தியாவுக்குச் சாதாரணமாக வணிகச் சமநிலை அனுகூலமாயிருப்பதால் இந்திய மந்திரிக்கு இந்தியாவின்பேரில் உண்டியல் விற்பது சாத்தியமாயிருந்தது. இந்தியாவுக்குப் பணம் அனுப்ப வேண்டியவர் இவ்வுண்டியல்களை வாங்கி இந்தியாவுக்கு அனுப்புவது வழக்கம். இந்தியாவில் அவ்வித உண்டியலை ரூபாய்களாக மாற்றமுடியும். இவ்விதமாக இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் பரஸ்பரம் செலுத்தவேண்டிய பணம் அதிகச் செலவில்லாமல் உண்டியல்கள் (Council Bills and Reverse Councils) மூலமே செலுத்தப்பட்டுவந்தது. 1905-ம் வருஷம் வரை இந்தியா மந்திரியின் உண்டியல்கள் (Council Bills) தம்முடைய பணத்தேவைக்குத் தக்கபடி விற்றுவந்தனர். 1905-ம் வருஷம் முதல் இந்தியா மந்திரி உண்டியல்களை வியாபாரமுறையில் ஏற்படும் செலுத்துத் துகைக்கும் சௌகரியப்படும்படி விற்கத்தொடங்கினர். இவ்விதமாக இந்தியாவின் ஏற்றுமதிக்குச் செலுத்தவேண்டிய பணம் உண்டியல்கள் (Council Bills) மூலமே செலுத்தப்பட்டுவந்தது. 1914-18-ம் வருஷ யுத்த காலங்களில் இந்தியா மந்திரியின் உண்டியல் விற்கும் முறை கண்டனம் செய்யப்பட்டது. நாணய மாற்றுதல் அதிக ரகசியமாக நடைபெற்றது. இந்தியாவுக்குப் பணம் அனுப்ப வேண்டிய வியாபாரிகள் இந்தியா மந்திரியின் தயவைப் பொறுத்திருக்கவேண்டியிருந்தது. ஐரோப்பா தேசங்களிலிருந்து தங்க ஏற்றுமதி நின்றுவிட்டதால் இந்தியாவுக்கு பணம் அனுப்புவதற்கு வேறு வழியில்லை. வெள்ளி விலை ஏற்றமடைந்ததால் பொருள் அங்காடி நிலை குலைந்தது. ரூபாயின் மாற்று வீதம் வெள்ளி விலையைப் பொறுத்திருந்தது. 1920-ம் வருஷம் செப்டம்பர் மாதத்

திற்குப் பிறகு ரூபாயின் மாற்று வீதத்தை ஒழுங்குபடுத்துவதை கவர்ன்மெண்டார் கைவிட்டனர். ரூபாயின் மாற்று வீதம் கவர்ன் மெண்டாரின் செலுத்து தொகை நடைபடிக்கைகளைப் பொறுத் திருந்தது. இப்பொழுது ரூபாயின் மாற்று வீதத்தை லண்டனி லிருந்து ஒழுங்குபடுத்தாமல் இந்தியாவிலிருந்தே நன்றாக ஒழுங்கு படுத்தமுடியுமென்று கவர்ன்மெண்டார் தெரிந்துகொண்டிருக் கின்றனர். ஆகையால் இந்தியா மந்திரியின் உண்டியல்கள் (Council Bills) நின்றுவிட்டன. இப்பொழுது இந்தியா சம்பந்த மாக இங்கிலாந்துக்கு அனுப்பவேண்டிய பணத்திற்கு இந்தியா வின் பொருள் அங்காடியிலே வேண்டிய பணத்தை வெளிநாட்டு உண்டியலாக வாங்கி அனுப்புகின்றனர். சமீபகாலமாக இந்த நடைபடிக்கைகள் இந்தியாவின் ரிஸர்வ் பாங்கால் (Reserve Bank) நடத்தப்பட்டுவருகிறது.

XXVIII

பாங்குகள்

பிறருடைய பணங்களைக் குறைந்தவட்டிக்கு வாங்கிச் சற்று உயர்ந்த வட்டிக்குப் பணம் தேவையானவர்களுக்குக் கடனாகக் கொடுத்து உதவி புரியும் ஸ்தாபனங்களுக்கு 'பாங்கு' என்று பெயர். பிறருடைய பணங்களை வாங்கிக் கடனாகக் கொடுக்கும் ஸ்தாபனங்கள் அநேகம் உண்டு. அவையெல்லாவற்றையும் 'பாங்கு' என்று சொல்லக்கூடாது. எந்த ஸ்தாபனத்தில் நடைமுதல் கணக்குகள் (Current Accounts) ஜனங்கள் பெயரால் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்குத் தேவையான போதெல்லாம் பாங்கில் தங்களுடைய நடைமுதல் கணக்குகளில் செலுத்திய பணங்களை 'செக்' (Cheque) மூலமாய் வாங்கிக்கொள்ளும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதோ அத்தகைய ஸ்தாபனங்கள்தான் பாங்கு என்று சொல்லப்படும்.

பாங்கின் ஆரம்பம்

ஒவ்வொரு பாங்குக்கும் முதற்பணம் அவசியமானது. புதிதாய் ஒரு ஸ்தாபனம் செய்வதற்குச் சிலர் ஒன்றுசேர்ந்து தாம் ஸ்தாபனம் செய்யும் பாங்குக்கு இவ்வளவு ரூபாய் அடங்கிய இத்தனை பங்குகள் என்று வரையறுத்துக் கொள்கின்றனர். அப்பால் பாங்குக்குப் பொருத்தமான கருத்துக்களும், விதிகளும் கூட்டுப் பங்குக் கழகங்களின் பதிவாளர் (Registrar of Joint Stock Companies) களிடம் தாக்கல் செய்யப்பட்டு அவரால் பதிவு செய்யப்படுகின்றன. பிறகு பாங்கின் விவரங்களை யெல்லாம் ஜனங்களுக்குப் பகிரங்கமாய்த் தெரிவித்துப் பங்குகள் எல்லோராலும் எடுத்துக்கொள்ளப்படும். பாங்கின் விதியிலேயே இவ்வளவு பங்குகள் சேர்ந்தவுடன் பாங்கின் நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும். அதன்படி போதுமான பங்குகள் சேர்ந்தவுடன் பாங்கின் நடபடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

டிபாஸிட்டுகள் (Deposits)

பாங்கில் ஏற்படுத்தப்பட்ட பங்குத் தொகை மாத்திரம் பாங்கு நடத்தப் போதாதாகையால் குறைந்த வட்டிக்கு ஜனங்களிடம் பணம் வாங்கிக்கொள்ளுவது வழக்கம். அப்பேர்ப்பட்ட பணத்திற்கு டிபாஸிட்டு என்று பெயர். அத்தகைய டிபாஸிட்டுகள் பலவகைப்படும். அவைகளாவன (1) நிர்ணயத்தவணை டிபாஸிட்டுகள் (Fixed Deposits) (2) சேவிங்ஸ் பாங்கு டிபாஸிட்டுகள் (Savings Bank Deposits) (3) நடைமுதல் டிபாஸிட்டுகள் (Current Deposits).

நிர்ணயத்தவணை டிபாஸிட்டுகள் குறித்த நிர்ணய காலம் வரையில் பாங்கிலேயே தங்கியிருப்பன. மற்ற டிபாஸிட்டுகளை விட இவ்வகை டிபாஸிட்டுகளுக்கு வட்டி அதிகம். பெருமுதலுள்ளவர்கள் தங்கள் பணத்தை இம்மாதிரி பாங்குகளில் போடுவது வழக்கம். ஆறுமாதம் அல்லது ஒரு வருஷத்திற்கு ஒரு முறை பாங்கில் ஏற்பட்ட விதிப்படி வட்டியை வாங்கிக்கொள்ளலாம். வட்டியைக்கொண்டு ஜீவனம் செய்பவர்களுக்கு வட்டி சரியான காலங்களில் வருவதால் இவ்வித டிபாஸிட்டுகள் அவர்களுக்கு அதிக அனுகூலமாயிருக்கிறது.

சொற்ப வரும்படியுள்ளவர்களுக்கு முதல் சேர்ப்பதற்கு சேவிங்ஸ் டிபாஸிட்டுகள் அனுகூலமாயிருக்கிறது. பலதுளி, பெருவெள்ளம் என்றபடி சிறுகச் சிறுகச் செலுத்தி ஒரு முதல் சேர்ப்பதற்கு இவ்வித டிபாஸிட்டுகள் ஏழை ஜனங்களுக்கு அதிக உபயோகமாயிருக்கின்றன.

நடைமுதல் கணக்குகள் (Current Deposits) பெருமுதலுள்ளவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் பல வழிகளிலும் சௌகரியமாயிருக்கின்றன. இந்த கணக்கில் ஒருவர் எவ்வளவு தொகையையாயினும் பல தடவையாகவோ அல்லது ஒரு தடவையாகவோ, மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ பற்றுவரவு செய்யலாம். சில பெரிய பாங்குகளில் இவ்வித டிபாஸிட்டுகளுக்குச் சொற்ப வட்டி கொடுப்பது வழக்கம். சில பாங்கர்கள் இம்மாதிரிக் கணக்குக்கு வட்டியே கொடுக்கமாட்டார்கள்.

பாங்கர்கள் பணத்திற்கு அதிக கிராக்கி இருக்கும் சமயத்தில் தாங்கள் கொடுக்கும் கடன் தொகைகளுக்கு வட்டியை உயர்த்தி விடுவார்கள். குறுகிய காலத் தவணைக்கு அதிக வட்டி கொடுப்ப தாக ஒப்புக்கொண்டு டிபாஸிட்டு வாங்குவது வழக்கம். இவ்வித டிபாஸிட்டுகளுக்கு (Season Deposits) சீசன்டிபாஸிட்டு என்று பெயர். நெல் வியாபாரி மகசூல் அறுப்பான உடன்தான் தன் வியாபாரத்திற்கு வேண்டிய நெல்லை மொத்தமாக வாங்கிக்கொள்ள வேண்டும். பொதுஜனங்களுக்குக் கிஸ்திகாலத்திலும், கலியாண காலத்திலும் செலவு அதிகமாக ஏற்படும். இக்காலங்களில் பணத் திற்கு அதிக பிரியம் ஏற்படுவதால் பாங்கர்கள் ஜனங்களிடமிருந்து கிடைக்கக்கூடிய பணங்களை 'சீசன்' டிபாஸிட்டுகளாக வாங்கு வது வழக்கம்.

பாங்கர்களின் நிலைமையை டிபாஸிட்டர்கள் எப்படி அறிவது?

பாங்கிலிருக்கும் டிபாஸிட்டுகளுக்கு பாங்கர்கள் நேராக ஒரு வித ஜாமீனும் கொடுக்கிறதில்லை. ஒரு பாங்குக்குப் பாங்குக்காரர் கள் (Shareholders) எவ்வளவு பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கி றார்களோ அவ்வளவு பங்குத்தொகைகளின் மொத்தப் பணமானது டிபாஸிட்டர்களின் தொகைகளுக்கு ஜாமீனாகும். ஒரு பாங்கில் பங்கு ஒன்றுக்கு ரூ. 100 உள்ள 10,000 பங்குகள் சேர்க்கப்பட்டி ருந்தால் அந்த பாங்கின் பங்குக்காரர்கள் பத்து லட்சம் ரூபாய்க்கு டிபாஸிட்டர்களுக்கு ஜவாப்தாரியாக விருக்கிறார்களென்று அறிய லாம். ஒரு பாங்கிலுள்ள பங்குத் தொகைக்கு (Share Capital) பாங்கின் டிபாஸிட்டர்கள் முதல் பாத்தியஸ்தர்களாயிருக்கிறார் கள். பங்குத் தொகை முழுவதையும் பாங்கர்கள் பங்குக்காரர் களிடம் வசூல் செய்து டிபாஸிட்டுத் தொகைகளையும், பங்குக் காரர்களிடம் வசூல் செய்யப்பட்ட முழுப்பங்குத் தொகைகளை யும் வெளியில் கடன் கொடுத்துப் பாங்கர்களுக்கு ஏராளமான நஷ் டம் ஏற்பட்டுவிட்டால் டிபாஸிட்டர்களுக்குத் தாங்கள் கொடுத்த பணங்களில் பெரும்பான்மை நஷ்டம் வந்துவிடும். ஆகையால் பாங்கர்கள் பங்குத்தொகை எவ்வளவு உண்டோ அந்த முழுத் தொகையையும் பங்குக்காரர்களிடமிருந்து வசூல் செய்யமாட்டார்

கள். அநேகமாய்ப் பாதிக்கு மேற்பட்டு வசூல் செய்யமாட்டார்கள். ஒரு பாங்குக்குப் பத்துலட்சம் ரூபாய் மூலதனம் என்று ஏற்பட்டு அந்தப் பத்துலட்சம் ரூபாயையும் பங்கு ஒன்றுக்கு நூறு ரூபாய் அடங்கிய பதினாயிரம் பங்குகளாக வெளியில் கொடுப்பதாகப் பகுத்திருந்தால், பாங்கர்கள் ஒரு பங்குக்கு ரூ. 50 வீதம் தான் வசூல் செய்து பாக்கியாகவிருக்கும் ரூ. 50-ஐயும் பங்குக்காரரிடம் நிறுத்திவைப்பார்கள். பங்குக்காரர்கள் தங்களிடம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ரூ. 50-ஐயும் எந்த நிமிஷத்தில் கேட்கப்படுகிறதோ அப்போது கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். பங்குக்காரரிடம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் தொகை பாங்கர்களின் மூலதனமாகவே கருதப்படும். அத்தொகை பங்குக்காரரிடம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் உத்தரவாதப்பணம் (Reserve liability of the Shareholders) என்று சொல்லப்படும்—தவிரவும் பாங்கின் வருஷாந்திர லாபத்தில் ஒரு பாகம் க்ஷேம நிதியாகப் பாங்கர்கள் வைத்துக்கொள்ளுவார்கள். மேற்கூறியபடி பங்குக்காரர்களிடம் நிறுத்திவைக்கப்பட்ட பணமும் க்ஷேமநிதியில் சேர்க்கப்பட்ட பணமும் பாங்கில் டிபாஸிட்டாகப் போடப்பட்ட பணத்திற்கு ஜாமீனாக பாவிக்கலாம். எவ்வளவுக்கெவ்வளவு பங்குக்காரரிடம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் தொகையும், க்ஷேம நிதியும் அகப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு டிபாஸிட்டுகளும் அதிகமாகும். டிபாஸிட்டுகள் அதிகமானால் பாங்கின் வேலை விரிவாக நடப்பதற்கு இடமுண்டு.

ஒவ்வொரு பாங்கும் வருஷத்திற்கு ஒரு முறையாவது அல்லது ஆறுமாதத்திற்கு ஒரு முறையாவது கணக்குகளைச் சங்கிரகமாகவும், தெளிவாகவும் தயார் செய்து அவைகளை அச்சிட்டுப் பங்குக்காரர்களுக்கும், டிபாஸிட்டர்களுக்கும் அனுப்புவார்கள். அந்தக் கணக்கானது இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கும். அதாவது பலவிதக் கணக்குகளிலும் ஜனங்களால் போடப்பட்ட தொகைகள், பாங்குக்குச் சேர்ந்திருக்கும் க்ஷேமநிதி, நிகரலாபம் இவைகளெல்லாம் ஒரு பாகத்திலும், பாங்கிலிருந்து கடனாக வெளியில் கொடுக்கப்பட்டிருக்கும் தொகைகள், பாங்கின் கட்டிடத்திற்கும் மற்றுமுள்ள சாமான்களுக்கும் உண்டான கிரயங்கள் இவைக

எல்லாத வேறு விதத்தில் பாங்கர்களால் செலவிட்டிருக்கும் தொகைகள் மற்றொரு பாகத்திலும் தெளிவாக காணப்பட்டிருக்கும். ஒவ்வொரு வருஷத்திய சங்கிரகக் கணக்கும் பங்குக்காரர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் அந்தக் கணக்குகளை அங்கீகாரம் செய்யும்பொருட்டுப் பங்குக்காரர்களின் வருஷாந்திரக் கூட்டம் கூட்டப்படும்.

பங்குக்காரர்களுக்கும், மற்றுமுள்ளவர்களுக்கும் கணக்குகள் அனுப்புவதற்குமுன் அவைகள் கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்ட தணிக்கையாளர்களால் பரிசீலனை செய்யப்பட்டு அவருடைய தகுதித்தாளையும் அந்தக் கணக்குகளுடன் சேர்த்துத்தான் பாங்கர்கள் அனுப்புவார்கள். மேற்படி தணிக்கையாளர் ஒவ்வொரு வருஷமும் பங்குக்காரர்களாலேயே நியமிக்கப்படுவார்கள். தங்களால் நியமிக்கப்பட்ட தணிக்கையாளர்களின் தகுதிப்பத்திரத்துடன் பாங்கின் கணக்குகள் அனுப்பப்படுவதால் பங்குக்காரர்களுக்கு (Shareholders) அந்த கணக்குகளில் நம்பிக்கை ஏற்படுகிறது.

செக்குகள் (Cheques)

நடைமுதல் கணக்கில் போடப்பட்ட தொகைகளை எந்த நிமிஷத்தில் தேவையானாலும் வாங்கிக்கொள்ளலாமென்பது நமக்குத் தெரிந்த விஷயம். அத்தொகைகளைச் 'செக்' மூலமாகத்தான் வாங்கிக்கொள்ளலாம். சாதாரணமாக நம் பிறருக்குக் கொடுக்கும் தொகைகளுக்கு ரசீது வாங்கிக்கொள்ளுகிறோமல்லவா? துரைத்தனத்தார் விதித்திருக்கும் சட்டப்படி ரூ. 20'க்கு மேற்பட்ட தொகைகளுக்கு ஒரு அணா ரசீது லேபில் ஒட்டிக் கையெழுத்து செய்யவேண்டுமென்பதும் அநேகருக்குத் தெரிந்த விஷயமல்லவா? அம்மாதிரியான ரசீதுகளுக்குப் பதிலாகத்தான் 'செக்குகள்' கொடுக்கப்படுகின்றன. ஒரு டிபாஸிட்டர் தன்னுடைய நடைமுதல் கணக்கிலிருந்து கொஞ்சம் தொகை வாங்க வேண்டுமானால் 'செக்கில்' தனக்கு வேண்டிய தொகையை எழுதிக் கையொப்பம் செய்து கொடுத்து வாங்கவேண்டும். செக்குகள் இம்மாதிரித்தான் இருக்கவேண்டுமென்றும், அவை இன்

ளின்ன வகைப்படுமென்றும் கவர்ன்மெண்டாரால் சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 'செக்' என்பது டிபாஸிட்டர் "இன்னாருக்காவது அல்லது இந்தச் செக்கைக் கொண்டுவந்து கொடுக்கிறவர்களுக்காவது அல்லது அவர் உத்தரவு பெற்றவர்களுக்காவது இத்தனை ரூபாய் கேட்டவுடன் கொடு" என்றெழுத்து மூலமாய்ப் பாங்கருக்கு செய்யும் உத்தரவு. இந்தப் பிரகாரம் பாங்குக்கு அனுப்பப்படும் செக்குகளுக்கு அப்போதைக்கப்போது பாங்கர்கள் செக்கில் கண்ட தொகையைச் செக்கைக் கொண்டு வருபவர் வசம் கொடுக்கக் கடமைப்பட்டவர். ஆனால் செக் சம்பந்தமாய் ஏற்பட்டிருக்கும் விதிகளை அனுசரித்துச் செக் எழுதப்பட்டிருக்கிறதா வென்றும், செக் எழுதிக் கொடுத்திருப்பவர் கணக்கில் போதுமான தொகை இருக்கிறதாவென்றும் பார்த்துக்கொண்டு செக்கில் கண்ட தொகையைக் கொடுப்பார்கள்.

செக்குத் தொகையை "இன்னாருக்காவது அல்லது ஷை செக்கைக் கொண்டுவந்தவருக்காவது கொடு" என்று எழுதப்பட்டிருக்கும் செக்குகள் 'பேரர் செக்' (Bearer cheque) என்று சொல்லப்படும். 'இன்னாருக்கர்வது அல்லது அவருடைய உத்தரவு பெற்றவருக்காவது இன்ன தொகையைக் கொடு' என்று எழுதப்பட்ட செக்குகள் 'ஆர்டர்' (Order) செக் என்று சொல்லப்படும். 'பேரர்' செக்குகளுக்கு ஷை செக்கின் தொகை யாருக்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அவருடைய (Endorsement) கையெழுத்தில்லாமலே பாங்கர்கள் செக்குத் தொகையைக் கொடுத்துவிடலாம். ஆனால் 'ஆர்டர்' செக்குகளுக்கு யாருக்குப் பணம் கொடுக்கும்படி செக்கில் எழுதியிருக்கிறதோ அவருடைய கையொப்பம் அவசியம் வேண்டும். 'பேரர் செக்காயினும், 'ஆர்டர்' செக்காயினும் யார் செக்கைக் கொண்டு வந்து பாங்கரிடம் தொகையை வாங்குவதற்குக் கொடுக்கிறார்களோ அவருடைய கையெழுத்தைப் பாங்கர் வாங்கிக்கொண்டு தான் தொகையைக் கொடுப்பார்கள். செக்கின்படி பணத்தை வாங்குபவரோ அல்லது யார் பேரால் செக்கு எழுதப்பட்டிருக்கிறதோ அவர்கள் கையெழுத்துச் செய்திருக்கிறதானது செக்குக்குப் பின்புறத்தில் அமைதல்வேண்டும். செக்குக்குப் பின்புறத்தில்

கையெழுத்துச் செய்வது 'எண்டார்சுமெண்டு' (Endorsement) என்று சொல்லப்படும்.

பாங்கில் நடைமுதல் கணக்கு வைத்திருப்பவர் யாருக்காவது பணம் கொடுக்கவேண்டுமானல் அவருக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்குச் 'செக்' ஒன்று எழுதிக்கொடுத்துவிடலாம். இம் மாதிரியான செக்குகள் பல கைகள் மாறிக் கடைசியாகப் பணம் பெறுவதற்குப் பாங்கில் கொண்டு கொடுக்கப்படும். கொடுத்த பணத்திற்கு இந்தச் செக் ஓர் ஆதாரமாக மேற்கூறியவாறு இருக்கிறது. பாங்கில் செக்கில் கண்ட தொகையைவிட அந்த கணக்கில் குறைந்த பணம் இருந்தாலொழியச் செக்குத் தொகை கொடுபடாமல் இராது. கணக்கில் குறைந்த தொகை இருந்து செக்கின் தொகை அதிகப்பட்டால் அந்தச் செக்கைப் பாங்கர் திருப்பியனுப்பிவிடுவார்கள். ஆகையால் 'செக்' எழுதிப் பிறரிடம் கொடுக்கும்போது தான் எழுதும் தொகைக்குமேற்பட்ட தொகை பாங்கில் இருக்கிறதாவென்று பார்த்துக்கொண்டுதான் செக் எழுதவேண்டும். 'செக்' எழுதிக் கொடுத்த தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் செக்கைப் பாங்கில் கொடுத்துப் பணம் வாங்கிக்கொள்ளலாம்.

பாங்கில் நடைமுதல் கணக்குள்ள இருவர்கள் ஒருவருக்கொருவர் பணம் கொடுக்கவேண்டி யிருந்தால், கொடுக்கவேண்டிய தொகைக்கு ஒரு 'செக்' எழுதி அந்தச் செக்கின் குறுக்கே இரண்டு சம அகலமுள்ள கோடுகளைக் கிழித்து 'இன்னருடைய கணக்கில் வரவு வைத்துக்கொள்ளவும்' என்று எண்டார்சுமெண்டு செய்து பாங்கர்களுக்கு அனுப்பிவிட்டால் பாங்கர்கள் அதே மாதிரி வரவு வைத்துக்கொண்டுவிட்டு அது சம்பந்தப்பட்ட டிபாசிட்டருக்கும் தெரிவித்துவிடுவார்கள். இம்மாதிரி குறுக்குக் கோடுகள் போட்டனுப்பிய செக்குக்கு 'கிராஸ்டு செக்கு' (Crossed cheque) என்று பெயர்; கிராஸ்டு செக்குகளுக்குப் பாங்கர்கள் பணம் கொடுக்கமாட்டார்கள். கணக்குகளில் வரவு வைத்துக் கொள்ளத்தான் அதிகாரமுண்டு. கிராஸ்டு செக்கு கெட்டுப்போய் விட்டாலும் அதைக்கொண்டு அயல் மனிதர்கள் ஒருவரும் பாங்கில் பணம் வாங்கிவிடமுடியாது. பாங்கர்கள் மூலமாகவோ அல்

லது பாங்கில் நடைமுதல் கணக்கு வைத்திருப்பவர் மூலமாகவோ தான் கிராஸ்டு செக்குகள் மாற்றக்கூடும். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பணம் அனுப்பவேண்டுமானால் அப்படிப் பணம் அனுப்பவேண்டியவர் பெயருக்கு ஒரு 'செக்' எழுதி அதைக் குறுக்குக் கோடுகள் கிழித்துச் சாதாரண தபாலில் அனுப்பிவிடலாம். கிராஸ்டு செக்கு தவறிவிட்டாலும் அதை மற்றொருவர் மாற்றித் தொகையை எடுத்துக்கொள்ளமுடியாது.

நடைமுதல் கணக்கு வைத்திருப்பவர்களுக்குப் பாங்கர்கள் வேறு என்ன சௌகரியங்களைச் செய்கிறார்கள் என்று கவனிப்போம்.

(1) வியாபாரிகள் அல்லது பெருமுதலுள்ளவர்கள் தம்மிடமுள்ள தொகைகளைப் பாங்கர்களிடம் தம்முடைய நடைமுதல் கணக்கில் சேர்த்துக்கொள்ளலாம்.

(2) அப்படிப் போடப்பட்டு வரவுவைத்த தொகைகளைப் பாங்கர்கள் எந்த நிமிஷத்தில் கேட்டாலும் கொடுக்கத் தயாராக இருப்பார்கள்.

(3) ஒருவர் தமக்குண்டான சகல தஸ்தாவேஜுகள் விலையுயர்ந்த சாமான்கள் ஆபரணங்கள் முதலியவைகளை ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்ளவேண்டுமென்று பாங்கர்களிடம் கொடுத்தால் ஜாக்கிரதையாய் வைத்திருந்து வேண்டியபோது திருப்பிக் கொடுத்துவிடுவார்கள்.

(4) கவர்ன்மெண்டார் கடன் பத்திரங்கள் (Government Promissory Notes) டிபாஸிட்டரிடம் இருந்தால் அவைகளைப் பாங்கியில் கொடுத்து வைத்திருக்கலாம். பாங்கர்கள் அப்பத்திரங்களை ஜாக்கிரதையாய் வைத்திருப்பதுடன் அவைகளின் வட்டித் தொகையைக் குறிப்பிட்ட தேதியில் வசூல் செய்து டிபாசிட்டரின் கணக்கில் வரவு வைத்துக்கொள்வார்கள்.

(5) கொடுக்கவேண்டிய தொகைகளுக்குச் 'செக்' கொடுப்பதானது கொடுத்த பணத்திற்கு ரசீதாகவும் ஆகின்றது.

டிபாசிட்டர்களுக்கு பாங்கர்கள் மேற்கூறிய வேலைகளை ஏன் செய்துவருகிறார்கள்? பாங்கர்களுக்கு இவ்வித வேலைகள் செய்து

வருவதால் சில அனுகூலமிருக்கின்றன. உதாரணமாக ஒரு பாங்கில் 200 நபர்கள் நடைமுதல் கணக்கு வைத்துக்கொண்டிருந்து பாங்கின் விதிப்படி ஒவ்வொரு நடைமுதல் கணக்கிலும் ரூபாய் நூறுக்குக் குறையாமல் இருக்கவேண்டுமென்று இருந்தால் பாங்கர்களுக்கு ரூ. 20,000 மிக்கக் குறைவான வட்டிக்கு நீடித்தகாலமிருக்கும். பாங்கர்கள் நடைமுதல் கணக்கிலுள்ள பணத்திற்கு மிகவும் குறைவான வட்டிதான் கொடுப்பார்கள். ஆகையால் இந்த 20,000 ரூபாயைக்கொண்டு பிறருக்கு அதிக வட்டிக்குக் கடன் கொடுத்து அதனுல் மிகுந்த லாபத்தையடைவார்கள். தவிரவும் நடைமுதல் கணக்கிலுள்ள தொகைகளை முன் எச்சரிக்கை கொடுக்காமல் எந்த சமயத்திலும் வாங்கலாமென்றாலும், நடைமுதல் கணக்குகளுள்ள எல்லோரும் ஏககாலத்தில் எல்லாத் தொகையும் வாங்கும்படி ஒருபோதும் நேரிடாது. ஆகையால் பாங்கர்கள் நடைமுதலிலுள்ள மொத்தத் தொகையில் ஒரு பாகம் மாத்திரம் தினப்படி நடக்கும் வரவு செலவுகளுக்குக் கையிருப்பாய் வைத்துக்கொண்டிருத்தல் போதுமானது. மிகவும் சொற்ப வட்டிக்கு வாங்கின நடைமுதல் கணக்கிலிருக்கும் பெரும்பான்மையோருடைய பணத்தைப் பணம் வேண்டியவர்களுக்கு அதிக வட்டிக்குக் கடன் கொடுத்தல் பாங்கர்களுக்கு அதிக லாபகரமாயிருக்கும்.

கடன்கள் (Loans and advances)

பாங்கர்களால் கொடுக்கப்படும் கடன்கள் பலவகைப்படும். பொதுவாக நீண்டகாலக் கடன்கள் பாங்கர்களால் கொடுக்கப்படமாட்டாது. குறுகியகாலக் கடன்களாயிருந்தால்தான் பாங்கர்கள் தங்களிடம் இருக்கும் தொகைகளைப் பல ஜனங்களுக்குக் கொடுத்து ஒத்தாசை செய்யமுடியும். பாங்கிலும் பணப்புரட்டல் அதிகமாகவிருக்கும். தவிரவும் பாங்கர்கள் வாங்கும் ஜாமீனனது ஜங்கம சொத்து ஜாமீன் (liquid security) ஆக இருந்தால்தான் கடன் வாங்கினவர் குறிப்பிட்ட தேதியில் பணத்தைச் செலுத்தத் தவறினுல் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் ஜங்கம ஜாமீன்களைச் சுலபமாக விற்றுத் தங்களுக்கு வரவேண்டிய தொகைகளை அடையமுடியும். அப்படியில்லாமல் ஸ்தாவர சொத்து ஜாமீன்

களாகவிருந்தால் அவைகளைச் சுலபமாக விற்கமுடியாது. இதே காரணம்பற்றித்தான் பாங்கர்கள் ஸ்தாவர சொத்தின்பேரில் கடன் கொடுக்கிறதில்லை. அத்தகைய ஜங்கம ஜாமீன்கள் பின் குறிப்பிட்டவைகளுள் அடங்கியிருக்கும்.

(1) கவர்ன்மெண்டார் கடன் பத்திரங்கள் (Government promisory notes)

(2) வியாபாரிகளுக்கு அவர்கள் வியாபாரம் செய்யும் சரக்குகள் (Goods and merchandise)

(3) நகைகள் (Jewels)

(4) தவணை உண்டிகள் (Bills of Exchange)

(5) நபர் ஜாமீன் (Personal surety)

தவணை உண்டிகள் வாங்குதல் (Discounting Bills of Exchange)

நமது நாட்டில் பழையகாலமுதல் வியாபாரிகள் ஒருவருக்கொருவர் கொடுக்கவேண்டிய பணங்களுக்கு உண்டிகள் எழுதிக் கொடுப்பது வழக்கமாயிருக்கிறது. இவ்வித உண்டியலை ஆங்கிலத்தில் பில் (Bill) என்று சொல்லுவது வழக்கம். உண்டியல் என்பது ஒருவர் மற்றொருவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைக் கேட்டவுடனாவது அல்லது குறிப்பிட்டநாள் கழித்தாவது இன்னாருக்காவது அல்லது இன்னார் உத்தரவு பெற்றவருக்காவது அல்லது அந்த உண்டியலைக் கொண்டுவந்தவருக்காவது கொடுக்கும்படி எழுதிக்கொடுக்கும் பத்திரமேயாம். வியாபாரிகள் தாங்கள் விற்கும் சரக்குகளின் கிரயத்திற்கு யாரிடம் சரக்கு விற்கிறார்களோ அவர்கள்பேரில் உண்டிகளை எழுதித் தங்கள் பாங்கரிடம் கொடுத்து உண்டியில் கண்ட தொகையை வாங்கிக்கொண்டு விடுகிறார்கள். பாங்கர்கள் இந்த உண்டிகளின் தொகைகளைக் குறிப்பிட்ட தேதிகளில் வசூலித்துத் தாங்கள் எடுத்துக்கொள்வார்கள். பாங்கர்கள் சிலநாள் கழித்து வசூலாகவேண்டிய தொகையை முன்னாடியே வியாபாரியிடம் கொடுத்துவிட வேண்டியிருப்பதால், எவ்வளவு நாள் கழித்துத் தமக்கு அந்த உண்டியின் தொகை கிடைக்குமோ அவ்வளவு நாட்களுக்குண்டான வட்டியைப் பிடித்

துக்கொண்டுதான் உண்டித்தொகையை கொடுப்பது வழக்கம். உண்டித்தொகையானது குறிப்பிட்ட தேதியில் வசூலாகாமலிருந்தால் உண்டி எழுதிக்கொடுத்த மொத்த வியாபாரிகள்தான் அந்தப் பணத்திற்கு ஜவாப்தாரியாவார். ஒவ்வொரு உண்டியலும் முன்னடியே நடந்திருக்கும் உடன்படிக்கைப்பிரகாரம் எழுதப்பட்டிருக்கிறதாவென்று பார்த்து அப்படிச் சரியாகவிருந்தால் அந்த உண்டியிலின் குறுக்கே ஒப்புக்கொள்ளப்பட்டது (accepted) என்று எழுதிக் கையொப்பம் செய்து திரும்பவும் பாங்கர்களிடம் அனுப்பி விடுவார்கள். உண்டியல் இம்மாதிரி ஒப்புக்கொள்ளப்பட்டபிறகு அதில் கண்ட பணம் கொடுக்கவேண்டிய தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன் பாங்கர்கள் அதை ஒப்புக்கொண்ட வியாபாரிக்கு உண்டியலின் தொகை இன்ன தேதியில் கெடுவாகிறதென்றும் அதன்படி தொகையைக் குறிப்பிட்ட தேதியில் பாங்கில் கொண்டுசெலுத்தி உண்டியலை ரத்துசெய்துகொள்ள வேண்டுமென்றும் ஒரு நோட்டீஸைக் கொடுப்பது வழக்கம். ஒப்புக்கொண்ட தேதியில் உண்டியல் பணம் செலுத்தாவிட்டால் பாங்கர்கள் சட்டப்படி ஏற்பட்டிருக்கிற நோடரி (Notary) ஆபீசரிடம் உண்டியலை அனுப்பி அவர்முன்னால் உண்டியல் தொகையைச் செலுத்தாமலிருந்துவிட்டதாகத் தாக்கல் செய்துவிடுவார்கள். யார் பெயருக்கு உண்டியல் எழுதப்பட்டிருக்கிறதோ அவர் தொகையைக் குறிப்பிட்ட தேதியில் கொடுக்கத்தவறினால் பாங்கர்கள் 'டிஸ்கவுண்டு' செய்யப்பட்ட உண்டியலுக்கு உண்டியல் எழுதிக்கொடுத்த வியாபாரியிடம் பாங்கர்கள் பணத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

நடைமுதல் கணக்கில் அதிகப் பற்று வரவு செய்தல் (Overdrafts)

தகுந்த வியாபாரிகளுக்குப் பாங்கர்கள் அவர்கள் கணக்கில் பணமில்லாமலிருந்தாலும் அவரவர் யோக்யதைக்குத் தக்கவாறு இவ்வளவு ரூபாய் வரையில் அதிகமாக வாங்கிக்கொள்ளலாமென்று அனுமதி கொடுப்பது வழக்கம். அதிகப்பற்றாக நடைமுதல் கணக்கில் வாங்கின தொகைகளை நீண்டகாலம் வைத்திருக்கப் பாங்கர் அனுமதி கொடுக்கமாட்டார்கள். முக்கியமாக இவ்விதப் பற்றுவரவு வியாபாரிகளுக்கே கொடுக்கப்படுமெல்லாமல் சாமானிய

ஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிறதில்லை. இம்மாதிரி நடைமுதல் கணக்கில் அதிகப் பற்றுவரவுசெய்யும்படியான சுதந்தரமும் ஜாமீனில்லாமல் பாங்கர்கள் கொடுக்கமாட்டார்கள். கவர்ன்மெண்ட் பத்திரத்தின் ஜாமீன் பேரிலோ அல்லது வேறு ஜாமீன் பேரிலோ தான் அதிகப்பற்று செய்துகொள்ள அனுமதி கொடுப்பது வழக்கம். அதிகப்பற்றுக் கணக்கில் வாங்கும் தொகைகள் கூடிய சீக்கிரம் திருப்பிக்கொடுக்கப்படவேண்டும்.

ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் பணம் அனுப்புதல்

ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் பணம் அனுப்பவேண்டுவதற்கும் பாங்கர்கள் மிக சௌகரியங்களைச் செய்கிறார்கள். முக்கியமான இடங்களிலெல்லாம் அநேகமாய்ப் பாங்கிகள் ஏற்பட்டிருக்கின்றன. எந்த இடத்தில் வியாபாரம் அதிகமாயிருக்கிறதோ அந்த இடத்தில் பாங்குகள் ஏற்படுகின்றன. பெரு முதலைக்கொண்டும், ஏராளமான டிபாசிட்டுகளைக்கொண்டும் வேலை செய்யும் பாங்கர்கள் முக்கியமான வியாபார ஸ்தலங்களில் தங்கள் கிளை ஆபீசுகளை வைத்து வேலை செய்துகொண்டிருப்பார்கள். இல்லாவிடில் அவ்வூரிலுள்ள பாங்கோடு கணக்குகள் வைத்துக்கொண்டாவது இருப்பார்கள். ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு பணம் அனுப்பவேண்டியதாக விருந்தால் அவ்வூரிலுள்ள பாங்கியில் மற்றொரு ஊருக்கு எவ்வளவு ரூபாய் அனுப்ப வேண்டியிருக்கிறதோ அந்த ரூபாயைக் கொடுத்து விட்டு 'இன்ன ஊரில் இன்னாருக்கு இத்தனை ரூபாய் அனுப்பவேண்டும்' என்று பாங்கர்களிடம் சொன்னால், எந்த ஊருக்கு பணம் அனுப்ப வேண்டுமோ அந்த ஊரிலுள்ள பாங்குக்கு இவ்வூரிலுள்ள பாங்கர்கள் ஓர் உண்டியலைக் கொடுக்கிறார்கள். யாருக்குப் பணம் கொடுக்க வேண்டுமோ அவருடைய பெயர் அந்த உண்டியலில் எழுதியிருக்கும். அந்த உண்டியைப் பணம் சேரவேண்டியவர்களுக்கு அனுப்பி விட்டால் அதை அவ்வூரிலுள்ள பாங்கரிடம் கொண்டுபோய்க் கொடுத்துத் தொகையை வாங்கிக்கொள்ளுவார்கள். ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் பணம் அனுப்புவதற்குப் பாங்கர்கள் செய்யும் சௌகரியம்போல் வேறு ஒருவரும் செய்யமுடியாது

பாங்கிகளில் நடைமுதல் கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றொரு ஊருக்குப் பணம் அனுப்பவேண்டியிருந்தால் தன்னுடைய பாங்கின் பேரில் தன் கணக்கில் ஒரு 'செக்' எழுதி கிராஸ் செய்து எந்த ஊருக்கு யாருக்கு அனுப்பவேணடுமோ அவரிடம் அனுப்பி விட்டால் அவ்வூரிலுள்ள பாங்கர்கள் வழியாய் அந்த செக்கின் தொகையை வாங்கிக்கொள்ளலாம். இவ்விதமாய் ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு அனுப்பவேண்டிய தொகைகளுக்கு உண்டியல் கொடுக்கிற வழக்கம் நமது தேசத்தில் புராதனமாய் நடந்துகொண்டிருக்கிறது. தரிசன் உண்டியல் (Bill at sight) காலஉண்டியல் (Long bills) முதலியன நமது தேசத்தில் வெகு காலமாக வழங்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால் அவைகளை நவீன முறையில் ஒழுங்குபடுத்தவேண்டியது அவசியம்.

நாணய மாற்றல்
(Foreign Exchange)

எல்லா தேசத்தாரும் ஒரேமாதிரி நாணயத்தை கைப்பற்றினால் நாணயமாற்றல் அதிக சுலபமாயிருக்கும். தேசத்திற்கு தேசம் நாணயம் வித்தியாசப்படுவதால் நாணயமாற்றல் விஷயமாய் அதிக சிக்கல் ஏற்படுகிறது. பன்னாட்டு வியாபாரத்தில் நாணய மாற்றல் மிகவும் முக்கியமாக கருதப்படுகிறது. உள்நாட்டு வியாபாரிகள் ஒருவருக்கொருவர் வியாபார சம்பந்தமாய் எழுதிக்கொடுக்கும் உண்டியல்போல, அயல்நாட்டு வியாபாரிகளின் பேரிலும் உண்டியல் எழுதிக்கொடுப்பது வழக்கமாயிருக்கிறது. அயல் நாட்டு உண்டியல்களை சுலபமாக பாங்குகள் மூலமாய் மாற்றலாம். இம்மாதிரி உண்டியல்களை மாற்றி பணத்தை கொடுப்பதற்கு பாங்குகள் கொஞ்சம் வட்டம் (Discount) எடுத்துக் கொள்ளுகின்றன. இவ்வித வேலையை நடத்திவரும் பாங்குகளுக்கு நாணயமாற்றும் பாங்குகள் (Exchange Banks) என்று சொல்லப்படுகிறது.

நமது தேசத்திலிருந்து ஏற்றுமதியாகும் சரக்குகளின் மொத்த விலை அயல் தேசத்திலிருந்து நமது தேசத்திற்கு வரும் சரக்குகளின் விலையைவிட மிக அதிகமாக விருந்து அயல் தேசத்

திய சரக்குகளின் விலையை ஈடு செய்துகொண்டது போக அயல் நாட்டுக்கு ஏற்றுமதியான சரக்குகளுக்காக அதிகப்பணம் நமது தேசத்திற்கு வரவேண்டியதாக இருந்தபோதிலும் நமது நாட்டிலிருந்து இங்கிலாந்து முதலிய தேசங்களுக்கு அனுப்பவேண்டிய தொகைகள் பல வழிகளால் ஏற்படுவதால் ஏற்றுமதியான சரக்குகளின் முழு விலையையும் ஈடு செய்துகொள்வது சுலபமாகவிருக்கிறது. இது நிற்க நமது தேசத்திலிருந்து அயல் நாடுகளுக்கு எவ்வளவு வழிகளில் பணம் போகிறதென்று பார்ப்போம். அயல் நாட்டார் இந்தியாவில் செய்யும் வியாபாரத்தால் ஏற்படும் இலாபத் தொகையை தம் தேசத்திற்கு அனுப்புகின்றனர். நமது தேசத்தில் பிழைக்கவந்திருக்கும் ஆங்கிலேயர்கள் ஒவ்வொரு மாதமும் தங்களது தேசத்திற்கு ஏராளமான தொகைகளை அனுப்புகின்றனர். இம்மாதிரி அனுப்பப்படும் தொகைகள் எல்லாம் இத்தேசத்திலுள்ள நாணயமாற்றும் பாங்குகளில் (Exchange Banks) செலுத்தப்பட்டு அவர்களிடம் உண்டியல் வாங்கி அனுப்பப்படுகின்றன. அயல் நாட்டிலிருந்து நமது தேசத்திற்கு வரவேண்டிய தொகைகளை ஈடு செய்துகொள்வதற்கு மேற்கூறியபடி உண்டிகள் கொடுப்பதானது நாணய மாற்று பாங்குகளுக்கு சௌகரியமாயிருக்கிறது. அநேகமாய் இந்தியாவிலிருந்து மற்ற தேசங்களுக்கு அனுப்பப்படும் சரக்குகள் இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் சரக்குகளைவிட அதிகமாகவேயிருக்கும். அதுகாரணம்பற்றி மேற்கூறியபடி அயல் நாடுகளுக்கு அனுப்பும்படியிருக்கும் தொகைகளை ஈடு செய்துகொண்டது போக பாக்கித்தொகை அயல்நாடுகளிலிருந்து நமது தேசத்திற்கு வரும்படியாகவிருக்கும். அப்படி மிகுதியாக அனுப்பும்படியிருக்கும் தொகைகள் கவர்ன்மெண்டார் உதவியில்லாமற் போனால் பொன் அல்லது வெள்ளியாக இத்தேசத்திற்கு அனுப்பும்படியிருக்கும்.

நமது தேசத்தின் நாணயங்களின் விலை அயல்தேசங்களினுலும், அயல்தேசங்களின் நாணயங்களின் விலை நமது தேசத்தினுலும் எவ்விதமாக நிர்ணயிக்கப்படுகின்றன என்று பார்ப்போம். ஒவ்வொரு தேசத்திலுள்ள வியாபாரிகள் தாம் வியாபாரம் செய்

யும் சரக்குகளின் விலைகளைத் தம் தேச செலாவணியாகவிருக்கும் நாணயத்தினுல்தான் சொல்லுவார்கள். இந்தியாவின் பருத்தி விலை என்னவென்று ஒரு வியாபாரியைக் கேட்டால் இவ்வளவு எடையுள்ள மூட்டை இத்தனை ரூபாய் என்று சொல்லுவர். இங்கிலாந்திலுள்ள ஒரு வியாபாரியை நூல் விலை கேட்டால் இவ்வளவு நிறையுள்ள ஒரு மூட்டைக்கு இவ்வளவு பவுன் என்று சொல்லுவர். ஆகையால் ஒவ்வொரு தேசத்திலுமுள்ள வியாபாரிகளும் தாம் தாம் இருக்கும் இடத்தில் செலாவணியாகும் நாணயத்தினுல்தான் தம் தம் சரக்குகளுக்கு விலை கூறுவார்கள். அது காரணம்பற்றி அயல்நாட்டிலிருந்து இந்நாட்டுக்கு வரும் சரக்குகளின் விலையை இந்நாட்டில் செலாவணியாகும் நாணயத்தினுல் இங்கிருக்கும் வியாபாரிகள் கொடுத்து வாங்கும்படியாக விருக்கிறபடியால் அந்த நாட்டு நாணயத்தை ஈடு செய்வதற்கு இந்த நாட்டு நாணயம் எவ்வளவு கொடுப்பது என்பது நிர்ணயம் செய்யப்படவேண்டும். சாதாரணமாக எப்படி ஒருவர் வியாபாரம் செய்யும் சரக்குகள் அதிக கிராக்கியாயிருக்கும்போது விலை உயர்ந்தும், கிராக்கி இல்லாவிடில் விலை குறைந்தும் விற்குமோ, அதேமாதிரி ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு அனுப்பவேண்டிய தொகை அதிகமாக விருந்தால் அனுப்பவேண்டிய தேசத்தின் நாணயமானது எந்த தேசத்தினுல் தொகை அனுப்பப்படுகிறதோ அந்த தேசத்தில் அதிக கிராக்கியாய்விடும். உதாரணமாக இங்கிலாந்திலிருந்து நமது தேசத்திற்குத் தொகைகள் ஏராளமாக அனுப்பவேண்டியிருந்தால் அப்படி அனுப்பவேண்டியவர்கள் இந்தியா மந்திரியினுல் வெளியிடப்பட்ட உண்டியல்களை (Council Bills) வாங்கியனுப்புவது வழக்கமாயிருந்தது. இவ்வித உண்டியல்கள் ரூபாய் நாணயத்தில் வரையப்பட்டிருந்தால் இவ்வளவு ரூபாய் பொறும் உண்டியல்களுக்கு (Council Bills) இவ்வளவு பவுன் என்று கவர்ன்மெண்டாரால் வரையறுக்கப்பட்டிருந்தபோதிலும், இந்தியாவிற்குப் பணம் அனுப்பவேண்டிய முடையை உத்தேசித்து உண்டியல்கள் என்ன விலைக்குக் கிடைக்குமோ அதைவிட அதிகமான விலைகொடுத்து வாங்குவது வழக்கமாயிருந்தது. ஆகையால் ஒரு தேசத்தின் நாணயம் மற்றொரு தேசத்தில் விற்கும் விலையானது அந்த தேசத்திற்குப் பிறதேசத்

திலிருந்து அனுப்பும்படியிருக்கும் தொகையைப் பொறுத்ததாக விருக்கிறது. ஒரு தேசத்திலுள்ள சரக்குகளை ஏராளமாகப் பிற தேசத்திற்கு அனுப்பினால்தான் அந்த தேசத்திற்குப் பிரதேசத்தி லிருந்து அனுப்பும்படியிருக்கும் தொகையைப் பொறுத்ததாக விருக்கிறது. ஒரு தேசத்திலுள்ள சரக்குகளை ஏராளமாகப் பிற தேசத்திற்கு அனுப்பினால்தான் அந்த தேசத்திற்குப் பிரதேசத் திலிருந்து ஏராளமான தொகை அனுப்பும்படியாக விருக்கும். ஆகையால் ஒவ்வொரு தேசத்திலும் செலாவணியாகும் நாணயத் திற்குப் பிரதேசத்தில் விலை ஏற்படுத்துவதானது அந்த தேசத் தின் ஏற்றுமதிச் சரக்குகளைப் பொறுத்திருக்கிறது.

சென்ற 1914-18-ம் வருஷத்திய யுத்தகாலத்தில் நமது தேசத்திலிருந்து ஏராளமான சாமான்கள் அனுப்பும்படி நேர்ந்த படியால் நமது தேசத்திலுள்ள ரூபாய் நாணயத்திற்கு வெகு கிராக்கி ஏற்பட்டது. சாதாரண காலங்களில் பதினைந்து ரூபாய் களுக்கு ஒரு பவுன் வாங்கலாம். சண்டை நடந்த காலத்தில் பவுன் விலை எட்டு ரூபாய் வரை கீழ் இறங்கிவிட்டது. ஆகை யால் ஒவ்வொரு தேசத்தின் நாணய மாற்றலும் அந்த தேசத்தின் வியாபாரத்தைப் பொறுத்திருக்கிறது. வியா பார முறையில் ஒரு தேசத்திலிருந்து மற்றோர் தேசத்திற்கு அனுப்பவேண்டிய தொகை அதிகமாகவிருந்து அந்தத் தொகை யும் சீக்கிரமாய் அனுப்பும்படியாக விருந்தால் அந்த முடையை உத்தேசித்து அதிகப்பணம் கொடுத்து அயல் நாட்டிற்கு நாண யம் அனுப்புவதினால் அயல் நாட்டு நாணயம் கிராக்கியாய் விடுகிற தென்றோம். அப்படியே அயல் நாட்டு நாணயம் கிராக்கியாவ தானது ஒரு தேசத்தின் வியாபாரத்தை எவ்விதம் பாதிக்கிற தென்று பார்ப்போம். உதாரணமாக இங்கிலாந்தையும் இந்தியா வையும் எடுத்துக்கொள்வோம். இங்கிலாந்திலிருந்து நமது தேசத் திற்கு வியாபார சம்பந்தமாய் ஏராளமான தொகை அனுப்ப வேண்டியதாக விருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். இந்தத் தொகையை அனுப்பவேண்டியதற்குப் போதுமான அளவு பொன் னாவது, வெள்ளியாவது அல்லது உண்டியல்களாவது கிடைக்க வில்லையென்று வைத்துக்கொள்வோம். இந்தியாவுக்கு அனுப்ப வேண்டிய தொகை எப்படி அனுப்பலாம்? இங்கிலாந்திலுள்ள

வியாபாரிகள் தங்களிடமிருக்கும் சரக்குகளை ஏராளமாக இந்தியாவுக்கு ஏற்றுமதிசெய்ய எத்தனித்தும் இந்தியாவுக்கு அனுப்ப வேண்டிய தொகைகளை ஈடு செய்வதற்கு முடியாது. இந்தியாவுக்குப் பணம் அனுப்பவேண்டியவர்களின் சங்கியை அதிகப்பட்டு அவர்களுள் போட்டி ஏற்பட்டால் இந்தியாவில் செலாவணியாகவிருக்கும் ரூபாய் நாணயத்திற்கு அதிக கிராக்கி ஏற்பட்டுவிடுகிறது. இந்த சமயத்தில் இங்கிலாந்திலிருக்கும் வியாபாரி இந்தியாவிலுள்ள ரூபாய் நாணயத்திற்கு அதிக விலை கொடுக்கும்படி நேரிடுகிறது. அதாவது இந்தியாவிலிருந்து இங்கிலாந்தில் இறக்குமதியாகும் சரக்குகளுக்கு அதிக விலை கொடுக்கும்படி ஏற்பட்டு விடுகிறது. இந்தியாவிலுள்ள சரக்குகள் இங்கிலாந்தில் மேற்கூறிய காரணத்தினுல் கிராக்கியாய் விடுகிறது. சாமான்கள் கிராக்கியாகும்பட்சத்தில் வியாபாரிகள் அதிக சாமான்களைக் கிராக்கி விலைக்கு வாங்கமாட்டார்களாகையால் இங்கிலாந்தில் இந்திய தேசத்திலிருந்து இறக்குமதியாகும் சாமன்கள் மிகவும் குறைந்துவிடுகிறது. இந்தியாவிலுள்ள வியாபாரிகளோ இச்சமயத்தில் இங்கிலாந்திலுள்ள நாணயம் இந்திய தேசத்தில் மிகவும் மலிவாக இருக்கிறபடியால் இங்கிலாந்திலிருந்து தங்களுக்கு வேண்டிய சாமான்களை ஏராளமாக வாங்கிக்கொள்வார்கள். அது காரணம்பற்றி இந்தியா தேசத்தில் இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாகும் சாமான்கள் மிகவும் அதிகமாகவிருக்கும். ஆகையால் இந்தியாவின் ரூபாய் நாணயம் கிராக்கியாகவிருந்தால் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகும் சாமான்கள் மிக்கக் குறைவாகவும் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாகும் சரக்குகள் மிக்க அதிகமாகவும் ஆகின்றன. அதேமாதிரி இங்கிலாந்தில் செலாவணியாகும் பவுன் நாணயமானது இந்தியாவில் கிராக்கியாக விருந்தால் அங்கிருந்து நமது தேசத்திற்கு இறக்குமதியாகும் சரக்குகள் குறைந்தும் நமது தேசத்திலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகும் சரக்குகள் அதிகப்பட்டும் போய் விடும்.

பாங்குகள் தங்கள் நிலைமையை எவ்விதம் தெரிந்துக்கொள்கிருர்கள் :—எல்லா பாங்குகளிலும் தங்கள் நிலைமையைத் தெரிந்து கொள்ளும்பொருட்டு ஒவ்வொரு வாரமுடிவிலும் சங்கிரகக் கணக்

குப் போட்டுக்கொண்டு அதில் கண்டிருக்கும் ஒவ்வொரு இனமும் விருத்திக்குக் கொண்டுவருதற்கு வேண்டிய முயற்சிசெய்து வருவார்கள். பொது ஜனங்கள் எல்லோரும் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஒவ்வொரு பாங்கும் தம் கணக்கை தினசரிப்பத்திரிகைகளிலோ, அல்லது வியாபார சம்பந்தமாயுள்ள பத்திரிகைகளிலோ பிரசுரம் செய்வது வழக்கமாயிருக்கிறது.

உதாரணமாக ஒரு பாங்கின் சங்கிரகக் கணக்கை (Balance Sheet) எடுத்துப் பார்த்தோமானால் அதில் எவ்வித இனங்கள் காணப்பட்டிருக்கிறதென்றும், பாங்கினுடைய ஸ்திதி அதனால் எப்படித் தெரிந்துகொள்ளலாமென்றும் விளங்கும்.

வருஷத்திற்கொரு முறையோ அல்லது ஆறுமாதத்திற்கொருமுறையோ ஒவ்வொரு பாங்கின் விதிகளுக்குத் தக்கவாறு பங்குக்காரர்களுக்கும், மற்றுமுள்ள டிபாசிட்டர்களுக்கும் பாங்குகளால் அனுப்பப்படும் சங்கிரகக் கணக்கானது (Balance Sheet) இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்தி முதலியன ஒரு பக்கத்திலும், கடன் முதலிய பொறுப்புகள் மற்றொரு பக்கத்திலும் காணப்பட்டிருக்கும். ஒரு பாங்கின் சங்கிரகக் கணக்கில் காணப்படும் ஒவ்வொரு இனத்தையும் விவரமாக அடியில் எடுத்துரைத்திருக்கிறதை கவனித்தால், பாங்கர்கள் அந்தக் கணக்கினால் தங்களுடைய ஸ்திதியை எப்படித் தெரிந்துகொள்ளுகிறார்களென்பது நன்கு விளங்கும். கணக்கில் பாங்கின் பொறுப்புகள் இடது பக்கத்திலும், ஆஸ்திகள் வலது பக்கத்திலும் இருப்பது காண்க.

முதலாவது பொறுப்புக்களை (Liabilities) எடுத்துக்கொள்வோம். முதலாவது பொறுப்பு மூலதனம்: பாங்கர்கள் பிறரிடத்தில் வாங்கிய பணத்தைத்தான் வெளியில் கடனாகக் கொடுக்கிறார்களாகையால், அவர்களின் முதல் வேலையானது பிறரிடத்தில் பணம் வாங்குவதேயாகும். மூலதனமானது பாங்கைச்சேர்ந்ததாக விருந்தாலும், இந்தத் தொகையை பங்குக்காரர் பாங்கிலிருந்து திருப்பி வாங்க அதிகாரமில்லையென்றாலும், பங்குக்காரர்களுக்கு பாங்கர்கள் அந்தத் தொகைகளுக்கு ஜவாப்தாரிகளான

தால் இந்தப் பாங்குத் தொகையானது பங்குக்காரர்களிடம் வாங்கப்பட்ட கடன் என்று பாவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பங்குத் தொகை அதிகாரம் பெற்றது (Authorised Capital) ; வெளியிடப்பட்டு ரொக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பங்குகள் (Subscribed Capital) ; கோரப்பட்டு பணம் செலுத்தப்பட்டது (Paid-up Capital) என பலவிதமாக பிரிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது இனத்தில் பாங்கின் க்ஷேம-நிதி இவ்வளவென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் பாங்கின் ஸ்திதியை நன்கு தெரிந்துகொள்ளலாம்.

அடுத்த இனமானது டிபாசிட்டுகள். டிபாசிட்டுகள் பலவிதம். நிர்ணயத்தவணை டிபாசிட்டுகள், 'சேவிங்ஸ்' டிபாசிட்டுகள், நடைமுதல் டிபாசிட்டுகள் முதலிய டிபாசிட்டுகள் மேற்கூறிய பாங்கியில் வாங்கப்பட்டிருக்கிறது. இந்த டிபாசிட்டுகளின் தொகை எவ்விதமாக விருக்கிறதென்பதை அடிக்கடி கவனித்து அவற்றை எவ்வாறு அதிகப்படுத்தலாமென்று பாங்கர்கள் கவனித்து வருவார்கள். இன்னொரு முக்கிய இனமாவது வசூல் பில்கள். அதாவது பாங்கர்கள் வசூல் செய்யவேண்டியவைகளைக் குறிப்பிடுகிறது. இன்னொரு இனமானது லாபநஷ்டக்கணக்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஒவ்வொரு வருஷத்திய லாபத்தையும் இந்தக் கணக்கில் கொண்டுவந்து, பிறகு இதிலிருந்து பங்குக்காரர்களுக்கு டிவிடெண்டு, க்ஷேமநிதி முதலிய கணக்குகளுக்கு பங்குக்காரர் வருஷக்கூட்டத்தில் தீர்மானம் செய்கிறபடி மாற்றுவார்கள். அப்படி மாற்றினபிறகு மிகுதியாக விருக்கும் தொகை இப்போது இந்த இனத்தில் காணப்படுகிறது.

இப்போது ஆஸ்தி வகையறுக்களைப்பற்றி கவனிப்போம் முதல் இனமாவது பாங்கிலிருந்து பல வழிகளிலும் வெளியில் கடனாகக் கொடுக்கப்பட்ட தொகைகளை தனித்தனியாகக் காட்டுகிறது. இன்னொரு முக்கிய இனமாவது வசூலாகவேண்டிய பில்கள், அதாவது உண்டிகளின் தொகை. மற்ற இனங்கள் பாங்கின் உபயோகத்திற்கு வாங்கியிருக்கும் இரும்புப்பெட்டிகள், மேஜை நாற்காலிகள், பாங்குக்குண்டாகும் இதர செலவுகள் முதலியவற்

றைக் குறிக்கின்றன. இன்னொரு இனமானது பாங்கினால் வாங்கப்பட்டிருக்கும் சர்க்கார் பத்திரங்களின் கிரயத்தையும், மதிப்பையும் காண்பிக்கின்றன. கடைசி இனம் பாங்கர்களிடம் இருக்கும் கையிருப்புத் தொகையும், அவர்களின் பாங்கர்களிடம் நடைமுதல் கணக்கில் இருக்கும் தொகைகளையும் காண்பிக்கிறது.

ஒரு பாங்கின் கணக்கில் காணப்படும் பொறுப்புகள், ஆஸ்திகள் ஆகிய இரண்டு பாகத்தின் மொத்தத் தொகைகள் சமமாக இருப்பதுதான் இந்தக் கணக்கு சரியென்பதற்கு அத்தாக்ஷியாகிறது. நடைமுதல் கணக்குகளில் ஏராளமான தொகைகள் போடப்பட்டு, அவைகள் எந்த நிமிஷத்தில் கேட்டாலும் கொடுப்பதற்குரிய வசதியிருக்கும் பொருட்டு, பாங்கர்கள் போதுமான அளவு கையிருப்பில் தொகைகள் வைத்திருக்கின்றனர். தவிரவும் இதர பாங்குகளில் தாங்கள் நடை முதல் கணக்குகள் வைத்துக்கொண்டும் இருப்பதையும் காணலாம். இதைத்தவிர சர்க்கார் பத்திரம் வாங்கியிருப்பதானது, அதிக தொகை வேண்டியிருக்கும் பக்ஷத்தில் அவைகளின் ஈட்டின் பேரில் இதர பாங்குகளில் கடன் வாங்குவதற்கு சௌகரியமாயிருக்கிறது.

இந்திய பாங்கு முறை

இந்திய பாங்கு முறையின் முக்கிய உறுப்புக்களாவன—(1) லேவாதேவிக்காரரும், உள்நாட்டு பாங்கர்களும் (Money Lenders and indigenous bankers); (2) கூட்டுப்பங்கு பாங்குகள் (Joint-stock banks); (3) நாணயமாற்று பாங்குகள் (Exchange banks); (4) போஸ்ட் ஆபீஸ் சேவிங்ஸ் பாங்குகள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள், ஜனனுகூல நிதிகள் (5) கூட்டுறவு பாங்குகள் (6) இந்திய ரிஸர்வ் பாங்கு (Reserve Bank of India).

(1) உள்நாட்டு பாங்குகள் :—இந்தியாவில் அநேகமாய் எல்லா முக்கிய இடங்களிலும் உள்நாட்டு பாங்கர்கள் இருக்கிறார்கள். மகாஜன், சிராப்பு, நாட்டுக்கோட்டை செட்டியார்கள் இவர்களெல்லாம் பாங்குத் தொழிலை வெகு திறமையுடன் நடத்தி

வருகின்றனர். அநேக ஜனங்கள் இவர்கள் மூலமாகவே கடன் வாங்குகின்றனர். உள்நாட்டு வியாபாரத்திற்கும், கைத்தொழில்களுக்கும் இவர்களால் உதவியளிக்கப்பட்டு வருகிறது. இவர்கள் பாங்குத் தொழில் தவிர வியாபாரமும் செய்து வருகிறார்கள். கிராமங்களில் லேவாதேவிக்காரர் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கிறார்கள். உள்நாட்டு பாங்கர்கள் பெரும்பாலும் தம் முதலைக்கொண்டே வியாபாரமும் பாங்குத் தொழிலும் நடத்துகின்றனர். இவ்வித பாங்கர்களை நவீன பாங்கு முறையில் உள்படுத்த இந்திய பாங்கு விசாரணை கமிட்டியார் (Indian Banking Inquiry Committee) சில வழிகளைக் காட்டியிருக்கின்றனர். அதாவது உள்நாட்டு பாங்கர்கள் பாங்குத் தொழிலையும், வியாபாரத்தையும் ஒரே முதலை வைத்து நடத்துவதை நிறுத்திவிட வேண்டும். பாங்குக் கணக்குகள் நவீன பாங்கு முறையில் வைத்துக்கொள்ளவேண்டும். தம் லாப நஷ்ட கணக்கை குறிப்பிட்டகாலத்தில் வெளியிடவேண்டும். இவ்வித முறையில் நடந்துவந்தால் உள்நாட்டு பாங்கர்களை ரிஸர்வ்பாங்குக்கு அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளமுடியும்,

(2) கூட்டுப்பங்கு பாங்குகள் (joint stock banks):—எல்லா கூட்டுப்பங்கு பாங்குகளுக்கும் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருக்கிறது. இவ்வித பாங்குகளுக்கு மூலதனம் பலவித பங்குகளாக சேர்க்கப்படுகிறது. இந்தியாவில் இப்பேர்ப்பட்ட பாங்குகள் இன்னும் மேனாட்டு பாங்குகளைப்போல அதிகமாக அமைக்கப்படவில்லை. இவ்வித பாங்குகளில் முக்கியமானது இந்திய இம்பீரியல் பாங்கு (Imperial Bank of India). இம்பீரியல் பாங்குக்கு இந்தியாவில் 163 கிளை பாங்குகள் இருக்கின்றன. இம்பீரியல் பாங்குக்கும் ரிஸர்வ் பாங்குக்கும் ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தப்படி இம்பீரியல் பாங்கானது அநேக இடங்களில் ரிஸர்வ் பாங்கின் வேலையை நடத்தி வருகிறது. கூட்டுப்பங்கு பாங்குகள் இந்தியர்களாலும், ஐரோப்பியர்களாலும், அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வித பாங்குகளின் வசூலிக்கப்பட்ட மூலதனமும் ரிஸர்வ் நிதியும் (1935-ம் வருஷத்திய புள்ளி விவரத்தின்படி) 13·20 கோடி ரூபாய்கள் ; டிபாசிட்டுகள் 84·45 கோடி ரூபாய்

கள்: ரொக்க கையிருப்பு 19·12 கோடி ரூபாய்கள். ரிஸர்வ் பாங்கின் மேற்பார்வையினாலும், 1937-ம் வருஷத்திய இந்திய கம்பெனிகளின் சட்ட சீர்திருத்தத்தினாலும், கூட்டுறவு பாங்குகள் இனிமேல் சரிவர நடைபெறுமென்று கருதப்படுகிறது. இந்தியாவிலுள்ள எல்லா பாங்குகளின் டிபாசிட்டுகள் (1935-ம் வருஷக் கணக்கின்படி) 274 கோடி ரூபாய்கள்; அவற்றுள் ரிஸர்வ் பாங்கின் டிபாசிட்டுகள் 13%; இம்பீரியல் பாங்கு 28%; நாணயமாற்று பாங்குகள் 27%; கூட்டுறவு பாங்குகள் 31%.

(3) நாணயமாற்று பாங்குகள் (Exchange Banks):— இந்தியாவின் வெளிநாட்டு வியாபாரத்திற்கு நாணயமாற்று வேலையும் இதர வேலைகளையும் செய்கின்றன. தவிரவும் தவணை டிபாசிட்டுகளும், இதர டிபாசிட்டுகளும் ஏற்றுக்கொள்ளுகின்றன. இவ்வித பாங்குகளின் எண்ணம் 17 ஆக கணக்கிடப்பட்டிருக்கிறது. அவைகளின் மூலதனமும், ரிஸர்வுநிதியும் £ 137 மிலியன்; இந்தியாவில் டிபாசிட்டுகளும், ரொக்க இருப்பும் முறையே £ 57 மிலியன், £9 மிலியனாக கணக்கிடலாம். (1935-ம் வருஷத்திய கணக்கின்படி)

(4) தபாலாபீசு சேவிங்ஸ் பாங்குகள். சாதாரண வருமானமுள்ளவர்கள் தாம் சேமிக்கும் பணத்தை கூடுதலடையும்படி வைப்பதற்கு சேவிங்ஸ் பாங்குகள் ஏற்பட்டிருக்கின்றன. இப்பாங்குகள் மற்ற பாங்குகளுடன் போட்டி போடுவதில்லை. இவ்வித பாங்குகளில் போடப்படும் பணத்திற்கு வட்டி 2% தான்; தபாலாபீசு மூலமாய் ஜனங்கள் காஷ் ஸர்டிபிகேட்டுகளும் (Cash Certificates) வாங்கலாம்.

(5) இன்ஷுூரன்ஸ் கம்பெனிகள் பணம் சேமித்து வைப்பதற்கு அநுகூலமாயிருக்கின்றன. சமீப காலங்களில் இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் அதிக விருத்தியடைந்திருக்கின்றன. இக்கம்பெனிகளின் மொத்த எண்ணம் 374 ஆக கணக்கிடப்பட்டிருக்கிறது. அவற்றுள் 232 இந்தியாவிலும், மற்றவை வெளிநாடுகளிலும் இருக்கின்றன. இந்திய இன்ஷூரன்ஸ் கம்பெனிகளில் பெரும்பான்மையானவை ஜீவித (Life Insurance) இன்ஷூரன்ஸ் கம்பெனிகள்.

வருஷம்	இந்திய கம்பெனிகளின் ஜீவித இன்ஷயூரன்ஸ் வருமானம்	இந்திய கம்பெனிகளின் ஜீவித இன்ஷயூரன்ஸ் நிதி
1926	3·32 கோடி ரூபாய்கள்	13·75 கோடி ரூபாய்கள்
1927	4·29 „	15·71 „
1928	4·23 „	17·16 „
1929	4·92 „	18·73 „
1930	4·40 „	20·52 „
1931	5·87 „	22·44 „
1932	6·88 „	25·07 „
1933	8·15 „	28·71 „
1934	8·34 „	31·87 „
1935	9·33 „	35·19 „
1936	11·35 „	40·24 „

(6) கூட்டுறவுப் பாங்குகள்.

கூட்டுறவு இயக்கம் இந்தியாவில் சமீப காலத்தில் ஆரம்பித்திருந்தும், கூட்டுறவுச் சங்கங்கள் அதிகமாகப் பெருக்கம் அடைந்து வருகின்றன. 1935–36-ல் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணம் 91,119; இந்திய தனி ஆட்சி நாடுகளில் 16,838 சங்கங்கள்; எல்லா கூட்டுறவுச் சங்கங்களின் பழக்கத்திலுள்ள மொத்தத் தொகை சுமார் 100 கோடி ரூபாய்களாக கணக்கிடலாம். கூட்டுறவுச் சங்கங்களின் பழக்கத்திலுள்ள மொத்தத் தொகைகளின் விபரங்களாவன:—

(1935—36)

பங்குத் தொகை	$13\frac{4}{5}$	கோடி ரூபாய்கள்
மெம்பர்களினிடமிருந்து டிபாசிட்டுகள்	$8\frac{3}{4}$	„
இதர நபர்கள் சங்கங்கள், பாங்குகள் இவைகளிடமிருந்து கடன்கள்	59	„
அரசாங்கத்தாரிடமிருந்து கடனும், டிபாசிட்டும்	$1\frac{1}{3}$	„
க்ஷேம நிதி	$11\frac{1}{4}$	„

ஐக்கிய நாணய பாங்குகள் இந்தியாவில் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கும் வசதிகளை அதிகப்படுத்திக்கொண்டு வருகின்றன. இவைகளில் 30 லக்ஷம் மெம்பர்களும், 40 கோடி ரூபாய்களும் பழக்கத்திலிருக்கின்றன.

கிராமங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் வரையறுக்கப்படாத பொறுப்புள்ளவைகளாயிருக்கின்றன. 1935-36-ம் வருஷத்திய கணக்கின்படி இவ்வித சங்கங்களில் பழக்கத்திலிருக்கும் தொகை $29\frac{1}{2}$ கோடி ரூபாய்களாக மதிக்கலாம்.

கடன் கொடுப்பதைத் தவிர மற்ற காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட சங்கங்களில் (1935-36-ம் வருஷக் கணக்கின்படி) $22\frac{1}{4}$ கோடி ரூபாய்கள் பழக்கத்திலிருக்கின்றன. அவ்வித எண்ணம் 12,000 ஆகக் கணக்கிடலாம்.

ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள மத்திய பாங்கு (District Co-operative Bank) கிராமங்களிலும், நகரங்களிலும் கூட்டுறவுப் பாங்குகளுக்கு வேண்டிய பணம் கடன் கொடுக்கின்றன. இந்தியாவிலுள்ள இவ்வித பாங்குகளின் பழக்கத்திலுள்ள பணம் (1935-36-ம் வருஷக் கணக்கின்படி) $29\frac{1}{2}$ கோடி ரூபாய்களாக கணக்கிடப்பட்டிருக்கிறது; பாங்குகளின் மொத்த எண்ணம் 615; அவற்றுள் 119 பாங்குகள் இந்திய தனியாட்சி நாடுகளிருக்கின்றன. ஜில்லா பாங்குகளுக்குப் பண உதவி செய்யும் பொருட்டு அநேக மாகாணங்களில் மாகாணக் கூட்டுறவுப் பாங்குகள் (Provincial Co-operative Banks) அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வித பாங்குகளின் பழக்கத்திலுள்ள பணம் (1935-36-ம் வருஷக் கணக்கின்படி) $12\frac{3}{4}$ கோடி ரூபாய்களாக கணக்கிடப்பட்டிருக்கிறது.

(7) ரிஸர்வ் பாங்கு.

வெகு காலமாக இந்தியாவுக்கு ஒரு தலைமை பாங்கின் அவசியத்தைப்பற்றிப் பலர் கூறியிருக்கின்றனர். 1935-ம் வருஷம் இந்திய கவர்ன்மெண்டார் ரிஸர்வ் பாங்கு என்னும் பெயருடன் ஒரு தலைமை பாங்கு ஏற்படுத்தி இப்பொழுது இந்த பாங்கு தாள் நாணயங்களைக் (Currency notes) கவர்ன்மெண்டார் சார்பாக

வெளியிடுகின்றது. தவிரவும் இதர பாங்குகளுக்கு உதவி பண்ணும் பாங்காக விளங்குகின்றது. கவர்ன்மெண்டாரின் பொதுச் செல்வாதார நடைபடிக்கைகள் இப்பாங்கு மூலமாய் ஏற்பட்டு வருகின்றன.

XXIX

விபாகம்

(DISTRIBUTION)

நாம் எதை விபாகிக்கிறோம்? ஒரு தேச ஜனங்களின் பல வித முயற்சியால் ஏற்படும் நாட்டுவருமானம் பங்கிடப்படுகிறது. சில தேசங்களில் நாட்டுவருமானம் அதிகமாயும், சில தேசங்களில் குறைவாயுமிருக்கின்றது. ஒரு தேசத்தின் மூலாதாரங்களை எவ்வளவுக்கெவ்வளவு உபயோகப்படுத்துகின்றனரோ அவ்வளவுக் கவ்வளவு அத்தேசத்தின் வருமானத்தை அதிகரிக்கப்பண்ணலாம். ஆகையால் நாட்டு வருமானமானது ஒரு குறிப்பிட்ட நிதியாயில்லாமல் ஆற்றில் ஓடும் ஜலத்தைப்போல் அதிகமாயும், குறைவாயுமிருக்கலாம்.

இவ்வித நாட்டு வருமானமானது பொதுவாக நான்கு பாகங்களாக விபாகிக்கப்படுகிறது. நிலஸ்வான்களுக்கு நிலவாரமாகவும் வேலைசெய்து உழைப்போருக்குக் கூலியாகவும் முதலை உபயோகப்படுத்துவோருக்கு வட்டியாகவும் கைத்தொழில்களை அமைத்து இயக்குவோருக்கு முயற்சியின் பலனாகிய இலாபமாகவும் விபாகிக்கப்படுகிறது.

இந்தியாவின் நாட்டு வருமானம் :—முப்பது வருஷங்களுக்கு முன் இந்தியாவின் சராசரி பண்ணைப் பொருளுற்பத்தி ரூ. 40 ஆக கணக்கிடப்பட்டது. சென்ற நூற்றாண்டில் ஸர் எவிலின் பாரிங்கு (Sir Evelyn Baring) என்பவர் இந்தியாவின் சராசரி வருமானத்தைத் தலைக்கு ரூ. 27 ஆக மதித்தார்; 1880-ம் வருஷத்தில் பஞ்ச விசாரணைக்காரர்கள் (Famine Commissioners) சராசரி வருமானத்தை £2 ஆக கணக்கிட்டனர்; 1903-ம் வருஷம் ராபர்ட் ஜிவ்வின் (Robert Giffin) என்பவர் £2 அல்லது ரூ. 30 ஆக கணக்கிட்டனர்; கர்ஸான் பிரபு இந்தியா கவர்ன்மெண்டார் சார்பாக மேற்கூறிய மதிப்பை ஒப்புக்கொண்டனர். டிக்பியும்,

தாதாபாய் நௌரோஜியும் இந்தியாவின் சராசரி வருமானத்தை இன்னும் குறைவாகவே மதித்தனர். இந்தியாவின் வருமானத்தைக் கணக்கிடுவதற்குத் தகுந்த சாதனங்களில்லை. சமீபத்தில் இந்தியாவின் வருமானத்தைப்பற்றி நுட்ப விசாரணை செய்தோர் பற்பல இலக்கங்களை கொடுத்திருக்கின்றனர். மதரூஸ் விவசாய இலாகாவின் 1921-ம் வருஷத்திய நிர்ணயப்படி சென்னை இராஜதானியில் சராசரி வருமானம் ரூ. 100 ஆகக் கணக்கிடப்பட்டது; பம்பாயில் தேறின வருஷ வருமானம் நகர்ப்புறங்களுக்கு ரூ. 100-ம், நாட்டுப்புறத்திற்கு ரூ. 75-ம் ஆகக் கணக்கிடப்பட்டன. இந்தியாவின் நாட்டு வருமானம் மற்ற தேசங்களுடன் ஒப்பிடுமிடத்து வெகு குறைவாகவே இருக்கிறது. இங்கிலாந்தில் சராசரி வருமானம் £50 பவுனாக மதிக்கின்றனர். அதாவது இந்தியாவின் சராசரி வருமானத்தைவிட 25 மடங்கு அதிகமாகச் சொல்ல வேண்டும்; வட அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சராசரி வருமானம் £72 பவுன்கள்; பிரான்ஸ் £38 பவுன்கள்; ஜெர்மனி £30 பவுன்கள். மேற்கூறிய தொகைகள் கணக்கிடப்பட்ட காலமுதல் மேற்கூறிய தேசங்களில் சராசரி வருமானம் அதிகரித்திருக்கிறது. உதாரணமாக இங்கிலாந்தில் தற்காலத்தில் சராசரி வருமானம் £60 பவுனாகக் கணக்கிட்டிருக்கின்றனர்.

இந்தியாவின் செல்வத்தைப்பற்றியும் தகுந்த புள்ளிவிவரங்களில்லை. இந்தியாவில் தலைக்கு இருக்கும் செல்வமானது 1910-ம் வருஷத்தில் £10 பவுனாக மதிக்கப்பட்டது; தற்காலத்தில் £20 பவுனாக மதிக்கப்படுகிறது. மற்ற தேசங்களுடன் ஒப்பிட்டால் இங்கிலாந்தின் செல்வம் தலைக்கு £334 பவுன்கள்; பிரான்ஸ் £252 பவுன்கள்; ஜெர்மெனி £246 பவுன்கள்.

நிலவாரம்

(Rent of land)

இந்தியாவில் நிலவாரமானது பழையகால வழக்கத்தையும், நிலத்திற்குள்ள போட்டியையும், சட்டநிரூபணத்தையும் பொறுத்திருக்கிறது. பழைய காலத்தில் நிலவாரமானது மாமூல்ப்படித் திட்டங்கட்டப்பட்டு வந்தது. கொஞ்சகாலமாக, பழைய கிராம

சர்வ ஜனங்களின் கூட்டுறவு குறையவும், குடிஜனம் அதிகரிக்கவும், நிலவாரமானது பெரும்பாலும் நிலத்திற்குள்ள போட்டியினாலேயே நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இவ்விதப் போட்டியினால் குடிவாரக்காரருக்கு அதிக கஷ்டம் ஏற்பட்டதால் அவர்கள் சம்பந்தமாக கவர்ன்மெண்டார் குறுக்கிடும்படியாகிவிட்டது. நிலவாரம் சம்பந்தமான சட்டங்கள் மாகாணத்திற்கு மாகாணம் வித்தியாசப்படுகின்றன. ஆனால் அச்சட்டங்களின் பொது நோக்கமானது நிலஸ்வான் தன் இஷ்டப்படி நிலவாரத்தை அதிகப்படுத்தமுடியாமலிருப்பதற்குச் சில தடைகளை விதிப்பதேயாம். நிலவாரம் சம்பந்தமாயுள்ள சட்ட நிரூபணமானது நிலஸ்வானுக்குள்ள உரிமைகளைக் குறைப்பதே முக்கிய கொள்கையாகக் கொள்ளாமல், குடிவாரக்காரர் ஏற்கனவே அனுபவித்து வரும் பாத்தியதையைக் குறைவுபடாமல் பாதுகாப்பதேயாம். ஆகையால் இந்தியாவில் நிலவாரமானது பழைய வழக்கப்படியே இன்னும் நடந்து வருவதாகச் சொல்லலாம்.

நிலவாரம் சம்பந்தமாக ரிக்கார்டோ (Ricardo) என்னும் பொருள்நூலாளர் ஒரு கொள்கையை நிரூபித்தனர். அதாவது நிலவாரமானது இயற்கைச் செழிப்பினாலும், ஸ்தல சௌகரியங்களினாலும் வாரமில்லாத கடைசி நிலத்திற்கும், அதற்கு உயர்தரமாகவுள்ள நிலத்திற்குமுள்ள வருமானத்தின் வித்தியாசமேயாம். இக்கொள்கையானது பரிச்சேதமாய் உண்மையான கொள்கையென்று சொல்லமுடியாது. அமெரிக்கா ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து முதலிய தேசங்களின் நிலவாரமானது போட்டி வாரமாயிருக்கிறதென்று சொல்லலாம். ஆனால் இந்தியாவில் அவ்விதமில்லை.

இந்தியாவில் அயன் பேரீஜ் மேற்கூறிய மூன்று காரணங்களையும் பொறுத்திருக்கிறது. அதிக ஜனநெருக்கமில்லா நாடுகளாகிய அஸ்ஸாம், மத்தியமாகாணம், ராஜபுதனம் முதலியவற்றில் நிலவாரம் குறைவாகவே யிருக்கிறது. ஜனநெருக்கமுள்ள பிரதேசங்களில்—அதாவது மழை அதிகமாயுள்ள இடங்களிலும், நதிப்பிரதேசங்களிலும்—நிலம் பயிரிடுவதற்கு அதிக போட்டியிருப்பதால் நிலவாரம் போட்டிமேல் ஏற்படும் வாரமாயிருக்கிறது.

ஆங்கில அரசாட்சியின் ஆரம்பகாலத்தில் இந்தியாவின் ஜனத்தொகை இக்காலத்திலிருப்பதைவிடக் குறைவாயிருந்தது. நிலம் அதிகமாயும், குடிவாரக்காரர் குறைவாயுமிருந்தன. ஆகையால் வாரம் குறைவாகவேயிருந்தது. சமீபகாலங்களாக ஜனத்தொகை விர்த்தியாகிக்கொண்டே வருகிறது. தவிரவும் கைத்தொழில்களும் க்ஷீணமடைந்ததால் அநேக ஜனங்கள் விவசாயத்தையே கைப்பற்றத் தொடங்கினர். இவ்விதமாக நிலத்திற்குப் பிரியம் ஏற்பட்டது. அதனால் வாரமும் உயர்ந்தது.

முற்காலத்தில் நிலவாரம் தானியமாகவே கொடுக்கப்பட்டது. மாசூல் காலத்தில் நிலஸ்வானும், குடிவாரக்காரரும் நிலத்தின் விளைவைப் பிரித்துக்கொள்வது வழக்கமாயிருந்தது. ஆனால் இக்காலத்தில் நிலவாரமானது அநேகமாகப் பணமாகவே செலுத்தப்படுகிறது.

ஒரு தேசத்திலுள்ள நிலத்திற்குச் சொந்தக்காரர் யாரென்பது தர்க்கத்திற்கு ஏதுவான விஷயமாயிருக்கிறது. ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களில் நிலத்தை ஸ்வதனமாயில்லாமல் பொதுதனமாகப் பாவிக்கவேண்டுமென்பது சிலர் கொள்கை. இந்தியாவிலும் இவ்விதக் கொள்கையுடையவர் சிலர் இருக்கின்றனர். கவர்ன்மெண்ட் அதிகாரிகளின் அபிப்பிராயப்படி நிலம் அடிப்படையாகக் கவர்ன்மெண்டாரைச் சேர்ந்ததென்றும், நிலவரியானது கவர்ன்மெண்டாருக்கு நிலத்திலிலுள்ள உரிமைக்காகக் கொடுக்கப்படும் வாரமென்றும் கருதப்படுகிறது. ஆனால் இக்கொள்கையை எல்லாரும் ஒப்புக்கொள்ளவில்லை. இவ்விஷயத்தின் சங்கேதத்தைப்பற்றி அதிக சர்ச்சை செய்யாமல் நாம் பொதுவாகச் சில விஷயங்களைக் கூறலாம். குடிவாரக்காரன், நிலஸ்வான் கவர்ன்மெண்ட், இம்மூவருக்கும் நிலத்தில் வரையறுக்கக்கூடிய சுதந்தரமிருப்பதாகச் சொல்லலாம். சாஸ்வதவரி ஏற்பாடுள்ள நிலங்களுக்குக் கவர்ன்மெண்டார் சொந்தக்காரரின் உரிமை பாராட்ட முடியாது.

கூலி (Wages).

பொருளுற்பத்திக்குரிய சாதனங்களாகிய நிலம், உழைப்பு, முதல் முதலியவற்றில் உழைப்பே முதன்மையானது. ஏனென்

ருல் எல்லாப் பொருளுற்பத்தியும் மனிதனின் நுகர்வுக்கேயாம் தவிரவும் உழைப்பை மக்களினின்று பிரிக்கமுடியாது. நிலத்திற்கு வாரமும், முதலுக்கு வட்டியும் கிடைப்பதுபோல உழைப்புக்குக் கூலி கிடைக்கிறது.

பொருளுற்பத்தி சாதனமாகிய உழைப்பின் சில விற்பன்னங்களை கவனிப்போம்.

(1) ஒரு கூலி வேலைக்காரன் தன் ஊழியத்தை முதலாளிகளுக்கு விற்கிறான். ஆனால் அவன் முதலாளிக்கு அடிமை என்று நினைக்கக்கூடாது. முதலாளிகளுக்கு தம் கூலி வேலைக்காரரைப் பொருள் செலவழித்து வேலைகளில் நன்றாகப் பழக்க ஊக்கம் ஏற்படுவதில்லை. ஏனென்றால் நன்றாகப் பழக்கப்பட்ட வேலைக்காரன் வேறு வேலைகளுக்குப் போய்விடலாம். தவிரவும் கூலி வேலைக்காரர் கூடிய சீக்கிரத்தில் கூலி சம்பாதிப்பதே முக்கிய கருத்தாகக்கொண்டு, தமக்கும் தம் பரம்பரைக்கும் வேலையில் பழக்கவேண்டிய முறையைக் கவனிப்பதில்லை.

(2) கூலி வேலைக்காரன் வேலை கிடைக்கும் இடம் தேடிச் செல்ல வேண்டியிருக்கிறது. நிலம், முதல் இவைகளை உடையவர்கள் தாம் இருக்கும் இடத்திலேயே இருந்துகொண்டு வெளியிடம் போகாமல் பலன் அடைகின்றனர். ஆனால் கூலிவேலை செய்வோர் வேலை கிடைக்கும் இடம் தேடித்திரிகின்றனர்.

(3) கூலிவேலைக்காரர் வேலையில்லாமல் வெகுகாலமிருக்க முடியாது. வேலையில்லா நாட்கள் வீணாட்கள். அந்நாட்களில் சம்பாதிக்கக்கூடிய பணம் மீட்கமுடியாது வேலையில்லாத் திண்டாட்டத்தினால் வாழ்க்கை நிலை குறைந்து வேலைக்காரரின் திறனும் குறைகின்றது.

(4) தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் ஏற்படும் ஒப்பந்தத்தில் தொழிலாளிகள் எப்பொழுதும் நஷ்டப்படக்கூடியவராக இருக்கின்றனர். ஏனென்றால் எக்காரணத்தினாலாவது தொழிலாளிகள் வேலையில்லாமலிருக்க முடியாது.

(5) உழைப்பாளிகள் எப்பொழுதும் வேண்டியவரை கிடைப்பதில்லை. உழைப்பாளிகளை வேலைக்குத் தக்கபடி பழக்கவேண்டி

யிருக்கிறது. சில வேலைக்கேற்ற உழைப்பாளிகள் தலைமுறை தலைமுறையாகப் பழக்கப்பட்டு வருகின்றனர்.

பழையகாலத்தில் கிராமங்களில் கூலியானது தானியமாகவே கொடுக்கப்பட்டது. இக்காலத்தில் பணப்பழக்கம் அதிகமாயிருப்பதால் கூலியானது பணமாகவே கொடுக்கப்படுகிறது. இந்தியாவில் அநேக கூலிவேலைகளில் கூலியானது பழைய பழக்கத்தை அனுசரித்து நிர்ணயிக்கப்படுகிறது. மேனாடுகளில் கூலியானது பெரும்பாலும் தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் ஏற்படும் போட்டியினால் தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் அவ்விதப் போட்டியில் தொழிலாளிகள் பலக்குறைவாயிருப்பதால் கூலி அதிக குறைவுபடாமலிருப்பதற்குத் தொழிலாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. விவசாயத் தொழில்களில் உழைப்போரின் கூலி பொதுவாகக் குறைவாகவே யிருக்கிறது. கைத்தொழில்களில் உழைப்பவர் கூலியானது விவசாயக் கூலியைவிட அதிகமாயிருக்கிறது. பொறிச்சாலைகள் ஏற்பட்டிருக்கும் இடங்களில் கூலிவீதம் அதிகமாயிருக்கிறது. இக்காலத்தில் போக்குவரவு சாதனங்கள் வளர்ச்சியடைந்திருப்பதால் எல்லாவிடங்களிலும் கூலி வேலைக்காரரின் சம்பளம் உழைப்புத் தேவைக்குத் தக்கபடியும், உழைப்பாளி கிடைப்புக்குத் தக்கபடியும் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. இக்காலத்தில் கூலிவேலைக்காரர் வேலை கிடைக்குமிடங்களுக்குப் போகத்தயாராயிருக்கிறார்கள். அஸ்ஸாம் தேயிலைத் தோட்டங்களுக்கும், வங்காளத்துச் சணற்றொழில் சாலைகளுக்கும் வேண்டிய கூலி வேலைக்காரர் இதர மாகாணங்களிலிருந்து செல்லுகின்றனர்.

கூலிவேலைக்காரரைக் கைதேர்ந்த உழைப்பாளி, கைதேரா உழைப்பாளி, என பிரிக்கலாம். பொறித்தொழில் சாலைகளில் வேலைசெய்கின்றவர் பெரும்பாலும் கைதேரா உழைப்பாளிகளாயிருக்கின்றனர். அத்தொழில்களிலுள்ள கைதேர்ந்த உழைப்பாளிகள் பெரும்பாலும் அன்னியர்களாயிருக்கின்றனர்.

கூலிவிஷயமாயுள்ள புள்ளி விவரங்கள் பூரணமாய்க் கிடைப்பதில்லை. இந்தியாவில் கூலிவேலைக்காரர் பெரும்பாலும் விவசாயத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றனர். விவசாயம் சம்பந்த

44

மாய்க் கூலிவேலை செய்பவர் அடையும் பலன் சரியானபடி கணக்கிடப்படவில்லை. தவிரவும் கூலியானது தொழில்களுக்குத் தக்கபடி வித்தியாசப்படுகிறதல்லாமல், ஒரே தொழிலில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாய் இருக்கிறது. மேலும் தொழில்களில் வேலை ஒழுங்காகக் கிடைப்பதில்லை. வருஷம் முழுவதும் வேலை கிடைப்பதில்லை. இவ்வித நிலைமையில் சராசரிக் கூலியென்பது ஒரு அர்த்தமில்லாத பதமென்றுதான் சொல்லவேண்டும். ஆனால் இதர தேசங்களுடன் ஒப்பிடுவதற்கு இந்தியாவின் கூலிவேலைக்காரரின் சராசரிக் கூலியானது கைதேரா உழைப்பாளருக்கு ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு 6 அணுவாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் கூலி பலவிதமாகக் கொடுக்கப்படுகின்றது. தொழிற்சாலைகளில் கூலியானது காலக்கணக்கின் பேரில் கொடுக்கப்படுகின்றது. கைவேலைகளிலும், குடிசைத் தொழில்களிலும் கூலியானது செய்த வேலைக்குத் தக்கபடி கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் கூலியானது ஒப்பந்தப்படி கொடுக்கப்படுகிறது. சில வேலைகளில் தாழ்ந்த கூலி இவ்வளவென்று ஒப்பந்தம் பண்ணி வேலையின் திறமைக்குத் தக்கபடி கூலியை உயர்த்துகின்றனர்.

சென்ற ஐம்பது வருஷகாலங்களாக விலைவாசி உயர்ந்ததினுல் கூலிவேலைக்காரரின் சம்பளங்களும் உயர்ந்தன. 1920—21 வரை விலைவாசி உயர்ந்ததற்குத் தக்கபடி கூலி உயரவில்லை. சமீபகாலங்களில் எல்லாக் கூலிவேலைக்காரர்களுக்கும் கூலி உயர்ந்திருக்கிறது. பம்பாய் மாகாணத்தில் கூலிவேலைக்காரரின் கூலி இரண்டுமடங்கு உயர்ந்திருக்கிறது. அதாவது வெளிவேலை செய்வோருக்கு நாலு அணுவிலிருந்து 9 அணு வரையிலும், நகரங்களிலுள்ள கைதேரா உழைப்பினருக்கு 6 அணுவிலிருந்து 9 அணு வரையிலும், கைதேர்ந்த உழைப்பினருக்கு 13 அணுவிலிருந்து 1 ரூபாய் வரையிலும் உயர்ந்திருக்கிறது. தற்காலத்தின் விலைமட்டத்தை 1914-ம் வருஷத்துடன் ஒப்பிடுமிடத்துத் தற்கால வாழ்க்கை நிலை குறைவாகவேயிருக்கிறது. 1914-ம் வருஷத்திய விலைமட்டத்தை 100 என்று வைத்துக்கொண்டால், இக்கால விலைமட்டம் சுமார் 154 ஆகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

வட்டியும், இலாபமும்
(Interest And Profits)

ஒரு முதலாளியின் வருமானத்தை இரண்டு பாகமாகப் பிரித்துக் காட்டலாம்—(1) அவனுடைய முதலுக்குக் கிடைக்கும் வட்டி (2) அவனுடைய முயற்சிக்குக் கிடைக்கும் இலாபம். வட்டியானது முதலுக்கு ஏற்படும் தேவையையும், தேவைக்குத் தக்கபடியுள்ள முதலின் இருப்பையும் பொறுத்திருக்கிறது. ஒரு கூட்டுப்பங்குக்கழகத்தை (Joint stock company) எடுத்துக்கொண்டோமானல், அதில் பலவிதமாக மூலதனம் திரட்டப்படுகிறது. டிபன்சர் (Debenture) என்று சொல்லப்படும் இருணச்சீட்டுகள் மூலமாய் ஏற்படும் முதலுக்குள்ள வருமானம் அவ்விடுமுதலுக்கு வட்டியாகச் சொல்லலாம். இந்த வருமானமானது கழகத்தின் இலாப நஷ்டங்களுக்குச் சம்பந்தமில்லாமல் ஒரே விகிதத்தில் கொடுக்கப்படுகிறது. ஆனல் சாதாரண பங்குகளுக்குக் (Ordinary shares) கிடைக்கும் வருமானம் கழகத்தின் இலாப நஷ்டப்படி மாறுபாடு அடைகின்றது. ஆகையால் சாதாரணப் பங்குடையவரின் வருமானத்தில் ஒரு பகுதி முதலின் வட்டியென்றும் மற்றொரு பகுதி இலாபமென்றும் சொல்லலாம். அதாவது ஒரு கழகத்தின் 'டிவிடெண்டு' என்று சொல்லும் வருமானம் முழுவதும் முதலின் தேறின வட்டியென்று சொல்லமுடியாது.

வட்டிவிகிதத்தைப்பற்றித் தற்காலத்தில் அதிக சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது. வட்டிவிகிதம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது? பொதுவாக வட்டிவிகிதம் முதலின் தேவையையும், முதலின் இருப்பையும் பொறுத்திருக்கிறது. மூலதனத்தைச் சரியான தொழில்களில் அமைத்து இலாபமடையக் கூடுமாகில் மூலதனத்துக்கு அதிகத்தேவை ஏற்படுகிறது. வேண்டிய முதல் கிடைக்க வேண்டுமானல், முதலாளிகள் தமக்கு கிடைக்கும் வட்டியையும் தம் முதலுக்குக் கூடியவரை விபத்து ஒன்றும் ஏற்படாமல் இருக்கக்கூடிய நிலைமையையும் கவனிக்கின்றனர். பொதுவாக கவர்ன்மெண்டாருக்குக் குறைந்த வட்டிக்கு ஜனங்கள் பணம் கடன் கொடுக்கத் தயாராயிருப்பதற்கு ஒரு முக்கிய காரணமென்னவென்

ருல் தம் விடுமுதலுக்குக் கூடியவரை விபத்து ஏற்படாதென்ற நோக்கமேயாம்.

இந்தியாவிலுள்ள பெரிய தொழில்களுக்கு வேண்டிய முதலானது வெளிதேசங்களிலிருந்து வாங்கப்பட்டிருக்கிறது. ஆகையால் தொழில்களின் இலாபமும், முதலின் வட்டியும் வெளிதேசங்களுக்குப் போகின்றன. ஒரு கூட்டுக்கடையின் முதலானது அத்தொழில் நடத்தப்போதாது. ஆகையால் அதிக முதல் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. பொதுவாக பெரிய தொழில்கள் பாங்குகளிலிருந்து கடன் வாங்குகின்றன.

வட்டிவீதமானது கோட்பாட்டிற்குரிய முறையில் ஓரிடத்தில் ஒரே சமயத்தில் கடன் வாங்குவோருக்கு ஒன்றுகவேதான் இருக்கவேணுமென்றாலும், கடன் வாங்குவோர் அந்தஸ்தையும், கடனின் தவணையையும் பொறுத்திருக்கிறது. வட்டி வீதமானது பல இடங்களில் பலவிதமாயிருக்கிறது, நாட்டுப் புறத்திலுள்ள வட்டி வீதம் நகரப்புறத்திலுள்ள வட்டிவீதத்தைவிட அதிகமாயிருக்கிறது. தவிரவும் வட்டிவீதம் காலத்திற்குத் தக்கபடி மாறுபாடு அடைகின்றது. விவசாயப் பொருள்கள் ஏற்றுமதிக்குத் தயாராயிருக்கும் காலத்தில் பணத்திற்கு அதிக தேவையிருப்பதால் அக்காலத்தில் வட்டிவீதம் அதிகமாயிருக்கிறது. பொதுவாக ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் பாங்கு வட்டிவீதம் 3% அல்லது 4% ஆக இருக்கிறது. செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் வட்டிவீதம் அதிகரித்து வருகின்றது. இவ்வித ஏற்றம் மார்ச்சு மாதம் வரை தரிக்கின்றது. ஏப்ரல் மாதம் முதல் மறுபடியும் வட்டிவீதம் குறைந்து தாழ்வு வீதம் அடைகின்றது. இந்தியாவில் சராசரி வட்டிவீதம் ஐரோப்பா தேசங்களிலுள்ள வட்டி வீதத்தைவிட அதிகமாயிருப்பதாகச் சொல்லலாம். சமீப காலங்களில் இந்திய கவர்ன்மெண்டார் வாங்கும் கடன்களுக்கு வட்டி வீதம் 3% அல்லது 4%-க்கு மேலிருப்பதில்லை.

விவசாயிகள் பயிர் செய் முதலை கிராம சராப்புகளிடமிருந்து கடன் வாங்குகின்றனர். வாங்கும் கடனுக்கு 50% அல்லது 60% வட்டி கொடுக்கின்றனர். விளைச்சலில் ஒரு பாகத்தைக் கடனுக்காக கொடுக்கின்றனர். கல்யாணத்திற்கும், வியாச்சியத்திற்கும்,

இதர செலவுகளுக்கும் விவசாயிகள் அதிக வட்டிக்குக் கடன் வாங்குவது சகஜமாயிருக்கிறது.

விவசாயிகளின் கடன்பட்ட நிலைமையை நீக்குவதற்கு அநேக உபாயங்கள் செய்யப்பட்டுவருகின்றன. கவர்ன்மெண்டார் சில சட்டங்களை நிரூபித்திருக்கின்றனர். பஞ்சாபில் நிலம் பராதீனமடையாமலிருப்பதற்குச் சட்டநிரூபணம் செய்திருக்கின்றனர். கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி அவைமூலமாய் சொற்ப வட்டிக்குக் கடன் கொடுப்பதால் விவசாயிகள் அவை மூலமாய் முன்னேற்றமடையலாம். தவிரவும் கடும்வட்டி வாங்காமலிருப்பதற்குக் கடும்வட்டிச் சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 1918-ம் வருஷம் கடும்வட்டிச் சட்டம் (Usurious Loans Acts) நிரூபணம் செய்யப்பட்டது. சமீபகாலத்தில் மதருஸ் கவர்ன்மெண்டார் விவசாயக் கடனுக்கு வட்டி வீதத்தைச் சட்டமூலமாய் விதித்திருக்கின்றனர்.

இலாபம் (Profits).

கீழ்க்குறிப்பிட்ட ஒரு வியாபாரியின் வரவு செலவு கணக்கைக் கவனிப்போம்.

வரவு செலவு கணக்கு

	ரூ. அ. பை.		ரூ. அ. பை.
மாதத்தில் வாங்கிய சரக்குகள்	3000—0—0	மாதத்தில் விற்றது	2500—0—0.
மொத்த இலாபம்	1000—0—0	மாதக்கடைசியில் கையிருப்புச் சரக்கின் மதிப்பு	1500-0-0
	4000—0—0		4000—0—0

மாதக்கடைசியில் சரக்குகளின் அடக்கவிலைக்கும் (Cost Price) விற்கும் விலைக்கும் உள்ள வித்தியாசம் ரூ. 1,000. இத்தொகை வியாபாரியின் மொத்த இலாபமாகக் (Gross Profit) கருதப்படுகிறது. மொத்த விற்பனையில் மொத்த இலாபத்தின்

நூற்றுவீதம் எவ்வளவென்று கவனிப்போம். இதைப் பின்வருமாறு விளக்கலாம்.

மொத்த இலாபம் = ரூ. 1000 : மொத்த விற்பனை = ரூ. 2500

ஆகையால் நூற்றுவீதம்

$$= \frac{\text{மொத்த இலாபம்} \times 100}{\text{மொத்த விற்பனை}} = \frac{1000 \times 100}{2500} = 40$$

அடக்கவிலையில் மொத்த இலாபத்தின் நூற்றுவீதம்—அதாவது வாங்கின சரக்குகளின் விலையிலிருந்து கையிலிருக்கும் சரக்கின் விலையைக் கழித்தபிறகு உள்ள வீதம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

அடக்கவிலையில் மொத்த இலாபத்தின் நூற்றுவீதம்

$$= \frac{\text{மொத்த இலாபம்} \times 100}{\text{அடக்கவிலை}} = \frac{1000 \times 100}{1500} = 66\tfrac{2}{3}$$

செலவுகளும் நிகர இலாபமும் (Expenses and Net Profit):- மேற்குறிப்பிட்ட 40% மொத்த இலாபம் வியாபாரியின் இலாபமாகக் கணக்கிடக்கூடாது. வியாபார விஷயமாய் ஏற்படுகிற செலவுகளை (கட்டிடம் வாடகை, விளக்குச் செலவு, வேலையாட்கள் கூலி முதலியன) கழித்த பிறகு மீதியுள்ள தொகையே தேறின அல்லது நிகர இலாபமாகக் கருதப்படுகிறது. வியாபார சம்பந்தமான செலவுகளை ரூ. 150 என்றும், வேலையாட்கள் சம்பளம் ரூ. 100 என்றும் வைத்துக்கொள்வோம். பிறகு நிகர இலாபத்தை பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

இலாப நஷ்ட கணக்கு
(Profit And Loss Account)

	ரூ. அ. பை.		ரூ. அ. பை.
கூலி	100—0—0	மொத்த இலாபம்	1000—0—0
வியாபாரச் செலவு	150—0—0		
நிகர இலாபம்	750—0—0		
	1000—0—0		1000—0—0

நிகர இலாபம் ரூ. 750 ஆக கணக்கிடப்பட்டிருக்கிறது. மொத்த விற்பனையில் (turnover) நிகர இலாபத்தின் நூற்று வீதத்தை பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

$$\frac{\text{நிகர இலாபம்} \times 100}{\text{மொத்த விற்பனை}} = \frac{750 \times 100}{2500} = 30$$

அடக்க விலையில் நிகர இலாபத்தின் நூற்றுவீதம் பின்வருமாறு விளக்கலாம்.

$$\frac{\text{நிகர இலாபம்} \times 100}{\text{அடக்கவிலை}} = \frac{750 \times 100}{1500} = 50$$

மொத்த விற்பனையில் வியாபாரச் செலவின் நூற்று வீதம் (Percentage of Expenses on turnover) | பின்வருமாறு விளக்கலாம்.

$$\frac{\text{வியாபாரச் செலவுகள்} \times 100}{\text{மொத்த விற்பனை}} = \frac{250 \times 100}{2500} = 10$$

இலாபப் பிரிவினை (Division of Profits) மேற்கூறிய ஒரு வியாபாரத்தின் கணக்குப்படி மொத்த இலாபம் ரூ. 1,000. இந்த மொத்த இலாபத்திலிருந்து தொழில் சம்பந்தமான செலவுகளைக் கழிக்கவேண்டும். வாடகைக்கு ரூ. 10-ம், வேலையாட்களுக்கு ரூ. 100-ம், முதலின் வட்டிக்கு ரூ. 5-ம் கழிக்கும்படி வைத்துக் கொள்வோம். இவைகளெல்லாம் கழித்த பிறகு ரூ. 750 மீத மிருக்கிறது. இத்தொகையே நிகர லாபமாகச் சொல்லவேண்டும். மேற்கூறிய வியாபாரம் ஒருவர் மூலதனத்தினுல் நடைபெற்ருல் இந்த இலாபம் முழுவதும் அவரைச் சேருகிறது. மேற்கூறிய வியாபாரம் கூட்டுப்பங்குக் கழகமாக நடைபெற்ருல் இலாபமானது கழகத்தில் பங்குள்ளவர்களுக்குப் பிரிவினையாகிறது. ஒரு தொழிலின் மூலதனம் ரூ. 3,000 என்று வைத்துக்கொள்வோம். இம் முதலின் பேரிலுள்ள நிகர இலாபத்தின் நூற்றுவீதம் பின்வருமாறு கணக்கிடலாம்.

$$\frac{\text{நிகர இலாபம்} \times 100}{\text{முதல்}} = \frac{750 \times 100}{3500} = 25$$

பொதுவாகச் சிப்பந்திச் செலவுகளைக் (overhead charges) குறைத்தும், மொத்த விற்பனையை (turn over) அதிகப்படுத்தியும் வந்தால் நிகர இலாபம் அதிகப்படும்.

வியாபாரத்தில் நேர்மையான முறை என்னவென்றால் அதிக விற்பனையும், குறைந்தஇலாபமும் (small profits and quick returns) எதிர்பார்க்கவேண்டும். இம்முறையை அனுசரித்தால் வியாரம் மேன்மை அடையும். உதாரணமாக ஒரு கம்பெனியின் தொழில்முறையைக் கீழ்க்கண்டபடி விளக்கலாம்.

	ரூ.
மூலதனம் (capital)	4,000
வாங்கிய சரக்குகள் (purchases)	8,000
விற்பனை (sales)	10,000
சிப்பந்திச் செலவு (working expenses)	1,000
மொத்த இலாபம்	2,000
நிகர இலாபம்	1,000

மொத்த விற்பனையில் மொத்த இலாபம் 20% ஆகின்றது. நிகர இலாபம் 25% ஆகின்றது. மேற்குறிப்பிட்ட வியாபாரி மொத்த விற்பனையை 10% அதிகப்படுத்தினால், அதாவது ரூ. 11,000 வர விற்பனை செய்தால், அவனுடைய மொத்த இலாபம் 19% அதிகப்படுகிறது. அதாவது மொத்த இலாபத்தொகை ரூ. 22,00, சிப்பந்திச் செலவும் கொஞ்சம் அதிகப்படும் ; 3% அதிகப்படுவதாக வைத்துக்கொள்வோம் ; அதாவது 1,030 ஆகிவிடும். நிகர இலாபம் 1,000-த்திலிருந்து 1,170-க்கு அதிகரிக்கிறது. தேறின அதிகம் ரூ. 170. முதலின் பேரிலுள்ள நிகர இலாபம் 25%லிருந்து 29·25%-க்கு எற்றமடைகிறது.

மேற்கூறிய உதாரணங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் முக்கியவிஷயம் என்னவென்றால் விலை (price), தேவை (demand), இருப்பு (supply), மொத்த விற்பனை (turnover), மதிப்பு (value), இவைகளெல்லாம் ஒன்றையொன்று பொறுத்திருக்கிறது.

இதுவரை வியாபாரமுறையில் இலாபம் எவ்வாறு கணக்கிடப்படுகிறதென்பதைக் கவனித்தோம். பொருளாதார நூலில்

'தனி இலாபம்' (pure profit) என்று சொல்லப்படுவது என்ன வென்று கவனிப்போம். A, B, C, D என்று நான்கு நபர்கள் தனித்தனியே ஒரு பொருளை விற்பனைக்காக உண்டாக்குவதாக வைத்துக்கொள்வோம். A என்பவர் B-யைவிடக் குறைந்த செலவிலும், B என்பவர் C-யைவிடக் குறைந்த செலவிலும், C என்பவர் D-யைவிடக் குறைந்த செலவிலும் அதே பொருளை உண்டாக்குவதாக வைத்துக்கொள்வோம். A, B, C, ஆகிய மூவரும் D-யைவிடக் குறைந்த விலைக்கு விற்கமுடிந்தபோதிலும், D என்பவர் ஏற்படுத்தும் விலைக்கே தம் பொருளை விற்பார்கள். இதனால் D-யைவிட அதிக இலாபமடைகின்றனர். கிரமமான போட்டியினால் ஒரு பொருளை விற்பதற்கு முடிவாக ஏற்படும் விலையானது இலாபமுள்ள கடைசி நபராகிய D வைக்கும் விலையைப் பொறுத்திருக்கிறது. A B C ஆகிய மூவருக்கும் D-யைவிட அதிகமாகக் கிடைக்கும் இலாபத்தை 'தனி இலாபம்' (pure profit) என்று சொல்லுகின்றனர்.

XXX

பொதுச் செல்வாதாரம்
(PUBLIC FINANCE)

இந்திய கவர்ன்மெண்டாரின் வருமான மூலாதாரங்களைப் பலமுறையாகப் பிரிக்கலாம் :

I (*a*) ராஜாங்க சொத்திலிருந்து கிடைக்கின்ற வருமானம்—உதாரணமாக, காடுகள் முதலியன.

(*b*) ராஜீய தொழில் முயற்சிகள்,—உதாரணமாக, தபால், தந்தி, ரெயில் பாதை முதலியன.

(*c*) அரசியல் இலாகாக்களின் ஆட்சிமுறையில் ஏற்படும் வருமானம் (adminstrative departments)

(*d*) வரிகள் (taxes)

II (*a*) வரி வருமானம் (tax revenue)

(*b*) இதர வருமானம் (non-tax revenue)

வரிவிதிக்கும் முறையில் தற்காலத்தில் வழங்கும் கொள்கைகளை இந்திய கவர்ன்மெண்டார் அதிகமாகக் கைக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. காளிதாஸன் என்னும் கவி வரி எவ்விதமாய் விதித்துப் பரிபாலிக்கவேண்டுமென்பதை விளக்கியிருக்கிறார். எவ்வாறு சூரியன் ஈரப்பதனைப் பூமியிலிருந்து கிரஹித்து மழையாக வருஷிக்கிறதோ அவ்விதமாக அரசன் ஜனங்களிடமிருந்து வசூலிக்கும் வரியை ஜனங்களின் பிரயோஜனத்திற்கே உபயோகப்படுத்தவேண்டும். வரி எம்முறையில் விதிக்கவேண்டும்? இது விஷயமாயுள்ள சில கொள்கைகளைக் கவனிப்போம்.

(1) வரியானது ஜனங்களுக்கு அரசாங்கத்தாரால் செய்யப்படும் ஊழியங்களுக்குத் தக்கபடி விதிக்கப்படவேண்டும். இவ்வித கொள்கைக்குச் சில ஆட்க்ஷேபங்களிருக்கின்றன. அரசாங்கத்தார் செய்யும் ஊழியங்களினால் ஒவ்வொரு வகுப்பினருக்கும் எவ்வளவு

பலன்கள் ஏற்படுகின்றனவென்று வகுத்துக்கூறுவது சிரமமான காரியம்.

(2) அரசாங்கத்தின் ஆட்சியினுல் எல்லா மக்களும் பயனடைவதால் அடையும் பயனுக்குத் தக்கபடி வரி செலுத்தவேண்டும் இக்கொள்கையை ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் சில விபரீதங்கள் ஏற்படுகின்றன. மேனுடுகளில் ஏழை ஜனங்களுக்குக் கவர்ன்மெண்டார் அநேக அனுகூலங்கள் செய்கின்றனர். ஆகையால் ஏழை ஜனங்கள் அதிக வரி கொடுக்கவேணுமென்கிற முடிவு மேற்கொள்கையிலிருந்து ஏற்படுகிறது. ஆனுல் ஏழை ஜனங்கள் வரி செலுத்துதல் அசாத்தியமான காரியமென்று நமக்குத் தெரியும். ஆனுல் சில விஷயங்களில் ஜனங்கள் பலனுக்குத் தகுந்தபடி வரி செலுத்தவேண்டுமென்பது சரியாயிருக்கிறது. உதாரணமாக பத்திரங்கள் பதிவுசெய்யச் செலுத்தும் தொகை, கோர்ட்டு நடைபடிக்கைகளுக்காக ஏற்படும் பத்திரச்செலவுகள், துப்பாக்கி வைத்துக்கொள்ளும் உரிமைக்காக செலுத்தும் அனுமதித்தொகைகள் முதலியன நாம் நேரில் அடையும் பிரயோஜனத்திற்காகவேயாம்.

(3) எல்லா மக்களும் அவரவர் சக்திக்குத்தக்கபடி வரி செலுத்தவேண்டும். இக்கொள்கையானது இக்காலத்தில் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பொதுவாக ஒருவருடைய வரி செலுத்தும் சக்தியைச் செலவிலிருந்தும், சொத்திலிருந்தும், வருமானத்திலிருந்தும் தெரிந்துகொள்ளலாம். வரித்திட்டம் மக்களின் சக்திக்குத்தக்கபடி யிருப்பதற்குத் தகவுப் பொருத்தமுடைய வரி முறையைவிட (proportional taxation) படிப்படியாக ஏறும் வரி முறையே (progressive taxation) சிலாக்கியமாகக் கருதப்படுகிறது.

இந்தியாவின் வரிகளை நேர் வரி, மறை வரி என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். நில வரியும், வருமான வரியும், நேர் வரியாகப் பாவிக்கலாம். துறைமுக வரிகளும் (customs), உள்நாட்டு சரக்கு வரிகளும் (excise) மறை வரிகளாகச் சொல்லலாம். நேர் வரி, மறை வரி என்னும் வித்தியாசத்தைத் தார்க்கீக முறைமையான வித்தியாசமாக நாம் கருதக்கூடாது. நாம் இவ்வித்தியாசத்தை வழக்கமாகக் கைக்கொள்ளுகிறோம்.

சில வரிவிதி முறைகளை நாம் கவனிப்போம் :—

(1) ஒரு தேசத்தின் வரி முறை அத்தேசத்தின் செலவுக்கு வேண்டிய வருமானத்தைக் கொடுக்கக்கூடியதாயிருக்கவேண்டும்.

(2) கூடியவரையில் வரியானது குறைவாயும், ராஜீய பரிபாலனத்திற்கு வேண்டிய மட்டும்தான் விதிக்கவேண்டும்.

(3) வரி வசூலிக்கும் செலவு அதிகமாயிருக்கக்கூடாது.

(4) வரியின் பளுவால் ஜனங்கள் சேமித்துவைக்கும் ஆசையைக் குன்றும்படி செய்யக்கூடாது. தவிரவும் பணவிருத்திக்குத் தடங்கலாயிருக்கக்கூடாது.

(5) குடிகளின் சக்திக்குத் தக்கபடி வரியின் பளுவு பிரிக்கப்படவேண்டும். வரிப்பளுவு பணமுள்ளவர்களுக்குக் குறைவாகவும் ஏழை ஜனங்களுக்கு அதிகமாயுமிருத்தல் கூடாது.

(6) வரி விதிக்கும் முறையும், வரி வசூலிக்கும் காலமும் வரிகொடுப்போருக்குத் தெளிவாகத் தெரியவேண்டும்.

(7) ஜனங்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாததாயுள்ள பொருள்களின்பேரில் வரிவிதித்தல் நலமன்று.

1920-ம் வருஷம் முதல் இந்தியாவின் பொதுச் செல்வாதார முறையில் சில முக்கிய சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. இந்திய கவர்ன்மெண்டாரின் வரவு செலவுத்திட்டம் மாகாண அரசாங்கத்தாரின் வரவு செலவுத் திட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டது, மாகாணங்களுடைய வருமானத்தின் மூலாதாரங்கள் இந்திய கவர்ன்மெண்டாரின் வருமான மூலாதாரங்களிலிருந்து பூரூவும் பிரிக்கப்பட்டன. அதே மாதிரியாகச் செலவுத்திட்டங்களும் பிரிக்கப்பட்டன.

இவ்விதப் பிரிவினை 1935-ம் வருஷத்திய அரசாங்க அமைப்பு முறைச் சீர்திருத்தப்படி பின்வருமாறு பிரிக்கப்பட்டன. இவை துறைமுக வரிகள், உள்நாட்டுச் சரக்குவரியில் சில பகுதிகள், வருமான வரி, பெருகழகங்களின் பேரில் விதிக்கும் வரி (corporatoni tax), உப்பு வரி, ரயில், தபால் வருமானங்கள் முதலியனவாம். மாகாணங்களின் உரிமையில் அடங்கிய வரிகளாவன—நிலவரி, கள்

சாராய வரி, பத்திரங்கள் ரிஜஸ்தர் வரி (stamps) முதலியன. நில வரும்படியின்பேரில் வருமான வரியும், சாவு வரியும், விற்பனை வரியும் விதிக்க மாகாணங்களுக்கு அதிகாரமிருக்கிறது.

நிலவரி: வரிகளில் பழைமையானது நிலவரியென்று சொல்லலாம். விவசாயமே முக்கியத் தொழிலாயுள்ள தேசங்களில் நிலத்தீர்வை மிகவும் முக்கியமானது. இந்தியாவில் அரசாங்கத்தாரின் வருவாயில் நிலத்தீர்வை மிகவும் முக்கியமாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் எல்லா மாகாணங்களிலும் வசூலிக்கப்படும் நிலவரியை 32 கோடி ரூபாய்களாகக் கணக்கிடலாம். வங்காள மாகாணத்தில் 1793-ம் வருஷத்தில் நிலவரி எப்படி ஏற்பட்டதோ அப்படியே இன்னும் இருந்து வருகிறது. அரசாங்கத்தார் அதனை ஜமீன் ராஜ்யமாகச் செய்ததும், அப்பொழுது இருந்த நிலவளத்தையும், வரும்படியையும் மதிப்பிட்டு ஜமீன்தார்கள் கட்டவேண்டிய தீர்வையை (பேரீஜ்) இவ்வளவென்று தீர்மானித்ததல்லாமல் அதை ஒருபோதும் மாற்றக்கூடாதென்று சட்டமும் ஏற்படுத்தியது மேற்கூறிய ஒரே நிலைமைக்குக் காரணமாகின்றன. இதே மாதிரியாக நிலவரியானது சென்னை மாகாணத்திலும் சில ஜமீன் நிலங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. சென்ற நூறு வருஷங்களாக இந்த இடங்களில் நிலங்கள் அதிகமாகப் பயிரிடப்பட்டு வருவதாலும் விளை பொருள்களின் விலை அதிகரித்து வருவதாலும் ஜமீன்தார்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறதேயன்றி, அரசாங்கத்தாரின் வருமானம் பெருகவில்லை.

மற்ற இடங்களில் 10 வருஷங்களுக்குமேல் 30-க்குள்ளாக ஒரு முறை தீர்வையைத் தீர்மானிக்கிறார்கள். கிராமங்களுக்கே சொந்தக்காரர்களாகிய பெருத்த நிலக்காரர்களுடைய விஸ்தாரமான நிலங்களைக் கிராமவாரியாகக் கணக்கெடுத்து அப்பொழுது இருக்கும் பயிர்களின் செழிப்பையும், நிலங்களின் அளவையும் கவனித்து வரிகளை ஏற்படுத்துகிறார்கள். அடுத்த முறை இம்மாதிரியான கணக்கெடுக்கும் வரையில் இத்தீர்வை மாற்றப்படுகிறதில்லை. ஆனால் ஒரு கிராமத்திலுள்ள நிலங்கள் பலருக்குச் சொந்தமாக இருந்தால் 20 அல்லது 30 வருஷங்களுக்கு ஒரு முறை பெயர்வழிக் கணக்கெடுத்து வரியின் திட்

டத்தை ஏற்படுத்தி ஒவ்வொரு நிலக்காரரும் இவ்வளவு, இவ்வளவு தீர்வை செலுத்தவேண்டுமென்று தீர்மானிக்கிறார்கள். எல்லாச் செலவும்போகக் கிடைக்கும் ஆதாயத்தில் ஏறக்குறைய பாதியளவு அரசாங்கத்தாருக்குச் செலுத்தப்படுகின்றது. நீர் வறண்டு விளைவில்லாத காலங்களில் தீர்வையைத் தள்ளிக்கொடுக்கவும், நீர்வளமுள்ள காலத்திற் புதிதாகப் பயிரிடப்படும் நிலங்களைக் கணக்கிட்டு வரிபோடவும் அரசாங்கத்தாருக்கு அதிகாரமிருக்கிறது. ஜில்லா அதிகாரிகள் ஜனங்களைச் சில விடங்களில் அழைத்து அவர்கள் குறைகளைக் கேட்டுக் கணக்கர்களை வைத்துக் கொண்டு நிலவரி விஷயங்களைத் தீர்மானிக்கிறார்கள். இதற்குத் தான் ஜமாபந்தி என்று பெயர்.

1937-ம் வருஷம் (ஏப்ரல்) முதல் மாகாண ஆட்சியாளர் நிலவரி சம்பந்தமாகப் பல சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டுவந்திருக்கின்றனர். இச்சீர்திருத்தங்களின் முக்கிய கொள்கையென்னவென்றால் குடிவாரக்காரருடைய உரிமைகளை ஒழுங்குபடுத்தவும் நிலஸ்வான், ஜமீன்தார்கள் இவர்களுடைய நிலசம்பந்தமான பழக்கவழக்கங்களைக் குறைப்பதற்குமேயாம்.

பயிரிடப்படும் நிலத்தில் ஒரு எக்கருக்கு நிலவரியின் சராசரி வரிப்பளு கீழ்க்கண்டபடி கணக்கிடப்பட்டிருக்கிறது.

மாகாணம்	வரிப்பளு
	ரூ. அ. பை.
வங்காளம்	1—2—0
பீஹார், ஒரிஸ்ஸா	0-10—7
மத்திய மாகாணம்	1—1—0
பஞ்சாப்	1-13—0
பம்பாய்	2—0—0
மதராஸ்	2—5—0
ஐக்கிய மாகாணம்	1-14—0

உள்நாட்டுச் சரக்குவரிகள்
(Excises)

இவ்வரிகள் உள்நாட்டில் உற்பத்திபண்ணி நுகரும் பொருள்களின் பேரில் விதிக்கப்படுகிறது. கவர்ன்மெண்டாரின் வருமானத்தை உத்தேசித்தும், சில சமயங்களில் கெடுதியான பொருள்களை மட்டுக்குமிஞ்சி உண்ணவிடாமற் கட்டுப்படுத்தவும் இவ்வரியை விதிப்பது வழக்கம். உள்நாட்டுச் சரக்குவரி எம்முறையில் விதிக்கப்படவேண்டுமென்பதைப்பற்றி சில தத்துவங்கள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

(1) பொதுவாக உள்நாட்டுச் சரக்குவரி பெரிய பண்டசாலைகள் அல்லது மேற்பார்வைக்குரிய சிறு இடங்கள் இவற்றுள் உற்பத்திசெய்யும் பொருள்களின் பேரில் விதிக்கலாம்.

(2) பெரும்போக நுகர்ச்சிப் பொருள்களின் பேரிலும், கெடுதியான பொருள்களின் பேரிலும் விதிப்பது சரியாகும்.

(3) மற்றப்படி வருமானத்திற்காக விதிப்பதே நலமாகும்.

(4) ஜனங்கள் நுகரும் பொருள்களின்பேரில் விதிக்கப்படும் உள்நாட்டு வரியானது ஏழை ஜனங்களை அதிகமாக பாதிக்காமலிருக்கவேண்டும்.

உள்நாட்டுச் சரக்குவரியானது பொதுவாக உப்பு, சர்க்கரை, கள், புகையிலை, மண்ணெண்ணெ, தேயிலை, நெருப்புக்குச்சிகள் முதலிய பொருள்களின் பேரில் விதிப்பது வழக்கமாயிருக்கிறது.

லாகிரி வஸ்துத் தீர்வை
(Excise on intoxicants)

மயக்கத்தைத் தரக்கூடிய கள், கஞ்சா, அபினி முதலிய பதார்த்தங்கள் வெகுகாலமாக இந்தியாவில் உபயோகப்பட்டு வருகின்றன. இவற்றை யுண்பவர்களுக்கு நாணம் அழியும். அல்லாமலும் தம்முடைய செல்வமெல்லாம் இழந்து வறியவராகிப் பலராலும் பழிக்கப்படுவார்கள். கள்ளுண்ணல் மிகுந்த பாவமென்று எல்லா நீதி நூல்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தக்

கெட்ட வழக்கத்தைக் குறைப்பதற்காகக் கடுமையான தீர்வை யைக் கவர்ன்மெண்டார் விதித்திருக்கின்றனர்.

வெளிநாடுகளிலிருந்து வரும் பானங்களுக்குத் தக்கபடி துறைமுகங்களில் தீர்வை வாங்கப்படுகின்றது.

உள்நாட்டில் உற்பத்திபண்ணும் கள், சாராயம் முதலிய பானங்களின் பேரிலும் வரி விதிக்கின்றனர். கள் வியாபாரிகள் ஒரு வருஷத்திற்கு ஏற்பட்ட வரியை முன்னதாகச் செலுத்தியும் அல்லது தீர்வைகள் ஏலத்தில் விடப்படும்போது அதிகத் தொகையைக் கொடுத்தும் பானங்களை விற்பனைசெய்ய அதிகாரம் பெறுகிறார்கள். வரியைச் செலுத்தாதவர் வியாபாரம் செய்ய முடியாது. இந்தியாவில் சாராயத்தைக் காய்ச்சுவோர்கள் அதன் பலத்திற்கும், அளவுக்கும் தக்கபடி காய்ச்சுமிடத்திலேயே வரி கொடுக்கவேண்டும். கவர்ன்மெண்டாரின் அனுமதிபெற்ற கடைக் காரர்களே கள், சாராயம் விற்கவேண்டுமென்றும், கடைகளைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் சாத்திவிடவேண்டுமென்றும், அனு மதிச் சீட்டுகளை வருஷந்தோறும் புதுப்பித்து வரவேண்டுமென் றும் சட்டமிட்டிருக்கிறார்கள். கஞ்சா, அபினி முதலியவற்றைப் பயிரிடுவோரிடமிருந்து கவர்ன்மெண்டாரே வாங்கி வைத்துக் கொண்டு அதிகத்தொகை கொடுத்து அனுமதி பெற்றுக்கொள் ளும் வியாபாரிகளிடம் அவற்றைக் கொடுத்து ஜனங்களுக்கு விற்கும்படி செய்கிறார்கள். அநேக நிபந்தனைகள் ஏற்பட்டிருந் தும் இப்பொருள்களின் பேரில் சில ஜனங்களுக்கு அதிக விருப்ப மிருப்பதால் அதிக விலையையும்கூடக் கவனியாமல் அவற்றை நுகருகின்றனர். இதனால் கவர்ன்மெண்டாருக்கு ஏராளமான வருமானம் கிடைக்கின்றது. சென்னை மாகாணத்தில் கவர்ன் மெண்டாருக்குக் கிடைக்கும் வரி வருமானத்தில் கள் வரியை நில வரிக்கு அடுத்ததாகச் சொல்லலாம். இம்மாகாணத்தில் சராசரி 4 அல்லது 5 கோடி ரூபாய் கிடைக்கின்றது.

மதுவிலக்கத்தைப்பற்றி இந்தியாவில் ஒரு பெரிய இயக்கம் ஏற்பட்டிருக்கிறது. அநேக மாகாணங்களில் மதுவிலக்குச் சட்டம் ஏற்பட்டிருக்கிறது. மதுவிலக்கிற்குப் பொதுவான ஆட்சேபனை என்னவென்றால் அரசாங்கத்தின் வருமானம் குறைவதால் புதிய

வரி விதிக்கும்படி ஏற்படுகிறது. ஆனால் நமது தேசத்தில் வறுமையின் கொடுமையாலும், பஞ்சத்தினாலும் பீடிக்கப்பட்டிருக்கும் ஜனங்களில் அநேகர் மதுபானத்தால் தம் கஷ்டத்தை அதிகப்படுத்துகின்றனர். மதுவிலக்கின் பயனை ஜனங்கள் நன்குணரும்படி செய்வது அரசாங்கத்தாரின் கடமையாகும். மதுவிலக்குத் திட்டம் பூரணபலன் தரவேண்டுமானால், மதுவிலக்கினால் ஏற்படும் வருமானக் குறைவை ஈடுசெய்யப் புதிய வரி விதிக்கப்படவேண்டும்.

புகையிலை வரியானது அநேக தேசங்களில் விதிக்கப்பட்டு வருகின்றது. புகையிலை வரியைப் பலவிதமாக விதிக்கலாம். அரசாங்கத்தாரின் தனி உரிமையாக இருக்கலாம். இல்லாவிடில் ஜனங்கள் உற்பத்திசெய்யும் புகையிலைக்கு ஒரு ஏக்கருக்கு இவ்வளவென்று விதிக்கலாம். அல்லது உள்நாட்டுச் சரக்குவரியாகவும் விதிக்கலாம். மேலும், புகையிலை விற்பதற்குச் சர்க்காரிடம் அனுமதிபெறவேண்டுமென்றும் ஏற்படுத்தலாம்.

துறைமுக வரியானது இந்திய கவர்ன்மெண்டாரின் வருமானத்தில் முதன்மை இடம் பெற்றிருக்கிறது. இதை இறக்குமதி வரி, ஏற்றுமதிவரி என இரண்டு பிரிவாகக் கூறலாம். 1909-10—1913—14-ம் வருஷங்களின் சராசரிக் கணக்குப்படி இவ்வரிகள் இந்திய கவர்ன்மெண்டாரின் மொத்த வரியில் 14% ஆக கணக்கிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது 30% ஆக கணக்கிடலாம். 1923-ம் வருஷம் முதல் இந்திய கவர்ன்மெண்டார் இந்திய கைத்தொழில்களுக்குக் காப்பு நோக்க முறையைக் கைக்கொண்டனர். ஆகையால் சில கைத்தொழில்கள் சம்பந்தமாகக் காப்பு வரிகள் விதிக்கப்பட்டு வருகின்றன. இவ்வித காப்பு வரி முதலாவது இரும்புத் தொழிலின் முன்னேற்றத்திற்காக விதிக்கப்பட்டது.

இந்தியாவின் துறைமுக வரியானது அநேக பொருள்களின் பேரில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்வரிகள் அநேகமாக வருமானத்திற்கேயாம். இறக்குமதி வரியால் கிடைக்கும் வருமானத்தைக் கவனித்தால் இறக்குமதி வரி அதிகரித்திருப்பது நன்கு விளங்கும்.

ஏற்றுமதி வரியானது இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் சில பொருள்களின்பேரில் விதிக்கப்படுகிறது. அவற்றுள் முக்கியமானது சணல். சணலானது இந்தியாவின் தனியுரிமைப் பொருளாயிருப்பதாலும், சணலுக்கு வெளி நாடுகளில் அதிக தேவையிருப்பதாலும் ஏற்றுமதி வரி விதிப்பதற்குத் தகுந்ததாயிருக்கிறது. எண்ணெய் விதைகள், அதளும் தோலும், பருத்தி, அறக்கு, அரிசி இவைகளெல்லாம் ஏற்றுமதி வரி விதிக்கத் தகுந்த பொருள்களாக கருதப்படுகின்றன. துறைமுக வரியானது வியாபாரமும், கைத்தொழிலும் விரிவடையும் காலத்தில் அதிகரிக்கின்றது. உப்பு, நெருப்புக்குச்சி, மண்ணெண்ணெய் முதலிய பொருள்களின்பேரில் விதிக்கும் வரியின் பளுவானது எல்லா ஜனங்களேயும் தாக்குகிறது. நூல் துணிகளின்பேரில் விதிக்கும் வரி அநேகமாக எல்லா ஜனங்களேயும் தாக்குகின்றது: ஆனல் முக்கியமாக நடு நிலைமையுள்ளவர்களேயும், செழிப்புள்ளவர்களேயும் தாக்குகிறது. மோட்டார் வண்டிகள், பட்டு ஆடைகள், சுருட்டு, ஆபரணங்கள் முதலியவற்றின்பேரில் விதிக்கும் வரி செல்வமுள்ளவர்களால் கொடுக்கப்படுகிறது.

துறைமுக வரி எவ்வாறு முக்கிய வரியென்பதைப் பின்வரும் புள்ளி விவரங்களால் விளக்கலாம்.

வருஷம்	கோடி ரூபாய்கள்	வருஷம்	கோடி ரூபாய்கள்
1933-34	45·72	1923-24	39·70
1934-35	46·78	1924-25	44·76
1935-36	46·73	1925-26	47·75
1936-37	44·76	1926-27	47·38
1937-38	42·60	1927-28	48·21
		1928-29	49·28
		1929-30	51·28
		1930-31	46 81
		1931-32	46·44
		1932-33	51·96

இந்திய கவர்ன்மெண்டாரின் வரி வருமானத்தில் துறைமுக வரியானது 100-க்கு 30 ஆகச் சொல்லலாம்.

வருமானவரி (Incometax):—

சிப்பாய் கலகத்தினால் ஏற்பட்ட நெருக்கடியை நீக்குவதற்கு வருமானவரி முதலாக விதிக்கப்பட்டது. ரூ. 200-க்கு மேல், ரூ. 500 வரையுள்ள வருஷ வருமானத்தின்பேரில் 100-க்கு ரூ. 2 வீதமும், ரூ. 500-க்கு மேற்பட்ட வருமானத்திற்கு 100-க்கு ரூ. 4 வீதமும் விதித்தனர். இவ்வருமானவரி 1865-ம் வருஷம் நீக்கப்பட்டது. 1869-ம் வருஷம் வருமானவரி மறுபடியும் விதிக்கப்பட்டது. 1886-ம் வருஷம் முதல் வருமானவரி சாஸ்வதமாக விதிக்கப்பட்டது. வரிவீதமானது ரூ. 500-க்கு மேல் ரூ. 2,000 வரையுள்ள வருமானத்திற்கு 100-க்கு 4 பைசாவீதமும், ரூ. 2,000-க்கு மேற்பட்ட வருமானத்தின் பேரில் 100-க்கு 5 பைசா வீதமும் வசூலிக்கப்பட்டது. 1903-ம் வருஷம் முதல் ரூ. 1,000-க்கு மேல்பட்ட வருஷ வருமானத்தின் பேரில் வருமானவரி விதித்தனர். 1916-17-ம் வருஷம் முதல் வருமானவரி வீதம் உயர்த்தப்பட்டது. 1917-ம் வருஷம் முதல் மிகுவரி (Super tax) ஏற்படுத்தினர். இந்த வரியானது ரூபாய் 50,000-க்கு மேற்பட்ட வருஷ வருமானத்தின் பேரில் விதிக்கப்பட்டு வருமான வரியுடன் வசூலிக்கப்பட்டது. 1922-ம் வருஷம் வருமான வரி சம்பந்தமாகச் சில சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. 1939-ம் வருஷத்திய வருமானவரி சட்டத்திருத்தப்படி வரியை சரியானபடி தண்டலிக்கும் பொருட்டு அநேக சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றுள் முக்கியமானது புதிய வரிவிகிதமேயாம்.

(a) தனி ஆள்களுக்கும், ரிஜிஸ்தர் செய்யாத கூட்டுக்கடைகளுக்கும், பிரிவினையாகாத இந்து குடும்பங்களுக்கும் பின் வருமாறு வரிவிதிக்கப்படுகின்றது.

				விகிதம்
முதல்	ரூ.	1,500	வருமானம்	ஒன்றுமில்லை
அடுத்த	,,	3,500	,,	ரூபாய்க்கு 0—0—9
,,	,,	5,000	,,	,, 0—1—3

அடுத்த ரூ. 5,000 வருமானம் ரூபாய்க்கு	0—2—0
பாக்கி வருமானம்	0—2—6
(b) கம்பெனிகளுக்கு.........	0—2—6

மிகுவரி

(a) கம்பெனி தவிர தீர்வை செலுத்துவோர்

			விகிதம்
முதல்	ரூ. 25,000		ஒன்றுமில்லை
அடுத்த	,, 10,000	ரூபாய்க்கு	0—1—0
,,	,, 20,000	,,	0—2—0
,,	,, 70,000	,,	0—3—0
,,	,, 75,000	,,	0—4—0
,,	,, 1,50,000	,,	0—5—0
அடுத்த	ரூ. 1,50,000	ரூபாய்க்கு	0—6—0
பாக்கி வருமானம்		,,	0—7—0

(b) கம்பெனிகள் : கம்பெனிகளின் மிகுவரி முழுவருமானத்தின் பேரிலும் ரூபாய்க்கு ஒரு அணுவாக வசூலிக்கப்படுகிறது.

மேற்கூறிய சீர்திருத்தங்களின் முக்கிய கொள்கையென்னவென்றால் குறைவான வருமானமுள்ளவர்களுக்கு வருமான வரிப்பளுவுக் குறைத்து அதிக வருமானமுள்ளவர்களுக்கு வரிப்பளுவை அதிகப்படுத்துவதேயாம்.

உப்புவரி: உப்பு எல்லாராலும் உபயோகிக்கப்பட்டுவருகிறது. ஆகையால் இந்தியாவில் யாவரும் கொடுக்கின்ற வரி உப்புவரியென்றே சொல்லலாம். இந்த வரியை ஏழைகளும் கொடுக்கிறார்கள். ஆனால் இவ்வரி வரவரக் குறைக்கப்பட்டு வருகின்றது. 1888—1903-ம் வருஷம் வரை உப்புவரி ஒரு மணங்கு ரூ. 2—8—0 விகிதம் வசூலிக்கப்பட்டது. 1908—1916-ம் வருஷம் வரை 1 மணங்குக்கு ரூ. 1 ஆக வசூலிக்கப்பட்டது. 1916-ம் வருஷம் முதல் மணங்கு ரூ. 1—4—0 ஆகவும், 1923—24-ம்

வருஷத்தில் மணங்குக்கு ரூ. 2—8—0 ஆகவும் விதிக்கப்பட்டிருந்தது. 1924—25-ம் வருஷத்தில் மணங்குக்கு ரூ. 1—4—0 ஆக குறைக்கப்பட்டது. 1931 (செப்டம்பர்) முதல் மணங்குக்கு ரூ. 1—9—0 விகிதம் விதிக்கப்பட்டது. உப்புவரியால் சர்க்காருக்கு வருமானம் சராசரி 6 கோடி ரூபாய்களாக மதிக்கலாம்.

இந்தியாவிலுள்ளவர்களுக்கு உப்பு பலவிதமாக கிடைக்கின்றது. சென்னையின் அருகே கடலோரமாகப் பாத்திகள் கட்டி உப்பு ஜலத்தைத் தேக்கிச் சூரிய வெப்பத்தினுல் நீர் சுண்டியவுடன் உப்பை வாரி முட்டிட்டுச் சிலகாலம் வைத்துப் பிறகு உபயோகத்துக்கு வெளியிடுகிறுர்கள். ராஜபுதனத்திலுள்ள ஸாம்பர் முதலான உப்பேரிகளினின்றும் உப்பு எடுக்கப்படுகின்றது. பஞ்சாப் மாகாணத்திலுள்ள சில குன்றுகளிலும் உப்பு அகப்படுகின்றது. வெளிநாடுகளிலிருந்தும் உப்பு இறக்குமதியாகின்றது. சிலவிடங்களில் கவர்ன்மெண்டாராலும், வேறு சிலவிடங்களில் அவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்ட ஜனங்களாலும் உப்பு செய்யப்படுகின்றது. திருட்டுத்தனமாக உப்பு எடுப்பதைத் தடுக்கும்பொருட்டுத் தகுந்த அதிகாரிகள், காவலாட்கள் முதலியவர்களை நியமித்திருப்பதன்றி, அன்னிய துரைத்தனத்தைச் சேர்ந்த மாகாணங்களிலிருந்து திருட்டுத்தனமாக உப்பு இவ்விடம் வராமல் இருப்பதற்குத் தகுந்த ஏற்பாடுகளையும் செய்திருக்கிறுர்கள்.

தபால், தந்தி, இருப்புப்பாதை, நாணயச்சாலை இவற்றின் வரும்படி:—இவைகளெல்லாம் அரசாங்கத்தார் குடிகளுக்கு மிகவும் நயமாகச் செய்திருந்தபோதிலும் ஜனங்கள் இச்சாதனங்களை உபயோகிக்கின்றமையால், அரசாங்கத்தாரின் வரும்படி பெருகிக்கொண்டே வருகின்றது. மேற்கூறிய இலாகாக்களையெல்லாம் ஒரே இலாகாவாகச் செய்து (Department of Commerce and Industry) இந்திய கவர்ன்மெண்டாரே கவனித்துவருகிறுர்கள். இப்பொழுது சில இருப்புப்பாதைகள் கவர்ன்மெண்டாருக்கே சொந்தமாகிவிட்டன. நாளடைவில் மற்ற இருப்புப் பாதைகளும் உடன்படிக்கையின்படி அவர்களுடைய ஸ்வாதீனத்துக்கு வந்துவிடும். தபால், தந்தி, நாணயம் முதலியவற்றுல் அரசாங்கத்தாருக்கு வருமானம் கிடைக்கின்றது.

செலவு (Expenditure)

இந்திய கவர்ன்மெண்டாரின் மொத்தச் செலவு சுமார் 132 கோடி ரூபாய்களாகக் கணக்கிடலாம். இவற்றுள் தேறின செலவு சுமார் 86 கோடி ரூபாய்கள்.

இந்திய கவர்ன்மெண்டாரின் செலவைப் பின்வருமாறு தரம் வகுத்துக் காட்டலாம். (1) கடன் செலவு (2) ராணுவச் செலவு (3) வருமானத்தைப் பொறுத்திருக்கும் செலவு (Direct demands on the revenues) (4) ராஜிய முறைச் செலவு (Civil administration) (5) ரெயில் செலவு (6) பொது கட்டுமானங்கள் (Civil works (7) இதரச் செலவுகள்.

கடன் செலவுகளைப் பின்வருமாறு பிரிக்கலாம்—(a) சாதாரணக் கடன்பேரிலுள்ள வட்டி (b) ரெயில் சம்பந்தமான கடன் (c) நீர்ப்பாசனக் கடன் (d) இதரக்கடன்கள். இந்திய கவர்ன்மெண்டாரின் கடன் சம்பந்தமாயுள்ள செலவு சுமார் 18⅓ கோடி ரூபாய்களாகக் கணக்கிடலாம்.

இந்திய கவர்ன்மெண்டாரின் கடன் தொகை மொத்தத்தில் அதிகமாகத் தோன்றினாலும், பெரும்பாலும் பயனுள்ள காரியங்களுக்கே கடன் ஏற்பட்டிருக்கிறது. கிழக்கு இந்திய கம்பெனியாரிடமிருந்து ராஜ்ய பரிபாலனம் இந்திய கவர்ன்மெண்டாருக்கு வருங்காலத்தில் இந்திய நாட்டுக் கடன் 107 கோடி ரூபாய்களாகக் கணக்கிடப்பட்டது. 1914—1925-ம் வருஷங்களில் இந்திய நாட்டுக் கடனில் 462 கோடி ரூபாய்கள் அதிகமாயின. 1914—18-ம் வருஷத்திய யுத்தத்தில் 150 கோடி ரூபாய்கள் யுத்தச் செலவுக்காக இந்தியாவிலிருந்து கொடுக்கப்பட்டது. வரவு செலவுத்திட்டம் யுத்தத்திற்குப் பிறகு சரிக்கட்ட முடியாததால் 100 கோடி ரூபாய்கள் வரை கடன் அதிகமாயிற்று.

இந்தியாவின் வருஷ ராணுவச் செலவு சுமார் 56 கோடியாக மதிக்கப்பட்டிருக்கிறது. இது இந்தியாவின் மொத்த வருமானத்தில் 60% ஆகின்றது. 1913—14 முதல் 1924—25-ம் வரை தேறின ராணுவச் செலவு இரண்டு மடங்காயிற்று. இந்தியாவின் ராணுவச் செலவு ஜனங்களின் சக்திக்கு மேலிருப்பதாகச்

சொல்லவேண்டும். ஜனங்களுக்கு ராணுவச் செலவு ஒரு பெரிய பளுவென்பதற்குச் சந்தேகமில்லை. இச்செலவைக் குறைக்க வேண்டுமென்று பல தடவை இந்தியர்கள் சட்டசபையில் முறையிடுகின்றனர். ஆனால் இந்திய கவர்ன்மெண்டார் இதன் விஷயமாக விசேஷ பிரயத்தனம்பண்ணவில்லை. ராணுவத்தில் ஆங்கிலேயர் அதிகமாயிருப்பதால் செலவும் அதிகமாயிருக்கிறது. இந்தியர்களை அதிகமாக நியமித்தால் செலவு குறையுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஒரு ஆங்கிலேய ராணுவ அதிகாரி விஷயமாக வருஷத்திற்கு ரூ. 10,000 முதல் ரூ. 14,000 வரை செலவழிகிறது. ஆனால் இந்திய ராணுவ அதிகாரிக்கு ரூ. 2,000 முதல் 2,500 வரை செலவழித்தால் போதும். ஆகையால் ஒரு ஆங்கிலேய ராணுவ அதிகாரி சம்பந்தமாக ஒரு இந்திய ராணுவ அதிகாரியைவிட 5 அல்லது 6 மடங்கு அதிகச் செலவு ஏற்படுகிறது. ஒரு ஆங்கிலேய ராணுவ வீரர் சம்பந்தமாகவுள்ள வருஷச் செலவு ரூ. 2,500; ஆனால் இந்திய சிப்பாய்க்கு ரூ. 670-க்கு மேல் செலவில்லை. 1922—23-ம் வருஷத்தில் நியமிக்கப்பட்ட செலவு குறைக்கும் சபையார் ராணுவச் செலவை ரூ. 50 கோடிக்கு மேலிருக்கக்கூடாதென்று கூறினர். சர்வதேச சங்கத்தின் அறிக்கைப்படி ஒவ்வொரு தேசத்திலும் ராணுவச் செலவு தேசத்தின் வருமானத்தில் 20% அடங்கியிருக்க வேண்டும். அப்படியானால் நம் தேசத்து ராணுவச் செலவு 20 கோடி ரூபாய்களுக்கு மேலிருக்கக்கூடாது.

தேச பரிபாலனச் செலவுகள் (Civil administration)

கீழ்க்கண்ட விபரங்கள் கவனிக்கத்தக்கவை.

பொதுப் பரிபாலனம் (General administration)

நீதிமன்றங்கள் (Justice)

போலீஸ் (Police)

ஜெயில்கள் வகையரா (Jails, etc.)

கல்வி (Education)

இராஜிய சம்பந்தமாக (Political)

இந்திய ஸ்டோர் அல்லது சாமான்கள் வாங்கும் இலாகா } (Indian stores department)

வரி வசூல் செலவுகள் (Cost of collectionoftaxes)
கணக்குப் பரிசீலனை (Audit)

1901—1906-ம் வருஷம் வரை இந்திய கவர்ன்மெண்டாரின் வரவைவிடச் செலவு குறைவாயிருந்தால் வருஷாவருஷம் அதிக மீதமிருந்தது. ஆகையால் செலவை அதிகப்படுத்திக் கொண்டுவந்தனர். இதனால் கொஞ்ச காலத்தில் செலவு வரவைவிட அதிகப்பட்டதால் வரவு செலவுத்திட்டத்தைச் சம நிலையில் வைப்பது சிரமமான காரியமாயிற்று. 1920-ம் வருஷம் முதல் ராஜிய முறையில் சில சீர்திருத்தங்கள் ஏற்பட்டதால் இவை அதிக செலவுக்கு இன்னொரு காரணமாயின. 1914—15 முதல் 1920—21 வரை இந்திய கவர்ன்மெண்டாரின் செலவு 100% அதிகரித்தது—அதாவது 78·83 கோடி ரூபாய்களிலிருந்து 161·64 கோடி ரூபாய்கள் வரை ஏற்றமடைந்தது. இவ்வித அதிகச் செலவானது அதிக வரியினாலும், செலவு அதிகமாயுள்ள வரவு செலவுத் திட்டத்தினாலும் நடை பெற்றுவந்தது. 1918—19 முதல் 1922-23 வரை வருஷத்திற்குச் சராசரி 20 கோடி ரூபாய்கள் வீதம் 100 கோடி ரூபாய்கள் குறைவு ஏற்பட்டன.

இந்திய சட்டசபையின் வேண்டுகோளின்பேரில் ஒரு செலவு குறைக்கும் சபை நியமிக்கப்பட்டது. இச்சபையார் $19\frac{1}{4}$ கோடி ரூபாய் வரை இந்திய கவர்ன்மெண்டாரின் செலவைக் குறைக்க வேண்டுமென்று தெரிவித்தனர்.

இந்தியாவின் செலவு விஷயமாக வெல்பி (Welby) சபையாரின் ஒரு பகுதியார் தெரிவித்த அபிப்பிராயம் கவனிக்கத்தக்கது

(1) இந்தியாவின் செலவு முழுவதும் இந்தியாவின் நன்மைக்காகவே செலவழிக்கப்படுகிறதென்று சொல்லமுடியாது.

(a) இந்தியாவின் தற்காப்பு :—இந்தியாவின் எல்லைப்புற நோக்க முறை தேசத்தின் பணப்பொறுப்பை அதிகப்படுத்துவதே யொழிய இந்தியாவின் முக்கிய தற்காப்புக்கு வேண்டியதில்லை.

(b) தேசத்தின் தேவைக்குத் தகுந்தபடியில்லாமல் ரெயில் பாதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(c) சம்பளம், பென்ஷின் (Pension) முதலியவற்றில் ஐரோப்பியருக்குத் தேசத்தின் தகுதிக்குமேல் கொடுக்கப்படுவதால், இவ்வித காரியங்கள் இந்தியா தேசம் ஆட்சிபுரிவோர் நன்மைக்காகவென்றும், இந்தியரின் நன்மைக்கில்லையென்றும் ஒரு அபிப்பிராயம் ஏற்பட்டுவிட்டது. இந்தியாவின் செலவானது பேரரசு நலனுக்காகவும் (Imperial interests) ஆங்கிலேய வாணிபத்திற்காகவும், ஐரோப்பியரின் உத்தியோகத்திற்காகவும் ஏற்பட்டிருப்பதாக அநேகர் கூறும்படியிருக்கிறது.

இந்தியாவின் வருமானத்தைச் செலவிடுவதில் சரியான சிக்கன முறை அனுசரிக்கப்படவில்லையென்று கூறப்படுகிறது.

(a) பொது ராஜிய பரிபாலனத்தில் தகுதியுள்ள இந்தியர்களை ஆங்கிலேயருக்குப் பதிலாக நியமிப்பதில் கவர்ன்மெண்டார் அதிக முயற்சி எடுக்கவில்லை.

(b) மேல்ப்பார்வை இலாகாக்கள் அதிகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

(c) இந்தியாவின் ராணுவம் யுத்தகாலத்திற்குள்ள தன்மையில் வைக்கப்பட்டிருக்கிறது.

(d) இந்தியர்களைவிட ஆங்கிலேயர் பட்டாளத்தில் அதிகமாயிருக்கிறார்கள்.

(e) இருப்புப்பாதை சாமான்கள் செய்வதற்கு ஒப்பந்தம் ஆங்கிலேய கம்பெனிகளுடன் செய்யப்படுகிறது.

(3) செலவு சரியானபடி பிரிவினையாகவில்லை.

(a) இந்தியா கவர்ன்மெண்டாரின் பணம் ராணுவத்திற்கு அதிகமாயும், தேசத்தின் பொருட்செழிப்பு, ஒழுக்கமுன்னேற்றம் முதலியவற்றிற்குக் குறைவாகவும் செலவழிக்கப்படுகிறது.

(b) போக்கு வரவு வழிகளின் செலவு அதிகமாயும், ஜனங்களின் வாழ்க்கைத் திட்டத்தை அதிகரிக்கும் செலவு குறைவாயுமிருக்கிறது.

(c) பொதுவாக இந்திய கவர்ன்மெண்டாரின் செலவானது ஜனங்களின் சக்திக்கு மேலிருக்கிறது. மேற்கூறிய குறைவு

கள் 30 வருஷங்களுக்கு முன்னமே வெல்பி சபையாரால் வெளியிடப்பட்டும் இக்காலத்திலும் அக்குறைகள் முழுவதும் நீங்கவில்லை.

இந்தியா மந்திரியின் செலவுகள் (Home charges) :—இங்கிலாந்தில் இந்தியா சம்பந்தமாக ஏற்படும் செலவுகளின் விவரங்கள் கீழ்க்கண்டபடி குறிப்பிடலாம்.

(1) ரெயில் சம்பந்தமாயுள்ள கடன்

(2) சாதாரணக் கடனின் வட்டி

(3) கடன் மேற்பார்வைச் செலவு

(4) இந்தியாவுக்கு வாங்கப்படும் சாமான்கள்

(5) இந்தியா மந்திரியின் ஆபீஸ் செலவு

(6) பென்ஷின் முதலியன

(7) இதரச் செலவுகள்

இச்செலவுகள் பெரும்பாலும் இந்தியா மந்திரி மூலமாய்ச் செலவிடப்படுகின்றன. இங்கிலாந்தில் வருஷா வருஷம் ஏற்படும் செலவு £ 30 மிலியன். இச்செலவுகளைப்பற்றி வெகுகாலமாகக் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டிருக்கின்றது. இந்தியாவின் எளிமைக்கு இது ஒரு காரணமென்று சில இந்தியர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். மேலும் இங்கிலாந்துக்கு இது இந்தியாவின் ஒரு கப்பமென்றும் சிலர் அபிப்பிராயம். இங்கிலாந்துக்கும், இந்தியாவுக்குமுள்ள அரசியல் சம்பந்தத்தால் மேற்கண்ட செலவில் மூன்றில் ஒரு பங்கு இங்கிலாந்தில் செலவழிகிறது. பாக்கிச் செலவு பொருளாக்க நடைபடிக்கைகள் விஷயமாக இந்தியா கவர்ன்மெண்டார் செலுத்தவேண்டிய தொகையேயாம். ஆகையால் முழுச் செலவையும் இந்தியாவிலிருந்து பயனில்லாமல் வெளியேறும் பணமென்று கருதக்கூடாது. ஆனால் இச்செலவை பலவிதமாகக் குறைக்கவேண்டியது அவசியம்.

மாகாணச் செல்வாதாரம் (Provincial finance) :—ஆரம்பத்தில் இந்தியாவின் வருமானம் முழுவதும் இந்திய கவர்ன்மெண்

டாரின் வருமானமாகப் பாவிக்கப்பட்டு, அப்பணத்திலிருந்து மாகாணங்களுக்குத் தேவைக்குத் தக்கபடி பிரிவினை செய்யப்பட்டது. மாகாணங்கள் வருமானத்தை வசூலிக்கும் உரிமையைமட்டும் உடைத்தாயிருந்தன. மாகாணங்கள் தாம் வசூலிக்கும் வரியில் எவ்வளவு திறமையுள்ளனவாயிருந்தாலும், அந்த வரியின் முழுப் பலனைத் தாம் அடையமுடியாததாயிருந்தால், இவ்வித செல்வாதார முறை அதிக வீண் செலவுக்குக் காரணமாயிருந்தது. தவிரவும் இந்திய கவர்ன்மெண்டாருக்கும் மாகாண கவர்ன்மெண்டாருக்கும் அடிக்கடி விவகாரங்கள் ஏற்பட்டன. நுட்பச் செலவுகளுக்குக் கூட இந்திய கவர்ன்மெண்டாரின் உத்தரவு வேண்டியிருந்தது. 1871-ம் வருஷம் சில ஆட்சி இலாகாக்களிலுள்ள வருமானம் மாகாணங்களுக்குக் கொடுக்கப்பட்டன. 1877—1907-ம் வருஷம் வரை மாகாணங்களுக்கும் இந்திய கவர்ன்மெண்டாருக்கும் சில செல்வாதாரத் திட்டங்கள் ஏற்பட்டிருந்தன. அவ்வுடன்படிக்கைகள் ஐந்து வருஷத்திற்கு ஒருதடவை சோதிக்கப்பட்டன. இவ்வித பரிசோதனைகள் வரவு செலவுகளைச் சிக்கன முறையில் நடத்துவதற்கு அவ்வளவு அனுகூலமில்லாமலிருந்தன. 1911-ம் வருஷத்தில் அதுவரையுள்ள செல்வாதாரத் தீர்மானங்கள் மாறாத திட்டமாக ஏற்படுத்தப்பட்டன.

1919-ம் வருஷத்திய சீர்திருத்தங்களின்படி மாகாணங்களுக்கும், இந்திய கவர்ன்மெண்டாருக்குமுள்ள வரவு செலவு முழுதும் பிரிக்கப்பட்டன. நிலவரி, நீர்ப்பாசனம், உள்நாட்டுச் சரக்குவரி, ஸ்டாம்புவரி என்ற இவைகள் மாகாணங்களின் உரிமையாகின. தவிரவும் வருமான வரியில் ஒரு பகுதி மாகாணங்களுக்குக் கொடுபடவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது. இவ்வித தீர்மானத்தால் இந்திய கவர்ன்மெண்டாரின் வருமானம் குறைவடைந்ததால் எல்லா மாகாணங்களும் சேர்ந்து இந்திய கவர்ன்மெண்டாருக்கு 983 லட்சம் ரூபாய் வருஷா வருஷம் செலுத்தும்படி தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இவ்வித மகமை கொஞ்சகாலத்திற்குத்தான் கொடுக்கவேண்டுமென்று ஏற்படுத்தினர். 1921—22-ம் வருஷத்தில் மாகாணங்களிலிருந்து செலுத்தும்படி ஏற்பட்ட மகமை பின்வருமாறு குறிப்பிடப்பட்டது.

மதருஸ்	348 லட்சம் ரூபாய்கள்	பஞ்சாப்	175 லட்சம் ரூபாய்கள்
பம்பாய்	56 ,,	பர்மா	64 ,,
வங்காளம்	63 ,,	மத்தியமாகாணம்	22 ,,
ஐக்கியமாகாணம்	240 ,,	அஸ்ஸாம்	15 ,,

இந்திய கவர்ன்மெண்டாரின் வரவு செலவு தேற்றமடைய, மாகாண மகமைகளையும் குறைப்பதாக ஒப்பந்தம் ஏற்பட்டது. 1929-ம் வருஷம் மாகாண மகமைகள் முழுவதும் நீக்கப்பட்டன.

1935-ம் வருஷத்திய அரசாங்க அமைப்பு முறை சீர்திருத்தப்படி மாகாணங்களுக்குத் தம்மாட்சி ஏற்பட்டது. இதனால் மாகாணங்கள் தமக்கேற்பட்ட வரிகளை விதிக்கவும், வசூலிக்கவும், கடன் வாங்கவும் தனியுரிமை பெற்றிருக்கின்றன.

நாட்டுப்புறச் செல்வாதாரம் (Local finance) :—நாட்டுப்புற ஆட்சி சம்பந்தமாக மூன்று பகுதிகள் கவனிக்கத்தக்கவை—நகராண்மைக் கழகங்கள் (Municipalities); ஜில்லா போர்டுகள் (District Board); துறைமுகப் பரிபாலன கூட்டுகைகள் (Port trust) இந்தியாவிலுள்ள நகராண்மைக் கழகங்களின் வருமானம் (1934-5-ம் வருஷக் கணக்கின்படி) சுமார் 38 கோடி ரூபாய்களாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. நகரங்களுக்குரிய வருமானமாவன—கரிகள், வீதவரிகள், மாகாண கவர்ன்மெண்டாரின் உதவிக்கடைகள் (Grants in aid). வரிகளில் முக்கியமாவன—வீட்டு வரி, நிலவரி, நாட்டுச்சுங்கம் (Octroi) நாட்டுச் சுங்கத்திற்குப் பதிலாக நேர்வரிகள் விதிக்கப்படுகின்றன. தவிரவும் வண்டிவரி, தொழில்வரி, ரோட்டுச்சுங்கங்கள் (Tolls on roads), ஜலவரி, விளக்குவரி, பாதுகாப்பு வரிகள் (Conservancy rates) இலாகிரிப் பதார்த்தங்கள் விற்பதற்குள்ள அனுமதி வருமானம் முதலியன.

நகராண்மைக் கழகங்கள் தம் வருமானத்தை (16 கோடி ரூபாய்கள்) முக்கியமாகக் கீழ்க்கண்ட விஷயங்களில் செலவிடுகின்றனர்—வெளிச்சம் போடுதல், ரோடுகள், ஆஸ்பத்திரி, ஆரம்பக்கல்வி முதலியனவாம். நகராண்மைக் கழகங்களின் வரிப்பளு

வானது தலைக்கு ரூ. 5—12—0 ஆக கணக்கிடப்பட்டிருக்கிறது. நாட்டுப்புறங்களில் ஜில்லா போர்டுகளும், பஞ்சாயத்துக்களும், செய்யும் கடமைகள் அநேகமாக நகராண்மைக் கழகங்களின் கடமைகளைப்போலேயாம். நாட்டாண்மை கழகங்களின் (District boards) வருமானம் முக்கியமாக நிலவரியேயாம். இதுதவிர ஆடு மாடு பட்டிவரி, ரோடுகளில் விதிக்கப்படும் சுங்கங்கள், உதவிக் கொடைகள் முதலியனவாம். நாட்டாண்மைக் கழகங்களின் வரிப் பளு தலைக்குச் சராசரி ரூ. 0—9—6 ஆகக் கணக்கிடப்பட்டிருக் கிறது.

இந்தியாவில் இம்பீரியல் பாங்கு, நாணயமாற்றும் பாங்குகள் கூட்டுப்பங்குப்பாங்குகள் இவைகளின் மூலதனம், ஒதுக்கு நிதி, டிபாசிட் முதலியன

வருஷம்	இம்பீரியல் பாங்கு		நாணயமாற்றுப் பாங்குகள்		கூட்டுப்பங்கு பாங்குகள்	
	மூலதனமும் ஒதுக்கு நிதியும்	டிபாசிட்டுகள்	மூலதனமும் ஒதுக்கு நிதியும்	டிபாசிட்டுகள் (இந்தியாவில்)	மூலதனமும் ஒதுக்கு நிதியும்	டிபாசிட்டுகள்
	ஆயிரக்கணக்கு	ஆயிரக்கணக்கு	ஆயிரக்கணக்கு	ஆயிரக்கணக்கு	ஆயிரக்கணக்கு	ஆயிரக்கணக்கு
1916	7,35,99	49,91,45	37,93,10	38,03,88	5,24,29	25,72,28
1917	7,42,52	75,43,02	32,68,20	53,37,53	5,21,09	32.16,21
1918	7,19,58	59,62,03	39,44,90	61,26,33	6,65,12	42,14,83
1919	7,32,81	75,93,61	53,07,00	74,35,90	8,38,31	61,27,96
1920	7,52,79	87,04,53	90,21,70	74,80,71	11,73,85	73,48,10
1921	9,76,78	72,58,00	1,11,63,20	75,19,61	13,39,89	80,15,65
1922	9,95,57	71,16,30	1,12,22,06	73,38,44	11,74,54	65,01,75
1923	10,17,71	82,76,45	1,40,10,30	68,44,28	10,84,78	47,69,32
1924	10,42,58	84,21,48	1,30,46,40	70,63,48	11,77,80	55,17,05
1925	10,55,23	83,29,77	1,38,31,10	70,54,57	11,78,13	57,90,76
1935	11,38,60	79,09,17	13,70,34	76,18,33	13,19,85	84,44,61

முக்கிய பயிர்களின் பரப்பு (ஏக்கர்)

பயிர்	சராசரி 1895-96—1899-1900	சராசரி 1900-01—1904-05	சராசரி 1905-06—1909-10	சராசரி 1900-11—1914-15	சராசரி 1915-16—1919-20—	சராசரி 1924-25—	சராசரி 1935-36—
அரிசி	50,855,000	50,067,000	56,051,000	70,252,000	79,519,000	81,328,000	79,888,371
கோதுமை	22,649,000	25,518,000	26,565,000	30,550,000	30,499,000	31,788,000	25,149,550
சர்க்கரை	—	2,258,000	2,302,000	2,383,000	2,656,000	2,530,000	4,038,392
தேயிலை	467,000	525,000	540,000	593,000	664,000	716,200	786,751
பருத்தி	13,866,000	16,652,000	21,321,000	23,221,000	21,861,000	26,465,000	15,760,603
சணல்	2,035,000	2,335,000	3,264,000	3,058,000	2,631,000	2,770,000	1,935,761
ஆளிவிதை	2,869,000	3,547,000	3,061,000	3,852,000	3,157,000	3,695,000	2,121,444
கடுகு இனங்களும் கடுகும்	4,541,000	5,598,000	6,056,000	6,416,000	6,169,000	6,376,000	2,920,969
எள்	4,019,000	4,903,000	5,016,000	5,177,000	4,450,000	5,167,000	3,673,070
நிலக்கடலை	—	431,000	827,000	1,610,000	1,785,000	2,838,000	4,306,745
நீலி	1,280,000	722,000	354,000	216,000	* 475,000	111,900	39,825
காப்பிக்கொட்டை	—	—	—	—	—	135,600	97,411

* சென்னை மாகாணத்தில் சில இடங்கள் நீங்கலாக


முக்கிய பயிர்களின் பலன்
(Yield of Important crops)

பயிர்	சராசரி 1895-96—1899-1900	சராசரி 1900-01—1904-05	சராசரி 1905-09—1909-10	சராசரி 1910-11—1914-15	சராசரி 1915-16—1919-20	1924-25	1935-36
அரிசி (டன்)	21,466,000	21,550,000	22,291,000	28,389,000	32,017,000	31,097,000	28,269,000
கோதுமை	6,029,000	7,676,000	8,092,000	9,663,000	9,288,000	8,702,000	9,420,000
சர்க்கரை (guv)	—	2,049,000	2,030,000	2,411,000	2,864,000	2,537,000	5,931,000
தேயிலை (பவுண்டு)	158,375000	201,389,000	242,386,000	290,060,000	374,265,000	375,255,900	394,429,000
பருத்தி (பேல் = 400 பவுண்டு)	2,303,000	3,203,000	3,996,000	4,370,000	4,412,000	6,070,000	7,254,000
சணம்	5,771,000	7,036,000	8,136,000	9,069,000	7,992,000	8,062,000	7,215,000
ஆளிவிதை (டன்)	352,000	416,000	333,000	508,000	434,000	541,000	388,000
கடுகும், கடுகு இனங்களும்	915,000	1,011,000	992,000	1,226,000	1,072,000	1,172,000	957,000
எள்	348,000	465,000	458,000	471,000	421,000	504,000	463,000
நிலக்கடலை	—	—	358,000	695,000	952,000	14,50,000	2,258,000
நீலி (அந்தர்)	156,000	100,000	49,000	37,000	74,000	* 21,700	6,800
காப்பிக்கொட்டை	—	—	—	—	—	29,318,600	41,173,000
(பவுண்டு)						15,013,000	48,535,000
ரப்பர்	—	—	—	—	—	—	—


* சென்னை மாகாணத்தில் சில இடங்கள் நீங்கலாக.

கூட்டுப்பங்குக் கழகங்கள் (Joint-stock Companies)


	1914-15	1923-24	1935-36	செலுத்திய பங்குத் தொகை (இலட்சம்)
பாங்குகளும், கடன் கொடுக்கும் கம்பெனிகளும்	436	809	1,910	29,86
இன்ஷயூரன்ஸ் கம்பெனிகள்	182	63	760	3,35
கப்பற்போக்குவரத்து	24	25	43	2,85
ரயில்களும் டிராம்களும்	44	47	47	1,475
இதர போக்குவரத்து	—	144	320	455
வணிகக் கம்பெனிகளும் செய்தொழில் கம்பெனிகளும்	754	1,958	3,759	93,75
தேயிலைக் கம்பெனிகள்	208	384	476	13,69
மற்ற தோட்டப்பயிர் கம்பெனிகள்	29	69	94	1,71
நிலக்கரி சுரங்கவேலை	140	254	283	10,43
தங்கச் சுரங்கவேலை	8	4	4	—
மற்ற சுரங்கவேலை	57	96	102	29,18
பருத்தித்தொழிற்சாலைகள்	205	262	329	29,38
சணல் தொழிற்சாலைகள்	34	54	80	18,48
பட்டு, புளிச்சை, கம்பளம் தொழிற்சாலைகள்	13	23	20	2,27
பருத்திக் கொட்டை நீக்குயந்திரம் முதலியன	—	120	124	2,19
சணல் பிரஸ்கள்	139	28	33	2,10
நிலம், கட்டிடம் முதலியன	32	98	178	11,32
சர்க்கரை	22	39	192	7,49
மற்ற கம்பெனிகள்	123	324	724	10,77
மா அரைக்கும் பொறிச்சாலைகள்	30	28	34	1,35
	2,480	4,821	9,710	2,90 (கோடி)



பொருளாக்க முயற்சியின் பருவங்கள்
(Stages of Productive Effort)




1872-ம் வருஷம் முதல் ஜனத்தோகை வளர்ச்சியின் விளக்கப் படம்





1921–1931 வருஷத்திய ஜனத்தோகை மாறுபாட்டை விளக்கும் படம்.

இந்தியாவின் இறக்குமதி (மற்ற தேசங்களுடன்)




இந்தியாவின் ஏற்றுமதி (மற்ற தேசங்களுடன்)







மதராஸின் ஏற்றுமதி




கராச்சியின் ஏற்றுமதி


பருத்தி
நூற் துணிகள்
பருத்தி விதை
ஆளி விதை
நிலக்கடலையும், எள்ளும்
ஆட்டு ரோமம்
அதளும், தோலும்
இதரச் சரக்குகள்


பம்பாயின் ஏற்றுமதி




கல்கத்தாவின் ஏற்றுமதி




இந்திய துறைமுகங்களின் வர்த்தக விளக்கம்




தக்ஷிணத்தின் பயிர்கள்
(Crops of the Deccan)



இந்தியாவின் கீழ்கரைப் பிரதேசத்தின் மழையும், விளைச்சலும்




இந்தியாவின் மேற்கரைப் பிரதேசத்தின் விளைச்சல்




தக்ஷிணத்தின் கரிசல் மண் பிரதேசத்தின் விளைச்சல்

(பெரும்பாலும் பம்பாய் மாகாணத்தில் அடங்கியது)



பஞ்சாப் மாகாணத்தில் நீர்ப்பாய்ச்சல் விளைச்சலின் சம்பந்த சாம்யம்.



ஐக்கிய மாகாணத்தில் நீர்ப்பாய்ச்சல் விளைச்சலின் சம்பந்த சாம்யம்.



இந்திய கவர்ன்மெண்டாரும்,
மாகாண கவன்மெண்டாரும் பெறும் வருமானம்